# Gospel of Yogi Ramsuratkumar

(தமிழ்)



By

S. Parthasarathy

தெய்வக்குழந்தை யோகி ராம்சுரத்குமாருக்கும் அவர்தம் அடியார் தூத்துக்குடி திரு G.முருகேசன் அவர்களுக்கும் இந்நூல் சமர்ப்பணம்.



By

S.பார்த்தசாரதி

# ஆசிரியரின் முன்னுரை

சுவாமி யோகி ராம்சுரத்குமாருடன் எனது வாழ்க்கைப் பயணம் இதுநாள் வரை சுமார் 45 ஆண்டுகள் இதமாக, மானுட சுக துக்கங்களுடனும், மானுட வாழ்வு கடந்த ஒருவித அமானுஷ்ய ஆன்ம அனுபூதியுடனும் கடந்து சென்று கொண்டிருக்கிறது.

சுவாமியோடு கழிந்த 25 ஆண்டுகளில் நான் கண்டு ரசித்து, பிரமித்து, கண்ணீர் மல்கி, உணர்வுப்பிரவாகமாக வெளிப்பட்ட சில சம்பவங்களை இங்கே கோர்த்துள்ளேன். இவைகள் யாவும் முகநூல் வாயிலாகவும், எனது முந்தைய “யோகியுடன் கொஞ்ச தூரம்” என்ற நூலின் வாயிலாகவும் ஏற்கனவே வெளிவந்துள்ளது. அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து Gospel of Yogi Ramsuratkumar என்ற பெயரில் வலைதளத்தில் வெளியிட்டுள்ளேன்.

இதே வலைதளத்தில் சுவாமியின் சரிதமான Amarakavyam என்ற சுவாமியின் ஆங்கில வரலாற்று நூலையும் பதிவேற்றியுள்ளேன்.

மேலும் சுவாமியின் வாழ்க்கைச் சரிதத்தின் சுருக்கத்தையும் தமிழில் கொடுத்துள்ளேன்.

இதுதவிர திரு. ஜக்கி வாசுதேவரின் குழுவினர் சுவாமியின் சரிதத்தைக் காணொளிக் காட்சியாக தயாரித்ததையும் வலைதளத்தில் இணைத்துள்ளேன். சுவாமி விரும்பி ரசித்த பாடல்களில் சிலவற்றையும் இதே வலைதளத்தில் சேர்த்துள்ளேன்.

சுவாமியின் புகைப்படத் தொகுப்பையும் இந்த வலைதளத்தில் காணலாம்.

சுவாமியின் உன்னதமான தெய்வீகத்தை அறிந்து, தெளிந்து, அவர்தம் நாமத்தை நெஞ்சிலிருத்தி வாழ்ந்திடவும், அந்தப் பேரண்டப்பெருவெளியில் ஆனந்த நடம் புரியும் நமது சுவாமியின் சொரூபத்தில் அனைவரும் கரைந்து ஒன்றிடவும் சுவாமியின் அருள்வேண்டி கைகூப்பித் தொழுகின்றேன். இந்த வலை தளத்திற்காகத் தங்களது பக்திபூர்வமான சேவைகளைச் செய்த திருமதி. ராம. வெண்ணிலா, குமாரி ராம சுகீர்த்தி, திரு. ராமலிங்கம் இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய திரு.அகநாழிகை வாசுதேவன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அற்புதமாக வடிவமைத்து அச்சிட்டுத் தந்த திரு.சொ. ராஜேஸ், ஸ்ரீநிவாஸ் பைன் ஆர்ட்ஸ் (பி) லிமிட், கீழத்திருத்தங்கல், சிவகாசி அவர்களுக்கும், அவர்களின் தொழில்நுட்பக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை எனது குரு யோகி ராம்சுரத்குமாரின் திருப்பாதங்களில் சமர்ப்பித்து, வணங்குகிறேன்.

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா.

இவண்,

பார்த்தசாரதி,
“யோகிஸ்தலம்”,
திருவண்ணாமலை - 606 603

# குருவின் நறுமணம்

இந்த வாழ்க்கையில் நாம் செய்யவேண்டியெதெல்லாம், கடந்த காலம் மற்றும் எதிர்காலத்துக்குள் நுழைந்துகொள்ளாது, நிகழ் கணத்தில் மட்டுமே இருக்கும் கலையைக் கற்றுக் கொள்வதுதான். அப்படி ஒரு மனிதன் இருக்கும்போது, அவன் முழுமையோடு இருக்கிறான். முழு ஆற்றலின் வடிவமாக இருக்கிறான். அப்போதுதான் உண்மையை ஒரு மனிதனால் தரிசிக்க முடியும். சரியான ஒரு குருவைக் கண்டடைந்து சதா அவர் பாதம்பற்றிக் கிடப்பதன் மூலமே இது சாத்தியமாகும்.

தேவையானவற்றை ஆசைப்பட்டுக்கொண்டும், தேவையில்லாதவற்றை ஒதுக்கிக்கொண்டிருப்பதும் சரியான வாழ்க்கை முறை அல்ல. இன்பமோ துன்பமோ எது தரப்பட வேண்டுமோ அதுவே நம் தந்தையால் தரப்படுகிறது. அது தந்தையின் சித்தம். அதை அப்படியே ஏற்றுக்கொண்டு தந்தையின் பாதம் பற்றிச் சரணடைய வேண்டும். பகவான் யோகி ராம்சுரத்குமாரின் தவ வாழ்க்கை அருளுகிற முக்கியச் செய்தி இதுதான். குருவின் மூலமாக பெறுகிற தந்தையின் நறுமணம் நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கும்படி செய்வதுதான் யோகியின் பணி.

சதா சலசலத்துக்கொண்டிருக்கும் மனம்... என் மனம், உங்கள் மனம் என்றில்லை, பொதுவாக மனித மனம் - அதன் செயல்பாடுகள் என்ன, எப்படியெல்லாம் அது நடந்துகொள்கிறது என்று யோசித்திருக்கிறோமா? நாம் அனைவரும் இதில் ஒன்றாக இருக்கிறோம், சேர்ந்து பயணிக்கிறோம் இல்லையா?

இந்த மனம், எதற்காகவாவது, எப்போதும் அலைந்து கொண்டுதானிருக்கிறது. அது உடல்ரீதியாகவோ, பொருள்ரீதியாகவோ அல்லது அதைத்தாண்டி இன்பம் அளிக்கும் ஒரு அனுபவத்திற்காகவோ

இருக்கக்கூடும். எதையாவது இது தேடிக்கொண்டே இருக்கிறது. அல்லது எதையாவது இடைவிடாது சொல்லிக்கொண்டிருக்கிறது.

இத்தகைய குறுகிய, சஞ்சலமான மனம் சலனமின்றி அமைதியாக இருக்குமா? இருக்கத்தான் முடியுமா? அதனால், என்பது கேள்வி. எப்போதும் தடதடத்துக்கொண்டிருக்கும் இந்த மனம் அமைதி நிலைக்கு வரவேண்டுமெனில், என்ன நிகழவேண்டும்? அந்த மனதில், எண்ணம் என்ற ஒன்று வராதிருக்கவேண்டும். அப்படி ஒரு நிலைக்கு அது வரநேர்ந்தால் அது அமைதியாக, சலனமற்று இருக்கக்கூடும்.

எப்போது அப்படி ஒரு நிலை ஏற்படும்? குருவின் பாதங்களில் முழுமையாகச் சரணாகதி அடைய வேண்டும். 'யோகி ராம்சுரத்குமார ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா' என்று மனமுருகி தந்தையின் நினைவில் மூழ்கி விட்டால் வாழ்வில் நடக்கும் எதைப்பற்றியும் கவலைப்படவோ, அலைவுறவோ வேண்டியதில்லை.

Gospel of Yogi Ramsuratkumar என்ற இந்தப் புத்தகத்தில் குருவின் அருகாமையில் இருந்திடவே தனது சொல், செயல், வாழ்க்கை மூலமாக அவர் உணர்த்தியவையும் அற்புதமாக விவரிக்கப்பட்டுள்ளன. எத்தனை விதமான மனிதர்கள், எத்தனையெத்தனை பிரச்சனைகள், விசித்திரங்கள், கேள்விகள், ஏக்கங்கள், ஏவல்கள்... எல்லாவற்றுக்குமான விடை யோகியின் மூலமாக நமக்குள் உணர்த்தப்படுகிறது. இதனை உடனிருந்து பார்த்து, அனுபவித்து எந்த மிகையோ, பூச்சோ இன்றி அப்படியே எழுத்தில் வடித்திருக்கும் பார்த்தசாரதி அய்யாவின் வாழ்க்கைதான் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதான ஒன்று. படிக்கப் படிக்கச் சிலிர்க்கச் செய்யும் சம்பவக் கோர்வைகள்.

பல்வேறு மனநிலைகளில் குருவை அணுகும் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் யோகியின் கருணை, சிரிப்பு, கோபம், முதலான

உணர்வுகள் அவருட்புகுந்து அவருள்ளிருக்கும் 'நான்' என்னும் அகந்தையை ஒழித்து அழுக்கைக் களைகிறது. ஒரே மூச்சில் படித்துவிட்டு முடியக்கூடிய புத்தகம் இல்லை இது. யோகியின் ஆன்மாவைப் புரிந்துகொண்டு இன்னும் இன்னும் உள்ளாழ்ந்து அவருக்குள் நித்தம் கரைந்து போகச் செய்கிற ஒன்று.

சரளமாகவும், கோர்வையாகவும் யோகியிடமிருந்து வந்து விழும் வார்த்தைகள் எத்தனை அர்த்தப்பூர்வமான தத்துவங்களை மிக எளிமையாகப் போதிக்கிறது. புரியாது பயமுறுத்தும் கடினமான வார்த்தைகளல்ல. சாதாரணமானவை. அழகானவை. நீரோடை போன்ற தெளிவுகொண்டவை. அவரது நளினமான உச்சரிப்பில் காணப்படும் கனிவும் மென்மையும் இந்தப் புத்தகத்தின் அத்தியாயங்களை வாசிக்கும்போதே நம்மைச் சூழ்ந்து சிலிர்க்க வைக்கிறது.

சிலரைப் பார்த்தால் பயம் வரும். சிலரைப் பார்த்தால் வாழ்க்கையே வெறுத்துப் போய்விடும். சிலரைப் பார்த்தால் இரண்டு விதமாகவும் தெரியும். சிலரின் பேச்சு விசித்திரமாக இருக்கும். ஆனால் யோசிக்க, யோசிக்கப் புதுமையாக இருக்கும். அது ஒரு அனுபவம். அப்படியோர் பேரற்புதத்தை தனது வாக்கு, செயல் மற்றும் வாழ்கையின் மூலம் அளிப்பவர் பகவான் யோகி ராம்சுரத்குமார். நாம் அவரிடம் வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன?, பிரச்னைகளில் இருந்து தப்ப ஏதாவது வழியிருக்கிறதா என்று கேட்டால் அவர் நம்மிடம் சொல்லும் பதிலில், நமது கேள்விகள் நம்மையே திருப்பிக் கேட்க ஆரம்பித்துவிடும்!


மனத்தால் சேகரிக்கவும், மறுக்கவும், சொந்தம் கொண்டாடவும், ஞாபகம் வைத்திருக்கவும் மட்டுமே முடியும். ஆனால் அமைதியே மிகவும் இன்றியமையாதது. அந்த அமைதியை மனங்களில் நிலவச்செய்பவர் நம் யோகி ராம்சுரத்குமார். அவருடன் வாழ்ந்து, கலந்து அவருடைய நாமத்தை உலகிற்கு எடுத்துச் சொல்லும் உன்னதச் செயலைச் செய்து

வரும் பார்த்தசாரதி அய்யாவிற்கு எனது சிரமார்ந்த வணக்கங்கள்.

யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார்
ஜெய குரு ராயா.

குருவின் பாதம் பணிந்து,
பொன். வாசுதேவன்
(அகநாழிகை)
செங்கல்பட்டு.

# அறிமுகம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் துறவி இல்லை. ஞானி இல்லை. ரிஷியும் இல்லை. அவர் யுகங்கள் தோறும் வரும் ஒரு அவதார புருஷர்.

பரம்பொருளையே நினைத்து, பரம்பொருளுக்காக வாழ்ந்து, பரம்பொருளில் கரைந்து, பரம்பொருளின் பணிகளை மட்டுமே செய்யும் அவதார யோகி அவர்.

பரம்பொருளை அடையக்கூடிய மார்க்கங்கள் என்று சொல்லப்பட்ட எதிலும் பயணப்படாது, அவைகளுக்குச் சட்டமாக விளங்கும் சடங்குகளைக் கைவிட்டு கடவுளில் கலந்தவர்.

ஆன்மீக சாதனா வழிமுறைகள் அனைத்தையும் நிராகரித்து அவற்றைக் கடந்த ஒரு பாதையற்ற பாதையில், பயணமற்ற நடையில், இலக்கற்ற சூனியத்தில், எதுவுமற்று எந்த அடையாளப் பளுவும் இன்றி, ஆனந்தக் கூத்தாடி, அதில் கரைந்து களித்திருப்பவர்.

அவரோடு வருபவர் வரலாம்; வராதவர் இங்கேயே வாழலாம்.

சுகிக்கலாம்; வருந்தி வலியோடு காலத்தை ஓட்டலாம். பூஜிக்கலாம்; தியானிக்கலாம், முடிவில் உயிர்விட்டு மறு ரூபம் தேடலாம்; தொடரலாம்.

அவர் எவர் இச்சையையும் மறுத்ததில்லை. இச்சைகளினால் வரும் இம்சைகளைப் பார்க்க வைத்து இச்சை கடந்த பிரகாச சாசுவதத்தை இமைப்பொழுதில் காண வைத்து, ஏங்க வைத்து அதில் கரையும் வரை அலைய வைத்து, அழவிட்டு, பயணமற்ற பயணத்தில் பயணப்பட ஆயத்தப்படுத்தி, சாசுவதத்தில் கரைந்து போக அருள் கூட்டும் எம்பெருமானான யோகி ராம்சுரத்குமார் ஒரு அபூர்வம். இலகுவில் காணக் கிடைக்காத ஒரு பேரதிசயம்.

அவரே அவர் நாமம். நாமத்தை நினைப்பதால் கிடைக்கும் ஆன்ம பலம், ஆசைகளை வலிகொண்டு வாட்டும், நிராசையால் அழவிடும். இச்சையுறும் பொருளினால் வரும் துன்பத்தை பன்மடங்காக்கும். சிந்திக்க வைக்கும். சிரிக்க வைக்கும். மௌனிக்கும். பின்னர் மறைத்துவிடும். இறுதியில் "நான்" காணாமலே போய்விடும்.

நாமத்தை அரவமின்றி நினையுங்கள். அன்பெனும் உணர்வோடுச் சொல்லுங்கள். நாம் சொல்வது நமக்கு முதலில் கேட்கட்டும். பிறர்க்கு கேட்காமல் இருப்பதே நல்லது. நம் உள்ளத்தில் அவர் இருக்கிறார் என்ற நிதர்சனமான உண்மை தெரியும் மட்டும் வாய் திறந்து நாமம் பாடுவோம், எழுதுவோம். ஆனால் அது நமக்கு மட்டும் கேட்கட்டும், தெரியட்டும்.

எப்பொழுது அவரை, உள்ளும், புறமும், எங்கும் காண்கின்றோமோ அன்று அவராகவே நம் ஆழ்மனதில் பிரதிஷ்டை செய்து கொள்வார். அதன்பின் நாமமும், நாமும் நீக்கமறக் கலந்துவிடுவோம், கரைந்துவிடுவோம்.

மழலை இளமையாகட்டும். இளமை இறையாகட்டும். எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் என் தெய்வத்தின், யோகி ராம்சுரத்குமாரின் சொரூபங்களே! அனைவருக்கும் எனது வந்தனம்.

இவண்,
பார்த்தசாரதி

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. சுவாமியின் முதற்பயணம் | 19 |
| 2. குரு கிடைப்பது கடினம் | 22 |
| 3. திருத்தொண்டர்கள் | 24 |
| 4. அணுக்கத் தொண்டர்கள் | 26 |
| 5. 101 அந்நாட்களில் சுவாமியின் அன்றாட வாழ்க்கை | 37 |
| 6. பண்டிட். திரு.T. K. சுந்தரேச ஐயர் | 44 |
| 7. பாமரனும் பணக்கார பக்தரும் | 47 |
| 8. அவமதித்தோரையும் அரவணைக்கும் சுவாமி | 50 |
| 9. குரு கற்பகவிருட்சம் | 54 |
| 10. அவன் அதுவாக | 56 |
| 11. தந்தையின் அருள் நிரூபணம் | 58 |
| 12. துளசி பூஜை | 60 |
| 13. அவன் | 63 |
| 14. சுவாமியின் தேசப்பணி | 69 |
| 15. சுவாமியின் அருளால் உருவான அவன் கதை | 72 |
| 16. பிராணாயாமம் | 78 |
| 17. கூவிக்கூப்பிடுங்கள். | 81 |
| 18. பயணம் முடியவில்லை | 88 |
| 19. பைரவர் | 90 |
| 20. ஆண் வாரிசு வேண்டும் | 94 |
| 21. அன்னையான சுவாமி | 97 |

22. நம்பிக்கையே தெய்வம் 100

23. மாயை 104

24. பேரருள் 108

25. இறைஞானம் தரும் பாரதம் 111

26. பக்தருக்கினிய சுவாமி 115

27. இமயமலைத் துறவியும், இமயமும் 119

28. ஏழை பங்காளன் 122

29. “வலம் வா” 125

30. பக்தரின் சேவையும் பக்திப்பிரசாதமும் 127

31. சுவாமியின் பசியும் பக்தரின் பக்தியும் 130

32. ஆன்மீகம் எளிதல்ல 133

33. சுவாமியின் சன்னதித்தெரு இல்லம் 137

34. சுவாமி எங்கும் நம்முடன் 140

35. இரவுப்பணி 143

36. கோவில் விக்ரஹங்கள் 146

37. காபிவந்தது வாங்கப்போனோரைக் காணோம் 148

38. ஏழ்மையைச் சுமக்கும் பக்தி 152

39. மூன்று நண்பர்கள் 155

40. கலியுகமா? கடவுள் யுகமா? 159

41. சிவகாசி நாடார் சத்திரத்தில் 162

42. குரு பூர்ணிமா 168

43. மின்விசிறி 171

44. பக்தப்பிரியனின் சொரூபம். 174

45. தெய்வத்தின் புதிய நாமம் பொக்கிஷம் 177

| | | |
|---|---|---|
| 46. | நாம மஹிமை | 180 |
| 47. | விடுதலை | 183 |
| 48. | காய்ச்சாத பசும்பால் | 189 |
| 49. | சுவாமியின் சரீர விந்தைகள் | 193 |
| 50. | சுவாமி ரசித்த பாடல் | 196 |
| 51. | பூர்வாசிரமம் | 198 |
| 52. | திருமதி ராம்ரஞ்சனிதேவி | 200 |
| 53. | வேஷம் வேண்டாமே | 210 |
| 54. | சுவாமி ஏமாற மாட்டார் | 212 |
| 55. | அமெரிக்க நண்பர்கள் | 215 |
| 56. | சுரைக்காய் சாதம் | 220 |
| 57. | பாதயாத்திரையில் திருக்கோவில் பணி | 223 |
| 58. | குருசீடன் | 228 |
| 59. | சுவாமியின் திருவிளையாடல் | 235 |
| 60. | துன்பமே பக்தியின் திறவுகோல் | 238 |
| 61. | சிக்கல் தீர்த்த சுவாமி | 241 |
| 62. | சுவாமி சொன்ன புத்தகங்கள் | 244 |
| 63. | சக்ரவர்த்தி | 249 |
| 64. | தந்தையைப் பார்ப்பது எப்படி | 251 |
| 65. | சுவாமியே பரப்பிரம்மம் | 254 |
| 66. | குணமாகியது | 257 |
| 67. | குழந்தை பேசியது | 263 |
| 68. | குடிகார நண்பன் | 267 |
| 69. | குரு இருக்க குறை ஏது? | 270 |

| | | |
|---|---|---|
| 70. | பக்தனின் மரணம் | 273 |
| 71. | ஆவி வேண்டாம் | 280 |
| 72. | எங்கும் நிறைந்தவர் | 284 |
| 73. | அடையாறு ஆலமரம் | 290 |
| 74. | முஸ்லீம் அன்பர்கள் | 293 |
| 75. | பாதாபிஷேகம் | 296 |
| 76. | சுவாமியின் தாய்மை | 298 |
| 77. | என் புருஷன் வேண்டும் | 301 |
| 78. | சுவாமி நம் காவலன் | 310 |
| 79. | தீர்க்க சுமங்கலி | 312 |
| 80. | தொல்காப்பியம் | 315 |
| 81. | சுவாமியின் பக்தர்கள் | 319 |
| 82. | சில பக்தர்கள் | 322 |
| 83. | ஆணவம் அறுக்கும் ஆண்டவன் | 332 |
| 84. | பக்தர்களால் காத்திருக்க முடியும் | 335 |
| 85. | இல்லறமே நல்லறம் | 339 |
| 86. | சுவாமியை சோதித்த அன்பர் | 342 |
| 87. | வெளிநாட்டு ஆசிரமத்திற்கு தலைவரைத் தேர்ந்தெடுத்தல் | 344 |
| 88. | செண்பகம்மாள் | 347 |
| 89. | சுவாமிக்கு பிரியமானவர் | 352 |
| 90. | குழப்பம் தீர்ந்தது | 355 |
| 91. | தெய்வீக நாமம் | 358 |
| 92. | நம்பு நண்பா நம்பு! | 360 |
| 93. | நறுமண நாமமாலை | 363 |

| | | |
|---|---|---|
| 94. | சுவாமி நீங்கள் யார்? | 366 |
| 95. | மாற்றம் | 369 |
| 96. | நாம தீட்சை | 375 |
| 97. | சிவன்மலை அண்ணாமலை | 379 |
| 98. | தர்மப்பிரபு | 381 |
| 99. | அகங்காரச் சாது | 384 |
| 100. | சாக்குச் சாமி | 387 |
| 101. | அன்பு | 390 |
| 102. | சடோபாயா | 394 |
| 103. | சுவாமியும் ஜோதிடமும் | 400 |
| 104. | சொல்லின் செல்வர் | 403 |
| 105. | யாருக்கு ஓய்வு? | 406 |
| 106. | வெண்தாடி வேந்தன் | 409 |
| 107. | பாட்டியின் பக்தி | 411 |
| 108. | ஆகாரத்தைக் கடந்த ஆன்மீகம் | 414 |
| 109. | சைவம் அசைவம் | 418 |
| 110. | சாதனாமுறையும் பக்கோடா செய்முறையும் | 421 |
| 111. | பக்தியே ருசி தரும் | 425 |
| 112. | ஔஷதமான அழுகிய பழம் | 428 |
| 113. | உலகத்தை எரிப்பேன் | 431 |
| 114. | ஆத்மா புனிதமானது | 434 |
| 115. | சுவாமியின் திருவருளும், பக்தையின் வினைப்பயனும் | 440 |
| 116. | மரணத்தின் நறுமணம் | 443 |
| 117. | மரணவரம் | 446 |

118. கந்த சஷ்டி கவசம் 449

119. ஒளியில் திருவிளையாடல் 452

120. யோகியின் சமாதிநிலை 454

121. குறை காணாதே 457

122. குருவில் குறைகாணாதே 459

123. குரு பாரம்பரியம் 465

124. சுவாமி ராமதீர்த்தர் உபதேசங்கள் 469

125. ஸ்ரீ அரவிந்தரின் உபதேசம் 473

126. ஸ்ரீ அரவிந்தரின் சாவித்திரி 475

127. ஸ்ரீ ரமணமகரிஷியின் உபதேசச் சாரம் 477

128. பப்பா ராமதாசரின் உபதேசம் 480

129. மாதாஜி கிருஷ்ணாபாய் சொன்ன கதை 482

130. கீதாஞ்சலி 487

131. கீதாஞ்சலியில் ஒரு கதை 488

132. ஜே. கிருஷ்ணமூர்த்தி 490

133. அவர் ஒரு பெரிய மஹான் 493

134. நிசார்கடாட்டா மஹாராஜ் 495

135. சுவாமியின் திருக்கூட்டமும், அமானுஷ்யத் திருப்பணியும் 497

136. ஆசிரமம் 500

137. பத்திரப் பிழை 507


138. விபூதியும் குங்குமமும் 513

139. ரகசியம் 517

140. தனம் தந்து தன்மயமாக்கிய சுவாமி 521

| | | |
|---|---|---|
| 141. | செல்வம் பறித்து தன்னைக் கொடுத்த சுவாமி | 524 |
| 142. | மந்திரதீட்சை | 527 |
| 143. | அடித்தவன் வணங்கினான் | 531 |
| 144. | கபடதாரிகளும் வருவர் | 535 |
| 145. | சுவாமியின் சொரூபமே சுவாமியின் சிலை | 537 |
| 146. | சுவாமியின் சிலையே ஆசிரமத்தில் பிரதானம் | 541 |
| 147. | சுவாமியும் சுவாமியின் சிலையும் | 543 |
| 148. | ஆஸ்ரமத்தை மாற்றி விட்டார்கள் | 545 |
| 149. | இருக்கிறார் | 549 |
| 150. | வேறுஎவருமில்லை, வேறுஎதுவுமில்லை, என்தந்தை ஒருவரே | 554 |
| 151. | தொலைந்து போன எல்லாமாகிய இடம் | 557 |
| 152. | பரிணாம வளர்ச்சி | 560 |
| 153. | தந்தையின் கணக்கு | 562 |

# சுவாமியின் முதற்பயணம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் 1947ம் ஆண்டு முதன் முறையாக திருவண்ணாமலைக்கு, மஹரிஷி ரமணரைத் தரிசிக்க வந்தார். சுவாமி கபாடியாபாபா மூலமாக மஹரிஷியைப் பற்றிக் கேள்விப் பட்டதிலிருந்தே சுவாமி மனதில் மஹரிஷியை தரிசிக்க பேராவல் எழுந்திருந்தது.

திருவண்ணாமலை, புகைவண்டி நிலையத்திலிருந்து ஸ்ரீ ரமணாஸ்ரமத்திற்கு வழி விசாரித்துக் கொண்டு விரைந்தார். ரமணாசிரமம் வந்தடைந்தார்.

அவருக்கு ஆசிரம நிர்வாகம், அறை ஒன்றை ஒதுக்கிக் கொடுத்தது. அறையில் பெட்டியை வைத்துவிட்டு ரமணரைத் தரிசிக்க சுவாமி விரைந்தார்.

ரமண மஹரிஷி பழைய தரிசன மண்டபத்தில் இருப்பதை அறிந்து அங்கு சென்றார். தரிசன மந்திருக்குள் நுழைந்த மாத்திரத்தில் அங்கிருந்த

ஒருவித ஆழ்ந்த அமைதி அவரை ஆகர்ஷித்தது. ரமண மஹரிஷி அந்த சிறிய அறையின் வடகீழ் கோடியில் அமைக்கப்பட்டிருந்த ஒரு திண்டில் சாய்வாக அமர்ந்திருந்தார்.

சுவாமி மஹரிஷியை நமஸ்கரித்தார். மஹரிஷி சுவாமியை தன் காந்த விழிகளால் ஆழ்ந்து நோக்கினார். சுவாமியின் தேகம் சிலிர்த்தது. அங்கேயே சுவாமி அமர்ந்து கொண்டார். மஹரிஷியை பார்த்தபடியே இருந்தார். அவர் விழிகள் அவர் அறியாமலேயே மூடிக் கொண்டன. அங்கு அவருக்கு சுகானுபவமான தியானம் சித்தித்தது.

எவ்வளவு நேரம் சுவாமி அந்த ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் என்பதை அவரால் ஊகிக்கவே முடியவில்லை. கண் திறந்து பார்க்கும்போது மஹரிஷி சுவாமியையே பார்த்தபடி இருந்ததை சுவாமி உணர்ந்தார். சுவாமி பார்த்ததும் மஹரிஷியின் திருமுகத்தில் அழகிய புன்னகைக்கீற்று படர்ந்ததை சுவாமி பார்த்தார். பரவசம் மேலிட மஹரிஷியை மீண்டும் நமஸ்கரித்தார்.

ரமணாஸ்ரமத்தின் ரம்மியமான சூழலும், ரமணரின் திவ்ய தரிசனமும் தினமும் கிடைத்த பேரானந்த உணர்வில் சுவாமி தனைமறந்து மிதக்கலானார். அவர் வாழ்நாளில் முதன் முறையாக முழுமையான தியானம் அவருக்கு கைகூடிய இடம் ரமணரின் சன்னிதிதான்.

இந்த ஆனந்த மயக்கத்தில், அண்ணாமலையார் கோவில் தரிசனம் ஆனது. அங்கு பாதாளலிங்க தரிசனமும் கிடைக்கப்பெற்றது. அண்ணாமலையார் கிரிவலமும் ஆனந்தமாக நடந்தேறியது. முடிவில் ஊர் திரும்பும் நாள் வந்தது. ரமண மஹரிஷியின் முன்பாக சுவாமி அமர்ந்தார். அவர் மனதில் பிரார்த்தனை எழுந்தது.

“பகவானே, என்னைத் தங்கள் பேரருளால் ஆட்கொள்ளுங்கள். என்னைத்

தங்களுடையவனாகத் தங்கள் திருப்பாதத்தில் இருத்திக் கொள்ளுங்கள் சுவாமி.”


சுவாமியின் இந்த மௌனமான பிரார்த்தனை மஹரிஷியின் செவிகளில் விழுந்தன போலும்.

“சரி” என அக்கணமே மஹரிஷி வாய் திறந்து பதிலளித்தார். சுவாமியின் தேகம் சிலிர்த்தது.

பின்னொரு நாளில் சுவாமி கூறினார்;

“சரி” என்ற சொல்தான் தமிழ் மொழியில் இந்த பிச்சைக்காரன் கற்ற முதல் சொல். “அதைக் கற்பித்தவரும் ஸ்ரீ ரமண மஹரிஷியே.”

# குரு கிடைப்பது கடினம்



திருவண்ணாமலை நகருக்கு வெளியே, ரயில்நிலையத்தின் பின்புறத்தில் இருந்த, ஒரு விவசாய நிலத்தின் மத்தியில் இருந்த, ஒரு பிரமாண்டமான புன்னை மரத்தின் நிழலில் நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் அமர்ந்திருந்தார். அவரின் எதிரில் சில பக்தர்கள் அமர்ந்திருந்தனர்.


சுவாமி மந்தகாச புன்னகையுடன் பக்தர்களை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். மெதுவாக, நளினமாக ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். ஆழமாக ஒரு முறை உறிஞ்சிய பின் சிகரெட்டை சாம்பல் தட்டும் கிண்ணத்தில் வைத்தார். பக்தர்களை மறுபடியும் கனிவோடு நோக்கினார்.

தனது மதுரமான குரலில் ஒரு சமஸ்கிருத சுலோகத்தைப் பாடினார். பக்தர்கள் மெய் மறந்து கேட்டனர். சுலோகம் முடிந்தது. பக்தர்கள்

சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தனர். சுவாமி தன் காந்த குரலில் அச்சுலோகத்தின் அர்த்தத்தை ஆங்கிலத்தில் பகர்ந்தார்.

“ஒரு உண்மையான குருவை இவ்வுலகில் காண்பது மிகக்கடினம். அதனிலும் கடினம் அவரின் அருகாமை கிட்டுவது. அதனிலும் மிகக்கடினம் அவரின் அருளைப் பெறுவது. குருவின் அருளைப் பெற்றோர் மிகுந்த பாக்கியசாலிகள். அவர்கள் குருவில் இரண்டறக் கலந்து விடுகின்றனர்.”

# திருத்தொண்டர்கள்



நமது சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சரீரத்தை 1960களில் இருந்தே வன்முறையாளர்களின் தாக்குதல்களிலிருந்தும், பசி, தாகத்திலிருந்தும் காப்பாற்றி, எப்போதும் சுவாமியுடனேயே இருந்து, அவருக்குப் பல வகையிலும் பணிவிடைகள் செய்து, நம்மை சுவாமி ஆட்கொள்ள உறுதுணை செய்த சில உத்தமர்களைப் பற்றி அறிந்து கொள்வோம். அவர்கள் சாதாரணமான எளிமையான, பாமர மக்களாவார்கள்.

அவர்களில் முக்கியமானவர்கள் சிவனணைந்த பெருமாள்சடையன், ஜார்ஜ், சீனிவாசன், ஜகன்னாதன், துரை, சுசீந்திரகணேசமூர்த்தி, ரங்கநாதன் மற்றும் மேலும் சிலர்.

இவர்கள் யாவரும் சுவாமிக்கு அணுக்கத் தொண்டர்களாக இருந்தவர்கள். இவர்களின் தன்னலமற்ற தொண்டை சுவாமி ஏற்று,

அவர்களுக்குத் தனித்துச் சும்மா இருக்கவும், எப்பொழுதும் நாமஜெபம் செய்யவும் அனுக்கிரகம் செய்தார்கள். சரீர தேவைகளான உணவு, நீர், மேற்கூரையுடன் கூடிய படுக்கும் இடம், சுமாரான ஆடைகள் போன்றவை இவர்களுக்கு அருளப்பட்டது.

இகவாழ்வின் பொய்மை, சூது, கபடம், பேராசைகள் இவைகளிடமிருந்து இவர்களுக்கு சுவாமி விடுதலை அளித்தார். இயல்பான தேகப்பற்று இவர்களிடமிருந்து சுவாமியின் அருளால் விடுபட்டுப் போனது. இவர்களுக்குத் தெரியாமலே, இவர்களைச் சாதகர்களாக சுவாமி பரிணமிக்கச் செய்தார். உலக வாழ்வின் தாக்கம் இவர்களை பாதிக்காதவாறு சுவாமி இவர்களைப் பாதுகாத்தார்.

இவர்களில் ஒருவரான திரு. பெருமாள்சடையனின் தூண்டுதலாலேதான் இப்பொழுது உள்ள ஆஸ்ரமம் சாத்தியமாயிற்று. இப்பேர்பட்ட அணுக்கத் தொண்டர்களால் தான் நம் நாட்டில் வந்துதித்த அத்தனை ஞானியரையும் அவர்களின் பேரருளையும் பக்த கோடி பெருமக்கள் பெறமுடிகின்றது.

# அணுக்கத் தொண்டர்கள்



உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ராம்சுரத் குன்வர் என்பவர், சுவாமி ராமதாசரின் அனுக்கிரஹத்தால் யோகி ராம்சுரத்குமார் எனும் மாபெரும் யோகியாக மாறி, திருவண்ணாமலையில் வாசம் புரிய ஆரம்பித்த காலத்திலிருந்து, அவரது திருமேனிக்கும் அவரது தெய்வீக காரியங்களுக்கும் ஊறு ஏற்படாத வண்ணம் சதாசர்வ காலமும் உடனிருந்து தன் தொழில், குடும்பம், சௌகரியங்கள் என எல்லாவற்றையும் தியாகம் செய்து வாழ்நாட்களைக் கழித்த சில மஹானுபாவர்களை நாம் நினைவில் கொள்வதும் ஆன்மீக விழிப்புணர்வை மலரச் செய்யும்.

சீனிவாசன்:

சீனிவாசன் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவர்.

திருக்கோவிலூர் அருகில் உள்ள ஞானானந்தகிரி தபோவனம் அருகில் ஒரு டீக்கடை நடத்தி வந்தார். 1965ல் திருவண்ணாமலையில் ரௌடிகளின் தொந்தரவிலிருந்து விடுபடுவதற்காக சுவாமி அடிக்கடி தபோவனம் செல்வதுண்டு. சீனிவாசனின் டீக்கடையருகே சுவாமி செல்லும்போதெல்லாம் சீனிவாசன் அவரை அழைத்து டீயும், வடையும் வழங்கி, வந்தனம் செய்வது வழக்கம். ஞானானந்தகிரி சுவாமிகளைக் குருவாகக் கொண்ட சீனிவாசன் சுவாமியின் தெய்வீகப் பேரருளில் திளைத்து, சுவாமியையும் தன் குருவாகக் கருதலானார்.

எழுதப் படிக்கத் தெரியாத பாமரனாக இருந்த போதிலும், சீனிவாசன் ஞானிகளின் மேன்மையைத் தெரிந்து வைத்திருந்தார். ஞானிகளுக்குச் சேவை செய்வதைத் தன் பாக்கியமாகக் கருதினார். தான் மிகுந்த ஏழ்மை நிலையில் இருந்தாலும், ஞானிகளின் சேவையையே பிரதானமாகக் கருதினார்.

சுவாமியைக் கண்ட போதெல்லாம், சுவாமியின் பசியைத் தீர்த்த பெரும் பக்தர் சீனிவாசன். வீட்டில் உள்ள கூழோ, கஞ்சியோ, நீராகாரமோ எதுவாயினும் சீனிவாசன் கொடுத்தால் அதையே பெரும் விருந்தாக சுவாமி ஏற்றுக் கொண்டார். எளிய பக்தனின் ஆகாரத்தை அமுதெனக் கொண்டாரோ?

சீரியபக்தனான சீனிவாசனுக்கு சுவாமி 'ராமா' எனும் மந்திரத்தை உபதேசித்தார். ராமநாம தீட்சை வழங்கப்பட்ட நாளிலிருந்து சீனிவாசன் நாவும், மனமும் விடாது 'ராம' நாமத்தை ஜெபித்தது. மாலைப்பொழுது சாய்ந்து, இருட்டிய பின்பு டீக்கடையை மூடிவிட்டு ரோட்டில் தெருவிளக்கின் கீழமர்ந்து கொண்டு சீனிவாசன் இரவெல்லாம் ராம நாமம் ஜபம் செய்வார். சில சமயங்களில் சுவாமியும் சீனிவாசனோடு அமர்ந்து கொண்டு ராமநாமம் சொல்வார். ராமநாம ஜபத்தில் திளைத்து, சீனிவாசனும் சுவாமியும் தங்களை மறந்து வீதியில்

நர்த்தனமாடுவதைக் கண்ட அக்கிராம மக்கள் வியப்படைந்து அவர்களையே பார்த்துக்கொண்டிருப்பார்கள்.

சுவாமியால் ஈர்க்கப்பட்ட சீனிவாசன் டீக்கடையின் பொறுப்பைத் தனது தம்பியிடம் கொடுத்துவிட்டு, சுவாமியோடு இருக்கலானார். சுவாமி செல்லும் இடங்களுகெல்லாம் சீனிவாசன் உடன் சென்றார். இளம்பிள்ளை வாதத்தால் தன் கால்களின் சக்தியைப் பெருமளவு இழந்திருந்த நிலையிலும், சுவாமியின் சாக்கு மூட்டையை சுமந்தபடி சுவாமியைப் பின்பற்றினார். சுவாமி அவரைத் தடைசெய்ய முயன்றும் சீனிவாசன் கேட்பதாக இல்லை. முடிவில் சுவாமி சீனிவாசனின் தம்பியைத் தன்னுடன் அனுப்பச் சொல்லி, சீனிவாசனைக் கடையைக் கவனித்துக் கொள்ளும்படி கூற, சீனிவாசன் உடன்பட்டார். அதன்பின்பு சீனிவாசன் சுவாமியின் வேலைக்காக ஆட்களை அனுப்பும் பணியை மேற்கொண்டார். அவர் நடமாட இயலாமல் போனபின்பு அவர் நண்பர் பாண்டு, சுவாமியின் சேவைக்கு நபர்களை அனுப்பினார். சீனிவாசன் மற்றும் பாண்டு அனுப்பிய ஆட்களே ஆஸ்ரம கால ஆரம்பம்வரை ஸ்வாமியின் பணிக்குப் பயன்படலாயினர்.

சுவாமியின் மகாசமாதிக்குப் பின் சீனிவாசனின் இரு கால்களும் முழுமையாகச் சக்தியை இழந்தன. சரீர வேதனையிலும், குடும்ப ஏழ்மையிலும், வாழ்க்கையே பெரும் பாரமாக இருந்தபோதிலும் சீனிவாசன் சதா சர்வகாலமும் ராம நாமத்தை உச்சரித்தபடியே தன் மண்குடிசையில் இவ்வுலக வாழ்வை நீத்தார். சீனிவாசன் போன்ற சுவாமியின் உத்தம சீடர்கள் இன்னும் எத்தனை பேர் இருந்தார்களோ? இருக்கிறார்களோ? சுவாமியே அறிவார். காலமெல்லாம் சரீர வேதனை மற்றும் ஏழ்மையில் இருந்தபோதிலும் குரு அருளிய மந்திரத்தை மறக்காத சீனிவாசன், சுவாமியின் அருள் பெற்றவர்களில் ஒருவர்.

சிவனணைந்த பெருமாள் சடையன்:

திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோவிலின் ராஜகோபுரத்துக்கு எதிப்புறம் வரிசையாக பாத்திரக்கடைகள் அமைந்திருந்தன. 1960களில் பிரபலமாக இருந்த பாத்திரக் கடைகளில் சிவனணைந்த பெருமாள் சடையன், பாத்திரக் கடையும் ஒன்று. தன் வியாபாரத்தை நாணயமாகவும், சிறப்பாகவும் செய்து வந்தார். கன்னியாகுமரி அருகில் உள்ள தாமரைக்குளம் எனும் கிராமத்தைச் சேர்ந்த அவர், தன் இளம் வயதிலேயே திருவண்ணாமலை வந்து பாத்திர வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்.

அவருடைய கடின உழைப்பும், நேர்மையும் வியாபாரத்தில் அவர் மேன்மேலும் முன்னேற காரணமாயிருந்தன. அவர், தன் குலகுரு முத்துக்குட்டி சுவாமிகள் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். முத்துக்குட்டிசுவாமிகள் அருளிய 'அகிலத்திரட்டு' எனும் பாடல் நூலை முழுவதும் படித்து அறிந்திருந்தார். அதில் அவரது குலகுரு, முத்துக்குட்டி சுவாமிகள் திருவண்ணாமலையில், வயோதிக வாலிபராக, வெண்தாடி கொண்டு, தலைப்பாகை தரித்து, கையில் பனை ஓலை, விசிறி மற்றும் தேங்காய் சிரட்டை தாங்கி வலம் வருவார் என்று சொல்லப்பட்டிருந்தது. பெருமாள் சடையன் தன் குலகுரு முத்துக்குட்டி சுவாமிகளின் புதிய அவதாரத் தோற்றத்தைத் தரிசிக்க மிகவும் ஆவல் கொண்டிருந்தார்.

ஒருநாள் பெருமாள் சடையன் தன் கடையில் அமர்ந்தபடி அண்ணாமலையார் கோவிலின் ராஜ கோபுரத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். இனம் தெரியாத ஒருவித பரவச நிலையில் அவர் மனம் ஒடுங்குவதை அவரால் உணர முடிந்தது. திடீரென அவர் முன்னே பஞ்சகச்சம் தரித்து, தலைப்பாகை அணிந்து, வெண்தாடியுடன், கையில் பனைஓலைவிசிறி, சிரட்டையுடன் ஒரு சாது நின்றுகொண்டு மந்தகாசமாகச் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டார்.

ஒரு கோணிப்பையை தன் எதிரே விரித்து, அதில் அமரும்படி சாதுவைப் பெருமாள் சடையன் பணிவோடு கேட்டுக் கொண்டார். சாதுவும் அமர்ந்துகொண்டார். சாது தன்னை நோக்கியபடி சிரித்துக் கொண்டிருப்பதைப் பெருமாள் சடையன் கண்டார். அவரது ஆழ்மனதில் ஏதோ ஒரு வஸ்து நுழைவது போல் தோன்றியது. 'இவர்தான் முத்துக்குட்டி சுவாமிகளின் புதிய அவதாரமா?'.

அந்த வஸ்து புனிதமானதாகவும், ஆனந்தமாகவும் இருப்பதை பெருமாள் சடையன் உணர்ந்தார். உள்ளே சென்ற அந்தத் தெய்வீக சக்தி, வாய் மலர்ந்து சத்தமாகச் சிரிப்பது போல் தோன்றியது. ஒரு நிமிடம் கண்களை மூடி அந்த பேரானந்தத்தில் லயித்துவிட்டு கண் திறந்து பார்த்தார். அந்தச் சிரிப்புச் சத்தம் எதிரில் சாதுவிடமிருந்து வருவதைக் கண்டு திகைத்துப் போனார். உள்ளே கேட்ட சிரிப்பலைகள் வெளியில், இந்தச் சாதுவிடமிருந்து வந்தவைதான் என அறிந்த பெருமாள் சடையன் சாதுவைக் கைகூப்பி நமஸ்கரித்தார். அவர் கைகளைப் பற்றிக் கொண்ட சாது, அவரையே விடாது பார்த்துக் கொண்டிருந்தார். பெருமாள் சடையன் தான் எங்கோ பரவெளியில் சஞ்சரிப்பதைப் போல் உணர்ந்தார். சற்றுநேரம் அங்கு பேரமைதி நிலவியது. உலகே நின்றுவிட்டது போல் தோன்றியது.

"இந்தப் பிச்சைக்காரனுக்கு டீ வாங்கித் தருவீர்களா?" சாது கேட்டார்.

"இதோ சுவாமி"

தன் கடையில் வேலைபார்த்து வந்த சிறுவனை டீ வாங்கிவர அனுப்பினார். டீ வந்தது, சாது தன் கையில் வைத்திருந்த சிரட்டையில் டீயை ஊற்றி அருந்தலானார். டீயைக் குடித்து முடித்தவுடன் சாது எழுந்தார். பெருமாள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்தப் பிச்சைக்காரன் பெயர் தெரியுமா?" சாது கேட்டார்.

பெருமாள் தெரியாது எனச் சொல்ல சாது "யோகி ராம்சுரத்குமார்" எனக் கூறிச் சிரித்தார். பின் அங்கிருந்து சென்றுவிட்டார்.

மறு நாளும் சுவாமி வந்தார். பெருமாள் அவரைப் பக்திப் பரவசத்தோடு வரவேற்றார். தன் வீட்டிலிருந்து தனக்காகக் கொடுத்தனுப்பப்பட்ட ஆகாரத்தை வழங்கினார். சுவாமி, பெருமாளையும் உடனிருந்து உணவருந்தச் சொன்னார். பெருமாளும் சுவாமியும் உணவருந்தினர். பெருமாளுக்கு சுவாமியிடம் அபார பக்தி ஏற்பட்டது.

தினமும் சுவாமி வந்தார். பெருமாள் உணவு படைத்தார். பின் சுவாமியுடனேயே பெருமாளும் சேர்ந்து இருவருமாக திருவண்ணாமலை நகர்வலம் வந்தனர். சில நேரங்களில் கோவிலுக்குள் அமர்ந்தனர். சில சமயங்களில் மலைமேலுள்ள குகை நமச்சிவாயர் குகைக்குச் சென்று அமர்ந்தனர். மற்றும் சில சமயங்களில் மலையைச் சுற்றி நடந்தனர். பல சாதுக்கள் இவர்களோடு இணைந்து கொண்டனர்.

பெருமாளுக்குத் தன் வியாபாரம் மறந்துவிட்டது. தன் குடும்பம் மறந்துவிட்டது. அவரது நினைவெல்லாம் சுவாமியைச் சுற்றியே வந்தது. கடையில் அவர் அமர்ந்திருப்பார், சுவாமி அங்கே வருவார், இருவரும் உணவருந்துவார்கள், பின் வேலை பார்க்கும் பையனிடம் கடையை ஒப்படைத்துவிட்டு சுவாமியும் பெருமாளும் சென்றுவிடுவார்கள். நாளடைவில் வியாபாரம் நின்று போய்விட்டது. கடையை இழுத்து மூடிவிடும்படியான சூழ்நிலை உருவானது. பெருமாள் கடையை மூடிவிட்டார்.

வருமானம் தந்துகொண்டிருந்த கடையை மூடிவிட்ட வருத்தம் அவருக்கு ஏற்படவில்லை. ஆனால் அவர் மனைவிக்கு சுவாமியின்

மீதும், பெருமாள் மீதும் கடுங்கோபம் ஏற்பட்டது. சுவாமியால்தான் தன் கணவர் பித்துப் பிடித்தது போல் ஆகிவிட்டார் என்று கருதினார். எனினும், அவரது கோபம் பெருமாளைப் பாதிக்கவில்லை. சுவாமியின் நிழல் போல் பெருமாள் ஆகிவிட்டார். சுவாமியைத் தரிசித்ததிலிருந்து வருமானம் கொடுத்து வந்த கடையையும், தொழிலையும் இழந்தார். குடும்பத்தில் சண்டை சச்சரவு அதிகமானது. எனினும், பெருமாள் சுவாமியின் நிழலில் பேரானந்தம் கொண்டவராயிருந்தார்.

குடும்பத்தில் நெருக்கடி அதிகமானது. குழந்தைகளும், மனைவியும் பசியில் வருந்தினர். திடீரென, பெருமாளுக்கு தன் குடும்ப சூழ்நிலை வேதனை அளித்தது. தன் குடும்பத்தைக் காப்பாற்ற தானிய வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். சுவாமியின் கண்களில் படாதவாறு தன்னை மறைத்துக்கொண்டு மாட்டு வண்டியில் தானிய மூட்டைகளை ஏற்றிக்கொண்டு செல்கையில் எதிரே சுவாமி வந்தார்.

“பெருமாள் எங்கே போறிங்களா?” சுவாமி கேட்டார்.

“எங்கேயும் இல்லை சுவாமி”

பெருமாள் பதில் உரைத்து வண்டியிலிருந்து இறங்கி சுவாமி பின்னேயே சென்றுவிட்டார். வியாபாரச் சரக்கு நிரம்பிய வண்டி சென்றுவிட்டது. பெருமாள் சுவாமியோடு இருந்தார். அதன்பின் அவர் சுவாமியோடேயே இருந்துவிட்டார். குடும்பச் சுமையும் மறந்துவிட்டது. குடும்பத்தின் தத்தளிப்பும் அவரை பாதிக்கவில்லை சுவாமியை ரௌடிகளிடமிருந்து பாதுகாத்தார். சுவாமியின் உடைமைகளைச் சுமந்தார். சுவாமியுடனேயே இரவும் பகலும் கழித்தார். இவ்வாறாக ஒரு நல்ல வியாபாரி, ஒரு நல்ல சீடனாக மாறினார். சுவாமியின் நாமத்தைப் பெருமாளும் அவரது சகாக்களும் பாடினால், அன்றெல்லாம் கேட்டுக்கொண்டே இருக்கத் தோன்றும். பெருமாளின் சாரீரத்தில் உள்ள பக்தியும், உருக்கமும்,

தெளிவும் கேட்பவர்களை மெய்சிலிர்க்க வைத்திடும்.

பிற்காலத்தில் வந்த சுவாமியின் பக்தர்கள் பெருமாளின் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்க உதவி புரிந்தார்கள். திருமணங்கள் நடந்தன. வீடு கட்டப்பட்டது. பெருமாள் இறுதிவரை சுவாமியோடு இருந்தார். சுவாமியின் ஆசிரமம் திருவண்ணாமலையில் தோன்றுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர் பெருமாள் சடையன் தான். அவர்தான் பெங்களூர் ஜெனார்த்தனனிடம் சென்று ஆசிரமம் கட்டுவதற்கு சுவாமியின் அனுமதி கேட்க பேருந்துதலாக இருந்தார்.

பெருமாளின் வற்புறுத்தலின் பேரில் ஜெனார்த்தனன் சுவாமியிடம் ஆசிரமம் கட்ட அனுமதி கோர, சுவாமி அனுமதி வழங்கினார். பெருமாளின் உந்துதல், அன்று இல்லையெனில் இன்று சுவாமியின் பக்தர்களுக்குத் திருவண்ணாமலையில் ஆசிரமம் இருந்திருக்காது என்பது உண்மை. சுவாமியின் அணுக்கத் தொண்டரான பெருமாள் சடையனின் திருவுருவப் படத்தை ஆசிரமத்தில் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு சுவாமியின் பக்தர்களுக்கு உண்டு. அதை செய்வார்கள் என்று நம்புவோமாக.

சுவாமியின் நினைவுடனேயே வாழ்நாளெல்லாம் கழித்த பெருமாள் சடையன் 1999ல் தன்னுடல் துறந்து விடுபட்டுச் சென்றார்.

ஜார்ஜ்:

ஏசுபிரானின் பக்தரான ஜார்ஜ் திருவண்ணாமலையில் பழைய பஸ் நிலையத்தின் வெளியே ஒரு அரசமரத்தின் கீழே அமர்ந்து சைக்கிளுக்கு பஞ்சர் போடும் வேலை செய்து வந்தார். எழுதப் படிக்கத் தெரியாத ஜார்ஜ் மனித நேயமும், ஏசு பக்தியும் அதிகம் கொண்டவர். அவர் அமர்ந்து தொழில் பார்த்த அதே இடத்துக்கு அருகில், அரசமரத்தின்

நிழலிலேயே சுவாமியும், பெருமாள் சடையனும் பகல் நேரத்தில் அமர்ந்திருப்பார்கள்.

திருவண்ணாமலையில் இருந்து சென்னை செல்லும் சாலையில் நங்கலிகொண்டான் எனும் கிராமத்தைச் சேர்ந்த கிராமதிகாரி ராதாகிருஷ்ணன் சுவாமியிடம் பக்தி கொண்டவர். அவர் தினமும் இரண்டு உணவுப் பொட்டலங்களும், சிறிது புகையிலையும், இரண்டு சிகரெட் பாக்கெட்டுகளும், திருவண்ணாமலை செல்லும் பஸ் ஓட்டுனரிடம் கொடுத்து அனுப்புவார். ஓட்டுனர் அந்தப் பொருட்களை சுவாமியிடம் சேர்ப்பிப்பார். உணவுப் பொட்டலங்கள் கிடைத்தவுடன் சுவாமியும் பெருமாள் சடையனும் ரயில் நிலையத்தின் பின்புறம் உள்ள புன்னை மரத்தின் நிழலில் அமர்ந்து உணவை உட்கொள்ளுவார்கள். பின்பு மலையில் உள்ள குகை நமச்சிவாயர் குகைக்குச் சென்று விடுவார்கள். இவ்வாறு பல தினங்கள் நடந்தன.

திடீரென சில தினங்கள் சுவாமிக்கு உணவு வருவது தடைபட்டுப்போனது. உணவுக்காகக் காத்திருந்த சுவாமியும், பெருமாள்சடையனும் பசியுடன் திரும்பிச் சென்றார்கள். இரு தினங்களாக இதைக் கவனித்த ஜார்ஜ் மூன்றாவது நாள் சுவாமியும், பெருமாளும் உணவுக்காக காத்திருக்கும் போது தன்னிடமிருந்த பணத்தில் சுவாமிக்கும், பெருமாளுக்கும் அங்கிருந்த ஒரு சிறிய உணவு விடுதியிலிருந்து இரண்டு பட்டை சாதப் பொட்டலங்களை வாங்கிக் கொடுத்தார்.

ஜார்ஜ் கொடுத்த உணவுப் பொட்டலங்களை சுவாமியும், பெருமாளும் ஏற்றுக் கொண்டு அங்கேயே உணவை அருந்தினார்கள். ஜார்ஜுக்கு சுவாமியைப் பார்க்கும் போதெல்லாம் ஏசுபிரானைப் பார்ப்பது போன்ற உணர்வே தோன்றியது. சுவாமி வரும்போதெல்லாம் அவரைப் பணிந்து, தன்னிடமிருந்த பணத்திற்கேற்ப எளிய உணவுப் பதார்த்தங்களை சுவாமிக்கு படைக்கலானார்.

சுவாமி அவற்றை ஏற்றுக்கொள்ளும்போது ஜார்ஜுக்குப் பேருவகை ஏற்பட்டது. ஏசுபிரானே அவர் காணிக்கையை ஏற்றுக்கொண்டதாகக் கருதி மகிழ்ந்தார். நாளடைவில் சுவாமியின் மீதான அதீத பக்தியில், செய்த தொழிலையும் குடும்பத்தையும் மறந்து சுவாமியின் மற்றொரு நிழலாக மாறினார். சுவாமியோடு நடந்தார். சுவாமியின் உடமைகளைச் சுமந்தார். சுவாமியை துஷ்டர்களிடமிருந்து பாதுகாத்தார். சுவாமியோடு சாலையோரங்களிலும் மர நிழல்களிலும் படுத்தார். தான் அறியாமலேயே தனது வாழ்வை சுவாமிக்காக சமர்ப்பணம் செய்தார்.

ஒருநாள் சுவாமி, பெருமாள் மற்றும் ஜார்ஜ் மலையடிவாரத்தில் சஞ்சாரம் செய்தனர். அன்று முழுவதும் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. பெருமாளுக்கும், ஜார்ஜுக்கும் பெரும்பசி. அவர்களின் பசியை அறிந்த சுவாமி பெருமாளையும் ஜார்ஜையும் அங்கிருந்த அருகம்புற்க்களைச் சேகரிக்கச் சொன்னார். அவர்கள் கணிசமாக அருகம்புல்லை அறுத்து எடுத்து வந்தார்கள். ஒரு பாறையில் வைத்து அதை நசுக்கி, நீர் கலந்து கூழாக்கச் சொன்னார் சுவாமி. அதை சுவாமி சிறிது பருகிவிட்டு மீதியை பெருமாளையும், ஜார்ஜையும் அருந்தச் சொன்னார்.

அவர்கள் அருகம்புல் சாறைக் குடித்தும், சற்றுநேரத்தில் மீண்டும் பசி தலைதூக்குவதை உணர்ந்தார்கள். உணவு கிடைப்பதற்கான சாத்தியக்கூறு எதுவுமில்லை. சுவாமி ஒரு பெரிய மர நிழலில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். பெருமாளும், ஜார்ஜும் பசியால் வாடினர். சுவாமிக்கும் பசிக்குமே, ஏதாவது செய்ய வேண்டுமென ஜார்ஜ் நினைத்தார். சுவாமி அறியாவண்ணம் அவர் அங்கிருந்து நழுவி ஊருக்குள் சென்றார். அங்கு தெரிந்த மண்டியில் சற்றுநேரம் கூலி வேலை செய்தார். செய்த வேலைக்குக் கொஞ்சம் பணம் கூலியாகக் கிடைத்தது. கிடைத்த பணத்தில் மூன்று உணவு பொட்டலங்களை வாங்கி எடுத்துக்கொண்டு சுவாமி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த


மலையடிவாரத்தில் உள்ள பெரிய மரத்தடிக்கு விரைந்து சென்றார். அங்கு சுவாமியும், பெருமாளும் அமர்ந்திருந்தனர்.

“எங்கே போய்ட்டீங்க ஜார்ஜ்?“ சுவாமி வினவினார்.

“ஊருக்குள் போயிருந்தேன் சாமி. கொஞ்சம் ஆகாரம் கிடைத்தது சாமி சாப்பிடு சாமி.”

ஜார்ஜ் பணிவோடு உணவுப் பொட்டலங்களை சுவாமியின் முன் வைத்தார். சுவாமி பெருங்கருணை பொங்க ஜார்ஜைப் பார்த்து புன்முறுவல் பூத்து அருள்பாலித்தார். சுவாமி, பெருமாள், ஜார்ஜ் மூவரும் அந்தப் பேரமுதை அளவில்லாத ஆனந்தத்துடன் உண்டார்கள். பரமனும், பக்தர்களும் ஒருங்கிணைந்து உணவு அருந்துவதை மனத்தில் காட்சியாகக் காண்பவர்கள் மோட்சமடைவது திண்ணம். தன்னை இழந்து தன் குடும்பத்தை மறந்து, செய்த தொழிலை விட்டு, சுவாமியே கதியென வாழ்ந்த பெருமாள், ஜார்ஜ் போன்ற புண்ணிய பக்தர்களை நினைவுகூர்ந்தாலே தெய்வம் நம்முன் வந்து நம்மை ஆகர்ஷித்துக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை. 1995யில் ஜார்ஜ் தன் பூதவுடலைத் துறந்தார்.

# அந்நாட்களில் சுவாமியின் அன்றாட வாழ்க்கை




1970களின் ஆரம்பம் முதல் 1977இன் மத்திமம் வரை நமது சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் அன்றாட வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்வோம்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலின், இராஜகோபுரத்தின் எதிரே, தெற்குப் பக்கத்தில் அமைந்துள்ள பாத்திரக்கடை வீதியில், கிழக்கில் உள்ள முதல் கடையின் திண்ணையில், கோணிப்பை மீது விரிக்கப்பட்ட பாயில் சுவாமி துயில் கொண்டிருப்பார். அதிகாலை 4 மணிக்கு சுவாமி துயில் கலைந்து எழுந்து அமர்வார்.

சுவாமியின் எதிரே தரையில் படுத்திருந்த பெருமாள், ஜகன்னாதன், ஜார்ஜ், துரை, போன்ற, சுவாமியின் அணுக்கத் தொண்டர்களும், சுகவனம் என்ற பக்தரும், சுவாமி எழவும், அவர்களும் எழுந்து அமர்ந்து கொள்வார்கள்.

இவர்களில் பெருமாள், ஜார்ஜ், துரை மற்றும் சுகவனம் ஆகியோர்க்குத் திருவண்ணாமலையிலேயே வீடிருந்தும் சுவாமியுடன் இரவைக் கழிப்பதையே பெரும் பேறாகக் கருதுபவர்கள். மழையிலும், பனியிலும், கடுங்கோடையிலும், சாலையோர புழுதியின் மத்தியிலும் கஷ்டம் பாராது சுவாமியுடன் இருப்பதையே பாக்கியமாகக் கொண்டவர்கள்.

காலை 4 மணியிலிந்து 5 மணி வரை நாம யக்ஞயம். சுவாமியின் கணங்கள் நாமம் பாடுவதை கேட்க கேட்க உள்ளமும், உடலும் தனைமறந்து ஒருவித பரவச நிலைக்குச் சென்றுவிடும். பல நாட்கள் இச்சுகத்தைப் பெறும் பேற்றை சுவாமி எனக்கு அருளியுள்ளார். காலை 5 மணியானதும் சுவாமி,

“ஜகன்னாதா எங்கள் எல்லோருக்கும் அகில இந்திய காபி பாரிலிருந்து காபி வாங்கி வரலாம்”, எனக்கூறுவார்.

அடுத்த சில நிமிடங்களில் ஜகன்னாதன் அனைவருக்கும் காபி வாங்கிவருவார். சுவாமி பருகத் தொடங்கியதும், மற்றவர்களும் காபி அருந்த சுவாமி சைகை செய்வார். காபி அருந்தி முடிந்ததும் காலி டபராக்களை, ஜகன்னாதன் கடையில் திரும்பக் கொடுக்கச் செல்வார்.

இதனிடையே, சுவாமியின் படுக்கையை மடித்து சுற்றிவைத்து, மற்ற பல, பெரிதும் சிறிதுமான சாக்கு மூட்டைகளை மற்றவர்கள் தயார் செய்வார்கள். ஜகன்னாதன் திரும்பியதும் அவரவர் சக்திக்கேற்ப மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு சுவாமியின் முன் செல்ல ஏனையோர் வரிசையாகப் பின் தொடர்வர். சுகவனம் தன் வீட்டிற்குச் சென்றுவிடுவார்.

சுவாமி எப்பொருளையும் கழிப்பது இல்லை. அவருக்கு எழுதப்பட்ட கடிதங்கள் ஆங்கில தினசரிப் பத்திரிக்கைகள், கந்தலாகிவிட்ட பழைய

ஆடைகள், அவர் பயன்படுத்திய பழைய சிரட்டைகள் அனைத்தும், சாக்குமூட்டையில் கட்டப்பட்டு அவரது உதவியாளர்களால் சுவாமி செல்லும் இடங்களுக்கெல்லாம் தூக்கிச் செல்லப்பட்டது. சுவாமி தனது பகல்பொழுதைத் திருவண்ணாமலை புகைவண்டி நிலையத்தின் பின்புறம் உள்ள ஒரு புன்னை மரத்தின் நிழலில் கழிக்கலானார். அப்போது அவருடன் இருந்த உதவியாளர்களில் தலைமையானவர் பெருமாள் சடையன். அவரோடு ஜார்ஜ், ஜெகன்னாதன், துரை, திரிசங்கு என நால்வர் இருந்தனர். அந்த நால்வரும் எப்பொழுதும் சுவாமியோடு இருப்பார்கள்.

சுவாமியும், மற்றோரும் சன்னதித் தெரு வழியே சென்று, காந்திநகர் வழியாக ரயில் பாதையைச் சென்றடைந்து, ரயில் தண்டவாளம் ஒட்டியே நடந்துசென்று, ரயில் நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள ஒரு தோட்டத்தின் நடுவில் இருக்கும் பெரிய புன்னைமரத்தின் கீழ் வந்து சேர்வார்கள்.

இந்த பயணத்தின் மொத்த தூரம் சுமார் 4 கிலோமீட்டர் இருக்கும். மரத்தின் நிழலில் சுவாமி அமர பாய் விரிக்கப்படும். எதிரே, வரும் பக்தர்கள் அமர மற்றொரு பாய் விரிக்கப்படும். பின், ஒருவர் பின் ஒருவராக கிழக்கே தூரமாகச் சென்று இயற்கை உபாதைகளை முடித்து வருவார்கள்.

மணி காலை 8 ஆக பக்தர்கள் வரத்து ஆரம்பமாகும். பக்தர்கள் கொண்டுவரும் உணவுகளை சுவாமி அனைவருக்கும் பகிர்ந்தளிப்பார். பக்தர்களின் குறைகள், வேண்டுதல்கள் அனைத்தும் கேட்கப்படும். ஆறுதலான வார்த்தைகளும், துயர் நீக்கும் பேரருளும் அங்கு சுவாமியால் பக்தர்களுக்கு அனுக்கிரஹிக்கப்படும்.

பகல் பொழுதில் பக்தர்களைப் புன்னை மரத்தடியில் சந்தித்துவிட்டு,

மாலை 5 மணி அளவில் அங்கிருந்து சுவாமி தன் உதவியாளர்களுடன் புறப்படுவார். காலையில் வந்த பாதையிலேயே, புகைவண்டித் தடம் வழியாக, அந்நால்வரும் சாக்கு மூட்டைகளைச் சுமந்தபடி சுவாமியைப் பின்பற்றி, தண்டவாளத்துக்கு அருகே பரப்பப்பட்ட கூரான கருங்கற்கள் மேல் நடந்து செல்வார்கள். யாரும் செருப்பு அணிவதில்லை. கூரான கற்களில், நடந்து நடந்து அவர்கள் பாதங்கள் வலுவேறி இறுகிவிட்டன.

ஆனால் சுவாமியின் பாதங்களோ கூரான கற்களின் மேல் செருப்பில்லாமல் நடந்தாலும் மிருதுவாகவே இருந்தது. கையில் விசிறி, சிரட்டை, நிறைய மயில்பீலிகள் ஒன்றாக்கிக் கட்டப்பட்ட ஒரு அழகிய கொத்து. விரல் பருமனுள்ள சுமார் 2½ அடி நீளம் கொண்ட ஒரு குச்சியுடன் சுவாமி தன் பரிவாரம் பின்தொடர வேகமாக நடப்பார். சுமார் 1 கி.மீ. தூரத்தில் காந்திநகர் வந்தவுடன் தண்டவாளப் பாதையிலிருந்து இறங்கி தெரு வழியாக பெரிய கோவிலை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்.

சில சமயங்களில் அத்தெருவில் உள்ள சுப்பிரமணியன் என்பவரது வீட்டின் தாழ்வாரத்தில் சிறிது நேரம் ஓய்வெடுப்பார். உதவியாளர்களும் தங்களது தலைச்சுமையை இறக்கி வைத்து சிறிது நேரம் ஓய்வெடுப்பார்கள். போஸ்ட் மாஸ்டர் சுப்பிரமணியன் சில நேரங்களில் அனைவருக்கும் காபி கொடுத்து உபசரிப்பார். பெரும்பாலான நேரங்களில் சுவாமி வெறும் தண்ணீர் மட்டும் கேட்டு வாங்கி அருந்திவிட்டு, சிறிது நேரத்தில் கோயிலை நோக்கி நடக்க ஆரம்பிப்பார்.

காந்திநகரிலிருந்து, சன்னதித் தெருவை அடைந்தவுடன் சுவாமி மிகுந்த கவனமுடன் நடக்க ஆரம்பிப்பார். ஏதாவது லாரியோ அல்லது ஜீப்போ வரும் ஓசை கேட்டால், வேகவேகமாக தெருவின் விளிம்புக்குச் சென்று அங்கிருக்கும் வீட்டின் சுவரையொட்டி நின்றுகொள்வார். அவரது உதவியாளர்களையும் அவ்விதமே இருக்கச்சொல்வார். அந்த

ஜீப்போ அல்லது லாரியோ கடந்து சென்ற பின்புதான் சுவாமியின் நடைப்பயணம் மீண்டும் தொடரும். முற்காலத்தில் சில கொடியவர்கள் அவரை வேண்டுமென்றே ஜீப்பினாலும், லாரியினாலும் முட்டித்தள்ளி காயப்படுத்திய அனுபவத்தினால் சுவாமி மிகுந்த ஜாக்கிரதையாக தெருக்களில் நடப்பார்.

அவர் செய்ய வேண்டிய பணிகள் நிறைய மீதமிருந்தன. எனவே ஜாக்கிரதையாக தன் மேனியையும், ஜீவனையும் பராமரித்து வந்தார். சுவாமியும் அவரது உதவியாளர்களும், திரும்ப சன்னதித் தெருவிலிருந்து சன்னதி அக்ரஹாரம் நுழைந்து, அங்குள்ள தேரடி மண்டபத்தின் படிகள் ஏறி உயரச்சென்று அங்கிருக்கும் தளத்தில், உதவியாளர்கள் சாக்கு மூட்டைகளை அடுக்கி வைக்க, சுவாமி அப்படிகளின் கைப்பிடிச்சுவரில் சாய்ந்து அமர்ந்து கொள்வார்.

மாலை 5 மணி அளவில் புன்னை மரத்தில் ஆரம்பித்த பயணம் சுமார் 6.30 மணியளவில் தேரடியில் வந்து முடியும்.

மணி மாலை 7. பக்தர்கள் வருகை இங்கேயும் தொடரும். சுவாமி தன்னை நாடி வரும் பக்தர்களோடு அளவளாவி அவர்கள் சுமைகளை இறக்கி, ஆண்டவனின் சிந்தனையில் அவர்களைச் சிறிது திளைக்க வைத்து, தெளிவூட்டி அனுப்பி வைப்பார். அந்தப் பக்தர்கள் சமர்ப்பிக்கும் உணவுப் பொருளையும் பழங்களையும் சுவாமி அனைவருக்கும் பகிர்ந்தளிப்பார்.

இரவு மணி 10. பாத்திரக்கடை மூடியதும், சாக்கு மூட்டைகளும் இதரப் பொருட்களும் பாத்திரக் கடை திண்ணைக்கு மாற்றப்படும். அனைத்து மூட்டைகளையும் பாத்திரக்கடையின் தாழ்வாரத்துக்கு மாற்றியபின் சுவாமிக்கு படுக்கை விரிக்கப்படும். சுவாமி மண்டபத்திலிருந்து வெளிவந்து பாத்திரக்கடையில் எழுந்தருள்வார். பெருமாள்

சடையன் கடையின் தாழ்வாரத்தில் மூடிய கதவுகளுக்கு அடுத்துள்ள திண்ணையில் சுவாமிக்கு ஒரு பாயை விரித்து, ஒரு சிறிய கோணிப்பையை சுவாமிக்குத் தலையணையாக ஏற்பாடு செய்வார். சுவாமி படுக்கையில் அமர சற்று நேரம் நாமம் சொல்லப்படும். சுமார் 11 மணியளவில் அனைவரும் படுத்துத் தூங்கும்படி சுவாமி சைகை செய்ய, அதற்கிணங்கி அனைவரும் படுக்க, அவரும் திண்ணையில் படுத்து உறங்கிவிடுவார். அன்றைய தினம் முடிவிற்கு வரும்.

சுவாமியின் இந்த தினசரி சிரமத்தைக் கண்ட சுவாமியின் ஆரம்பகால பக்தர் திரு. ராஜமாணிக்க நாடார் அவர்கள் சுவாமியிடம், சுவாமிக்கு ஒரு வீட்டின் தேவை குறித்து மிகவும் மன்றாட, சுவாமி அவருக்கு வீடொன்று வாங்க அனுமதி அளித்தார்.

திரு. ராஜமாணிக்க நாடார் அவர்கள் தன் நண்பர்கள் திரு. பெருமாளப்பன், திரு. ராஜதுரை நாடார் முதலானோரின் பங்களிப்போடு சன்னதித் தெரு அக்ரஹாரத்தில் 90ம் நம்பர் வீட்டை சுவாமிக்காக விலை கொடுத்து வாங்கினார். சுவாமியின் விருப்பப்படி அந்த வீடு திரு. ராஜமாணிக்க நாடார் பெயரிலேயே வாங்கப்பட்டது. பின்னாளில் திரு. ராஜமாணிக்க நாடார் மறைவிற்கு பின் சுவாமியின் விருப்பப்படி அன்னாரின் பிள்ளைகள், திரு. கிருபாஹரமூர்த்தி, திரு.விஜயசேகர் மற்றும் மகள் வாசுகி யாவரும் அந்த புனிதமான வீட்டை யோகி ராம்சுரத்குமார் டிரஸ்டுக்கு மாற்றிக்கொடுத்தனர்.

அவ்வீட்டை அவர்கள் தந்தை வாங்கியதையும் அதை ஆஸ்ரமத்திற்கு அவர்கள் வழங்கியதையும் இதுவரை எவர்க்கும் தெரியாமல் செய்துள்ளனர்.

நம் சுவாமியின் அருளால் அந்த வீடு புனிதமானது. அங்கே மேதைகளும், உயர்ந்த சாதகர்களும், பிரபல்யமான எழுத்தாளர்களும், வித்தகர்களும்,


சித்தர்களும், பாமரமக்களும் பேரருள் பெற்று இந்த சம்சாரக் கடலை கடந்து சென்றார்கள். இன்றும் இப்புனித வீடு, சுவாமியைத் தேடி வரும் பக்தரை அரவணைத்து, ஞான ஒளி உள்ளேற்றி, அவர்களை சுவாமியோடு ஒன்றிட அருள் பாலிக்கின்றது.

பக்தர்கள் சூழ அங்கு பாடல்கள், பரவசங்கள், சம்பாஷணைகள், அழுகைகள், சிரிப்புகள், துன்பங்கள், இன்பங்கள் என அனைத்து உணர்வுகளும் அங்கு ஆர்ப்பரிக்கத் தொடங்கும். அனைத்துக்கும் நாயகனாக அங்கு சுவாமி வீற்றிருப்பார்.

எத்தனை எத்தனை நண்பர்கள் அங்கு பயன்பெற்றுச் சென்றார்கள்! எத்தனை எத்தனை சாதகர்கள் சாதித்தார்கள்! எத்தனை எத்தனை பக்தர்கள் பரவசநிலையடைந்து பூரித்துப் போனார்கள்! எத்தனை எத்தனை ஏழைகள் தங்கள் பாரத்தை இறக்கிச் சென்றார்கள்! எத்தனை எத்தனை துன்பங்களுக்கு அங்கு விடியல் பிறந்தது!

அப்பப்பா! அவற்றில் சிலவற்றையாவது பார்த்து, ரசித்து மகிழ முடிந்தது என் பாக்கியம். புன்னை மரம், தேரடி மண்டபம், பாத்திரக்கடை திண்ணை, சன்னதித்தெரு வீடு, ரமணநகர் சுதாமா, முடிவில் ஆஷ்ரமம். இது சுவாமியின் ஆறு முக்கிய ஸ்தலங்கள். ஆரம்ப காலத்தில் சுவாமியோடு இரவும், பகலும் உடனிருந்து பாத்திரக்கடையிலும், புன்னை மரத்தடியிலும், தேரடி மண்டபத்திலும், சன்னதித்தெரு வீட்டிலும் கழித்த அந்தச் சில பல நாட்கள் எனது ஜீவிதத்தின் பொற்காலம். காற்றிலும், குளிரிலும், தூசியிலும், வெயிலிலும், மழையிலும், வறுமையிலும் வாடினாலும் சுவாமியோடு கழித்த அந்த நாட்கள்தான் எனது பேரானந்த நாட்கள்.

# பண்டிட். திரு. T.K.சுந்தரேச ஐயர்



திரு.T.K.சுந்தரேச ஐயர், மஹரிஷி ரமணரின் அத்தியந்த சீடர் ஆவார். தமிழ் ஆசிரியராக பணி புரிந்து ஓய்வு பெற்றவர். அவரை ரமண பக்தர்கள் வாத்தியார் என்றே அழைப்பார்கள்.

திரு. சுந்தரேச ஐயர், நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தவர். சுவாமிக்கு தமிழ் மொழியை எழுத, படிக்க, பேசக் கற்றுக் கொடுத்தவர் திரு. சுந்தரேச ஐயர் அவர்களே ஆவார். அவர் குறித்து சுவாமி சொல்வார்,

“மிகக் குறைவானவர்களுக்கே தெரியும் பண்டிட் சுந்தரேசஐயர் தனையுணர்ந்த ஒரு பெரிய மகான் என்று.”

திரு. சுந்தரேச ஐயருக்கு சுவாமி மீது அலாதி அன்பு உண்டு.

ஊரெல்லாம் சுவாமியைப் பிச்சைக்காரன் என்று பிதற்றிய போதும், அன்றைய நாட்களில் அதாவது 1960களில் அவர் ஒருவரே சுவாமியிடம் தெய்வீகத்தைக் கண்டவர். அன்றிருந்த ஆசிரமங்கள் யாவும் சுவாமியை ஒதுக்கிய போதும், ஐயர் போன்ற ஞானிகளே சுவாமியை அரவணைத்தவர்கள் ஆவார்கள்.

சுவாமிக்கு வெகுநாட்களாக ஒரு ஆசை இருந்து வந்தது. எந்த வகையிலாவது திரு. சுந்தரேச ஐயருக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென தீராத ஆவல் கொண்டிருந்தார். ஆனால் திரு. சுந்தரேச ஐயரோ மிகவும் எளிமையானவர். தன் காரியங்களைத் தானே பார்த்துக் கொள்வார். எவரிடமும் எந்த சகாயத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. அனைவரையும் பகவத் ரூபமாகப் பார்க்கும் ஒரு பரம ஞானி, அடுத்தவரிடம் எப்படி அவருக்கெனப் பணி புரியச் சொல்ல முடியும்?

இருந்தாலும் சுவாமிக்கு இந்த ஆசை வலுப்பெற்றவாறு இருந்தது. எனினும் தன் ஆசையை சுவாமி ஒரு நாளும் திரு.சுந்தரேச ஐயரிடம் வெளிப்படுத்தியதே இல்லை.

ஒரு நாள் ஆகாரம் முடித்து திரு. சுந்தரேச ஐயர் ஓய்வாக ரமணாசிரமத்தில் உள்ள இலுப்பை மரத்தினடியில் அமர்ந்திருந்தார். சுவாமி அந்த வழியில் வந்தவர், திரு. சுந்தரேச ஐயர் இலுப்பை மரத்தினடியில் இருப்பதைப் பார்த்து அவர் அருகில் வந்தார். அவரின் முகமலரையே தரிசித்த வண்ணம் இருந்தார். தன்னை மறந்த நிலையில் நின்ற சுவாமியிடம் திரு. சுந்தரேச ஐயர் ஒரு வேண்டுகோள் வைத்தார்.

“அப்பனே, என்னிடம் வெற்றிலை பாக்கு தீர்ந்துவிட்டது. பஜாருக்குச் சென்று எனக்கு வாங்கித் தருவாயா?”

சுவாமிக்கு ஆனந்தம் கரைபுரண்டது.

“இதோ சுவாமி.”

சுவாமி சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பஜாருக்கு ஓட்டமும் நடையுமாகச் சென்றார். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை வாங்கிக்கொண்டு மறுபடியும் ஓட்டமும் நடையுமாக திரு. சுந்தரேச ஐயரிடம் வேர்க்க விறுவிறுக்க வந்தார். தான் வாங்கிவந்ததை அவரிடம் பணிவோடு சமர்ப்பித்தார். சிரித்தபடியே திரு. ஐயர் அவற்றை வாங்கிக்கொண்டார்.

“இப்போ திருப்தி ஆச்சா?”

திரு. சுந்தரேச ஐயர் கூறியதைக் கேட்டு சுவாமி ஒருவித நாணத்தோடு சிரித்தார்.

பின்னாளில் சுவாமி முழுமையான தெய்வாம்சம் பெற்றபின் திரு.சுந்தரேச ஐயர் முதன்முதலாக சுவாமியை “யோகி” என அழைக்கலானார்.

நாளடைவில் சுவாமியின் நாமம் “யோகி ராம்சுரத்குமார்” என்று முழுமை அடைந்தது. யோகி ராம்சுரத்குமார் என்ற நாமத்தை சுவாமிக்குச் சூட்டிய அந்த மஹா ஞானியான திரு.T.K.சுந்தரேச ஐயரை என்றும் நாம் நினைவு கூறுவோமாக.

# பாமரனும் பணக்கார பக்தரும்




1965ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரை சுவாமி யோகி ராம்சுரத்குமார் திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூருக்கு அடிக்கடி விஜயம் செய்து வந்தார்.

அங்கே ஸ்ரீநிவாசன் என்ற பரமபக்தர் சுவாமியின் நண்பன் என்ற அந்தஸ்தைப் பெற்றார். அவர் போலியோ வியாதியால் பாதிக்கப்பட்ட கால்கள் கொண்டவர். ஏழ்மையின் மொத்த உருவம் அவர். ஒரு தேநீர்க் கடையை வாழ்வின் ஆதாரமாகக் கொண்டவர்.

அவரது குடும்பம் பெரியது. அவர் அதிகம் படிக்கவில்லை எனினும் ஆழ்வார் திவ்யபிரபந்தப் பாசுரங்களை மடை திறந்த வெள்ளம் போல் பக்தி பெருக்கில் அவர்பாடும் பேரழகை வர்ணிப்பது கடினம். இடுப்பு வரை உடலை வளைத்தால் தான் அவர் வாழும் குடிசைக்குள் செல்ல முடியும் என்ற தரித்திரநிலை.

இவ்வளவு மட்டுமல்ல! அவர் வாழ்ந்த இடத்தின் அருகே வாழ்ந்த ஒரு

ஞானிக்கு தினமும் புஷ்பக்கைங்கரியமும் செய்து வந்தார். சோர்ந்த முகமல்லாது சிரமமோ, கஷ்டங்களோ பாதிக்காது வாழ்ந்த அந்த பரமபக்தர் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் போற்றத்தக்க நண்பர்.

திருவண்ணாமலையில் ரவுடிகளின் தொந்திரவு தாங்காமல் சுவாமி திருக்கோவிலூர் செல்வார். தென்பெண்ணை ஆற்றின் இப்பகுதியில் பரம ஏழை ஸ்ரீனிவாசன் சுவாமியின் தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொள்வார். ஸ்ரீனிவாசன் வீட்டில் கிடைக்கும் சிறிது கூழும், அவரது தேநீர் கடையில் கிடைக்கும் வடையும், தேநீரும் சுவாமிக்குப் போதுமானதாக இருந்தது.

இரவில் பத்து மணிக்கு மேல் சுவாமி ஸ்ரீநிவாசனுடன், தெரு லாந்தர் விளக்கின் கீழ், கம்பத்தைச் சுற்றிச் சுற்றி ராமநாம பஜனையைத் தனைமறந்த உன்மத்த நிலையில் செய்வார்.

“ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்”

என உரத்த குரலில் விளக்குக் கம்பத்தைச் சுற்றிச் சுற்றிப் பாடி, ஆடி, பக்தி மயக்க நிலையில் இருவரும் இரவைக் கழித்த பொழுதை யார் கற்பனை செய்தாலும் அவர்களுக்குப் பகவத் தரிசனம் சுலபமாகக் கிட்டும்.

விளக்குக் கம்பத்தையே, ராமனாகப் பாவித்து பக்திப் பரவசத்தில் பக்தனும், பரமனும் ராமநாம பஜனை செய்வதை எவரேனும் கற்பனை செய்தாலும் போதும், பக்தியும், ஞானமும் தன்னாலேயே கைகூடும்.

தென்பெண்ணை ஆற்றின் இக்கரையில் இப்படி ஒரு ஏழை பக்தன்!

அக்கரையிலோ! ஊரிலே மிகப்பெரிய தனவந்தர், காந்தியவாதி, பெரும்பக்தர். ரகோத்தம சுவாமியின் சமாதிக்குச் சுற்றுச் சுவர்

ஏற்படுத்திக் கொடுத்தவர். ரகோத்தமரைக் குருவாகக்கொண்டவர். அவர் பெயர் கோவிந்தசாமி பிள்ளை. சுவாமியின் உற்ற நண்பர்.

சுவாமி அக்கரை செல்லும் போதெல்லாம் சுவாமிக்கென ஒரு அறை அவரின் எண்ணெய் ஆலையில் ஒதுக்கப்படும். ஆகாரம் பிள்ளைவாளின் மனைவியே வீட்டிலிருந்து எடுத்து வந்து சுவாமிக்குப் பரிமாறுவார். ஆகாரம் விருந்தாகவே இருக்கும். விருந்து முடிந்ததும் பிள்ளைவாளுடன் ஆன்ம விசாரம். பாரதத் திருநாட்டில் வாழ்ந்த அத்தனை ஞானியின் வாழ்க்கையும், உபதேசங்களும் அவர்களுக்குள் பரிமாறப்படும். அங்கு ஆழ்ந்த ஞானச்சூழல் நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கும்.

கோவிந்தசாமி பிள்ளையுடன் இப்படிச் சிலநாட்கள். அக்கரையில் ஸ்ரீநிவாசனோடு பக்திப்பரவசத்தில் சிலநாட்கள்.

இது தவிர யாரும் அறியாமல் ஆற்றின் கரையில் உள்ள ரகோத்தமர் சமாதியில் சிலநாட்கள், மற்றும் அறங்கண்ட நல்லூரில் உள்ள சிவன் கோவில் வாசலில் சிலநாட்கள், அதுவும் தவிர்த்து ஆற்றின் மணல் வெளியில் ஏகாந்தமாகச் சிலநாட்கள் என சுவாமியின் திருக்கோவிலூர் வாசம் சுவாமியின் திவ்ய சரித்திரத்தில் ஒரு பாகமாக அமைந்துவிட்டது.

# அவமதித்தோரையும் அரவணைக்கும் சுவாமி



1970 களின் ஆரம்பத்தில் உடுப்பி பிருந்தாவன் உணவு விடுதியில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் எப்போது வேண்டுமானாலும் உணவருந்திச் செல்லலாம் என அந்த உணவு விடுதியின் உரிமையாளர் திரு.கோவிந்தபட் சொல்லி இருந்தாலும், தன்னோடு நான்கு தொண்டர்கள் உடன் இருப்பதால், அவர்களை விட்டுவிட்டுத் தான் மட்டும் தனித்து உடுப்பி பிருந்தாவன் உணவு விடுதியில் ஆகாரம் எடுத்துக் கொள்ள சுவாமி ஒப்பவில்லை.

இதைக் கண்ணுற்ற சுவாமியின் உற்ற அன்பர் திருக்கோவிலூர் திரு.கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் உடுப்பி பிருந்தாவன் உணவு விடுதியில் சுவாமியின் பெயரில் கணக்கு ஒன்றை ஆரம்பித்து எப்போது வேண்டுமானாலும், எத்தனை பேரானாலும் உணவு அளிக்க உணவு விடுதியில் ஏற்பாடு செய்தார். எனினும் சுவாமி, திரு. கோவிந்தசாமி

பிள்ளை அவர்களுக்கும் தினசரி பாரமாக இருக்கக் கூடாது என முடிவெடுத்தார்.

அப்போது சுவாமியோடு நிழலாக இருந்த திரு.பெருமாள் சடையன், தனக்கு நன்கு பரிச்சயமான ஒரு சிறு உணவு விடுதியில் சுவாமியின் பெயரில் கணக்கு ஆரம்பித்தார்.

சுவாமியிடம் பக்தர்கள் வர ஆரம்பித்தனர். பக்தர்கள் அளிக்கும் காணிக்கையில் உணவுப் பிரச்சினை தற்காலிகமாகத் தீர்ந்தது. ஒரு சமயம் பக்தர்களிடமிருந்து காணிக்கை பெரிதளவில் வராதபோது, உணவு விடுதியில் பாக்கித் தொகை அதிகமாகிவிட்டது. எனவே சுவாமியும், தொண்டர்களும் சிலநாட்கள் அந்த உணவு விடுதிக்குள் செல்லாமல் இருந்தார்கள்.

ஒரு சமயம் தொடர்ந்து ஒரிரு நாட்கள் உணவு கிடைக்காததால் தொண்டர்கள் மிகவும் சோர்வுற்றனர். சுவாமியிடம் தயங்கியபடி உணவு விடுதிக்குச் செல்லலாமா என பரிதாபமாகக் கேட்க சுவாமி சம்மதித்தார். அனைவரும் உணவு விடுதிக்குச் சென்றனர். சுவாமி மட்டும் விடுதிக்கு வெளியில் நின்று கொண்டு, தொண்டர்களை உள்ளே அனுப்பிவைத்தார்.

தொண்டர்கள் உள்ளே சென்றதும் பெரிய கூச்சல் எழுந்தது.

“ஏற்கனவே 24 ரூபாய் பாக்கி இருக்கிறது. பணம் கொஞ்சம் கூட வரவில்லை. மறுபடியும் எப்படி இங்கே சாப்பாடு கேட்கிறீர்கள்? இங்கே என்ன அன்னச் சத்திரமா நடத்துகிறேன்?” உணவு விடுதி உரிமையாளர் கத்தினார்.

“ஏ சாமி, கொஞ்சம் மெதுவா பேசு. வெளியே யோகி சுவாமி நிற்கிறார்.”

பெருமாள் சடையன் உரிமையாளரிடம் கெஞ்சினார்.

அப்போது அங்கே விடுதி வாசலில் நங்கிலிகொண்டான் கிராம

அதிகாரி ராதாகிருஷ்ணன் நின்று கொண்டிருந்தார். "யோகி சுவாமி" என்ற வார்த்தையைக் கேட்டதும் சுவாமியைப் பார்த்தார். சுவாமியின் தெய்வீக முகத்தைக் கண்டதும், அவர் மனதில் ஒருவித எழுச்சி ஏற்பட்டது. விடுதியுள்ளே சென்றார்.

"வெளியே ஒரு பெரிய மஹான் நின்று கொண்டிருக்கிறார். நீங்கள் இப்படி பேசுகிறீர்களே?" திரு. ராதாகிருஷ்ணன் வினயமாக வினவினார்.

"பின் என்னய்யா செய்ய? பணம் என்ன சும்மாவா கிடைக்குது? நாங்களும் கடை நடத்தனும்ல." உரிமையாளர் கோபம் தணியவில்லை.

இந்த சத்தம் கேட்டு உள்ளே அடுப்படியில் இருந்த விடுதி உரிமையாளர் மனைவி வேகமாக வெளியில் வந்தார். பெருமாள் சடையனைப் பார்த்தார்.

"சுவாமி வரவில்லையா?" அந்த அம்மை வினவினார்.

"சுவாமி வெளியில் நிற்கிறார். உங்கள் கணவர் பணத்துக்காகக் கூச்சல் போடுகிறார்."

அம்மை கணவரின் முகத்தைப் பார்த்தார். உணவு கொடுக்கலாமே என்று அவர் முகம் கணவருக்குச் சொன்னது.

"நீ சும்மா இரு. இவர்கள் இப்படியே பணம் கொடுக்காமல் இருந்தால் என்ன செய்வது? பணம் இல்லாமல் கடை நடத்த முடியுமா?" உரிமையாளர் கோபம் குறையவில்லை.

"சுவாமி உங்களுக்கு எவ்வளவு பணம் தரனும்? சொல்லுங்கையா." கிராம அதிகாரி ராதாகிருஷ்ணன் உரிமையாளரைப் பார்த்துக் கேட்டார்

"24 ரூபாய் தரணும்." உரிமையாளர் பதிலுரைத்தார்.

கிராமஅதிகாரி தன் பையிலிருந்து பணத்தை எடுத்து உரிமையாளரிடம் கொடுத்தார்.

“இப்போது அனைவருக்கும் உணவளியுங்கள். அதற்கும் பணம் பெற்றுக் கொள்ளுங்கள்.”

உரிமையாளரிடம் கூறிவிட்டு, ராதாகிருஷ்ணன் சுவாமியை உணவருந்த உள்ளே அழைத்தார். சுவாமி உள்ளே வரமறுத்தார்.

“இந்த பிச்சைக்காரனுக்கு இப்போ உணவு தேவையில்லை. நீங்கள் யாவரும் உணவு எடுத்துக்கொள்ளுங்கள்.”

சுவாமியின் பதிலைக் கேட்ட உணவு விடுதி உரிமையாளரின் மனைவி வெளியே வந்தார். சுவாமியின் திருவடிகளில் விழுந்தார்.

“சுவாமி அவர் குணம்தான் உங்களுக்கு தெரியுமே. நீங்கள் வாங்க சுவாமி. நீங்கள் உணவருந்தி தான் போகவேண்டும்.” அம்மை கைகூப்பி சுவாமியிடம் பிரார்த்தித்தார்.


சுவாமி உணவு விடுதிக்குள் நுழைந்தார். சுவாமி பின்பு ஒரே இலையில் உணவருந்திட வற்புறுத்த, தானும் ராதாகிருஷ்ணனும் ஒன்றாய் உணவருந்தினர். உணவு விடுதி உரிமையாளர் மனைவிக்கு ஒரே சந்தோஷம். தன் கையாலேயே சுவாமிக்குப் பரிமாறினார்.

உணவு அருந்தி முடித்துவிட்டு சுவாமி புறப்படுகையில் அந்த அம்மையார் சுவாமியின் திருவடிகளில் விழுந்து மீண்டும் நமஸ்கரித்தார்.

பின்னாளில், அந்த அம்மையாருக்கு பெரியதொரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அதற்குப் பெரும்பணம் தேவைப்பட்டது. உணவு விடுதி உரிமையாளர் பணத்திற்காக பரிதவித்துக் கொண்டிருந்தார்.

திரு. பெருமாள்சடையன் இதுபற்றி சுவாமியிடம் தெரிவித்தார். சுவாமி அந்த அறுவை சிகிச்சைக்காக ஒருபெரும் தொகையை திரு. பெருமாள் சடையனிடம் கொடுத்து, அதை அந்த உணவு விடுதி உரிமையாளரிடம் கொடுத்து வரச்சொன்னார். சில பழங்களையும் பிரசாதமாக அந்த அம்மையாரிடம் சுவாமி கொடுத்து வரச் சொன்னார்.

# குரு கற்பக விருட்சம்



“சுவாமி, ஞானிகள் யாவரும் கற்பக விருட்சம் போன்றவர்கள் என சான்றோர் சொல்கின்றனர். கேட்பவை அனைத்தையும் தரும் சக்தி கொண்டோர் என அறுதியிட்டு பகர்கின்றனர். ஆனால் சுவாமி, என் தேவைகள் நிறைவேற வில்லையே, என் ஆசைகள் நிராசைகளாகவே உள்ளனவே.”

சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் வேதனையோடு அந்த பக்தர் புலம்பினார்.

சுவாமி அந்த பக்தரைக் கருணை ததும்பும் தன் விழிமலரால் தீர்க்கமாகப் பார்த்தார். தன் சிரமத்தை இலேசாக ஆட்டியபடி சுவாமி மௌனம் காத்தார். ஆழ்ந்த அமைதி அங்கு நிலவியது. சுவாமி சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்தார். ஆழ்ந்து ஒரு முறை புகைத்தார். சற்றே புன்னகை மலரக் கூறினார்;

“ஆம், ஞானிகள் யாவரும் கேட்டதை வழங்கும் கற்பக விருட்சம் போன்றவர்கள்தான். ஆனால் அம்மரத்தை அடையாளம் கண்டு, அம்மரத்தின் அருகே சென்று நம்பிக்கையோடு பிரார்த்திக்க வேண்டும். அது போன்றே உண்மையான ஞானிகளை இனம் கண்டு, அவர்களைச் சரணடைந்தால் ஒருவரின் கவலைகளும், பிரச்சனைகளும் தானாக மறைந்துவிடும். சரியான நேரமறிந்து அவரை அம்மெய்ஞானி தன்மயமாக்கிக் கொள்வார். அதன் பின்னர் அவருக்கு ஆசைகளோ, தேவைகளோ ஏற்படாது. அவர் பூரணத்துவம் அடைந்து, அவரே ஞானியின் அருளால் மற்றொரு கற்பக விருட்சமாகி விடுவார்.”

சுவாமியின் அருளுரை கேட்ட பக்தரின் கண்கள் பக்தியில் பனித்தன. சுவாமி ஆனந்தமாகச் சிரித்தார்.

# அவன் அதுவாக



நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களிடம் ஒரு பக்தர் வினவினார்.

“சுவாமி, சாதாரணமான என்னைப் போன்ற பக்தர்கள் உன்னதமான பரமார்த்த பரிபூரண நிலையை அடையும் மார்க்கத்தை உபதேசியுங்கள் சுவாமி”.

சுவாமியின் முகமலர் பிரகாசத்துடன் பொன்னாக ஜொலித்தது. அழகான புன்முறுவல் அவர் வதனத்தில் மிளிர்ந்தது. சற்று நேரம் கேள்வி கேட்ட பக்தரை உற்றுநோக்கினார்.

“குருவின் அருள் ஒன்றே தகுதியான மனிதரை நல்ல பக்தனாக பரிணமிக்கச் செய்யும். அந்த பக்தன் நாளடைவில் பற்றொழித்து, தானொழித்து, அனைத்துயிர்க்கும் அன்பு செலுத்த, ஒரு பெரிய மாற்றம்

அவனுள் ஏற்படுகின்றது. இறை தேடல் இயல்பாகவே அவனுள் உறுதியாக ஏற்படுகின்றது. அவன் எத்தொழில் செய்தாலும், அதை ஒரு தெய்வ உபாசனையாகவே கருதிச் செய்கின்றான். நல்ல பக்தனாக மாறியவன்பால் சத்குரு தன் பேரருளைப் பொழிந்திடுவார்.

குருவருள் பெற்றவருக்கு இறைஞானம் சித்திக்கின்றது. தொழில் பல செய்தாலும் இறைஞானம் பெற்ற பக்தனுக்கு, பக்தனின் வேண்டுதல் இன்றியே குரு அவனுக்கு மந்திர உபதேசம் செய்விக்கின்றார். மந்திர உபதேசம் பக்தனை மற்றொரு உணர்வுப் பிரதேசத்திற்கு இட்டுச் செல்கின்றது. பக்தனின் வாழ்க்கை ஞானிகளிடத்திலும், அவர்களின் உபதேசங்களிலும் ஒன்றுகிறது.

பக்தன் சாதகனாக பரிணமிக்க, அவனுள் அதுவரை உறைந்து வந்த அந்த தெய்வீக சக்தி விழித்து வெளிப்படத்தோன்றுகின்றது. வாழ்க்கை ஒரு விளையாட்டாகின்றது. பற்றற்ற நிலை இயல்பான நிலையாகின்றது. வாழ்வின் இன்பதுன்பங்கள் அவனைப் பாதிப்பதில்லை.

குருவின் பேரருளால் “நான்” அவனிடமிருந்து விலகிச் சென்றுவிடுகின்றது. அவன் உயிரோடு இருக்கும்போதே “நானின்” மரணம் சம்பவிக்கின்றது. அங்கே தெய்வதரிசனம் கிட்டுகின்றது. சரியான காலத்தில் அவன் “அது” ஆகின்றான். எங்கும் இருக்கும் “அது” அவனாகவும் இருக்கின்றது. சத்குருவின் அருளால் மட்டுமே இந்த பரிணாம வளர்ச்சி சாத்தியமாகின்றது.”

சுவாமியின் அருளுரைகேட்ட பக்தரின் கண்கள் பக்தியில் பனித்தன.

குருவை துதி செய்மனமே, தெய்வத்தைத் தானடைய குருவை துதி செய்மனமே.

# தந்தையின் அருள் நிரூபணம்



“என் தந்தை ஒருவரே, நமது தேவைகளை அறிவார். தந்தையைவிட வேறுயார் நமது தேவையை அறிந்து உரியகாலத்தில் நமக்கு அருள முடியும்? என் தந்தைக்குத் தெரியும், எதை எவருக்கு எப்போது கொடுக்க வேண்டுமென. எனவே நண்பா, என் தந்தையை நம்புவாயாக. என் தந்தை தயாளு. தன்னை நம்பியவர்களை ஒருபோதும் என் தந்தை கைவிட்டதேயில்லை.”

1976ல், ஒருகாலைப் பொழுதில் புன்னை மரத்தின் அடியில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் இவ்வாறு ஒரு படித்த பரதேசி மாதிரி தோற்றம் கொண்ட ஒரு இளைஞனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

“சுவாமி இரண்டு நாட்களாக நான் உணவு உண்ணவில்லை. கையில் காசும் இல்லை. நான் இப்போது இந்த மலையில் யாரும் அறியாத ஒருஇடத்தில் அமரப்போகின்றேன். உங்களின் திவ்ய நாமத்தையே ஸ்மரணம் செய்து கொண்டிருக்கப் போகின்றேன். உங்கள் தந்தை எனக்கு ஆகாரம் அளிப்பாரா?” அந்த இளைஞன் சுவாமியிடம்

வினவினான்.

"என் தந்தையை சோதிக்கப் போகிறாயா?" சுவாமி சிரித்தபடி இளைஞனிடம் வினவினார்.

இளைஞன் ஆம், என்று சொல்லி விட்டு அண்ணாமலையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். சுவாமி அந்த இளைஞன் செல்வதையே கருணையோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

மாலை ஆயிற்று. சுவாமி தேரடி மண்டபத்திற்குச் செல்லத் தயாரானார். அப்போது அந்த இளைஞன் திடீரென வந்தான். சுவாமியின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

"சுவாமி மலையில் ஒளிந்திருந்த எனக்கு தங்களின் தந்தை உணவளித்தார். மலையில் விறகு சேகரிக்க வந்த ஒரு அன்னை என்னை எப்படியோ கண்டு கொண்டார். இந்த புதருக்குள் இருந்து கொண்டு என்ன செய்கிறாய்? என்று என்னைக் கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. யார் பெற்ற பிள்ளையோ, இந்த காட்டுப் புதருக்குள் உட்கார்ந்து இருக்கிறதே. இந்த பிள்ளை வெகு நாட்களாக சாப்பிடவில்லை போல் தெரிகிறதே. தம்பி கொஞ்சம் கூழ் குடியேன். பட்டினியா இருக்கக் கூடாது அப்பனே. கொஞ்சம் குடி ஐயா.

அந்த அன்னை அவருக்காக வைத்திருந்த கூழை மொத்தமும் எனக்கே ஊட்டி விட்டார் சுவாமி. ஆம், இறைவன் நமது தேவைகள் அறிந்து உரிய காலத்தில் அவற்றை பூர்த்தி செய்கின்றான் சுவாமி. நான் தங்களின் தந்தையை நம்புகின்றேன் சுவாமி. என்னை மன்னித்து விடுங்கள் சுவாமி. இனி நான் தந்தையின் பேரருளைச் சந்தேகிக்க மாட்டேன்."

இளைஞன் சுவாமியின் பாதகமலத்தில் மீண்டும் நமஸ்கரித்தான். சுவாமியின் வதனத்தில் ஒளிமிகுந்த புன்னகைக் கீற்று பளிச்சிட்டது.

# துளசி பூஜை



அந்த இளம் பெண்மணி திருமணம் நடந்த சில மாதங்களில் கணவனால் கைவிடப்பட்டவர். விட்டு விலகிச் செல்வதற்கான காரணங்களைத் தேடித்தேடி புதிது புதிதாக அவரது கணவன் சொல்வதைக் கேட்டு மனம் நொந்து வேறு வழியின்றித் தவித்த அந்தப் பெண்மணியும் அவரது பெற்றோரும் அடைந்த துன்பம் சொல்லி மாளாது. கவலை தீர, கணவனை மீண்டும் அடைய அப்பெண்மணி கோவில் கோவில்களாகத் தன் தாயை அழைத்துக் கொண்டு சென்றார்.

அவரது தாயார் பெண்ணின் ஜாதகத்தையும், பையனின் ஜாதகத்தையும் சுமந்து கொண்டு பிரபலமான ஜோதிட வல்லுனர்களைக் கலந்து ஆலோசித்தார்.

ஜோதிட வல்லுனர்கள், தம்பதிகளில் ஒருவருக்கு செவ்வாய்தோஷம் இருப்ப தாகவும் மற்றவர்க்கு இல்லை என்றும், மொத்த பிரச்சினைக்கும்

அதுதான் காரணமென்றும் கூறினார்கள். பரிகாரங்கள் பலவும் பலரால் சொல்லப்பட்டது. அத்தனை பரிகாரங்களையும் அப்பெண்மணி மனமொன்றிச் செய்தார். இன்னும் யார் யாரோ சொன்ன அத்தனை சடங்குகளையும் செய்து பார்த்தும் கணவன் கல்லாகவே இருந்தான்.

இவர்கள் படும் துயரத்தைக் கண்ட இவர்களின் நெருங்கிய பந்து ஒருவர், இது மஹான்களால் மட்டுமே தீர்க்கக்கூடிய பிரச்சினை என்று கூறி பெண்ணையும் பெற்றோரையும் திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் சுவாமியிடம் சென்று முறையிடச் சொன்னார்.

1976ல் ஒரு நாள் அந்தப் பெண்ணும் அவரைப் பெற்றோரும், மற்றுமொரு நெருங்கிய சொந்தமும் திருவண்ணாமலை சென்றனர்.

சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் தரிசனம் அவர்களுக்குத் தேரடி மண்டபத்தில் கிடைத்தது. அனைவரும் சுவாமியை நமஸ்கரித்தார்கள். சுவாமி கேட்டதற்க்கிணங்கி அவர்கள், தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். அவர்களை சுவாமியிடம் அனுப்பியவர் பெயரையும் சொன்னார்கள். சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது.

பெற்றோர் தங்கள் கவலையை சுவாமியிடம் கூறினார்கள். பிரச்சினையின் தீவிரத்தை அவர்கள் வடித்த கண்ணீர் சொல்லியது. சுவாமி அப்பெண்ணையே பார்த்தவாறு இருந்தார். மாறி மாறி புகை பிடித்த வண்ணம் இருந்தார். பக்கத்தில் சுவாமியின் தொண்டர்கள் சுவாமி நாமத்தை சுவைபடப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

பெண்மணியும், மற்றவர்களும் சுவாமியை ஆவலோடு பார்த்தவாறு இருந்தனர். சுவாமி அப்பெண்ணிடம் அவரது கணவரின் பெயரைக் கேட்டார். பெண்மணி சொன்னார். சுவாமி அவர்களோடு வந்த உறவினரை அந்தப் பெண்ணின் கணவரை அழைத்துவர முடியுமா எனக்கேட்க, அந்த உறவினர் முயற்சி செய்வதாகக் கூறினார்.

"அம்மா துளசி பூஜை பண்ணுவீர்களா?" சுவாமி வினவினார்.

“இதுவரை பண்ணியதில்லை சுவாமி.”

“இனிமேல் தொடர்ந்து காலையும் மாலையும் துளசி பூஜை பண்ணலாம் அம்மா. துளசி மாதா உங்கள் கவலைகளை நீக்கிவிடுவார் அம்மா. உங்கள் கணவர் மீண்டும் வந்துவிடுவார் அம்மா.”

சுவாமியின் ஆறுதலான வார்த்தைகள் அப்பெண்ணின் மனதில் பெரும் நம்பிக்கையை விதைத்தது. சுவாமி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். அவர்கள் ஊர்திரும்பினர்.


அப்பெண் துளசி மாதாவை பிரதிஷ்டை செய்தார். அதற்குத் தேவையான நீரை வார்த்துப் பராமரித்தார். அந்தப் பெண்மணி காலையில் ஒருமணி நேரம் மாலையில் ஒருமணி நேரம் துளசி பூஜையை மனமொன்றிச் சுலோகம் சொல்லிச் செய்தார்.

இங்கே இவர் துளசி பூஜை செய்ய, அங்கே கணவரின் வியாபாரம் வீழ்ந்தது. பூஜை மேலும் தீவிரமடைய கணவரின் தீய தொடர்புகள் விலகி ஓடிவிட்டன. எதை உண்மை என்று நம்பினாரோ அது வெறும் கற்பனையான மாயை என அறிந்து கொண்டார். துளசி பூஜை தொடரத் தொடரக் கணவன் வேறு வழியின்றி சுவாமியிடம் தஞ்சமடைந்தார்.

சுவாமியின் அருகாமையும், சுவாமியின் நாமமும் அவரின் புத்தியை நல்வழிப்படுத்தியது. அவரின் புத்தியைக் கெடுத்த வளமை வறுமையில் வாடியது. துளசி பூஜையை அப்பெண்மணி தொடரத் தொடர கணவனின் மனம் இளக ஆரம்பித்தது. வறுமையில் வாடிய நெஞ்சம் சொந்தத்தை நாடியது. மனைவிக்கு இழைத்த துரோகம் கண்ணுக்குத் தெரிந்தது.

துளசி பூஜையின் பலனால் முடிவில் கணவன் மனைவி ஒன்று சேர்ந்தனர். ஒற்றுமையோடு வாழ்கின்றனர். பெண்களின் கஷ்டங்களுக்கு சுவாமி பெரும்பாலும் துளசி பூஜையையே பரிகாரமாகக் கூறினார். இதனால் பல பக்தர்கள் பயன் அடைந்தனர்.

# அவன்



அவன் சுவாமியைத் தேடி வந்தான். மிகவும் கலங்கிச் சோர்ந்து போய் இருந்தான். கடந்த சில மாதங்களாகவே அவனுக்கு சுவாமியைத் தெரியும். உறவினர் ஒருவர் சுவாமியை அறிமுகம் செய்து வைத்திருந்தார். வாழ்வின் ஏமாற்றங்களும் தனது முட்டாள்தனத்தால் ஏற்பட்ட ஏராளமான கடன் சுமைகளும், இல்வாழ்க்கையின் பிரச்சனைகளும், தோல்விகளும், வேதனைகளும் அவனைப் பைத்தியமாக அடித்திருந்தன. உறவினரிடம் பணம் கடனாகக் கேட்க போன இடத்தில் அந்த உறவினர் சுவாமியிடம் அவனை அழைத்துச் சென்றார்.

சுவாமியிடம் ஆரம்பத்தில் அவன் தன் மேதாவித்தனத்தைக் காட்டிப் பேசி அவரைக் கவர நினைத்தான். ஆனால், முடிவில் அவர்தான் தன் தெய்வீகத்தால் அவனைக் கவர்ந்து கொண்டார். அவன் கேட்ட உதவிகள் எதையும் அவர் செய்யவில்லை. ஆனாலும், அவனை விடாது காத்து நின்றார். அவனுக்கு எது தேவையோ, அதை அந்த

வள்ளல் வாரிவாரி வழங்கினார். ஆம், அப்போது அவனுக்கு துன்பமும், ஏமாற்றமும், வலியும், வாழ்வின் அடிப்படை உண்மைகளும்தான் தேவையாயிருந்தன. அவற்றை அவனுக்குக் குறைவில்லாமல் வழங்கினார்.

அன்று அவன் சுவாமியைத் தேடி தேரடி மண்டபத்துக்கு வந்தான். மாலைப் பொழுது, மணி சுமார் ஏழு இருக்கும். மண்டபத்தில் சுவாமி இல்லை. பெருமாள் சடையனிடம், சுவாமி சென்ற இடம் குறித்து விசாரித்தான். மதுரை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற சுவாமியின் பக்தரான அந்த எளிமையான அறிஞரை சுவாமி சந்திக்கச் சென்றிருப்பதாக பெருமாள் சடையன் சொன்னார். அவன், சுவாமியை சந்திக்கச் சென்றான்.

துணைவேந்தர் தன் குடும்பத்துடன் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றான். அவர் இருந்த அறைக்கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. கதவைத் திறந்தது சுவாமிதான். அவனைக் கண்டதும் சுவாமியின் முகம் மலர்ந்தது. அவனைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றார். அவருக்காக விரிக்கப்பட்ட பாயின் மீது அவர் அமர்ந்து கொண்டு அவனையும் அவரருகே இருத்திக்கொண்டார். துணைவேந்தர் ஒரு பக்கமும், அவன் ஒரு பக்கமும், சுவாமி நடுவிலும் அப்பாயில் அமர்ந்திருந்தனர்.

“எங்கிருந்து வருகிறாய்?” சுவாமி விசாரித்தார். அவன் பதிலுரைத்தான்.

“எப்பொழுது சாப்பிட்டாய்?”

அவன் மௌனமாக இருந்தான், காலையிலிருந்து அவன் எதுவுமே சாப்பிடவில்லை. அவனுடைய பிரச்சனைகள்தான் அவனைச் சாப்பிட்டுக்கொண்டிருந்ததே!

“அம்மா, இவனுக்குச் சாப்பிட ஏதாவது கொடுப்போம்.”

சுவாமி அங்கிருந்த அம்மையாரிடம் சொன்னார். அவன் வேண்டாம் எனச் சொல்லிவிட்டான். சுவாமி மறுபடியும் சொல்லியும், அவன்

உறுதியாக மறுத்துவிட்டான்.

அங்கிருந்த அந்த அமைதியான ஆனந்தச் சூழ்நிலையே அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் வாழ்வு துயரங்களால் துடித்துக் கொண்டிருக்கும் போது மற்றவர்கள் மட்டும் எப்படி அமைதியாகவும் பக்தியோடும் பரவசப்பட்டுக் கொண்டு இருக்கலாம்? அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

சுவாமி அங்கிருந்த ஒரு பெண்மணியைப் பாடச் சொன்னார். அற்புதமான கீர்த்தனை. சாதாரண சந்தர்ப்பமாயிருந்தால் அவன் மெய் மறந்து ரசித்திருப்பான். ஆனால், அன்று அவனுக்கு அந்தப் பரவசப்படுத்தும் இசை பிடிக்கவில்லை. மற்றொரு கீர்த்தனை ஆரம்பமானது. சுவாமி அங்கிருந்த இன்னொரு பெண்மணியை அந்தக் கீர்த்தனைக்கு நாட்டியம் ஆடச் சொன்னார். தெய்வீகமான கர்நாடக இசையில் அற்புதமான பரதநாட்டிய விருந்து நடைபெற்றது. சுவாமி மிகுந்த மகிழ்ச்சியுடன் ரசித்துக் கொண்டிருந்தார்.

அவனுக்கோ, அங்கிருந்து எழுந்து ஓடிவிடலாமா என்றிருந்தது. சுவாமி அவன் கையைக் கெட்டியாகப் பிடித்திருந்தார். இசையும், நாட்டியமும் முடிந்தன. சுவாமி அங்கிருந்த மற்றவர்களுடன் பேச ஆரம்பித்தார். அவன் வெடுக்கென சுவாமியின் கையை உதறிவிட்டு எழுந்து நின்றான். சுவாமி அவனையே பார்த்தார்.

“சுவாமி எனக்கு உடம்பு முடியவில்லை. நான் போகணும் சுவாமி” அவன் சொன்னான்.

“இன்னும் சிறிது நேரம் இந்தப் பிச்சைக்காரனோடு இருக்கலாமே?“ சுவாமி அவனைக் கருணையோடு நோக்கினார்.

“இல்லை சுவாமி, நான் போகிறேன்”. அவன் பிடிவாதமாகச் சொன்னான்.

“சரி, போய் வரலாம்“ சுவாமி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

அந்த இடத்தில் இருந்து அவன் புறப்பட்டான். தான் தங்கியிருந்த விடுதி நோக்கி விரைந்தான். அவனுக்குக் கோபமும் அழுகையும் மாறி மாறி வந்தன. சுவாமி அவன் குறைகள் அனைத்தையும் கேட்டு, அப்பொழுதே அவனது அத்தனை துயரங்களுக்கும் முடிவு கட்டிவிடுவார் எனற அவனது நம்பிக்கை தகர்ந்துவிட்டது. இனி என்ன செய்வது? எங்கு போவது? அவனுக்குப் புரியவில்லை. தான் வரும்போது கையோடு வாங்கிவந்த விஷம்தான் அவனது அனைத்துப் பிரச்சனைகளையும் முடிவுக்குக் கொண்டுவரப் போகிறது என நினைத்தான்.

அவன் தங்கியிருந்த அறை கிழக்கு திசை பார்த்திருந்தது. அவன் அறைக்குள் நுழையும்போது இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். அவன் முடிவெடுத்துவிட்டான். தன் உயிரைப் போக்கிக் கொள்வதைத் தவிர்த்து வேறு வழியும் அவனுக்குத் தெரியவில்லை. அவனிடம் பணம் இல்லை. எந்த உறவையும் அவன் உண்மையான அன்போடு ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எதிலுமே ஒரு அலட்சியம். எப்பொழுதுமே ஒருவித அகங்காரம். தனக்குத்தான் சகலமும் தெரியுமென ஒருவித முட்டாள்தனமான கர்வம். இவை அனைத்தும் அவனைப் பாதாளத்துக்கே கொண்டு சேர்த்துவிட்டன. எனினும், அவன் யோகியை மிகவும் நம்பினான். அவரைப் பயன்படுத்தி தன் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள மிகுந்த புத்திசாலித்தனத்தோடு அவன் பேசியது, நடந்துகொண்டது எதுவுமே பிரையோஜனப்படவில்லை. சுவாமி ஏமாறவில்லை. அவன்தான் ஏமாந்துவிட்டான்.

தன்னிடமிருந்த வெள்ளைக் காகித்தை எடுத்தான். சுவாமிக்கு அவனது உணர்வுகளையெல்லாம் கொட்டித் தீர்த்து இரண்டு பக்கம் நிறைய கடிதம் எழுதினான். அதை மடித்து அங்கிருந்த மேஜையின் மீது வைத்தான். விஷமிருந்த பாட்டிலை எடுத்தான். அங்கிருந்த ஒரு கண்ணாடி டம்ளரில் அதை ஊற்றினான். அதையே வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் திடீரென மிகவும் பயப்பட்டான். இதைக் குடித்தால் செத்துவிடுவோமே என்ற கவலை. ஆனால் வாழ ஒரு வழியுமில்லையே. விஷத்தைக் குடிப்பதா வேண்டாமா, குழப்பமும், பயமும், தெளிவின்மையும் சேர்ந்து நிகழ்ந்தன. அவன் பொறி தட்டிப் போய்விட்டான். முடிவில் நடுங்கும் கரத்தோடு அந்த விஷத்தை மடமடவென்று குடித்துவிட்டான். அது கொஞ்சம் ருசியாக இருந்திருக்கக் கூடாதா என்று அச்சமயத்திலும் அவனுக்குத் தோன்றியது.

சிறிது நேரம் கடந்தது. உடலில் ஏதோ ஒரு மாற்றம். வேகம். உடல் நடுங்கத் தொடங்கியது. சிறிது நேரத்தில் அவன் உணர்விழந்தான். அவன் முகத்தில் வெப்பத்தை உணர்ந்தான். கண் விழித்துப் பார்த்தான். தான் எங்கிருக்கிறோம் எனற உணர்வுக்கு வரவே அவனுக்குச் சிறிது நேரமாயிற்று. கிழக்கு ஜன்னல் வழியாக சூரியக் கிரணங்களின் சூடுதான் அவனை எழுப்பியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டான். அப்படியென்றால் அவன் உயிரோடு இருக்கிறான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடக்கிறது, அந்தக் கொடிய விஷம் அவனை ஏன் சாகடிக்கவில்லை?

ஆம். அந்த சுவாமிதான் ஏதோ மந்திரவித்தை செய்து அவனைக் காப்பாற்றி விட்டதாக அவன் நினைத்துக் கொண்டான். அவனுக்கு மிகுந்த கோபம் வந்தது. அந்தக் கிழவரை அப்போதே பார்த்து நான்கு வார்த்தை நன்கு கேட்டுவிட வேண்டும். வேகவேகமாக அறையைப் பூட்டிக்கொண்டு புன்னை மரத்தை நோக்கிச் சென்றான்.

அதோ புன்னை மரம் தெரிகிறது. அவன் வேகத்தைக் கூட்டினான். சுவாமியை அவன் பார்த்து விட்டான். அவனது வேகம் மேலும் அதிகரித்தது. சுவாமியும் அவன் வருவதைக் கண்டுகொண்டார்.

அவரும், அவன் தொலைவில் வரும்போதே தன் இருக்கையிலிருந்து வேகமாக எழுந்து, அவன் வரும் பாதையிலேயே வேகமாக அவனை நோக்கிச் சென்றார். அவர் முகம் பொன்னிறமாக ஜொலித்துக்

கொண்டிருந்தது. அவன் அருகில் வந்ததும், சுவாமி அவன் கையை இறுகப் பிடித்து இழுத்து, திருவண்ணாமலையின் மலைச்சிகரத்தைச் சுட்டிக் காட்டினார்.

“போ, அந்த மலைச் சிகரத்துக்கே சென்று அங்கிருந்து குதி. நீ எப்படிச் சாகமுடியும்? நீ அறிய மாட்டாய். நீ இந்தப் பிச்சைக்காரனின் பாதுகாப்பில் இருக்கிறாய். நீ எப்படிச் சாகமுடியும்?”

சுவாமி பலத்த குரலில் அவனிடம் பேசிய அந்த நேரம் அவன் செத்துவிட்டான். ஆம், அவனுள் இருந்த அந்த வேண்டாத ஒன்று அங்கேயே செத்து மடிந்துவிட்டது. அவனிடம் இப்போது கோபமில்லை பிரமிப்பும், பயமும் அவனை ஆட்கொண்டன. இவருக்கு எப்படித் தெரியும்? இவர் யார்? தான், ஒரு சாதாரண கிழவர் முன் நிற்கவில்லை என்பதை அவன் உணர்ந்தான். முக்காலமும் உணர்ந்த ஒரு யோகியின் நிழலில், தான் இருப்பது அவனுக்குப் புரிந்தது.

அன்றிலிருந்து அவன் ஒரு நாய்க்குட்டி போல் ஆனான். தன் எஜமானன் சொல்வதை மட்டும் கேட்கும் நாய்போல காலப்போக்கில் அவன் மாறினான். சில நாட்கள் கழித்து சுவாமியின் அறிவுறுத்தலின் படி ரவீந்திரநாத் தாகூர் எழுதிய ‘கீதாஞ்சலி’ படித்தான்.

அதில் ஒரு பாடலின் அர்த்தம்...

“என் ஆசைகள், அனந்தம்,
எனது அழுகை இரங்கத்தக்கது.
எதையும் கொடுக்க மறுத்த நீ
என்னை விடாது காத்து நிற்கிறாய்!”

அதைப்படித்த அவனுக்குக் கண்ணீர் ததும்பியது.
அந்த அவன் வேறு யாருமில்லை, நான்தான்.

# சுவாமியின் தேசப்பணி



நான், என்னை மாய்த்துக் கொள்வதற்காகத் திருவண்ணாமலை வந்து சுவாமி யோகி ராம்சுரத்குமாரால் காப்பாற்றப்பட்ட சம்பவத்திலிருந்து அடுத்த இரண்டு வாரங்களுக்கு சுவாமி என்னை 24 மணிநேரமும் அவரது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருந்தார். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை குளிப்பதற்கும், உடை மாற்றிக் கொள்வதற்கும் மட்டும் விடுதி சென்றுவர சுவாமி அனுமதித்தார்.

நான் விஷமருந்திய மறுநாள், சிவகாசியிலிருந்து ஒரு அன்பரும், தூத்துக்குடியிலிருந்து மற்றொரு அன்பரும் தங்கள் குடும்பத்துடன் சுவாமியை தரிசிக்க வந்தனர்.

அவர்கள் அனைவரும் சிவகாசி நாடார் சத்திரத்தில் தங்கினர். அடுத்த இரண்டு வாரங்களுக்கு சுவாமி அவர்களுடன் சத்திரத்திலேயே தங்கினார். நானும் சுவாமியுடனேயே தங்கியிருந்தேன்.

தினமும் அங்கே ஞானிகளின் வரலாற்றையும், அவர்களின் உபதேசங்களையும் சுவாமி எங்களுக்குப் புரியும்படி விளக்கமாக

எடுத்துரைத்தார். அங்கிருந்த பெண்களை சுவாமி தேவாரப் பாடல்களையும் மற்றும் பல பக்திப் பாடல்களையும் பாடவைத்தார். பாரதியாரின் பாடல்களையும் சுவாமி பாடவைத்து அதற்கு ஆங்கிலத்தில் அர்த்தமும் சொல்ல வைத்தார். சில சமயங்களில் உலக நாடுகளின் வரலாறுகள் பற்றியும் அந்நாடுகளின் முக்கியத் தலைவர்கள் பற்றியும் சுவாமி விளக்கமாகக் கூறினார்.

நம் நாட்டில் அப்போது அவசரநிலை அமலில் இருந்தது. அது குறித்தும் சுவாமி தெளிவாக எடுத்துரைத்தார்.

நாட்கள் கடந்தன. நண்பர்கள், சில நாட்களே சுவாமியுடன் இருப்பதற்காக வந்தவர்கள். நாட்கள் பல கடந்து விட்டன. தங்களை சுவாமி எப்பொழுது ஊருக்கு திருப்பி அனுப்புவார் என்றே அறியாது ஒருவித கலக்கத்துடன் அவர்கள் இருந்தனர்.

முக்கியமாக பெண்மணிகள் தங்களின் குழந்தைகளின் கல்வி குறித்து கவலையடைந்தனர். அப்பொழுது தேர்வு நேரமானதால் அவர்கள் கவலை

அதிகரித்தது. எனினும் அனைவரும் சுவாமியே ஊருக்குப் போகலாம் என்று சொல்லும் வரை காத்திருக்க முடிவெடுத்தனர்.

ஒரு நாள் சுவாமி ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். நான் சுவாமியின் விசிறியால் சுவாமிக்கு வெகு நேரமாக விசிறிக் கொண்டிருந்தேன். அப்பொழுது தற்செயலாக அந்த விசிறியில் ஏதோ சிறியதாக எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். அதை உற்றுப்பார்த்தேன். அதில் 21/3/1977 என்று சுவாமியால் எழுதப்பட்டு இருந்தது.

சுவாமி, யாரோ முக்கியஸ்தர்கள் அந்த தேதியில் வருவதை ஞாபகம் வைத்துக் கொள்வதற்காக எழுதியிருக்கலாம் என நாங்கள் நினைத்துக்

கொண்டோம். நாங்கள் அந்த தேதியை 19/3/1977 அன்று பார்த்தோம். நாங்கள் சற்று நிம்மதி அடைந்தோம். அந்த முக்கியஸ்தர் வருவதற்குள் சுவாமி எங்களை அனுப்பிவிடுவார் என நம்பினோம்.

அந்தத் தேதியும் வந்தது. ஆனால் யாரும் வருவதாகத் தெரியவில்லை. அன்று மாலை சுவாமி என்னையும் மற்றொரு அன்பரையும் பால் வாங்கிவர டீ கடைக்கு அனுப்பினார். நாங்கள் டீ கடைக்குச் சென்றோம்.

அங்கிருந்த ரேடியோ நாட்டிலிருந்த அவசர நிலை பிரகடனத்தை அரசாங்கம் திரும்பப் பெறுவதாக அறிவித்துக் கொண்டிருந்தது. நாங்கள் பாலை வாங்கிக் கொண்டு சுவாமியிடம் விரைந்தோம்.

நாங்கள் அறைக்குள் நுழைந்ததும், "ஏதாவது செய்தி உண்டா," என சுவாமி கேட்டார். அவசர நிலை பிரகடனம் ரத்து செய்யப்பட்டதை சுவாமியிடம் சொன்னோம். சுவாமி பதிலேதும் சொல்லவில்லை.

சுவாமியின் முகம் பிரகாசமடைந்தது. சுவாமி படுத்துக் கொண்டார். யாரிடமும் எதுவும் பேசவில்லை. அவரது வலது கைவிரல்கள் ஏதோ எழுதிக் கொண்டே இருந்தது.

அன்று இரவு முழுவதும் சுவாமி உறங்கவேயில்லை. ஏதோ ஒரு அமானுஷ்யமான வேலையில் சுவாமி ஈடுபட்டு இருந்தது போல் நாங்கள் உணர்ந்தோம். மறுநாள் காலை சுவாமி எங்கள் அனைவருக்கும் விடை கொடுத்தனுப்பினார்.

அப்போதிருந்த நமது நாட்டின் பிரதம மந்திரி, யாரோ ஒரு ஞானியின் அறிவுறுத்தலால் தான் அவசர நிலை பிரகடனத்தை ரத்து செய்தார் என்று பரவலாக ஒரு பேச்சு நாட்டில் பேசப்பட்டது.

# சுவாமியின் அருளால் உருவான அவன் கதை



தெய்வத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் ஒருவரின் ஜனனம் அவரது குருவை அடையும் அத்தருணத்தில் ஏற்படுவதாக கூறப்படுகின்றது. அவனும் பிறப்பிக்கப்பட்டான், அவனைப் பெற்ற அந்தத் தாயுமானவன், யோகி ராம்சுரத்குமார்!.

அவன் பிறந்தது முதல், அவன் தந்தையும் தாயுமானவரான, சுவாமியிடம் நற்பெயர் வாங்கவில்லை. அவன் வாதித்தான். சுவாமியிடமே வாதித்தான்.

சுவாமியை கண்ட பின் அவன் முயற்சித்தும், அவனால் பாபச் செயல்கள் செய்ய முடியவில்லை. மனைவியை மறந்து மற்றொரு மாதை மணம் முடிக்க நினைத்த அவனால் சுவாமியை தரிசித்த பின்னர்

அம்மாதைக் காணவே முடியாமல் போனது. அவன் செய்து வந்த தொழில் சுவாமியின் அனுக்கிரஹத்தால் முற்றிலும் நசிந்து போனது.

பொருளாதாரக் குற்றம் சாட்டப்பட்டு அவன் 18 நாட்கள் சிறை வைக்கப்பட்டான். பிணையில் வெளி வந்தவன் நேராக சுவாமியிடம் அழைத்து வரப்பட்டான்.

சுவாமியிடம் கேட்டான் தன் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் சுவாமிதானே என்று. சுவாமி ஆர்ப்பரித்து முழங்கினார். அவன் கஷ்டத்திற்கு மட்டுமல்ல, உலகத்தில், ஏன் இந்த அண்ட சராச்சர பிரபஞ்சத்தில் நடக்கும் காரியங்கள் அனைத்திற்கும் காரணம் தானேயென கர்ஜித்தார்.

அவன் குழப்பம் அடைந்தான். அவனது உறவினரோடு சுவாமி அவனை சென்னை அனுப்பினார். உறவினர் அவனை சென்னைத் தெருக்களில் விட்டுச் சென்றார்.

காலில் காலணி இல்லை. கையில் காசும் இல்லை. அணிந்திருந்த அழுக்கடைந்த ஆடையுடன் பசியோடு சென்னை வீதிகளில், நோக்கற்று சுற்றிவந்தான். ஒரு நண்பர் தன்வீட்டில் அடைக்கலம் தந்தார். ஒருவேளை உணவும் தந்தார். இவ்வளவும் நடந்தது சுவாமியை அவன் சந்தித்த இரண்டே மாதங்களில். அவன் வயது அப்போது 28. சுவாமியைச் சந்தித்த நாள் முதல் அவன் பட்ட துன்பமும், அவமானமும் சொல்லில் அடங்காது.

அவன் எப்பொழுதும் பசித்திருந்தான். சுவாமியை நினைத்திருந்தான். சுவாமியின் நாமத்தை உள்ளத்தின் ஆழத்தில் நீங்காது கொண்டிருந்தான். கையில் சிறிது காசு சேர்ந்தாலும் உடனே திருவண்ணாமலை சென்று விடுவான். அங்கே சுவாமி அவனுக்கு உணவளிப்பார். உடன் தங்கவும்

அனுமதிப்பார். பாடச் சொல்வார். பாடல் புனையச் சொல்லி அதை அவனைப் பாடவைத்து மகிழ்வார்.

அவன் எழுதிய 108 பாடல்களை, 1976இல் சுவாமியின் ஜெயந்தி மலரில் வெளியிட சுவாமி வற்புறுத்தினார். தமிழ் மேதைகள், அதைக் குப்பையென ஒதுக்கியது. சுவாமி அம்மேதைகளுடன் வாதாடி அப்பாடல்களை அந்த ஜெயந்தி மலரில் வெளியிட வைத்தார்.

அவனின் பெருங் கஷ்டத்தினிடையே அப்பாடல்கள் எழுதப்பட்டதால் அவற்றில் ஏதோ! தன் தந்தைக்கு பிடித்த பொருள் மறைந்திருக்கும் என சுவாமி சொன்னார். மேதைகளும் அதில் மறைந்திருந்ததைக் கண்டு கொண்டதாகச் சொன்னார்கள் அவன் பெருமைப்பட்டான். மறுபடியும் சென்னை வந்தான் பசியோடு இருந்தான். சுவாமியைப் பற்றி பாடல்கள் எழுதினான்.

இதனிடையே அவனால் ஒரு பிச்சைக்காரன் வாழ்வது போல் கூட வாழ முடியவில்லை. தன்னுயிரை மாய்த்துக் கொள்ள முடிவெடுத்தான்.

பசி, உடுக்கத் தகுந்த ஆடை இல்லை, படுக்க கீழே தரையுமில்லை, மேலே கூரையுமில்லை. சொந்தங்களும், நட்புகளும் தூரச்சென்று காணாமல் போய்விட்டது. வேறுவழி எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. சுவாமியின் நாமம் உடனிருந்தது. அந்த நாமம் அவனை சுவாமியிடம் உந்தித்தள்ளியது.

அருணை சென்றான். சுவாமியை தரிசித்தான். பின் இருந்த சொற்ப காசில் விடுதி ஒன்றில் அறை எடுத்தான். கையில் வைத்திருந்த கொடும் விஷத்தைக் குடித்தான். மயங்கிவிழுந்தான். மறுநாள் விஷத்தின் பாதிப்பின்றி எழுந்தான்.

அவனுக்கு கோபம் வந்தது. சுவாமியிடம் தன் கோபத்தைக் கொட்ட

வந்தவனிடம், அவன் பேச சந்தர்ப்பமே கொடுக்காது, சுவாமி அவனைப் பார்த்து

“நீ எப்படி சாக முடியும்? நீ என் பாதுகாப்பில் இருக்கின்றாய்,”

எனச்சொல்ல அந்த வேளையில் அவன் மடிந்து போனான்.

சுவாமி அவனுக்குப் புதுவாழ்வு அளித்தார். அவனை சுவாமி ராம்தாசின் In Quest of God, In the Vision of God, J. Krishnamurti Books, Swami Ram Thirtha Books, Bhagavat Gita, Baja Govindam, Gitanjali இன்னும் ஏதேதோ புத்தகங்களைப் படிக்க வைத்தார்.

அவனை வேலை பார்க்க வைத்தார். முதலாளியாகப் பெருந்தொழில் புரிந்தவனை காபி, டீ வாங்கி வரும் சாதாரண வேலையையும் மனம் விரும்பிச் செய்யவைத்தார். நாட்கள் கடந்தது. சுவாமியின் அருளால் அவன் மீதிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அவன் மனைவி, அவனை மீண்டும் நம்பும்படி சுவாமி செய்தார். சுவாமியின் பேரருளால் அவனால் யாரையும் வெறுக்க முடியாமல் போனது.

சுவாமி, அவன் திருநீலகண்டன் போல் வாழ்வதாகச் சொல்லி மகிழ்ந்தார். மனைவி அழுதாள். மேலும் சில காலம் சென்றது. ஒரு மிகச் சிறிய வீட்டிலும் சுவாமியின் நினைவால் நிறை வாழ்க்கை அவன் வாழ்ந்தான். சுவாமி துணை நின்றார்.

அவர்களின், திருநீலகண்டரின் வாழ்வு, சுற்றத்தாரரின் பேசு பொருளானதால் சுவாமி, அவனிடம் மனைவியை நேசிக்காதவன் குருவை நேசிக்கவே இயலாது எனக்கூற, அவன் ஒரு சராசரி மனிதனாக மாறினான்.

சுவாமி அவனை வேற்றூருக்குப் போய் வேலை தேடச் சொன்னார்.

அவன் ஊர்மாறினான். தொழில் மாற்றினான். சுவாமி அவன் செய்த ஒவ்வொரு காரியத்திலும் உடன் இருந்தார்.

திடீரென ஒருநாள் சுவாமி, அவனை நோக்கி நீயும் நானும் தொழில் செய்ய போய்விட்டால் அப்பா வேலையை யார் பார்ப்பார்கள்? எனக்கேட்க, மனைவியின் 100 பவுன் தங்க நகைகளை விற்று ஆரம்பித்த தொழிலை தம்பியிடம் ஒப்படைத்து விட்டு அவன் சும்மா இருக்க ஆரம்பித்தான்.

தனிமையை அவன் நாடினான். சுவாமி அவனை இமயத்துக்கே செல்லவும் ஊக்குவித்தார். அவன் ஒரு வருடம் தன் வீட்டிலே தனிமையில் இருந்தான். அவனும் சுவாமியும் மட்டுமே. ஆனந்தம், பேரானந்தம் அனுபவித்தான். அவன் மனைவி அவனுக்கு சேவை செய்து மகிழ்ந்தாள்.

சுவாமியின் மீது அவளின் பக்தி ஆச்சரியமானது. கணவனின் வித்தியாசமான வாழ்க்கை அவளைப் பயமுறுத்தவில்லை. அவளும் சுவாமியின் அதீத அன்பிற்கு பாத்திரமானாள்.

ஒருவருட தனிமையான வாழ்க்கைக்குப் பின் அவன் மீண்டும் தொழில் செய்ய வந்தான். சுவாமியின் ஆசிரமத்திற்காக பலமாதங்கள் வேலை செய்தான். பின் ஊர் சென்றான். அவன் மனைவி ஒருவருட காலம், சுவாமியின் நேரடிக் கண்காணிப்பில், திருவண்ணாமலையில் ஒரு வீட்டிலும், பின் ஆசிரமத்திலும் வாழ்ந்தாள்.


அவனின் வாழ்க்கையும், அவனின், மனைவி வாழ்க்கையும் எந்த எதிர்பார்ப்புமின்றி இனிதே சுவாமியின் நாமத்தோடும் நினைவோடும் சென்றது. சுவாமியின் அன்புக் கவசம் அவர்களைத் தனித்திருத்தி பாதுகாத்தது.

சுவாமி நோய்வாய்ப்பட்டார். சென்னையில் சுவாமிக்கு சிகிச்சை நடந்தது. சுவாமி குணமாகி ஆஸ்ரமம் திரும்பினார். அவன் சுவாமியை தினமும் தரிசித்தான். ஒரு நாள் சுவாமி அவனை அழைத்து, அவனைத் திருவண்ணாமலையிலேயே வசிக்கச் சொன்னார்.

சுவாமி சமாதி அடைந்தார். அவரின் கடைசி சுவாசம் வரை அவன் உடனிருந்தான். பின் ஊர் சென்றான். தனக்கென எதுவும் கொள்ளாது அனைத்தும் உடன்பிறந்தோர்க்கும், அவர்தம் பிள்ளைகளுக்கும் கொடுத்துவிட்டு அவனும் அவன் மனைவியும் திருவண்ணாமலை சென்றார்கள். அங்கேயே கடந்த 18 வருடங்களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்களுக்கு வயதாகிப் போனாலும் சுவாமி அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும் பணியை இன்று வரை தங்களால் முடிந்தளவு செய்து வருகிறார்கள். அவர்கள் வேறு யாருமல்ல நாங்கள்தானே.

# பிராணாயாமம்



புன்னைமர நிழலில் சுவாமி சில அன்பர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். அங்கிருந்த முருகேசன் புன்னை மரத்தின் மறுபக்கம் சுவாமி காணாதவாறு அமர்ந்துகொண்டு பிராணாயாமம் செய்ய முயற்சித்துக்கொண்டிருந்தார். அன்பர்களோடு பேசிக்கொண்டிருந்த சுவாமி, திடீரென முருகேசனைத் தேடினார்.

“எங்கே முருகேசன்?” சுவாமி கேட்டார்.

“இதோ இங்கிருக்கிறேன் சுவாமி” புன்னை மரத்தின் மறுபக்கத்திலிருந்து முருகேசன் வெளிவந்து சுவாமியின் முன் அமர்ந்தார்.

“என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?” சுவாமி வினவினார்.

“பிராணாயாமம் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தேன் சுவாமி.”

“யார் உங்களைப் பிராணாயாமம் செய்யச் சொன்னது?” சுவாமி கோபமாகக் கேட்டார்.

“சுவாமி ராமதீர்த்தர் தன் புத்தகத்தில் பிராணாயாமத்தைப் பற்றிச் சொல்லி இருக்கிறார் சுவாமி. அவர் சொன்னபடி முயற்ச்சித்துக் கொண்டிருந்தேன் சுவாமி.”

முருகேசன் தயங்கியபடி பதிலுரைத்தார்.

சுவாமி சற்றே அமைதியடைந்தார். சற்று நேரம் முருகேசனை சுவாமி வாஞ்சையோடு உற்று நோக்கினார்.

“முருகேஷ்ஜி, பிராணாயாமத்தைக் குருவின் வழிகாட்டுதலின்படி, தக்க இடத்தில் பயிற்சி செய்ய வேண்டும். தவறுதலாக முயற்சி செய்தால் அது நன்மை தருவதற்குப் பதில் கெடுதல் விளைவித்துவிடும். அதனால் சரீரத்தின் பரிணாமத்தில் கேடான விளைவுகள் ஏற்படக்கூடும்.”

சுவாமி புகைபிடிக்க ஆரம்பித்தார். சிறிது நேரம் மௌனத்தில் கடந்தது.

“முருகேஷ்ஜி, ஒருவருடைய சீரான தவமும், தீவிரமான முயற்சிகளும் தகுந்த குருவின் திருவடிகளில் அவரைச் சேர்ப்பிக்கும். அதன்பின் அவர் தனது ஆன்மீக வளச்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவரது குரு சீடரின் ஆன்மீக வளர்ச்சிக்குப் பொறுப்பேற்றுக் கொள்வார். குருவின் திருவடிகளை அடைந்த பின்பு, குருவிடம் இருந்து அவர் தப்பிக்க முயற்சி செய்தாலும் அது முடியாமல் போகும். குரு அவரை ஒருபோதும் கைவிடமாட்டார். நல்ல பாம்பின் வாயில் சிக்கிய தவளையின் கதிதான், குருவின் பிடியில் சிக்கிய பக்தனின் நிலையும். பக்தன் செய்யக் கூடியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். விடாது குருவை


நினைவில் நிறுத்தி குருநாமம் சொல்லிக் கொண்டிருப்பதுதான். இதைச் செய்தால் மட்டும் போதுமானது. “வேறு எந்தவிதமான பயிற்சிகளும் தேவையில்லை.”

மீண்டும் ஆழ்ந்த அமைதி. சுவாமியின் முகம் ஒளிவீசிக் கொண்டிருந்தது. வாஞ்சையோடு முருகேசனையே பார்த்துக்கொண்டிருந்தார். முருகேசன் கண்களில் நீர் ததும்பியபடி, சுவாமியின் திருவடிகளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“முருகேஷ்ஜி, அனைத்தும் என் தந்தையின் விருப்பப்படியே நடக்கிறது. எனவே, எதுவுமே தவறில்லை. எல்லாமே பூரணமாகச் சரியானதே. எனது தந்தை ஒருக்காலும் தவறிழைக்க மாட்டார். எனவே, எனது தந்தையை நம்புவாய் நண்பா. எனது தந்தையின் நாமத்திலும் நம்பிக்கை கொள் நண்பா. இதுதான் என் தந்தையின் நாமம். ‘யோகி ராம்சுரத்குமார்’ இது, இந்த அழுக்கடைந்த பிச்சைக்காரனின் நாமம் அல்ல. இது என் தந்தையின் நாமம். இந்த, என் தந்தையின் நாமத்தை நினைவில் நிறுத்திக் கொள் முருகேஷ்ஜி, அது போதும். வேறு எந்த பயிற்சியும் தேவையில்லை.”

அனைவரும் “யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா” என பாட ஆரம்பித்தோம். சுவாமி தெய்வீகச் சிரிப்போடு அனைவருக்கும் அருள்பாலித்தார்.

# கூவிக்கூப்பிடுங்கள்




“யோகி ராம்சுரத்குமாரா எனக் கூவி அழைத்தால், என் தந்தை யாரையேனும் உங்கள் உதவிக்கு உடனடியாக அனுப்புவார். எனவே ‘யோகி ராம்சுரத்குமார்’ என்ற நாமத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ‘யோகி ராம்சுரத்குமார்’ என்பது இந்தப் பிச்சைக்காரனின் பெயர் அல்ல. அது என் தந்தையின் நாமம். இந்த நாமத்தை உச்சாடனம் செய்பவருக்கு என் தந்தை எப்பொழுதும் பாதுகாப்பு அளிப்பேன் என உத்திரவாதம் தந்திருக்கிறார். எனவே, இந்த நாமத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் அம்மா.”

சுவாமி அந்தப் பெண்மணிக்கு நாமத்தின் மகிமையை விளக்கினார். அப்பெண்மணி தன் கணவருடனும், மூன்று குழந்தைகளுடனும் சுவாமியைக் காணத் திருவண்ணாமலை வந்திருந்தார். அவர்களோடு அவர்களது நண்பர்கள் சிலரும் தங்கள் குடும்பத்தாரோடு சுவாமியைத்

தரிசிக்க வந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார்கள்.

அவர்கள் ரயில் நிலையத்தின் பின்புறம் உள்ள புன்னை மரத்தடியில் சுவாமியோடு ஒருவித ஆனந்தப் பரவசத்தில் பகல் பொழுதைக்கழித்தார்கள். இரவில், சுவாமி அவர்களோடு சத்திரத்தில் தங்கினார். பக்திப் பாடல்களும், சுவாமியின் பேரானந்தச் சிரிப்பலைகளும், இடையிடையே குரு பக்தியின் சிறப்பைப் பற்றி, சுவாமியின் அமுதமொழிகளுமாக அங்கே அனைவருக்கும் பெருவிருந்து கிடைத்துக் கொண்டிருந்தது.

அவர்கள் அனைவரும் ஊரிலிருந்து வந்து சுமார் இரண்டு வாரங்களாயின. செய்யும் தொழிலைப் பற்றியும், குழந்தைகளின் கல்வி பற்றியும், சில நாட்கள் மறந்திருந்த அந்த அன்பர்கள் ஒரு வாரம் கழிந்த நிலையில் கவலைப்பட ஆரம்பித்தனர். நெருங்கிய பந்துக்களிடம் திருவண்ணாமலை சென்று உடனே வந்து விடுவோமெனச் சொல்லிவிட்டு வந்த நிலையில் ஒரு வாரம் கழிந்த பின்னும், சுவாமி அவர்களை ஊருக்கு அனுப்புவதைப் பற்றி ஒன்றும் கூறாததைக் கண்டு சற்றே பயந்தார்கள். முக்கியமாக அங்கிருந்த பெண்கள், சுவாமி தங்களை எப்பொழுது அனுப்புவார் என ஆதங்கத்தோடு எதிர்பார்க்க ஆரம்பித்தார்கள்.

அந்தப் பெண்மணியும் மிகவும் கவலைப்பட ஆரம்பித்தார். அவரது கணவரோ சுவாமியின் அருள்வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து, ஆழ்ந்த அமைதியில் பேரானந்த சுகத்தைத் திகட்டாது அனுபவித்துக் கொண்டிருந்தார். மனைவியின் கவலை அவரைப் பாதிக்கவில்லை.

“குரு அனைத்தும் அறிவார். குருவே அனைத்தையும் வழிநடத்துபவர். அவர் அறியாமல் அணுவும் அசைவதில்லை”

என மனைவிக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு சன்னியாசி போன்று தன் கணவர் பேசுவதைக் கண்ட அப்பெண்மணி, தன் கணவரை, சுவாமி ஒரு சாதுவாக மாற்றி தன்னிடமிருந்து பிரித்துவிடுவாரோ, என மிகவும் கவலைப்பட ஆரம்பித்தார். அவரது கவலையை வெளிப்படையாக அனைவரிடமும் சொல்ல முற்பட்டார்.

அடுத்த சில தினங்களில் அப்பெண்மணி ஊருக்குத் திரும்ப வேண்டும் என அவரது கணவரை நச்சரிக்கத் தொடங்கிவிட்டார். சுவாமியிடம், வெளிப்படையாகப் பேசாமல், தன் கணவரிடம் தன் பயத்தைக் கூறி, இல்லறவாசிகளின் எல்லையை அவர் தாண்டக்கூடாது என தத்துவம் பேச, கணவர் மௌனமாகிவிட்டார்.

எனினும், சுவாமி அனுப்பாமல் ஊர் திரும்பப் போவதில்லை எனக் கணவர் உறுதியாக இருந்துவிட்டார். இது அப்பெண்மணிக்கு அதிர்ச்சி அளித்தது. அதுவரை தன் சொல்லுக்கு மதிப்பளித்த கணவர், தன் பேச்சைச் செவிமடுக்காதது அவருக்கு ஆத்திரத்தை அளித்தது. அன்று அவர் சுவாமியை தரிசிக்க மறுத்துவிட்டார். சுவாமி அழைத்தும் அப்பெண்மணி தன் அறையிலிருந்து வெளியே வரவில்லை.

சுவாமி அப்பெண்மணியின் கணவரை அழைத்து ஊருக்குச் செல்லலாம் எனக் கூறினார். மறுமுறை அவர் சுவாமியிடம் வருவதாயிருந்தால் மனைவியோடுதான் வரவேண்டும், அதுவும் மனைவியே கேட்டுக் கொண்டால்தான் அவரை அழைத்து வரலாம், அவரைக் கட்டாயப்படுத்தித் தன்னிடம் அழைத்து வரக்கூடாது என்றும் சொல்லி அனுப்பினார்.

அவர்கள் அனைவரும் ஊர் திரும்பினர். அடுத்த சில நாட்களில் அந்தப் பெண்மணியின் கணவரிடம் பெருத்த மாறுதல் காணப்பட்டது. அவர் எப்பொழுதும் தனிமையை விரும்பினார். ஞானிகளின்

தத்துவ போதனைகளை மட்டுமே படித்தும், சிந்தித்துக்கொண்டும் இருந்தார். உலகியல் விஷயங்களில் நாட்டம் ஏற்படவில்லை. தன் குருவைப்பற்றியே (சுவாமி) சிந்தித்துக் கொண்டிருந்தார்.

குரு சொன்ன சொற்களை மீண்டும் மீண்டும் அசை போட்டுக் கொண்டிருந்தார். குடும்பத்தையும், தொழிலையும் கவனித்துக் கொண்டு இருந்தாலும், அவரது நடவடிக்கைகளில் ஒரு துறவியின் குணாதிசயங்கள் வெளிப்பட ஆரம்பித்தன.

இது அவரது மனைவிக்கு மிகுந்த கவலையளித்தது. சுவாமியினால் தன் கணவர் மாறிவிட்டாரே எனக் கொதித்துப் போய்விட்டார். இதனால் அவர் நோய்வாய்ப்பட்டார். கணவரிடம், சுற்றத்தார்களும், உறவினர்களும் இனி சுவாமியைப் பற்றி பேசவோ, அவரைக் காணவோ செல்லக்கூடாது எனக் கூற ஆரம்பித்தார்கள். கணவர் எதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சுவாமியின் படங்கள் அவரது இல்லத்திலிருந்து நீக்கப்பட்டன. இதுவும் குருவின் சித்தமென அமைதியாக இருந்தார். சுவாமியை உள்ளுக்குள் அவர் ரகசியமாக கொலுவேற்றி உபாசிக்க ஆரம்பித்தார். வெளியே அவர் தன் கடமைகளைச் செய்தாலும் உள்ளே அவரது வாழ்க்கை சுவாமியோடு மட்டுமே இருந்தது.

அடுத்த ஓரிரு மாதங்களில் அந்த அன்பருக்கு இருதய நோய் கடுமையாகத் தாக்கியது. சில மாதங்கள் அவர் படுக்கையிலேயே ஓய்வு எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அக்காலத்தை அவர் தன் குருவான சுவாமியோடு ஒன்றாகி, ஐக்கியமாகப் பயன்படுத்திக் கொண்டார். சுவாமியின் நாமத்தை விடாது மனதுக்குள் உச்சாடனம் செய்துகொண்டே இருந்தார். உள்ளே அவர் முற்றிலும் மாறிவிட்டாலும், வெளியே அவர் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. சுவாமியோடு அவர் ஒருங்கிணைந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் வெளியே சாதாரண மானுட வாழ்க்கை வாழ்வதைப் போன்ற பிரமையை

ஏற்படுத்தி வந்தார்.

மாதங்கள் கடந்தன. உடல்நலம் பூரணமாக குணமானது. குருவைக் காண ஏக்கம் பிறந்தது. ஆனால் குருவின் உத்தரவு ஞாபகத்துக்கு வரவே, அவர் மௌனமாகக் காத்திருக்க ஆரம்பித்தார். குளிர்கால விடுமுறை நாட்களில் மனைவி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு கோதாவரிக் கரையில் உள்ள ஒரு புண்ணியத்தலத்துக்குச் சென்றார். அங்கு அருகில் இருந்த, அடர்ந்தவனம் நிறைந்த சிறுமலையில் ஸ்ரீராமனும், சீதையும், லட்சுமணனுடன் வனவாசத்தின் போது சில காலம் கழித்தனர், எனக் கேள்விப்பட்டு அந்த மலையின் உச்சிக்கு மனைவி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்றார்.

மதிய நேரம் மலையுச்சியைச் சென்றடைந்தனர். அங்கே ஒரு சுனையில் மரங்களின் நிழலில் சற்றே இளைப்பாறித் தங்கள் கையில் கொண்டு சென்ற தின்பண்டங்களை அருந்திவிட்டு, மீண்டும் மலையிறங்க ஆரம்பித்தனர். இறங்கும் வழியில் பாதை தவறி, அவர்கள் அடர்ந்த வனத்தின் நடுவே சிக்கிக்கொண்டனர். எந்தத் திசையில் சென்றாலும், மலையிலிருந்து கீழே இறங்கும் பாதையைக் காணமுடியவில்லை. சுற்றிச் சுற்றி அலைந்து திரிந்தும் மலையடிவாரத்தை அடையும் பாதையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மாலைப் பொழுதும் வந்துவிட்டது. சூரியன் மேற்கில் வேகமாக இறங்கிக் கொண்டிருந்தான். கணவர் பாதையைக் கண்டு பிடிப்பதில் தீவிரமாக இருந்தார். மனைவியும் குழந்தைகளும் பயந்து, கலங்கி, திகிலடைந்து போய் விட்டார்கள். இருட்டிவிட்டால், அடர்ந்த வனத்தில், துஷ்டமிருகங்கள் நிறைந்த கானகத்தில் என்ன செய்வது, எங்கே தங்குவது என மிகவும் கவலையோடு நடுநடுங்கிப் போய்விட்டார்கள். அப்பெண்மணி பதற்றத்தோடு கணவரைப் பார்க்க, கணவர் பாதையைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக இருந்தார். ஆயினும், எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை.

கணவரும், நடப்பதெல்லாம் குருவின் செயலெனக் கருதி ஒரு இடத்தில் அமர்ந்துவிட மனைவி மிகவும் பயந்து நடுநடுங்கி விட்டாள். அவர் கண்களில் கண்ணீர், என்ன செய்வது என்றே தோன்றவில்லை. திடீரென சுவாமி சொன்னது அப்பெண்ணுக்கு நினைவில் வந்தது.

'யோகி ராம்சுரத்குமாரா' எனக் கூவிஅழைத்தால்,

"என்தந்தை யாரையேனும் உங்கள் உதவிக்கு உடனடியாக அனுப்புவார்."

என்று அவர் கூறியது நினைவுக்கு வந்தது. தன்னையறியாது அவரது வாயும், மனமும் சுவாமியின் நாமத்தைச் சொல்ல ஆரம்பித்தது. மனம் புத்தி, உணர்வு அனைத்திலும் சுவாமியின் நாமத்தைக் குழைத்து அப்பெண்மணி அதையே சொல்லலானார். அவர் கணவர் அமைதியாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த அதிசயம் நிகழ்ந்தது. அங்கேயிருந்த ஓர் காட்டுப் பாதையிலிருந்து ஒரு சாது வெளிப்பட்டார். குடும்பத்தினர் அங்கே கலங்கிப் போய் அமர்ந்திருந்ததைக் கண்டு,

"இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள், இன்னும் சற்று நேரத்தில் இருட்டிவிடும். பின்பு, மலையிலிருந்து கீழே இறங்கமுடியாது. உடனடியாக கீழே செல்லுங்கள்"

என்று சொல்ல, கணவர் தாங்கள் பாதை தவறி தவித்துக் கொண்டிருப்பதைச் சொன்னார். அதைக்கேட்ட சாது, தான் உடன் வந்து மலையடிவாரத்தில் அவர்களை விட்டுவிடுவதாகக் கூறினார்.

சாது பத்திரமாக குடும்பத்தை மலையடிவாரத்தில் அவர்கள் வந்த வாகனத்தின் அருகே வரை, அழைத்து வந்து சேர்ப்பித்துவிட்டு மீண்டும் அந்த அடர்ந்த வனத்தில் மறைந்துவிட்டார். அப்பெண்மணிக்கு அங்கே

நடந்ததெல்லாம் பிரமிப்பை ஊட்டுவதாக இருந்தது. திக்குத் தெரியாமல் அடர்ந்த வனத்தில் சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டு, பாதையைத் தொலைத்துவிட்டு பலமணி நேரம் திண்டாடி நம்பிக்கை இழந்த நேரத்தில் சுவாமியின் நாமத்தைச் சொல்ல யாரோ ஒரு சாது உடனே தோன்றி, வழிகாட்டி, பாதுகாப்பாக வனத்திலிருந்து வெளியேற்றி அவர்கள் வந்த வாகனத்தின் அருகில் சேர்ப்பித்தது, ஏதோ கனவு கண்டது போல் தோன்றியது.

நாமத்துக்கு இவ்வளவு சக்தியா? அந்த நாமத்தையே சூட்டிக்கொண்ட சுவாமியின் மகத்துவம் எப்படிப்பட்டதாக இருக்கும் என பிரமித்துப் போன பெண்மணி, அவரைப் புறந்தள்ளப் பார்த்த தன் மடமையை நொந்து கொண்டாள்.

அடுத்த சில மாதங்களில், சுவாமியைக் காண தன் விருப்பத்தை அப்பெண்மணி கணவரிடம் கூற, மீண்டும் அக்குடும்பத்தினர் சுவாமியின் சன்னிதானத்தை அடைந்தனர். சுவாமி அக்குடும்பத்தை முழுமையாக ஆட்கொண்டு அருள்பாலித்தார்.

# பயணம் முடியவில்லை



1976ம் வருடம், ஒருநாள் திருவண்ணாமலை புகைவண்டி நிலையத்தின் பின்புறம் உள்ள ஒரு விளைநிலத்தின் மத்தியில் ஓங்கி உயரமாக வளர்ந்திருந்த புன்னை மரத்தின் கீழ் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அமர்ந்திருந்தார்.

சுவாமி வடமொழியில் ஒரு பாட்டைச் சொன்னார். அதன் ஆங்கில அர்த்தத்தையும் சொன்னார். சொல்லி முடித்ததும், புகைவண்டி நிலையத்தில் நின்றிருந்த புகைவண்டி நீண்ட விசில் அடித்துப் புறப்பட்டது. சுவாமி அந்த புகைவண்டியைப் பார்த்தவாறே இடி இடியென வெகுநேரம் சிரித்துக்கொண்டே இருந்தார்.

பாட்டின் உள்ளர்த்தத்தை சுவாமியிடம் கேட்டபோது சுவாமி மேலும் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். ஆனால் பொருள் சொல்லவில்லை. அந்த

பாட்டின் ஆங்கில மொழியாக்கம் கடைசியில் கொடுத்திருக்கிறேன். இதுநாள் வரை இதன் மறைபொருள் தெரியாது முழித்துக் கொண்டிருக்கிறேன். தெரிந்தவர் எவரேனும் விளக்க முடியுமா?

"Walking, walking and walking,
The destination, the goal, the home
Eighteen miles away,
I am tired, I can't move any further,
Whom to be blamed?"

"நடக்கிறேன், நடக்கிறேன், நடந்து கொண்டிருக்கிறேன், எனது இலக்கான இல்லம் இன்னும் 18 மைல் தொலைவில் உள்ளது. நான் களைத்து விட்டேன். எனது கால்கள் வலிக்கின்றன. இதற்கு மேல் நகர இயலாது. யாரை இங்கு குறை கூற?"

# பைரவர்



அந்தப் பைரவர் குட்டியாக இருந்த காலத்தில் இருந்தே சுவாமியுடன் வளர்ந்து வந்தார். ஒரு சமயம் சத்ய சாய்பாபாவைத் தரிசனம் செய்துவிட்டு சுவாமியைக் காண வந்த சில அன்பர்கள், சாய்பாபாவின் மகிமையைக் குறித்து மிக உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுவாமி, ரயில் நிலையத்தின் பின்புறம் உள்ள புன்னை மரத்தடியில் வீற்றிருந்தார். சாய்பாபாவின் லீலைகளை பக்தர்கள் உற்சாகமாக விவரிக்க, சுவாமி உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சிறு பைரவர் அங்கு ஓடோடி வந்து, சுவாமியின் எதிரில் நின்றார்.

“இதோ சாய்பாபாவே வந்துவிட்டாரே” சுவாமி மகிழ்ச்சியோடு கூற, அந்தப் பைரவருக்கு அதுவே பெயராகிவிட்டது. அதிலிருந்து அந்தப் பைரவரும் சுவாமியின் உதவியாளர்களில் ஒருவரானார். சுவாமியும் அவரது உதவியாளர்களும், எங்கு சென்றாலும் பைரவர் கூடவே வந்தார். சுவாமிக்கு வரும் உணவில் அவருக்கும் ஒரு பங்கு அளிக்கப்பட்டது.

நாளடைவில் அவர் கம்பீரமாக வளர்ந்து சுவாமியுடனே வாழ்ந்து வரலானார்.

ஒரு சமயம் இரண்டு, மூன்று நாட்களாக பைரவரைக் காணவில்லை. ஊரில் தெரு நாய்கள் தொந்தரவு அதிகமாகிவிட்டதாக வந்த புகாரின் பேரில், தெருவில் திரிந்த அத்தனை நாய்களையும் நகராட்சியின் ஆட்கள் பிடித்து வதம் செய்துகொண்டிருந்தார்கள். சுவாமியின் பைரவர் மட்டும் எப்படியோ தப்பித்துக்கொண்டு எங்கோ சென்று மறைந்துவிட்டது. சுவாமி பைரவரின் வருகைக்காக காத்திருந்தார். அச்சமயம் ஒரு பெண் பக்தை சுவாமியைக் காண வந்தார்.

“சாமி என் புருஷன் ரொம்ப அடிக்கிறார்” அந்தப்பெண் புலம்பினார்.

“சரி.” சுவாமி பதிலுரைத்தார்.

“அவர் ரொம்ப குடிக்கிறார் சாமி.”

“சரி.”

“வீட்ல ரொம்பக் கஷ்ட்டம் சாமி.”

“சரி.”

“நீதான் காப்பாத்தனும் சாமி.”

“அட போம்மா, நானே பைரவரைக் காணோமென இருக்கேன். நீ வேற உன் பிரச்னைகளைச் சொல்லிக்கிட்டு இருக்க. பைரவர் கஷ்டத்தையே போக்க முடியாத இந்தப் பிச்சைக்காரனால் உன்னை எப்படிக் காப்பாத்த முடியும்? போ அம்மா. அண்ணாமலையார்கிட்டே போய் வேண்டிக்கோ.”

சுவாமி மிகுந்த அலுப்போடு கூறினார். அந்த அம்மையாரும்

சென்றுவிட்டார். சுவாமி அன்றெல்லாம் யாருடனும் பேசவில்லை. மறுநாள் காலை புன்னை மரத்தடியில் சுவாமி அமர்ந்திருந்த சமயம், எங்கிருந்தோ பைரவர் ஓடி வந்தார். நேராக சுவாமியின் முன் நின்றுகொண்டு பெரிதாகச் சத்தம் கொடுத்தார். உடலெல்லாம் சாக்கடையில் புரண்டிருந்த கறை, துர்நாற்றம் வீசியது. அவர் சொல்வதை சுவாமி உன்னிப்பாகக் கேட்டார். பைரவர் விடாது தன் வேதனைகளையெல்லாம் ஒருங்கிணைத்து, பெரிதாக விட்டு விட்டு சத்தம் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

"ஓ.. அப்படியா சாய்பாபா, உங்களைக் கொல்ல வந்தாங்களா சாய்பாபா."

பைரவர் மீண்டும் பெரிதாகக் கேட்பவர் உள்ளம் கசியும்படிக் கத்தினார்.

"இனி கவலை வேண்டாம் சாய்பாபா. அப்பா காப்பாத்துவார் சாய்பாபா. இனி பயப்படத் தேவையில்லை, சாய்பாபா."

சுவாமி ஆறுதலாகக் கூறினார். பைரவர் சற்றே சமாதானமடைந்தார். சுவாமி, பெருமாள் சடையனை அழைத்து பைரவரை நன்கு சோப்பு தேய்த்துக் குளிப்பாட்டச் சொன்னார்.

பெருமாள் சடையன் பைரவரைக் கூப்பிட, பைரவர் முதலில் மறுத்தது.

"குளித்துவிட்டு வரலாம், சாய்பாபா."

சுவாமி சொன்னதும் பெருமாள் சடையன் பின் பைரவர் சென்றார். பக்கத்தில் இருந்த கிணற்றில் தண்ணீர் மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது. பெருமாள் சடையன் பைரவரை நன்கு சோப்புத் தேய்த்து நீராட்டினார். நீராடல் முடிந்து பைரவர் மீண்டும் சுவாமியின் முன் நின்றார்.

"பசிக்குதா, சாய்பாபா" சுவாமி கேட்டார்.

ஆம் எனச் சொல்வதுபோல் பைரவர் குரல் கொடுத்தார். சுவாமி, பெருமாளை ஒரு வாழை இலையைக் கொண்டுவரச் சொன்னார். பக்கத்திலிருந்த வாழை மரத்தில் ஒரு இலையை மட்டும் பெருமாள் வெட்டி எடுத்து வந்தார். ஒரு பக்தர் சுவாமிக்காகக் கொண்டு வந்திருந்த இட்லிகள் இருந்த பொட்டலத்தை சுவாமி எடுத்துப் பெருமாளிடம் கொடுத்தார். அதிலிருந்த நான்கு இட்லிகளையும் அந்த வாழை இலையில் சிறு துண்டங்களாகப் பிய்த்துப் போட்டு, அதன் மீது சாம்பாரையும் சட்னியையும் ஊற்றச் சொன்னார். சாம்பாரில் ஊறிய இட்லிகளைப் பெருமாள் பைரவர் முன் வைத்தார். பைரவர் சுவாமியைப் பார்த்தார்.

“சாப்பிடலாம் சாய்பாபா” சுவாமி சொன்னவுடன் சந்தோஷத்தில் முனங்கிய படியே பைரவர் ஆசையோடு சாப்பிட்டார். அன்றே சுவாமி, பெருமாள் சடையனை நகராட்சி அலுவலகத்துக்கு அனுப்பி, பைரவருக்கு அனுமதிப் பட்டயம் வாங்கி பைரவரின் கழுத்தில் மாட்டிவிட்டார். அதன்பின்பு பைரவருக்கு நகராட்சி ஆட்களால் தொந்தரவு ஏற்படவில்லை.

பைரவர் தன் கடைசி காலம் வரை சுவாமியுடனேயே வாழ்ந்து வந்தார். அவரது அந்திமக் காலத்தில் சுவாமி அவரை கால்நடை மருத்துவர் மூலம் மிகுந்த கவனத்துடன் பார்த்துக் கொண்டார். அவர் இறந்த பிறகு அவரை ஈசானிய இடுகாட்டில் அடக்கம் செய்வித்தார்.

# ஆண் வாரிசு வேண்டும்



புன்னை மரத்தடியில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் தன் பக்தர்களிடம் அளவளாவிக் கொண்டிருந்தார். அங்கே ஒரு மத்திய வயதிற்கு சற்றே முற்பட்ட வயதிலுள்ள தம்பதியர் தங்களின் இரண்டு மகள்களை அழைத்துக் கொண்டுவந்தனர்.

அவர்கள் பரவசத்தோடு சுவாமியை நமஸ்கரித்தார்கள். குழந்தைகளையும் சுவாமியின் திருவடிகளை வணங்கச் செய்தனர். சுவாமி அவர்களைத் தன் எதிரில் அமரச் செய்தார். வந்தவர்களின் ஊர், பெயர் போன்ற விவரங்களை சுவாமி கேட்டறிந்தார். சிறிது நேரம் மௌனம் நிலவியது. தம்பதியர் சற்றே பதட்டத்தோடு காணப்பட்டனர்.

“நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகின்றீர்களா?” சுவாமி வினவினார்.

தம்பதியர் தயங்கினர். சுவாமி அவர்களைப் பார்த்து பேரானந்தப் புன்னகை சிந்தினார். அந்த தெய்வீகப் புன்னகை தந்த பரவசத்தில் கணவருக்கு சிறிது தைரியம் பிறந்தது. மனைவியை ஒரு கணம் பார்த்தார். மனைவியின் பார்வை சற்று அதிகமாக தைரியமூட்டியது.

“சுவாமி, எங்களுக்கு இரு பெண் குழந்தைகள். எங்களுக்கு பெரும் தொழில் உள்ளது. சொத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. வசதியாக, சந்தோஷமாக இருக்கின்றோம். எனினும் எங்களுக்கு ஒரு குறை உள்ளது. ஆண் வாரிசு இல்லாமல் இருக்கின்றோம் சுவாமி. தாங்கள்தான் அருள் புரியவேண்டும் சுவாமி.”

மனைவியின் கண்கள் பனித்தன. வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு சுவாமியை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமி ஆழ்ந்து சிகரெட் பிடித்தவாறு இருந்தார். அவரின் பார்வையும், இருப்பும் வேறெங்கோ இருந்தது. சில கனமான நிமிடங்கள் கடந்தது. சுவாமி சிகரெட்டை அணைத்துவிட்டு அந்தத் தம்பதியரை உற்றுநோக்கினார்.

“அம்மாவிற்கு ஆண் குழந்தை வேண்டும். என் தந்தை உங்களுக்கு ஆண் பிள்ளை வரம் தருகின்றார். ஆனால் அக்குழந்தையை இந்த பிச்சைக்காரனிடம் ஒப்படைத்து விடவேண்டும். செய்வீர்களா?” சுவாமி வினவினார்.

சற்றும் யோசிக்காமல் அந்த அம்மை “சரி சுவாமி” என்றார்.

அவரின் கணவர் பிரமிப்புடன் மனைவியைப் பார்த்தார். மனைவியின் கவனம் முழுவதும் சுவாமியிடத்தில் இருந்தது.


“பச்சிளங் குழந்தையை இந்த பிச்சைக்காரனால் பராமரிக்க இயலாது.

எனவே, குழந்தைக்கு ஆறு வயதாகும் போது அக்குழந்தையை இந்த பிச்சைக்காரனிடம் ஒப்படைத்து விட வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?" சுவாமி வினவினார்.

சற்றும் தயக்கமின்றி அந்தத் தாய் "அப்படியே செய்கின்றோம் சுவாமி" எனக் கூறினார்.

சுவாமி தன் இரு கரங்களையும் உயர்த்தி அத்தம்பதியை ஆசீர்வதித்தார். தம்பதியர், சுவாமியை வணங்கி விடை பெற்றுச் சென்றனர். அந்த ஆண் குழந்தை இன்று ஒரு சன்னியாசியாக உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றது. எப்பொழுதாவது தன் தாயையும் தரிசனம் செய்கின்றது.

# அன்னையான சுவாமி



சுவாமி, உணவளித்து உய்வித்த சில சம்பவங்களை இப்பொழுது காண்போம்.

1976லேயே சுவாமி யோகி ராம்சுரத்குமாருக்கு, திரு.ராஜமாணிக்க நாடார் அவர்கள், சன்னதி அக்ரஹாரத்தில் வீடு வாங்கிக் கொடுத்த போதிலும் ஏதோ காரணத்தினால், சுவாமி அடுத்த ஆறு மாதங்கள் வரை அவ்வீட்டிற்குள் செல்லவில்லை. சுவாமி தனது பழைய நடைமுறையையே தொடர்ந்திருந்தார்.

1977 ஜனவரி மாதத்தில் தூத்துக்குடி முருகேசன், சிவகாசி சிவசங்கரன் மற்றும் நிலையற்று சுற்றித் திரிந்த நான் இவர்கள் யாவரும் சுவாமியுடன் சுமார் 14 நாட்கள் தங்கியிருந்தபோது, காலையில் டிபன் உடுப்பி பிருந்தாவன் ஹோட்டலிலும், மதிய உணவு பெரும்பாலும், சுவாமியைக் காண வரும் பக்தர்கள் கொண்டுவரும் ஆகாரத்தை அனைவருக்கும் பகிர்ந்தளித்தும், இரவில் சுந்தர் டீ ஹவுஸ் என்ற வட இந்தியர் நடத்திவந்த ஹோட்டலில் இருந்து சப்பாத்திகளையும்

வரவழைத்து சுவாமி அனைவருக்கும் அளித்து பசியாற்றினார்.

அச்சமயம் சில நாட்களில் மதிய வேளைகளில் பக்தர்கள் கொண்டுவரும் உணவு கிடைக்காத பட்சத்தில், சுவாமி சுந்தர் டீ ஹவுஸிலிருந்து அனைவருக்கும் சப்பாத்தி வரவழைத்து பகிர்ந்தளிப்பார்.

ஒருசில நாட்கள் சுவாமியே சப்பாத்திகளை தன்னுடைய கொட்டாங்கச்சியில் பிய்த்துப் போட்டு மேலே குருமா குழம்பையும் ஊற்றி நன்கு பிசைந்து ஒவ்வொரு கவளமாக எங்கள் மூவருக்கும் கையில் கொடுப்பார். தானும் ஒரு கவளத்தை உட்கொள்வார். இச்சம்பவத்தின் தாத்ப்பரியம், பின்னால் நீங்கள் அறிவீர்கள் என சுவாமி சொன்னபோது பரவசமடைந்தோம். பின்னாட்களில் சுவாமி எங்கள் வாழ்வோடு பின்னி பிணைக்கப்பட்டதைப் பார்க்கும்போது சுவாமி எங்களுக்கு அன்று ஊட்டிய ஆகாரம் அவரின் அளப்பரிய பிரசாதம் என அறிந்து கொண்டோம்.

1983ல் திருவண்ணாமலையில் தீபத்திருவிழா நடக்கும் சமயம் சுவாமியிடம் நானும், திரு.முருகேசனும் சென்றிருந்தோம். நாங்கள் எப்பொழுது சுவாமியிடம் சென்றாலும், அச்சமயங்களில் சுவாமி வேறு எவரையும் அனுமதிப்பதில்லை. எனவே பக்தர்களோடு சுவாமி நடத்தும் தர்பாரை ரசிக்க நாங்கள் தீபத் திருவிழா சமயம் சென்றிருந்தோம்.

எங்களைக் கண்டதும் சுவாமி அனைவரையும் அனுப்பிவிட நாங்கள் ஏமாற்றமடைந்தோம். எனினும் சுவாமி எங்களோடு அடுத்த ஒரு வார காலம் பிரம்மத்திலும், பிரபஞ்சத்திலும், இவ்வுலகிலும், மாற்றி மாற்றி சுற்றிவர நாங்கள் எங்களை மறந்த நிலையடைந்தோம். ஒரு நாள் எங்களுக்கு பசித்தது. உணவைப்பற்றியும், காபி தாகத்தைப் பற்றியும் சுவாமியிடம் சொன்னோம்.

“நாம் அப்பாவின் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நாம் நேரத்தை வீணடிக்க முடியாது.”

இவ்விதம் சுவாமி சொல்லிவிட்டு, என்னை அங்குள்ள

பழங்களையெல்லாம் சேகரித்து அவற்றை தோலுரித்து, சிறு சிறு துண்டங்களாக்கி அங்குள்ள பெரிய பாத்திரத்தில் போடச் சொன்னார். அங்கிருந்த தேனையும் மற்றும் பழச்சாறையும் எடுத்து அவற்றையும் அப்பாத்திரத்தில் ஊற்றச் சொன்னார். பின்னர் நன்கு அவற்றைப் பிசையச் சொன்னார்.

நான் கையை சுத்தம் செய்த பின்பு பிசைகின்றேன் சுவாமி எனச் சொன்னவுடன் என் கையைப் பிடித்துத் தடவிக் கொடுத்து, இது பரிசுத்தமான கை. நீ அப்படியே பிசையலாம் என சுவாமி கூறினார். நான் பிசைந்தேன். சுவாமியே ஒரு பெரிய மந்தார இலையை எடுத்து வந்தார். நான் பிசைந்த கலவையை அந்த இலை மேல் கொட்டச் சொன்னார். அந்த இலையைச் சுற்றி அமர்ந்தோம்.

"நாமெல்லோரும் நண்பர்கள். எனவே பேதம் பார்க்காமல் நாம் ஒரே இலையிலேயே சாப்பிடுவோம்."

சுவாமியின் வார்த்தைகள் கண்ணீரை வரவழைத்தது. அந்த அமுதை அருந்தினோம். பேரானந்தமாக இருந்தது. பின் அடுத்த மூன்று நாட்கள் எங்களுக்கு பசி உணர்வே ஏற்படவில்லை. தீபத் திருவிழா முடிந்ததும் சுவாமி எங்களுக்கு விடை கொடுத்தனுப்பினார்.

ஆசிரம நிலம் ஆர்ஜிதப்படுத்தியதை, விழாவாகக் கொண்டாட சுவாமி அனுமதி அளித்தார். 1000 பக்தர்களுக்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. சுவாமிக்கென தனியாக சிலர் உணவை தயார் செய்திருந்தனர். அதைக் கண்ட சுவாமி கோபமுற்றார். அவருக்கென்று தயார் செய்யப்பட்ட உணவை பக்தர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உணவோடு நன்கு கலந்துவிட்டு பின் பக்தர்களுக்கு பரிமாறச் சொன்னார்.

பேதம் பார்ப்பது பகவத் சாதனைக்கு ஊறு விளைவிக்கும் என்பது அவர் போதனையாகும். சுவாமி தன் வாழ்நாளில் ஒரு போதும் பேதம் பார்த்ததில்லை. பேதமற்ற எம்பெருமானை, யோகி ராம்சுரத்குமாரனைத் துதித்து ஆனந்திப்போமே.

# நம்பிக்கையே தெய்வம்



திருவண்ணாமலை இரயில் நிலையம் பின்புறம் இருந்த விவசாய நிலத்தில் ஒரு பெரிய புன்னை விருட்சம் நிழல் பரவிப் படர்ந்திருந்தது. அதன் நிழலில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் விரித்திருந்த பாயின் மேல் அமர்ந்திருந்தார்.

தேவகணங்கள் போல் அவரது உதவியாளர்கள் சுவாமியின் இடதுபுறத்தில் வரிசையாக நின்று கணீரென சுவாமியின் நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தனர்.

"யோகி ராமசுரதகுமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா,"

நாமத்தின் ஒலியில், இனம் புரியா இன்ப மயக்கத்தில், நாங்கள் சிலர் சுவாமியின் முன்னே அமர்ந்திருந்தோம். சுவாமி, நாமம் பாடியவர்களையும் எங்களையும் மாறி மாறி தன் ஒளி பொருந்திய

நயனங்களால் கண்ணுற்று அருள்மழை பொழிந்து கொண்டிருந்தார்.

தூரத்தில் அந்த விவசாய நிலத்தின் குத்தகைதாரர் மாணிக்க கவுண்டர் அங்கு விளைந்திருந்த கொத்துமல்லிச் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அவரின் மனைவி ராஜம்மாள் கணவருக்கு உதவி செய்து கொண்டிருந்தார். மணி பகல் 12. ராஜம்மாளும், மாணிக்க கவுண்டரும் சுவாமியிடம் வந்தனர். சுவாமிக்கு இதுவரை யாரும் உணவு படைக்கவில்லை என்று கண்டுகொண்டனர்.

“சாமி மணி உச்சிப்பொழுது ஆச்சி சாமி. ரசம்சாதம் கொண்டு வந்திருக்கேன் சாமி. கொஞ்சம் சாப்பிட்டு பசியாறு சாமி.”

ராஜம்மாள் சுவாமியிடம் விண்ணப்பித்தார்.

“எங்க எல்லோர்க்கும் இருக்குமா அம்மா?” சுவாமி சந்தேகத்துடன் கேட்டார்.

“சரியா வரும் சாமி,” ராஜம்மாள் பதிலுரைத்தார்.

“அப்ப உங்க இரண்டு பேருக்கும்?”, சுவாமி வினவினார்.

“இதோ இருக்கு வீடு. போயி நிமிஷத்திலே சோறு வடிச்சி கொண்டு வந்திடமாட்டேனா? நீங்க எல்லாரும் சாப்பிடுங்க சாமி,”

ராஜம்மாள் தூக்குச் சட்டியை சுவாமியின் முன் வைத்துவிட்டு, சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணி விட்டு வீட்டுக்கு விரைந்தார். மாணிக்க கவுண்டர் தன் வேலையைப் பார்க்கச் சென்றார்.

சுவாமி தூக்குச்சட்டியை பெருமாளிடம் கொடுத்து, அதில் உள்ள ரசம் சாதத்தை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கச் சொன்னார். பெருமாள், சுவாமிக்கு ஒருபெரிய மந்தாரை இலையில் ரசம்சாதத்தைப்

படைத்துவிட்டு, பின் அனைவருக்கும் தான் வைத்திருந்த மற்ற மந்தார இலைகளில் ரசம்சாதத்தைப் பகிர்ந்து கொடுத்தார்.

அந்தத் தெய்வீக தேவாமிர்தம் அனைவரது வயிறையும், மனதையும் குளிரச்செய்தது. சற்று நேரத்தில் ராஜம்மாள் உணவு செய்து எடுத்துவந்தார். அதையும் சுவாமியின் முன்வைத்தார்.

சுவாமி மாணிக்க கவுண்டரை அழைத்தார். இருவரையும் சுவாமி தனது எதிரில் அமரவைத்து உணவை அருந்தச் சொன்னார். அவர்கள் உணவு அருந்துவதை சுவாமி வாஞ்சையோடு பார்த்துக் கொண்டே இருந்தார். தம்பதியர் சாப்பிட்டு முடித்து தங்கள் வேலையைப் பார்க்கச்சென்றனர்.

சுமார் ஒருமணி நேரம் கடந்திருக்கும். வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. மாணிக்க கவுண்டர் சுவாமியிடம் வந்தார்.

“சாமி, உடம்பெல்லாம் கொதிக்குது சாமி. தலைவேற வலிக்குது சாமி,”

அவரின் வேதனை சொல்லில் தெரிந்தது. சுவாமி அவரை அருகில் அழைத்தார். அவர் கைகளைப் பற்றிக்கொண்டு இதமாக தடவிக் கொடுத்தார்.

“மாணிக்க கவுண்டர், அந்த வரப்பில் தலை வைத்து சற்று நேரம் படுத்திருப்போம், எல்லாம் சரியாகிடும்,” சுவாமி ஆறுதலாகச் சொன்னார்.

கடும் வெயிலில் சூடேறிக் கிடந்த அந்த வரப்பில் தலை வைத்து மாணிக்க கவுண்டர் படுத்துக்கொண்டார். ராஜம்மாள் கணவன் விட்டுச்சென்ற வேலையைச் செய்து கொண்டே கணவனைக் கவலையோடு தூரத்திலிருந்தே பார்த்தவாறு இருந்தார்.

உணவு கொடுத்த மகராசனை இப்படி வெயிலில் படுக்கவைத்து சுவாமி வதக்குகின்றாரே என எனக்குக் கோபம் கோபமாக வந்தது. அரை மணிநேரம் சென்றது. மாணிக்க கவுண்டர் எழுந்து வந்தார். சுவாமியை நமஸ்கரித்தார்.


"சாமி சரியாபோச்சு சாமி. ஜுரமும் இல்லை, தலைவலியும்போயிடுச்சு, நான் போயி வேலையைப் பாக்கிறேன் சாமி," எனச் சொல்லிவிட்டு தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

நான் வெட்கத்திலும், ஆச்சரியத்திலும் வெளிறிப் போனேன். சுவாமி என்னைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தார்.

"நம்பு நண்பா நம்பு. நம்பிக்கையே தெய்வம்," சுவாமியின் சொற்கள் இதயத்துள் சென்றது.

அந்தத் தெய்வத் தம்பதியர் அங்கே தூரத்தில் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தனர்.

# மாயை



அந்த அன்பர் தன் குருநாதரின் விதேஹ முக்திக்கு முன்னரே அவர் மூலமாக அறிமுகமான, சுவாமி யோகி ராம்சுரத்குமார் மீது தீவிர பக்தி உடையவர். திருவண்ணாமலை ஊரைச் சேர்ந்த அவர் ஒரு அரசாங்க ஊழியர். நல்ல பதவி வகித்தவர். அற்புதமான கவிஞர். சுவாமி மீது பல பாக்கள் புனைந்துள்ளார்.

வசதியான வீடு இருந்தும் சுவாமியோடு பாத்திரக் கடைவாசல் முற்றத்தில், படுத்து உறங்குவதையே விரும்புவார். மாலை அலுவலகத்தில் வேலையை முடித்துக் கொண்டு நேராக வீடு செல்வார். சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு பின்னர் இரவு உணவை சீக்கிரமே முடித்துக் கொண்டு நேராகத் தேரடி மண்டபம் வந்துவிடுவார். அச்சமயம் சுவாமியும் புன்னை மரத்தடியிலிருந்து தன் பரிவாரங்களுடன் வந்திருப்பார்.

இரவில் சுவாமியின் மூட்டைகளை மண்டபத்திலிருந்து பாத்திரக் கடை வாசலுக்கு மாற்ற உதவி புரிவார். மாற்றுத் திறனாளியாக இருந்தாலும் சுவாமிக்கு பல வழிகளில் சேவை செய்து வந்தார்.

சுவாமி மீது தினமும் ஒரு பாடல் புனைந்து சுவாமியின் முன் பாடுவார். அவரின் பாடல்களை சுவாமி ரசித்துக் கேட்பார். சுவாமி அவரை இராமாயணத்தை கவிதையாக எழுதச் சொன்னார். அந்த அன்பரும் இராமாயணம் எழுதத் தொடங்கினார். எழுதி முடித்தாரா என்பதை நான் அறியேன்.

சுவாமி அந்த பக்தரை தன்னுடைய தனிப்பட்ட கவனத்தில் வைத்திருந்தார். அந்த அன்பரின் மொத்த குடும்பமும் சுவாமியிடம் பக்தியோடு இருந்தது.

இந்நிலையில் அன்பருக்கு திருமணம் செய்து வைக்க வீட்டில் பெரியவர்கள் முடிவு செய்து, பெண் பார்க்கும் படலத்தை ஆரம்பித்தனர்.

அன்பர் அவரின் உறவினர் வீட்டுப் பெண்ணை மணம் முடிக்க ஆசைப்பட்டார். ஆனால் அந்த குடும்பத்திற்கும், அன்பரின் குடும்பத்திற்கும் உறவில் விரிசல் இருந்ததால் அன்பரின் பெற்றோர் இந்த சம்பந்தத்திற்கு சம்மதிக்கவில்லை.

முடிவில் பெற்றோர், சுவாமியிடம் இது குறித்து பிரஸ்தாபித்தாயா எனக் கேட்டதற்கு, சுவாமி ஏற்கனவே சம்மதித்து விட்டார் என அன்பர் கூற பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

உண்மையில் அன்பர் தன் திருமண விருப்பம் குறித்து சுவாமியிடம் பேசவேயில்லை. பெற்றோர் சுவாமியிடம் சென்றனர். இது குறித்து சுவாமியிடம் தயங்கியபடியே கேட்டனர். சுவாமி சம்மதம் கொடுத்திருந்தால் அவர்கள் ஆட்சேபம் சொல்லப் போவதில்லை என்று

ஏற்கனவே முடிவு எடுத்திருந்தனர்.

சுவாமி திருமணம் குறித்து அன்பர் எதுவும் தன்னிடம் தெரிவிக்கவில்லை எனக் கூற பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். வீட்டிற்குச் சென்று அன்பரைக் கேட்டதற்கு, அன்பர் சுவாமி தனக்கு சம்மதம் அளித்து விட்டார் என வாதித்தார்.

பெற்றோர் அன்பரையும் அழைத்துக் கொண்டு சுவாமியிடம் சென்றார்கள். அன்பர் கூறியதை பெற்றோர் சுவாமியிடம் கூறினர். சுவாமி வியந்து அன்பரைப் பார்த்தார். அன்பர் தன் மனதினுள்ளே வாசம் செய்யும் சுவாமி தனக்கு திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்து விட்டதாகச் சொன்னார்.

அங்கு விசித்திரமான அமைதி நிலவியது.

“நண்பா இந்த பிச்சைக்காரனிடம் இது விசயமாக நீங்கள் பேசவேயில்லையே. எப்படி இந்த பிச்சைக்காரன் பெயரை நீங்கள் பயன்படுத்திக் கொண்டீர்கள்?”

“சுவாமி என்னுள் இருப்பது நீங்கள்தானே. என் ஆசைகளுக்கெல்லாம் வித்தும் நீங்கள்தானே. எனவே நான் பொய் சொல்லவில்லையே சுவாமி.”

சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

“உங்கள் மனதினுள் இந்த பிச்சைக்காரன் இருப்பதாக நீங்கள் நம்பினால் இங்கே நீங்கள் வர வேண்டியதில்லையே. இனி நீங்கள் இந்த பிச்சைக்காரனைப் பார்க்கத் தேவையில்லை.”

சுவாமி அன்பரையும் அவர் குடும்பத்தினரையும் அனுப்பி வைத்தார்.

அதன் பின்னர் அந்த அன்பர் சுவாமியைத் தொடர்பு கொள்ளவேயில்லை. அவர் விரும்பிய பெண்ணையே மணந்து கொண்டார்.

மனதில் தோன்றும் இச்சைக்கெல்லாம் காரணம் குருநாதர் என்றால் தர்மங்களும், சுதர்மங்களும் நசிந்து போய்விடும். குரு, தர்மத்தின் ரட்சகன். அவர் பெயரில் அவரவர் இச்சையை பூர்த்தி செய்ய முயன்றால் குருவையே இழக்க நேரிடும். குருவையே இழந்தபின் வாழ்க்கையில் என்ன ருசி இருக்க முடியும்?

அந்த அன்பர் சுவாமியின் மஹாசமாதியன்று வந்திருந்தார். சிலநாட்களில் அந்த அன்பர் ஒரு சாலை விபத்தில் அகாலமரணமடைந்தார்.

# பேரருள்



“சுவாமி நாங்கள் அனைவரும் ஒரு பெரிய விபத்திலிருந்து எந்தவித காயங்களுமின்றி தங்களின் பேரருளால் தப்பிப் பிழைத்தோம். நாங்கள் வந்த கார் எதிரில் வந்த லாரியில் மோதி பெரும் விபத்துக்குள்ளானது. நாங்கள் வந்த கார் பெருத்த சேதமடைந்தது. காரின் சேதத்தைக் கண்ட மக்கள் நாங்கள் சிறு காயங்கள்கூட இல்லாமல் தப்பிப் பிழைத்ததைக் கண்டு வியப்படைந்தார்கள். தங்களின் பெருங்கருணையினால் தான் நாங்கள் தப்பிப் பிழைத்தோம் சுவாமி. தங்களின் அருள் இல்லையெனில் விபத்தில் நாங்கள் மாண்டு போயிருப்போம் சுவாமி.”

சுவாமியின் பக்தர் தன் குடும்பத்துடன் சுவாமியைக் காண திருவண்ணாமலை வரும்போது ஏற்பட்ட பெரிய விபத்தை சுவாமியிடம் பதைபதைப்போடு விவரித்தார். அவர் மீண்டும் மீண்டும் சுவாமிக்கு நன்றி தெரிவித்தார். அவர் கண்கள் கலங்கின. அவரது குடும்பத்தாரின்

முகங்களில் விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி இன்னும் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அக்குடும்பமே சுவாமிக்கு மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்தது.

சுவாமி, பக்தரின் உணர்ச்சிப் பெருக்கையும் விபத்தின் அனுபவங்களையும் அமைதியாகக் கேட்டார். பக்தர் மீண்டும் மீண்டும் சுவாமி பேரருள் புரிந்து குடும்பத்தைக் காப்பாற்றியதற்கு நன்றி பகர்ந்து கொண்டேயிருந்தார்.

சுவாமி விடாது மௌனம் காத்தார். சற்றுநேரம் கடந்தது. பக்தரின் உணர்ச்சிப் பெருக்கு சிறிது குறைந்தது. எனினும் சுவாமியின் அருளுக்கு மீண்டும் நன்றி பகர எத்தனித்தார்.

"என்னா அருள் நண்பா? அருள் இருந்திருந்தால் விபத்து எப்படி நேர்ந்து இருக்க முடியும்?" சுவாமி பளிச்செனக் கேட்டார்.

பக்தர் திக்குமுக்காடிப் போனார்.

"எது நடக்கிறதோ அது என் தந்தையின் விருப்பப்படியே நடக்கிறது. எது நடந்ததோ அது என் தந்தையின் விருப்பப்படியே நடந்தது. எது நடக்கப் போகிறதோ அது என் தந்தையின் விருப்பப்படியே நடக்கும். அனைத்துமே என் தந்தையின் விருப்பப்படி நடப்பதால் எதுவுமே தவறில்லை, நண்பா. என் தந்தை ஒரு போதும் தவறு செய்வதில்லை. என் தந்தையை நினைப்பதுதான் வாழ்க்கை. என் தந்தையை மறப்பது சாவாகும். நாம் தந்தையை நினைத்து வாழ்ந்திடுவோம் நண்பா. இவ்வுலகில் என் தந்தையைத் தவிர எதுவுமே நிரந்தரமில்லை. என் தந்தை ஒருவரே எப்பொழுதும் இருக்கிறார். மற்றதெல்லாம் மாயை என்று சான்றோர்கள் சொல்கிறார்கள். மாயையான இந்த வாழ்வில் என் தந்தையிடம் சரணாகதி செய்துவிட்டு, தந்தையை எப்பொழுதும் நினைத்திருப்போம் நண்பா."

அந்த முதிர்ந்த பக்தர் சுவாமியின் அமுத மொழியைக் கேட்டு விக்கித்துப் போனார். அவரது படபடப்பு அடங்கியது. சுவாமி என்னை நாமம் பாடச் சொன்னார்.

“யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா”

நான் மெதுவாக பாடலானேன். பக்தரும் அவரது குடும்பமும் நாமத்தைப் பின்தொடர்ந்து பாடினார்கள். அங்கே தெய்வீக அமைதி தவழ்ந்தது. சுவாமியின் பேரருள் அங்குள்ளோர் அனைவரையும், இகவாழ்வைக் கடந்து அண்டப்பெருவெளியில் ‘நான்’ என்ற பாரம் இல்லாமல் உலாவ வைத்தது.

# இறைஞானம் தரும் பாரதம்



1976ல் ஒருநாள் சுவாமி யோகி ராம்சுரத்குமார் புன்னை மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார். சுவாமியின் எதிரே பல பக்தர்கள் அமர்ந்திருந்தனர். அன்று சுவாமி பேரானந்தத்துடன் பக்தர்களிடம் அளவளாவிக் கொண்டிருந்தார்.

அந்த பக்தர்களிடையே ஒரு முதிர்ந்த தேசபக்தர் அமர்ந்திருந்தார். தேச விடுதலைக்காகப் பற்பல தியாகங்களை ஆரவாரமின்றிச் செய்திருந்த அப்பெரியவர் சிவபக்தரும் ஆவார். ஞானிகளின் கூட்டுறவில் மிகுந்த நாட்டமுள்ளவர். தினமும் அண்ணாமலையார் தரிசனம். வாரம் இருமுறை யோகி தரிசனம் என வழக்கப்படுத்திக் கொண்டிருந்தார். அன்று ஏனோ அவர் முகம் வாடி இருந்தது.

“நீங்கள் ஏதும் சொல்ல விரும்புகின்றீர்களா?” சுவாமி அவரிடம் கனிவோடு வினவினார்.

பெரியவர் சற்றே தயங்கினார். சுவாமி அவரை அருகே அழைத்தார். தன்னுடன் பாயில் அவரை அமரவைத்துக் கொண்டார். அவரின் மெலிந்த கரங்களை சுவாமி தன் கரங்களால் இதமாகப் பற்றி அவர் ஆசுவாசம் அடையுமாறு மெதுவாகத் தடவிக் கொடுத்தார்.

அந்த வயதான தேசியவாதியின் கண்களில் நீர் கோர்த்தது.

“சுவாமி மஹாத்மா காந்தியின் தலைமையில் எத்தனையோ தேசபக்தர்கள் தியாகங்கள் பல செய்து, பெரும் துயரங்களை எதிர்கொண்டு, இந்த நம் பாரத தேசத்திற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார்கள். இன்று அந்த பெரும் சாதனையின் தாத்பரியமே அறியாது நாட்டில் மக்கள் நடத்தும் சுயநலமான வாழ்க்கை முறை எனக்கு அச்சத்தை ஏற்படுத்துகின்றது சுவாமி.

ஏனைய நாடுகளின் வாழ்வியல் முன்னேற்றத்தைப் பார்க்கும் போது நம் நாட்டில் இன்னும் ஏழ்மையும், ஏமாற்று அரசியல் சூழலும் இருப்பதைக் காணும்போது மனம் வேதனை அடைகின்றது சுவாமி. நாடு விடுதலை அடைந்து 30 வருடங்கள் ஆகப் போகின்றது. எனினும் பசியும், ஏழ்மையும், ஏமாற்றுச் சதிகளும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் இன்னும் போகவில்லையே சுவாமி.

இதையெல்லாம் பார்ப்பதற்காகவா எத்தனையோ பெரியோர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக அத்துனை பாடுபட்டார்கள்? மனம் கலங்கி ரணமாகிறது சுவாமி. தங்களைப் போன்ற ஞானிகள் தாம் இந்தப் பாரதத் திருநாட்டைப் பாதுகாக்க வேண்டும் சுவாமி.”

பெரியவரின் மனதின் வலியை அங்கிருந்த அனைவரும் உணர்ந்தனர்.

சுவாமி வெகுநேரம் பெரியவரின் கைகளை வருடியபடி இருந்தார். பின்னர் அங்கிருந்த சிகரெட் பாக்கெட்டைத் திறந்து சிகரெட் ஒன்றை எடுத்து பற்றவைத்தார். ஒரு சிகரெட் முடிந்தது. மற்றொன்று, அடுத்து ஒன்று என்று நான்கைந்து சிகரெட்டுக்களை அடுத்தடுத்து புகைத்தார். மறுபடியும் பெரியவரின் கரத்தைப் பிரியத்தோடு பிடித்து வருடினார்.

“ஆம், நமது நாட்டின் போக்கும், வளர்ச்சியும் மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போன்று இல்லைதான். அந்த நாடுகள் மாதிரி ஆவதற்கு கடும் உழைப்பும் திட்டமிடுதலும் தேவை. அவ்விதம் திட்டமிட்டு உழைத்தால் இந்திய நாடும் அந்த நாடுகள் போன்று சுபிட்சமாகதான் தோன்றக்கூடும்.

ஆனால் இந்தபிச்சைக்காரனைப் போன்ற என் தந்தையின் பிள்ளைகளை இந்த நாடு இழந்துவிடும். இந்த நாட்டை உன்னதமான ஞானிகள் விளையாடும் நாடாக என் தந்தை படைத்திருக்கின்றார். இந்த பாரதத் திருநாட்டில் மட்டும்தான் ஞானிகள், என் தந்தையின் பிள்ளைகள் அவதரிக்கும் சூழ்நிலையை என்தந்தை அமைத்திருக்கின்றார்.“

இத்திருநாடு ஏழைநாடாக இருக்கலாம். ஆனால் தெய்வத்தை நோக்கி இந்த உலக மக்களை முன்னின்று அழைத்துச் செல்ல இந்த பாரதத் திருநாட்டினால் மட்டுமே முடியும். இந்தப் பாரதத் திருநாட்டில் எல்லாக் காலங்களிலும், எல்லா திசைகளிலும் ஞானிகள் இருப்பதைப் பார்க்கலாம்.

இமயமலையின் உயரங்களிலும் நாட்டில் உள்ள அடர்ந்த வனங்களிலும், குகைகளிலும் நம் நாட்டின் துறவிகளும், ஞானிகளும் என் தந்தையை விடாது தியானித்திருப்பதைப் பார்க்கலாம். இவர்களின் தவத்தால்தான் இந்த புண்ணிய பாரதம் இன்னும் காக்கப்படுகின்றது.

இம்மண்ணில் பிறந்தோர் யாவரும் பெரும்பாக்கியம் செய்தவர்கள். என் தந்தையை அடைந்த ஞானியர் நடமாடிய நாடு இது. (சுவாமி உணர்ச்சி பொங்க எழுந்தார். தன் காலடியில் இருந்த மண்ணை எடுத்துத் தன் நெற்றியில் பெருமையோடு பூசிக்கொண்டார்)

என் தந்தையை அடையும் வழியை உலக மக்கள் அனைவருக்கும் கற்பிக்கும் இந்த பாரத பூமிதான் ஏனைய உலக நாடுகளுக்கு வழி காட்டியாக இருந்தது, இருக்கிறது, என்றும் இருக்கப் போகின்றது. மற்ற சின்னச் சின்ன குறைபாடுகள் நாளடைவில் மறைந்துவிடும். எனவே கவலை வேண்டாம். என் தந்தையின் பூமியிது. புண்ணியத் திருநாடு இது. அனைத்துலக மக்களுக்கும் இறைஞானம் அளிக்கும் தெய்வத் திருநாடு இது."

சுவாமியின் உத்வேகத்தினால் அதுவரை நம்தாய் திருநாட்டை ஏளனமாகப் பார்த்திருந்த பார்வை அன்றோடு போய்விட்டது. இந்தியர் அனைவரும் பிறப்பினாலேயே தத்துவ ஞானிகள்தான் என விவேகானந்தர் முழங்கியது ஞாபகத்திற்கு வந்தது.

சுவாமி தெய்வீகப் புன்னகை பூத்தார். பெரியவரின் துயரம் தொலைந்தது. நம்பிக்கை பிறந்தது. அவரின் முகம் மலர்ந்தது.

நம் நாட்டைப் போற்றுவோம். ஞானிகளைப் போற்றுவோம்.

# பக்தருக்கினிய சுவாமி



அந்த மத்திய வயது தம்பதிகள் சமீப காலமாக சுவாமி யோகி ராம்சுரத்குமாரை அறிந்திருந்தார்கள். மனைவிக்கு சுவாமியின் மீது அதீத பக்தி. கணவருக்கோ சுவாமி ஒரு சாதாரண மானுடர். சில அமானுஷ்ய சக்திகள் அவரிடம் இருக்கலாம். அதன் காரணமாக சுவாமியைத் தெய்வத்திற்கு நிகராகப் பாவிப்பதோ, பக்தி செலுத்துவதோ, திருவடிகள் பணிந்தெழுவதோ அவசியமற்றது, அளவிற்கு அதிகமானது, என்பது அவரின் எண்ணம்.

மனைவிக்கோ சுவாமியே குரு, தெய்வம், சகலமும். எனவே மனைவி தன் கணவரை சுவாமியை திருவண்ணாமலை சென்று தரிசிக்க வேண்டும் என்று தன் ஆவலை வெளிப்படுத்தும் போதெல்லாம் கணவர் வேண்டா வெறுப்பாக மனைவியை திருவண்ணாமலைக்கு அழைத்துச் செல்வார்.

ஒரு சமயம் கணவனை, மனைவி மிகவும் வற்புறுத்தி திருவண்ணாமலை

அழைத்துச் செல்லும்படிக் கேட்டார். கணவரோ கோபமடைந்து மறுக்க, கணவன் மனைவியிடையே சச்சரவு ஏற்பட்டது. மனைவி கண்ணீர் மல்க சுவாமியை பிரார்த்தித்தார்.

இரண்டு நாட்கள் கடந்தன. மனைவியின் கண்ணீர் கணவரைக் கரைத்தது.

"நல்லது. நாம் சுவாமியைக் காணச் செல்லலாம், ஆனால் என்னை அவரின் காலில் விழுந்து வணங்க வற்புறுத்தக் கூடாது. இதற்கு ஒப்புக்கொண்டால் நாம் சுவாமியைப் பார்க்கச் செல்லலாம். என்ன சொல்கின்றாய்?"

கணவர் வினவினார்.

சுவாமியைப் பார்க்க அழைத்துச் செல்வதாக கணவர் சொன்னது சந்தோஷம் அளித்தாலும், கணவர் சுவாமியை நமஸ்கரிக்க மாட்டேன் எனச் சொன்னது மனைவியின் மனதைச் சுட்டது. சிறிது நேரம் மனைவி பதிலுரைக்காமல் மௌனமாக இருந்தார். கணவர் பதிலுக்காகக் காத்திருந்தார். மனைவி சுவாமியை தியானித்தார். சுவாமியின் சிரித்த முகம் அவரை வா என அழைப்பதைப் போல் இருந்தது.

"நீங்கள் உங்கள் இஷ்டப்படி இருந்து கொள்ளுங்கள். நாம் திருவண்ணாமலை செல்லலாம்." மனைவி கூறினார்.

இருவரும் திருவண்ணாமலை வந்தடைந்தனர். சிவகாசி நாடார் சத்திரத்தில் அறை எடுத்தனர். சுவாமியிடம் செல்ல தயாராயினர்.

"இன்று மட்டும் சுவாயின் திருவடியைத் தொட்டு நமஸ்கரித்து விடுங்கள். இதற்குப் பின் நான் ஒருநாளும் உங்களை வற்புறுத்த மாட்டேன்."

மனைவி கணவனிடம் கெஞ்சினார்.

"அது ஒருபோதும் நடக்காது. நான் சுவாமி முன் மண்டியிட்டு ஒருமுறை கூட நமஸ்காரம் செய்யமாட்டேன்."

கணவர் முடிவாகச் சொல்லிவிட்டார். மனைவிக்குக் கடுங்கோபம்.

"இப்படிப்பட்ட அகங்காரத்தோடு நீங்கள் சுவாமியைப் பார்க்க வரவே வேண்டாம். நான் மட்டும் சென்று வருகின்றேன்."

கணவன் முறைத்து நிற்க, மனைவி மட்டும் சுவாமியைப் பார்க்க விரைந்தார். சுவாமி தேரடி மண்டபத்தில் அமர்ந்திருந்தார். அந்த அம்மையார் கண்களில் நீர் மல்க சுவாமியிடம் சென்று சுவாமியின் பாதம் பற்றி நமஸ்கரித்தார்.

"உங்கள் கணவர் எங்கே அம்மா?" சுவாமி வினவினார்.

அம்மையார் விம்மி அழுதார். நடந்ததை விவரித்தார். சுவாமி சிரித்தார்.

"உங்கள் கணவரிடம் போய் சொல்லுங்கள் அம்மா. அவர் இந்த பிச்சைக்காரரை நமஸ்கரிக்க வேண்டாம். இந்த பிச்சைக்காரர் அவரின் பாதம் பற்றி நமஸ்கரிப்பார் என்று அவரிடம் சொல்லி அழைத்து வாருங்கள் அம்மா."

அம்மையாரின் உடல் நடுங்கியது. சுவாமியை நமஸ்கரித்தார். சத்திரத்திற்கு விரைந்தார். அறையில் இருந்த கணவரிடம் நடந்ததைக் கூறினார்.

"ஒரு ஞானி உங்களை கால் தொட்டு வணங்குவேன் எனக்கூறி உங்களை அழைத்துவரச் சொல்லியுள்ளார். இது எதில் போய் முடியுமோ? எனக்கு பயமாக உள்ளது."

மனைவி கதறியபடி கூறினார்.

கணவன் பதிலேதும் கூறவில்லை. சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார். அறைக் கதவைப் பூட்டிவிட்டு, மனைவியுடன் சுவாமியைப் பார்க்க விரைந்தார். அவர்கள் மண்டபத்தை அடைந்தார்கள்.

கணவன் சுவாமியின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். அவர் கண்களில் கண்ணீர் பெருகி சுவாமியின் பாதத்தை நனைத்தது. சுவாமி தன் கரங்களை அவரின் முதுகின் மீது வெகுநேரம் வைத்திருந்தார். பின்னர் அவர் முதுகைத் தட்டித்தடவி அவரை ஆசுவாசப்படுத்தினார்.

“இவர் நமஸ்காரம் செய்யமாட்டார் என்று சொன்னீங்களே அம்மா, ஆனால் இவர் எழவே மாட்டேங்கிறாரேமா.”

சுவாமியின் பெருஞ்சிரிப்பு அலையலையாய் வந்து கொண்டேயிருந்தது.

மனைவி ஆனந்தக் கண்ணீர் வர்ஷித்தார். அன்றிலிருந்து அந்த கணவர் சுவாமியை தெய்வமாகவே ஆராதித்தார்.

# இமயமலைத் துறவியும், இமயமும்



அன்று காலையிலிருந்தே தென்கிழக்குப் பருவமழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. தேரடி மண்டபத்தின் மத்தியில் சுவாமி அமர்ந்திருந்தார். சுவாமியால் அன்று புன்னை மரத்தடிக்குச் செல்ல முடியவில்லை. சுவாமியின் உதவியாளர்களும், நானும், சில பக்தர்களும் சுவாமியின் நாமத்தைப் பாடிக்கொண்டிருந்தோம். சுவாமி ஆனந்தப் பிரவாகத்தில் உட்கார்ந்தபடி நர்த்தனமாடிக் கொண்டிருந்தார். அவரின் ஆடலையும், அபிநயங்களையும் காணக் காண எங்களுக்கு உற்சாகம் கரை புரண்டு ஓடியது. அளவு கடந்த ஆனந்தத்தினால் எங்களின் நாம சங்கீர்த்தனமும் வேகமடைந்து உரக்க ஒலித்தது.

அப்போது காலை 10 மணி இருக்கும். தேஜஸ்வியான அந்த சன்னியாசியை சில அன்பர்கள் நம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் அழைத்து வந்தார்கள்.

அந்த சிறிய தேரடி மண்டபத்தில் சுவாமியின் கோணிப்பை மூட்டைகள்

ஒரு பக்கம் அடுக்கியிருக்க, சுவாமி மலையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். காற்றின் சுழற்சியில் அவ்வப்போது சுவாமியின் மீதும் மழைத்துளிகள் விழுந்து அவரை நனைத்தன. சுவாமி ஆனந்தமாகச் சிரித்தபடி இருந்தார்.

சன்னியாசியை அழைத்து வந்த அன்பர்கள் சுவாமியை நமஸ்கரித்தார்கள். அந்த சன்னியாசி சுவாமியையே உற்றுப் பார்த்த வண்ணம் இருந்தார். சுவாமியை அவர் தன் பார்வை மூலம் மதிப்பீடு செய்ய முயற்சிப்பது போல் தோன்றியது.

சுவாமி எப்பொழுதுமே தன்னை யாராவது விழி நோக்கிப் பார்த்தால், அவர்களைப் பாராது தன் சிரசை, இப்படியும் அப்படியுமாக மாற்றி மாற்றி சுவாமி அசைத்துக் கொண்டிருப்பார். பக்தர்களின்பார்வை அவரின் திருவடிகளைத் தரிசிக்கும் போது அவரின் தீட்சண்யமான பார்வை பக்தர்களின் மேல் முழுமையாகப் படரும்.

பக்தர்கள் மீண்டும் சுவாமியின் விழிகளைப் பார்த்தால், சுவாமி மீண்டும் தன் சிரசை மாற்றி மாற்றி அசைத்துக் கொண்டிருப்பார். சுவாமியின் திரு விழிகளை யாருமே முழுமையாக விரிந்து பார்த்திருக்கவே முடியாது.

சன்னியாசியுடன் வந்த அன்பர்கள் அவர் இமயத்தில் கடும்தவம் இயற்றியவர் என்றும், தற்சமயம் யாத்திரையாக தென் இந்திய ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள். சுவாமி சன்னியாசியை இருகரம் கூப்பி வணங்கினார்.

ஆனால் சன்னியாசி எவ்வித அசைவுமின்றி சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் நம் சுவாமியை எடை போட முயற்சிப்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அவர் விடாது சுவாமியையே பார்த்தார்.

அதுவரை தன் சிரசை அங்கும் இங்குமாக ஆட்டிக் கொண்டிருந்த சுவாமி, திடீரென தலையாட்டுவதை நிறுத்திவிட்டு அந்த சன்னியாசியைத் தன் விழிகளை முழுக்கத் திறந்து உற்றுப்பார்த்தார்.

ஆஹா, சுவாமிக்குத்தான் எவ்வளவு பெரிய நயனங்கள். அந்த பெரிதாக விரிந்த கண்களின் தீட்சண்யம் கடும் வெப்பத்தை உமிழ்ந்தது. பக்கவாட்டில் அமர்ந்திருந்த எங்கள் கண்கள் எல்லாம் அந்த கடும் வெப்பத்தில் காந்தத் தொடங்கின. ஆனால் அந்த சன்னியாசி சுவாமியையே விழிமூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார். சில நிமிடங்களில் அவரது விழிகளும் எரியத் தொடங்கின போலும். தன் தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

சுவாமியும் சுவாதீனமாக தன் விழிகளை எப்பொழுதும் போல் சுருக்கி வைத்துக் கொண்டார். சுவாமியின் முகம் மலர்ந்து சன்னியாசியைக் கருணையோடு பார்த்தது.


அந்த சன்னியாசியின் கண்களில் நீர் கோர்த்தது. அவர் மெதுவாக எழுந்தார். சுவாமியிடம் சென்றார். சுவாமியின் முன் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார்.

சுவாமி அவரின் முதுகின் மேல் தன் இரு கரங்களையும் பரப்பினார். சற்று நேரம் அப்படியே இருந்தார். பின் மெதுவாக சன்னியாசியைத் தட்டிக் கொடுத்தார். சன்னியாசி மெதுவாக எழுந்து அமர்ந்து கைகூப்பி சுவாமியை வணங்கினார்.

"சுவாமி இமய மலையிலிருந்து இந்த பிச்சைக்காரனை ஆசீர்வதிப்பதற்காகவே வந்திருக்கிறீர்களே சுவாமி. பிரணாம் சுவாமி" என சுவாமி சொல்ல மீண்டும் அந்த சன்னியாசி சுவாமியின் திருவடிகளில் வீழ்ந்தார்.

சுவாமி அவரை ஆசுவாசப்படுத்தி, சிலநாட்கள் திருவண்ணாமலையின் மலையில் வாசம் செய்யச் சொன்னார். சன்னியாசியும் சரி எனச் சொல்லி அங்கிருந்து அவரை அழைத்து வந்த அன்பர்களுடன் சென்றார். என் குருநாதன் ஆனந்தமாகச் சிரித்துக் கொண்டிருந்தார். நாங்கள் பிரமித்து நின்றோம்.

# ஏழை பங்காளன்



அன்று தேரடி மண்டபத்தில் பெரும் பக்தர்கள் கூட்டம், நம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் முன்னால் அமர்ந்திருந்தது. கூட்டத்தில் நீதித்துறை நீதி அரசர்கள், அவர்களின் பாதுகாப்புக்காக வந்திருந்த காவல்துறை உயரதிகாரிகள், பெரும்செல்வந்தர்கள், இவர்களின் சொந்தங்கள் மற்றும் கீழ் அதிகாரிகள் என சமுதாயத்தின் மேல்தட்டு மக்கள் குழுமியிருந்தனர்.

சுவாமி தனது விசிறியை உயரத் தூக்கிப் பிடித்தபடி அனைவரையும் அருள் பொங்க பார்த்தபடி இருந்தார். மாலை மணி 7 இருக்கும். தெரு விளக்கு மண்டபத்தின் மேல் மங்கலாகப் படிந்திருந்தது.

சுவாமி வந்திருந்த பக்தர்களிடம் அவ்வப்போது அளவளாவிக் கொண்டிருந்தார். சில பக்தர்கள் சுவாமி முன் வந்து நமஸ்கரித்தனர். சிலரை சுவாமி தொட்டு ஆசீர்வதித்தார். மற்றும் சிலரை முதுகில்

செல்லமாகத் தட்டி அருள்புரிந்தார்.

சில தாய்மார்கள் தங்கள் சிறு குழந்தைகளை சுவாமி முன் நிறுத்தி சுவாமியைக் கும்பிடச் செய்தனர். சுவாமி அக்குழந்தைகளின் பிஞ்சுக் கால்களைத் தொட்டு வணங்கினார்.

வந்தவர்கள் சுவாரசியமாக தங்களின் கோவில் தரிசனங்கள், அவர்கள் பார்க்கும் வேலைகளின் குறைகள், அவர்களின் எதிர்பார்ப்புகள் எனும் பிரார்த்தனைகள் என சுவாமி முன் அடுக்கிக் கொண்டிருந்தனர். சுவாமி அனைத்தையும் கேட்டு ஆசிவழங்கிக் கொண்டே இருந்தார்.

திடீரென சுவாமியின் கவனம் மண்டப படிக்கட்டுகளின் கீழே நின்றிருந்த ஒரு நபர் மீது படிந்தது. அந்த நபர் தயங்கியபடி நின்றிருந்தார். அங்கே காவலுக்கு நின்ற காவலர் ஒருவர் அவரை அப்பால் போகச் சொல்லிக் கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற சுவாமி வேகமாக எழுந்தார். மண்டபப் படிகளில் வேகமாக இறங்கி காவலர் துரத்திக் கொண்டிருந்த நபரின் கையைப்பற்றிக் கொண்டார். காவலர் விலகி நின்றார்.

“என்னா சண்முகம், உன் புள்ள வந்துட்டாரா?”

“வந்துட்டான் சாமி. அத உன்கிட்ட சொல்லிட்டு போகலானுதான் வந்தேன் சாமி. நீ சொன்னபடியே பத்திரமா வந்து சேர்ந்துட்டான் சாமி.”

அந்த கிராமத்து பக்தர் சுவாமியின் திருப்பாதத்தை நமஸ்கரித்தார். எழுந்த அப்பக்தரின் கையைப் பற்றியவாறு சுவாமி அவரையும் உடன் அழைத்துக் கொண்டு மேலே தன் இருக்கைக்குச் சென்றார். அக்கிராமத்துப் பக்தரை தன்னோடு பாயில் அமரவைத்தார். பக்தர் ஒருவித பயத்தோடு அமர்ந்திருந்தார். சுவாமி அவரை ஆசுவாசப்படுத்தினார்.

“புள்ளை நல்லா இருப்பார் சண்முகம். அப்பா அவரை நல்லா

பாத்துக்குவார். இனி கவலை தேவையில்லை சண்முகம்." சுவாமி ஆசியளித்தார்.

அங்கே பிற பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய பலவகைப் பழங்களை சண்முகம் கையில் இருந்த ஒரு பெரிய பையில் போட்டு, சுவாமி அவரை வழியனுப்பி வைத்தார். பக்தர் சுவாமியை நமஸ்கரித்துவிட்டுக் கிளம்பிச் சென்றார்.

"இந்தபிச்சைக்காரன் எப்பொழுது அவர் குடிசை வழியே சென்றாலும் ஏதாவது பசியாற சண்முகம் கொடுப்பார். அவர் பிள்ளை இரண்டு நாட்களுக்கு முன்பு கோபித்துக் கொண்டு எங்கோ சென்றுவிட்டார். சண்முகம் பயந்து போய்விட்டார். அப்பா பத்திரமாக அவர் பிள்ளையை அவரிடமே சேர்த்து விட்டார். எல்லாம் அப்பாவின் அருள்."

சுவாமியின் முகம் தங்கமாய் ஜொலித்துக் கொண்டிருந்தது. பக்தனின் பக்தியையும், பரமனின் கருணையையும் ஒருசேர பார்த்த நான் பாக்கியசாலிதான்.

# "வலம் வா"



கடுமையான மழை. வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகி வட தமிழகத்தில் பரவலாக கனத்த மழை. திருவண்ணாமலையிலும் மூன்று தினங்களாக தொடர் மழை. சுவாமி மூன்று தினங்களாகப் புன்னை மரத்தடிக்குச் செல்ல முடியாமல், பகலில் தேரடி மண்டபத்தில் மழைக்காக ஒதுங்கியிருந்தார்.

வீதியில் வியாபாரம் செய்யும் ஏழை மக்களும் அங்கு சுவாமியோடு ஒண்டிக் கொண்டிருந்தார்கள். சுவாமியின் சாக்கு மூட்டைகள் நனையாமல் இருப்பதற்காக சுவாமியின் உதவியாளர்கள் அதன் மீது ஒரு தார்ப்பாயை விரித்திருந்தார்கள். இரவானதும் சுவாமி பாத்திரக் கடைக்கு இடம் மாறினார். பாத்திரக் கடையின் தாழ்வாரத்திலும் மழைச் சாரல் விழுந்து கொண்டே இருந்தது.

மழையில் நனைந்து கொண்டிருந்தாலும், சுவாமியின் ஆனந்தம் எப்பொழுதும் போல் கரைபுரண்டு பொங்கியபடி இருந்தது. அவரது

சிரிப்பு, பக்கத்திலிருந்த ஏழை மக்களுக்கும் உற்சாகத்தைத் தந்து, அவர்களது பரிதாபகரமான நிலையை மறக்கச் செய்தது. சுவாமியுடன் நனைந்தபடி அவரது அலையலையாய் வரும் சிரிப்பையும், சிந்திக்க வைக்கும் தெய்வீகச் சொற்களையும் பருகியபடி நானும் உடனிருந்தேன்.

குடைகளை மடக்கி மண்டபத்தின் வெளியே வைத்துவிட்டு வயதான மூன்று நபர்கள் உள்ளே நுழைந்தார்கள். ஒருவர் பின் ஒருவராக சுவாமியை நமஸ்காரம் செய்துவிட்டு, சுவாமியின் முன் அமர்ந்தார்கள். சுவாமி அவர்களை கனிவோடு, சிரித்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தார்.

"சுவாமி, நாங்கள் சென்னையிலிருந்து வருகிறோம். நாங்கள் கிரிவலம் செல்ல வேண்டும் என நேர்த்திக்கடன் செய்து, அதை நிறைவேற்ற மூன்று நாட்களாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மழை ஓயவேயில்லை. எங்களால் கிரிவலம் செல்ல முடியவில்லை. நாங்கள் ஊர் திரும்ப வேண்டும். என்ன செய்வதென்று தெரியவில்லை."

அவர்களில் ஒருவர் புலம்பினார். அதுவரை ஆனந்தமாகச் சிரித்தபடி இருந்த சுவாமியின் முகத்தில் சிரிப்பு மறைந்தது. தீர்க்கமாக அம்மூவரையும் சுவாமி உற்றுப் பார்த்தார். அம்மூவரும் கைகூப்பி அமர்ந்திருந்தார்கள். சுவாமி கம்பீரமாக எழுந்து நின்றார். தன் தலைப்பாகையையும், போர்த்தியிருந்த சால்வையையும் சரிசெய்து கொண்டார். சுவாமி எழுந்ததைக் கண்ட அம்மூவரும் எழுந்து நின்றார்கள்.

"இந்தப் பிச்சைக்காரனை வலம் வாருங்கள்" சுவாமி கட்டளையிட்டார். சுவாமியைச் சுற்றி, கைகூப்பியபடி அவர்கள் வலம் வந்தார்கள்.

"உங்களின் பிரார்த்தனை நிறைவேறிவிட்டது. நீங்கள் ஊர் திரும்பலாம்."

சுவாமி கம்பீரமாக கூற அம்மூவரும், பெரும் மகிழ்வோடு மீண்டும் நமஸ்காரம் செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். நான் பிரமித்து அமர்ந்திருந்தேன்.

# பக்தரின் சேவையும் பக்திப்பிரசாதமும்



1977இல் ஆரம்பத்தில் ஒருநாள் புன்னை மரத்தின் கீழ் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அமர்ந்திருந்தார். அவரது உதவியாளர்கள் சுவாமியின் நாமத்தை நயம்படப் பாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு அம்மையார் கையில் ஒருபெரிய தூக்கை எடுத்துக் கொண்டு அங்கே வந்தார். தூக்கை கீழே வைத்துவிட்டு சுவாமியை நமஸ்கரித்தார்.

"சுவாமி ஆகாரம் கொண்டு வந்திருக்கேன். சாப்பிடு சுவாமி."

அம்மையார் கைகூப்பி வேண்டிக் கொண்டார்.

"எங்க எல்லோருக்கும் இருக்குமா அம்மா?" சுவாமி வினவினார்.

"இருக்கு சுவாமி." அம்மை பதிலளித்தார்.

“கொடுக்கலாம் அம்மா.”

சுவாமி சொன்னவுடன், அவ்வம்மையார் தான் கையோடு கொண்டு வந்திருந்த மந்தார இலையை நீரில் கழுவி சுவாமியின் முன்னால் வைத்தார். எளிமையான ரசம்சாதம், மற்றும் தக்காளித் தொக்கு. சுவாமிக்குப் பரிமாறிய பின் அனைவருக்கும் இலையில் அதே உணவு பரிமாறப்பட்டது. அடியேனுக்கும் அந்த அமுதம் கிடைத்தது.

அமுதம் படைத்த அன்னைக்கு பெரும் மகழ்ச்சி. அமுதம் அருந்திய அனைவருக்கும் நிறைவான பிரசாதம். சுவாமி அன்னையை வணங்கி வாழ்த்தினார். அன்னை கண்களில் நீர் ததும்ப சுவாமியைப் பணிந்து வணங்கினார்.

“என் தந்தையின் பிரதேசமான இப்புனித பாரதத்தில் தான் இம்மாதிரியான என் தந்தையின் பிரசாதங்கள் கிடைக்கும். என் தந்தையின் கருணைக்கு எல்லை ஏது?” பணிந்த அன்னையை இருகரம் உயர்த்தி சுவாமி அருள்பாலித்தார்.

சுவாமியின் சன்னதித் தெரு வீடு:

அங்கும் ஒரு அம்மையார் சுவாமிக்கு ஆகாரம் கொண்டு வந்திருந்தார். அப்போது நான் மட்டுமே அங்கிருந்தேன்.

“அம்மா ஆகாரம் எங்க இரண்டு பேருக்கும் கிடைக்குமா?” சுவாமி வினவினார்.

“இல்லை சுவாமி. உனக்கு மட்டும் தான் கொஞ்சம் தயிர்சாதமும் வடுமாங்கா ஊறுகாயும் கொண்டுவந்தேன்.”

அந்த அன்னை வருத்தத்தோடு கூறினார்.

“பரவாயில்லை அம்மா. இருப்பதை எங்கள் இருவருக்கும் பகிர்ந்து கொடுங்கள்.”

சுவாமி அன்னையை ஆசுவாசப் படுத்தினார்.

சுவாமி என்னை அவர் அருகில் அமர்த்திக் கொண்டார். அம்மை இருவருக்கும் இலை போட்டு தயிர் சாதத்தைப் பரிமாறினார்.

“இருவருக்கும் சமமா போடுங்க அம்மா.”

அன்னை சமமாகப் பரிமாறினார்.

அன்னைக்கு மிகுந்த வருத்தம்.


“கூட ஒரு கைப்பிடி அரிசி போட்டு சமைச்சி எடுத்து வராம போயிட்டனே,” அம்மை அங்கலாய்த்தார்.

“இது போதும் அம்மா. அப்பா தேவையானதை கொடுத்து விட்டார் அம்மா. கவலை வேண்டாம் அம்மா.”

சுவாமி சமாதானப் படுத்தினார்.

அந்த தயிர் சாதமும், வடுமாங்காய் ஊறுகாயும் என் ஜீவனுக்கு இன்று வரை சக்தி அளித்துக் கொண்டிருக்கின்றது.

# சுவாமியின் பசியும் பக்தரின் பக்தியும்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் திருவண்ணாமலை வீதிகளில் வலம் வந்த அந்த நாட்கள். வானமே கூரையாகவும், மண் தரையே தளமாகவும், உடலைலே உடைமையாகவும் சுமந்து திரிந்த அந்த நாட்கள். பசிக்கும்போது அங்கிருக்கும் ஆசிரமங்கள் வாயில்களிலும், தன் மீது அன்புற்றோர் இடங்கள் முன்பும் மௌனமாக நின்ற அந்த நாட்கள். உணவு கிடைக்காமல் பல நாட்கள் மலையடிவாரத்தில் இருக்கும் பெரிய விருட்சத்தின் நிழலில் பசி மறக்கப் படுத்திருந்த அந்த நாட்கள்.

அப்படி ஒரு நாளில் ஒரு ஆசிரமத்திலிருந்து ஆகாரத்திற்காக அழைப்பு வந்தது. சுவாமி அங்கு சென்றார். அழைத்திருந்தவர் சுவாமியை உணவுக்கூடம் வரை அழைத்துச் சென்றார்.

"உணவு அருந்திவிட்டு வாருங்கள் சுவாமி."

அன்பர் அன்போடு சொல்லிச் சென்றுவிட்டார். உணவுக்கூடத்தில் அனைவரும் சுவாமியை அருவருப்போடு பார்த்தனர். சுவாமி அங்கே இருந்த காலி இடத்தில் அமர்ந்தார். அவர்முன் இலை வீசப்பட்டது. சுவாமி அமைதியாக இருந்தார். பதார்த்தங்கள் வீசப்பட்டன. சுவாமி பொறுமையாக புன்முறுவலோடு அங்கே அமர்ந்திருந்தார். பக்கத்தில் அமர்ந்திருந்த பக்தருக்குப் பொறுக்கவில்லை. புத்தி சொல்ல ஆரம்பித்தார்.

"இது பக்தர்களுக்கான உணவருந்தும் பொது இடம். புனிதமான இடம். இங்கே இவ்வளவு அழுக்கோடு எங்களோடு அமர்ந்து சாப்பிட வருகிறாயே, நீ புரிந்து கொள்ளமாட்டாயா? இப்படி இருந்தால் நீ என்ன கற்றுக் கொள்ளப் போகிறாய்? ஆன்மீகம் சற்றாவது அறிந்துகொள்."

சுவாமி எழுந்தார். புத்தி சொன்னவரை உற்றுப் பார்த்தார்.

"நண்பா, நீங்கள் ஏதேனும் கற்றுக் கொள்ள விரும்பினால் இந்த பிச்சைக்காரன் காலில் விழுந்து நமஸ்கரியுங்கள். என் தந்தை அனைத்தும் உங்களுக்கு அருள்வார். ஆனால் இந்த பிச்சைக்காரனுக்கு புத்தி சொல்ல முயற்சி செய்யாதீர்கள். அது உங்களுக்கு நல்லதல்ல."

சுவாமி அங்கிருந்து சென்றுவிட்டார். கால் போன போக்கில் கிரிவலப் பாதையில் சென்றார். வழியில் இருந்த ஒரு குடிசையின் திண்ணையில் அமர்ந்தார். குடிசையின் உள்ளிருந்து ஒரு பாட்டி வந்தார். சுவாமியைப் பார்த்தார். மீண்டும் குடிசைக்குள் சென்றார். திரும்பவும் அவர் வரும்போது அவர் கையில் ஒரு மண் குவளை இருந்தது.

"சுவாமி, இதை வாங்கிக் குடி. வெறும் நீராகாரம்தான். கொஞ்சம் ஊறுகா போட்டுருக்கேன். குடிச்சிரு சுவாமி. இந்த வெயிலுக்கு நல்லா


இருக்கும்.”

பாட்டி அன்போடு கொடுத்ததை சுவாமி அமிர்தமென அருந்தினார்.

“கொஞ்ச நேரம் படுத்துக்கோ சுவாமி. வெயில் தணிஞ்ச பிறகு போகலாம்.”

சுவாமி படுத்துக்கொண்டார். ஆண்டவனுக்கே நிகழ்ந்த இந்த அற்புதம், சுவாமி சொல்லக்கேட்டு எங்களுக்கு கண்ணீர் வடிந்தது. அதன்பின் துன்பம் என்ற சொல்லின் உண்மை அர்த்தங்கள் சிறிது தெரிந்தது.

# ஆன்மீகம் எளிதல்ல



சுவாமி யோகி ராம்சுரத்குமார் தான் ஈர்த்த அன்பர்களைக் கைப்பிடித்து தந்தையை நோக்கி அழைத்துச் செல்லும் பயணத்தில் பற்பல சுய சோதனைகள் செய்யும் சந்தர்ப்பத்தை அன்பர்களுக்கு அருளுவார்.

அன்பர்களின் குணாதிசயங்கள், வாழும் வாழ்க்கை முறைகள் இவற்றிற்குத் தகுந்தாற் போல் தக்க சூழ்நிலைகளை உருவாக்கி அதன் வாயிலாக அன்பர்கள் தங்களின் ஆன்ம பயணத்தின் உண்மையான தன்னிலையை அறிந்து கொள்ள வைப்பார்.

பொதுவாக சுவாமி படிக்கச் சொன்ன சிலஞானிகளின் வாழ்க்கையையும்,

உபதேசங்களையும் நண்பர்கள் படித்து அறிந்ததனால் அவர்கள் அடைய வேண்டிய இலக்கை அடைந்து விட்டார்கள் என்ற மாயையை சுவாமி தன்னுடைய உன்னதமான லீலைகளால் தகர்த்தெறிந்து விடுவார்.

ஒருமுறை மிகப்பெரும் செல்வந்தரைக் கரை சேர்க்க சுவாமி தன் விநோதமான லீலையைச் செய்ய ஆரம்பித்தார். அந்த செல்வந்தர், சுவாமி அறிமுகம் செய்த ஞானியின் உபதேசங்களால் ஈர்க்கப்பட்டு தன்னை மறந்த நிலையில் இருந்தார். பகவானின் பரிபூரணத்தில் கரைந்துவிடத் தான் தயாராகி விட்டதாக நம்பினார்.

ஒருநாள் செல்வந்தர் தன் குடும்பத்தோடு சுவாமியைத் தரிசிக்க வந்தார். அப்போது அவரைப் போன்றே மனநிலை கொண்ட மேலும் இருவர் தங்கள் குடும்ப சகிதம் வந்தார்கள். அனைவரும் சுவாமியைத் தரிசிக்க புன்னை மரத்தடிக்கு வந்தார்கள். சுவாமியை தரிசித்ததும் அவர்களின் ஆன்ம போதை அதிகரித்தது.

யாரோ, பக்தர்கள் சுவாமிக்கு அணிவித்த மலர் மாலைகளை சுவாமி அம்மூவருக்கும் அணிவித்தார். நண்பர்களின் போதை இன்னும் அதிகமாகியது. சுவாமியே தங்களை அங்கீகரித்து விட்டார் என்று நம்பினார்கள். பிறவிக் கடலைக் கடந்து மறுகரை சேர்ந்து விட்டதாக சுலபமாக நினைத்துக் கொண்டார்கள்.

அன்று மாலை சுவாமி புன்னை மரத்திலிருந்து தேரடிமண்டபத்திற்கு புறப்பட்டார். செல்வந்தர் அணிந்திருந்த சட்டையை சுவாமி கழற்றச் சொன்னார். பின்னர் செல்வந்தரின் நண்பர்களில் ஒருவரிடம் துடப்பத்தையும், மயில் பீலியையும் கையில் கொடுத்து அவற்றைத் தூக்கி பிடித்தவாறு நடக்க வேண்டும் என உத்திரவிட்டார். மற்றொரு பணக்கார நண்பரின் கையில் இரண்டு சிறிய சாக்கு மூட்டைகளைக் கொடுத்து, ஒன்றைத் தோளிலும் மற்றொன்றைக் கையிலும் தூக்கிவரச்

சொன்னார்.

சுவாமி செல்வந்தர் கரத்தை இறுகப்பிடித்துக் கொண்டார். அக்காட்சி புதிதாக திருமணமான மாப்பிள்ளை தன் அழகு மனைவியைக் கைப்பிடித்து அழைத்துச் செல்வது போல் இருந்தது. மற்ற இருவரின் தோற்றமும், ஏவலாட்கள் திருமணமான தம்பதிகளைத் தொடர்ந்து செல்வது போல் இருந்தது.

பெண்கள் இவர்களைத் தொடர்ந்து வரிசையாக வரவேண்டும். ஊர்வலம் புறப்பட்டது. சுவாமியின் உற்சாகம் கரைபுரண்டு பீறிட்டுச் சென்றது. செல்வந்தரின் கையைப் பிடித்தவாறு நடனமாடியபடி சாலையில் சுவாமி நடக்க ஆரம்பித்தார். வழியில் ரயில் நிலையம் தாண்டி ஒரு சாலை சந்திப்பை ஊர்வலம் அடைந்தது. அந்த சாலைச் சந்திப்பை அடுத்து ஒரு கிறிஸ்துவ தேவாலயம் இருந்தது.

தேவாலய விடுதியில் ஏராளமான கன்னிகாஸ்திரீகள் இருந்தனர். தலைமை கன்னிகாஸ்திரீ தினமும் அந்தசாலை சந்திப்பில் சுவாமி வரும் சமயம் சுவாமிக்கு முகமன் சொல்ல வருவார். அவரோடு அன்று ஏராளமான இளம் கன்னிகாஸ்திரீகளும் வந்திருந்தனர்.

சுவாமி அவர்களைப் பார்த்ததும் ஆனந்த மிகுதியில் நளினமாக நடனமாடியபடி அங்கேயே நின்றுவிட்டார். சுவாமி கைப்பிடித்து வைத்திருந்த செல்வந்தருக்கோ தாங்க முடியவில்லை. வெட்கமும், கூச்சமும் ஒன்று சேர நெளிந்தார். குனிந்த தலை நிமிராமல் சுவாமியின் மணப்பெண் போலவே ஆகிவிட்டதைக் கண்டு அவரது ஆண்மை அவமரியாதையாக உணர்ந்தது.

மற்ற இரு நண்பர்களுக்கோ தலைதூக்க முடியவில்லை. வெட்கம் பிடுங்கித்தின்றது. இளம் கன்னிகாஸ்திரீகள் யாவரும் இவர்கள்

எல்லோரையும் விசித்திரமாகப் பார்த்துக் கேலி செய்து உரக்கச் சிரித்தார்கள். நண்பர்கள் புழுவாக நெளிந்தார்கள். சுவாமியோ ஆனந்த நர்த்தனத்தை சாலையில் தொடர்ந்து ஆடுகிறார்... பெரியகூட்டமே சேர்ந்துவிட்டது.

நண்பர்கள் நாணிக் கோணி செய்வதறியாது திகைத்தார்கள்.

ஒருவழியாக இந்த லீலையை முடித்துக்கொண்டு சுவாமி அனைவரையும் அழைத்துக் கொண்டு தேரடி மண்டபம் வந்து சேர்ந்தார். நண்பர்களை சிவகாசி நாடார் சத்திரம் சென்று ஓய்வெடுத்துவிட்டு மறுநாள் வரச்சொன்னார்.

சத்திரம் சென்று நண்பர்கள் தங்களின் இயல்பான நிலைக்கு வருவதற்கு வெகுநேரம் ஆகிவிட்டது. தங்களின் தேகாபிமானமும், ஆணவமும் எந்த அளவிற்கு தங்களுள் ஊறிக் கிடக்கிறது என்பதை அறிந்த நண்பர்கள் வெட்கமடைந்தார்கள்.

ஆன்மீகப் பயணம் அவ்வளவு எளிதானதல்ல என்று உணர்ந்தார்கள். அவர்களின் சாதனா தொடர்ந்தது. சுவாமி அவர்களை ஆன்மப் பாதையில் செல்ல ஊக்குவித்தார்.

# சுவாமியின் சன்னதித் தெரு இல்லம்



யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு இல்லம். 20 அடி அகலமும் 100 அடி நீளமும் உள்ள புராதனமான வீடு. கம்பி அளியால் அடைக்கப்பட்ட தாழ்வாரம். அக்கம்பிகளில் கட்டித் தொங்கவிடப்பட்ட காய்ந்து சருகாகிவிட்ட மலர் மாலைகள், (பக்தர்கள் சுவாமிக்கு அணிவித்தவை) அதில் வசித்திருக்கும் பல்வகை பூச்சி இனங்கள், தாழ்வாரத்தின் இடது கோடியில் கொட்டி வைக்கப்பட்ட ஆற்று மணல், தரையெல்லாம் தூசிமயம், இவை முன்புறத் தோற்றம்.

தாழ்வாரம் கடந்து சில அடி தூரத்தில் பெரிய மரக்கதவு. பெரிய கதவைத் தாண்டி சற்று தூரத்தில் மற்றுமொரு சிறிய கதவு. அதைக் கடந்தால் விசாலமான கூடம். கூடத்தின் நடுவில் இரண்டு தூண்கள். தூண்களுக்கு நடுவே விரிக்கப்பட்ட பாய், அதன் மேல் பரப்பப்பட்ட கோணிச் சாக்கு, இதுதான் சுவாமியின் படுக்கை. வலதுபுறத்தில் கோணிச் சாக்குச்

சுருளை சுவாமிக்கு தலைகாணியாகப் பயன்படுத்தப்பட்டது. சுவாமியின் இருக்கைக்கு இடப்புறம் ஒரு பாய் பிரத்யேகமாக பெண்களுக்கும், நேரெதிரே ஒரு பாய் மற்றும் அதற்கு அடுத்து ஒரு கோணிப்பையும் மற்ற பக்தர்கள் அமர்வதற்காக விரிக்கப்பட்டிருக்கும். சுவாமியின் படுக்கைக்கு பின்புறமும், இடது வலது புறங்களிலும் நிறைய டப்பாக்களும் மற்றும் பலதரப்பட்ட பைகளும், மூட்டை முடுச்சிகளும், பாட்டில்களும் குப்பையாகச் சிதறிக் கிடக்கும்.

சுவாமியின் இருக்கைக்கு இருபுறமும் இரண்டு மூடிய அறைகள் உண்டு. அறைகளுக்குள் சுவாமியின் பழைய ஆடைகளும், புத்தகங்களும் இறைந்து கிடக்கும். கூடம் முழுவதும் தூசி படிந்து காணப்படும். சுவாமி தலை வைத்துப் படுத்திருக்கும் சாக்குச் சுருளையின் கீழே வெண் தேள் குஞ்சுகள் பயமற்று உலவிக் கொண்டிருக்கும்.

சுவாமி படுக்கையில் படுத்து ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் சமயம் சுண்டெலிக் குஞ்சுகள் சுவாமியின் உடல் மீது துள்ளிக் குதித்து விளையாடிக் களிக்கும். இது தவிர பெண் பூனை ஒன்று மூன்று குட்டிகளை ஈன்றுவிட்டு அவைகளைக் கவனிக்கும் பொறுப்பை சுவாயிடமே விட்டுச் சென்றது. சில காலம் சுவாமி அவைகளைப் பால் வார்த்து கவனமுடன் பராமரித்து வந்தார்.

இது தவிர சாய்பாபா என்ற பைரவர் எப்பொழுதும் சுவாமியுடன் இருந்து வந்தார். அவர் அவ்வப்போது வெளியே சென்று சாக்கடையில் புரண்டு வீட்டிற்கு வருவார். அவருக்கு சுவாமியின் வீட்டில் முழு சுதந்திரம் உண்டு. அவர் பக்தர்கள் பக்கத்தில் சென்று அமர்ந்து கொள்வார். இரவில் பக்தர் பக்கத்திலேயே படுத்தும் உறங்குவார்.

நண்பர்களே இந்த சூழ்நிலையை சற்றே கற்பனை செய்து பாருங்கள். உலகில் நமக்கு ஒவ்வாத, ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் என

நம்மை நினைக்க வைக்கும் அந்த இடம், முழுக்க முழுக்க பரிபூரணமான புனிதமான ஷேத்திரம் என்றே சொல்ல வேண்டும். பற்பல பக்தர்கள் பல நாட்கள் தொடர்ந்து தங்கியும், அவர்களின் உடல் ஆரோக்கியம் கிஞ்சித்தும் பாதிக்கப் படவில்லை. மாறாக அவர்கள் தேகம் தேஜசுடன் ஜொலித்தது. அவர்களுக்கு இருந்த நோய் நொடிகளும், அவர்களை விட்டு அகன்றது. ஆத்ம சுத்தி அங்கே அவர்களுக்கு சம்பவித்தது. பயம் விட்டகன்றது. பேரானந்தச் சுகம் விளைந்தது. காலம், காரணங்கள் கடந்த பரவெளியில் பக்தரைச் சேர்த்தது. இத்தனைக்கும் கர்த்தாவான நம் சுவாமி, யோகி ராம்சுரத்குமார் ஆனந்தமாக உரக்க சிரிப்பதை நண்பர்களே உங்களால் கேட்க முடிகின்றதா? எனக்கு ஸ்பஷ்டமாகக் கேட்கின்றது.

# சுவாமி எங்கும் நம்முடன்



“நண்பா, உனக்கு விவேகானந்தருக்குப் பிடித்த, அந்த இரு பறவைகளின் கதை தெரியுமா? அக்கதை உபநிஷத்தில் வருவது. நீ அறிவாயோ?”

சுவாமி யோகி ராம்சுரத்குமார் என்னிடம் சுவாதீனமாகக் கேட்டார். நான் தெரியாது என்று சொன்னேன். சற்று நேரம் மௌனத்தில் கரைந்தது. நான் ஆவலோடு சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தேன். சுவாமி மெதுவாக ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். இரண்டு கைகளாலும் சிகரெட்டை பிடித்து ஆழ்ந்து உள் இழுத்தார். உள் இழுத்த புகை வெளியே வரவேயில்லை. இதைக் கவனித்துவிட்ட என்னை நோக்கி சுவாமி சற்றே முகம் சிவந்து சிரித்தார். சிகரெட் முடிந்தது. மீண்டும் சற்று நேரம் ஆழ்ந்த அமைதி நிலவியது.

சுவாமி கதையை சொல்ல ஆரம்பித்தார்.

“ஒரு அடர்ந்த காட்டில் இருந்த பிரமாண்டமான மரத்தில் இரு பறவைகள் இருந்தன. அவற்றுள் ஒரு பறவை சுறுசுறுப்பாக அம்மரத்தில் இருந்த பழங்களையும், காய்களையும் புசித்தவண்ணம் இருந்தது. இனிப்பான பழங்களை மகிழ்வோடும், கசந்த காய்களை வெறுப்போடும் உண்டு உமிழ்ந்து கொண்டிருந்தது. மற்றொரு பறவை தான் இருந்த இடத்தைவிட்டு அசையாமல், ஒரு ஞானி தியானம் செய்வது போல் கண் மூடி அமைதியாக இருந்தது. இனிப்பையும் கசப்பையும் மாறி மாறி புசித்த முந்தைய பறவை, ஆடாது அசையாது இருந்த பறவையைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தது. நானும் அந்தப் பறவை போல்தானே இருக்கின்றேன். ஆனால் நான் மட்டும் இனிப்பையும், கசப்பையும் புசித்து அல்லலுற வேண்டுமா என்ன? முடியாது. நானும் அது போல் அமைதியடையப் போகின்றேன். அமைதியைக் கற்ற பறவை இருமை ஒழித்து சாந்தி பெற்றது.”

அங்கு சற்று நேரம் பேரமைதி நிலவியது. சுவாமி மீண்டும் மௌனம் கலைத்தார்.

“கனியையும் காயையும் ருசித்து, மகிழ்வும் துக்கமும் அடையும் ஜீவாத்மா, சுக துக்கம் கடந்த, கர்மாக்களைக் கடந்த, பேரமைதியடைந்த அந்த பரமாத்வைக் கண்டு அந்த ஜீவாத்மாவும் முக்தி அடைந்தது.”

கதை சொல்லி முடித்த சுவாமி ஆனந்தமாகச் சிரித்தார். ஓரிரண்டு நாட்களில் சுவாமி எனக்கு விடை கொடுத்தனுப்பினார்.

அடுத்த சில நாட்களில் நான் வியாபார நிமித்தமாக தில்லி செல்ல நேர்ந்தது. அங்கே எதிர்பார்த்த பணம் வசூல் ஆகவில்லை. ஆனால் எதிர்பாராத பெரும் வியாபாரமும் கூடியது. மகிழ்வும், ஏமாற்றமும் மாறி மாறி மனதை நிலை தடுமாறச் செய்து கொண்டிருந்தது. ஒரு மாறுதலுக்காக தில்லியிலிருந்து ஹரித்துவார் சென்றேன்.

அங்கே மனம் போன போக்கில் கங்கை கரையோரம் நடந்து கொண்டிருந்தேன். யாரோ ஒருவர் அங்கே ஒரு சாது இருக்கின்றார், அவரைத் தரிசித்துச் செல் என்றார். என் கால்கள் என்னை அங்கே இழுத்துச் சென்றது. ஒரு சிறிய குடில், அங்கே பாயில் ஒரு சாது அமர்ந்திருந்தார்.

என்னைக் கண்டதும் சத்தமான குரலில் பார்த்தாயா, பார்த்தாயா அந்த இரு பறவைகளைப் பார்த்தாயா எனக் கூவ, அதிர்ந்துபோன நான், அசையாமல் ஒரு ஜன்னலில் அமர்ந்திருந்த அப் பறவைகளைக் கண்டேன்.

அந்த சாது என் சுவாமி போன்றே அட்டகாசமாகச் சிரிக்கலானார். அவரது விழிகள் என் சுவாமி என்னைக் கனிவோடு பார்ப்பது போலவே பார்த்தது. என் கண்களில் கங்கை பாய்ந்தாள். என்னைவிட்டு என் நாதன் ஒரு போதும் பிரிய மாட்டான் என்ற பேருண்மை எனக்குப் புரிந்துவிட்டது.

# இரவுப்பணி



சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் பெரிய தலைவாசல் கதவின் மாடத்திலிருந்த ஒரு சிறு மின்விளக்கு மிக மெல்லியதாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. தெருவிளக்கின் சில ஒளிக்கற்றைகள் சுவாமியின் வீட்டு வராந்தாவில் சிறு வெளிச்சத்தை அளித்தது. இரவு சுமார் 10 மணி இருக்கும். உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து வந்துள்ள அன்பர்களும் அமைதியாக அங்கே சுவாமியுடன் அமர்ந்திருந்தனர்.

வீட்டின் வராந்தா மாற்றிப்போட்ட ' L ' வடிவிலிருந்தது. தலைவாசல் கதவின் முன்படிக்கட்டுக்குக் கீழ்ப்புறமாக மேற்குதிசை நோக்கி சுவாமி அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் வலப்பக்கமாக என்னை அமர்த்தியிருந்தார். நான் திருவண்ணாமலையில் சுமார் ஒரு மாதகாலம் இருந்த சமயம் அது. பசியும், துக்கமும், சோகமும், தோல்வியும், வலியும் பல்வேறு திசையில் இருந்து என்னைத் துரத்திக்கொண்டிருந்த சமயம் அது. சுவாமி தனது பெருங்கருணையினால் என்னை அவரோடு

இருக்கச் சொல்லியிருந்தார்.

அந்த ஒரு மாத காலத்தில் பாதி நாட்கள் காலை 6 மணி முதல் மாலை 8 மணி வரையும், மீதிப் பாதி நாட்கள் இரவு 9 மணி முதல் அதிகாலை 6 மணி வரையும் என்னை சுவாமி தன்னோடு இருக்கச் செய்தார். அவரின் சபையில் பகல் வேளைகளில் நான் ஆஸ்தானப் பாடகனாகவும், சிறுசிறு ஏவல் செய்யும் பணியாளனாகவும் இருந்தேன். இரவில் அவர் பக்கத்தில் அமர்ந்து வெறித்து விழித்திருந்தேன்.

வெளிநாட்டு பக்தர்களோடு பகல் வேளைகளில் அதிகநேரம் செலவழிக்க இயலாததால், சத்தியத்தைக் கண்டறிய விரும்பும் மற்றும் ஆண்டவனின் நிதர்சனத்தை உணர விரும்பும் வெளிநாட்டு பக்தர்களை இரவில் பத்து மணிக்கு சுவாமி வரச் சொல்வார்.

இரவு பத்து மணி அளவில் வெளிநாட்டுப் பக்தர்கள் வர ஆரம்பிப்பார்கள். அனைத்து அன்பர்களையும் சுவாமி மௌனமாக வரவேற்று அமரச் சொல்வார்.

அங்கு இதமான ஆழ்ந்த அமைதி இருக்கும். அங்கு இருக்கும் மெல்லிய வெளிச்சத்தில், அமர்ந்திருந்தவர்களின் அடையாளம் தெரியாதிருந்தாலும், அவர்களின் தேடுதல் வேட்கையை உணர முடியும்.

சுவாமி தனது விசிறியைப் பிடித்தவாறு முகத்தில் பேரொளி வீசக் கம்பீரமாக அமர்ந்திருப்பார். அவரிடமிருந்து ஏதோ ஒன்று கனமாக, வேகமாக, வெள்ளமாக, மௌனமாக வெளியேறிப் பரவி அனைவரையும் ஆட்கொள்ளும். அச்சமயத்தில் உடல் செத்துவிட்டது. மனம் நினைவாற்றலை இழந்தது. புத்தி தடம் தெரியாமல் சென்றுவிட்டது. உணர்வு, உணர்வற்ற நிலையை அடைந்தது.

மொத்தத்தில் அங்கு நான் இல்லை. வேறு ஏதோ ஒன்று இருந்தது.

அதுவும் சுவாமி ரூபத்தில் இருந்தது. வேறு எவரது உருவமும் யார் கண்களிலும் தெரியவில்லை. யாருமே அங்கில்லை. அங்கு "அது" மட்டுமே இருந்தது. "அது" சுவாமியாக இருந்தது.

சிலர் சத்தமின்றிச் சிரித்தனர். சிலர் மௌனமாகத் தேம்பினர். சிலர் புகைத்தனர், சிலர் கற்சிலையென இருந்தனர். அங்கு 'அது" இருந்தது. 'அது' மட்டும்தான் இருந்தது. சிரிப்பும் அழுகையும் புகையும் மௌனமும் சற்றுநேரத்தில் மறைந்து விட்டன. அங்கு 'அது' மட்டும்தான் இருந்தது. அங்கு இருந்தவர்களின் அடையாளங்கள் மறைந்துவிட்டன. ஆண் பெண் பேதங்கள் செத்துவிட்டன. உணர்வுகள் மாயமாய் மறைந்து விட்டன. அங்கு 'நான்" இல்லை. 'நீ' இல்லை. 'அது' மட்டும் இருந்தது.

எதுவுமாக இல்லாத ஒன்று, எல்லாமாக இருக்கும் ஒன்று, அங்கு கனன்று கொண்டிருந்தது. நேரம் வேகமாகச் சென்றுவிட்டது. அன்பர்கள் அனைவரும் மயக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். உடலில் சோர்வில்லை, உள்ளமே அங்கில்லை. காலச்சக்கரம் நின்று போயிருந்தது.

"நண்பர்களே நாம் கலைந்து செல்வோம்" திடீரென சுவாமி மெதுவாகச் சொல்ல, அனைவரும் அங்கிருந்து மௌனமாகக் கலைந்து சென்றனர். அப்போது காலை மணி 4. அனைவரும் சென்றபின் என்னை அழைத்துக்கொண்டு உள்ளே சென்ற சுவாமி சிறிது நேரம் என்னைப் படுக்கச்சொல்லித் தானும் தன் பாயில் படுப்பார். அங்கு நித்திரா தேவி இல்லை. சுவாமியின் விரல்கள் ஏதோ எழுதிக்கொண்டே இருந்தன. காலை மணி 6. சுவாமியின் முதல் தரிசகர் கதவைத் தட்ட அடுத்த நாள் ஆரம்பித்தது. சுவாமி எனக்கு விடை கொடுத்து இரவு மீண்டும் வரச் சொன்னார்.

ஒருசில வெளிநாட்டு நண்பர்களின் தவறான நடத்தையினால் சில நாட்களில் இந்த இரவுப் பணி முடிந்தது.

# கோவில் விக்ரகங்கள்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் பற்பல சமயங்களில், திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு என்னை அழைத்துச் சென்றிருக்கின்றார். ஒவ்வொரு சமயமும் பற்பல சம்பாஷணைகளினாலும், புதுவித அனுபவங்களினாலும் ஒருவித பரவசநிலையில் என்னை மறந்து சுவாமியின் பின்னேயே சென்று மயங்கிய காலம் அது.

அப்படி ஒரு சமயத்தில் சுவாமியுடன் அண்ணாமலையார் கோவில் சென்றபோது, ஒரு கேள்வி மனதுள் எழுந்தது. இதோ கைப்பிடித்து அழைத்து வரும் இந்த தெய்வத்தைத் தரிசிக்காது மக்கள் கூட்டம் கூட்டமாக விக்ரகத்தைத் தரிசிக்க ஏன் செல்கிறார்கள்?

சுவாமி சற்றே நின்றார். என்னை உற்றுப் பார்த்தார். சற்றே பயந்தேன்.

தவறான எண்ணமோ? சுவாமி என்னை அழைத்துக் கொண்டு சுவாமி சன்னிதானத்தின் சுற்றுப்புற பிரகாரத்தில் இருந்த நீண்ட மண்டபத்தின் மேல் படியில் அமர்ந்துகொண்டார். கீழ்படியில் அவர் பாதமருகே என்னை அமர்த்திக் கொண்டார். அங்கிருந்து மலை தரிசனம் அற்புதமாகத் தெரியும். சுவாமி மலையைச் சற்று நேரம் விடாது பார்த்துக் கொண்டிருந்தார். பின்னர் என் கையை பிரியமுடன் வருடியபடி என்னையே சற்று நேரம் புன்முறுவலோடு பார்த்தபடி இருந்தார்.

"கோவில்களில் உள்ள விக்ரகங்களுக்கு அற்புதமான சக்தியுண்டு. அந்த சக்தி விக்ரகங்களுக்கு எப்படி வருகின்றது என்பதை நீ அறிவாயா?"

நான் மௌனமாக இருந்தேன். சுவாமியின் முகத்தை ஆவலுடன் பார்த்தபடி இருந்தேன்.

"பொதுவாக ஞானிகள், தீட்சண்யமான தங்கள் அருள் நோக்கினால் விக்ரஹங்களைப் பார்க்கும்போது அவ்விக்ரகங்கள் சக்தி பெறுகின்றன. என் தந்தையின் பிம்பங்கள் தான் ஞானிகள். என் தந்தையின் அருளால்தான் விக்ரகங்கள் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றன."

சுவாமி சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

"இத்தகைய கோவில்கள் தான் இந்த பிச்சைக்காரன் போன்றோருக்கு உண்மையான நிரந்தரமான வாசஸ்தலம் என்பதை நீ அறிவாயா?"

சுவாமியின் திருமுகத்தில் தெய்வீகம் ஒளி வீசியது. அந்த ஒளி வெள்ளத்தில் ஒருவித சிலிர்ப்பு ஏற்பட்டது. சுவாமி அண்ணாமலையாரின் சன்னிதி மேலிருந்த கோபுரத்தை வெகுநேரம் பார்த்தபடி இருந்தார். 1978ல் நடந்த இந்த சம்பவம் இன்று ஞாபகத்திற்கு வந்தது. பரிமாறிக் கொண்டேன்.

# காபி வந்தது வாங்கப் போனோரைக் காணோம்



1977ம் வருடம் திருவண்ணாமலையில், சுவாமி யோகி ராம்சுரத்குமார் ஜெயந்திக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் சுவாமி அமர்ந்திருந்தார். பக்தர்கள் அங்கே நெருக்கமாக அமர்ந்திருந்தார்கள். சுவாமி அங்கு அமர்ந்திருந்த அனைவருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருந்தார். அங்கே பக்தனும், பரமனும் அங்கு சந்தித்திருந்த அந்நிலையில் பரமானந்த அனுபவம் நடந்து கொண்டிருந்தது. சுவாமியின் அலையலையான பெரும் சிரிப்பு பக்தர்களிடம் பேரானந்தத்தைப் பிறப்பித்துக் கொண்டிருந்தது.

"பார்த்தசாரதி", சுவாமி திடிரென அழைத்தார்.

பெரிய கதவருகே மூலையில் அமர்ந்திருந்த நான் சுவாமியிடம் வந்தேன்.

“எங்கள் எல்லோருக்கும் உடுப்பி பிருந்தாவன் ஓட்டலில் இருந்து காபி வரட்டும். துணைக்கு கிருஷ்ணசாமியை அழைத்துச் செல்லலாம்.”

“சரி சுவாமி.”

என் பக்கத்தில் அமர்ந்திருந்த கிருஷ்ணசாமியும் எழுந்தார். நான் அங்கிருந்த அன்பர்களை எண்ணினேன். சுவாமியின் தொண்டர், நாங்கள் ஆக மொத்தம் 26 நபர்கள் இருந்தோம். சுவாமிக்கு எப்பொழுதும் இரண்டு வாங்க வேண்டும். ஆக 28 காபிகள், ஞாபகம் வைத்துக் கொண்டேன்.

இதெல்லாம் சுவாமியால் முன்பே கற்பிக்கப்பட்ட பாடம். காபி வாங்கி வருவதற்குக் கூட சுவாமி சொல்லிக் கொடுத்திருந்தார். பக்தர்களையும், என்னையும், சுவாமியின் தொண்டரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதோடு சுவாமிக்காக இரண்டு சேர்த்துக்கொள்ள வேண்டும். பிருந்தாவன் ஓட்டலுக்கு கிருஷ்ணசாமியையும் அழைத்துக்கொண்டு சென்றேன்.

ஓட்டலில் கல்லாவில் திரு.ராமச்சந்திர உபாத்தியாயா அமர்ந்திருந்தார்.

அவரும் வெகுகாலமாக சுவாமியின் அடியவர் தான்.

“சுவாமி 28 காபி வாங்கி வரச் சொன்னார்.”

நான் கம்பீரமாக ஆர்டர் செய்தேன். உபாத்தியாயா உள்ளே உள்ள காபி மாஸ்டரிடம் சொல்லி காபி தயார் பண்ணச் சொன்னார்.

நாங்கள் இருவரும் ஓட்டலுக்கு வெளியே சுவாமியின் மகிமைகளை எங்களை மறந்து காலம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தோம். வெகு நேரம் ஆயிற்று.

“சுவாமிக்கு காபி ஆர்டர் செய்து எவ்வளவு நேரம் ஆயிற்று? ஏன்

தாமதமாகிறது?"

நான் சற்று அதிகாரத் தோரணையில் கேட்டேன்.

"காபி சுவாமிக்குச் சென்று அரை மணி நேரம் ஆகிவிட்டது. நீங்கள் கவனிக்கவில்லையா?"

உபாத்தியாயா கூறியதும் எங்களுக்கு தூக்கி வாரிப்போட்டது. ஓட்டமும் நடையுமாக சுவாமியின் வீடு நோக்கிச் சென்றோம். வெளியே தாழ்வாரத்தில் ஓட்டல் பையன் அமர்ந்திருந்தான். உள்ளே சென்றோம். காபி உள்ள பெரிய தட்டு கதவருகே வைக்கப்பட்டிருந்தது. பெரும் குற்ற உணர்வுடன் சுவாமியைப் பார்த்தோம்.

"இந்த பிச்சைக்காரர் இந்த நண்பர்களுக்கு ஒரு வேலை கொடுத்தார். காபி வாங்கி வரச் சொன்னார். காபி பத்திரமாக வந்துவிட்டது. ஆனால் இந்த நண்பர்கள் நாற்பது நிமிடங்களாகியும் வரவில்லை. ஹாங். காபி வந்தது. இவர்கள் வரவில்லை. ஹூம்."

சற்று நேரம் கடந்தது. நாங்கள் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தோம்.

"சரி. காபியைப் பரிமாறலாம்." சுவாமி சொன்னார்.

இரண்டு காபி டபராவை சுவாமி முன் வைத்தேன். பின் எல்லோர் முன்பும் காபி டபராக்களை வைத்தேன். எங்கள் இருவர் இடத்திற்கு முன்பும் காபி டபராக்களை வைத்தேன். சுவாமியைப் பார்த்தேன். சுவாமி எங்களை எங்கள் இடத்தில் அமர சைகை செய்தார். எங்கள் இடத்தில் அமர்ந்தோம்.

அனைவரும் சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தோம். சுவாமி தன் முன்னே வைக்கப்பட்டிருந்த காபியை தன் கொட்டாங்கச்சியில்

ஊற்றினார். கொட்டாங்கச்சியை இரு கையாலும் எடுத்தார். எங்கள் அனைவரையும் சைகை மூலமாக காபியை அருந்தச் சொன்னார். காபி டபராவில் நான் கை வைத்தேன். காபி அப்பொழுதுதான் அடுப்பில் இருந்து இறக்கியது போல் கொதித்துக் கொண்டிருந்தது.

சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன் ஓட்டலில் தயார் செய்த காபி ஒரு மணி நேரம் தன் சூட்டை இழக்காமல்........ இது எப்படி சாத்தியம்.?! சுவாமியின் முன் சகலமும் சாத்தியமே. சுவாமி காபியை சிறிது மீதம் வைத்தார். என்னை அழைத்தார். கொட்டாங்கச்சியில் மீதம் இருந்த காபியைக் குடிக்கச் சொன்னார். குடித்தேன். பின்னர் அதைக் கழுவி சுவாமியின் முன்னே வைத்தேன். சுவாமி மறுபடியும் கூறினார்,

“இந்த பிச்சைக்காரர் காபி வாங்கி வரச்சொன்னார். காபி வந்துவிட்டது. ஆனால் காபி வாங்கப்போன நண்பர்களைக் காணோம். சரி. எல்லாம் அப்பாவின் லீலை.”

சுவாமி ஆனந்தமாகச் சிரித்தார். எங்களையும் அந்த ஆனந்தம் தொற்றிக் கொண்டது.

# ஏழ்மையைச் சுமக்கும் பக்தி



1977ம் வருடம், டிசம்பர் மாத முதல் தேதிக்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தது. டிசம்பர் மாத முதல் நாள் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் ஜெயந்தி தினம். போன வருடம் அவன் இந்நேரம் சுவாமியின் சன்னிதியில் இருந்தான்.

பெரும்பாலான நேரங்களில் அவன் சுவாமிக்குப் பக்கத்திலேயே அப்போது சுவாமியால் அமர வைக்கப்பட்டிருந்தான். சுவாமி அவன் கரத்தை தன் திருக்கையால் பிரியமுடன் வருடியபடி இருந்தார். பக்தர்கள் கூட்டம் அன்று பெருமளவு இருந்தது. அவன் சுவாமியின் அருகில். அவன் உள்ளம் ஆனந்தத்தில் ஆட்கொள்ளப்பட்டிருந்தது? வெட்கத்தில் முகம் சிவந்து இருந்தது. அவன் அந்த ஆசனத்திற்கு தகுதியுடையவனா என அவன் அறிந்திருக்கவில்லை.

இதே நாள் போன வருடம் நடந்த காட்சிகள் மனதில் நிழலாடி கண்களில் நீர் வரவழைத்தது. அவன் சுவாமியிடம் செல்ல விரும்பினான். எப்படிச் செல்வது? கையில் செப்புக்காசு கூடக் கிடையாது. திருவண்ணாமலையோ

200 கி.மீ. தூரம். பணமில்லாமல் எப்படிப் போகமுடியும்?

அவன் யோசித்தான். ஒரு வழியும் புலப்படவில்லை. அவன் பார்வை ஒரு பொருளை குத்திட்டுப் பார்த்தது. அவனுக்கு அடைக்கலமளித்திருந்த வியாபார அலுவலகத்தின் சைக்கிள்தான் அது. யாருக்கும் தெரியாமல் அதை எடுத்துச் சென்றுவிட்டால் என்ன? ஓரளவு ஓடக்கூடிய சைக்கிள்தான். 200 கி.மீ. தூரம் ஓடிவிடும். ஆனால் அது திருட்டு இல்லையா? அதெல்லாம் பிற்பாடு யோசித்துக் கொள்ளலாம். திருவண்ணாமலை சென்று வந்தபின் உடையவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டால் போயிற்று. அட இரண்டு அடி கூட வாங்கிக் கொள்ளலாமே. எப்படியும் சுவாமியைப் பார்க்க வேண்டும். அவன் முடிவெடுத்து விட்டான். மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் புறப்பட்டுவிட வேண்டியதுதான். அவன் மனது சற்றே அமைதி அடைந்தது.

அப்போது தொலை பேசி மணி ஒலித்தது. இரவு ஒன்பது மணி இருக்கும். அவன் தொலைபேசியை எடுத்தான். மறு முனையில் சுவாமியின் தீவிர பக்தர்.

“தம்பி நீங்கள் திருவண்ணாமலை செல்லப் போகிறீர்களா?”

“ஆம், போகலாமென நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.”

“நானும் குடும்பத்தோடு போகலாமென டிக்கெட் எல்லாம் முன்பதிவு செய்து வைத்துவிட்டேன். ஆனால் என்ன துரதரிஷ்டமோ தெரியவில்லை. என் மகனுக்கு அம்மை நோய் வந்துள்ளது. எனவே குடும்பத்தோடு செல்ல முடியாது. நானும் தனித்து திருவண்ணாமலை செல்ல முடியாது. நான் எப்போது திருவண்ணாமலை வந்தாலும் குடும்பத்தோடு, மனைவி மக்களோடு தான் வரவேண்டும் என சுவாமி சொல்லியிருக்கிறார். எனவே என்னிடமிருந்த ஐந்து பஸ் டிக்கெட்டில் நான்கை நண்பர்களுக்கு கொடுத்துவிட்டேன். இன்னும் ஒரு டிக்கெட் மீதம் உள்ளது. உங்களுக்குத் தேவையானால் டிக்கெட்டை உங்களுக்கு அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

அவன் ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

“அனுப்பிவையுங்கள் அண்ணா” என்றான்.

அடுத்த அரைமணி நேரத்தில் டிக்கெட் வந்து சேர்ந்தது. இரவு நேர பஸ் அது. இரவு பதினொரு மணிக்கு பஸ் நிலையம் சென்றான். இரவு பன்னிரண்டு மணிக்கு பஸ் புறப்பட்டது. காலை ஆறு மணிக்கு பஸ் திருவண்ணாமலை வந்து சேர்ந்தது.

பஸ் நிலையத்தில் இருந்து சன்னதித் தெரு வீட்டிற்கு விரைந்தான். வீட்டின் இரும்புக் கதவைத் தட்டினான். சுவாமியே உள்ளிருந்து வெளியே வந்தார். சுவாமியின் முகமலர் பெருமகிழ்ச்சியில் மலர்ந்திருந்தது. அவன் கையைப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றார். தன் அருகே பாயில் அமரவைத்தார்.

“அப்பா உன்னை எப்படியோ அழைத்து வந்துவிட்டார் பார்த்தாயா?”

சுவாமி அவன் கரத்தைப் பற்றியபடி கூறினார். சுவாமியின் கண்களில் விஷமச்சிரிப்பு சிந்தியது. அவன் கண்களில் கண்ணீர் வடிந்தது. சுவாமி அவனை ஆசுவாசப்படுத்தினார்.

அவன் இன்று ஒரு விலை உயர்ந்த ஆடம்பரக் காரில் போய்க் கொண்டிருக்கின்றான். அன்று நடந்த காட்சிகளெல்லாம் இன்று அவன் கண் முன்னே படர்ந்து விரிந்தது. நீர்த் திவலைகள் அவன் பார்வையை மறைக்கின்றது. சாலையின் ஓரமாக தன் காரை நிறுத்தினான். கண்களைத் துடைத்துக் கொண்டான். அவன் ஏதோ முணுமுணுத்தான். ஆஹா! அது சுவாமியின் நாமம்.

“யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத்குமார், ஜெய குருராயா,” எனும் நாம மந்திரம்தான்.

அவன் மீண்டும் காரைச் செலுத்திக் கொண்டு செல்கின்றான். அவனின் நாவும் மனதும் விடாது சுவாமியின் நாமம் சொல்லிக்கொண்டே இருக்கின்றது.

# மூன்று நண்பர்கள்



அந்த மூன்று நண்பர்கள் 1980களின் ஆரம்பத்தில் அடிக்கடி சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் தரிசனத்திற்காக திருவண்ணாமலை வருவார்கள். சுவாமியும் அவர்கள் விரும்பும் போதெல்லாம் வந்து சுவாமியைத் தரிசிக்க அனுமதித்தார். அந்த மூன்று நண்பர்களையும் சுவாமி தன் பேரருளால் ஆட்கொண்டிருந்தார்.

இந்த நண்பர்கள் சுவாமியுடன் தனித்திருக்கும் போது சுவாமியிடம் சுதந்திரமாக எந்தவிதமான தயக்கமுமின்றி சகல விஷயங்களைப் பற்றியும் பேசுவார்கள். சுவாமியும் தன் அண்டங்கடந்த பெரு நிலையிலிருந்து நண்பர்களின் நிலைக்கு இறங்கி சமமாக உரையாடுவார்.

அங்கே தர்க்கங்கள் நடக்கும். பொருளாதாரம் பேசப்படும். அரசியல் அலசி ஆராயப்படும். பூகோள ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். ஞானிகளின் வாழ்க்கை பரிமாறப்படும். பாட்டும், நடனமுமாக சன்னதித்தெரு வீடே அல்லோற் படும்.

சுவாமி, அம்மூவரையும் ஞானிகளைப் பற்றி விவாதம் செய்ய ஊக்குவிப்பார்.

மூவரில் ஒருவர் சுவாமி ராம்தீர்த்தரின் உபதேசங்களைக் கற்றுத் தேர்ந்தவர். அடுத்தவர் ராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் ஆச்சாரியா ரஜனீஷின் போதனைகளில் கரை கண்டவர். மற்றொருவரோ ஜெ. கிருஷ்ணமூர்த்தியின் அபிமானி. சுவாமி விவாதத்தைத் தொடங்கி வைப்பார். அது விவாதமாக மாறப் போகிறது என்று கூட அறியாமல் நண்பர்கள் பேச ஆரம்பிப்பார்கள்.

விவாதம் கொஞ்சம் கொஞ்சமாக சூடேறத் தொடங்கும். சுவாமி அங்கிருப்பதையே மறந்து விவாதம் உச்ச ஸ்தாயியை அடையும் பொழுது சுவாமி தன் அற்புதமான குரலில் நாமம் பாட ஆரம்பிப்பார். அவ்வளவுதான் விவாதம் நின்று போய்விடும். எந்த அளவிற்கு விவாதம் சர்ச்சையாக மாறியதோ அந்த அளவிற்கு நாமம் பாடும் நேரமும் மாறுபடும். சர்ச்சை சிறிய அளவில் இருந்தால் நாமம் பாடும் நேரமும் குறைவாக இருக்கும். சர்ச்சை வீரியமாக இருந்தால் நாமம் பாடும் நேரமும் கூடும். முடிவில் அங்கு மீண்டும் அமைதியும் ஆனந்தமும் நிலவும்.

இதற்கிடையே வேறு அன்பர்கள் யாரும் வந்துவிட்டால் அங்கே எல்லாமே மாறிவிடும். மூவரின் முகங்களும், அவ்வளவு பணிவாக, பக்தியோடு சுவாமியின் கீழ்படியக்கூடிய பக்தர்கள் போல் அவர்கள் அறியாமலேயே மாறிவிடுவார்கள். சுவாமி தன் விசிறியைத் தூக்கி அவர்களைக் பார்க்கும்போது நண்பர்களின் சர்வநாடிகளும் ஒடுங்கிவிடும்.

வந்த அன்பர்கள் சென்ற பின்னர் சுவாமி மறுபடியும் அவர்களின் மூக்கணாங்கயிறுகளை அவிழ்த்து விடுவார். மறுபடியும் சகஜ சம்பாஷணைகள் நடை பெறும். ஒரு முறை சுவாமி, நம் பாரதத்திரு

நாட்டின் மகிமைகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

நண்பர்களில் ஒருவர் பல மேற்கத்திய நாடுகளில் வலம் வந்தவர். சுவாமி நம் நாட்டைப் பற்றி பெருமையுடன் பேசும்போது, அந்த நண்பர் நம் நாட்டின் அரசியல் பற்றியும், அரசியல்வாதிகள் பற்றியும் அதனால் நாட்டில் ஏற்ப்பட்டிற்கும் ஏழ்மை குறித்தும், அதைப் போக்க இங்குள்ள மதங்களோ, ஆச்சாரியர்களோ அவர்களது சம்பிரதாய சடங்குகளோ ஒருவித முயற்சியும் எடுக்காததைப் பற்றியும், இங்குள்ள மூட நம்பிக்கைகள் பற்றியும் சற்று இளக்காரமாகப் பேசினார்.

சுவாமியின் முகம் மாறியது. அங்கு ஒரு அசாதாரண சூழ்நிலை காணப்பட்டது. நண்பர்கள் திகிலடைந்தனர். அந்த நண்பர் சொன்னதை ஏற்காத மற்ற, ஒரு நண்பரை சுவாமி அழைத்தார். நண்பர் சுவாமியின் அருகில் சென்றார். சுவாமி அவரைத் தன்னருகே அமர்த்திக் கொண்டார்.

நண்பரின் முதுகை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தார். அவரின் தண்டுவடப் பகுதியை கீழிருந்து மேலாக தட்டியபடி இருந்தார்.

ஒவ்வொரு பத்து நொடிக்கும் ஒரு முறை நண்பரின் காதில், “எல்லாம் சரியாகிவிடும் நண்பா,” என மெதுவாகக் கூறுவார்.

இந்த லீலை கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடந்தது.

அப்பொழுது வெளியில் இருந்து சில அன்பர்கள் வந்தார்கள். சுவாமி இந்த நண்பர்களை ஓய்வெடுக்க வீட்டின் பின்புறம் செல்லச் சொன்னார்.

நண்பர்கள் வீட்டின் பின்புறம் நிழலில் அமர்ந்தார்கள். சுவாமியின் அருகில் அமர்ந்த பக்தரை மற்ற இருவரும் ஒருவித எதிர்பார்ப்புடன் பார்த்தவாறு இருந்தனர். அந்த நண்பரோ ஏதோ பாடிக்கொண்டு சுவாரஸ்யமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். மற்ற இரு நண்பர்களின் பொறுமையும் போய்விட்டது. அவர்கள் கடுங்கோபத்தில்

கேட்டனர்.

“ஏய், ஒழுங்கா சொல்லிவிடு. சுவாமி உனக்கு மட்டும் காதுக்குள் உபதேசம் பண்ணினாரே? அது என்னவென்று சொல்லிவிடு. இல்லையேல்........”

நண்பர்கள் தாக்க முற்படுவதுபோல் கையை உயர்த்தினார்கள்.

“ஐயோ, ஒன்றுமே சுவாமி சொல்லவில்லையே. எல்லாம் சரியாகிவிடும் என்றுதானே மாற்றி மாற்றிச் சொன்னார். வேறு எதுவுமே சொல்லவில்லையே.”

அந்த நண்பர் அழாத குறையாக மாறி மாறிச் சொன்னதன் பின்னரே மற்ற இருவரும் நம்பினார்கள். சுவாமிக்கு பிடிக்காத விஷயத்தைப் பேசியதால்தான் தங்களை இவ்விதம் பொறாமையில் சுவாமி பரிதவிக்கவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

சுவாமி நண்பர்களை அழைத்தார். நண்பர்கள் கூடத்தில் சுவாமியிடம் சென்றனர். அந்த இரண்டு நண்பர்களும் சுவாமியின் பாதம் பணிந்தனர். அவர்கள் கண்களில் நீர் கோர்த்தது. சுவாமி ஆனந்தமாக அலையலையாய் சிரித்தவண்ணம் இருந்தார்.

பின்னர் நமது நாட்டின் மேன்மையை மீண்டும் விளக்கி அருளினார். நம் தேசத்தின் உயிர்நாடி ஞானிகள்தான். அவர்கள்தான் இந்த பிரபஞ்சத்தின் ஒழுங்கை நிலைப்படுத்துவதாகக் கூறினார். இந்த பிரபஞ்ச மாயை கடந்த, பேருண்மை அறிந்த, யோகிகள் வாழும் நாடும், நம் பாரதமே என்றுரைத்தார். சத்தியத்தின் வித்தே நம் பாரத பூமி எனக் கூறினார். நாம் காணும் குறைகள் மிகச் சிறிதே என்றும், நாம் இவ்வுலகிற்கு வழங்கும் தெய்வீகத்தினாலேயே இவ்வுலகம் இயங்குவதாகவும் கூறினார். நண்பர்கள் பிரமித்து சுவாமியை கை கூப்பி நமஸ்கரித்தனர்.

# கலியுகமா? கடவுள் யுகமா?



1980களின் ஆரம்பத்தில் ஒரு நாள் காலையில் சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் பக்தர்கள் பலர் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

சுவாமி யோகி ராம்சுரத்குமார் தன் விசிறியை உயரமாகப் பிடித்தவாறு பக்தர்கள் ஒவ்வொருவரையும் தீர்க்கமாகப் பார்த்தபடி இருந்தார். சுவாமியின் பார்வை அனைவரது மனதிலும் வெகுதூரம் உட்புகுந்து பேரமைதியை நிரப்பிக்கொண்டு இருந்தது. அங்கு ஒருவித அமானுஷ்யமான தெய்வாம்சம் திடமாக எல்லோராலும் உணரும்படி இருந்தது.

சிறிது நேரத்தில் சுவாமி விசிறியை கீழே வைத்துவிட்டு அற்புதமாக ஆனந்தமாகச் சிரித்தார்.

அங்கிருந்த சுவாமியின் பலநாள் பக்தரான முதியவர் ஒருவர்

சுவாமியிடம் ஏதோ சொல்ல நினைப்பது போல் தோன்றியது.

சுவாமி தன் இருக்கையிலிருந்து எழுந்தார். மெதுவாகத் தன் தலைப்பாகையைச் சரி செய்து கொண்டார். விசிறியைக் கையில் ஏந்திக் கொண்டார். அந்த முதிய பக்தரின் அருகில் சென்றார். அவர் எதிரே அமர்ந்து கொண்டார்.

“அப்பா ஏதோ சொல்ல நினைக்கிறீர்களா?”

சுவாமி கனிவோடு அந்த முதிய பக்தரிடம் கேட்டார்.

“சுவாமி, இந்த உலக நடைமுறை வாழ்க்கை என்னை மிகவும் பயமுறுத்துகிறது. சத்தியமும், தர்மமும், தன்னலமற்ற சேவை மனப்பான்மையும், பண்பான அன்பும், அனைவரையும் மதிக்கும் மரபும், காரிய சிரத்தையும், கண்ணியமும், நாணயமும் என்னால் காணமுடியவில்லை சுவாமி. ஒரு வேளை என்னிடம்தான் குறைபாடு இருக்கிறதா அன்றி சான்றோர் பலரும் சொல்லுவது போல் இது கலி யுகத்தின் விளைவா? என்னால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை, பொறுத்துக் கொள்ளவும் முடியவில்லை சுவாமி. இது கலியின் வேலையென்றால் கலிகாலம் எப்பொழுது முடியும் சுவாமி?”

அந்த முதிய பக்தர் தழுதழுத்த குரலில் வேதனையோடு வினவினார்.

சுவாமி பக்தரின் கரத்தை தன் கையில் ஏந்திக் கொண்டார். பக்தரைப் பரிவோடு பார்த்தவாறு அவர் கரத்தை மென்மையாக வருடிக்கொடுத்தார். பக்தர் சற்றே சாந்தமடைந்தார். சுவாமியை ஒருவித எதிர்பார்ப்புடன் பார்த்தபடி இருந்தார்.

“ஆம், அனைவரும் சொல்கிறார்கள் இது கலிகாலம் என்று. ஆனால் இந்த பிச்சைக்காரன் கண்களில் என் தந்தை மட்டுமே புலப்படுகிறார்.

எங்கும் அந்தக் கலி என் கண்களில் தெரியவில்லை. இது உண்மையில் கடவுளின் காலம், கலியின் காலமல்ல. கலியுகம் போய்விட்டது. இது கடவுளின்யுகம்."

(Yea, they say it's Kaliyuga. But this beggar sees everywhere His Father alone. Nowhere this beggar can see kali. So, it's Godyuga not Kaliyuga. Kali has gone. Now God alone exists.")

சுவாமி இவ்விதம் கூறிவிட்டு எழுந்து நின்று அங்கு இருந்த அனைவரையும் ஒருவித பரவசத்தோடு பார்த்துப் பேரானந்தச் சிரிப்பொன்றை அலையலையாகச் சிந்தினார்.

அங்கிருந்த அனைத்து பக்தருக்கும் அந்தப் பேரானந்தம் தொற்றிக் கொண்டது.

அங்கு கலியைக் காணோம். எம்பெருமான் சுவாமி மட்டுமே இருந்தார்.

# சிவகாசி நாடார் சத்திரத்தில்



திருவண்ணாமலை திருவூடல் தெருவில் அமைந்திருந்த சிவகாசி நாடார் சத்திரத்தின் முதல் தளத்தில் இருந்த அந்த 7ம் எண் அறையில், பல உன்னதமான நிகழ்வுகள் நடந்தேறின. அப்போதிருந்த அந்த பழமையான கட்டிடத்தில், எளிமையாக அமைந்திருந்த அந்த அறையில் ஒருவித தெய்வீகம் கவிந்தே இருக்கும்.

நம் சுவாமி யோகி ராம்சுரத்குமார் எவரையேனும், தனித்துச் சந்தித்து அருள்பாலிக்க நினைத்தால், அவர்களை சிவகாசி நாடார் சத்திரத்தில்தான் தங்கச் சொல்வார். சுவாமியும், அவ்வடியவர்களுடன் அங்கேயே தங்கி விடுவார்கள்.

1980களின் ஆரம்பத்தில், நாங்கள் நண்பர்கள் மூவர் எங்கள் குடும்பத்துடன் சுவாமியை தரிசிக்க திருவண்ணாமலை சென்றிருந்தோம். சுவாமி விரும்பியிருந்தபடியே, சிவகாசி நாடார் சத்திரத்தில் நான்கு அறைகள்

எடுத்து தங்கியிருந்தோம். பிரயாண களைப்பைப் போக்க சற்றே ஓய்வு எடுத்து விட்டு சுவாமியிடம் செல்லலாம் என நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே சுவாமி பேரானந்தத்துடன், சிரித்தபடி அங்கே வந்தார்கள்.

நாங்கள், நண்பர்கள் மூவரும் சத்திரத்தின் தெரு வாசற்படியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். சிரிப்பொலி கேட்டு நிமிர்ந்து பார்த்தால் சுவாமி ஜெகஜோதியாக நின்று கொண்டிருக்கின்றார்கள். அங்கே தெருவிலேயே மூவரும் சுவாமியை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தோம். சுவாமியின் ஆனந்தம் எங்களையும் பற்றிக் கொண்டது. எங்களின் பிரயாணக் களைப்பு முற்றிலும் சுவாமியைக் கண்டதும் அகன்று விட்டது.

சுவாமியை மேலே 7ம் எண் அறைக்கு அழைத்துச் சென்றோம். அங்கே இருந்த இரண்டு கட்டில்களில் ஒன்றை எடுத்து வெளியில் இருந்த கூடத்தில் வைத்தோம். மற்றொரு கட்டிலின் மேலிருந்த மெத்தையையும் தலைகாணியையும் வெளியில் வைக்கப்பட்ட கட்டிலின் மேல் வைத்தோம். அறையுள் இருந்த கட்டிலின் மேல் நாங்கள் கொண்டு சென்றிருந்த பாயை விரித்தோம். மற்றொரு கட்டில் இருந்த இடத்தில் மற்றொரு பாயை விரித்தோம்.

சுவாமி அறைக்குள் நுழைந்தார். ஒரு வடமொழிப் பாடலைப் பாடியபடி கட்டிலின் மேல் அமர்ந்தார். எங்களை அவரெதிரில் விரிக்கப்பட்ட பாயில் அமருமாறு சைகை செய்தார், அமர்ந்தோம். பெண்களும், குழந்தைகளும் அறைக்குள் வந்து சுவாமியை நமஸ்கரித்தார்கள். அங்கு மீதமிருந்த இடங்களில் அமர்ந்தார்கள்.

சுவாமி அந்த வடமொழிப் பாடலை மீண்டும் பாடினார். பாடி முடித்துவிட்டு எங்கள் மீது அவரின் அருட்கடாட்சத்தைச் செலுத்தினார். நாங்கள் மெய்மறந்து சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தோம். சுவாமி அப்பாடலின் அர்த்தத்தை விளக்கினார்.

“நீ அறிவாயா, என் கிருஷ்ணன். நந்தனைப் பார்த்து அப்பா என்றும், பலராமனை அண்ணா என்றும் அழைக்கக் கற்றுக் கொண்டான்.”

யசோதை தன் தோழியிடம் கிருஷ்ணனின் மழலையை மகிழ்ந்து பரிமாறிக் கொண்டதாக அமைந்த பாடல் அது.

சுமார் ஒரு வார காலம், சுவாமி எங்களுடனையே தங்கி இருந்தார். தன் குரு பப்பா ராமதாசரைப் பற்றிக் கூறினார். இந்தியத் திருநாட்டில் வாழ்ந்த ஞானிகளின் உபதேசங்களையும், அவர்கள் மனித சமுதாயத்திற்கு ஆற்றிய மாபெரும் சேவைகளையும் பரவசத்தோடுச் சொன்னார். ஞானிகள் வாழ்ந்த இடங்கள், அவர்களின் வாழ்க்கைச் சரிதம், என ஞான உரை வீச்சாக சுவாமியின் சம்பாஷணை இருந்தது.

எங்களை சுவாமி பிசைந்து பிசைந்து எதுவாகவோ உருவாக்குவது போலிருந்தது. சில நாட்கள் இந்த சொர்க்கபுரியில் மிதந்து கொண்டிருந்தோம்.

ஒரு நாள் மதியநேரம், ஆகாரத்துக்குப் பின், பெண்களும், குழந்தைகளும் ஓய்வெடுக்கச் சென்ற பின், சுவாமி தனது சாதனா காலத்து சஞ்சாரங்களைப் பற்றியும், அப்போது அவரடைந்த துன்பங்களையும் கூறத் தொடங்கினார்.

“இந்தப் பிச்சைக்காரன் பித்தனைப் போல் சுற்றிக் கொண்டிருந்தபோது, ஒரு நாள் மிகுந்த பசி எடுத்தது. மூன்று நாட்களாக சாப்பிட எதுவுமே ‘அப்பா’ கொடுக்கவில்லை.”

அன்று பசியின் வேகம் அதிகமிருந்தது. மயக்கமாயிருந்தது. புகைவண்டியில் இந்தப் பிச்சைக்காரன் சென்று கொண்டிருந்தான். ஒரு ஸ்டேஷனில் புகைவண்டி நின்றது. இந்தப் பிச்சைக்காரன் வண்டியிலிருந்து இறங்கி ஊரை நோக்கி நடந்தான்.

நேரம் இரவு எட்டு மணி இருக்கும். எங்கேயும் ஒரே இருட்டு, வீடுகள் எதுவும் புலப்படவில்லை. சிறிது தூரம் நடந்தபின்பு ஒரு

மச்சு வீடு கண்களுக்குப் புலப்பட்டது. வீட்டின் முன் அமைதியாக இந்தப் பிச்சைக்காரன் நின்றான். ஒரு முரட்டு நாய் அங்குள்ள தூணில் கட்டப்பட்டிருந்தது. அது இந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து ஆக்ரோஷமாகக் குரைத்தது.

நாயின் சத்தத்தைக் கேட்ட ஒரு பெண்மணி உள்ளேயிருந்து வெளியே வந்து இந்தப் பிச்சைக்காரனைப் பார்த்தார். இந்தப் பிச்சைக்காரனின் தோற்றம் அவரை பயமுறுத்திவிட்டது போலும். வீட்டினுள்ளிருந்த எவரையோ அழைத்தார். அந்த ஆண்மகன் வெளியே வந்தார்.

"என்ன வேண்டும் உனக்கு?"

"ஐயா சிறிது ஆகாரம் கொடுங்கள்."

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது. உடனே இங்கிருந்து சென்றுவிடு". ஆண்மகன் கத்தினார்.

இந்தப்பிச்சைக்காரன் மறுபடியும் பிச்சை வேண்டினான். அந்த ஆள் கடுங்கோபம் கொண்டு மீண்டும் கத்தினான்.

"போய்விடு, போய்விடு" இந்தப்பிச்சைக்காரன் அமைதியாக நின்றான். அந்த ஆள் அந்த முரட்டு நாயை அவிழ்த்துவிட்டான். அது பாய்ந்து வந்து தாக்கியது. பிச்சை எடுக்கச் சென்ற பிச்சைக்காரனிடமிருந்து அந்த நாய் சிறிதளவு மாமிசத்தை எடுத்துக்கொண்டது."

ஒரு நாள் இரவு, நண்பர்கள் முருகேசன், சிவசங்கரனுடன், நானும் சுவாமியுடன் அமர்ந்திருந்தபோது சுவாமி தான் பிச்சை எடுத்த அனுபவத்தை விவரித்தார். பப்பா ராமதாசர் பிச்சை எடுத்து பிரம்மனைத் தேடிய பேரின்ப வாழ்க்கையைத் தனது நூல்களான "In Quest Of God" மற்றும் "In The Vision Of God" வாயிலாக விவரித்ததைப் பற்றிப் பேச்சு வரும்போது சுவாமி மேற்கண்ட தனது அனுபவத்தை எங்களோடு பகிர்ந்துகொண்டார். பின்பு திருவண்ணாமலையில் தான் பட்ட துயர அனுபவத்தையும் யோகி சொல்லலானார்.

“அந்த நண்பன் ஒரு டெய்லர். ஹிந்தி நன்கு பேசக்கூடியவன். இந்தப் பிச்சைக்காரன் அந்த நண்பன் கடை வழியாக எப்போதெல்லாம் போவானோ, அப்போதெல்லாம் அந்த டெய்லர் அழைத்து மிகவும் பிரியமாக டீ கொடுத்து உபசரிப்பான்.

ஒரு நாள் இந்தப் பிச்சைக்காரன் அவ்வழியே செல்லும் போது ஒரு முரட்டுக் கும்பல் அந்த டெய்லரின் கடைவாயிலில் நின்று கொண்டிருந்தது. இந்தப் பிச்சைக்காரன் அந்தக் கடையருகே சென்றான். டெய்லர் நண்பனோ எதுவும் பேசவில்லை. அந்த முரட்டுக் கும்பலைச் சேர்ந்த ஒருவன் மிகவும் இளக்காரமாக இந்தப் பிச்சைக்காரனைக் கேலி செய்து நகைத்தான். இந்தப்பிச்சைக்காரன் அமைதியாக அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

இவனிடமிருந்து எந்த எதிர்ப்பும், தற்காப்பும் இல்லாததைக் கண்டு வெகுண்ட அந்த கும்பல், மேலும் நெருங்கி இந்தப் பிச்சைக்காரனின் உடைமைகளைப் பறிக்கத் தொடங்கியது. ஒரு துணிப்பையும், அதனுள் இருந்த ஒரு சில துணிகளும், புஸ்தகங்களும் தூக்கி எறியப்பட்டன. இந்தப் பிச்சைக்காரன் அமைதியாக இருந்தான். அந்த அமைதியைத் தாங்க இயலாத அவர்கள் அவனைத் தாக்கினார்கள். ரத்தக்காயம் ஏற்படும் அளவுக்குத் தாக்கினார்கள். “இனி ஹிந்தியில் பேசினால் உன் உயிரையே எடுத்துவிடுவோம்”

என்று மிரட்டினார்கள். இரத்தம் சொட்டச் சொட்ட இந்தப் பிச்சைக்காரன் அமைதியாக அங்கேயே நின்றுகொண்டிருந்தேன்.

“டெய்லர் நண்பனோ அந்த முரட்டுக் கும்பலுக்குப் பயந்து எதுவுமே பேசவில்லை. உதவிக்கும் வரவில்லை. அடித்தும், திட்டியும், மிரட்டியும் சோர்ந்துபோன அக்கும்பல் அங்கிருந்து சென்றுவிட்டது. இந்தப் பிச்சைக்காரனும் அங்கிருந்து சென்றுவிட்டான்.”

இதைக் கேட்டதும் எங்கள் மனதில் சொல்லொணா வேதனையும், கோபமும் பொங்கின. அப்போது நாங்கள் எங்கள் குடும்பத்தாரோடு

சிவகாசி நாடார் சத்திரத்தில் மாடி ரூம்களில் தங்கியிருந்தோம். சுவாமி எங்களுடன் சிவகாசி நாடார் சத்திரத்திலேயே தங்கியிருந்தார்.

சுவாமி தன்னுடைய துயர அனுபவங்களை எங்களோடு பகிர்ந்துகொண்டபோது எங்கள் வீட்டுப் பெண்கள் அனைவரும் வேறு வேறு ரூம்களில் தங்களின் குழந்தைகளோடு இருந்தனர். இங்கு சுவாமி பேசியது எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. சுவாமி அமைதியாக அமர்ந்திருந்தார். அந்த அறையில் ஒரு வலி மிகுந்த கனத்த அமைதி நிலவியது. குழந்தைகள் உறங்கியதும் எங்கள் வீட்டுப் பெண்கள் அங்கு வந்து சுவாமியை நஸ்கரித்துவிட்டு அமர்ந்தனர்.

“ராஜகுமாரி, ஒரு பாட்டு பாடலாம் அம்மா.”

ராஜகுமாரி பாட ஆரம்பித்தார், சுவாமி அங்கிருந்த கட்டிலில் படுத்துவிட்டார். சிறிது நேரத்தில் நன்கு உறங்கிவிட்டதை அவரின் மெல்லிய குறட்டை ஒலி தெரியப்படுத்தியது. ராஜகுமாரி வரிசையாகப் பல பாடல்களைப் பாடிக்கொண்டே இருந்தார். திடீரென ராஜகுமாரி,

‘தந்தை தாயிருந்தால் உலகில் உமக்கிந்த தாழ்வெல்லாம் வருமோ ஐயா’

என்ற கீர்த்தனையைப் பாட ஆரம்பித்தார். அந்தப் பாடலில் சிவபெருமான் வாங்கிய அடிகளையும் வசைகளையும் பற்றி கவிஞர் எழுதியிருந்தார். பாடல் முடிந்ததும், சுவாமி மெதுவாக கண்விழித்து, எழுந்தார்.

“முருகேசா, இந்தப் பாடலின் அர்த்தம் என்ன?”

“இது உங்கள் கதைதான் ஸ்வாமி”

என முருகேசன் தழுதழுத்த குரலில் சொன்னார்.

“ஓஹோ” என்றவாறே சுவாமி மீண்டும் படுத்துக்கொண்டார்.

# குரு பூர்ணிமா



1980களின் ஆரம்பத்தில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களைத் தரிசிக்க திருவண்ணாமலை சென்றிருந்தேன். திருவண்ணாமலை ஊரில் ஏனோ அன்று பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. நேராக சன்னதித் தெரு வீட்டிற்கு சென்றேன்.

வீட்டின் தாழ்வார ஓரத்தில் காலணிகள் மலையாகக் குவிந்திருந்தன. உள்ளே பக்தர்கள் கூட்டம் அன்று மிக அதிகமென நினைத்துக்கொண்டேன். சுவாமியின் உதவியாளர் என்னைக் கண்டதும் வீட்டின் உள்ளே சென்று சுவாமியிடம் எனது வருகையைத் தெரிவித்தார். சற்று நேரத்தில் அவர் வெளியே வந்து சுவாமி அழைப்பதாகக் கூறினார். இரும்புக் கதவைத் திறந்து என்னை உள்ளே அனுமதித்தார். உள்ளே சென்றேன். சுவாமியை நமஸ்கரித்தேன். சுவாமி என் தலையில் சிறிது நேரம் தன் கரங்களை

வைத்திருந்தார்.

“போதும் நண்பா, அமரலாம்.”

நான் வழக்கமாக அமரும் இடத்தில் வேறொரு அன்பர் அமர்ந்திருந்தார். நான் தயங்கி எங்கே அமருவது என பார்த்தவாறு நின்றேன்.

“இங்கே அமரலாம் பார்த்தசாரதி.”

சுவாமி என் கரம் பற்றித் தன் அருகே அமர்த்திக் கொண்டார்.

எனக்குச் சற்று வெட்கமாக இருந்தது. சுவாமியின் அருகில் சுவாமிக்கு இடப்புறமாக அமர்ந்தேன். சுவாமி என் கரத்தைத் தன் கரத்திலேயே வைத்திருந்தார்.

“இன்று குரு பூர்ணிமா என்று தெரிந்து வந்தாயா?” சுவாமி வினவினார்.

நான் திருதிருவென விழித்தேன். அன்று பௌர்ணமி என்றே எனக்குத் தெரியாது. அதிலும் குரு பூர்ணிமா என்றால்... அதைப்பற்றி, அதன் தாத்பரியம் பற்றி எதுவுமே எனக்குத் தெரியாது. நான் மௌனமாக இருந்தேன்.

“இன்று குரு பூர்ணிமா. இதை வியாசபூர்ணிமா என்றும் சொல்வார்கள். ஆஷாட மாதத்தில் வரும் பௌணர்மியைத்தான் குரு பூர்ணிமா என்று சொல்வார்கள். வியாச பகவானிலிருந்து இந்த குரு பாரம்பரியம் தொடங்குகிறது. குருவை அடைந்த எல்லா பாக்கியவான்களும் தங்களது குருவைத் தரிசித்து அருள் பெறவும், குரு அருளிய மந்திரத்தை விடாது ஸ்மரிக்கவும் வேண்டிய நாள் இன்று. குருவின் அனுக்கிரஹம் இன்றைய தினத்தில் குரு தரிசனம் செய்வோர் அனைவருக்கும் கிட்டும். அங்ஙனம் குரு தரிசனம் செய்ய முடியாதோர் குரு மந்திரத்தை விடாது நினைவில் ஸ்மரணித்தாலும் குரு அருள் பரிபூரணமாகக் கிட்டும்

என்பது ஐதீகம்."

பௌர்ணமியில் என்ன வேறுபாடு? குருவின் அருள்மழை பொழியாத நாள் எது? என் புத்தி என் மனதில் நினைத்தது.

"ஆம் நண்பா. இந்த பௌர்ணமி விசேஷமானதுதான். என் தந்தையை அடைய என் தந்தையே குருவாக வருகிறார். இந்த குருவின் பாரம்பரியம் வாழையடி வாழையென குருவின் அருளால் தழைத்தோங்குகின்றது. இந்த நாளில் குரு ஸ்மரணையில் இருக்க வேண்டும் நண்பா."

சுவாமி மெதுவாகப் பாட ஆரம்பித்தார்.

"யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா."

அங்கிருந்த பக்தர்கள் அனைவரும் சுவாமியைத் தொடர்ந்து பாடினோம்.

ஆம், அன்று சுவாமியின் தோற்றம், சுவாமியின் சொற்கள், சுவாமியின் பேரானந்தக் கூத்து அனைத்துமே, அனைவருக்கும் அபூர்வமான தெய்வீக உணர்வைக் கொடுத்தது.

# மின்விசிறி



அது ஒரு கடுமையான கோடை காலம். நான், முருகேசன், சிவசங்கர் ஆகியோர் சுவாமியைக் காண திருவண்ணாமலை வந்திருந்தோம். நாங்கள் எப்பொழுது வந்தாலும் சுவாமி எங்களுடன் மட்டுமே இருந்து அருள் பாலிப்பார். சில நேரங்களில் சுவாமி எங்களுடன் சிவகாசி நாடார் சத்திரத்தில் தங்கியிருப்பார். சிற்சில சமயங்களில் நாங்கள் சுவாமியுடன் சன்னதித் தெரு வீட்டில் தங்கியிருப்போம். அந்தத் தடவை நாங்கள் சுவாமியிடம் வந்தபோது, எங்களை சன்னதித் தெரு வீட்டில் தங்க வைத்தார்.

சூரிய பகவானின் தகிப்பால் சன்னதித் தெரு வீட்டின் கூடம் உஷ்ணமேறி கொதிகலன் போன்று இருந்தது. சுவாமி எங்களிடம் பல்வேறு ஞானிகளைப் பற்றியும், அவர்களது உபதேசங்கள் பற்றியும் விஸ்த்தாரமாகக் கூறினார். இராமாயணம், மகாபாரதம், உபநிஷத்துக்களின் சாரங்களையும் சுவாமி விவரித்தார். முடிவில் குருபக்தியின் தாத்பரியத்தையும், முக்கியத்துவத்தையும், குருவை சரணாகதி அடைவதைப் பற்றியும், குரு சாட்சாத்காரம்தான், தெய்வ சாட்சாத்காரம் எனவும் அருள்பொங்க எங்களுக்குப் புரியும்படி பகன்றார்.

சுவாமி எதேச்சையாகச் சொன்ன சத்தியத்தின் குளிர்ச்சி எங்களைக் கோடையின் உக்கிரத்தை மறக்கச் செய்தது. யாரோ அன்பர் சுவாமிக்கு சமர்ப்பித்த ஆகாரத்தை சுவாமி எங்களோடு பகிர்ந்து கொண்டார். இரவிலும் சில அன்பர்கள் கொண்டுவந்த உணவு சுவாமிக்கும் எங்களுக்கும் போதுமானதாக இருந்தது.

இரவு பத்து மணிக்கு மேல் எங்களை படுத்துக் கொள்ளச் சொன்னார். தானும், இரண்டு தூண்களுக்கு இடையே விரிக்கப்பட்ட பாயில் படுத்து உறங்கலானார். ஒரு மெல்லிய போர்வையைப் போர்த்திக்கொண்டு சுவாமி தூங்கினார். மெலிதான ஒரு இசை போல அவரது குறட்டை ஒலி ஒரே சீராக வந்துகொண்டிருந்தது. எங்களது நிலைமையோ வித்தியாசமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. எங்கள் தேகங்களில் இருந்து வியர்வை ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் ஜன்னல்களே கிடையாது. கூடத்தின் மேலே உள்ள மாடத்தின் கதவுகளும் அடைக்கப் பட்டிருந்தன. பின் கதவையும், முன் கதவையும் சுவாமி பூட்டிவிட்டார். சுவாமி படுத்திருந்த இடத்துக்கு மேலே ஒரு மின்விசிறி ஓடலாமா வேண்டாமா எனத் தயங்கித் தயங்கி மெதுவாகச் சுற்றியது. அதிலிருந்து காற்றே வரவில்லை.

நாங்கள் எங்கள் சட்டைகளைக் கழற்றி, பனியங்களையும் கழற்றி அவற்றால் விசிறிக்கொண்டோம். அப்போதும் எங்களது வியர்வை நிற்கவில்லை. உடம்பில் உள்ள ஈரமெல்லாம் வியர்வையாக வெளியேறிக் கொண்டே இருந்தது. நான் சுவாமிக்கு எதிரில் வலப்பக்கத்தில் விரித்திருந்த சாக்கு விரிப்பின் மீதும், முருகேசன் சுவாமிக்கு நேர் எதிரில் விரிக்கப்பட்டிருந்த பாயின் மீதும், சிவசங்கரன் பெண்கள் உட்காரும் பகுதியில் விரிக்கப்பட்டிருந்த பாயின் மீதும் படுத்திருந்தோம்.

சிறிது நேரத்தில் படுக்கவும் முடியாமல் உட்கார்ந்து இருக்கவும் முடியாமல் வியர்வையாலும், உஷ்ணத்தினாலும் பரிதவித்துவிட்டோம். முருகேசன் மேலே சுழன்று கொண்டிருந்த மின்விசிறியைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே இருந்தார். அந்த விசிறி சிறிது வேகமாகச் சுற்றக்கூடாதா

என ஆதங்கப்பட்டுக்கொண்டார். வாழ்நாட்கள் எல்லாம் குளிர்சாதன வசதி உள்ள வீட்டிலும், அலுவலகத்திலும் கழித்த அவருக்கு அந்தச் சூழ்நிலை அக்னிக்குண்டத்தில் உட்கார வைத்ததுபோல் இருந்தது.

அந்த மின் விசிறியின் திருகுவிசை சிவசங்கரன் படுத்திருந்த இடத்துக்கு எதிரில் இருந்தது. முருகேசன் கெஞ்சும் குரலில் மெதுவாக சிவசங்கரனிடம் அந்த மின்விசிறியின் சுழற்சியை சற்றே அதிகரிக்கச் சொன்னார்.

சிவசங்கரன் தயங்கினார். சுவாமியின் உத்தரவு இல்லாமல் மின் விசிறியின் சுழற்சியை எப்படி அதிகப்படுத்துவது?. ஆனாலும், முருகேசனின் நிலை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. மீண்டும் முருகேசன் கெஞ்சினார். சிவசங்கரன் இளகினார். சற்றே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தன் இருக்கையிலிருந்து எழுந்து, பூனைபோல் சத்தமில்லாமல் நடந்து சென்று மின்விசிறியின் சுழற்சியை ஒரு எண் அதிகப்படுத்தினார். நடந்து கொண்டிருந்த மின்விசிறி சற்றே ஓட எத்தனித்தபோது, சுவாமி அக்கணமே எழுந்து உட்கார்ந்துகொண்டு,

"சிவசங்கரா, சிவசங்கரா, இந்தப் பிச்சைக்காரனுக்கு மிகவும் குளிர்கிறது. நீ அந்த மின்விசிறியை நிறுத்திவிடு."

ஒரு கனத்த கம்பளியினால் தன்னை மூடிக்கொண்டு சுவாமி மீண்டும் படுத்துவிட்டார்.

வேறு வழியின்றி சிவசங்கரனும் மின்விசிறியை நிறுத்த, முருகேசன் பலஹீனமாகவும், பரிதாபமாகவும் அசட்டுச் சிரிப்பு சிரித்தார். மூவரும் எப்படியோ அந்த இரவுப் பொழுதைக் கழித்துவிட்டோம். அடுத்த மூன்று நாட்களும் சுவாமியோடுதான் கழித்தோம். என்ன மாயமோ தெரியாது, அந்த இரவுக்குப் பின் அந்த உஷ்ணமும் வியர்வையும் எங்களைப் பாதிக்கவும் இல்லை, பயமுறுத்தவும் இல்லை.

என்றாலும், அந்த மின்விசிறி அதன்பின்பு சுவாமியின் பொருட்டு இயக்கவே இல்லை.

# பக்தப்பிரியனின் சொரூபம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் திருவண்ணாமலை சன்னதித் தெரு வீட்டில் பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

“நண்பா, இந்த பிச்சைக்காரன், (தன் உச்சந்தலையையும் பாதத்தையும் தொட்டுக் காட்டி) இங்கிருந்து இது வரைதான் இருக்கின்றான் என்றா நினைக்கின்றாய்? இல்லை நண்பா இல்லை. இந்த பிச்சைக்காரன் எல்லா இடத்திலும் நீக்கமற இருக்கின்றான். இந்த சரீரத்திலும் என் தந்தையே இருக்கின்றார். இந்த நாமமும் (யோகி ராம்சுரத்குமார்) இந்த பிச்சைக்காரன் நாமம் அல்ல. இது என் தந்தையின் நாமம். என் தந்தையின் புத்தம் புதிய நாமம். இந்த நாமத்தை நினைவு கூர்வோர்க்கு என் தந்தை எப்பொழுதும் உறுதுணையாக இருக்கின்றார். எனவே

எனது தந்தையை எப்பொழுதும் நினைத்திருப்பாய். என் தந்தையை நினைத்தலே வாழ்வாகும். என் தந்தையை மறந்தால் அதுதான் சாவாகும். நாம் அனைவரும் வாழ்ந்திடுவோம் நண்பா, தந்தையை நினைத்தே வாழ்ந்திடுவோம்."

சுவாமி பாட ஆரம்பித்தார்.

"யோகி ராமசுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா."

அங்கே, ஏதோ இனந்தெரியாத தெய்வீகம், அங்கு அமர்ந்திருந்த அனைவரையும் அரவணைத்துக் கொண்டது. நாங்கள் எங்களை மறந்து சுவாமியைத் தொடர்ந்து நாமம் பாடினோம்.

இன்னொரு சமயம், இரவு சுமார் 1 மணி இருக்கும் நாங்கள் எங்கள் வீட்டுப் பெண்களோடு காலையிலிருந்தே சுவாமியுடன் இருந்தோம். காலையில் புன்னை மரத்தின் நிழலில், மாலை தேரடி மண்டபத்தில், இரவு பாத்திரக் கடை வாசலில் எனச் சுவாமியைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தோம்.

ஆண்கள் இயற்கை உபாதையைப் போக்கிக் கொள்ள நிறைய சந்தர்ப்பங்கள் இருந்தன. பெண்களுக்குச் சந்தர்ப்பங்களே கிடைக்காமல் திணறிக் கொண்டிருந்தனர்.

இரவு 1 மணிக்கு சுவாமி அனைவரையும் பக்கத்திலிருந்த ஒரு பக்தரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டின் தலைவாசல் கதவை சுவாமி தட்டினார். சற்று நேரத்தில் ஒரு மத்திய வயது பக்தர் கதவைத் திறந்தார். சுவாமியைப் பார்த்ததும் பேராச்சரியம் அடைந்தார். தன் மனைவியை அழைத்தார். இருவரும் சுவாமியை நமஸ்கரித்தனர். சுவாமி அவ்வம்மையாரிடம் பெண்களை கழிவறைக்கு அழைத்துச் செல்லச் சொன்னார். பெண்கள் இயற்கை உபாதையைக் கழித்து

வந்தனர். கண்ணீர் மல்க சுவாமியை நமஸ்கரித்தனர்


அனைவரும் கூடத்தில் அமர்ந்தோம். அந்த வீட்டின் பெண்மணி அனைவருக்கும் சூடான பால் வழங்கினார். பருகினோம்.

சுவாமி எழுந்து நின்றார். நாங்களும் எழ முயன்றோம். சுவாமி எங்களைத் தடுத்து அமர வைத்தார். கூடத்தில் அங்குமிங்கும் சற்று நடந்தார். சுவாமி திடீரென பொன்னிற தேஜஸில் ஜொலித்தார்.

“நண்பா இவன் தன்னைப் பிச்சைக்காரன் என்று சொல்லிக் கொண்டாலும், இவன் பிச்சை எடுக்கும்படியான பொருள் இவ்வுலகிலும், அவ்வுலகிலும், எவ்வுலகிலும் கிடையாது. இவன் தன்னைப் பாவி, அழுக்கடைந்தவன் எனச் சொல்லிக் கொண்டாலும் இவனைப் போன்று பவித்திரமானவனையும், பரிசுத்தமானவனையும் நீ எவ்வுலகிலும் பார்க்க முடியாது. இந்த தேகம் என் தந்தையின் தேகம். இந்த நாமம் என் தந்தையின் நாமம். இந்த தேகத்தை நினைவு கூர்ந்து, நாமத்தை மனமுருகச் சொன்னால் போதும், என் தந்தை உன்னைத் தேடி வருவார். உன் கவலைகள் தீரும். உன் தாபங்கள் போகும். மாயை விலகும். என் தந்தையின் அருட்சுடரில் நீ ஜோதியாவாய். எனவே இந்த பிச்சைக்காரனை நினைவிலிருத்தி, இந்த பிச்சைக்காரனின் நாமத்தைச் சிந்திப்பாயாக. என் தந்தை உன்னை ஆட்கொள்வார் நண்பா”,

சுவாமியின் அருட்கூற்று அங்கிருந்த அனைவரையும் ஆட்கொண்டது. அந்தக் கூடமே அனைவரின் கண்களும் கூசுமளவிற்கு மஹா பிரகாசம் அடைந்தது. சுவாமியின் அந்த பேரொளிப் பிரகாசத்தில் நாங்கள் யாவரும் கண் மூடி மௌனித்திருந்தோம். தெய்வ தரிசனம் நிகழ்ந்தது.

# தெய்வத்தின் புதிய நாமம் பொக்கிஷம்



“யோகி ராம்சுரத்குமார்” இந்த புதிய நாமம் என் தந்தையால் அருளப்பட்டது. என் தந்தை தன் பரிபூர்ண சக்தியை இந்த நாமத்தில் நிறைத்திருக்கிறார். இந்த நாமத்தில் திளைப்பவர்க்கு என் தந்தை என்றும் உறுதுணையாக இருப்பதாக உறுதி அளித்திருக்கிறார்.”

சுவாமியின் அருட்கூற்று அனைவரையும் ஆட்கொண்டது.

சுவாமி யோகி ராம்சுரத்குமார் 1970களில் தனது உதவியாளர்களை விடாது இந்த திவ்ய நாமத்தைப் பாட வைத்தார். பக்தர்களும், இந்த பரவசம் அளிக்கும் நாம ஜெபத்தில் கலந்து கொண்டனர்.

சுவாமியிடம் வந்த அடியவர்க்கெல்லாம் இம்மந்திரம் அவர்கள் செவிகள் வழியாக இதயத்திற்குள் சென்று நிலைபெற சுவாமி அருள்பாலித்தார்.

பக்தர்கள் பரவசத்துடன் இந்த நாமத்தை எப்போதும் ஸ்மரணம் செய்தார்கள். நாமஜபம் தங்களுக்குள் அவர்கள் செய்த சமயம் அவர்கள் அடைந்த பேரானந்தம், அவர்கள் அடைந்த குருஞானம், அவர்கள் உலகின்பால் சொரிந்த பேரன்பு, உலகில் வாழ்ந்த உன்னத ஞானிகளின் பரிச்சயம், பேதமற்ற நிலை, இயல்பான ஆழ்நிலை மன ஒருமைப்பாடு, அப்பப்பா பேரானந்தம் தான்.

பக்தர்களிடம் இத்தகைய வெளிப்பாட்டினைக் கண்டு சுவாமி மகிழ்ந்து ஆடிய பேரானந்தக் கூத்து, அதைப் பார்த்து, மகிழ்ந்து உலகமே காணாத சொர்க்கத்தில் பக்தர்கள் உலவிக் கொண்டிருந்தனர்.

சுவாமியிடம் வரும் சமயம் சுவாமி சொன்னால் நாமஜபம். இல்லையெனில் சுவாமி வழங்கும் ஞானாமிருதத்தைப் பருகியபடி ஆழ்ந்த அமைதி.

சுவாமியின் முன்னால் சுவாமி ஆணையிட்டால் உரக்க நாமஜபம். சப்தம், உற்சாகத்தில் சற்று கூடிவிட்டால் சுவாமியின் கரம், கீழ் நோக்கி அசைத்து குரலோசையை மட்டுப்படுத்தி பக்தி லயத்தில் இனிமையாக நாமத்தை பரிணமிக்கச் செய்யும். அவ்வாறு சுவாமி செய்யும்போது நம் விழிகள் தானாக மூடிக்கொள்ளும். தியானம் வெகு இயல்பாக நம்மை ஆட்கொள்ளும். நாமமும், நாதனும் மட்டுமே அங்கிருப்பர். “நான்” அங்கிருக்காது.

இந்த பரமானந்த போதையில் நாள் கணக்காக இரவு பகல் பாராது, சுவாமி ஊட்டிய இந்த அமிர்த நாமம், பக்தர்கள் உள்ளத்தின் ஆழத்தில் பொக்கிஷமாக இருந்தது. பக்தர்கள் நாமத்தை இயக்கவில்லை, இசைக்கவில்லை. ஆனால் அந்த புனித நாமம் பக்தர்களை இயக்கி இசைத்து ஆட்கொண்டது.

பல ஆண்டுகள் கழித்து ஒரு நாள் சுவாமி சன்னதித் தெரு வீட்டின் தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தார். சுவாமியின் முன்பும், அருகிலும் நிறைய அன்பர்கள், நாமத்தை விடாது உரத்த குரலில் முழங்கிக் கொண்டிருந்தனர்.

சுவாமியின் விழிகள் மூடியவாறு இருந்தது. சத்தமாகப் பாடிய பக்தையை சுவாமி அவ்வப்போது பார்த்துவிட்டு மீண்டும் கண்களை மூடிக் கொள்வார். இதனால் உற்சாகமடைந்த பக்தை நாமத்தை இன்னும் உரத்த குரலில் சொல்லலானார்.

“நீங்கள் நாமத்தை இரைந்து இரைந்து சொல்லச் சொல்ல இந்த பிச்சைக்காரன் தலை வெடித்தே விடும்போல் உள்ளது.”

சுவாமி விழிகள் கோபத்தில் குமுறியது.

பக்தை குரலின் ஸ்தாயியைச் சுருக்கினார்.

“என் தந்தை பப்பா ராம்தாஸ் கூறுவார், நாமம் விலை மதிக்க முடியாத பொக்கிஷம். அதை நம் இதயத்தின் ஆழத்தில் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். நாமம்தான் நம்மை இயக்க வேண்டும். நாமத்தை நாம் தவறாகப் பயன்படுத்தலாகாது. நம்மை பக்திமான்களாக நிரூபிப்பதற்காக நாமம் கூற வேண்டிய அவசியம் இல்லை. பக்தி உள்ளே வளரட்டும். பக்தி வெளியே காட்டும் காட்சிப் பொருளல்ல. ராமனின் தாசனாக அகங்காரம் அற்று வாழ்வோமே.”

பப்பா கூறியதை சுவாமி நினைவுகூர்ந்தார்.

# நாம மஹிமை



சுவாமி யோகி ராம்சுரத்குமார் வேத பண்டிதர்கள் எவரேனும் வந்தால் மிகுந்த சிரத்தையுடன் அவர்களை உபசரித்து மகிழ்வார். அவர்களை வேத மந்திரங்களை உச்சாடணம் செய்யச் சொல்லிக் கேட்டு ஆனந்திப்பார்.

சன்னதித் தெருவில் சுவாமியின் வீட்டிற்கு நான்காவது வீட்டில் ஒரு வேதிய பிராமணர் வாழ்ந்து வந்தார். அவருக்கு சுவாமியின் மீது அலாதி பக்தி. சுவாமி அவரை அவ்வப்போது அழைத்து வரச் சொல்வார். சுவாமி கூப்பிட்டதாகச் சொன்னவுடன், அவர் உடனே புறப்பட்டு சுவாமியிடம் வந்து விடுவார்.

சுவாமி அந்த வேதிய பிராமணரிடம் முறைப்படி குசலம் விசாரிப்பார்.

“சாமி இந்த பிச்சைக்காரருக்கு ரிக் வேதம் கொஞ்சம் சொல்லுங்களேன்."

சுவாமி வேதியரிடம் ஆர்வமுடன் விண்ணப்பிப்பார். வேதியர் சற்றும் தயக்கமின்றி கணீரென ரிக் வேத முழக்கம் செய்வார். சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அங்கே வேத கோஷம் முழங்கும். அச்சமயம் அங்கே அமானுஷ்யமான அமைதி நிலவும். தெய்வீகம் கமழும். வேதப் பிரயோகம் முடிந்ததும், சுவாமி பால் வாங்கி வரச்சொல்லி அவருக்குத் தன் கையாலேயே கொடுத்து அருந்தச் சொல்வார். பின்னர் அங்கிருக்கும் பழங்கள் எல்லாவற்றையும் அந்த வேதியப் பிராமணருக்கு பிரசாதமாக வழங்கி அனுப்பி வைப்பார்.

"நம் சனாதன வேதங்களால்தான், நம் புண்ணிய பூமியில் தர்மம் இன்னும் எஞ்சியிருக்கின்றது. இந்த வேதங்களை ஸ்மரணம் செய்யும் பண்டிதர்களை நாம் போஷிக்க வேண்டும். மனித தர்மங்களை ரக்ஷிக்கும் வேத வேதாந்தங்கள், சாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் அனைத்தையும் என் தந்தை இதுவரை பாதுகாத்து நமக்கு அளித்துள்ளார். வருங்காலத்திலும் என் தந்தை இவற்றைப் பாதுகாத்து நம் பூமியில் தர்மம் என்றும் செழிக்கச் செய்வார்."

சுவாமி ஒருவித உத்வேகத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார். அங்கே சன்னதித் தெரு வீட்டில் நாங்கள் நண்பர்கள் மூவரும் அமர்ந்திருந்தோம். சுவாமி கையில் விசிறி ஏந்தி எங்களை ஒவ்வொருவராக தீர்க்கமாகப் பார்த்து அருள்பாலித்துக் கொண்டிருந்தார்.

"சுவாமி நாங்கள் சமஸ்கிருதம் அறியோம். இனி அதைக் கற்பதற்கும் வாய்ப்பில்லை. எங்கள் கதி என்ன சுவாமி,"

நண்பர், சுவாமியிடம் ஆதங்கத்துடன் கேட்டார்.

சுவாமி ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். கேள்வி கேட்ட அன்பரைப் பரிவுடன் பார்த்தார். சற்று நேரம் மௌனத்தில் கரைந்தது.

சிகரெட்டை அணைத்து விட்டு மற்றொன்றை எடுத்து சுவாமி பற்ற வைத்தார். ஆழ்ந்து புகை பிடித்தார். புன்னகை அவர் வதனத்தில் தவழ்ந்தது.

"நண்பா, வேதங்களையும், சாஸ்திரங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும் கற்றுத் தேர்வதற்கு 32 ஆண்டுகள் ஆகும் எனச் சொல்வார்கள். இவற்றை எல்லாம் அறிந்த பின்னே ஒருவர் கற்றுக் கொள்வது என்னதெரியுமா? என் தந்தையின் நாமத்தின் மஹிமையைத்தான். எனவே நாம் நம் தந்தையின் நாமத்தை எப்பொழுதும் ஸ்மரணம் செய்து கொண்டிருப்போம். என் தந்தையோடு இரண்டற கலந்திட நமக்குத் தந்தையின் நாமம் போதும் நண்பா."

சுவாமி தன் இனிமையான குரலில் பாட ஆரம்பித்தார்.

"யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா."

நாங்கள் அனைவரும் சுவாமியைத் தொடர்ந்து பாடினோம். அங்கே தெய்வ சாந்நித்யம் கமழ்ந்தது.

# விடுதலை



1970களில் சுவாமி என்னை பப்பா ராமதாசரின் 'கடவுளை தேடி' (In Quest of God) என்ற புத்தகத்தைப் படிக்கச் சொன்னார். இந்நூலில், பப்பா ராமதாசர் உலக வாழ்வைத் துறந்து இறைவனைத் தேடி, சுதந்திரமாக திரிந்ததைச் சுவைபட எழுதியிருப்பார். இந்த நூலைப் படித்ததும் சுதந்திர வேகம் என்னைப் பற்றிக் கொண்டது. தொடர்ந்து பப்பா எழுதிய 'கடவுளின் பார்வையில்' (In The Vision of God) என்ற புத்தகமும், சுவாமி ராம்தீர்த்தரின் 'இன் உட்ஸ் ஆ.்ப் காட் ரியலைசேஷன்' (In Woods of God Realisation) என்ற புத்தகத்தின் ஆறு தொகுப்பும், ஜே.கிருஷ்ணமூர்த்தியின் பல நூல்களும் எனக்கு சுவாமியினால் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் சுவாமி சொன்னதும், தெய்வாதீனமாக அந்தப் புத்தகம் என் கைக்கு வந்து சேரும். புத்தகத்தை விலை கொடுத்து வாங்க முடியாத அளவு கஷ்ட ஜீவனம் நடத்திய காலம் அது. ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கப் படிக்க அதன் அர்த்தங்கள், உண்மைகள் எனது அறிவுக்குத் தெளிவாகப் புரிந்தன. நிலையற்ற வாழ்வின் மாயவிளையாட்டும், அதில் சிக்கித் தவிக்கும் மனம், புத்தி,

உணர்வால் பின்னிய தேகத்தின் வேதனையும், சுகமும், இதமும், மரணமும் அப்பட்டமாகத் தெரிந்தன. படிக்கும் பொழுது அதோ அந்தத் தெய்வீகம் இதோ இங்கே இருக்கின்றதே! என்னுள் இருக்கின்றதே! என் குருவான சுவாமியின் திருவடியிலிருந்து பொங்கி வழிந்து என்னுள்ளே பாய்ந்து நிறைகிறதே என்றெல்லாம் தோன்றும்.

நான் அப்படியே கரைந்து போய் அண்ட வெளியில் காணாமல் போய்விட்டதைப் போல் தோன்றும். வாழ்வில் துக்கம், சோர்வு, நோய், மரணம், ஆசைகள் என எதைப் பார்த்தாலும் சிரிப்பு பொங்கிவரும். ஆனால், சற்றுநேரத்தில் இவையெல்லாம் மறைந்துவிடும். நான் மீண்டும் நானாகவே இருப்பேன். உஷ்ணமான இயலாமைப் பெருமூச்சு உள்ளிருந்து அடிக்கடி வெளியேறும். சீக்கிரமே சோர்ந்து போய்விடுவேன்.

இது என்ன நிலைமை என்பது புரியவில்லை. அனைத்து ஞானிகளும், யோகிகளும் சொன்ன உபதேசச்சாரங்கள் யாவும் சத்தியம் என்று தெரிந்து கொள்ளத்தான் முடிந்ததே தவிர்த்து, அதை நடைமுறை வாழ்வில் கடைப்பிடித்து தேகாபிமானத்தை விடுத்து தெய்வத்தில் கரைய சக்தி இல்லாமல் தவித்தேன்.

சுவாமி என்னிடம் ஒருநாளும் "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டதில்லை. எனது தேவைகள் அதிகமிருந்த காலத்தில் அதுவும் அடிப்படையான பசியைப் போக்கவும், கடன் உபாதையிலிருந்து மீளவும் நான் பரிதவித்துக் கொண்டிருந்த காலத்திலும், உனக்கு என்ன வேண்டும் என சுவாமி கேட்டதில்லை. மாறாக, ஞானிகளின் உபதேசங்களைப் போதித்தார். வாழ்வின் நிலையாமையை விவரித்தார். பிறப்பு இறப்பற்ற ஆத்மாவின் பற்றற்ற நிலையைப் பரவசத்தோடு பகிர்ந்து கொண்டார். சுவாமியின் அருள்பார்வையினால் எனக்கோ எதிலும் தீவிரமான நாட்டம் இல்லாமல் போனது. எனினும், அந்த பரிபூரண நிலையை அடைய முடியாமல் பரிதவித்தேன்.

எனக்கு பயம் இருந்தது. நான், எனது பந்தம், எனது உடமைகள், இவை யாவும் பாதுகாக்கப்பட வேண்டும். இவை பறிபோகக் கூடாது என்ற பயம் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது. அதிலிருந்து மீள சுவாமியைத் தியானிப்பதே வழி எனத் தீர்மானித்தேன். செய்த வேலை பிடிக்கவில்லை. வீட்டிலும் வெளியிலும் புலம்பிக் கொண்டிருந்தேன். நான் எங்காவது சென்றுவிட வேண்டும், தனிமையில் தியானம் செய்து தெய்வத்தை அடைய வேண்டும் என எப்பொழுதும் மனதில் சங்கல்பித்துக் கொண்டே இருப்பேன். ஆனால் நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை.

இந்நிலையில் ஒரு நாள், 1980களின் மத்தியில் சுவாமியிடம் சென்றேன். சுவாமி என்னை அன்போடு அழைத்துச் சென்று அருகே அமர்த்திக்கொண்டார். என் கரத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார். என்னை நோக்குவதும் சிரிப்பதுமாக நெடுநேரம் கழிந்தது. நான் அவர் திருமுகத்தை பார்க்கும்போது, சுவாமி தனது முகத்தை வெவ்வேறு திசைகளில் மாற்றி மாற்றித் திருப்பிக்கொண்டும், நான் அவர் திருவடிகளைச் சேவித்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னையே கண் இமைக்காது பார்ப்பதையும் நான் உணர்ந்தேன்.

“பார்த்தசாரதி, நீ தனிமையில் சில காலம் இருக்க விரும்புகிறாயா?” திடீரென சுவாமி என்னை நோக்கி வினவினார். நான் பதிலுரைக்கவில்லை.

“நீ விரும்பினால் இப்பொழுதே இங்கிருந்து போகலாம். எங்கே செல்ல விரும்புகிறாய்? இமயத்துக்குச் சென்று என் தந்தையைத் தியானிக்க நினைக்கிறாயா இல்லை வேறெங்கும் சென்று தனிமையில் இருக்க விரும்புகிறாயா?”

சுவாமி நேரிடையாக இப்படிக் கேட்டதும் எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. கையில் போதிய பணமும் அப்போது இல்லை.

“உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால் இந்தப் பிச்சைக்காரன்

உனக்குப் பணம் தருவான். நீ விரும்பும் இடத்துக்கு இப்போதே இங்கிருந்து செல்லலாம்."

சுவாமி என் மனதை படித்துப் பார்த்துவிட்டார். என் மனதில் பயம் தொற்றிக் கொண்டது. ஏன் சுவாமி என்னை தொலைதூரத்துக்கு அனுப்பத் துடிக்கிறார்?

"இமயமலை தூரமென்றால் நீ ஆனந்தாஸ்ரமம் சென்று அங்கே தனிமையில் இருக்கலாம். இல்லையென்றால் இதோ அண்ணாமலையிலேயே மலைமீது சில காலம் நீ தனியாக இருக்கலாம்."

மீண்டும் சுவாமி என்னை தனிமையில் இருத்த தீர்மானித்து விட்டார் போல் தெரிந்தது.

"சுவாமி, திருவண்ணாமலையில் என்றால் எனக்குத் தினமும் தங்களைத் தரிசிக்க அவா ஏற்படும். அது தங்களின் காரியங்களுக்கு இடையூறாகப் போய்விடும்....." நான் தனிமையில் இருப்பதைத் தவிர்ப்பதற்காக உளற ஆரம்பித்தேன்.

"நீ திருவண்ணாமலையில் இருந்தால் தினமும் இந்தப் பிச்சைக்காரனைப் பார்க்கலாம். இந்தப் பிச்சைக்காரன் வேறெதற்கு இங்கு இருக்கிறான்?"

சுவாமி விடுவதாக இல்லை. நான் சற்றுநேரம் மௌனமாக இருந்தேன்.

"இல்லை சுவாமி, நான் ஊருக்கே சென்றுவிடுகிறேன்."

எனது உண்மை சொரூபம் எனக்கே வெட்கமளித்தது.

சுவாமி கருணையோடு என்னைப் பார்த்து புன்னகைத்தார். தனிமையில் நான் செல்வது குறித்த பேச்சு அத்துடன் நின்று போய்விட்டது. சற்றுநேரத்தில் சுவாமி எனக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

ஊர் திரும்பினேன். நான் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறேன். "மகனே செல்" என்று சுவாமியே சொல்லியும் நான் ஏன் போகவில்லை?

நான் அவ்வளவு பயந்த இயல்பு உடையவனா? நான் அவ்வளவு பலஹீனமானவனா? என்னால் நம்பவே முடியவில்லை. என்னில் இருந்து எனக்கு விடுதலை கிடைத்தாலன்றி என்னால் ஆத்ம சாதனைகளில் ஈடுபட முடியாதா? என்னில் இருந்து எனக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும்? தெரியவில்லை.

சில நாட்கள் கடந்தன. இந்தச் சம்பவம் மனதில் நெருடியபடியே இருந்தது. திடீரென ஒரு நாள் திருவண்ணாமலை புறப்பட்டேன். அதிகாலை நேரம். நான் மலையில் ஏறினேன். அங்கே குகை நமச்சிவாயர் குகையில் தங்கினேன். அங்கிருந்த ஒரு சாது தனது எளிய உணவை என்னோடு பகிர்ந்துகொண்டார். உணவு உட்கொள்ளும்போது சற்றுநேரம் உரையாடல் நடக்கும். மற்ற நேரங்களில் நான் குகையின் வெளியே ஒரு மண்டபத்தின் முற்றத்திலும் சாது குகையின் உள்ளேயும் பொழுதைக் கழிப்போம். சிந்தனையற்று, நித்திரையில்லாது, புத்துணர்ச்சியோடு மூன்று இரவுகளும், மூன்று பகல் பொழுதும் அங்கே கழித்தேன்.

நான்காம் நாள் அதிகாலை சுவாமியைப் பார்ப்பதற்காக நான் மலையிலிருந்து கீழிறங்கி வந்தேன். சன்னதித் தெரு வீட்டின் வாயிற்படியில் சுவாமி அமர்ந்திருந்தார். நான் மலைப்பக்கத்திலிருந்து வருவதை சுவாமி கவனித்தார். நான் சுவாமியின் பாதங்கள் பணிந்தேன். சுவாமி என்னைக் கரம் பிடித்து, வீட்டினுள் அழைத்துச் சென்று அமர வைத்தார்.

“எங்கிருந்து வருகிறாய்?” சுவாமி கேட்டார்.

“மலையிலிருந்து சுவாமி” பதிலளித்தேன்.

“மலையில் எங்கு தங்கினாய்?”

“குகை நமச்சிவாயர் குகையில் சுவாமி.”

சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார். சிகரெட்டை எடுத்து

நிதானமாகப் பற்ற வைத்துக் கொண்டார். ஆழமாகப் புகையை உள்ளிழுத்தார்.

"இந்தப் பிச்சைக்காரன் அந்தக் குகையில் ஆறுமாத காலம் தங்கியிருந்தான்" சுவாமி மெதுவாகச் சொல்லி புன்னகைத்தார். எல்லாமே முன்னேற்பாடுதான் என்று புரிந்துகொண்டேன்.

"அங்கே நீ எப்படி உணர்ந்தாய்?" சுவாமி கேட்டார்.

"என்னால் எதையும் உணரமுடியவில்லை சுவாமி. அசைவற்ற ஒருவித அமைதியோடு இருந்தேன் சுவாமி."

சுவாமி வெகுநேரம் அமைதியாக புகைப்பிடித்தபடி என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தார். நான் அவரது திருவடிகளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"பார்த்தசாரதி, அப்பா நமக்குச் சில வேலைகள் கொடுத்திருக்கிறார். அவற்றைச் செய்ய வேண்டும் பார்த்தசாரதி. மற்றதெல்லாம் அப்பா பார்த்துக்கொள்வார்."

சுவாமி சொன்னது இதயத்தில் பதிந்தது. என் வேகம் குறைந்தது.

"மாதம் மூன்று நாட்கள் தனியாக எங்கேயாவது இருப்போம். அப்பாவை நினைத்துக் கொண்டிருப்போம் பார்த்தசாரதி."

"சரி சுவாமி" என்று தலையாட்டினேன்.

சற்றுநேரத்தில் சுவாமி சில பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து என்னை அனுப்பி வைத்தார். இன்று நான் சுவாமியின் அருளால் திருவண்ணாமலையில் வாழ்ந்து வருகிறேன்.

# காய்ச்சாத பசும்பால்



முந்தின நாள் இரவு சுவாமியை தரிசிக்க திருவண்ணாமலை வந்தேன். சுவாமி அவரோடு என்னை சன்னதித் தெரு வீட்டில் இருத்திக்கொண்டார். இரவெல்லாம் அவரது திருநாமத்தை திரும்பத் திரும்ப பாடவைத்தார். அதிகாலை சுமார் நான்கு மணிக்கு என்னைப் படுத்துக் கொள்ளச் சொன்னார். படுத்ததும் கண்ணயர்ந்துவிட்டேன்.

"பார்த்தசாரதி", சுவாமி கூப்பிடுவது போல் தெரிந்தது.

கண் திறந்து பார்த்தேன். சுவாமி என் முன்னால் அமர்ந்திருந்தார். வெளிக்கதவை யாரோ மெதுவாகத் தட்டுவது போல் கேட்டது. நான் எழுந்து சென்று பெரிய மரக்கதவைத் திறந்து யாரெனப் பார்த்தேன். அவர் தினசரி காலையில் முதல் நபராக சுவாமியை தரிசிக்கும் 'கிருஷ்ணமூர்த்தி' எனத் தெரிந்து கொண்டு சுவாமிக்கு அறிவித்தேன்.

சுவாமி எழுந்தார். தன் பக்கத்திலிருந்த ஒரு அலுமினியப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு என்னையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தார். மரக்கதவின் வெளிப்படிக்கட்டில் சுவாமி அமர்ந்து கொண்டார். நான் கதவைத் திறந்தேன். கிருஷ்ணமூர்த்தி உள்ளே வந்து சுவாமியை வணங்கினார். சுவாமி அவரைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே இருந்தார். வாசலில் சைக்கிள் மணி அடிக்கும் ஒலி கேட்டது. பால்காரர் நின்றுகொண்டிருந்தார்.

“கிருஷ்ணமூர்த்தி, நீங்கள் செல்லலாம்” சுவாமி உத்தரவிட்டார்.

கிருஷ்ணமூர்த்தி சென்றவுடன் பால்காரர் உள்ளே வந்தார்.

“பார்த்தசாரதி, உனக்குக் காய்ச்சாத பசும்பால் குடித்து பழக்கம் உண்டா?” சுவாமி வினவினார்.

“இதுவரை நான் காய்ச்சாத பால் அருந்தியதில்லை சுவாமி.” நான் பதிலுரைத்தேன்.

“இன்று குடிக்கலாம், பார்த்தசாரதி.” சரியெனத் தலையசைத்தேன்.

“ஒரு லிட்டர் பால் ஊத்தலாம் தம்பி.”

சுவாமி பால்காரரிடம் சொல்ல, அவர் அந்த அலுமினியப் பாத்திரத்தில் ஒரு லிட்டர் பசும்பாலை ஊற்றினார். சுவாமி தன் ஜிப்பா பையினுள் கைவிட்டு, காசை எடுத்துக் கொடுக்க, பால்காரர் வாங்க மறுத்தார். சுவாமி அவரை வற்புறுத்தி பணத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்தார். பணத்தைப் பெற்றுக்கொண்டு பால்காரர் சென்றுவிட்டார். சுவாமி என்னை உள்ளே அழைத்து வந்தார்.

சன்னதித் தெரு வீட்டின் பின்புறம் செல்லும் பாதையில் இருந்த தண்ணீர்ப் பானையின் மூடியின் மேலிருந்த ஒரு அலுமினிய டம்ளரை

சுவாமி எடுத்துவரச் சொன்னார். நான் எடுத்து வந்தேன். டம்ளர் நிரம்ப பாலை ஊற்றினார். பின் சொம்பின் மீதிருந்த சிரட்டையின் விளிம்பு வரை பாலை ஊற்றினார். டம்ளரை எடுத்து எனக்குக் கொடுத்து குடிக்கச் சொன்னார். சுவாமியும் சிரட்டையில் உள்ள பாலை எடுத்து அருந்தலானார். பாலின் சுவை அற்புதமாக இருந்தது. மீதம் உள்ள பாலையும் நானும் சுவாமியும் பகிர்ந்துகொண்டோம்.

சுமார் ஒரு வார காலம் சுவாமியோடு அப்போது தங்கியிருந்தேன். தினசரி காலை சுமார் அரை லிட்டர் காய்ச்சாத பசும்பாலை சுவாமி எனக்கு வாங்கிக் கொடுத்தார். சத்தான அப்பாலின் சுவை குடிக்கக் குடிக்கத் திகட்டாமல் அவ்வளவு இனிமையாக இருந்தது. ஒரு வாரம் கழித்து ஊர் திரும்பிவிட்டேன்.

அச்சமயத்தில் சுவாமியின் அறிவுறுத்தலின் பேரில் மாதம் மூன்று நாட்கள் மனித நடமாட்டம் அதிகமில்லாத வனப்பகுதியில் தனிமையாகக் கழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். சாப்பாட்டுக்கு மட்டும் பக்கத்தில் உள்ள ஏதாவது கிராமத்துக்குச் சென்று உணவு சேகரித்துப் பசியாறி வந்தேன். சுவாமி எனக்குக் காய்ச்சாத பசும்பாலைக் கொடுத்து பசியாற்றிய அனுபவத்தில், சாப்பாட்டுப் பிரச்சனை ஓய்ந்துவிட்டது என நினைத்தேன்.

மூன்று நாட்கள் தனிமையில் கழிப்பதற்காக ஒரு வனப்பகுதிக்குள் சென்றேன். பக்கத்துக் கிராமத்தில் உள்ள ஒருவரிடம் சிறிது பணம் கொடுத்து, தினசரி அரை லிட்டர் பாலை நான் இருக்கும் அந்த பாழடைந்த கோவிலுக்குக் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னேன்.

முதல் நாள் காலையில் அக்குடியானவர் அரை லிட்டர் பசும்பால் எடுத்து வந்தார். அதை நான் ஆர்வத்துடன் குடித்தேன். சுவாமியோடு சேர்ந்து பசும்பால் குடித்தது நினைவுக்கு வந்து மிகவும் உற்சாகமூட்டியது.

ஆனால் ஒரு சில மணி நேரங்களிலேயே எனது வயிற்றில் கடுமையான உபாதை ஏற்பட்டது. சிறிது நேரத்தில் வயிற்றுப்போக்கு. மாறி மாறி பல தடவை வயிற்றுப் போக்கு. மிகவும் தளர்ந்துவிட்டேன். இரண்டு நாள் கழித்து தட்டுத்தடுமாறி ஊர் சென்று, வைத்தியரைப் பார்த்து சிகிச்சை எடுத்துக் கொண்டேன்.

இது நடந்து சில நாட்களில் நான் மீண்டும் சுவாமியைச் சந்திக்கச் சென்றேன்.

“நீ நலமாக இருக்கிறாயா?”

என்னைப் பார்த்தவுடன் சுவாமி கேட்ட முதல் கேள்வி அதுதான்.

“இப்போது நான் நலமாக இருக்கிறேன் சுவாமி.”


நான் பதில் சொல்லிவிட்டு, சில நாட்கள் முன்பு காய்ச்சாத பசும்பாலினால் ஏற்பட்ட அவதியை விவரித்தேன்.

சுவாமி வாய்விட்டு பலமாகச் சிரித்தார்.

“பார்த்தசாரதி, இங்கே இந்தப் பிச்சைக்காரன் கையினால் நீ எதையும் சாப்பிடலாம். அப்பா உனக்கு எந்தத் தீங்கும் வராமல் பார்த்துக்கொள்வார். ஆனால், வெளியே நீ சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.”

நான் சுவாமியின் திருவடிகளையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

# சுவாமியின் சரீர விந்தைகள்



இன்று நம் நாதன் யோகி ராம்சுரத்குமாரின் சரீர விந்தைகளை நான் கண்ட சில சம்பவங்கள் வழியாக அறிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

சன்னதித் தெரு வீடு. சுவாமி முன் பல பக்தர்கள் அமர்ந்திருந்தார்கள். சுவாமி என்னை அழைத்தார். ஒரு மூலிகை எண்ணெய் பாட்டிலை என் கையில் கொடுத்தார்.

“நண்பா, இதோ இந்த காலில் உள்ள தழும்பில் இந்த எண்ணெய்யைத் தடவி விடுவாயாக.”

சுவாமி கொடுத்த பாட்டிலை வாங்கிக்கொண்டு சுவாமியின் இடது திருவடி அருகே சென்று அமர்ந்து கொண்டேன். சுவாமியின் திருவடியை என் மடி மீது வைத்துக்கொண்டேன். சுமார் 200 மில்லி

இருக்கும் எண்ணெய் பாட்டிலைத் திறந்து, சிறிது எண்ணெய்யை அந்த சின்ன தழும்பில் விட்டு தேய்க்க ஆரம்பித்தேன். சற்று நேரத்திலேயே எண்ணெய்பட்ட சுவடே தெரியாமல் அந்தத் தழும்பு மீண்டும் காய்ந்து விட்டது.

மறபடியும் சற்று அதிகமாக எண்ணெய்யை அந்தத் தழும்பில் விட்டு தேய்க்கலானேன். ஒரு சில நிமிடங்களில் தழும்பில் எண்ணெய் பட்டதற்கான தடயமே இல்லாது, தழும்பு மறுபடியும் காய்ந்து போய்விட்டது.

நான் சுவாமியை திகைத்துப்போய் பார்க்க, சுவாமி குறும்பாக என்னைப் பார்த்து சிரித்தார். நான் மறுபடியும் எண்ணெய் தடவ, தழும்பு அதை உள்வாங்கிக்கொண்டு மறுபடியும் எண்ணெய் தடவ, இப்படியே அந்த 200 மில்லி எண்ணெய்யையும் அந்த சிறிய காயம்பட்ட தழும்பு உள்வாங்கிக் கொண்டது. நான் ஆச்சரியத்துடன் சுவாமியைப் பார்க்க சுவாமி ஆனந்தமாக அலையலையாய் சிரித்தபடி இருந்தார்.

“இது எப்படி சுவாமி?” நான் கேட்டேன்.

“அதெல்லாம் கேட்காதே நண்பா.”

சுவாமி மீண்டும் சிரித்தார்.

மற்றொரு சமயம் சுவாமி தன் கால்களைப் பிடித்துவிடச் சொன்னார். மிக்க மகிழ்வுடன் சுவாமியின் திருவடிகளை என் மடி மீது அமர்த்திக்கொண்டு பிடித்துவிட ஆரம்பித்தேன். பாதத்திலிருந்து முழங்கால் மேல்வரை அழுத்திப் பிடித்து விட்டேன்.

சற்று நேரத்தில் நான் வித்தியாசமாக ஏதோ உணர்ந்தேன். சுவாமியின் பாதம் சில்லெனக் குளிர்ந்து இருந்தது. கணுக்காலில் இருந்து முழங்கால் வரை சற்றே உஷ்ணமாக இருந்தது. முழங்காலுக்கு மேலே உடல்

கொதித்துக் கொண்டிருந்தது. ஏதும் புரியாமல் சுவாமியிடம் இந்த வெப்ப வேறுபாட்டைப் பற்றி கேட்க, சுவாமி,

“அதையெல்லாம் கேட்கக் கூடாது நண்பா”, என்றுரைக்க நான் மலைத்து நின்றேன்.

மற்றொரு சமயம், ஒரு திருமணத்திற்கு சுவாமி காலை 5 மணிக்கு செல்ல வேண்டியிருந்தது. 4 மணிக்கெல்லாம் சுவாமி என்னை எழுப்பி திருமணத்திற்கு செல்ல தயாராக வேண்டும் எனக் கூறினார். நான் எழுந்து அமர்ந்தேன். சுவாமி தான் அணிந்திருந்த ஆடைகளைப் பார்த்தார்.

“இன்று திருமணத்திற்கு செல்ல வேண்டும். அப்பா இன்று இந்த பிச்சைக்காரன் புத்தாடை அணிய வேண்டுமெனச் சொல்கின்றார். நண்பா அந்த புத்தாடைகளை எடு.”

சுவாமி உத்திரவிட்டார்.

நான் சில பொட்டலங்களைப் பிரித்து ஒரு வேஷ்டியையும், ஜிப்பாவையும் எடுத்துக் கொடுத்தேன். சுவாமி உடை மாற்றிக் கொண்டார். காலையில் எழுந்து இன்னும் முகம்கூட கழுவவில்லை. சுவாமியின் முகம் அக்காலைப் பொழுதில் சோர்ந்திருந்தது. திருமேனியிலிருந்து ஒருவித வேர்வை மணம் வீசியது. திடீரென சுவாமி கர்ஜித்தார். அங்கே சுவாமியின் உடல் முழுவதும் அடர்ந்த சந்தனமணம் வீசியது. முகமலர் தங்கமாய் ஜொலித்தது. அங்கே புவி ஆளும் சக்ரவர்த்தி தயாரானார். நான் பிரம்மித்து நின்றேன்.

என் நாதன், என் கைப்பிடித்து என்னைத் திருமணத்திற்கு அழைத்துச் சென்றார்.

# சுவாமி ரசித்த பாடல்



இந்தப்பாடலை 1982ல் சுவாமி யோகி ராம்சுரத்குமார் வெகுவாகச் சிலாகித்து, இரசித்து,பாடலின் இராகத்திற்க்கேற்ப நடனமாடியபடி மகிழ்ந்து, நாள்முழுவதும் பாடவைத்துக் கேட்டது. நீங்களும் ரசிக்க முடியுமா எனப் பாருங்களேன்.

சாகப் பிறந்த மனிதா நீ
சாகடிக்கலாமோ
வாழும் வழி கண்டு சொன்னோர்
வார்த்தை மறக்கலாமோ
மோகத்திலே வேகத்திலே
மோசம்போன மனிதா
தேகத்தையே நாசம் செய்யும்
தேவை என்ன கண்டாய்? - சாகப் பிறந்த

கொடுப்பதிலே இன்பம் உண்டு
அன்பு அது அறிவாய்
எடுப்பதிலே துன்பம் உண்டு
மிருகமது உணர்வாய்
எனதுனது பிரிவில் மயங்கி
உலகழிக்கும் மனிதா

எதுவுளது முடிவில் இங்கு
சிந்திப்பாய் சிறிது - சாகப் பிறந்த

சேர்ந்து பகிர்ந்து வாழ்ந்திட
சேரும் இன்பம் கோடி
சார்ந்து பிரிவை வளர்த்திட
நேரும் துன்பம் கோடி
நேர்ந்த துன்பம் களைந்திட
நேரம் இதே மனிதா
தேர்ந்த அன்பில் தெளிவுற
தேவலோகம் சமைப்பாய் - சாகப் பிறந்த

நாடில்லா எல்லையில்லா
பேதம் எதுவும் இல்லா
போரில்லா படையில்லா
புது உலகம் படைப்போம்
ஏதுண்டோ அது கொண்டு
அனைவரும் பகிர்ந்திடுவோம்
பேறுண்டோ இது கனவோ
என்ன பதில் மனிதா

வாழப் பிறந்த மனிதா நீ
சாகப் போவதில்லை
வாழும் வழி கண்ட பின்னே
மாயப் போவதில்லை

மோகமில்லா வேகமில்லா
அன்பு கொண்டால் மனிதா
தேகத்தோடுதெய்வமாகி
வாழ்ந்திடலாம் மனிதா
வாழப் பிறந்த மனிதா நீ
சாகப் போவதில்லை.

# பூர்வாசிரமம்



1980களின் ஆரம்பத்தில் ஒரு நாள் சுவாமிக்கு மிகவும் பிரியமான

பக்தர் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களைத் தரிசிக்க தன் குடும்பத்தோடு சன்னதித் தெரு வீட்டிற்கு வந்தார்.

அந்த அன்பர் சுவாமியைத் தெய்வமெனக் கருதுபவர். அவர் வெகுகாலமாக சுவாமியின் பூர்வாசிரம வாழ்க்கையைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென மிகவும் ஆசைப்பட்டார். இதற்குமுன் எவ்வளவோ முயன்றும் சுவாமி கொஞ்சம்கூட பிடி கொடுத்துப் பேசவில்லை. எனவே அந்த பக்தர் மிகவும் ஏமாற்றமடைந்திருந்தார்.

அன்றைய தினம் அவர் புதிய யுக்தியை கையாளத் தயாராக வந்திருந்தார்.

“சுவாமி பள்ளிப் பருவத்தில் நீங்கள் மிகவும் சிறந்த மாணவராக இருந்தீர்களா?”

“இல்லை நண்பா. சராசரி மாணவனாகத்தான் இந்த பிச்சைக்காரன் இருந்தான்.”

"சுவாமி சிறு வயதில் உங்களுக்கு எந்த விளையாட்டு பிடிக்கும்? எந்த விளையாட்டு விளையாடுவீர்கள்?"

"சிறு வயதில் நண்பர்களோடு இந்த பிச்சைக்காரன் மல்யுத்தம் செய்வான். பின்னர் கால்பந்து விளையாட்டை விரும்பிப் பார்ப்பான்."

"சிறு வயதில் உங்கள் பொழுதுபோக்கு என்ன சுவாமி?"

சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார். கடந்த காலம் கண்களில் தெரிந்தது போலும்.

"அவ்வப்போது இந்த பிச்சைக்காரன் கங்கையில் நீந்தி மகிழ்வான்.........ஓ இந்த நண்பன் என் வாயிலிருந்து நிறைய விஷயங்களைப் பிடுங்குகிறானே!"

சுவாமி பெரிதாகச் சத்தமிட்டுக் கூறினார்.

நண்பர் சற்று நேரம் மௌனமானார். பேச்சு வேறு திசையில் திரும்பியது. எனினும் நண்பர் சுவாமியின் பூர்வாசிரம வாழ்க்கையைத் தெரிந்து கொள்ள மீண்டும் ஆர்வத்தோடு முயற்சி செய்யலானார்.

"சுவாமி தங்களின் தாயார் பெயர் என்ன சுவாமி?"

தந்தையின் பெயர் கேட்டால் பப்பா ராமதாஸ் இல்லையெனில் அருணாச்சலேஸ்வரர் என்று சுவாமி ஏதாவது கூறிவிடுவாரே என்று நினைத்து சுவாமியின் தாயாரின் பெயரை அன்பர் கேட்டார்.

"பத்மாவதி"

சுவாமி சட்டென்று கூறினார். அன்பர் வாயடைத்துப் போய்விட்டார். ஏனெனில் அன்பரின் தாயாரின் பெயரும் பத்மாவதியே. அதன் பின்னர் அந்த அன்பர் சுவாமியின் பூர்வாசிரம வாழ்க்கை பற்றிக் கேட்கத் துணியவேயில்லை.

# திருமதி ராம்ரஞ்ஜனிதேவி



1982ம் ஆண்டு, நாங்கள் நண்பர்கள் மூவரும் குடும்பத்தாரோடு சுவாமியின் சன்னதித் தெரு வீட்டில் சுவாமியின் முன் அமர்ந்திருந்தோம். முந்தைய நாள் மாலை ஊரிலிருந்து வந்து, சுவாமியோடு சன்னதித் தெரு வீட்டிலேயே தங்கியிருந்தோம். காலை சுமார் பத்து மணி இருக்கும். சுவாமியின் அலுவலர் வாசலில் யாரோ வந்திருப்பதை சுவாமியிடம் அறிவித்தார். சுவாமியே எழுந்து வெளியில் சென்று வந்தவர்களை அழைத்துக் கொண்டு வீட்டின் கூடத்துக்கு வந்தார்.

வந்தவர்கள் வட இந்தியர்கள். ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் சுமார் பத்து பேர் வந்திருந்தனர். சுவாமி அவர்களில் பெண்களையும், குழந்தைகளையும், பெண்கள் அமரும் பகுதியிலும், ஆண்களை, ஆண்கள் அமரும் பகுதியிலும் மிகவும் சிரமப்பட்டு அமரவைத்தார். ஏற்கனவே நாங்கள் எங்கள் குடும்பத்தினரோடு அங்கு இருந்ததால் இட நெருக்கடியை சுவாமி சமாளித்து அவர்களை உட்கார வைத்தார். சுவாமியின் விருப்பத்தைப் புரிந்துகொண்டு, சுவாமி சொன்ன

இடங்களில் உட்காருவதற்கு அவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். அனைவரும் அமர்ந்தபின், சுவாமி தன் இருக்கையில் அமர்ந்து புகைபிடிக்க ஆரம்பித்தார். அடுத்தடுத்து இரண்டு மூன்று சிகரெட்டுகள் புகைந்து சாம்பலாயின. அங்கு ஒரு ஆழ்ந்த அமைதி நிலவியது.

“முருகேஷ்ஜி, இவர்கள் இந்தப் பிச்சைக்காரனின் உறவினர்கள். இந்தப் பிச்சைக்காரனின் கடந்தகால வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள விருப்பப் பட்டால் இவர்களிடம் கேட்டு அறியலாம்.”

சுவாமி திடீரென இவ்விதம் சொன்னதைக் கேட்டு நாங்கள் எல்லோரும் ஒரு கணம் திகைத்து போய்விட்டோம்.

“சுவாமி, இப்போதுள்ள எங்கள் சுவாமியை நாங்கள் பூரணமாக அறிந்து கொண்டாலே போதும்,”

முருகேஷ்ஜி சொன்னதைக் கேட்டவுடன் சுவாமி தன் இரு கரங்களையும் உயர்த்தி “என் தந்தை உன்னை ஆசீர்வதிக்கிறார்.” எனக் கூறினார்.

சுவாமியின் குடும்பத்தினர் மூன்று தினங்களாகத் திருவண்ணாமலையில் தான் இருந்தார்கள். சுவாமி திருவண்ணாமலையில் இருப்பதை 25 ஆண்டுகள் கழித்து அறிந்து கொண்டு அவரைப் பார்ப்பதற்காக வந்துள்ளனர். 1982ன் ஆரம்பத்தில் யு.என்.ஐ., செய்தி அலுவலகத்தின் நிருபர் சுவாமியை தரிசனம் செய்ய திருவண்ணாமலை வந்தார். சுவாமியின் வித்தியாசமான திருக்கோலத்தைக் கண்டு வியந்த அவர், சுவாமியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் நிருபர் என அறிந்து கொண்ட சுவாமி அவரிடம் “இந்தப் பிச்சைக்காரனைப் பற்றிச் செய்தி வெளியிடலாமே?” எனக் கேட்க, அவர் “சுவாமி, உங்களிடம் தனித்துவம் ஏதேனும் இருந்தால் உங்களைப் பற்றிய செய்தி வெளியிடுவது சுலபம்” எனக் கூறினார்.

சுவாமி மௌனமாகப் புகைப்பிடித்துக் கொண்டிருந்தார். ஒன்று, இரண்டு என ஐந்து சிகரெட்டுகளுக்கும் மேலாகத் தொடந்து சுவாமி

புகைபிடிப்பதைப் பார்த்த அந்த நிருபர் “சுவாமி, நீங்கள் தினமும் எத்தனை சிகரெட் பிடிக்கிறீர்கள்?” எனக் கேட்க, சுவாமி “இந்தப் பிச்சைக்காரன் கணக்கு வைத்துக் கொள்வதில்லை. ஆனால் சில நண்பர்கள் இந்தப் பிச்சைக்காரன் தினமும் பத்து பாக்கெட்டுகளுக்கும் மேல் சிகரெட் பிடிப்பதாகச் சொல்கிறார்கள்.” எனக் கூறிவிட்டு மீண்டும் புகைபிடிக்க ஆரம்பித்தார். “சுவாமி, இந்த ஒரு விஷயம் போதும், நான் தங்களைப் பற்றிய சிறு செய்தியை அனைத்து பத்திரிக்கையிலும் வருமாறு செய்துவிடுகிறேன்.” எனச் சொல்லிவிட்டு விடை பெற்றுச் சென்றார்.

சில நாட்களில் ‘புகைக்கும் சுவாமி‘ எனும் தலைப்பில் இந்தியாவில் பிரசுரமாகும் பல்வேறு தினசரி, வார, மாத பத்திரிகைகளிலும் சுவாமியைப் பற்றிய செய்தி வெளியானது. சில பத்திரிகைகளில் சுவாமியைப் பற்றி தவறாகவும், பெருவாரியான மற்ற பத்திரிக்கைகளில் சுவாமியை ‘வித்தியாசமன ஞானி’ என்றும் வர்ணித்திருந்தார்கள்.

சுவாமியைப் பற்றி ‘தி டைம்ஸ்’ எனும் ஆங்கிலப் பத்திரிகையிலும் செய்தி வெளியானது. அது கல்கத்தாவிலிருந்து பிரசுரமாகும் இதழ். அந்தப் பத்திரிக்கையில் வந்த சுவாமியைப் பற்றிய செய்தியை, சுவாமியின் இளைய மகளின் கணவர் படித்தார். சுவாமியின் ஆரம்பகாலப் பெயர் ராம்சுரத் குன்வர். பத்திரிக்கையில் பிரசுரமான சுவாமியின் பெயரோ ராம்சுரத்குமார். இரண்டிலும் ஏதோ ஒற்றுமை இருப்பதாக அவருக்குப் பட்டது.

அவர் மைத்துனரிடம் தொலைபேசியில் இது குறித்துப் பேசினார். சுவாமியின் மகன் அமிதாப் குன்வருக்கும் அந்த ஞானி தன் தந்தையாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது. அவர் உடனே கல்கத்தா சென்று அந்தப் பத்திரிக்கையின் ஆசிரியரைச் சந்தித்தார். அந்தச் சிறு செய்தியில் வந்த சுவாமியைப் பற்றி விசாரிக்க, ஆசிரியர், ‘அந்தச் செய்தியில், தமிழ் அறிஞர் கி.வா.ஜகந்நாதன் என்பவர் சுவாமியைப் பற்றி பல பாடல்கள் இயற்றி அவற்றைப் புத்தகமாக வெளியிட்டுள்ளார்

என இருக்கிறது. எனவே, சென்னை சென்று அந்தத் தமிழ் அறிஞரைச் சந்தித்தால், சுவாமியைப் பற்றித் தெரியவரும்' என்று சொல்ல, அமிதாப் சென்னை புறப்பட்டார்.

சென்னையில் அமிதாப் மிகவும் சிரமப்பட்டு கி.வா.ஜகந்நாதன் விலாசத்தை அறிந்து அவர் வீட்டுக்குச் சென்றார். கி.வா.ஜ.,வைச் சந்தித்து பத்திரிகைச் செய்தியைக் காட்டினார். இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்ற தன் தந்தை, சுவாமியாக இருப்பாரோ என்ற சந்தேகத்தை உணர்ச்சிப் பெருக்கோடு அமிதாப் வெளிப்படுத்தினார். தன் தந்தையைக் காண மிகுந்த ஆவல் கொண்டிருப்பதையும் தெரியப்படுத்தினார். தன் தந்தையைச் சந்திக்க கி.வா.ஜகந்நாதன் உதவ வேண்டுமெனக் கோரினார். அவரது உணர்வுகளைப் புரிந்து கொண்ட கி.வா.ஜ., திருவண்ணாமலையில் உள்ள நண்பரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமிதாப் வந்த விவரத்தை சுவாமிக்குத் தெரியப்படுத்தவும், அவரைத் திருவண்ணாமலைக்கு அனுப்பலாமா என்பதை சுவாமியிடம் வினவிச் சொல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.

திருவண்ணாமலை நண்பர் சுவாமியிடம் சென்று கி.வா.ஜகந்நாதன் சொன்ன தகவலைக் கூறினார். சுவாமி அந்த நண்பரிடம் அமிதாப்பைத் திருவண்ணாமலை அனுப்பும்படி கி.வா.ஜகந்நாதரிடம் தொலைபேசியில் சொல்லச் சொன்னார். நண்பர், கி.வா.ஜ.வுக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்னார். கி.வா.ஜ., தன் பணியாள் ஒருவரை துணைக்கு அனுப்பி அவரை திருவண்ணாமலை செல்லும் பஸ்ஸில் ஏற்றிவிடச் செய்தார்.

அன்று மாலையே அமிதாப் திருவண்ணாமலை வந்தடைந்தார். சன்னதித்தெரு வீட்டை அடைந்தார். 1982ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் தேதி மாலை ஆறு மணிக்கு அமிதாப் தன் தந்தையின் வீட்டுக் கதவை தட்டினார். ஒரு சிறு பையன் வீட்டினுள் இருந்து வெளிவந்தான். அமிதாப்புக்கு தமிழ் தெரியாததால், ஒரு துண்டு காகிதத்தில் தன் பெயரை எழுதி அதை அந்த பையனிடம் கொடுத்து சுவாமியிடம்

சேர்ப்பிக்கச் சொன்னார். அதைச் சிறுவன் சுவாமியிடம் சேர்ப்பித்தான். சுவாமி அதைப் படித்துவிட்டு பையனிடம் அமிதாப்பை உள்ளே அழைத்து வரச்சொன்னார். அமிதாப் உள்ளே வந்தார். சுவாமியைக் கண்டார். சுவாமி அவரை எதிரே அமரச் சொன்னார். அமிதாப் அமர்ந்து கொண்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அமிதாப் கடைசியாக தன் தந்தையைப் பார்த்தது 1958ஆம் ஆண்டு தஹியா என்ற கிராமத்தில், கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் கழித்துத் தன் தந்தையை மீண்டும் அமிதாப் அப்போதுதான் காண்கிறார். அவர் சுவாமியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவர் மனதில் ஒருவித பயம் ஏற்பட்டது. அவருக்கு என்ன பேசுவது எனத் தெரியவில்லை. கனத்த சில நிமிடங்கள் கரைந்தன.

“உன் பெயர் என்ன?” சுவாமி கேட்டார். தன் பெயரைச் சொல்லி, அடுத்து தன் தாயின் பெயர் ராம்ரஞ்ஜனி தேவி எனக் கூறினார். தந்தையிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்பந்தத்தைக் கண்டு அவர் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. சுவாமி, அமிதாப் செய்யும் வேலையைப் பற்றியும் அவர் குடும்பத்தைப் பற்றியும் கேட்டார். அமிதாப்பின் தாய்மாமன் ரமாகாந்த் ராய் பற்றியும் சுவாமி விசாரித்தார்.

சற்று நேரம் கடந்தது. அமிதாப்புக்கு மேலும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. அவர் மனம் வெறுமையடைந்தது. தான் ஏன் வந்தோம் என்று தோன்றியது. அங்கே அமர்ந்திருப்பது தன் தந்தைதான் என்றாலும் அவரைத் தந்தையாகக் காண முடியவில்லை. தந்தை மகன் உறவுக்கு அங்கே இடமில்லை என உணர்ந்தார். ஒருவிதமான பயம் அவர் மனதில் ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. எனினும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு குடும்பத்தார் அனைவரும் சுவாமியைக் காண ஆவலுடன் இருக்கிறார்கள், அவர்களை சுவாமியிடம் அனுப்பலாமா எனக் கேட்டார்.

“இந்தப் பிச்சைக்காரனைக் காண வேண்டுமென நினைத்தால்

அவர்கள் வரலாம்" என சுவாமி கூறினார். மறுபடியும் நீண்ட நேரம் மௌனம் நிலவியது. அமிதாப்புக்கு வேறு எதைப்பற்றி பேசுவது எனத் தெரியவில்லை. அவர் மிகவும் ஏமாற்றமடைந்திருந்தார். தந்தையாக சுவாமியைப் பார்க்க இயலவில்லை. என்பதை அவரால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

"திருவண்ணாமலையில் இரவு தங்கப்போகிறாயா? சுவாமி கேட்டார்." "இல்லை, நான் உடனே ஊர் திரும்பப் போகிறேன்." அமிதாப் கண்கள் கலங்க பதிலுரைத்தார்.

சுமார் 2000 கிலோமீட்டர் தூரம் கஷ்ட்டப்பட்டு பயணித்து பெற்றத் தந்தையைக் காணப் போகிறோம் என்ற பேராவலோடு ஓடிவந்த அமிதாப்புக்கு, அமானுஷ்யமான துக்கமே மிஞ்சியது. தந்தையை தந்தையாகக் காண முடியவில்லை. தனது தாய்மொழியில் கூட தந்தையிடம் பேசமுடியவில்லை. உரையாடல்கள் ஆங்கிலத்திலேயே இருந்தன.

சுவாமி, அமிதாப்புக்கு அவரது அமெரிக்க பக்தர் ட்ரூமென் கெய்லர் எழுதிய 'யோகி ராம்சுரத்குமார் தி காட் சைல்ட்' என்ற புஸ்தகத்தை கொடுத்தார். அதில் 'மை ப்லசிங்க்ஸ் டு அமிதாப்' என ஹிந்தி மொழியில் எழுதி கையொப்பமிட்டுக் கொடுத்தார். சுமார் எட்டு மணியளவில் அமிதாப்புக்கு சுவாமி ஆசி கூறி அனுப்பி வைத்தார். இருபத்தைந்து ஆண்டு இடைவெளிக்குப் பின்பு சுமார் இரண்டு மணிநேரமே மகன் தந்தையுடன் இருக்க முடிந்தது. அதுவும் மகன், தந்தை உறவோடு அந்தச் சந்திப்பு நிகழவில்லை. தந்தையின் நிலையை மகனால் உணர்ந்துகொள்ள முடியாத ஒருவித இயலாமை அமிதாப்புக்கு குழப்பத்தையும் கோபத்தையும் கொடுத்தது.

ஊர் திரும்பினார். தாயிடமும் உடன் பிறந்தோரிடமும் தந்தையைக் கண்ட விவரத்தைக் கூறினார். தந்தையுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறினார். சுவாமியின் பற்றற்ற நிலையைத் தான்

புரிந்து கொண்ட விதத்தில் தாயிடம் கூறினார். தந்தை, தந்தையாக இல்லை என்ற செய்தி குடும்பத்தார்க்கு குழப்பத்தை ஏற்படுத்தியது. சில மாதங்கள் கடந்து சென்றது. கி.வா.ஜகந்நாதன் அமிதாப்புக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் சுவாமியின் மேன்மையை குறிப்பிட்டு, தாயை சுவாமியின் தரிசனத்துக்கு அமிதாப் அழைத்துச் செல்லவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தைக் கண்ட அமிதாப்பின் தாயார் தன் கணவர் தன்னை ஏற்றுக் கொள்ளாவிடினும் தான் தன் கணவரை ஒரு ஞானியாக ஏற்றுக்கொண்டு தரிசிப்பது உசிதம் என நினைத்தார். அதைத் தன் மகனிடம் திருமதி. ராம்ரஞ்ஜனி தேவி கூறினார். அமிதாப் தன் தாய், தமக்கை, தங்கைகள் மற்றும் தன் மனைவி, குழந்தைகள், தாய்மாமன் ரமாகாந்த் ஆகியோரைத் திருவண்ணாமலைக்கு அனுப்பி வைத்தார். சுவாமியை மீண்டும் தரிசிக்க அமிதாப்புக்கு நாட்டம் ஏற்படவில்லை.

குடும்பத்தார் அனைவரும் சுவாமியை தரிசிக்க சன்னதித் தெரு வீட்டுக்கு வந்தார்கள். சுவாமி அவர்களை உள்ளே வரவழைத்து அமரவைத்தார். அங்கே நீண்ட நேரம் நிசப்தமாக இருந்தது. சுவாமி தன் இருக்கையிலிருந்து எழுந்து நின்றார். தன் கைவிசிறியைத் தூக்கிக்கொண்டு அனைவரையும் உற்று நோக்கினார். அவரின் பார்வை திருமதி. ராம்ரஞ்ஜனிதேவியின் மேல் திரும்பியது.

திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி தன் இருக்கையிலிருந்து மெதுவாக எழுந்து சுவாமியை நோக்கி வந்தார். மண்டியிட்டு அமர்ந்து சுவாமியின் திருவடிகளைப் பற்றிக்கொண்டார். அவர் கண்கள் குளமாயின. திருவடிகளை இறுகப்பற்றிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதார். இருபத்தைந்து ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளின் மொத்த தாக்கமும் அப்பொழுது வெளிப்பட்டது. திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி அழுததைப் பார்த்த குடும்பத்தினர் அனைவரும் கேவிக் கேவி அழ ஆரம்பித்தனர்.

சுவாமி ஆடாது அசையாது மலையென நின்றிருந்தார். அந்த மலையும் அப்போது கசிய ஆரம்பித்தது. சுவாமியின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. சற்றுநேரம் கழித்து, “போதும், அமரலாம்” என சுவாமி சொல்ல, அன்னை தன்னிடத்துக்குச் சென்று அமர்ந்துகொண்டார். சுவாமி ஒவ்வொருவரையும் அறிமுகப்படுத்திக் கொள்ளும்படி சொல்ல, பெற்ற பிள்ளைகள் தங்களை அறிமுகம் செய்து கொண்டார்கள்.

சுவாமிக்கு மூன்று பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை. மூத்தபெண்ணின் பெயர் யசோதரா, அடுத்து அமிதாப். மூன்றாவது பெண் குழந்தையின் பெயர் மாயா, இவர்கள் மூன்றுபேருக்கும் சுவாமியே பெயர் வைத்துள்ளார். கடைசிப் பெண் வயிற்றில் இருக்கும்போது சுவாமி குடும்பத்தை விட்டு வெளியேறி யதால் தாயே பெண்ணுக்கு பீனா என பெயரிட்டார்.

அடுத்த இரண்டு நாட்களும் சுவாமி அவர்களைப் பெரிய கோவில், ரமணாஸ்ரமம், கிரிவலம் என பல இடங்களைச் சுற்றிக் காட்டினார். அவர்களைக் கோவில் சத்திரத்தில் தங்கவைத்திருந்தார். சுவாமி தன் பேரன், பேத்திகளுக்கு பொம்மைகளும் மற்ற விளையாட்டுச் சாமானங்களும் வாங்கிக் கொடுத்தார். இதையெல்லாம் கண்ட குடும்பத்தினர் தங்கள் வீட்டுத் தலைவன் தங்களுக்கு மீண்டும் கிடைத்துவிட்டார் என நினைத்துக் கொண்டனர்.

சுவாமி குடும்பத்தைவிட்டு ஏதோ கோபத்தில் வெளியேறியவர் அல்ல. ஏமாற்றத்தினாலோ அல்லது குற்ற உணர்ச்சிகளுக்கு பயந்தோ அல்லது தோல்விகளுக்கு அஞ்சியோ அவர் வீட்டை விட்டு வெளியேறவில்லை. தெய்வத்திடம் ஏற்பட்ட நாட்டமும், சத்தியத்தை அறிந்துகொள்ளும் வேகத்திலும், எத்தனையோ மக்களை, ஆண்டவன்பால் சேர்ப்பிக்கும் தெய்வீகப் பணியின் பொருட்டும், அன்பான, பண்பட்ட, கௌரவமான குடும்பத்தில் இருந்து பறிக்கப்பட்டு யோகியாக ஆண்டவனால் மாற்றப்பட்டவர்.

அவர் குடும்பத்தையும், உறவையும் வெறுத்து சாமியாராகவில்லை. தெய்வப்பணியை செய்யும் பொருட்டு, அவரின் இனிமையான குடும்பத்தைவிட்டு, அவரை வெட்டி எடுத்து தெய்வம் தன்னோடு சேர்த்துக்கொண்டது. குடும்பத்தலைவன் இல்லாது அந்தக் குடும்பம் இருபத்தைந்து ஆண்டுகள் தத்தளித்து, சிரமப்பட்டு, தொல்லைகள் பல அனுபவித்தது. அவர்கள் அல்லல்பட்டதற்கு ஆறுதலாக, மற்ற எல்லா கஷ்டப்படும் பக்தர்களுக்கும் சுவாமி ஆசுவாசம் அளிப்பது போல தன் குடும்பத்தாருக்கும் அபயம் அளித்தார். ஆனால், குடும்பத்தாரோ சுவாமியின் இக்கருணையைக் குடும்ப பாசம் என்று தவறாகப் புரிந்துகொண்டனர்.

எங்கள் மூவரின் குடும்பத்தினரின் முன்னிலையில் சுவாமி அவர்களோடு சகஜமாக அளவளாவினார். அவர்களின் அடுத்தக்கட்ட பயணத்திட்டம் குறித்துக் கேட்டார். சுவாமியின் மைத்துனர் ரமாகாந்த்ராய் தாங்கள் அன்று மாலையே இராமேஸ்வரம் செல்ல இருப்பதாகச் சொன்னார். இராமேஸ்வரம் சென்றுவிட்டு அங்கிருந்து அப்படியே ஊர் திரும்ப திட்டமிட்டதுள்ளதாகக் கூறினார். அப்பொழுது ராம்ரஞ்ஜனிதேவி தன் மென்மையான குரலில் புரியாத மொழியில் ஏதோ கூறினார். அதுவரையில் சிரித்தபடி உரையாடிக் கொண்டிருந்த சுவாமி, திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி போஜ்புரி பாஷையில் தனது சகோதரனிடம் கூறியதைக் கேட்டுவிட்டு, முகம் சிவந்து அங்கிருந்த அனைவரையும் அதிர வைத்தார்.

“25 ஆண்டுகளுக்குப் பின்பு நீங்கள் எல்லோரும் இந்தப் பைத்தியக்கார பிச்சைக்காரனைப் பார்க்க நினைத்தீர்கள். இந்தப் பிச்சைக்காரனும் உங்களுக்கு அனுமதி அளித்தான். நீங்கள் முன்பு பார்த்த அதே பைத்தியக்கார பிச்சைக்காரன்தான் இவன். இந்தப் பிச்சைக்காரனை நீங்கள் உங்களின் நெருங்கின பந்து என நினைத்தால் உங்கள் எல்லோரையும் என் தந்தை பார்த்துக் கொள்வார். என் தந்தை உங்களுக்கு எப்பொழுதும் ஆசி வழங்குவார். ஆனால், இங்கு ஒரு


காட்சியை உருவாக்க நினைக்காதீர்கள். இப்பொழுது நீங்கள் எல்லோரும் திரும்பிப் போயே ஆகவேண்டும். இந்தப் பக்கத்திலிருந்து (திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி அமர்ந்த இடத்தைச் சுட்டிக்காட்டி) ஏதோ சொல்வது போலிருந்தது. அவ்விதம் செய்யாதீர்கள். நீங்கள் எல்லோரும் திரும்பிச் சென்றுவிடுங்கள்."

திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி தனது தம்பியான ரமாகாந்த்ராயிடம் "நீங்கள் எல்லோரும் யாத்திரை முடித்துக்கொண்டு ஊர் செல்லுங்கள். அதற்கு முன்பு இங்கு ஒரு வீடு வாடகைக்கு எடுத்து நான் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் என்னவரைக் கண்டுவிட்டேன். இனி அவருக்கு ஒரு வேளை உணவு சமைத்துக் கொடுத்து எனது மீதிக்காலத்தையும் இங்கேயே கழித்துவிடுகிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டுத்தான் சுவாமி மேற்கூறியவாறு கூறினார். சுவாமியின் வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் அதிர்ந்தே போய்விட்டனர். யாருக்கும் சுவாமியிடம் தர்க்கம் செய்யும் தைரியம் வரவில்லை. அங்கே பூரணமான துறவு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அந்த அக்னி ஜ்வாலைக்கு முன் எவராலும் சொந்தம் கொண்டாடி நிற்க முடியவில்லை.

சற்று நேரத்தில் அனைவரையும் சுவாமி அனுப்பி வைத்தார். அதன் பின் திருமதி. ராம்ரஞ்ஜனிதேவி சுவாமியை மூன்று முறை தரிசித்தார். 1952ல் சுவாமியைப் பிரிந்த அந்த தெய்வீகப் பெண்மணி, தனது 52 வருடங்கள் தனிமை எனும் பெரும் பாரத்தைச் சுமந்தவராகத் தனது வாழ்க்கையைக் கழித்து 25.12.2004ம் ஆண்டு தனது 83வது வயதில் சித்தியானார்.

# வேஷம் வேண்டாமே



“சுவாமி இவர்கள் மூவரும் சேர்ந்து செய்யும் அட்டகாசங்கள் வரம்பு மீறிச் செல்கின்றன. நாங்கள் எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை சுவாமி. நீங்கள் தான் சொல்ல வேண்டும்.”

அந்த மூன்று நண்பர்களின் மனைவிகள் சுவாமியிடம் குறை கூறினார்கள்.

“என்னம்மா செய்கிறார்கள்?” சுவாமி சிரித்தபடி வினவினார்.

“உங்களை மாதிரியே தலைப்பாகையெல்லாம் கட்டிக்கொண்டு உங்களைப் போலவே வேடிக்கையாக நடிக்கிறார்கள் சுவாமி.”

சுவாமி ஆச்சரியத்தோடு மூவரையும் பார்த்தார்.

“நண்பர்களே, எங்கே இந்த பிச்சைக்காரன் முன்பும் செய்து காட்டுங்கள்.”

நண்பர்கள் தயங்கினர். சுவாமி தைரியமூட்டினார். நண்பர்கள்

அவர்கள் கொண்டுவந்த துண்டுகளை சுவாமி போல் தலையில் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டார்கள். பின்னர் தனித்தனியாக சுவாமி போல் பாடியும் ஆடியும் கூத்தடித்தார்கள்.

சுவாமி அவர்கள் செய்த கோமாளித்தனத்தை உற்று நோக்கியவாறு இருந்தார். கூத்து முடிந்தது. அதுவரை அங்கிருந்த சிரிப்பும், கும்மாள ஓசைகளும் நின்று போயின. சுவாமி நண்பர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக உற்றுப் பார்த்தார். வெகுநேரம் மௌனத்தில் கழிந்தது.

"நண்பர்களே இந்த பிச்சைக்காரன் மாதிரி வேஷம் தரிப்பதோ, இந்த பிச்சைக்காரன் போல செய்கைகள் செய்வதோ உங்களுக்கு எந்த பலனையும் தராது. மாறாக அவ்விதம் செய்வது உங்களுக்கும் உங்களைக் கவனிப்பவர்களுக்கும் துன்பமே தரும். ஏன் நீங்கள் இந்த பிச்சைக்காரன் மாதிரி வேஷம் போடவேண்டும்?. என் தந்தைக்கு இப்படி செய்வது அறவே பிடிக்காது. என் தந்தை உங்களை எப்படி வைத்திருக்கின்றாரோ அப்படியே நீங்கள் இருந்தால்தான் என் தந்தை மகிழ்ச்சி அடைவார். வேஷம் போடுவதை என் தந்தை ஒருக்காலும் ஏற்கமாட்டார். அது என் தந்தையை நோக்கிச் செல்லும் என் நண்பர்களுக்கு உகந்தது அல்ல. மற்றவர்கள் எதுவும் செய்து கொள்ளட்டும். இந்த பிச்சைக்காரனின் நண்பர்கள் மட்டும் இது போல் வேஷமிடக்கூடாது, நடிக்கக் கூடாது."

நண்பர்கள் தவறிழைத்த கவலையில் துவண்டு போயிருந்தனர். சுவாமி அவர்களைப் பார்த்து அருள் பொங்கச் சிரித்தார். அவர்கள் தவறு மன்னிக்கப்பட்டது.

சுவாமி மெதுவாக இனிமையாக நாமம் பாடினார். அனைவரும் சுவாமியைத் தொடர்ந்து பாடினோம். மனதில் அனைவருக்கும் நிம்மதி ஏற்பட்டது.

# சுவாமி ஏமாற மாட்டார்



நாங்கள் நண்பர்கள் மூவரும் சுவாமி யோகி ராம்சுரத்குமார் முன்பாக சன்னதித் தெரு வீட்டில் அமர்ந்திருந்தோம். சுவாமி ஆனந்தமாக உரையாடிய வண்ணம் இருந்தார். அங்கே கால, வர்த்தமானங்கள் எதுவுமே எங்களால் உணர முடியவில்லை. சுவாமியின் உதவியாளர் உள்ளே வந்தார்.

"சுவாமி தபால்காரர் வந்திருக்கிறார்."

சுவாமி எழுந்தார். தன் மேலுள்ள சால்வையைச் சரிசெய்து கொண்டு வாசல் பக்கம் சென்றார். சற்று நேரத்தில் கை நிறைய தபால்களைக் கொண்டு வந்தார். தன் ஆசனத்தில் அமர்ந்தார். ஒவ்வொரு தபாலாகப் பார்த்தபின் அவற்றைத் தனியாக எடுத்து வைத்தார். கடைசியாக சற்று பெரியதான ஒரு கவர் வந்திருந்தது. அதை அக்கவர் சேதாரம் ஆகாதவாறு பிரித்தார். உள்ளே ஒரு சிறு புத்தகம் இருந்தது. புத்தகத்தின் மேல் அட்டையில் ஒரு ஞானியின் படம் அச்சிடப்பட்டிருந்தது. சுவாமி

அந்த ஞானியின் படம் தன் நெற்றியில்பட வைத்து வணங்கினார்.

“நண்பா இந்த புத்தகத்தை இன்றே படித்து முடித்துவிடவேண்டும்.”

சுவாமி புத்தகத்தை நண்பரிடம் கொடுத்தார்.

நண்பர் புத்தகத்தை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார். அந்த புத்தகம் அந்த ஞானியின் பக்தர் ஒருவரால் எழுதப்பட்டது. அப்புத்தகத்தில் பக்தர் அந்த ஞானியின் ஒவ்வொரு சொல்லுக்கும், செயலுக்கும் என்னென்னவோ தத்துவார்த்த அர்த்தங்களாக விவரித்திருந்தார். எங்களால் அதைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. நண்பர் நிதானமாகவே படிக்க முடிந்தது. ஒவ்வொரு சொற்றொடர் முடிந்ததும் சுவாமியைப் பார்ப்பார். அவருக்கு ஒரு நப்பாசை. சுவாமி படிப்பதை நிறுத்தச் சொல்வார் என எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை. 15 பக்கங்களை நண்பர் மிகவும் சிரமப்பட்டு படித்து முடித்தார்.

“தொடர்ந்து படிக்கலாம்” சுவாமி சொல்லிவிட்டு படுத்துக் கொண்டார்.

சில நொடிகளில் சுருதியின் நாதம் போல சுவாமியின் குறட்டைச் சப்தம் கேட்டது. சுவாமி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். நண்பர் சற்று நேரம் படிக்காமல் மௌனமாக இருந்தார். சட்டென்று சில பக்கங்களை நகர்த்தி வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தார். சற்று நேரம் கழிந்தது. சுவாமி துயில் நீங்கி மெதுவாக எழுந்து அமர்ந்தார்.

“நண்பா நீ எந்தப் பக்கத்தில் இருந்து படித்துக் கொண்டிருக்கின்றாய்?”

சுவாமி வினவினார்.


“25ம் பக்கத்தைப் படித்துக் கொண்டிருக்கிறேன் சுவாமி.”

“நண்பா இந்த பிச்சைக்காரன் தூங்கிப் போய்விட்டான். எனவே 16ம்

பக்கத்தில் இருந்து படிக்கலாம் நண்பா"

சுவாமி குறும்புச் சிரிப்புடன் கூறினார். நண்பர் முகத்தில் அசடு வழிந்தது. உண்மையாக எந்தப் பக்கத்தில் இருந்து தொடர வேண்டுமோ அந்த பக்கத்தில் இருந்து நண்பர் வேறு வழியில்லாமல் படிக்க ஆரம்பித்தார். அந்தப் புத்தகத்தை வாசித்து முடிக்க நள்ளிரவாயிற்று. அந்த புத்தகத்தில் இருந்து நாங்கள் கற்றுக் கொண்டது, சுவாமியை ஒருக்காலும் ஏமாற்றமுடியாது என்பதே.

# அமெரிக்க நண்பர்கள்




நான், முருகேசன், சிவசங்கரன் ஆகிய மூன்று பேரும் சுவாமியுடன் சுமார் பத்து நாட்கள் அவரவர் குடும்பத்துடன் சன்னதித் தெரு வீட்டில் தங்கியிருந்த சமயம் அது. சுவாமியின் உத்தரவுப்படி நாங்கள் மூவரும் சன்னதித் தெரு வீட்டிலேயே சமையல் செய்து, சுவாமி மற்றும் எங்கள் குடும்பத்தாருடன் பகிர்ந்து உண்ட சமயம் அது. சுவாமி வியாசர் முதல் தற்கால ஞானிகளின் உபதேசங்கள் வரை விரிவாக எங்களிடம் பேசிக்கொண்டிருந்த சமயம் அது. பாட்டும் கும்மாளமுமாக நாங்கள் சுவாமியுடன் குதூகலித்திருந்த சமயம் அது.

காலை மணி எட்டு இருக்கும். வெளிநாட்டுத் தந்தி ஒன்றைத் தந்தி சேவகர் சுவாமிக்குக் கொடுத்து விட்டுச் சென்றார். சுவாமி தந்தியை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அமெரிக்காவில் இருந்து ஒரு பக்தை சுவாமியைப் பார்ப்பதற்கு புறப்பட்டு வருவதாகத் தந்தி சொன்னது. தந்தி வந்த மூன்றாம் நாள் அந்த அமெரிக்க பக்தை, தன்

இரண்டு குழந்தைகளுடன், ஒரு நண்பரையும் அழைத்துக் கொண்டு விமான நிலையத்திலிருந்து நேராக சுவாமியிடம் வந்தார். சுவாமி அவர்களை உள்ளே வரவழைத்து, பக்தையையும் குழந்தைகளையும் பெண்கள் அமரும் பக்கம் அமரச் செய்து நண்பரை தனக்கு எதிரில் அமரவைத்தார்.

அந்த நண்பர் ஒரு விஞ்ஞானி. நாசாவில் வேலை பார்ப்பதாகச் சொன்னார். அவருக்கு இந்தியாவைப் பற்றியோ, இந்தியாவில் வாழும் ஞானிகள் பற்றியோ ஒன்றும் தெரியாது என, பக்தை சுவாமியிடம் சொன்னார். விஞ்ஞானியோ சுவாமியை ஒருவித அருவருப்புடன் பார்ப்பதுபோல் தெரிந்தது. சுவாமியின் உடைகள் ஒரே அழுக்குமயம். அந்த அழுக்கு உடைகளையும் சுவாமி வினோதமாக அணிந்திருந்தார். சுவாமி அமர்ந்திருந்த சுற்றுப்புறம் குப்பையாகவும், தூசி நிறைந்ததாகவும் இருந்தது. அந்தச் சூழ்நிலையே அவருக்குப் பிடிக்கவில்லை என அவரது முகபாவம் தெளிவாகக் காட்டியது.

சுவாமி பக்தையுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் ரமண மகரிஷி பக்தை என்பதை அவர்களது பேச்சின் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது. ஒவ்வொரு வருடமும் அவர் தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு திருவண்ணாமலை மற்றும் இந்தியாவில் உள்ள முக்கிய க்ஷேத்திரங்களையும், ஞானிகளையும் தரிசித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார். விஞ்ஞானி நண்பர் அந்த பக்தையிடம் ‘அப்படி என்ன இந்தியாவில் உள்ளது?’ என கேட்டதற்க்கு, ‘வந்து பார்த்தால்தான் உணர முடியும்’ என்று சொல்ல, விஞ்ஞானியும் உடன் வந்ததாக அந்தப் பக்தை கூறினார். சுவாமி பக்தையுடன் பேசிக் கொண்டிருந்தாலும், அவர் கவனம் முழுவதும் விஞ்ஞானி மீதே இருந்தது.

சுவாமி அடுத்தடுத்துப் புகை பிடித்துக்கொண்டே இருந்தார்.

எனினும், புகையின் வாடை அங்கு அறவே இல்லை. பக்தையுடன் பேசிக்கொண்டிருந்த சுவாமி, திடீரெனப் பேச்சை நிறுத்திவிட்டு, தன் இருக்கையிலிருந்து எழுந்தார். கூடத்தின் உள்ளேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். பின் அங்கிருந்த தூணின் மீது சாய்ந்து விஞ்ஞானியையே பார்த்துக்கொண்டு இருந்தார்.

வெறுப்புடன் அங்கு அமர்ந்திருந்த விஞ்ஞானியின் முகத்தில் சற்றுநேரத்தில் ஒருவித மாறுதல் தெரிந்தது. அவர் முகத்தில் இருந்த வெறுப்புணர்வு மறைந்தது. சுவாமி தன் பனை ஓலை விசிறியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, விஞ்ஞானியையே உற்று நோக்கினார். குறுகியிருந்த விஞ்ஞானியின் முகம் பிரமிப்பை வெளிப்படுத்தியது. அவர் கண்களில் பக்தி பற்றிக்கொண்டது. சுவாமியை ஆவலுடன் பார்க்க ஆரம்பித்தார். சுவாமி அவருடைய விஞ்ஞான ஆராய்ச்சிகளைப் பற்றிக் கேட்க, விஞ்ஞானி பதிலுரைத்தார். பேசிக்கொண்டிருக்கும் போதே அங்கே விந்தையான மாறுதல்கள் ஏற்படட ஆரம்பித்தன. அந்த இடமே பவித்திரமாக சுடர் விட்டுப் பிரகாசிப்பதை அனைவரும் உணர்ந்தோம். இனம் காணமுடியாத ஒன்று, அனைவரையும் ஆகர்ஷிப்பதை அறிய முடிந்தது. அங்கே இன்பம், துன்பம், எதிர்பார்ப்பு, இடம், பொருள், காலம், காரணம் என அனைத்தையும் கடந்த ஒரு பேரனுபவம் நடந்தது.

அந்த விஞ்ஞானியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது, அவர் மெதுவாக எழுந்து சுவாமியின் எதிரே மண்டியிட்டு அமர்ந்தார்.

“சுவாமி, நான் உங்கள் கரங்களை முத்தமிடலாமா?” அமெரிக்க நண்பர் வினவினார். சுவாமி வெட்கத்துடன் புன்னகைத்தார்.

“இந்த அழுக்கடைந்த பிச்சைக்காரனின், உடல் நாற்றத்தை உன்னால் தாங்க முடியாது.”

“இதுவா அழுக்கடைந்த கரம், இது புனிதமான கரம். இது என் ஏசுவின் திருக்கரம். இதை முத்தமிட நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.”

சுவாமியின் கரத்தைப் பற்றி அந்த அமெரிக்க விஞ்ஞானி பக்தியோடு முத்தமிட, அனைவரும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தோம்.

அந்த பக்தைக்கு மிகவும் சந்தோஷம். சுமார் ஒரு மணி நேர சம்பாஷணைக்குப் பிறகு, சுவாமி அவர்களை புறப்படச் சொன்னார். அமெரிக்கப் பெண்மணி மறுபடியும் எப்பொழுது சுவாமியைக் காண வரலாம் எனக் கேட்டார்.

“இந்தப் பிச்சைக்காரன் உங்களை நன்கு பார்த்துவிட்டான். நீங்கள் மறுபடியும் இந்தப் பிச்சைக்காரனைப் பார்க்கத் தேவையில்லை. உங்கள் திட்டப்படி பயணத்தைத் தொடரலாம்.”

சுவாமியின் பதிலால் பக்தை அதிர்ச்சியானாள்.

“சாமி, நாங்கள் இன்னும் ஒரு வாரம் திருவண்ணாமலையில் தான் இருப்போம். நீங்கள் சொல்லும் நேரத்துக்கு வந்து உங்களைப் பார்த்துச் செல்கிறோம்” பக்தை கெஞ்சினார்.

“இந்த நண்பர்கள் இந்தப் பிச்சைக்காரனைப் பார்ப்பதற்காக வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள். எனது தந்தை இந்தப் பிச்சைக்காரனை இந்த நண்பர்களுடன்தான், வரும் சில நாட்களைக் கழிக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டார். எனவே, நீங்கள் உங்கள் பயணத் திட்டப்படி தொடருங்கள்.”

அமெரிக்கப் பெண்மணிக்கு ஏமாற்றமாகிவிட்டது. விஞ்ஞானியும் வேண்டுகோள் விடுத்தார். சுவாமி மறுத்துவிட்டார். ஏமாற்றத்துடன் அவர்கள் புறப்பட்டார்கள். சுவாமி அவர்களை வாசல் வரை சென்று

வழியனுப்பிவிட்டு வந்தார்.


“சுவாமி, நாங்கள் இங்கே அருகில் இருக்கின்ற ஊர்களிலிருந்து வந்துள்ளோம். ஆனால், அந்த நண்பர்கள் தங்களைக் காண்பதற்காக அமெரிக்காவிலிருந்து வந்துள்ளார்கள். அவர்களை மீண்டும் தங்களைத் தரிசிக்க அனுமதிக்க வில்லையே சுவாமி.”

முருகேசன் வருத்தத்துடன் சுவாமியிடம் கூறினார்.

“முருகேஷ்ஜி, அந்த அமெரிக்க நண்பர்கள் இந்தப் பிச்சைக்காரனைப் போல உள்ள பல நபர்களைப் பார்க்க வந்துள்ளார்கள். ஆனால், நீங்கள் யாவரும் அப்படியல்ல. ஊரிலிருந்து நேராக இந்தப் பிச்சைக்காரனைப் பார்க்க வருகிறீர்கள். இந்தப் பிச்சைக்காரன் விடைகொடுத்ததும் நேராக உங்கள் ஊர்களுக்குத் திரும்பி விடுகிறீர்கள். இங்கும் அங்கும் நீங்கள் அலைவதில்லை. எனவே, எனது தந்தை உங்களுடனேயே இந்தப் பிச்சைக்காரன் நேரத்தைச் செலவழிக்க வேண்டும் எனச் சொல்லிவிட்டார்.”

சுவாமியின் சொற்களைக் கேட்டு விக்கித்து நின்றோம்.

# சுரைக்காய் சாதம்



நாங்கள் நண்பர்கள் மூவரும், குடும்பத்தினருடன் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு வீட்டில் சுவாமியுடன் சுமார் 10 நாட்கள் இருந்த சமயம் அது. தினமும் தெய்வீகப் பேரானந்தத்துடன் பொழுது கழிந்து கொண்டிருந்தது. பாடல்கள், ஞானச்செறிவுடன் கூடிய உரையாடல்கள், ஞானிகளின் வரலாறுகள், அவர்களின் போதனைகள் மற்றும் வானியல், உலகியல், அரசியல் முடிவில் முக்கியமாக, முழுமையான மௌனம் என வாழ்வின் உண்மையான சொர்க்கத்தை அவ்வமயம் அனுபவித்துக் கொண்டிருந்தோம். அன்று அன்னதானத்தைப் பற்றிய விஷயங்களை சுவாமி கூறிக்கொண்டிருந்தார்.

வடஇந்தியாவில் சாதுக்களுக்கும், பக்தர்களுக்கும் அளிக்கப்படும் அன்னதானத்தைப்பற்றி சுவாமி விவரித்தார். புனித ஸ்தலங்களிலும், ஆசிரமங்களிலும் பரிமாறப்படும் பொதுவான உணவைப்பற்றி சுவாமி கூறினார். சமைப்பதற்கு எளிதானதாகவும், ஆரோக்கியமானதாகவும், தெய்வ சிந்தனைகளுக்கு ஊறு விளைவிக்காததாகவும் உள்ள எளிய

உணவான சுரைக்காய் சோறுதான் பெரும்பாலும் சமைக்கப்பட்டு சாதுக்களுக்கும், பக்தர்களுக்கும் பரிமாறப்படும் என்று சுவாமி கூறினார்.

இதைக் கேட்ட நண்பர்களுக்கு சன்னதித்தெரு வீட்டிலேயே சுரைக்காய்ச் சோறு சமைத்துச் சாப்பிட ஆசை ஏற்பட்டது. தங்களது ஆசையை சுவாமியிடம் கூறினர். சுவாமி ஆனந்தமாகச் சிரித்தபடி சம்மதித்தார்.

"ஆனால் ஒன்று நண்பா. ஆண்கள்தான் சமையல் செய்ய வேண்டும். பெண்களை உதவிக்கு அழைக்கக் கூடாது."

சுவாமியின் இந்த கூஷரத்தை ஆண்கள் வீராவேசத்தோடு ஒப்புக் கொண்டனர்.

ஆண்கள் திட்டமிட ஆரம்பித்தனர். என்ன பாத்திரங்கள் வாங்க வேண்டும், என்னென்ன அளவில் அரிசி மற்றும் பலசரக்கு, சுரைக்காய் வாங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க அவர்களால் முடியவில்லை.

"சுவாமி என்ன பாத்திரங்கள் மற்றும் என்னென்ன பொருட்கள் வாங்க வேண்டும் என்பதில் மட்டும் பெண்களை எங்களுக்கு உதவி செய்யச் சொல்லுங்கள் சுவாமி."

ஆண்கள் பரிதாபமாக சுவாமியிடம் விண்ணப்பித்தனர். சுவாமி சிரித்தபடி சம்மதித்தார். ஒரு பெரிய ஆலை அதிபதி, ஒரு அச்சக உரிமையாளர், ஒரு வியாபாரி என மூவரும் பரிதாபமாகப் பெண்களிடம் உதவிக்காகக் கெஞ்சினர். சுவாமி சொன்னதினால் பெண்களும் மிகவும் பெருந்தன்மையோடு உதவினர். ஆண்கள் கவனமாகப் பெண்கள் கூறியதைக் குறித்துக் கொண்டனர்.

சுவாமியிடம் உத்திரவு பெற்று வாழ்வில் முதன்முறையாகக் கடை வீதிக்குச் சென்றனர். பெண்கள் சொன்ன பொருட்களை எல்லாம் வாங்கிக்கொண்டு சன்னதித் தெரு வீட்டை அடைந்தனர்.

வீட்டின் பின்புறம் கிணற்றுக்குப் பக்கத்தில் சமையல்கூடத்தை அமைத்தனர். அங்கிருந்த பெரிய துணி துவைக்கும் கல் மீது சுவாமி அமர்ந்து கொண்டார். பெண்களும், குழந்தைகளும் எதிரே இருந்த மேடையில் அமர்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தனர்.

ஆண்கள் கர்மமே கண்ணாக இருந்தனர். ஒருவர் அரிசியை நீர்விட்டு கல் நீங்க அலசினார். மற்றொருவர் சுரைக்காயைத் தோல் சீவி சிறு துண்டங்களாக்கினார். மற்றொருவர் ஸ்டவ்விற்கு எண்ணையிட்டு, திரியிட்டு தயாராக்கினார்.

சுவாமியின் கண்காணிப்பிலும், அறிவுறுத்தலிலும் சமையல் வேலை சுறுசுறுப்பாக நடந்தது. அரிசியும் காயும் நன்கு வெந்து கலந்து சில வாசனைப் பொருட்கள், உப்பு, முடிவில் நெய் சேர்த்து வெற்றிகரமாக சமையலை முடித்தோம். சுரைக்காய் சாதத்திற்குத் தொட்டுக்கொள்ள தேங்காய் துவையலும் செய்தோம்.

எல்லோரையும் அமரச் சொன்னோம். வாங்கி வந்திருந்த வாழை இலையில் சுவாமிக்கு முதலில் படைத்தோம். பின் அனைவருக்கும் பரிமாறினோம். சுவாமி ஆனந்தமாக ஒரு கவளம் எடுத்து அருந்தினார். ஆவலோடு சுவாமியின் முகவதனத்தையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

“அப்பாவின் பிரசாதம்.” என சுவாமி ஆனந்தமாகக் கூறினார்.

அனைவரும் சாப்பிட்டார்கள். நாங்களும் சாப்பிட்டோம். இதுயென்ன தேவாமிர்தமா! வியந்து விக்கித்து நின்றோம். அண்ட சராச்சரங்களைப் படைத்து, காத்து, சம்ஹாரிக்கும் தெய்வமாகிய எங்கள் குருநாதன், எளியோரான எங்களை உணவு செய்ய வைத்து, சுவாமிக்குப் படைக்கும் பெரும் பாக்கியத்தை அருளிய அந்த பெருங்கருணையை என்னவென்று சொல்வது. அவர் பாதம் பணிந்து, கண்களில் நீர் பெருக அவரை நமஸ்கரிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.

# பாதயாத்திரையில் திருக்கோவில் பணி



நாங்கள் நண்பர்கள் மூவர். எங்களுக்கிடையிலான அந்தத் தீவிரமான நட்பு சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களால் அவர் சன்னதியில் ஏற்பட்டது. அதில் ஒருவர் சமுதாயத்தில் மிகப் பெரிய அந்தஸ்த்தில் இருந்தவர். மற்றொருவர் மேல் மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர். அடுத்தவர் சமுதாயத்தின் அடித்தட்டில் அல்லாடி வரும் ஒரு மிகச் சாதாரணமானவர்.

சுவாமியின் கருணையால் இம்மூவருக்கும் இடையிலான நட்பு இணைபிரியாது இணையற்றதாக இருந்தது. இவர்கள் பேச்செல்லாம் வாழ்க்கை, தத்துவம், ஞானிகள், அவர்களின் உபதேசச் சாரங்கள் இவற்றைச் சார்ந்தே இருக்கும். இவர்கள் மூவரும் சந்திக்கும் வேளையில் பேரானந்தம் கூத்தாடிக் கொண்டிருக்கும். இவர்களின் நட்பை சுவாமி பாதுகாத்தார். இவர்களை மற்றவர்கள் இடையூறோ, தொந்திரவோ செய்யாவண்ணம் பார்த்துக்கொண்டார். அவர்கள்

சுவாமியிடம் சென்றால் சுவாமி அவர்களுடனேயே தன் முழு நேரத்தையும் தனியானதொரு இடத்தில் நாட்கணக்கில் கழிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒருநாள் நண்பர்கள் மூவருக்கும் தூத்துக்குடியிலிருந்து திருவண்ணாமலைக்கு நடைப்பயணமாகச் செல்ல ஆசை பிறந்தது. அவர்கள் மூவருக்குமே அன்றாட வாழ்க்கை சலிப்பை ஏற்படுத்தியது. எனவே தனித்து சில காலம் சாலை வழியாக எவரும் அறியாவண்ணம் பாத யாத்திரையாக திருவண்ணாமலை வரை செல்ல முடிவெடுத்தனர்.

மூவரும் அவரவர்கள் வீட்டில் வியாபார நிமித்தமாக வெளியூர் செல்வதாகக் கூறிவிட்டு, பயணத்திற்கான பெட்டிகளை ஓரிடத்தில் வைத்துவிட்டு இரவோடிரவாக நடக்க ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் மிக உற்சாகமாக இருந்த நடைப் பயணம் ஒரே நாளில் வலி மிகுந்து, நடக்க முடியாமல் போய்விட்டது. ஊர் திரும்பிவிட்டோம். சுவாமிக்கு எங்களது வெற்றிகரமான தோல்வியைக் கடிதம் மூலம் தெரிவித்தோம்.

சில நாட்கள் கழித்து சுவாமியிடம் சென்றோம். எங்கள் கதையை சுவாமி கேட்டார். பின் நடப்பதற்கான சூட்சமங்களைக் கூறினார். இலக்கு தூரமாக இருக்கக் கூடாது. தூத்துக்குடி திருவண்ணாமலை தூரத்தை மூன்றாகப் பிரித்து, தூத்துக்குடி மதுரை, பின் மதுரை திருச்சி அதன் பின்னர் திருச்சி திருவண்ணாமலை என பிரித்துக் கொள்ளச் சொன்னார். எடுத்த காரியத்தை முடித்தே ஆகவேண்டும் என்ற வைராக்கியம் தேவை என சிரித்தபடி உணர்த்தினார். எங்களுக்கு உத்வேகம் பிறந்தது.

அடுத்த சில நாட்களில் நாங்கள் பயணப்பட ஆயத்தமானோம். இம்முறை குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தினோம். ஆச்சரியமாக, குடும்பத்தினர் யாரும் தடை சொல்லவில்லை. மாறாக வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

நடந்தோம், வழிநெடுக பேச்செல்லாம் சுவாமியின் பேரருளைப்பற்றியும், சுவாமியின் யதார்த்த தத்துவார்த்தச் சொற்களைப் பற்றி மட்டுமே இருந்தது. சுவாமியின் நினைவு உடலுக்கும் உள்ளத்திற்கும் சக்தியளித்தது. மூன்று நாட்களில் மதுரை வந்தடைந்தோம்.

சுவாமியைப் பார்க்க ஆவல் கொண்டோம். திருவண்ணாமலை சென்றடைந்தோம். சுவாமி எங்களுக்காகவே காத்திருப்பவர் போல் சன்னதித் தெரு வீட்டின் தெரு வாசற்படியில் அமர்ந்திருந்தார். எங்களைக் கண்டதும் சுவாமி பேரானந்தம் அடைந்தார். எங்களை வீட்டினுள் அழைத்துச் சென்றார். பயண விவரங்களைக் கேட்டறிந்தார்.

“நண்பர்களே, அடுத்தமுறை நீங்கள் மதுரையில் இருந்து ஸ்ரீரங்கம் வரை நடந்து வருவீர்களாக. அங்கே காவிரிக் கரையில் அமைந்துள்ள அம்மா மண்டபத்தில் இரவில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். காலையில் காவிரியில் ஸ்நானம் செய்துவிட்டு, அங்கே தசாவதார மண்டபத்தில் இருக்கும் ஜீயர் சுவாமிகளைத் தரிசித்து, இந்த பிச்சைக்காரன் காணிக்கையாகத் தரும் இந்த ஒரு ரூபாய் நாணயத்தை அவரிடம் சமர்ப்பித்து விடுங்கள்.”

சுவாமி ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்தார்.

“நீங்கள் அறிவீர்களா? ஜீயர் சுவாமிகள் தனது தள்ளாத வயதிலும் ஸ்ரீரங்கப் பெருமாள் கோவிலுக்கு ராஜகோபுரம் கட்டும் மகத்தான பணியில் ஈடுபட்டுள்ளார். அவரின் முயற்சி அப்பாவின் அருளால் நிறைவேறும். இந்த நாணயத்தை ஜீயர் சுவாமிகளிடம் சமர்ப்பித்து விட்டு இந்த பிச்சைக்காரனின் நமஸ்காரத்தைத் தெரிவியுங்கள்.”

சுவாமியின் முகம் பொன்னாக ஜொலித்துக் கொண்டிருந்தது. ஊர் திரும்பினோம். சில நாட்கள் கழித்து மதுரையில் இருந்து மீண்டும்

நடக்க ஆரம்பித்தோம். கடும் புயலிலும், மழையிலும் விடாது சுகமாக அனுபவித்து நடந்து அம்மா மண்டபத்தை மாலை நேரத்தில் வந்தடைந்தோம்.

பப்பா ராமதாஸ் சுவாமிகள், சன்னியாச கோலம் தரித்த ஸ்தலமது. அவர் தங்கிய மண்டபம் அது. நாங்கள் உணர்ச்சி மிகுந்த எழுச்சியில் மகிழ்ந்து மயங்கினோம். காலையில் காவிரியில் நீராடி பின்னர் தசாவதார மண்டபம் நோக்கி நடந்தோம். ஜீயர் சுவாமிகளைத் தரிசித்து வணங்கினோம். சுவாமிகள் ஆசிர்வதித்தார்கள். சுவாமி எங்களிடம் கொடுத்திருந்த ஒரு ரூபாய் நாணயத்தைச் சமர்ப்பித்தோம்.

"எங்கள் குருநாதர் திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் தாங்கள் செய்துகொண்டிருக்கும் ராஜகோபுரத் திருப்பணிக்காக தன்னுடைய காணிக்கையாக இந்த நாணயத்தைத் தங்களிடம் சமர்ப்பிக்கச் சொன்னார்கள் சுவாமி."

நமஸ்கரித்து சுவாமி கொடுத்தருளிய ஒரு ருபாய் நாணயத்தை ஜீயர் சுவாமியிடம் கொடுத்தோம்.

ஜீயர் சுவாமிகள் அந்த நாணயத்தைத் தன் கரத்தில் வெகுநேரம் வைத்திருந்தார்.

"இந்த நாணயத்தின் மூலம் உங்கள் குருநாதருக்கு இந்தத் திருப்பணி மேல் உள்ள அபிமானத்தைத் தெரிந்து கொண்டேன். எனது நமஸ்காரத்தை அவருக்குத் தெரிவியுங்கள். எனக்கு வயதாகிவிட்டது. சீக்கிரம் இந்தத் திருப்பணியை முடிக்க வேண்டும். வெகு காலமாக பணமில்லாமல் கோபுரத்தின் ஏழாம் நிலையிலேயே பணி நின்று போய் இருக்கின்றது. உங்கள் குருநாதரிடம் சொல்லி அவரின் பக்தர்களை இந்தத் திருப்பணிக்கு உதவி செய்யச் சொல்லுங்கள்."

ஜீயர் சுவாமி வேண்டுகோள் வைத்தார்.

ஜீயர் சுவாமியை மீண்டும் பணிந்து விடை பெற்றோம். மறுமுறை திருவண்ணாமலை சென்று சுவாமியைத் தரிசித்தோம். ஜீயர் சுவாமிகள் சொல்லி அனுப்பிய செய்தியைச் சொன்னோம்.


"அப்பா இந்த பிச்சைக்காரனுக்கு இந்த வேலையை கொடுக்கவில்லை......"

சுவாமி பேசிக் கொண்டிருக்கும்போதே அங்கிருந்த ஒரு அன்பர் சிறிது பணத்தை சுவாமியின் பாதத்தில் சமர்ப்பித்து விட்டு வணங்கிச் சென்றுவிட்டார். சுவாமி அப்பணத்தை என்னிடம் கொடுத்து அதை ஜீயர் சுவாமிக்கு அனுப்பச் சொன்னார். நானும் ஊர் திரும்பி பணத்தை ஜீயர் சுவாமிக்கு அனுப்பி வைத்தேன்.

இது நடந்த ஒரு வாரத்தில் சுவாமியின் பக்தர் ஒருவர் ஸ்ரீரங்க ராஜகோபுரத்தின் ஏழாம் நிலையைக் கட்டுவதற்கான மொத்த பணத்தையும் ஜீயர் சுவாமியிடம் வழங்கினார். அதன்பின் ராஜகோபுரப் பணி தொய்வில்லாமலும், எந்தவித தடையுமில்லாமலும் முடிவடைந்தது.

நாங்களும் ஒரு வழியாக திருவண்ணாமலை நடந்து சென்று முடித்து விட்டோம்.

# குரு சீடன்



தூத்துக்குடிலிருந்து திருவண்ணாமலைக்கு இரண்டாவது முறையாக பாதயாத்திரை புறப்பட்டோம். நான், நண்பர் முருகேசன், துணைக்கு மற்றொரு நண்பர் என மூவராக மதுரை வந்தடைந்தோம். நடந்து நடந்து கால்கள் மிகவும் வலித்தன. சுவாமியைப் பற்றி பேசிப் பேசி களைப்பைத் தீர்த்துக்கொண்டோம். சுவாமியைப் பற்றிய எங்கள் பேச்சில் நாங்களே மயங்கி சிறிது நேரம் மௌனமாக நடப்பதும் உண்டு. சற்று நேரத்தில் மீண்டும் வலியும் களைப்பும் தோன்றும். வழியில் உள்ள ஏதாவது ஒரு மரத்தடியில் அமர்ந்து ஓய்வு எடுப்போம். பயணம் வெகு சுவாரஸ்யமாக இருந்தது. வலித்துக் களைத்து, மகிழ்ந்து, மௌனமாகி திருவண்ணாலை நோக்கி நடந்து கொண்டே இருந்தோம்.

1980லிருந்து நாங்கள் எப்பொழுது சுவாமியைக் காணச் சென்றாலும் சுவாமி எங்களுடனேயே இருந்து கொள்வார். அல்லது, நாங்கள் அவருடனேயே இருந்து கொள்வோம். சிலசமயம் சுவாமி எங்களுடன் சிவகாசி நாடார் சத்திரத்தில் இருந்து கொள்வார். மற்றும் சில சமயங்களில் நாங்கள் சுவாமியுடன் சன்னதி தெரு வீட்டில் இருந்துகொள்வோம். இரண்டு சமயத்திலும் பெரும்பாலும் வேறு அன்பர்களை சுவாமி அனுமதியளிப்பதில்லை. எனவே சுவாமி மற்ற அன்பர்களோடு அளவளாவி ஆட்கொள்ளும், அருள்பெருக்கைக் காண எங்களுக்கு கொடுப்பினை இல்லாமல் போயிற்று.

நடந்து களைத்திருந்த நாங்கள் சுவாமியின் தர்பாரைச் சற்று தூரத்தில் இருந்து நேரில் காண ஆவல் கொண்டோம். அப்போது தீபத் திருவிழா நேரம். சுவாமியைத் தரிசனம் செய்ய மிகுந்த எண்ணிக்கையில் அடியார்கள் வருவார்கள். எனவே, நாங்கள் அவ்வமயம் சென்றால், சுவாமி எங்களோடு மட்டும் நேரம் செலவிட இயலாமல் போகும். தூர நின்று சுவாமியின் பேரருளைக் கண்டு மகிழலாம் என நினைத்தோம். நினைத்ததை உடனடியாக செயல்படுத்தினோம். உடனே திருவண்ணாமலை நோக்கிப் பேருந்தில் பயணித்தோம்.

காலை 6 மணியளவில் சன்னதித் தெரு வீட்டை அடைந்தோம். சுவாமி வாயிற்படியில் எங்களுக்காகவே காத்திருப்பதுபோல் அமர்ந்திருந்தார். எங்களைக் கண்டதும் பெருஞ்சிரிப்பு சிரித்து “வாங்க“ என வாய்நிறைய அழைத்தார். வீட்டினுள் அழைத்துச்சென்று எங்களை அமரச் செய்துவிட்டு, உதவியாளனை அழைத்தார்.

“இந்தப் பிச்சைக்காரன் வேலையாய் இருக்கிறார். யார் வந்தாலும் கோயிலுக்குப் போகச்சொல்லலாம். இந்தப் பிச்சைக்காரரை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது.”

சுவாமி கண்டிப்போடு உதவியாளனுக்கு உத்தரவிட்டார். உதவியாளனும் சரியென சொல்லிவிட்டு வெளியே செல்ல, சுவாமி பெரிய மரக்கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டார். எங்களுக்குத் திகைப்பாயிருந்தது.

அடுத்த சிலநாட்கள் சுவாமியுடனேயே நாங்கள் இருவரும் கழித்தோம். பேரண்டத்திலிருந்து நாங்கள் பிறந்த ஊர் வரை எல்லா விவரங்களையும் சுவாமி பேசிக்கொண்டே இருந்தார். தூத்துக்குடியில் அரசமரங்கள் அதிகம் என்றார். சிவகாசியை ரயில் மூலம் கடந்ததாகச் சொன்னார். உலக வரலாறு, ஆசிய வரலாறு, இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, அமெரிக்க வரலாறு என சுவாமி பேசிக்கொண்டிருந்தார். அரசியலும் அவரது பேச்சில் இடம் பெற்றது.

நாங்கள் சுவாமியுடன் இருந்த ஆறு நாட்களும் எங்களை அவர் வெளியே அனுப்பவே இல்லை. அங்கிருந்த பழங்கள், பிஸ்கட்டுகள் மற்றும் தின் பண்டங்களை சுவாமி எங்கள் பசிக்கு அவ்வப்போது கொடுத்துக்கொண்டே இருந்தார். காபி பிரியர்களான நாங்கள் கடந்த சில தினங்களாக காபியைப் பார்க்கவே இல்லை. முருகேசன் துணிந்து சுவாமியிடம்,

“சுவாமி, பார்த்தசாரதியை அனுப்பி காபி வாங்கி வரச் சொல்லலாமா?” எனக் கேட்டார்.

“முருகேஷ்ஜி, நாம் இப்போது இறைப்பணியை செய்து கொண்டிருக்கிறோம். நாம் நேரத்தை வீணடிக்கக் கூடாது, முருகேஷ்ஜி.”

சுவாமி மிகுந்த வேகத்துடன் பதிலுரைத்தார். முருகேஷ்ஜிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

வாயிலில் இருந்த சுவாமியின் உதவியாளன், வந்த அன்பர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல், வீட்டின் கேட்டை பூட்டிவிட்டு எதிரே

இருந்த தேரடி மண்டபத்தில் அமர்ந்து கொண்டான். பக்தர்கள் கேட்டைத் தட்டிக்கொண்டே இருந்தார்கள்.

“இங்கு அப்பாவின் வேலைக்கு நிறைய இடையூறுகள் வருகின்றன. நாம் பின்பக்கம் சென்றுவிடுவோம்.”

கூடத்திலிருந்து சுவாமி எங்களை வீட்டின் பின்பக்கம் கிணற்றடிக்கு அழைத்துச் சென்றார். அங்கு துணி துவைக்கும் பெரிய கல்லில் சுவாமி அமர்ந்து கொள்ள, நாங்கள் கீழே அமர்ந்துகொண்டோம். இப்போது வீட்டின் வெளிக்கேட்டைத் தட்டும் சத்தம் அதிகமாகக் கேட்கவில்லை.

“சுவாமி, வெளியே மக்கள் நீங்கள் எங்களுக்கு ஏதோ தனித்து பிரம்ம உபதேசம் செய்து ஞானியாக்கிக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால் இங்கே நாம் உலக சரித்திரத்தைப் பற்றியும், அரசியலைப் பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம், என அவர்களுக்குத் தெரியாது,”

முருகேஷ்ஜி யதார்த்தமாக சொன்னார்.

“முருகேஷ்ஜி, நாம் உலக சரித்திரத்தைப் பற்றி பேசுகிறோமா அல்லது அரசியல் பற்றி பேசுகிறோமா என்பது அல்ல விஷயம். நாம் இங்கே ஒன்றாக இருப்பதுதான் விஷயம், என் தந்தை முடிந்தவரையில் உங்களுடனேயே இருக்குமாறு இந்தப் பிச்சைக்காரனைப் பணித்திருக்கிறார். எனவே, நாம் யாவரும் ஒன்றாக இருக்கவேண்டும். குருவின் காரியங்களை யாரும் கணிக்க முடியாது முருகேஷ்ஜி. குருவின் காரியம் தகுதியானவர்களைத் தந்தையுடன் சேர்ப்பதுதான்.”

சுவாமி திடமாகக் கணீரென்று சொன்னார். பின்பு வெகுநேரம் அமைதி காத்தார். அங்கே புதுவிதமான திகில் சூழ்ந்தது. சுவாமி புகைத்துக் கொண்டே இருந்தார். தான் அதிகப் பிரசங்கித்தனம் செய்துவிட்டோமோ

என்ற பயம் முருகேசனைத் தொற்றிக் கொண்டது. அவர் கண்கள் லேசாகப் பனித்தன. அவர் உணர்ச்சிவசப்படுவதைக் கண்ட சுவாமி மெதுவாகச் சிரித்தார்.

"முருகேஷ்ஜி, ராஜகுளவி எந்தவொரு தகுதியான புழுவையும் தன் கூட்டுக்கு எடுத்து வந்து அதைக் கொத்திக் கொத்தி மற்றொரு ராஜகுளவியாகச் செய்துவிடும். அதேபோல் குருவும், தகுதியான சீடன் தெய்வ சாட்சாத்காரம் அடைவதற்கு அவனைச் சீர்செய்யும் வேலையைத் தொடர்ந்து செய்வார். அந்த வேலையின் பரிணாமம் வேதனை மிகுந்ததாக இருந்தாலும், சீடன் குருவிடமிருந்து தப்ப முடியாது. நாகத்தின் வாயிலிருக்கும் தவளை தப்பமுடியாது. அதுபோல குருவினிடமிருந்தும் சீடன் தப்பவே முடியாது முருகேஷ்ஜி."

சுவாமி மற்றொரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்தார். ஆழ்ந்து புகையை உள்ளிழுத்து வெளியேற்றினார். அவரின் திருமுகம் தகதகவென்று சிவந்து பொன்னாகப் பொலிந்து கொண்டிருந்தது.

"முருகேஷ்ஜி, சிவன் எப்பொழுது வந்தாலும் தன் கணங்களோடு சேர்ந்து வருவார் என பெரியோர்கள் சொல்வார்கள். அதேபோல் குருநாதனும் தன்னுடைய பிரியமான சீடர்களோடுதான் இப்பூவுலகுக்கு எப்பொழுதும் வருவார். குருவும் சீடர்களும் தெய்வ காரியங்களைச் செய்துவிட்டு ஒருவர் பின் ஒருவராகச் சென்றுவிடுவார்கள்.

சுவாமியின் சொற்கள் கேட்டு, ஆனந்த அதிர்வோடு பிரமித்து நின்றோம். சுவாமியின் முகத்தில் தெய்வீகப் புன்னகை மலர்ந்தது.

"பார்த்தசாரதி, இங்குள்ள எல்லாப் பழங்களையும் எடு". சுவாமி உத்தரவிட்டார்.

பக்தர்களால் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டு ஆங்காங்கே இருந்த

பழங்களையெல்லாம் நான் சேகரித்து எடுத்து வந்தேன். வாழைப்பழம், திராட்சை, ஆப்பிள் எனப் பல்வேறு வகையான பழங்கள் இருந்தன. சுவாமி அருகில் இருந்த அலுமினியப் பாத்திரத்தை எடுத்து என் கையில் கொடுத்து அதில் பழங்களையெல்லாம் தோலுரித்துச் சிறு துண்டங்களாக்கிப் போடச் சொன்னார். அங்கே இருந்த மற்ற தின்பண்டங்களான பொரி, சத்துமாவு போன்றவை இருந்த டப்பாக்களையும் சுவாமி எடுத்துக் கொடுத்து அதையும் அந்த அலுமினியப் பாத்திரத்தில் கொட்டச் சொன்னார்.

அருகில் இருந்த நாவல் பழ ஜூஸ் இருந்த பாட்டிலை எடுத்து என்னிடம் கொடுத்து அதையும் அந்தப் பாத்திரத்தில் ஊற்றச் சொன்னார். அந்தக் கலவையை நன்கு பிசையும்படி சுவாமி கூறினார்.

“சுவாமி, என் கையை சுத்தம் செய்துவிட்டு வந்து பிசைகிறேன்” எனக் கூறினேன்.

சுவாமி என் இரண்டு கைகளையும் பிடித்து தடவிக் கொடுத்து

“இது புனிதமான கரங்கள் பார்த்தசாரதி, நீ பிசையலாம்” எனக் கூறினார்.

நான் அந்தக் கலவையை நன்கு பிசைந்தேன். அமுதம் தயாரானது. பக்தர்கள் புஷ்பம் கொண்டு வந்திருந்த தாமரை இலையை எடுத்துவரச் சொன்னார். வீட்டின் பின்பக்கம் செல்லும் வழியில் இருந்த குடிதண்ணீர்ப் பானைக்கு மேல் இருந்த ஜன்னலில் செருகி வைக்கப்பட்டிருந்த தாமரை இலைகளில் பெரியதாக இருந்த ஒன்றை எடுத்து வந்தேன்.

சுவாமி நாங்கள் இருந்த இருக்கை அருகில் வந்து அமர்ந்தார். தாமரை இலையை நடுவில் விரித்து அதில் நான் பிசைந்து வைத்திருந்த அமுதைக் கொட்டச் சொன்னார். இலையில் அமுதக் கலவையை கவனமுடன் வைத்தேன். சுவாமி, நாங்கள் இருவர் சுற்றி அமர்ந்திருக்க,


தாமரை இலை அமுது நடுவில் இருந்தது.

“நாமெல்லோரும் நண்பர்கள். எனவே கௌரவம் பார்க்கத் தேவையில்லை. நாம் அனைவரும் ஒரே இலையிலேயே சாப்பிடுவோம்.”

சுவாமி சொன்னதும் அவரின் பேரன்பினால் எங்கள் உள்ளம் கரைந்து உருகியது. சுவாமியின் பக்கமிருந்து அமுதை எடுத்து எச்சில் பண்ணாதிருக்க நாங்கள் கவனமுடன் இருக்கும்போது நாங்கள் எடுத்த இடத்திலிருந்தே சுவாமி அந்தப் பழக்கலவையை எடுத்து ரசித்து உண்டார். அந்த அமுதப் பழக்கலவை அற்புதமான ருசியுடன் இருந்தது. அதுதான் தெய்வாமிருதம் என்று அப்போது உணர்ந்தோம். உணவு முடிந்தது. இலையை எடுத்து அப்புறப்படுத்திவிட்டு முன்பு போல் மீண்டும் அமர்ந்துகொண்டோம்.

அன்று தீபத் திருநாள். திருவண்ணாமலை மலையின் சிகரத்தில் ஏற்றப்படும் தீபத்தைச் சன்னதித் தெரு வீட்டின் மொட்டை மாடியிலிருந்து எங்களைப் பார்க்கச் சொல்லிவிட்டு, சுவாமி வெளியில் கேட்டருகே நின்றுகொண்டார். தீபதரிசனம் முடிந்தது. அன்று இரவு முழுவதும் சுவாமியுடன் இருந்தோம். மறுநாள் காலை சுவாமி எங்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார். கனத்த இதயத்துடன் சுவாமியை நமஸ்கரித்து விட்டு நாங்கள் ஊர் திரும்பினோம். இந்தச் சம்பவம் நடந்த நான்கு மாதங்களில் முருகேசன் விதேஹ முக்தியடைந்தார்.

# சுவாமியின் திருவிளையாடல்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் தனது அன்பர்களின் ஆத்ம தரிசனத்திற்குத் தடையாக இருக்கும் சரீர அபிமானத்தைப் போக்க விசித்திரமான வழிமுறைகளைக் கையாண்டார்.

தன் மீது பக்தி செலுத்தும் பெண்மணிகளை சுவாமி தெய்வீக சிந்தனையில் ஆழ்த்த அவர்களைப் பாடச் சொல்வது, கும்மி அடித்தவாறு ஆடச்சொல்வது இப்படி சிலபேருக்கு. இன்னும் சிலரிடம், சுவாமி மிகுந்த உரிமை எடுத்துக் கொள்வார். அவருக்குச் சமர்பிக்கப்பட்ட தாமரை மொட்டுகளையும், மலர்ந்த பெரிய தாமரை மலர்களையும் குறிப்பிட்ட சில பெண் அன்பர்களைத் தங்கள் கூந்தலில் சூடிக்கொள்ளச் சொல்வார். அந்த பெண்மணிகளும் அவ்வளவு பெரிய தாமரை மலரைச் சேதாரப்படுத்தாதவாறு தங்கள் கூந்தலில் மிகவும் சிரமப்பட்டுச் சூடிக்கொள்வர்.

அதோடு சுவாமி விட்டுவிட மாட்டார். அவர்களை அழைத்துக்கொண்டு

பெரிய கோவிலுக்குச் செல்வார். கோவிலுக்குச் செல்லும் சாலையில் நடமாடும் மக்களும், கோவிலில் உள்ள பக்தர்களும் இந்தப் பெண்மணிகளை விசித்திரமாக வைத்த கண்கள் அகற்றாமல் பார்ப்பார்கள். பெண்மணிகளுக்கோ வெட்கமும், இனமறியா வேதனையும் பிடுங்கித் தின்னும். அவர்கள் தலை நிமிர்ந்து பார்க்க முடியாமல் கூனிக்குறுகி சுவாமியின் பின்னால், சுவாமியின் திருவடிகளைப் பார்த்தே நடந்து செல்வார்கள்.

இப்பெண்மணிகளைப் பார்க்காமல் கோவிலில் சில பக்தர்கள் இருந்தால், அவர்கள் கவனத்தையும் கவர்ந்திழுக்க, ஒவ்வொரு சன்னிதியிலும் சுவாமி தாமரை மலர் சூடிய பெண்களைப் பாடச் சொல்வார். பெண்கள் வேறு வழியின்றி பாடுவார்கள். இது அங்கிருக்கும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும். இந்த லீலை நாள் முழுவதும் நீடிக்கும். சுவாமி, அவர்களோடு சன்னதித் தெரு வீட்டை அடைந்த பின்னும் அவர்களை தாமரை மலரைக் களைய அனுமதிக்கமாட்டார்.

தாமரையின் பாரமும், சுவாமியின் பேரருளும் அப்பெண்மணிகளை, இன்று யார் திருஷ்டியிலும் படாத, தெய்வீகப் பெண்களாக மாற்றியுள்ளது. அவர்களின் இன்றைய வாழ்க்கை எவருக்கும் பிரமிப்பைக் கொடுக்கும். இன்னும் சில பெண்மணிகளுக்கு, சுவாமி அவர்தம் லீலைகளை மறக்கவே முடியாதவாறு செய்திருக்கிறார்.


ஒரு இளம் தம்பதிகள் சுவாமியிடம் வெளியூரிலிருந்து பேருந்தில் வந்திருந்தனர். சுவாமி அவர்களுக்கு அருளாசி வழங்கினார். அவர்கள் ஊருக்குத் திரும்பும் நேரம் தன் கழுத்தில் யாரோ பக்தர்கள் அணிவித்திருந்த இரண்டு பெரிய மலர் மாலைகளைக் கழற்றி, அவற்றை அந்தத் தம்பதிகளுக்கு அணிவித்தார். மற்றுமொரு சிறிய மலர் மாலையை அந்த இளம் பெண்ணிடம் கொடுத்து அதைத் தன் கூந்தலில் சூடிக்கொள்ளச் சொன்னார். அப்பெண்மணியும் மிகவும்

கஷ்டப்பட்டு அதைத் தன் கூந்தலில் சூடிக் கொண்டார். சுவாமி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

கழுத்தில் அணிந்திருந்த மலர் மாலைகளையும், கூந்தலில் சூடியிருந்த மலர் மாலையையும் தங்கள் வீடு சேரும்வரைக் கழற்றக்கூடாது என சுவாமி

ஆணையிட்டு அனுப்பி வைத்தார். அந்த அன்பர்களும் வேறு வழியின்றி மாலையும் கழுத்துமாக, கூந்தலில் வேறு வித்தியாசமாக மாலையைப் சூடிக்கொண்டு தலை நிமிராமல் பேருந்து நிலையம் சென்று பேருந்தில் அமர்ந்து சுமார் ஆறு மணி நேரம் கழித்து ஊர் போய் சேர்ந்தனர். வழியெல்லாம் இவர்கள், அனைவருக்கும் காட்சிப் பொருளாகவும், கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாகி சோர்வோடு வீடு வந்து சேர்ந்தனர். இப்பெண்மணிகள் இப்பொழுது கணநேரம்கூட சுவாமியை மறக்காது இருக்கின்றனர். வாழ்வின் இன்ப துன்பம் அனைத்திலும் தங்களோடு சுவாமியின் இருப்பையும், அருளையும் இவர்கள் இன்றும் உணர்ந்து வருகின்றனர்.

# துன்பமே பக்தியின் திறவுகோல்



மனித வாழ்க்கையின், சகலவிதமான பிரச்சனைகளும், வேதனைகளும் எல்லா திசைகளிலிருந்தும் தாக்கி அவனைத் திக்குமுக்காட வைத்தது. அவனுக்கிருந்த ஒரே ஆறுதலும், ஆதரவும் அப்போது நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் ஒருவர் மட்டும்தான்.

அன்று அவன் அதிகாலையிலேயே சுவாமியின் சன்னதித் தெரு வீட்டிற்க்கு வந்தடைந்தான். பசியிலும், துன்பங்களிலும் தளர்ந்திருந்த அவன், வீட்டின் தாழ்வாரக் கதவை மெதுவாகத் தட்டினான். வீட்டின் பெரிய மரக்கதவு திறந்தது. சுவாமி காட்சி அளித்தார். அவனைக் கண்டதும் சுவாமியின் முகமலர் மலர்ந்தது.

“வாங்க” சுவாமி வாய்நிறைய அழைத்தார்.

அன்றைய நாட்களில் அவனைக் கண்டாலே விலகிச் செல்வோரே

அதிகம். சுவாமி ஒருவரே அவனை அன்போடு வரவேற்பவர்.

தாழ்வாரக் கதவைத் திறந்து அவன் உள்ளே வந்தான். சுவாமி அவன் கரம் பற்றி வீட்டினுள் அழைத்துச் சென்றார். அவர் எதிரே அவனை அமரவைத்தார். கருணையோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் உணர்வற்று வெறித்துப் பார்த்தவாறு இருந்தான். காபி வந்தது, குடித்தான். காலைச் சிற்றுண்டி வந்தது, புசித்தான்.

"வாழ்வின் துன்பங்களும், வேதனைகளுமே ஒருவனைத் தெய்வீகத்திற்கு அருகில் அழைத்துச் செல்கிறது, அப்பாவை நினைக்கத் தூண்டுகின்றது நண்பா. அப்பா நம்மோடு எப்பொழுதும் இருக்கிறார். எல்லாம் சரியாகிவிடும். கவலை தேவையில்லை நண்பா. நீ அறிவாயா, குந்தி கிருஷ்ணனிடம் என்ன வரம் கேட்டாளென? கிருஷ்ணா, நான் இனி எத்தனை ஜன்மம் எடுத்தாலும் எனக்குத் தாங்க முடியாத கஷ்டத்தையே அருள்வாயாக. அப்போதுதான் நான் உன்னை என்றென்றும் மறவாது நினைத்திருப்பேன் கண்ணா. நண்பா, நீயும் என் தந்தையை நினைத்திருப்பாய்."

சுவாமியின் அருள் நிறைந்த வார்த்தைகள் அவன் உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்தியது. அவன் சற்றே தெளிவடைந்தான். சுவாமி அவனை அண்ணாமலையார் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். அவரின் திருக்கரம் அவனின் கையைப் பற்றியவாரே இருந்தது.

கோவில் கடையில் இரண்டு பொட்டலம் புளியோதரை வாங்கினார். மகிழ மரத்தைச் சுற்றிச் சிதிலமடைந்திருந்த சுவரின் மேல் அமர்ந்து சுவாமியும் அவனும் உணவு அருந்தினர். அப்போது ஒரு மத்திய வயது மாது ஒருவர் வந்தார். சுவாமியின் திருவடி பணிந்தெழுந்தார். கை கூப்பி நமஸ்கரித்தவாறே அம்மாது சுவாமியின் முன் நின்றார். சுவாமி தனது இரு கரங்களையும் உயர்த்தி அம்மாதை ஆசீர்வதித்தார்.

அம்மாதின் முகம் தேஜஸுடன் ஜொலித்தது.

“சாப்பிட்டீர்களா அம்மா” சுவாமி வினவினார்.

“இரவு வீடு சென்றுதான் சமைத்து பசியாறவேண்டும் சுவாமி.” அம்மாது புன்னகையோடு கூறினார்.

சுவாமி அந்த மாதரசிக்கு விடையளித்தார். அவரும் சுவாமியை மீண்டும் நமஸ்கரித்துச் சென்றார்.

“இம்மாதரசியின் கணவர் இவரைத் திருமணம் செய்த, அதே நாளன்று இறந்து போனார். அவரது அந்திமச் சடங்குகள் முடிந்த மறுநாளிலிருந்தே இம்மாதரசி தினமும் அதிகாலையில் கோவிலுக்கு வந்துவிடுவார். கோவிலின் எல்லா பிரகாரங்களிலும் சஞ்சாரம் செய்வார். எவரிடமும் பேசமாட்டார். எப்பொழுதும் அருணாச்சல சிவ, அருணாச்சல சிவ என்று என் தந்தையின் நாமத்தை உச்சரித்தவாறே இருப்பார். இரவில் வீடு சென்று எளிமையான உணவு சமைத்து உண்பார். மீண்டும் மறுநாள் காலையில் கோவில் வந்துவிடுவார். என் தந்தை இம்மாதரசியுடன் எப்பொழுதும் இருக்கின்றார்.”

சுவாமி அந்த அம்மையின் கதையைக் கூறக்கேட்ட அவனின் உள்ளம் அமைதியுற்றது. வழி தெரியாது தவித்த அவனுக்கு இப்போது காணும் இடமெல்லாம் ஒளி வெள்ளம் சூழ்ந்த பாதையாகத் தெரிந்தது. அவனின் மனமும் நாவும் யோகி ராம்சுரத்குமார், யோகி ராம்சுரத்குமார் என இசைத்துக் கொண்டிருக்க ஆரம்பித்தது. சுவாமி ஆனந்தம் பொங்கச் சிரித்தார். அந்தப் பேரானந்தம் அவனையும் பற்றிக் கொண்டது. இன்று அவன் நன்கிருக்கின்றான். சுவாமியை மறவாதிருக்கின்றான். வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

# சிக்கல் தீர்த்த சுவாமி



ஒரு காலைப் பொழுது. திருவண்ணாமலை பூக்கடையில் அவன் நான்கு அணாவிற்கு புஷ்பம் வாங்கினான். மற்றொரு கடையில் ஒரு எலுமிச்சை பழம் வாங்கினான். நேராக சுவாமி யோகி ராம்சுரத்குமார் இருக்கும் சன்னதித்தெரு வீட்டிற்குச் சென்றான். வீட்டின் இரும்புக் கதவை சற்று மெதுவாகத் தட்டினான்.

அவன் தன் வாழ்வில் தானாகவே பல சிக்கல்களை ஏற்படுத்திக் கொண்டவன். அந்த சிக்கல்கள் அவனை நெருக்கித் திணற வைத்தபோது, அதிலிருந்து விடுபட கடுமையாக முயற்சித்தும் அவனால் முடியவில்லை. தெய்வ நம்பிக்கை அவனுக்கு சிறிது இருந்தும், அவனால் பிரார்த்தனை செய்ய முடியவில்லை. தெளிவாக சிந்திக்கவோ,

பொறுமையாக எச்செயலையும் செய்யவோ முடியவில்லை.

தெளிவும், பொறுமையும் இல்லாததால் அவன் வாழ்வின் சிக்கல்களில் மேலும் முடிச்சுகள் விழ, அதிலிருந்து விடுபடவே முடியாது தவியாய் தவித்து வந்தான். நம் சுவாமியை சில காலமாகவே அவன் அறிந்திருந்தான். அன்று சுவாமியைத் தரிசிக்க சன்னதித் தெரு வீட்டிற்க்கு வந்தான்.

சுவாமி வீட்டினுள் இருந்து வெளியே வந்தார். இரும்புக் கதவிற்கு வெளியில் நின்றவனைச் சற்று நேரம் உற்று நோக்கினார். பின்னர் கதவைத் திறந்தார். அவன் கையை வாஞ்சையோடு பற்றி அவனை உள்ளே அழைத்துச் சென்றார். கூடத்தில் பல பக்தர்கள் பரவசத்துடன் சுவாமியின் நாமத்தைப் பாடிக் கொண்டிருந்தனர். சுவாமி அவரிடத்தில் அமர்ந்துகொண்டார்.

அவன் தான் கொணர்ந்த, மந்தார இலையில் கட்டப்பட்ட பூவையும், எலுமிச்சை பழத்தையும் சுவாமியின் திருவடியில் வைத்து நமஸ்கரித்தான். சுவாமி அவன் முதுகை அன்போடு வருடி மெதுவாக சில முறை தட்டினார். சுவாமி அவனைத் தன் எதிரே அமரவைத்தார்.

அவன் வாங்கிவந்த புஷ்ப பொட்டலத்தை சுவாமி முகர்ந்து பார்த்தார். பின்னர் அப்பொட்டலத்தைச் சுற்றியுள்ள நூலைப் பிரிக்க முயன்றார். நூல் சிக்கலாகிக் கிடந்தது. சுவாமி பொறுமையாக நூல் சிக்கலைப் பிரிக்க முயற்சித்தார். சிக்கல்கள் தீவிரமாக இருந்தது. சுவாமிக்கு கூடத்தில் வெளிச்சம் போதவில்லை. மெதுவாக எழுந்து கூடத்தின் பின்புறம் சூரிய வெளிச்சம் பிரகாசமாக இருக்கும் இடத்தில் அமர்ந்து பூப்பொட்டலத்தின் சிக்கலை அவிழ்க்க முயற்சித்தார்.

உள்ளே பக்தர்கள் நாமம் பாடியபடி இருந்தனர். சுவாமி நூல் அறுந்து

போகாமல் சிக்கலைப் பிரிக்க, விடாது முயற்சித்தவாறு இருந்தார். நேரம் கடந்தவாறு இருந்தது. சுமார் ஒரு மணி நேரம் கடந்திருக்கும். முடிவில் சுவாமி நூல் அறுந்து போகாமல் சிக்கல்களைப் பிரித்து உள்ளே இருந்த புஷ்பத்தை வெளியே எடுத்தார். அந்த நூலை சிக்கலாகாமல் அழகாகச் சுற்றி அவரின் பின்புறமிருந்த ஜன்னலின் மரச்சட்டத்தில் பத்திரப்படுத்தினார். இலையை ஜன்னலின் கம்பியின் இடையில் சொருகி வைத்தார். சுவாமியின் முகமலர் மலர்ந்தது. பேரானந்தத்துடன் கூடத்தினுள் நுழைந்தார். அவனெதிரே நின்றார். அந்தக் கதம்பப் பூச்சரத்தைத் தன் கழுத்தில் அணிந்து கொண்டார்.

சுவாமி ஆனந்தமாகச் சிரித்தார். அவன் கண்களில் நீர் வடிந்தது. அவன் இதயத்தில் இனமறியா பரவசமும், பாதுகாப்பான உணர்வும் தோன்றியது. சுவாமி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். அவன் வாழ்வின் முடிச்சுகளும், சிக்கல்களும் காலப்போக்கில் விடுபட்டுச் சென்றன. சுவாமி அவனை என்றென்றும் அவரை நினைத்து வாழவைத்தார். அவன் இன்றும் சுவாமியின் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

# யோகி சொன்ன புத்தகங்கள்



சுவாமி தன்னுடைய பல பக்தர்களுக்கு அவர்கள் தெளிவுரும் வண்ணம் ஆன்மீக உபதேச சாரங்கள் நிரம்பிய பற்பல புத்தகங்களைப் படிக்கச் சொல்லியிருந்தார். சிலருக்கு இராமாயணம், சிலருக்கு மகாபாரதம் என விதவிதமான எண்ண அலைகளை உடையவர்களுக்குத் தகுந்தபடியாக நூல்களைத் தேர்வு செய்து படிக்கச் சொன்னார். இராமர் கதையும், கிருஷ்ணன் கதையும் ஒவ்வொருவரும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள், முதியவர்கள் என, அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும் எனக் கூறினார்.

இக்கதைகள் நல்ல குணவான்களையும், குணவதிகளையும் நாட்டில் உருவாக்கும் எனக் கூறினார். சிலரை சிவபுராணம் பாராயாணம் செய்யச் சொன்னார். சிலருக்குக் கந்தசஷ்டி கவசத்தை மனனம் செய்யச் சொன்னார். தினமும் 32 முறை சொல்ல வேண்டும் என ஒரு பக்தையிடம் சுவாமி சொல்ல, பக்தையும் அவ்விதமே ஆறுமாதங்களுக்கு தினமும் 32 முறை கந்தசஷ்டி கவசம் சொன்னார். மற்றும் சிலரை சி. ராஜகோபாலாச்சாரியார் எழுதிய ‘சக்கரவர்த்தி திருமகன்‘ எனும் இராமாயணக் கதையையும், ‘வியாசர் விருந்து’

எனும் மகாபாரதக் கதையையும் படிக்கச் சொல்லியிருந்தார்.

ஒரு சிலருக்கு 'திருவிளையாடல் புராணத்தை' படிக்கச் சொல்லி, அவர்கள் வரும்போதெல்லாம் அதில் வரும் கதையைச் சொல்லச் சொல்லுவார். இன்னும் சிலருக்கு 'கம்பராமாயணத்தை' படிக்கச் சொல்லி, அவர்கள் சுவாமியிடம் வரும்போதெல்லாம் 'கம்பராமாயணத்தை' சொல்லச் சொல்லுவார். இன்னும் சிலருக்குக் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' புத்தகத்தை திரும்பத் திரும்ப படிக்கச் சொல்லியிருந்தார்.

சில பக்தர்களை பப்பா ராமதாசரின் 'இன் க்வெஸ்ட் ஆ்ஃப் காட்' மற்றும் 'இன் தி விஷன் ஆ்ஃப் காட்' ஆகிய புத்தகங்களையும் 'ஷார்ட் ஸ்டோரிஸ் டோல்ட் பை சுவாமி ராமதாஸ்' என்ற புத்தகத்தையும் மற்றும் 'கோஸ்பல் ஆ்ஃப் சுவாமி ராமதாஸ்' என்ற புத்தகத்தையும் படிக்கவைத்தார். மற்றும் சிலருக்கு சுவாமி ராமதீர்த்தரின் 'இன் வுட்ஸ் ஆ்ஃப் காட் ரியலைசேஷன்' என்ற புத்தகத்தின் ஆறு தொகுப்புகளையும், ஸ்ரீ அரவிந்தர் இயற்றிய 'சாவித்திரி' என்ற ஆங்கிலக் கவிதை நூலையும் படிக்குமாறு பரிந்துரை செய்தார்.

இன்னும் சில பக்தர்களுக்கு ஜே. கிருஷ்ணமூர்த்தியின் பல நூல்களைப் படிக்கச் சொல்லியிருந்தார். அவற்றில் மேரி லூட்டின்ஸ் எழுதிய 'இயர்ஸ் ஆ்ஃப் அவேகனிங்', 'இயர்ஸ் ஆ்ஃப் ஃபுல்ஃபில்மெண்ட்' என்ற ஜே.கிருஷ்ண மூர்த்தியின் வாழ்க்கை சரிதத்தைச் சொல்லும் இரண்டு முக்கிய புத்தகங்கள் அடங்கும். இது மட்டுமல்ல, ஜே. கிருஷ்ணமூர்த்தியின் 'கமெண்ட்ரிஸ் ஆன் லிவ்விங்' மற்றும் ஜே, கிருஷ்ணமூர்த்தீஸ் நோட்புக்' என்ற புத்தகங்களையும் சுவாமி பரிந்துரை செய்தார்.

ரா.கணபதி தொகுத்து வழங்கிய 'தெய்வத்தின் குரல்' எனும் காஞ்சி ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி மஹாசுவாமிகள் அருளிய உபதேசசாரம் அடங்கிய புத்தகங்களைப் படிக்கவும் பரிந்துரைத்தார். ஒரு பக்தரை

சுவாமி 'தெய்வத்தின் குரல்' புத்தகத் தொகுப்பை வாங்கி அவர் சந்திக்கும் அனைத்து பக்தர்களுக்கும் இலவசமாக வழங்க வேண்டும் எனவும் ஆணையிட்டார்.

நோபல் பரிசு பெற்ற ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'கீதாஞ்சலி' யைச் சிலருக்கும் மற்றொரு நோபல் பரிசு வென்ற ஜெர்மனியரான ஹெர்மன் ஹெஸ் எழுதிய 'சித்தார்த்தா' எனும் கதையையும் சுவாமி ஒரு சிலருக்குப் படிக்கச் சொல்லி பரிந்துரைத்தார். ஒவ்வொரு இந்தியனும் 'பகவத்கீதையை' கட்டாயம் படித்திருக்க வேண்டும் எனவும், சித்பவானந்த சுவாமிகள் தமிழில் எழுதிய விளக்கவுரை அனைத்துப் பக்தர்கள் இல்லத்திலும் கட்டாயம் இருக்க வேண்டும் எனவும் சுவாமி கூறியுள்ளார். டால்ஸ்டாயின் சிறுகதைகள் அடங்கிய புத்தகமான 'ஷார்ட் ஸ்டோரீஸ் ஆஃப் டால்ஸ்டாய்' என்ற புத்தகத்தையும் சுவாமி சிலருக்குப் பரிந்துரைத்தார்.

பக்தர்களின் மனோபவங்களுக்கு ஏற்ப சுவாமி பற்பல புத்தகங்களை அவரவர்க்கு ஏற்றபடி பரிந்துரைத்தார். ஆச்சார்யா ரஜனீஷ் புத்தகங்களையும் சுவாமி பலரைப் படிக்க வைத்துள்ளார். 'காந்தி' எனும் திரைப்படத்தையும் சுவாமி சிலபக்தர்களைப் பார்க்கச் சொன்னது மட்டுமல்லாது, திருவண்ணா மலையில் ஒரு நண்பரின் இல்லத்துக்குச் சென்று 'காந்தி' வீடியோவையும் டெலிவிஷன் மூலம் பார்த்து ரசித்தார்.

"லைட் ஆஃப் ஏசியா' என்ற புத்தரைப் பற்றிய நூலும் சிலருக்கு சுவாமியால் பரிந்துரைக்கப்பட்டது. நான் அறிந்தவகையில் இவ்வளவு புத்தகங்களையும் சுவாமி சொல்லியிருந்தார். இன்னும் நான் அறியாது எத்தனை பேருக்கு எத்தனை விதமான புத்தகங்களைப் பரிந்துரைத்திருப்பாரோ, அவருக்கே வெளிச்சம்.

சுவாமி பரிந்துரைத்த புத்தகங்களையெல்லாம் நான் தொகுத்து இங்கே குறிப்பிட்டுள்ளேன். சுவாமியின் பக்தர்களின் இல்லங்களில்

இப்புத்தகங்கள் இருந்தால், பிற்காலச் சந்ததியருக்கு ஒருக்கால் உதவக்கூடும்.

இராமாயணம் (சக்ரவர்த்தி திருமகன் - ராஜகோபாலாச்சாரியார் எழுதியது) தமிழ், ஆங்கிலம்.

மகாபாரதம் (வியாசர் விருந்து - ராஜகோபாலாச்சாரியார் எழுதியது) தமிழ், ஆங்கிலம்.

சிவபுராணம் (தமிழ்).
கந்தசஷ்டி கவசம் (தமிழ்).

கம்பராமாயணம் (தமிழ்).

பொன்னியின் செல்வன் (தமிழ்).

இன் க்வெஸ்ட் ஆஃப் காட் (In Quest of God – Swami Ramdas) English

இன் தி விஷன் ஆஃப் காட் (In the Vision of God – Swami Ramdas) English

ஷார்ட் ஸ்டோரிஸ் டோல்ட் பை ஸ்வாமி ராமதாஸ் (Short Stories Told by Swami Ramdas) English

கோஸ்பல் ஆஃப் ஸ்வாமி ராமதாஸ் (Gospal of Swami Ramdas) English)

இன்வுட்ஸ் ஆஃப் காட் ரியலைசேஷன் (In Woods of God Realisation – Swami Ramathirtha) English

சாவித்ரி (Savithri – Sri Aurabindo) English

இயர்ஸ் ஆஃப் அவேகனிங் (Years of Awakening – Mary Lutyns on J.Krishnamoorthi’s Life) English

இயர்ஸ் ஆ்ஃப் ஃபுல்ஃபில்மெண்ட் (Years of Fulfilment by Mary Lutyns on J. Krishnamoorthi's Life) English

கமெண்ட்ரீஸ் ஆன் லிவ்விங் (Commentaries on Living - J. Krishnamoorthi) English

கிருஷ்ணமூர்த்திஸ் நோட்புக் (Krishnamoorthi's Notebook) English

தெய்வத்தின் குரல் (காஞ்சி ஸ்ரீ சந்திரசேகர சரஸ்வதி சுவாமியின் அருளுரைகள். ரா.கணபதி தொகுத்தது) தமிழ்

கீதாஞ்சலி (Gitanjali - Rabindranath Tagore) தமிழாக்கம்

சித்தார்த்தா (Siddartha - Hermon Hesse) English

பகவத்கீதை உரை (சுவாமி சித்பவானந்தர் தமிழில் எழுதிய விளக்கவுரை)

ஷார்ட்ஸ் ஸ்டோரிஸ் ஆ்ஃப் டால்ஸ்டாய் (Short Stories of Tolstoy) English

புக்ஸ் ஆ்ஃப் ஆச்சார்யா ரஜனீஷ் (குறிப்பாக Untill You Die ) English

காந்தி (திரைப்படம்) Tamil & English

ஆட்டோபயோகிர்ஃபி ஆ்ஃப் எ யோகி (Autobiogaphy of a Yogi by Paramahamsa Yogananda) English

நிலாப்பாட்டி (பெரியசாமிதூரன் எழுதிய சிறுகதை)

பஞ்சதந்திரக் கதைகள்

நாரதர் பக்தி சூத்திரங்கள்

விஷிஸ்டாத்வைதம்

பாரதியார் பாடல்கள்

தொல்காப்பியம்

# சக்ரவர்த்தி



“சுவாமிஜி இங்கு எப்படி வாழ்கிறீர்கள்? இந்த உணவு, இந்த சீதோஷ்ணம், இங்குள்ள மக்களின் பழக்கவழக்கங்கள் இதையெல்லாம் பொறுத்துக் கொண்டு இவ்விடம் எப்படி உங்களால் வாழமுடிகிறது?”

சுவாமியைப் பார்த்து அந்த வடக்கத்திய சன்னியாசி வடஇந்திய மொழியில் கேட்டார். திருவண்ணாமலையில் சில அனுபவங்களால் பாதிப்படைந்த அவரைப் பார்த்து, சுவாமி பெருஞ்சிரிப்பு சிரித்து கம்பீரமாகத் தூணில் சாய்ந்து கொண்டு ஒரு சக்ரவர்த்தி போல காலை நீட்டிக்கொண்டு ஹிந்தி மொழியில் பதிலுரைத்தார்.

“இங்கு இந்தப் பிச்சைக்காரன் பெருமையோடு வாழ்கிறான். மக்கள் வருகின்றனர், தாள் பணிகின்றனர், உணவு அளிக்கின்றனர், புத்தாடை கொடுத்து மகிழ்கின்றனர், இங்கே இந்தப் பிச்சைக்காரன் பெருமிதத்தோடு வாழ்கின்றான். இங்கே உஷ்ணமும் அதிகமில்லை,

குளிரும் அதிகமில்லை. இதமான இந்தத் தட்பவெப்பத்தில் இந்தப் பிச்சைக்காரனை என் தந்தை கம்பீரத்தோடு பெருமையோடு வாழ வைத்திருக்கிறார். என் தந்தை பல காரியங்களைப் பக்தர்களுக்காகச் செய்துவிட்டு, பெயரையும், புகழையும் இந்தப் பிச்சைக்காரனுக்கு அளிக்கிறார். பக்தர்களும் இந்தப் பிச்சைக்காரனின் பெயரை உச்சரித்து மகிழ்கின்றனர். சுவாமி, இங்கே இந்தப் பிச்சைக்காரன் பெருமையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான்."

அந்த வடக்கத்திய சன்னியாசி எதுவும் சொல்லாமல் எழுந்து நின்றார். சுவாமி அவருக்கு ஒரு வாழைப்பழத்தைப் பிரசாதமாகக் கொடுக்க அந்தச் சன்னியாசி சென்றுவிட்டார்.

அடுத்த வேளை உணவு எங்கிருந்து வருமெனத் தெரியாது.வங்கிகளில் பணம் போட்டு வைக்கவில்லை. போட்டிருப்பதோ அழுக்கால் கருப்பேறிய கந்தலாகும் நிலையில் உள்ள வஸ்திரம். மறுநாளையைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், பொங்கிவரும் ஆனந்தப் பெருஞ்சிரிப்பு. மக்களின் வேதனைகளையும், துயரங்களையும், வேண்டுதல்களையும் அன்றாடம் கேட்டாலும், துளியும் முகம் சுளிக்காது அவர்களுக்குத் தைரியமூட்டி ஆறுதலளிக்கும் அந்த மஹா புருஷனைக் கண்டு வியந்து விக்கித்து நின்றேன். சன்னதித்தெரு வீட்டில் வாழ்ந்த அந்த மஹாயோகியை, அந்த தெய்வீகத்தை வணங்கி நினைத்துப் பார்க்கிறேன்.

# தந்தையைப் பார்ப்பது எப்படி?



“தந்தையை (கடவுளை) நேருக்கு நேர் எப்படி பார்ப்பது?” ஒரு நாள் காலையிலிருந்து சுவாமி தன்னைக் காண வந்த அனைவரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கலானார். அவ்வமயம் நானும் சுவாமியோடு இருந்தேன்.

“இந்தப் பிச்சைக்காரன் தான், தன் தந்தையின் மடியில்தான் அமர்ந்திருக்கிறான் என்பதை அறிவான். எனினும், அவனால் தந்தையை முகத்துக்கு முகம் காண முடியவில்லை, எப்படித் தந்தையை முகத்துக்கு முகம், நேருக்கு நேர் தரிசிப்பது?.”

இதே கேள்வியை வெவ்வேறு வகைகளில், அநேக பாவனைகளில் சுவாமி மாற்றி மாற்றிக் கேட்டுக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு முறையும் அந்தக் கேள்வியில் உயிர்த்துடிப்புத் தெரிந்தது. உண்மையாகவே

அறிந்துகொள்ளும் தாபத்தில்தான் சுவாமி அக்கேள்வியைக் கேட்பதுபோல் தோன்றியது. அறிந்துகொள்ளக் கேட்டாரா அல்லது அறிந்துகொள்ள வைப்பதற்காக கேட்டாரா?. சுவாமி ஏதோ தத்துவார்த்த பேருண்மையை விளக்கப் போவதாக நான் எண்ணினேன். அவரையே உற்று நோக்கியபடி அமர்ந்திருந்தேன்.

“சுவாமி, நீங்கள்தான் தந்தை, நீங்கள் மட்டும்தான் இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கிறீர்கள். அதனால் தங்களால் தங்களின் முகத்தையே பார்க்க முடியாது சுவாமி”.

ஒரு பக்தர் விளக்கமளித்தார்.

சுவாமி அதைக் கண்டு கொள்ளவே இல்லை. மறுபடியும் அதே கேள்வியைக் கேட்க ஆரம்பித்தார். மற்றுமொரு பக்தர் வேறொறு விதமாக விவரித்தார். சுவாமி அதையும் பொருட்படுத்தவில்லை. மறுபடியும் அதே கேள்வி. காலையிலிருந்து என்னையும் சுவாமி பலமுறை இக்கேள்வியைக் கேட்டும், நான் பதிலே சொல்லவில்லை. சுவாமி எனக்கு விளங்க வைப்பார் என்ற எதிர்பார்ப்புடன் மௌனமாக அமர்ந்திருந்தேன்.

மாலைப்பொழுது ஆனது. சுவாமியின் கேள்வி புதுமை மங்காமல் புதுப்பொலிவுடன் திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருந்தது. எத்தனையோ பக்தர்கள் வந்தனர், சென்றனர். சிலர் பதில் சொல்ல பிரயத்தனப்பட்டார்கள். மற்றும் சிலர் தங்கள் மேதாவிலாசத்தை வெளிப்படுத்த எண்ணி தத்துவ மழை பொழிந்தனர். ஆனால், சுவாமி அதே கேள்வியைத் திரும்பத் திரும்ப கேட்டுக்கொண்டே இருந்தார். பக்தர்களில் பெரும்பாலோர் விரக்தியுடன் வெளியேறினர்.

“பார்த்தசாரதி, எனது தந்தையின் மடியில் நான் அமர்ந்திருக்கிறேன்.

எனினும் என்னால் என் தந்தையின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை. எப்படி என் தந்தையை முகத்துக்கு முகம் நேரில் பார்ப்பது?."


சுவாமி மீண்டும் என்னை நோக்கி வினவினார்.

காலையிலிருந்து சுவாமி இந்த மர்மமுடிச்சுக்கு விடையளிப்பார் என பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்த எனக்கு சுவாமி மீண்டும் இக்கேள்வியை என்னிடம் கேட்டபோது பித்துப் பிடித்தது போல் ஆயிற்று. வெடித்துவிட்டேன். சுவாமியைச் சுட்டிக் காட்டியபடி கத்தினேன்.

"சுவாமி, நான் என் தந்தையை நேருக்கு நேர், முகத்துக்கு முகம் பார்த்துவிட்டேன். தங்களால் தங்கள் தந்தையின் முகத்தைப் பார்க்க முடியாவிட்டால் அது உங்கள் விதி சுவாமி. நான் என்ன செய்யட்டும்?".

நான் பொங்கிப் பொறுமையிழந்து கத்தியதைக் கண்டு சுவாமி அமர்க்களமாக வெடிச்சிரிப்புச் சிரித்தார். அச்சிரிப்பு அலையலையாய் ஆனந்தப் பிரவாகமாய் வந்துகொண்டே இருந்தது. அந்தச் சிரிப்பில் நான் வெட்கி, நாணித் தலைகுனிந்து, உருகிக் கரைந்துவிட்டேன். அந்தக் கேள்வியும் அந்த நொடியிலிருந்து நின்று போய்விட்டது. சுவாமி மீண்டும் அக்கேள்வியை கேட்கவே இல்லை. அங்கு கேள்வியும் இல்லை,பதிலும் இல்லை, பேரானந்தம் மட்டும்தான் இருந்தது.

# சுவாமியே பரப்பிரம்மம்



சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் பற்பல விதமான பக்தர்கள் வந்தார்கள் அவர்களில், சன்னியாசிகள், இல்லறவாசிகள், பிரம்மச்சாரிகள், ஆத்ம சாதகர்கள், ஞானிகள், மடாதிபதிகள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், உயரதிகாரிகள், மேலும் பற்பல விற்பன்னர்கள், பாமர மக்கள், அரசியல்வாதிகள் என அனைத்துத் தரப்பினரும் அடங்குவர்.

இவர்களிடம் சுவாமி உரையாடும் அழகையும், பாங்கையும் வர்ணிப்பது அத்தனை எளிதான காரியம் அல்ல. சுவாமியின் சொற்களையும், பூரிப்பான பெருநகையையும் கேட்க கேட்க பரமானந்தம் ஏற்படும். அவரவர் புரிதலுக்கேற்ப சுவாமியின் சொற்பிரயோகம் அனைவரையும் பிரமிக்க வைத்துவிடும். சுவாமியிடம் இருக்கும்போது "நான்" எங்கோ ஓடிவிடும். ஒருவித இளைப்பாறுதல் ஏற்படும். உள்ளும் புறமும் ஆனந்தத்தில் மிதந்து கிடக்கும். அங்கே காலம், பிரமாணம், காரியம் என்று எல்லா செயலும் நின்று போயிருக்கும். ஒருவித ஞானப் போதையில் உயிர் உல்லாசமடைந்திருக்கும்.

1970களின் பிற்பகுதியில் சுவாமியை அடிக்கடி தரிசித்த

பெருஞ்செல்வந்தரான, ஒரு பக்தருக்குச் சுவாமியுடனேயே சதா சர்வகாலமும் இருக்க வேண்டும் என்ற அடங்கா ஆசை ஏற்பட்டது. குடும்பத்துடனேயே எப்பொழுதும் சுவாமியினிடத்தில் வரும் அவர், குழந்தைகளின் படிப்பிற்காக சீக்கிரம் ஊர் திரும்பும் கட்டாயத்தினால் சுவாமியை விட்டு சீக்கிரம் பிரிய நேர்ந்தது.

எனவே மறுமுறை அவர் தனித்து சுவாமியிடம் வந்தார். அதிக நாள் சுவாமியுடன் இருந்து ஆத்ம சாட்சாத்காரம் அடைய விரும்பிய அவரை சுவாமி அவர் தனியாக வந்ததற்க்காக கடுமையான சொற்களினால் கண்டித்தார். மறுபடியும் வருவதென்றால் குடும்பத்தோடுதான் வர வேண்டும் என கண்டித்துக் கூறினார். பக்தர் சோர்ந்து போனார். சற்று நேரத்திலேயே சுவாமி அவரை அனுப்பி விட்டார்.

ஊர் திரும்பிய பக்தர் சில நாட்கள் கழித்து சுவாமியிடம் கிடைக்கும் அந்த ஆனந்த அமிர்தத்தைப் பருகிப் பரவசமடைய உடுத்திய துணியோடு, திருவண்ணாமலை செல்வதற்காகும் பேருந்து கட்டணத்திற்கு மட்டும் பணத்தை எடுத்துக் கொண்டு வீட்டில் யாரிடமும் சொல்லாமல் திருவண்ணாமலைக்குப் பயணப்பட்டார்.

சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் முன் நின்றார். சற்றே தயங்கினார். திடீரென சுவாமி உள்ளிருந்து வெளியில் வந்தார். இரும்புக் கதவிற்கு வெளியே நிற்கும் பக்தரைப் பார்த்தார். மெதுவாகக் கதவைத் திறந்தார். பக்தரைக் கைப்பிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். பக்தரை அமரச் சொன்னார். சுவாமி தன் இருக்கையில் அமர்ந்தார். அங்கே வேறு எவரும் இல்லை.

சுவாமி சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்தார். அங்கே ஆழ்ந்த அமைதி நிலவியது. சுவாமியின் சிரிப்போ பேச்சோ எதுவுமேயில்லை. நேரம் சென்று கொண்டே இருந்தது.

பிரம்மத்தின் பேரமைதியை அந்த பக்தர் இதுவரை அறியாதவர். அதில் அனைத்தும் கரைந்து போய்விடும் என்பதும், அது அகண்ட பிரம்மாண்டமான, எல்லையில்லா பெருவெளி என்பதும், அங்கு எதுவுமே உணரப்படுவதில்லை, உணர்பவரும் இல்லை, உணர்ச்சிகளுக்கும் அங்கு இடமில்லை என்பதும் அவர் அறிந்திருக்கவில்லை. அங்கு அதைத் தவிர்த்து அவரோ வேறு எவரோ, எதுவுமோ இருக்க இயலாது என்பதையும் அவர் அறியவில்லை. பக்தருக்கு இந்த ஆழ்ந்த அமைதி முற்றிலும் புதியது. ஒருவித இனம்தெரியாத பயம் அவரைத் தொற்றிக் கொண்டது. வெகு நேரம் கடந்தது. அங்கே ஒரு செயலும் நடக்கவில்லை.

திடீரென சுவாமி பக்தரிடம் ஏதேனும் சொல்ல வேண்டுமா எனக் கேட்டார். நான் இங்கேயே இருப்பதற்காக வந்துள்ளேன் சுவாமி என்றார். இங்கே இந்த பிச்சைக்காரர் போல் நிறைய சோம்பேறிகள் இருக்கிறார்கள். உங்களுக்கு ஊரில் வேலை இருக்கும், எனச் சொல்லி அங்கு பாயின் கீழ் இருந்த பணத்தை எடுத்து அவர் கையில் கொடுத்து, போயிட்டு வாங்க ராஜா என்று சொல்லி பக்தரை அனுப்பி வைத்தார். பக்தரும் ஒருவித நிம்மதி பெருமூச்சு விட்டு ஊர் வந்து சேர்ந்தார்.

சுவாமியுடன் தனித்திருப்பது தவமாகும். தவம் செய்ய பக்தியும், தனித்திருக்கும் வலிமையும், வைராக்கியமும் வேண்டும். வெறும் ஆசையிருந்தால் மட்டும் போதாது.

# குணமாகியது



“பார்த்தசாரதி, இந்தப் பிச்சைக்காரன் நீ ஜே.கிருஷ்ணமூர்த்தி ஃப்பௌண்டேஷன் வசந்த விஹாரில் மூன்று நாட்கள் தங்கியிருக்க வேண்டுமென விரும்புகிறான்.”

அப்பொழுதுதான் சிவகாசியிலிருந்து திருவண்ணாமலைக்கு அதிகாலையில் சுவாமியைப் பார்க்கச் சென்றபோது இவ்விதம் சுவாமி கூறினார். சுவாமியைப் பார்க்க வந்த எனக்கு சுவாமி ஏன் என்னை சென்னை அனுப்புகிறார் என்று புரியவில்லை, சிவகாசியிலிருந்து திருவண்ணாமலை வந்து மீண்டும் சிவகாசி செல்லத்தான் என்னிடம் பணம் இருந்தது. மேலும் மூன்று நாட்கள் சென்னை சென்றுவர பணம் போதாது என நான் நினைத்தபோது சுவாமி தேவையான பணத்தை எடுத்துக் கொடுத்து சென்னை சென்று வசந்தவிஹாரில் மூன்று நாட்கள் தங்கியிருந்துவிட்டு மீண்டும் திருவண்ணாமலை வந்து சுவாமியைப் பார்த்துவிட்டுத்தான் சிவகாசி செல்ல வேண்டுமெனச் சொன்னார்.

என்னிடம் போதுமான பணம் இல்லை என்பதை சுவாமி எவ்விதம் அறிந்தார் என்றும் தெரியவில்லை. சுவாமியை நமஸ்கரித்துவிட்டு, திருவண்ணாமலை பஸ் நிலையம் சென்றேன். சென்னை செல்லும் பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன்.

ஜே.கிருஷ்ணமூர்த்தி தன்னுடலை நீத்துச் சில மாதங்களே ஆகியிருக்கும். ஜே.கே. சென்னை வரும்போதெல்லாம் வசந்த விஹாரில் தங்குவார். அங்கே உள்ள பரந்த தோட்டத்தில் அவர் உரை நிகழ்த்துவார். ஒவ்வொரு வருடமும் குளிர் காலத்தில் ஜே.கிருஷ்ணமூர்த்தி வரும் போதெல்லாம் சுவாமி என்னை, சென்னை வசந்தவிஹார் சென்று அவரது உரையைக் கேட்கவேண்டுமெனச் சொல்வார். சுவாமியின் உத்தரவுப்படி வசந்தவிஹார் சென்று ஜே.கே. வின் உரையை ஒவ்வொரு வருடமும் கேட்பேன். வசந்தவிஹாரில் ஜே.கே. மூன்று நாட்கள் உரை நிகழ்த்துவார். அவரது உரையைக் கேட்கும்பொழுது வாழ்வை இயக்கும் சக்தியோடு நம்மை இணைத்துவிடுவது போன்ற உணர்வு தோன்றும்.

ஒருமுறை ஜே.கே. உரை நிகழ்த்தி முடித்த பின்பு அவரையே தொடர்ந்து உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். கிருஷ்ணாஜி மெதுவாக எழுந்து, மேடையிலிருந்து கீழ் இறங்கி, வசந்தவிஹாரின் மாடியில் உள்ள தனது அறைக்குச் செல்வதைப் பார்க்க முடிந்தது. அறையின் திறந்த ஜன்னல் வழியாக அவர் முகம் கழுவி சற்றே இளைப்பாறி பின் மீண்டும் கீழிறங்கி வருவதைத் தோட்டத்தில் இருந்த ஒரு புதரின் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தேன், அவரது உரையைக் கேட்க வந்த சுமார் 2000 பேரில் பாதிப்பேர் அந்த விசாலமான தோட்டத்தில் கூட்டம் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தனர். அந்த இரவு நேரத்திலும் தோட்டத்தில் உள்ள மின்விளக்கின் உதவியால் கிருஷ்ணாஜியை நன்கு பார்க்க முடிந்தது. அழகிய சிறு வெண்பொம்மை போல் அவர் உருவம் இருந்தது. நான் நின்றிருந்த புதர் பக்கமாகவே

அவர் வந்தார். நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

“இங்கே எதற்க்காகக் காத்துக்கொண்டிருக்கிறாய்?” கிருஷ்ணாஜி கேட்டார்.

“கிருஷ்ணாஜியைப் பார்ப்பதற்காக” நான் பதிலுரைத்தேன்.

கிருஷ்ணாஜி வாய்விட்டுச்சிரித்து, தன் இருகரத்தால் என்னை அணைத்துக் கொண்டார். என் மெய் சிலிர்த்துவிட்டது. நான் பஸ்ஸில் சென்னை செல்லும்போது இந்நிகழ்ச்சி என் மனக் கண்ணில் மீண்டும் மீண்டும் தோன்றியது.

பிற்பகல் 3 மணி. வசந்தவிஹார் சென்றடைந்தேன். அலுவலக அறைக்குள் சென்று அங்குள்ள அலுவலரிடம் நான் அங்கே மூன்று நாட்கள் தங்க வேண்டுமெனக் கேட்டேன். அவர் அங்கே ஏன் நான் தங்க விரும்புகிறேன் எனக் கேட்டார். என் குருநாதர் என்னை அங்கே தங்கச் சொல்லியிருப்பதால் நான் அங்கு வந்ததாகச் சொன்னவுடன், அவருக்கு ஒரே திகைப்பு, வினோதமாக என்னைப் பார்த்தார். அவருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

கிருஷ்ணாஜி குரு சிஷ்ய முறையை நிராகரித்தவர். அங்கே குரு என்பது கெட்ட வார்த்தை. அங்கேயே ஒருவன் தன் குரு சொல்லி வந்திருப்பதாகச் சொல்வது அவருக்கு மிகுந்த வினோதமாயிருந்தது. அந்த அலுவலக அறையில் ஒரு முதியவர் ஒரு ஓரமாக சோபாவில் அமர்ந்திருந்தார். அவரை நான் ஏற்கெனவே அறிவேன். முன்பு அவர்தான் வசந்தவிஹாரை நிர்வாகம் செய்தவர். அவர் தன் இளம் வயதிலிருந்து கிருஷ்ணாஜிக்காக தன் வாழ்நாட்களை அர்ப்பணித்தவர். பெரும் செல்வந்தரான அவர் தன் மனைவியுடன் கிருஷ்ணாஜியின் சேவைக்காகவே வாழ்ந்தவர். கிருஷ்ணாஜியின் சில சிறந்த புத்தகங்கள்

அவரது மனைவியின் கடும் உழைப்பாலேயே சாத்தியப்பட்டன.

அந்த முதியவர் நாங்கள் பேசிக்கொண்டிருந்த இடம் நோக்கி வந்தார்.

“உங்கள் குருநாதர் யார்?” முதியவர் கேட்டார்.

“யோகி ராம்சுரத்குமார், திருவண்ணாமலை” நான் பதிலுரைத்தேன்.

“உங்கள் குருநாதரின் குரு காஞ்சன்காடு பப்பா ராமதாஸ்தானே?”

“உங்களுக்கு எப்படித் தெரியும்?” வியப்புடன் கேட்டேன்.

“நான் உங்கள் குருவைப் பார்த்திருக்கின்றேன். உங்கள் குருவின் குரு பப்பா ராமதாசர் ஆஸ்ரமும் சென்றிருக்கிறேன்.” அவர் மெதுவாகச் சொன்னார்.

நான் வியப்போடு அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் அந்த இளம் அலுவலரிடம் எனக்கு அறை ஒதுக்குமாறு கூறினார். அலுவலரும் எனக்கு அறை ஒதுக்கினார்.

இரவு உணவுக்கு அங்கிருந்த அனைவரும் உணவருந்தும் கூடத்தில் கூடினோம். வசந்தவிஹாரின் நிர்வாகி, அலுவலர்கள் மற்றும் அந்த முதியவர், நான் எல்லோரும் அந்த பெரிய உணவருந்தும் மேஜையில் அமர்ந்திருந்தோம். எளிய உணவு பரிமாறப்பட்டது. அந்த முதியவரிடம் நிர்வாகி அவரின் துணைவியார் எப்படி இருக்கிறார் என வினவினார்.

“டாக்டர்கள் அவள் மிகவும் அபாயகரமான கட்டத்தில் இருக்கிறார் எனக் கூறுகிறார்கள்” முதியவர் அமைதியாகச் சொன்னார்.

அவர் முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை. இயல்பாகவே சாப்பிட்டுச் சென்றுவிட்டார். அங்கு ஒரு ஆழ்ந்த நிசப்தம். நான் அந்த

அம்மையாரையும் அறிவேன். கிருஷ்ணாஜியின் மீது தீராத பக்தி கொண்டவர். என்மனம் மிகவும் வேதனைப்பட்டது. யாரும் அதன் பின்பு எதுவும் பேசவில்லை, அமைதியாக உணவருந்திவிட்டு கலைந்து சென்றுவிட்டோம்.

மறுநாள் காலைப் பொழுதையெல்லாம் தோட்டத்தில் கழித்தேன். மதியம் உணவருந்த சாப்பாட்டு கூடத்துக்குச் சென்றேன். முந்தைய இரவு இருந்தவர்கள் அனைவரும் அப்போதும் இருந்தனர். நிர்வாகி அந்த முதியவரிடம் அம்மையாரின் உடல்நலம் குறித்து மீண்டும் விசாரித்தார்.

“மருந்து வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது போலத் தோன்றுகிறது. அபாய கட்டத்தை அவர் தாண்டிவிட்டதாகக் கருதுகிறோம் என டாக்டர்கள் சொல்கிறார்கள்“

எந்த உணர்ச்சி பாவனையுமில்லாமல் அவர் மெதுவாகச் சொன்னார். அவர்கள் ஆதர்ச - தம்பதிகள் என்பதை அனைவரும் அறிவர்.

மறுநாள் மதியமும் உணவு அருந்தும் கூடத்தில் அனைவரும் சந்தித்தோம்.

“அவர் உடல்நலம் சீராக நன்கு குணமடைந்து வருகிறது. இன்னும் ஓரிரு நாட்களில் அவரை வீட்டுக்கு அனுப்பி விடலாம் என நினைக்கிறோம் என டாக்டர்கள் கூறுகிறார்கள்.”

எல்லாவற்றையும் சாட்சியாக நின்று பார்ப்பவர் போல் எந்த உணர்வையும் வெளிக்காட்டாமல் அந்த முதியவர் கூறியதைக் கேட்டு, அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தோம்.

மூன்றாம் நாள் காலை நான் விடைபெறும் சமயம் வந்தது. அலுவலக

அறைக்குச் சென்றேன். எனது அறையின் சாவியை அந்த அலுவலரிடம் ஒப்படைத்தேன். அவருக்கு நன்றி கூறிவிட்டு புறப்பட யத்தனித்தேன். அங்கே அமைதியாக அமர்ந்திருந்த அந்த முதியவர் என்னை நோக்கி வந்தார்.

"நீங்கள் திருவண்ணாமலைதானே செல்கிறீர்கள்?" அவர் வினவினார்.

"ஆம்" நான் பணிவாகச் சொன்னேன்.

"எனது நன்றியை சுவாமிக்குச் சொல்லிவிடுங்கள்." மீண்டும் அதே அமைதி யோடு சொன்ன அப்பெரியவரை நான் வணங்கினேன். திருவண்ணாமலை வந்தடைந்தேன். சன்னதித் தெரு வீட்டின் கேட்டைத் தட்டினேன். சுவாமியே உள்ளிருந்து வந்தார். என் கையைப் பிடித்தபடி வீட்டுக்குள் அழைத்துச் சென்றார். தான் அமரும் பாயில் அவரோடு என்னையும் உடன் அமர்த்திக் கொண்டார்.

'வசந்தவிஹாரில் ஏதாவது செய்தி உண்டா?' சுவாமி வினவினார்.

நான் நடந்ததைச் சொன்னேன். பெரியவரின் நன்றியையும் சுவாமியிடம் தெரிவித்தேன்.

"உனக்குத் தெரியுமா? அந்த அம்மையார் கிருஷ்ணாஜியின் பிரியமான பக்தை. அப்பா அந்த அம்மையாரைக் காப்பாற்றிவிட்டார்." சுவாமி ஆனந்தப் பரவசத்தோடு கூறினார்.

சற்று நேரத்தில் சுவாமி, நான் சிவகாசி செல்வதற்கு விடை கொடுத்து அனுப்பிவைத்தார்.

# குழந்தை பேசியது



சன்னதித் தெரு வீட்டில் நாங்கள் குடும்பசகிதம் சுவாமியுடன் தங்கியிருந்தோம். சுவாமியின் சன்னிதானத்தில் ஏற்பட்ட குதூகலமும், பேரமைதியும் எங்களை சுவாமியோடு நிரந்தரமாகத் தங்கிவிட மாட்டோமா? என ஏங்க வைத்தது. குழந்தைகளும் சுவாமியின்பால் ஈர்க்கப்பட்டு வெகு சந்தோஷமாக இருந்தார்கள். சுவாமி அவர்களைப் பாட வைத்தும், சிறுசிறு கதைகளைச் சொல்ல வைத்தும் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

நாங்கள் சுவாமியோடு தங்கியிருந்த மூன்றாம் நாள், ஒரு இளம் தம்பதி தங்கள் மூன்று வயது குழந்தையுடன் சுவாமியின் தரிசனத்துக்காக வந்தார்கள். சுவாமியை நமஸ்கரித்தார்கள். குழந்தையை சுவாமியின் திருவடிகளில் உட்கார வைத்தார்கள். சுவாமி தாயை பெண்கள் பகுதியிலும், தந்தையை ஆண்கள் பகுதியிலும் உட்காரச் சொன்னார், குழந்தையை தன் மடி மீது அமர வைத்துக் கொண்டார். குழந்தை அமைதியாக சுவாமியின் மடியில் அமர்ந்துகொண்டு அவரது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.

“சுவாமி, எங்கள் குழந்தைக்கு மூன்று வயதாகிறது. இன்னும் அவள் பேசவில்லை சுவாமி. எங்களுக்கு பயமாக இருக்கிறது.”

குழந்தையின் தாய் சுவாமியிடம் கூறினார். தாயின் கண்களில் கண்ணீர் வடிந்தது. குழந்தை சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தது.

“டாக்டர்களிடம் காட்டினோம் சுவாமி, குறைபாடுகள் எதுவும் இல்லை என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். உங்களின் அனுக்கிரகம் வேண்டும் சுவாமி.”

தந்தையின் குரலும் தழுதழுத்தது. சுவாமி அமைதியாகக் குழ்ந்தையைப் பார்த்தபடி இருக்க, குழந்தை சுவாமியைப் பார்த்து அழகாகச் சிரித்தது. சற்று நேரம் கடந்தது.

“பார்த்தசாரதி, இங்கே வா” சுவாமி அழைத்தார்.

அருகில் சென்றேன்.

“குழந்தையை சற்று நேரம் உன்னிடத்தில் வைத்திரு.”

சுவாமி குழந்தையை என்னிடம் கொடுத்தார். குழந்தையை வாங்கிக் கொண்டேன். என் இடத்துக்குக் குழ்ந்தையோடு திரும்பிசென்று அமர்ந்து கொண்டேன். குழந்தையை என் மடிமீது உட்கார வைத்துக் கொண்டேன். குழந்தை என் முகத்தை கவனமாக உற்றுப் பார்த்தது. நான் மெதுவாகச் சிரித்தேன். குழந்தையும் சிரித்தது. எனது நீண்ட தாடி குழந்தையை கவர்ந்தது போலும். தாடியை மெதுவாக குழந்தை பிடித்துப் பார்த்தது. பின் சற்று தாடியை இழுத்தது. நான் மீண்டும் சிரித்தேன். குழந்தையும் சிரித்தது.

பின் புரியாத மொழியில் குழந்தை ஏதோ சொன்னது. அது சொன்னதையே நானும் திருப்பிச் சொன்னேன். அது மிகவும் குதூகலித்து, துள்ளிக்

குதித்து, மீண்டும் ஏதோ சொன்னது. நானும் அதையே சொன்னேன். மீண்டும் குழந்தை ஏதோ சொல்ல, நான் திருப்பிச் சொல்ல, நான் என்னை மறந்த நிலையை அடைந்தேன். என் பார்வையில் குழந்தை மட்டும்தான் தெரிந்தது. அது பேசும் குரல் மட்டும்தான் கேட்டது. வேறு எதுவும் என் கண்ணில் படவில்லை. மற்ற எதுவும் என் காதில் விழவில்லை. அங்கே காலம், இடம், காரியம் என்ற நிலைகளைக் கடந்து நானும் குழந்தையும் மட்டும் இருந்தோம்.

எவ்வளவு நேரம் கடந்ததோ தெரியாது. குழந்தையும் நானும் பேசிக்கொண்டே இருந்தோம். அது என்ன மொழி, தெரியாது. அதற்கு என்ன அர்த்தம், தெரியாது. ஆனாலும், நானும் குழந்தையும் பேசிக்கொண்டே இருந்தோம். சுவாமி எங்களையே பார்த்துக்கொண்டிருந்தார். அவரது பேரருள் எங்களைப் பேரானந்தப் பெருவெளியில் தள்ளிவிட்டதை போலிருந்தது. சுவாமியின் பார்வையின், தீட்சண்யம் குழந்தையைப் பேச வைத்துவிட்டது. இது எப்படி நடந்தது? தெரியாது. இது ஏன் நடந்தது? தெரியாது. என்ன, ஏன், எப்படி என்ற எந்த கேள்விக்கும் அங்கு பதில் இல்லை. ஆனாலும் பேசாதிருந்த குழந்தை பேசியது.

குழந்தையின் தாய் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார். அவர் குழந்தை பேசிவிட்டதே! ஆனந்த மிகுதியில் தாய் அழுதாள், சிரித்தாள். தந்தை வாயடைத்துப் போயிருந்தார். வியப்பும், மகிழ்ச்சியும், பக்தியும் அவர் முகத்தில் ஒன்றாகத் தோன்றியது.

"குழந்தை பேசவில்லை என இந்தப் பிச்சைக்காரன்கிட்டே பொய் சொல்லிவிட்டீங்களே அம்மா? இவ்வளவு நேரம் குழந்தைதானே பேசிக் கொண்டிருந்தது?"

சுவாமி குறும்புச் சிரிப்புடன் தாயைக் கேட்டார்.

தாய் துள்ளி எழுந்து என்னிடம் இருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு சுவாமியின் பாதங்களில் வைத்து நமஸ்காரம் செய்தார். தந்தையும் எழுந்து நமஸ்கரித்தார். வார்த்தைகளே அவர்களுக்கு வரவில்லை. அவர்களின் கண்ணீரே நன்றியையும், ஆனந்தத்தையும் தெரியப்படுத்தியது.

“என் தந்தை உங்களை ஆசீர்வதிக்கிறார்.”

சுவாமி தன் இரு கரங்களையும் உயர்த்தி வாழ்த்தினார். தம்பதியர் மீண்டும் சுவாமியை நமஸ்கரித்தனர். அங்கிருந்த ஆப்பிள் பழத்தை அவர்களுக்குப் பிரசாதமாகக் கொடுத்து அவர்களை வழியனுப்பினார். அந்தப் புண்ணியம் செய்த தம்பதியரும் சுவாமியை வணங்கியவாறே சென்றனர்.

# குடிகார நண்பன்



நான், முருகேசன், சிவசங்கர் ஆகியோர் சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் சுவாமியின் முன் அமர்ந்திருந்தோம். நாங்கள் மூவரும் சென்ற இரவு திருவண்ணாமலை வந்து சுவாமியுடனேயே சன்னதித் தெரு வீட்டில் தங்கியிருந்தோம். சுவாமி பற்பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார். ஞானிகளிலிருந்து, விஞ்ஞானம் வரை தெய்வீக வாழ்க்கையிலிருந்து உலகியல் வாழ்க்கை வரை அனைத்து விஷயங்களைப் பற்றியும் சுவாமி சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் மூவரும் மெய்மறந்து அவர் பேசுவதையும், சிரிப்பதையும், புகைப்பதையும் ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தோம். அங்கே ஞானம், தியானம் மற்றும் ஆனந்தத்தின் கலவையான ஒரு தெய்வீகத்தில் நாங்கள் திளைத்துக் கொண்டிருந்தோம்.

திடீரென வெளியே வாயில் இரும்புக் கதவை யாரோ தடதடவென முரட்டுத்தனமாகத் தட்டும் சத்தம் கேட்டது. அப்போது வாயிற்காப்போன்

இல்லை. யாரெனப் பார்க்க எழுந்த என்னை சுவாமி தடுத்துவிட்டு, தானே எழுந்து சென்று பெரிய மரக்கதவைத் திறந்து இரும்புக் கதவருகே சென்றார். அங்கே குடிபோதையில் ஒரு மத்திய வயதுக்காரர், கேட்டருகே நின்று கொண்டிருந்தார். சுவாமி கேட்டருகே சென்றார். கேட்டைத் திறக்காமல் உள்ளிருந்தே அந்தக் குடிகார நண்பரைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். பின் தன் இருகரங்களையும் கூப்பி

"இந்தப் பிச்சைக்காரருக்கு வேலை இருக்கு ராஜா, அப்புறமாக வாங்க ராஜா" என சொல்லி அவரை அனுப்பினார்.

சுவாமி உள்ளே வந்து பெரிய மரக்கதவை மறுபடியும் தாழிட்டு தன் இருக்கையில் அமர்ந்தார். அமைதியாக ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். அதற்குள் மீண்டும் கேட் தடதடவெனத் தட்டப்பட்ட ஒலி பலமாகக் கேட்டது. சுவாமி ஆழ்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தார். மீண்டும் கேட்டிலிருந்து மிகவும் பலமாகச் சத்தம் கேட்டது. சிகரெட்டை அணைத்துவிட்டு மேலே போர்த்தியிருந்த சால்வையையும், தலைப்பாகையையும் சரி செய்து கொண்டு சுவாமி மறுபடியும் கேட்டருகே சென்றார்.

அதே குடிகார நண்பர்தான். கேட்டின் அப்பாலிருந்து மிகவும் பவ்யமாக, இருகரம் கூப்பியபடி சுவாமியை வணங்கி தள்ளாடித் தள்ளாடி அவர் நின்று கொண்டிருந்தார். சுவாமி கேட்டைத் திறக்கவில்லை. அந்த நண்பனையே உற்று நோக்கினார்.

"போயிட்டு வாங்க ராஜா. இந்தப் பிச்சைக்காருக்கு வேலை இருக்கு ராஜா. நீங்க போயிட்டு வாங்க ராஜா"

சுவாமி அந்தக் குடிகார நண்பருக்கு மறுபடியும் சொன்னார். அந்த நண்பரும் சரியெனச் சொல்லிவிட்டுச் செல்வது தெரிந்தது. சுவாமி மீண்டும் உள்ளே வந்தார். சிறிது நேரத்தில் மறுபடியும் சத்தம் முன்பை விட அதிகமாகக் கேட்டது. சுவாமி எழவில்லை. சத்தம்

கேட்டுக்கொண்டே இருந்தது. மிகவும் முரட்டுத்தனமாக அந்த நண்பன் கத்தினான்.

“யோகி ராம்சுரத்குமாரா என் தெய்வமே, நான் மிகுந்த சிரமத்தில் இருக்கிறேன். நீதான் என்னைக் காக்க வேண்டும். நீதான் என் தெய்வம். வா யோகி ராம்சுரத்குமாரா.”

சுவாமி அசையவில்லை. நேரம் செல்லச் செல்ல சத்தம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. திடீரென சுவாமி எழுந்தார்.

பாய்ந்தோடி பெரிய கதவைத் தடாலெனத் திறந்தார். கேட்டருகே ஓடிச் சென்று, கேட்டையும் படாரெனத் திறந்தார். சுவாமியின் வேகத்தையும், கோபத்தையும் கண்ட அந்தக் குடிகார நண்பன் பயந்து போய் கேட்டிலிருந்து விலகி ரோட்டில் போய் நின்று கொண்டான். திறந்திருந்த மரக்கதவு வழியாக வெளியே நடக்கும் காட்சிகள் எங்களுக்கு நன்கு தெரிந்தன. சுவாமி வெளியே சென்று அந்தக் குடிகார நண்பனை நையப் புடைத்து அனுப்புவார் என நினைத்துக் கொண்டிருந்தோம். அவரின் வேகமும், முகத்தில் காட்டிய கோபமும் எங்களை அவ்விதம் நினைக்க வைத்தது.

சுவாமி கோபத்துடன் படியிறங்கி அந்தக் குடிகார நண்பனை அடைந்தார். அறைவிடப் போகிறார் என எதிர்பார்த்த எங்களுக்கு மெய் சிலிர்த்துவிட்டது. சுவாமி தடாலென குடிகார நண்பனின் காலில் விழுந்தார்.

“போயிட்டு வாங்க ராஜா, இந்தப் பிச்சைக்காருக்கு வேலை இருக்கு ராஜா, போயிட்டு வாங்க ராஜா.” சுவாமி கெஞ்சினார்.

அந்தக் குடிகார நண்பன் பயந்தபடி அங்கிருந்து ஓடோடி மறைந்தான். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். சுவாமி மீண்டும் நிதானமாக இரண்டு கதவுகளையும் பூட்டிவிட்டு தன் இருக்கையில் அமர்ந்து எங்களை நோக்கி மந்தகாசமாகச் சிரித்தார்.

# குரு இருக்க குறை ஏது?



“சுவாமி என் மாமனார் இப்பொழுதெல்லாம் மிகுந்த கவலையோடு இருக்கின்றார். தேர்தலில் தோற்ற பின் அவர் மிகவும் சோர்வடைந்து விட்டார் சுவாமி. உங்களுடைய பேரருள்தான் அவரைக் காக்க வேண்டும் சுவாமி,” இளம் பக்தர் தன் மாமனாரின் மேல் உள்ள கரிசனத்தை வெளிப்படுத்தினார்.

சுவாமி யோகி ராம்சுரத்குமார் அப்பொழுது சன்னதித் தெரு வீட்டில் இரு தூண்களுக்கு நடுவே விரிக்கப்பட்ட பாயின் மீது அமர்ந்திருந்தார். அந்த இளைஞர் கூறியதைக் கேட்ட சுவாமி சற்றே கோபமடைந்தார்.

“தம்பி, உங்கள் மாமனார் அவரது குருநாதர் சமாதியில் அமர்ந்திருக்கும் போது பார்த்திருக்கின்றீர்களா?” சுவாமி அவரிடம் கேட்டார்.

“பார்த்திருக்கின்றேன் சுவாமி.” இளைஞர் பதிலுரைத்தார்.

“அவர் தன் குருநாதர் சமாதியில் அமர்ந்திருக்கும்போது எந்த உலகியல் கவலையாவது அவரைப் பீடித்திருப்பதைக் கண்டுள்ளீர்களா?” இளைஞர் திகைத்துப் போனார்.

“அவரை உலகியல் பிரச்சனைகள் எதுவும் தீண்ட முடியாது. அவரின் குருநாதர் அவரைத் தன் சொரூபமாக மாற்றியுள்ளார். அவர் குறித்து

நீங்கள் கவலையுற வேண்டாம். அவரின் குருநாதர் அவரைப் பாதுகாத்து வருகின்றார். நீங்கள் சென்று வரலாம்,"

சுவாமி அவருக்கு ஒரு வாழைப்பழத்தை அளித்து விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கடந்தன. அந்த இளைஞரின் மாமனாரான குருபக்தர் தன் மனைவியுடன் சுவாமியைச் சேவிக்க சன்னதித் தெரு வீட்டிற்கு வந்தார். உன்னதமான குருபக்தர்களைக் கண்டால் சுவாமி பேரானந்தம் கொள்வார். குருபக்தரை அன்போடு கைப்பிடித்து வீட்டினுள் அழைத்து வந்தார். தன் எதிரே அவர்களை அமர வைத்தார்.

குருபக்தர் சுவாமியின் அழுக்கடைந்து கருப்பாகிப் போன ஆடைகளைக் கண்டு கவலையடைந்தார். மனைவியிடம் பணம் பெற்று சுவாமியிடம் சொல்லாமலே கடைவீதிக்குச் சென்று சுவாமிக்கு வேஷ்டி, ஜிப்பா, தலைப்பாகைத் துண்டு என அனைத்தும் வாங்கி வந்தார்.

சுவாமி பக்தரின் வேண்டுகோளைப் புறக்கணிக்காது தான் அணிந்திருந்த ஆடைகளின் மேலேயே குருபக்தர் வாங்கி வந்த ஆடைகளையும் அணிந்து கொண்டார். அங்கே, சன்னதித் தெரு வீடே பேரின்பச் சூழலில் நிறைந்திருந்தது. குருபக்தரின் வருகையால் சுவாமி குதூகலித்து பெருங்கடல் பேரலையென சிரித்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரம் கடந்தது. அங்கு சில நொடிகள் மௌனம் நிலவியது. சுவாமி என்னை அழைத்தார். சுவாமியின் வலப்பக்கத்தில் இருந்த அறையைத் திறந்து என்னை உள்ளே அழைத்துச் சென்றார். உள்ளே குப்பையாக பலவிதப் பொருட்கள் கிடந்தன. ஒரு பெரிய கோணிப்பையும் வாய்கட்டப்பட்டிருந்தது. என்னை சுவாமி அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு கூடத்திற்கு வரச் சொன்னார். பையைத் தூக்கி கூடத்தில் வைத்தேன். பை மிகவும் கனமாக இருந்தது.

சுவாமி, குருபக்தரிடம், "நண்பர்கள், இந்த பிச்சைக்காரனுக்குத் தேவையில்லாத இதைக் கொடுத்தவாறு உள்ளனர். இது இந்த பிச்சைக்காரருக்குத் தேவையில்லை. இதை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள்," எனக் கூறினார்.

அது என்னவென்று குருபக்தர் கேட்க, சுவாமி அந்தக் கோணி மூட்டையை அவிழ்த்துக் காட்டச் சொன்னார். நான் மூட்டையைக் கட்டியிருந்த சணலைப் பிரித்தேன். மூட்டை நிரம்ப பணக் கட்டுகள் நிறைந்திருந்தன. குருபக்தர் சற்று நேரம் அதைப் பார்த்தவாறே இருந்தார்.

"சுவாமி உனக்கு பிடிக்காததை, உனக்குத் தேவையில்லாத இதை நான் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? நீ விரும்புவதை, உன்னிடத்தே எப்பொழுதும் உள்ள அந்த பரம்பொருளைக் கொடு சுவாமி. நான் வாங்கிக் கொள்கின்றேன். நீ விரும்பாத ஒன்று எனக்கும் வேண்டாம் சுவாமி. என்னை மன்னித்துவிடு சுவாமி," குருபக்தர் தழுதழுத்தக் குரலில் கூறினார்.

சுவாமியின் கண்கள் குளமாயின. குருபக்தர் சுவாமியின் திருவடி பணிந்தார். சுவாமி அங்கிருந்த இரண்டு வாழைப்பழங்களைத் தோலுறித்து அந்தத் தெய்வீகத் தம்பதியர்க்குக் கொடுத்தார். ஆனந்தமாக அந்தப் பிரசாதப் பழங்களைக் குருபக்தரும், அவர் மனைவியும் உட்கொண்டனர்.

சுவாமி அந்த மூட்டையை மீண்டும் உள்ளே வைக்கச் சொன்னார், வைத்தேன். தம்பதியர் சுவாமியின் ஆசி பெற்றுச் சென்றனர். என் சுவாமி ஆனந்தமாக வெகு நேரம் சிரித்தபடி இருந்தார்.

நல்லடியார்களைக் கண்களில் காட்டிய எம்பெருமான் யோகி ராம்சுரத்குமாருக்கு என் மனமார்ந்த நமஸ்க்காரங்கள். வாழி என் நாதன்.

# பக்தனின் மரணம்



சுவாமியின் பக்தரில் நான் பார்த்தவரை முருகேசன் அவர்களைப் போல் சுவாமியின் அன்பையும், அருளையும் முழுமையாகப் பெற்றவர்கள் வேறு எவரும் இல்லை என்று அறுதியிட்டுக் கூற முடியும். முருகேசன் குருவைத் தேடி அலைந்து முடிவில் சுவாமியினால் ஈர்க்கப்பட்டு அவரது திருவடியை முழுமையாகச் சரணாகதி அடைந்து வாழ்வை நிறைவாக்கிக் கொண்டவர். சுவாமியினால் "ராஜா" எனப் போற்றப்பட்டவர்.

அவர் எப்பொழுது சுவாமியிடம் வந்தாலும் சுவாமி அவர்மீது தன் முழுக் கவனத்தையும் செலுத்துவார். இரவு பகல் என முழு நேரமும் முருகேசனோடு மட்டும் சுவாமி பல நாட்கள் கழித்தார். அங்கே பாடல், ஆடல், உபதேசங்கள், உலக சரித்திரம், உலக நடப்பு, அரசியல், ஆன்மிகம் என அத்தனை விதமான பாடங்களும் கற்பிக்கப்பட்டன. சில சமயங்களில் சுவாமி, முருகேசனுக்கு மௌனமாகவும் அருள் பாலித்ததுண்டு. முருகேசனுக்கும் சுவாமியே வாழ்க்கையாக மாறினார்.

எதிலும் சுவாமி, எங்கும் சுவாமி, எவரும் சுவாமியே. “என் யோகி, என் யோகி“ என எப்பொழுதுமே அவர் ஆர்ப்பரிப்பார். “எனது யோகி ராம்சுரத்குமார்“ என ஒருபாடலை முருகேசன் சுவாமியின் மீது இயற்றி அதை அவர் சுவாமியின் சன்னிதானத்திலேயே பாடினார்.

அப்பொழுது சுவாமி “முருகேஷ்ஜி, எனது யோகி ராம்சுரத்குமார்” என்று பாடிவிட்டார். இனி இந்தப் பிச்சைக்காரனும் எனது ராஜா என்றே முருகேஷ்ஜியை குறிப்பிடுவார்.” என்று மனமார ஆனந்தமாகச் சிரித்தபடி கூறினார்.

சுவாமி, முருகேஷ்ஜியிடம் காட்டிய பேரன்பு பலர் மனத்தில் பலவிதமாக பாதிப்பை ஏற்படுத்தியது. ஒரு வயோதிக பக்தர் சுவாமியிடம் “சுவாமி, நீங்கள் முருகேசனை “ராஜா” என்று அழைக்கிறீர்கள் அவரது ராஜ்ஜியம் எது சுவாமி?” என்று கேட்டார்.

“எனது இதயம்”

சுவாமி சட்டென்று கூற, குழுமியிருந்தோர் அனைவருக்கும் பேராச்சரியம். சுவாமியின் இதயத்தையே ஆள்பவரா முருகேசன்? அனைவருக்கும் முருகேசன் மீது ஒருவித பயமும், பக்தியும், ஈடுபாடும் ஏற்பட்டது.

1976 ஆம் ஆண்டு எனக்கு முருகேசனோடு பரிச்சயம் ஏற்பட்டது. சுவாமியின் சன்னிதானத்தில்தான் எங்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டது. 1977 முதல் 1980 வரை எப்பொழுதோ ஓரிரு முறை சந்தித்திருப்போம். அப்பொழுதும் பேச்செல்லாம் சுவாமியைப்பற்றியே. சுவாமி உதிர்த்த ஒவ்வொரு சொல்லும் முருகேசன் வாயால் சொல்லக் கேட்டால், தேவாரம், திருவாசகம், திவ்யப் பிரபந்தம் போன்று பக்தி ரசம் நம் மனதில் வெள்ளமாய் பெருக்கெடுத்தோடி நம்மை உன்மத்த நிலைக்குக்

கொண்டு சேர்த்துவிடும். அங்கே பக்தனும் பரமனும் ஒன்று கூடி ஜகஜோதியாய் சுடர்விட்டு பிரகாசிப்பதை அனுபவித்தவர்கள் மிகவும் சிலரே.

1980 லிருந்து முருகேசன் மறைந்த 1984 வரை நாங்கள் ஒன்றாகவே சுவாமியைச் சந்தித்தோம். சுவாமியோடு அமர்ந்திருந்தோம். சுவாமியின் அருள்சுவையைச் சுவைத்திருந்தோம். என் வாழ்நாளில் முருகேசன் போன்றதொரு நண்பர், முருகேசனுக்கு முன்பும் தோன்றியதில்லை, முருகேசனுக்கு பின்பும் தோன்றியதில்லை. சுவாமியால் விளைந்த அந்த நட்புபோல் வேறெந்த நட்பு நிரந்தரமாகச் செழித்திருக்கும்? இந்த நட்பை ஏற்படுத்தியவர் சுவாமி. இந்த நட்பைத் திண்மையாக்கியவர் சுவாமி.

எனவே, இந்த நட்பை ஆத்ம நட்பாகவே கொள்ளலாம்.

1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் தேதி மாலை 4 மணிக்கு முருகேசன் கல்கத்தாவில் மரணமடைந்தார். அவரது உடல் 5 ஆம் தேதி மாலை தூத்துக்குடி வந்து சேர்ந்து, அன்றே தகனம் செய்யப்பட்டது. எனது துக்கம் எனது தூக்கத்தைப் போக்கடித்து விட்டது. நான்கு நாட்களாகத் தூங்க முடியவில்லை. உணவும் உட்கொள்ள முடியவில்லை. சுவாமி, முருகேசன், நான் என மூவரும் ஒன்றாய் இருந்து, பேசி, ஆடி, பாடி இருந்தது, எங்களின் தர்க்கங்கள், எங்களின் சமரசங்கள், எங்களின் வெளிப்படையான வாழ்க்கை முறைகள் எனப் பற்பல கடந்தகால ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் ஓடி வந்துகொண்டே இருந்தன.

பெரிய அரசன் போல் வாழ்ந்த முருகேசனுக்கும் ஆண்டியாய் வாழ்ந்த எனக்கும் இருந்த நட்பு பலரை வியப்படைய வைத்தது. முருகேசனும், நானும் தூத்துக்குடியில் இருந்து திருவண்ணாமலை வரை இரண்டு முறை நடந்தே வந்தோம். முருகேசன் இறந்த நான்காம் நாள் நான்

சுவாமியைத் தரிசிக்க திருவண்ணாமலைக்கு பஸ்ஸில் பயணப்பட்டு வரும்போது சாலையோரத்தில் நாங்கள் இளைப்பாறிய மரங்கள் இருந்தன. இரவில் தூங்கிய பாழடைந்த மண்டபங்கள் இருந்தன. ஆனால் முருகேசன் அங்கே இல்லை. பஸ்ஸில் நான் விம்மி அழுததை யாரும் கவனிக்கவில்லை.

ஒரு வழியாக சுவாமியிடம் வந்தேன். சுவாமி எனக்காகவே காத்திருப்பவர் போல், சன்னதித் தெரு வீட்டின் வாசற்படியில் அமர்ந்திருந்தார். என்னைக் கைப்பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். அவர் எதிரில் இருந்த பாயில் அமர வைத்தார்.

“உன்னிடமிருந்து தந்தி வந்த பின்தான் இந்தப் பிச்சைக்காரனுக்கு முருகேசனின் மரணம் குறித்துத் தெரிந்தது.” சுவாமி மெதுவாகச் சொன்னார். நான் அமைதியாக அமர்ந்திருந்தேன்.

முருகேசனின் உடலைக் கல்கத்தாவிலிருந்து எப்படிக் கொண்டு வந்தார்கள்? உடல் தூத்துக்குடியில் எங்கு வைக்கப்பட்டிருந்தது? யார் கொள்ளி வைத்தார்கள்? எனப் பல கேள்விகளை சுவாமி கேட்டார். அனைத்துக்கும் பதில் சொன்னேன். முருகேசனின் மனைவி, குழந்தைகளைப் பற்றியும் கேட்டார். அனைத்துக்கும் விவரமாக விடை சொன்னேன். இந்தப் பேச்சிலேயே சுமார் 2 மணி நேரம் கடந்துவிட்டது. சட்டென்று சுவாமி எழுந்து வெளியே சென்றார். சில நிமிடங்களில் இரண்டு பொட்டலங்களை சுவாமி கொண்டு வந்தார். என்னிடம் ஒன்றை கொடுத்து மற்றொன்றை அவர் எடுத்துப் பிரித்தார். இரண்டு இரண்டு இட்லிகள் அந்தப் பொட்டலங்களில் இருந்தன. சுவாமி என்னைச் சாப்பிடச் சொல்லி, அவரும் சாப்பிட்டார். மீண்டும் உரையாடல் முருகேசனைப் பற்றி எழுந்தது. அடுத்த அரை மணி நேரம் பேச்சு தொடர்ந்தது.

“நீ தூங்கி எத்தனை நாட்கள் ஆயிற்று?” திடீரென சுவாமி கேட்டார்.

“முருகேசன் இறந்த செய்தி கேட்டதிலிருந்து நான்கு நாட்களாகத் தூங்கவில்லை சுவாமி” நான் பதிலுரைத்தேன்.

சற்று நேரம், மௌனம், “நாம் படுத்துக்கொண்டே பேசலாம்” சுவாமி சொன்னார். அப்போது காலை சுமார் 10 மணி இருக்கும்.

நான் உட்கார்ந்திருந்த பாயின் மீதே படுத்தேன். சுவாமி ஏதோ கேட்டார். நான் ஏதோ சொன்னேன். பின் எதுவும் என் நினைவுக்கு வரவில்லை. நான், என் உடல், மனம், எண்ணங்கள், புத்தி, உணர்வுகள் எதுவுமே எனக்குத் தெரியவில்லை. மொத்தத்தில் என்னைக் காணவில்லை.

“பார்த்தசாரதி” சுவாமி அழைப்பது போல் தோன்றியது. கண் விழித்துப் பார்த்தேன். சுவாமி தன் இருக்கையில் அமர்ந்திருந்தார். படுத்திருந்த நான் எழுந்து உட்கார்ந்தேன்.

“மணி என்ன?” சுவாமி கேட்டார். மணியைப் பார்த்தேன். “மணி இரண்டு சுவாமி.” நான்கு மணி நேரம் கடந்திருந்தது. யாரோ இரண்டு பொட்டலங்கள் தயிர் சாதம் கொடுத்திருந்தார்கள் போலும்.

“ஓ, உனக்குப் பசி வந்திருக்கும். வா சாப்பிடலாம்.” சுவாமி ஒரு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தார். சுவாமியும், நானும் தயிர் சாதத்தை சாப்பிட்டோம். நான் எனது இருக்கையில் அமர்ந்தேன், சுவாமி தன் இருக்கையில் இருந்தார்.

“பார்த்தசாரதி, படுத்துக்கொண்டே பேசு” சுவாமி உத்தரவிட்டார். படுத்தேன். அதன் பின்பு என்னை நான் காணவில்லை.

“பார்த்தசாரதி” சுவாமி கூப்பிட்ட குரல் காதில் விழுந்தது. எழுந்தேன்.

“மணி என்ன?” சுவாமி வினவினார்.

“எட்டு மணி சுவாமி.”

சுமார் ஐந்து மணி நேரம் கடந்திருந்தது. யாரோ இரண்டு சப்பாத்திப் பொட்டலங்களை அங்கே கொண்டு வந்து வைத்திருந்தார்கள். சுவாமியும், நானும் சாப்பிட்டு முடித்தோம். “படுத்துக்கொண்டே பேசலாம் பார்த்தசாரதி“ மீண்டும் சுவாமி என்னைப் படுக்கச் சொன்னார். படுத்தேன். சற்றே நேரத்தில் என்னை மறுபடியும் காணவில்லை. மீண்டும் சுவாமியின் குரல். நேரம் கேட்டார். காலை மணி நான்கு. நான் அன்றெல்லாம் தூங்கினேனா அல்லது மயக்கத்தில் இருந்தேனா என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை.

“உன்னை நன்கு பார்த்துவிட்டேன் நண்பா, நீ ஊருக்குச் செல்லலாம். முருகேசன் என் தந்தையை அடைந்துவிட்டார். இனி அவர் பூஜிக்கத் தகுந்தவர். எனவே, கவலைப்படத் தேவையில்லை. ஊருக்குச் செல்லலாம் நண்பா” சுவாமியின் வார்த்தை எனது மனத்தில் ஆழப்பதிந்து, அங்கிருந்த சோகம், துக்கம், பிரிவு அனைத்தையும் விரட்டியடித்துவிட்டது. நான் ஊர் வந்து சேர்ந்தேன். பசித்தது. சாப்பிட்டேன். உறக்கம் வந்தது. தூங்கினேன். நினைவெல்லாம் சுவாமியே நின்றார்.

முருகேசன் மறைந்து மூன்று மாதங்கள் கழித்து முருகேசனின் தாயார் பத்மாவதியும் அவரது இளைய மகள் லலிதாவும் சுவாமியைத் தரிசிக்க திருவண்ணாமலை வந்தார்கள். சுவாமியிடம் நானும் அமர்ந்திருந்தேன். சுவாமி முருகேசனைப் பற்றியே வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

“சுவாமி, எங்களுக்குத் தான் பற்று உண்டு. உங்கள் மாதிரியான சுவாமி களுக்குப் பற்று ஏற்படாதே சுவாமி. ஆனாலும் நீங்கள் முருகேசனைப்


பற்றியே பற்றோடு பேசிக்கொண்டிருக்கிறீர்களே?" முருகேசனின் தாயார் கேட்டார். சுவாமி மெதுவாகச் சிரித்துக் கொண்டே சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக்கொண்டார். புகை உள்ளே சென்றது. வெளியே வரவில்லை. சிகரெட் புகைத்து முடித்தவுடன் அதை அணைத்துவிட்டு மற்றொன்றை எடுத்து பற்றவைத்தார். சற்று நேரம் கடந்தது. அவர் தனது மதுரமான குரலில் கூறினார்.

"வாலியின் மனைவி தாரா ஒரு ஞானி. வாலியின் மரணத்தினால் அழுது கொண்டிருந்த தாராவுக்கு ராமர் ஆறுதல் கூறினார். 'ஆத்மா அழிவதில்லை. வாலி ஆத்ம சொரூபம், எனவே வாலி இறந்துவிட்டான் என நீ அழுவதில் அர்த்தமில்லை. வாலியைச் சரீரமாகவே நீ கண்டாலும் சரீரம் நலிந்து, அழிந்துவிடும் இயல்பை இயற்கையாகவே கொண்டதினால் நீ துக்கப்படுவதில் நியாயமில்லை.' என்று ராமர் கூறினார். அதற்கு தாரா "நான் வாலியின்

மரணத்தைக் கண்டு துக்கிக்கவில்லை ராமா. நலிவடையாத, அழியாத ஆத்மா, நலிந்து, அழியக்கூடிய சரீரத்தில் இருந்த, வாலி என்ற ரூபத்தை இனி காண முடியாதே என துக்கிக்கிறேன் ராமா."

சுவாமி ராமாயணத்தை லயித்துச் சொன்னார். அவர் கண்களில் ஈரம் கசிந்தது. மீண்டும் சிகரெட்டைப் பற்ற வைத்தார். பின் தன் கண்களில் வழிந்த நீரை தன் மேல் போர்த்தியிருந்த சால்வையினால் துடைத்துக் கொண்டு, "இனி முருகேசனை இந்தப் பிச்சைக்காரன் எங்கே பார்ப்பான்?" என்று சொல்ல, அங்கு அமர்ந்திருந்த அனைவரும் விம்மி அழுதோம்.

# ஆவி வேண்டாம்



அந்த பக்தர் நல்லவர். உலகத்தோரால் பழிக்கப்பட்ட காரியங்கள் எதையும் செய்யாதவர். சுவாமியிடம் மிகுந்த பக்தி. சுவாமியால் ஈர்க்கப்பட்ட சக பக்தர்களையும் சமமாக பாவித்து உரையாடுபவர். படித்தவர். சிறந்த அறிவாளி. படித்த அறிவாளி என சுவாமியாலேயே பாராட்டப் பெற்றவர்.

சுவாமியின் மற்றொரு தீவிர பக்தரும், இந்த நண்பரும் மிகுந்த நட்புறவுடன் பழகிவந்தனர். சுவாமியிடம் செல்லும்போதும் ஒன்றாகவே சென்றனர். சுவாமியும் இவர்களது நட்பை, பலமுறை பாராட்டியுள்ளார். இந்நிலையில் இருவருக்கும் இடையே ஏதோவொரு காரணத்தினால் பிணக்கு ஏற்பட, பேச்சுவார்த்தை கூட இல்லாத நிலைமை ஏற்பட்டது. இருவரின் நட்பில் பிணக்கு ஏற்பட்ட சில மாதங்களில் அந்தத் தீவிரமான சுவாமியின் பக்தர் மாரடைப்பால் காலமானார்.

பக்தரின் மரணம் நமது நண்பரின் மனதை மிகவும் பாதித்தது. அற்ப காரியத்துக்காக தீவிர பக்தரிடம் விரோதம் பாராட்டினோமே என்ற

குற்றவுணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது. மிகவும் மனம் நொந்திருந்த அந்தப் பக்தர், மரணமடைந்த நண்பரின் ஆவியோடு தொடர்புக்கொண்டு அவரிடம் மன்னிப்பு கோர விரும்பினார். ஆவியோடு தொடர்பு ஏற்படுத்துவது குறித்து பலரிடம் பேசினார்.

பல புத்தகங்களைப் படித்தார். அதை நடைமுறையில் பரிசீலிக்க முடிவு செய்தார். அவரது கவனம் முழுவதும் ஆவிகளோடு பேசுவதிலேயே கழிந்தது. மரணமடைந்த நண்பரோடு பேசியதாகச் சொன்னார். தானும் அந்த நண்பரும் ஒன்றுபட்டு விட்டதாக எல்லோரிடமும் கூறினார். அவரது நடையுடை பாவனைகள் அத்தனையும் காலப்போக்கில் வித்தியாசமாக, பிறர் பார்த்து பயந்து ஒதுங்கிச் செல்லும்படி ஆகிவிட்டது.

இறந்த நண்பரோடு மட்டுமல்லாது, அவர் குடும்பத்தில் மரணமடைந்த அத்தனை நபர்களின் ஆவிகளோடும் இவர் பேச ஆரம்பித்தார். முடிவில் அந்த நண்பர் சுவாமியையும் விட்டுவைக்கவில்லை. திருவண்ணாமலையில் இருப்பது சுவாமியின் வெறும் சரீரம் மட்டுமே என்றும், அவரது உண்மையான ஆத்மா இருப்பது தன்னிடம்தான் என்றும் அனைவரிடமும் கூற ஆரம்பித்துவிட்டார். சுவாமியிடம் ஐக்கியம் பெறுவதற்குப் பதில் அவரிடம் சுவாமி ஐக்கியமாகிவிட்டதைப் போல் பேச ஆரம்பித்தார்.

என்னிடமும் அந்தப் பாணியில் அவர் பேச ஆரம்பித்தபோது, நான் அவரது மன ஆரோக்கியத்தில் சந்தேகமடைந்து, அவரது நெருங்கிய உறவினர்களிடம் அவருக்கு மனநல சிகிச்சை தேவை இருப்பதைக் கூறினேன். ஆனால், அவரது உறவினர்களோ, உண்மையில் அந்த நண்பர் பெரிய ஞானி ஆகிவிட்டார். என நம்ப ஆரம்பித்து விட்டார்கள். அடுத்த சில நாட்களில், முன்பு, நண்பரால் அடக்கிவைக்கப்பட்டிருந்த தகாத எண்ணங்கள் யாவும் செயல்வடிவம் பெற ஆரம்பித்ததைக் கண்ட

அவரது உறவினர்கள் விழித்துக்கொண்டனர். எனினும், அவர்களுக்கு ஒரே குழப்பம், என்ன செய்வது என்று அவர்களுக்குப் புரியவில்லை. நண்பர் ஞானியா அல்லது நோயாளியா? அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை. உறவினர்களில் சிலர் சுவாமியின் பக்தர்கள். அவர்கள் என்னையும், அவரது மற்ற இரண்டு உறவினர்களையும் சுவாமியிடம் சென்று அவரது ஆலோசனையைப் பெற்று வருமாறு கூறினர்.

நானும், நண்பரின் உறவினர்கள் இருவரும் ஒரு காரில் திருவண்ணாமலை புறப்பட்டோம். அன்று மாலை சுவாமியை சன்னதித் தெரு வீட்டில் சந்தித்தோம். நண்பரின் உறவினர்கள் சுவாமியிடம் நடந்த விவரங்களைக் கூறினர். சுவாமியுனுடைய ஆவி நண்பரில் இருப்பதாக அவர் சொல்வதையும் கூறினார்கள். சுவாமி அவர்கள் சொல்வதைக் கேட்டுப் புன்னகைத்தார்.

"இந்தப் பிச்சைக்காரன் இங்கு இன்னும் உயிரோடுதான் இருக்கிறான். இவனுடைய ஆவி எப்படி அங்கே சென்றது?"

சுவாமி பளிச்சென்று சொல்லிவிட்டு பெருஞ்சிரிப்புச் சிரித்தார். நானும் உறவினர்களும் சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தோம். சுவாமி, சற்று நேரம் மௌனமாக இருந்தார். மனிதனை மயக்கநிலைக்குத் தள்ளக்கூடிய ஆங்கில மருந்துகள் பெயர் கேட்டார். யாருக்கும் தெரியவில்லை. பின் சுவாமியே 'டிரான்குலைஸர்ஸ்' என நினைவு கூர்ந்தார்.

"அவருக்கு 'டிரான்குலைஸர்ஸ்' கொடுத்து ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளிக்கலாம். பார்த்தசாரதி, நீ அவரோடு ஆஸ்பத்திரியில் இருந்து கொண்டு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இந்தப் பிச்சைக்கரனுக்கு கடிதம் மூலம் நிலைமையைத் தெரிவிக்கவும்."

மீண்டும் சுவாமி மௌனமானார். அவர் முகம் தெய்வீகமாகப் பொலிந்தது. "கவலை வேண்டாம். நண்பர் விரைவில் குணமடைவார்." சுவாமி சொன்னதும் நாங்கள் ஆசுவாசப் பெருமூச்சுவிட்டோம்.

"ஆவிகளோடு பேச முயற்சிப்பதால் மனம், புத்தி, வாக்கு எல்லாமே பேதலித்து சித்த சுவாதீனமின்றிப் போய்விடுகிறார்கள். ஆவிகளோடு பேச முயற்சிப்பதைவிட என் தந்தையை நினைவு கூர்ந்தால், மனம், புத்தி, வாக்கு தெளிவடைந்து சாந்தி நிலவும். என் தந்தையை நினைப்பதால் ஆனந்தம், அமைதி, தெளிவு ஏற்படுகிறது. ஆவிகளை நினைப்பதாலே சிலர் பைத்தியமாகி வாழ்க்கையைச் சிதைத்துக் கொள்கிறார்கள். என் தந்தையின் அருளால் இந்த நண்பர் மீண்டு வந்துவிடுவார்".

இவ்வாறு சொல்லிவிட்டு சுவாமி எங்களுக்கு ஆசி கூறி விடை கொடுத்தனுப்பினார். நாங்கள் ஊர் விரைந்தோம். நண்பரின் மற்ற நெருங்கிய உறவினர்களிடம் சுவாமியின் ஆலோசனைகளைக் கூறினோம். இதற்குள் அந்த நண்பர் முரட்டுத்தனமாக நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார். அங்குள்ள அனைவரும் நண்பரை அசையாது கெட்டியாகப் பிடித்துக்கொள்ள, மிகுந்த கஷ்டப்பட்டு நண்பரின் உறவினர்களில் ஒருவரான ஒரு வைத்தியர் அவருக்கு மயக்க ஊசி செலுத்தி மயங்கவைத்து, பின் பக்கத்து ஊரில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் சேர்த்தார். சுமார் ஒரு மாத காலம் அவர் ஆஸ்பத்திரியில் இருக்க நேர்ந்தது. பலமுறை மின் அதிர்வு சிகிச்சை நண்பருக்கு அளிக்கப்பட்டது. முடிவில் சுவாமியின் அருளால் அவர் தன் இயல்பு நிலையை அடைந்தார்.

சுவாமியை அடைய, சுவாமியில் கரைய, சுவாமியின் நாமம் சொல்லி சுவாமியை நினைத்தாலே போதுமே!

# எங்கும் நிறைந்தவர்



அவர் ஒரு உபன்யாசகர். சாஸ்திரங்களிலும் காவியங்களிலும் விற்பன்னர். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு எனப் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். அவரது உபன்யாசங்களில் பக்தி ரசம் சொட்டும். தத்துவங்களும் தாத்பரியங்களும் பழுதில்லாமல் தெளிவான, எளிமையான சொற்களில் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும். அவர் உபன்யாசத்தைக் கேட்பவருக்கு பிரம்ம சுகம் கிட்டும் என்று ஒரு பெரும் ஞானி பாராட்டியுள்ளார்.

காலமெல்லாம் அந்த உபன்யாசகர் தெய்வத்தைப் பற்றியே படித்தும் கேட்டும், பேசியும் வந்தவர். உலக வாழ்வின் சுமைகள் தீயாய் சுட்டாலும், தெய்வத்தையும் சாஸ்திரங்களையும் விடாது அனுஷ்டானம் செய்து கொண்டே இருந்தார். அவரது துணைவியார் தெய்வ அனுக்கிரஹம் பெற்ற அற்புதமான பெண்மணி. தமிழிலும், வட மொழிகளிலும் பஜனைப் பாடல்களைப் பாடினால், பக்தியோ, சங்கீத வாசனையோ இல்லாதவர் கூட பக்தி மயக்கத்தில் கட்டுண்டு கண்ணீர் வடிப்பர். தெய்வீக அனுக்கிரஹம் பெற்ற இந்தப் புனித தம்பதியர் சுவாமியைச் சந்திக்கும் பாக்கியம் பெற்றார்கள். பக்தர்களைப் பரமன் பற்றி இழுத்துக்

கொள்வார் அல்லவா?

செல்வந்தர் ஒருவர் சுவாமியின் பக்தராக இருந்தார். அவரது குருநாதர் சித்தியடையும் முன் சுவாமியை அடையாளம் காட்டியதாக அவர் சொல்வார். பல ஞானிகளிடம் அவர் தொடர்புஏற்படுத்திக்கொண்டிருந்தார். அவர் சந்தித்த ஞானிகளுக்கு அவர் மனதில் தோன்றியபடி சேவை செய்து வந்தார். அவர் வாழ்வில் வசதிகளும், மேன்மைகளும், ஞானிகளின் அருளால் மட்டுமே சாத்தியாமாகும் என்ற நம்பிக்கை கொண்டவர். ஞானிகளைத் தான் அறிந்த மாதிரி வேறு எவரும் அறிந்திருக்க முடியாது என நம்பும் மமதை நிரம்பிய பக்தர். அவர் தான் சந்தித்த ஞானிகளின் மேன்மையைக் கிராமம் தோறும் பரப்பிட விழைந்தார். அதற்கு நமது உபன்யாசகர் தகுதியானவர் எனக் கருதி அவரை ஏற்பாடு செய்தார்.

ஒரு மோட்டார் ஊர்தியை ஞானிகளின் படங்களால் அலங்கரித்து தமிழ் நாட்டில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை அனைத்துக் கிராமங்களுக்கும் செல்ல ஏற்பாடுகள் செய்தார். அவரும் அந்த ஊர்தியைத் தொடர்ந்து அவரது காரில் பயணப்பட்டார். ஞானிகளின் புகழைப்பரப்ப செல்வந்தர் தன் தொழிலையும், குடும்பத்தையும் ஒரு வருட காலத்துக்குப் பிரிந்து ஊர் ஊராக பயணப்பட்டார். சுவாமி சொல்லியே இக்காரியத்தை செய்வதாக அனைவரிடமும் அவர் கூறி வந்தார். சுவாமி இதற்கு மறுப்புத் தெரிவித்தாலும், சுவாமியின் சொல்லுக்கு உண்மையான அர்த்தத்தை அனைவரும் புரிந்து கொள்ள இயலாது எனவும், தான் மட்டுமே சுவாமியின் எண்ணத்தை புரிந்து செயல்படும்படி சுவாமி அருள்பாலித்திருப்பதாகவும் அவர் அனைவரிடமும் சொல்லி வந்தார்.

உபன்யாசகர் தெய்வத்தைப் பற்றியும், தெய்வ சொரூபங்களான ஞானிகளைப் பற்றியும் ஊர் ஊராகச் சென்று பேசுவதற்குக் கிடைத்த சந்தர்பத்தைப் பெரும் பாக்கியமாகக் கருதினார். செல்வந்தர் உபன்யாசகரை சுவாமிக்கு அறிமுகம் செய்து வைத்தார். சுவாமியைக்

கண்ட நாள் முதல் உபன்யாசகர் சுவாமியின் அருட்கடாட்சத்துக்குப் பாத்திரமானார். அவர் வரும்போதெல்லாம் அவரை ஏதேனும் ஆன்மீகக்கதை சொல்லவைத்துக் கேட்பதும் அவரது துணைவியாரை பஜனைப் பாடல்கள் பாடச் சொல்லிக் கேட்பதும் சுவாமிக்கு மிகவும் ஆனந்தமளித்தது. சென்னையிலிருந்து புறப்பட்ட அந்த ஊர்தி பல ஊர்களுக்கும் சென்றுவிட்டு திருவண்ணாமலை வந்தடைந்தது. திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு மாலைப் பொழுதில் போவதையும், பகலெல்லாம் சுவாமியின் சன்னிதானத்தில் இருப்பதையும் உபன்யாசகர் வழக்கமாகக் கொண்டார்.

அன்று சுவாமியைத் தரிசிக்க நிறைய பக்தர்கள் வந்திருந்தனர். சன்னதித்தெரு வீட்டின் கூடத்தில் ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு அமர்ந்திருந்தனர். உபன்யாசகர் சுவாமியோடு அவரது பாயில் சுவாமிக்கு வலப்புறம் அமர்ந்திருந்தார். சுவாமிக்கு இடப்புறம் இருந்த தூணுக்கு அடுத்தபடியாக உபன்யாசகரின் மனைவி அமர்ந்திருந்தார். செல்வந்தர் சுவாமியின் நேரெதிரே பாயில் அமர்ந்திருந்தார். அவர் தன்னோடு ஒரு பெரிய ஒலிப்பதிவுக் கருவியைக் கொண்டு வந்திருந்தார். உபன்யாசகர் முந்தின நாள் கிராமத்தில் பேசிய சொற்பொழிவு அதில் பதிவாகியிருந்தது. அதைச் செல்வந்தர் சுவாமிக்குப் போட்டுக் காண்பித்தார்.

உபன்யாசகர் அதில் அற்புதமாக பக்திப் பரவசத்துடன் அண்ணாமலையாரைப் பற்றியும் சுவாமியைப் பற்றியும் பேசியிருந்தார். சுவாமி, மிகுந்த கவனத்துடன் உபன்யாசகர் பேசிய பேச்சை ஒலிப்பதிவுக் கருவி மூலம் கேட்டார். பிரசங்கம் முடிந்தது. சுவாமி உபன்யாசகரின் கரத்தை தன் கரத்தில் எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார். அவரின் சிரத்தையும், முதுகையும் சுவாமி வாஞ்சையோடு வருடிக் கொடுத்தார். சுவாமியின் பெருங்கருணையைக் கண்ட உபன்யாசகரும் அவரது மனைவியும் கண்கள் கலங்கியபடி கைகூப்பி தொழுதவண்ணம் இருந்தனர்.

“இந்தக் கருவியில் இன்னும் பதிவு பண்ணலாமா?“ சுவாமி கேட்டார்.

“இன்னும் நிறைய பதிவு பண்ணலாம் சாமி” செல்வந்தர் பதிலுரைத்தார்.

சுவாமி உபன்யாசகரின் மனைவியைக் கருவியின் முன் அமர்ந்து பக்திப் பாடல்களைப் பாடச் சொன்னார். செல்வந்தரை, அந்தப் பாடல்களைக் கருவியில் பதிவு செய்யச் சொன்னார்.

அந்த அம்மையார் பாட ஆரம்பித்தார். மீராவின் பஜன்கள், கபீரின் பாடல்கள், மராத்திய அபங்கங்கள், தமிழில் தேவார, திருவாசகப் பாடல்கள், நாமஜபங்கள் என அந்த அம்மையார் தொடர்ந்து பாடப் பாடக் கேட்போர் மெய்மறந்திருந்தனர். சுவாமி தெய்வீகமாக ஜொலித்துக் கொண்டிருந்தார். அவரது சரீரத்தில் எந்த அசைவும் இல்லை. கற்சிலையாக கட்டுண்டு அமர்ந்திருந்தார். சுமார் ஒரு மணி நேரம் இசை விருந்து நடந்தது. அவ்வம்மையார் பாடி முடித்தார். யாரோ பக்தர் சுவாமிக்கென கொண்டு வந்திருந்த பாலை, அம்மையாருக்கு வழங்கினார் சுவாமி. அம்மையார் பக்திப் பெருக்கோடு அதை பவ்யமாக வாங்கி அருந்தினார்.

சற்று நேரம் அமைதியாகச் சென்றது. உபன்யாசகரிடம் அம்மையார் பாடிய கபீரின் ஒரு பாடலை அந்த ஒலிப்பதிவு செய்த கருவியிலிருந்து எடுத்து இசைக்கச் சொன்னார். உபன்யாசகர் மிகவும் குழப்பமான விசைகள் நிறைந்த அந்த ஒலிப்பதிவுக் கருவியைக் கையாள மிகவும் சிரமப்பட்டார். எதிரில் இருந்த செல்வந்தர் அவரிடம் ஜாடையாக ‘இப்படிச் செய்யவும்,அப்படிச் செய்யவும்‘ எனச் சைகைகள் பல செய்து காண்பித்தார். எனினும் உபன்யாசகரால் அந்த ஒலிப்பதிவுக் கருவியைச் சரியாக இயக்க முடியவில்லை. அவர் தடுமாறிக் கொண்டே இருந்தார். சுவாமி அவரை நிதானமாகச் செய்யலாம் எனக்கூறிவிட்டு, மற்றொரு நண்பரை அழைத்துக் கொண்டு இயற்கை உபாதையைக் கழிப்பதற்காக பின்புறம்சென்றார். சுவாமி கூடத்திலிருந்து பின்புறம் சென்றதும், செல்வந்தர் உபன்யாசகரைக் கடுமையான சொல்லினால் வசை

பாட ஆரம்பித்தார். “சுவாமி ஒரு சிறு வேலை கொடுத்திருக்கிறார். அதைக்கூட உங்களால் செய்ய முடியவில்லையா? உங்கள் அறிவு எங்கே போய்விட்டது? நீங்களெல்லாம் எப்படி தெய்வத்தைப் பற்றியும், குருவைப் பற்றியும் பேசுகிறீர்கள்? இந்தச் சின்னக் காரியத்தைக் கூட செய்ய முடியாத உங்களை என்னவென்று சொல்வது?” செல்வந்தர் இன்னும் கடுமையான சொற்களினால் வசை பாடியபடி இருந்தார்.

அங்குள்ள அனைவருக்கும் செல்வந்தரின் செய்கை அதிர்ச்சியளிப்பதாகவும், அருவருக்கத் தக்கதாகவும் இருந்தது. சுவாமியின் சன்னிதானத்தில் இப்படி ஒரு கொடுமை நிகழ்கிறதே என்ற கொதிப்புடன் அனைவரும் அமர்ந்திருந்தனர். ஒரு வழியாக உபன்யாசகர் அந்த பாடலைத் தேடிக் கண்டுபிடித்து அதை இசைக்கத் தயாராக வைத்துவிட்டார்.

சுவாமி பின்புறம் செல்லும்போது அம்மையாரின் தெய்வீக இசையைக் கேட்ட மகிழ்வில் நடனமாடியபடி சென்றார். அவர் மீண்டும் திரும்பும்போதும் நடனமாடி சிரித்தபடியே வந்துகொண்டிருந்தார். பின்புறக் கதவு வரை வந்த சுவாமி திடீரென நின்றுவிட்டார். பின்புறக் கதவைப் பிடித்தபடி சுவாமி நின்றிருந்தார். அவர் முகத்தில் இருந்த மகிழ்ச்சி சென்றுவிட்டது. முகத்தின் தீட்சண்யம் அனைவரையும் பயப்பட வைத்தது. பின்புறக் கதவிலிருந்தபடி உள்ளே கூடத்தை உற்றுப் பார்த்தார். எவரோ ஏதோ சொல்வதை சுவாமி கேட்டுக் கொண்டிருப்பதைப் போல் தோன்றியது. தன்னுடன் வந்திருந்த நண்பரை உள்ளே சென்று அமரும்படி சைகை காட்டினார்.

நண்பர் உள்ளே சென்று தனது இடத்தில் அமர்ந்தார். சுவாமியின் கண்களில் கோபம் கொப்பளித்தது. முகம் அக்னியாகச் சிவந்து கனன்று கொண்டிருந்தது. கூடத்தின் உள்ளே மெதுவாக வந்தார். உபன்யாசகர் அமர்ந்திருந்த இடத்தின் அருகே இருந்த தூணில் சாய்ந்து கொண்டு நின்றார். உபன்யாசகர் சிரத்தின் மீது தன் கரத்தை வாஞ்சையோடு வைத்துத் தடவிக் கொடுத்தார். அதுவரை தன் உணர்ச்சிகளை அடக்கி

வைத்திருந்த உபன்யாசகர் தன் பெருத்த சரீரம் குலுங்கக் குலுங்க அழுதார். அவர் அழுததைக் கண்ட அவரது மனைவியும் கேவிக் கேவி அழ ஆரம்பித்தார். அவர்களின் வேதனைகளும், உணர்ச்சிகளும் கண்ணீராய்ப் பெருகி வழிந்தோடின. அங்கே பேரமைதி நிலவியது. அங்குள்ள அனைவரும் உணர்ச்சிவசப்பட்டு திக்பிரமையுடன் உட்கார்ந்திருந்தனர். தம்பதியினரின் அழுகை ஒலி சற்றுநேரத்தில் நின்றது. அவர்கள் சுவாமியைத் தொழுத வண்ணம் இருந்தனர்.

"இந்தப் பிச்சைக்காரன் அவனுக்குச் செய்யப்படும் அவமானத்தையும் நிந்தனையையும் தாங்கிக்கொள்வான். ஆனால், உண்மையான பக்தர்களையும், இந்தப் பிச்சைக்காரனின் நண்பர்களையும் யாரேனும் அவமானப்படுத்தினால் பொறுத்துக் கொள்ளவே மாட்டான். இவர்கள் என் தந்தையின் காரியத்தைச் செய்கிறவர்கள். வாழ்நாள் முழுவதும் என் தந்தையைப் பற்றியே பேசியும், உபாசித்தும் வருகிறார்கள். இவர்களை நிந்தை செய்வதா? அதுவும் இந்தப் பிச்சைக்காரன் இடத்திலேயே இவ்விதம் நடக்கிறதா? இதை ஒருக்காலும் இந்தப் பிச்சைக்காரன் பொறுத்துக் கொள்ளமாட்டான். தன் பக்தர்களுக்கு இவ்விதக் கொடுமை நேர்வதை என் தந்தை ஒருக்காலும் பொறுக்கமாட்டர்."

சுவாமி உக்கிரமாக கூடத்தில் அங்கும் இங்குமாக நடந்தார். கூட்டத்தில் செல்வந்தரின் மகனும் வந்திருந்தார். சுவாமியின் உக்கிரமான தோற்றத்தையும் சொல்லையும் கேட்ட அவர் பயந்து சுவாமியின் திருவடியில் விழுந்தார். பெருந்தொகையை சுவாமியின் திருவடியில் சமர்பித்தார். சுவாமி அவரை ஏறிட்டும் பார்க்காமல் அந்தப் பணத்தை அப்படியே உபன்யாசகரிடம் கொடுத்தார். செல்வந்தர் மகன் வெளியே சென்றார். செல்வந்தர் வீட்டினுள்ளே பின்புறம் சென்றுவிட்டார். உபன்யாசகர் மற்றும் அவரது மனைவியின் மனத்தில் சுவாமி உயர்ந்து நின்றார். இதையெல்லாம் நேரில் கண்ட நான் சுவாமியைக் கைகூப்பி வணங்கி நின்றேன்.

# அடையாறு ஆலமரம்




கூடத்தில் நடந்தது பின்னால் சென்றிருந்த சுவாமிக்கு எப்படித் தெரிந்தது? எங்கும் இருப்பவர் அங்கு நடந்ததை எங்ஙனம் அறியாதிருப்பார்?.

1989 ஆம் வருடம் சென்னையில் ருத்ர தாண்டவம் ஆடிய புயல் காற்றில் அடையாறு ஆலமரத்தின் தாய் மரம் வேரோடு சாய்ந்து விட்டது. சுமார் 400 ஆண்டுகள் பழமையான அந்த பெரிய விருட்சம் பல பெருமைகளைக் கொண்டது. சென்னை அடையாறில், அடையார் ஆற்றங்கரையில் அமைந்துள்ள புகழ் பெற்ற தியோசாபிகல் சொசைட்டி என்ற ஆன்மீக ஸ்தலத்தின் இருதயமாக அந்த ஆலமரம் படர்ந்து விரிந்து இருந்தது.

சுமார் 40000 சதுர அடி பரப்பளவில் படர்ந்து விரிந்திருந்த அந்த பெரிய விருட்சத்தின் தாய் மரம் வேரோடு சாய்ந்து போனதைக் கண்டு, அம்மரத்தைப் பற்றி அறிந்தவர்கள் அனைவரும் மிகுந்த கவலை அடைந்தனர். புயல், அடையாறு ஆலமரத்தைச் சாய்த்த பின், இரண்டு வாரம் கழித்து நான் திருவண்ணாமலைக்கு சுவாமி யோகி

ராம்சுரத்குமாரைத் தரிசிப்பதற்காகச் சென்றேன்.

அப்போது காலை ஐந்து மணியிருக்கும். சன்னதித் தெருக்குள் நுழைந்தேன். அங்கே சுவாமி வீட்டின் வாசற்படியில் அமர்ந்திருந்தார். சுவாமி எனக்காகவே காத்திருந்தது போல் இருந்தது. நான் வருவதை முன்னதாகவே சுவாமிக்கு நான் தெரிவிக்கவில்லை. எனினும் சுவாமி எனக்காகக் காத்திருந்தார். நான் சுவாமி அருகில் சென்று நமஸ்கரித்தேன். சுவாமி என்னை வீட்டிற்குள் அழைத்துச் சென்றார். சுவாமி தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு என்னை அவர் எதிரில் அமர வைத்தார்.

“நண்பா நீ அறிவாயா? சென்னையில் அடித்த புயல் காற்றில் தியோசாபிகல் சொசைட்டியில் உள்ள, பிரசித்தி பெற்ற பெரிய ஆலமரத்தின் தாய் மரம் வேரோடு விழுந்து விட்டது எனச் சொன்னார்கள். அந்த ஆலமரத்தின் கீழ் ஜே.கிருஷ்ணமூர்த்தி போன்ற ஞானிகளும், தியோசாபிக்கல் சொசைட்டியின் புகழ் பெற்ற அன்னிபெசன்ட், லெட்பெட்டர், மற்றும் பல உலக ஆன்மீகத் தலைவர்களும் கூடி அமர்ந்து பேசிய இடம் அது. பற்பல சாதகர்கள் அம்மரத்தின் கீழ் அமர்ந்து தந்தையைத் தியானம் செய்த இடம் அது. இந்த பிச்சைக்காரனும் அம்மரத்தின் கீழ் வெகு காலம் அமர்ந்திருந்தான். அந்த பெரிய மரத்தின் தாய் மரம் விழுந்து விட்டதாம். அந்த தாய் மரத்தை மறுபடியும் பூமியில் நிலையாக ஊன்றி அதை உயிர்ப்பிக்கத் தோட்டக்கலை நிபுணர்கள் முயற்சி செய்துள்ளார்களாம்.

நண்பா நீ எனக்கு உதவி செய்வாயா? இப்போதே நீ சென்னை சென்று அந்த மரத்தைப் பார்த்துவிட்டு, அதைப் பராமரித்து வரும் தோட்டக்கலை நிபுணரிடம் அதன் தற்போதைய நிலை குறித்து கேட்டு அறிந்து இந்த பிச்சைக்காரரிடம் திரும்ப வந்து சொல்ல வேண்டும். செய்வாயா நண்பா?”

சுவாமி என்னிடம் கேட்டார். நான் சரி எனச் சொல்ல சுவாமி உடனே

எனக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

நான் சென்னை விரைந்தேன். அடையாற்றில் உள்ள தியோசாபிக்கல் சொசைட்டிக்குச் சென்றேன். அந்த பெரிய ஆலமரம் இருந்த இடத்திற்கு வேகமாக நடந்து சென்றேன். அங்கே மீண்டும் அந்த தாய் மரம் நிற்க வைக்கப்பட்டிருந்தது.

தோட்டக்கலை நிபுணர் ஒருவர் அங்கே நின்றிருந்தார். நான் அவரிடம் திருவண்ணாமலை சுவாமி யோகி ராம்சுரத்குமார் என்னை அந்த விருட்சத்தின் நிலை அறிந்து வரச் சொன்னதைக் கூறினேன். அந்த நிபுணர் என்னிடம் மரத்தை மீண்டும் நிலை நிறுத்தியபின் புதிய தளிர்கள் துளிர்த்துச் செழுமையாக வெளிவரத் தொடங்கி இருப்பதைக் காட்டினார். மரம் முழுக்க புதிய தளிர்கள் துளிரத் தொடங்கியிருந்தது.

தோட்டக்கலை நிபுணர், "இனி கவலையில்லை. மரம் பிழைத்துக் கொண்டது. விரைவில் மரம் செழித்து முன்பு போல் இருக்கும்" எனக் கூறினார்.

மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மரத்தை நமஸ்கரித்தேன்.

உடனடியாக நான் திருவண்ணாமலை புறப்பட்டேன். இரவு எட்டு மணி அளவிற்கு சுவாமியிடம் சென்றடைந்தேன். சுவாமியிடம் செய்தியைக் கூறினேன். சுவாமி ஆனந்தமடைந்தார். யாரோ சுவாமிக்குப் படைத்த இனிப்பை சுவாமி எனக்கு வழங்கினார்.

"என் தந்தை அந்த புனிதமான ஆலமரத்தைக் காப்பாற்றிவிட்டார். என் தந்தை கருணையே வடிவானவர். நன்றி நண்பா, இந்த நல்ல செய்தியைச் சொன்னதற்கு நன்றி நண்பா."

சுவாமியின் சொற்கள் என்னை வெட்கப்பட வைத்தது. இரண்டு நாட்கள் சுவாமியுடன் இருந்து விட்டு ஊர் திரும்பினேன்.

அனைத்திற்கும் அருளும், சுவாமியின் நாமம் வாழ்க.

# முஸ்லீம் அன்பர்கள்



1989 ஆம் வருடம் நம் நாட்டின் முன்னாள் பிரதமர் திருவண்ணாமலை விஜயம் செய்தார். சுவாமி அவரைச் சந்தித்துவிட்டு வெளியே வந்தார். அவரோடு நாங்கள் நண்பர்கள் ஏழு பேர் இருந்தோம்.

நிகழ்ச்சி நடந்த கல்லூரி மைதானத்தை விட்டு வெளியே செல்லும்போது, கல்லூரி பிரதான கதவின் அருகே ஒரு முஸ்லீம் அன்பர் உணவுவிடுதி நடத்தி வந்தார். அவர் சுவாமியை பார்த்ததும் ஓடோடி சுவாமியிடம் வந்தார். சுவாமியை உரிமையுடன் ஆலிங்கனம் செய்தார். சுவாமியும் அவரும் பரஸ்பரம் முகம்மன் கூறிக்கொண்டார்கள்.

“சுவாமி உணவருந்திச் செல்லுங்கள்.” அந்த முஸ்லீம் அன்பர் வேண்டுகோள் விடுத்தார்.

“நாங்கள் ஏழு பேர் இருக்கிறோம். சாப்பாடு இருக்குமா?” சுவாமி வினவினார்.

“சுவாமி இன்று பட்டை சாதம்தான். ஏழு பொட்டலங்கள் இருக்கு சுவாமி.”

“அப்ப சரி. ஆனால் நண்பா காசு வாங்கிக்கொள்ள வேண்டும்.”

“சுவாமி உன்னிடம் எப்படி காசு வாங்குவது?”

“காசு வாங்கியே ஆகவேண்டும். இல்லையேல் நாங்கள் செல்கிறோம்.”

சுவாமி நடக்க ஆரம்பித்தார்.

“நில்லு சுவாமி நீ கொடுத்தா அல்லா கொடுத்த மாதிரிதான். நான் வாங்கிக்கிறேன் சுவாமி.”

முஸ்லீம் அன்பர் கொடுத்த ஆகாரப் பொட்டலத்தை அங்கேயே துர்நாற்றம் அடித்த வீதியில் அமர்ந்து பிரித்து உணவை உட்கொண்டோம். உணவின் சுவை திவ்யமாக இருந்தது. சுவாமி பணத்தை அந்த முஸ்லீம் அன்பருக்கு வழங்கினார். பணத்தை வாங்கிக்கொண்டு முஸ்லீம் அன்பர் சுவாமியை மீண்டும் ஆரத்தழுவி விடை கொடுத்தார். அங்கிருந்து சுவாமி அனைவரையும் மலை மேல் அழைத்துச் சென்றார்.

1960 களின் நடுப்பகுதியில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களுக்கு ஒரு முஸ்லீம் அன்பரோடு நட்பு ஏற்பட்டது. அந்த முஸ்லீம் அன்பர் அவ்வப்போது சுவாமியை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவளிப்பார். பள்ளியில் படிக்கும் அவரது மகனுக்கு சுவாமி ஆங்கிலம் கற்பித்தார். அச்சிறுவன் சுவாமியிடம் மிகவும் பிரியம் வைத்திருந்தான். பின்னாளில் சிறுவன் திருவண்ணாமலையில் புகழ் பெற்ற மருத்துவரானார். மருத்தவரானாலும் சுவாமியின் தொடர்பு அவருக்குத் தொடர்ந்து இருந்து வந்தது.

2001ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சுவாமியின் உடல்நிலை

கவலைக்கிடமான சமயத்தில் அந்த முஸ்லீம் டாக்டர் சுவாமியைப் பார்க்க வந்தார். அங்குள்ள மற்ற மருத்துவர்களுடன் இணைந்து சுவாமியின் சிகிச்சைக்கு உதவி புரிந்தார்.

சுவாமியின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமான நேரத்தில் இரவில் அகால வேளையில் அவரை அழைக்கச் சென்றாலும் சிறிதும் தயங்காமல் உடனடியாக எங்களுடன் காரில் ஆசிரமம் வந்துவிடுவார். சுவாமியின் உடல்நிலை சீராகும் வரை கூடவே இருப்பார். 2001 பிப்ரவரி 20 ஆம் நாள் சுவாமியின் இறுதி சுவாசம் சரியாக அதிகாலை 3 மணிக்கு நின்று போனது.

அந்த முஸ்லீம் டாக்டர் சுவாமியின் இழப்பைத் தாங்க முடியாமல் வாய்விட்டுக் கதறி அழுதார். அங்கிருந்த நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள் அவருக்கு ஆறுதல் தர முற்பட்டபோது அங்கு மூலையில் இருந்த அறைக்குள் சென்று கதறிக் கதறி அழுதார். அவர் அழுத சத்தம் வெளியே அனைவருக்கும் கேட்டது. மணி 3-19க்கு சுவாமி சமாதி அடைந்தார் என நிர்வாகிகள் அறிவித்தனர். அந்த முஸ்லீம் டாக்டர் அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார். சுவாமி யோகி ராம்சுரத்குமார் சமாதியின்போது அனைத்துச் சமூகத்தினரும் கலந்துகொண்டனர்.

# பாதாபிஷேகம்!



"ஸ்வாமி, உங்கள் பாதங்களைப் பிடித்துவிட அனுமதிப்பீர்களா?"

படித்த, பண்பட்ட, பக்தி நிறைந்த மத்திய வயதுப் பெண்மணி ஒருவர் யோகி ராம்சுரத்குமாரிடம் ஆவலுடன் கேட்டார்.

"இந்த அழுக்கான பாதங்களையா பிடித்துவிட நினைக்கிறீர்கள்?" சுவாமி சிரித்துக்கொண்டே தனது வலதுபக்க தூணில் சாய்ந்து கொண்டு பாதங்களை நீட்டினார். அந்தப் பெண்மணிக்குப் பேரானந்தம். தனது இருக்கையில் இருந்து வேகமாக எழுந்து, சுவாமியின் பாதங்கள் அருகில் சென்று அமர்ந்தார். பக்திப் பெருக்கோடு கண்களில் நீர் ததும்ப அவ்வம்மையார் மெதுவாக, இதமாக சுவாமியின், பாதங்களைப் பிடித்துவிட ஆரம்பித்தார்.

சுவாமியின் வலது பாதத்தை அப்பெண்மணி ஸ்பரிசித்தபோது ஏதோ நெருடியது. அவ்வம்மையார் சுவாமியின் பாதத்தை உற்று நோக்கினார். முட்களும், கூரான கற்களும் சுவாமியின் மென்மையான பாதம் முழுக்கப் பதிந்திருப்பதைக் கண்டார்.

"ஸ்வாமி, நிறைய முட்களும், சிறு சிறு கூரான கற்களும் பாதம் முழுவதும் குத்தியுள்ளன. நான் அவற்றை எடுத்துவிடவா?" எனக் குரல்

தழுதழுக்க அவ்வம்மையார் அனுமதி கோரினார்.

"எடுத்துவிடலாம் அம்மா" சுவாமி கனிவோடு அனுமதி அளித்தார்.

தன்னோடு வைத்திருந்த ஒரு சேஃப்டி பின்னை எடுத்து ஒவ்வொரு முள்ளாக பாதத்திலிருந்து கவனமாக எடுத்தார் அவ்வம்மையார்.

வலது பாதம் முடிந்தது. இடது பாதத்தையும் அப்பெண்மணி ஆராய்ந்தார். அதிலும் முட்களும் கூரான கற்களும் புதைந்திருந்தன. அவற்றையும் அவர் ஒவ்வொன்றாக நீக்கினார். மொத்தம் இரு பாதங்களிலும் சேர்ந்து சுமார் இருபத்தாறு முட்களும் கற்களுமாக இருந்தன. மெதுவாக அப்பெண்மணி சுவாமியின் பாதங்களை மீண்டும் வருடுவதும், பிடித்துவிடுவதுவுமாக இருந்தார்.

சுவாமியின் பாதங்கள் சூடாக இருந்தன. அப்பெண்மணிக்கு சுவாமியின் பாதங்களைத் தண்ணீரால் நனைக்கத் தோன்றியது. அங்கிருந்த அவரது கணவரிடம், பின்பக்கம் சென்று ஒரு வாளி நிறைய கிணற்று நீரைச் சேந்தி எடுத்துவரச் சொன்னார். அவர் கணவரும் பின்பக்கம் கிணற்றுக்குச் சென்று ஒரு வாளி நிறைய நீர் சேந்திக்கொண்டு வந்தார். சுவாமி மந்தகாசப் புன்னகையுடன் அத்தம்பதியர் செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தார். தாங்கள் வரும்போது சுவாமிக்குப் படைப்பதற்க்காக, புஷ்பங்களையும், பழங்களையும் கொண்டு வந்த பெரிய தாம்பாளத்தை அவ்வம்மையார் எடுத்தார். அந்தப் பெரிய தாம்பாளத்தின் மேல் சுவாமியின் பாதங்களை வைத்தார். குளிர்ந்த கிணற்று நீரால் அப்புனிதப் பாதங்களைத் திரு நீராட்டினார். கண்களில் நீர்வடிய அவ்வம்மையார் சுவாமியின் பாதங்களை நீராட்டியது அங்கு அமர்ந்திருந்த அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

"பாதாபிஷேகம் முடிந்ததா அம்மா?"

சுவாமி சிரித்தபடி கேட்டவுடன் அவ்வம்மையாரும் அவரின் கணவரும் ஆனந்தக் கண்ணீர் வடித்துத் தேம்பினார்கள். சுவாமி பேரருள் சிந்தப் புன்னகைத்தார். அங்கிருந்த அனைவரும் பக்தியில் விக்கித்து நின்றனர்.

# சுவாமியின் தாய்மை



நம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் நெருங்கிப் பழகியவர்கள் அவரிடம் ஒரு தெய்வீகப் பெண்மையின் அரும் பெரும் லட்சணம் இணைந்திருப்பதை உணர்ந்திருப்பார்கள். உள்ளிருந்து பொங்கிப் பெருகி வழியும் அன்பால் தரணியில் வாழும் அனைவருக்கும் தாயாகி இருப்பதை அவர்கள் அறிவார்கள்.

இதன் காரணமாகவே பெண் பக்தர்கள் அனைவரும் தங்களின் சகல விதமான பிரச்சனைகளையும் சற்றும் தயக்கமின்றி சுவாமியிடம் பேச முடிந்தது. சுவாமியும் அனைத்து வயதுப் பெண்களின் பிரச்சனைகளையும் புரிந்து கொண்டு அதற்கான தீர்வையும் அவரவர் நிலைக்கேற்ப உபதேசிப்பார். அவரவர் வீட்டில் பெண்களைப் பக்தி பூர்வமாக, உறுதியாக நிலைநிறுத்தி வீட்டில் அமைதியும், ஆனந்தமும் தாண்டவமாடச் செய்திடுவார். பெண்கள் மகிழ்வோடு வாழும் இல்லங்களே சுவாமி வாழும் இல்லங்கள் ஆகும்.

பெண்களின் பாதுகாப்பு சுவாமியின் பிரதானமான குறிக்கோளாகும்.

தனித்து பெண்கள் பயணிக்க அவர் ஒருபோதும் ஒப்புக்கொண்டதில்லை.

ஒரு சமயம் சுவாமியின் அத்யந்த பக்தரின் தாய் தன் சகவயது தோழிகள் இருவருடன் சுவாமியைத் தரிசிக்க பேருந்தில் திருவண்ணாமலை வந்தார். அவரின் வயது அப்போது சுமார் 65 இருக்கும். பெரிய செல்வந்தராயினும் மிக எளிமையாக வாழ்ந்து கொண்டிருந்த உன்னதமான தாய் அவர். சுவாமியைக் குருவெனக் கொண்டவர். சுவாமியின் சன்னிதியில் அமர்ந்திருந்து சுவாமியின் அருளுரையைக் கேட்கும் விருப்பமுடையவர்.

இரண்டு நாட்கள் கடந்தன. அம்மை ஊர் திரும்பும் நாள் வந்தது. சுவாமியிடம் விடை பெற்று புறப்பட சன்னதித் தெரு வீட்டிற்கு வந்தார்கள். நான் என் உறவினரோடு சுவாமியின் எதிரில் அமர்ந்திருந்தேன்.

“சுவாமி நாங்கள் ஊருக்கு புறப்படுகிறோம்.” அம்மை சுவாமியிடம் கூறினார்.

“எப்படி போகப்போகிறீர்கள் அம்மா”

“பஸ்ஸில்தான் சுவாமி.”

சுவாமி என்னைப் பார்த்தார்.

“நீ காரில்தானே வந்திருக்கின்றாய்?”

“ஆமாம் சுவாமி.”

“இவர்களை நீ அழைத்துக்கொண்டு இவர்கள் ஊரில் விட்டுவிடுவாயா?”

“ஆகட்டும் சுவாமி.”

ஆனால் அம்மையார் ஒப்புக் கொள்ளவில்லை. சுவாமி கெஞ்சினார்.

“பார்த்தசாரதி நல்ல டிரைவர் அம்மா. உங்களை பத்திரமாக வீட்டில் விட்டுவிடுவார் அம்மா.”

“நீங்கள்தான் எங்கள் டிரைவர். எங்களை பத்திரமாக பிரம்மத்தில் சேர்த்துவிடுவீர்கள். அதனால் கவலை வேண்டாம் சுவாமி. நாங்கள் பஸ்ஸிலேயே செல்கிறோம்.”

“நீங்கள் அப்படி நம்புகின்றீர்கள் என்றால், பார்த்தசாரதி இந்த பிச்சைக்காரனின் கருவி எனக் கருதுங்கள் அம்மா. தயை கூர்ந்து பார்த்தசாரதியுடன் காரில் செல்லுங்கள் அம்மா.”


அம்மை வாதம் செய்யாமல் ஒப்புக்கொண்டார். நானும், உறவினரும் அவர்களை அவர்கள் ஊரில் இறக்கிவிட்டு, நாங்கள் செல்ல வேண்டிய ஊர் சென்றடைந்தோம்.

மற்றொரு சமயம் ஆசிரமத்தில் சில காலம் சுவாமியின் அத்யந்த பக்தையுடன் ஒரு மத்திய வயது பெண்மணி தங்கியிருந்தார். இருவரும் கணவனை இழந்தவர்கள் என்பதால், அவர்களை சுவாமி தன்னுடைய நேரடி பாதுகாப்பில் வைத்திருந்தார்.

ஒரு நாள் அந்த மத்திய வயது பெண்ணின் மகள் நோயுற்றிருப்பதாக தொலைபேசியில் செய்தி வந்தது. அப்பெண்மணி ஊர் செல்ல விரும்பினார். சுவாமியிடம் தகவல் சொல்ல, சுவாமி அவரிடம் யாருடன் ஊர் செல்லப் போகிறீர்கள் எனக் கேட்க, தனியாக பஸ்ஸில் செல்லப் போவதாக அப்பெண்மணி பதிலுரைத்தார். சுவாமி தனித்து செல்லக் கூடாது எனக் கூறி, ஆசிரமத்தில் பணிபுரியும் தன் நம்பிக்கைக்குரிய ஒருவரை அழைத்து அப்பெண்மணியை அவர் ஊரில் பத்திரமாக பஸ்ஸில் கூட்டிச் சென்று விட்டு வருமாறு உத்திரவிட்டார்.

பெண்களின்பால் சுவாமி காட்டும் பரிவும், கருணையினாலேதான் ஒவ்வொரு குடும்பமும் ஷேமமாகவும், அமைதியாகவும் இருக்கின்றது என உறுதியாக நம்புகின்றேன்.

# என் புருஷன் வேண்டும்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில் ராஜகோபுரம் அருகில் உள்ள ஒரு தெருவில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய நிலபுலங்கள் பக்கத்து கிராமத்தில் இருந்தன. விவசாயியும், அவரது மனைவி மற்றும் இரு குழந்தைகளும் சுவாமியின் பக்தர்கள். தினமும் அதிகாலையில் விவசாயி வீட்டிலிருந்து தனது நிலத்துக்குச் சைக்கிளில் சென்று விடுவார். அவருக்கு தேவையான உணவை அவரது மனைவி சமையல் செய்து ஒரு பாத்திரத்தில் வைத்து அவரிடம் கொடுத்து அனுப்புவார்.

விவசாயி நிலத்தில் உழைத்து, களைத்து மாலையில் வீடு திரும்புவார். இதனிடையே அவரது மனைவி, குழந்தைகளுக்குக் காலை உணவைத் தயார் செய்து அவர்களைச் சாப்பிட வைத்துவிட்டு மதிய உணவையும் பாத்திரங்களில் வைத்து கொடுத்து அவர்களை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வைப்பார். பின் சுவாமிக்கென்று பக்குவமாக உணவு சமையல்

செய்து காலை 10 மணி அளவில் சுவாமியின் சன்னதித் தெரு வீட்டுக்கு அப்பெண்மணி சுவாமியின் தரிசனத்துக்கு வருவாள்.

சுவாமி அவரை அன்போடு வரவேற்று பெண்கள் அமரும் பகுதியில் அமரவைப்பார். சுவாமியின் நாமம் அங்கே பாடப்படும் போதெல்லாம் அப்பெண்மணியும் பக்திப்பெருக்கோடு நாமம் சொல்வார். சுவாமி பேசும்பொழுதெல்லாம் அவர் சிரத்தையோடு செவிமடுப்பார். மதியம் 1 மணி அளவில் சுவாமி அந்தப் பெண்மணி கொண்டு வந்திருந்த உணவை கேட்டு வாங்கிச் சாப்பிடுவார். பல சமயங்களில் எனக்கும் அந்த அமுதில் பங்கு கிடைத்ததுண்டு. எளிமையான அந்த உணவின் ருசி தெய்வீகமாக இருந்தது. மீதமிருக்கும் உணவை சுவாமி அப்பெண்மணியை உட்கொள்ளச் சொல்வார். மாலையானதும் சுவாமி அவருக்குப் பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைப்பார். இவ்விதம் தொடந்து பல மாதங்கள் நடைபெற்று வந்தன.

ஒரு சமயம் சுவாமியோடு சில நாட்கள் தங்கும்படியாக இருந்தது. அந்தப் பெண்மணியை அப்பொழுது சுவாமியின் சன்னதித் தெரு வீட்டில் என்னால் பார்க்க முடியவில்லை. நான்கு நாட்கள் கழித்து நானும் இன்னும் சில பக்தர்களும் சுவாமியின் சன்னிதானத்தில், கி.வா.ஜகன்னாதன் சுவாமியின் மீது இயற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தோம். சுவாமி எங்கள் பாடலைக் கேட்டு, ஆனந்த நர்த்தனத்தை அமர்ந்தபடியே ஆடிக்கொண்டிருந்தார். நாங்கள் பாடும் ராகத்துக்கேற்ப அவரது கரங்கள் வீசி வீசி ஆடுவதைக் கண்டு நாங்கள் பேரானந்தம் கொண்டோம். அங்கே ஆண்டவனும் அடியார்களும் சங்கமித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென அந்தப் பெண்மணி சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் தோன்றினார். அவர் வந்த வேகமும், அவரது கோலமும் எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவர் தலைவிரி கோலமாக இருந்தார்.

முகம் பொலிவில்லாது இருந்தது. அவர் நேராக சுவாமி அமர்ந்திருந்த இடத்தின் அருகில் வந்தார். சுவாமியின் பாதங்களைத் தன் இரண்டு கரங்களாலும் சிக்கெனப் பிடித்துக் கொண்டார்.

"யோகி ராம்சுரத்குமாரா, என் புருஷனை போலீசார் பிடித்துச் சென்றுவிட்டார்கள். அவர் ஒரு குற்றமும் செய்யவில்லை. அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும். என் தெய்வமே, உன்னால்தான் என் புருஷனை விடுவிக்க முடியும். என் புருஷனைக் காப்பாற்று யோகி ராம்சுரத்குமாரா. என் புருஷன் எனக்கு வேண்டும் யோகி ராம்சுரத்குமாரா."

அப்பெண்மணி கல்லும் கரையும்படி சுவாமியின் பாதங்களைப் பிடித்தபடி மன்றாடினாள்.

அப்பெண்மணியின் கணவர், அவரது விவசாய நிலத்தில் அவருக்கு உதவியாக ஒரு இளம் வயதுப் பையனை வேலைக்கு அமர்த்தியிருந்தார். அந்தப் பையன் மிகவும் விளையாட்டுப் பிள்ளையாக இருந்து வந்தான். விவசாயி சொல்வதை அவன் அரை குறையாகக் கேட்டபடி பொறுப்பில்லாமல் வேலை பார்த்து வந்தான். விவசாயியும் அவனுக்கு இதமாக பலமுறை புத்தி சொல்லியும் அந்தப் பையன் வேலைகளை ஒழுங்காகச் செய்யவில்லை.

ஒருநாள் மாலை குடியானவர் அந்தப் பையனை ஒரு வேலை செய்யச் சொன்னார். அவன் அதைச் செய்யாமல் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு குடியானவர் மிகுந்த கோபமடைந்து வெகுவாக கடிந்து கொண்டார். கோபமே கொள்ளாத அந்த விவசாயி தன்னைக் கடிந்து பேசியதைக் கண்ட பையன் மிகவும் கலங்கி, அழுதுவிட்டான். பயந்தும் போய் விட்டான்.

இதை எல்லாவற்றையும் பக்கத்து நிலத்துக்காரர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். குடியானவர் மீண்டும் அந்தப் பையனைக் கண்டித்துவிட்டு, மறுநாள் தான் வருவதற்குள் அந்த வேலையைச் செய்து முடித்திருக்க வேண்டுமெனச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டார்.

மறுநாள் காலை விவசாயி தன் நிலத்துக்குச் சென்றபோது, அங்கே பெருங்கூட்டமாக இருந்தது. அவரது நிலத்தில் இருந்த ஒரு மரத்தில் அந்த இளம் வயதுப் பையன் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தான். விவசாயிக்கு அதிர்ச்சி. போலீசார் வரவழைக்கப்பட்டனர். போலீசார் உடலைக் கைப்பற்றி சோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். அங்கே குழுமியிருந்த கிராமவாசிகளிடம் போலீசார் விசாரித்தபோது, முந்தைய நாள் மாலை நடந்த சம்பவத்தை போலீசாரிடம் மக்கள் கூறினர். எனவே, சந்தேகத்தின் பேரில் குடியானவரைப் போலீசார் கைது செய்து திருவண்ணாமலை போலீஸ்நிலையம் அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட குடியானவரின் மனைவி போலீஸ் நிலையம் சென்று தன் புருஷன் எந்தத் தவறும் பண்ணவில்லை என பலமுறை கூறியும், போலீசார் அவளது கணவனை விடுவிக்க மறுத்துவிட்டனர். அவளும் ஊரில் உள்ள முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து உதவி கோரியும், அவர்களும் அவளுக்கு உதவி செய்ய மறுத்துவிட்டனர்.

எனவே, சுவாமியின் திருவடியில் சரணடைய அப்பெண்மணி சன்னதித் தெரு வீட்டுக்கு விரைந்து வந்துவிட்டாள். இது நடந்த இரண்டு நாட்களும் அவர் உண்ணவில்லை, உறங்கவும் அவரால் முடியவில்லை. சில நாட்களாக அந்தப் பெண்மணி சுவாமியைப் பார்க்க வராதிருந்ததால், பெருமாள் சடையனை சுவாமி அனுப்பி அவருக்கு என்னாயிற்று என விசாரித்து வர, இத்தனைத் தகவல்களும் தெரியவந்தன.

“சுவாமி, என் புருஷன் எனக்கு வேண்டும். யோகி ராம்சுரத்குமாரா என் புருஷன் ஒரு தவறும் செய்யவில்லை. அவரை உடனே விடுவித்து என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும். என் புருஷன் எனக்கு வேண்டும் சுவாமி.”

விவசாயியின் மனைவி சுவாமியின் கால்களை கெட்டியாக பிடித்துக் கொண்டு கதறினாள். சுவாமி தன்னை விடுவித்துக் கொண்டு தன் இருக்கையிலிருந்து எழுந்து அந்தக் கூடத்திலேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அந்தப் பெண்மணியும் சுவாமியின் பின்னாலேயே சென்று, “என் புருஷன் வேண்டும் சுவாமி” என்று கதறிக்கொண்டே இருந்தாள். இந்தக் கலோபரத்தில் நாங்கள் பாடுவதை நிறுத்தியிருந்தோம். சுவாமி என்னை, நோக்கி பாட ஆரம்பிக்குமாறு சைகை செய்தார். நான் பாட ஆரம்பித்தேன். என் பின்னாலே அங்கே குழுமியிருந்த மற்ற பக்தர்களும் பாட ஆரம்பித்தனர்.

நாங்கள் கோரஸாகப் பாடிய சத்தத்தில் அந்தப்பெண்மணியின் குரல் எடுபடவில்லை. அந்தப் பெண்மணி மிகுந்த கோபம் அடைந்தாள். நேராக என் எதிரே நின்றுகொண்டு, “பார்த்தசாரதி, பாடுவதை நிறுத்துங்கள். நான் சுவாமியோடு பேச வேண்டும். தயவுசெய்து பாடுவதை நிறுத்துங்கள்” என வேண்டுகோள் விடுத்தார். நான் கண்களை இறுக மூடிக்கொண்டு பாடியவாறு இருந்தேன். அவர் மீண்டும் வேகத்தோடு சுவாமியின் பின்னே சென்று நாங்கள் பாடும் சத்தத்தை விட உரத்த குரலில் சுவாமியிடம் பேச ஆரம்பித்தார். சுவாமி அவரைச் சாந்தப்படுத்த முயற்சி செய்தார்.

“எல்லாம் சரியாகிவிடும் அம்மா. உங்கள் கணவர் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று என் அப்பாவுக்குத் தெரியும் அம்மா. உங்கள் கணவர் விரைவில் விடுதலையாகி வந்துவிடுவார் அம்மா. கவலை வேண்டாம் அம்மா. அப்பா எல்லாவற்றையும் பார்த்துக்

கொள்வார் அம்மா. உங்கள் கணவரை பத்திரமாக உங்களிடம் அப்பா ஒப்படைத்துவிடுவார் அம்மா. நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்."

சுவாமி கனிவோடு அவரிடம் கூறியும், அப்பெண்மணி கேட்கத் தயாராக இல்லை.

"என் புருஷன் வந்தால்தான் நான் வீட்டுக்குப் போவேன் சுவாமி. என் புருஷன் இல்லாமல் நான் வீட்டுக்குச் செல்லமாட்டேன் சுவாமி." அவர் பிடிவாதமாக சொன்னபடியே இருந்தார்.

சுவாமி மீண்டும் என்னருகே வந்தார். என் காதருகே, "உரக்கப் பாடலாம் பார்த்தசாரதி" எனச் சொல்ல நான் இன்னும் உரக்கப் பாடலானேன். அப்பெண்மணி மீண்டும் என்னருகே வந்தாள். எனக்கு ஆணையிட்டாள்.

"பார்த்தசாரதி, பாடுவதை நிறுத்துங்கள்."

நான் கண்களை இறுக மூடிக்கொண்டு விடாது உரக்கப் பாடினேன். அவர் என் தலையில் நறுக்கென வேகமாகக் குட்டினார். தலை வலித்தது. அதைவிட மனம் மிகவும் வலித்தது. என்றாலும் பாடுவதை நிறுத்தவில்லை. பின் அந்தப் பெண்மணி கெஞ்ச ஆரம்பித்தாள். கண்களை மூடிய நான் திறக்கவே இல்லை.

அவர் சுவாமியை மீண்டும் பின் தொடர்ந்தார். முன் கதவிலிருந்து பின் கதவு வரை சுவாமி நடந்தவாறே இருந்தார். அவளும் சுவாமியைப் பின் தொடர்ந்தவாறே "என் புருஷன் வேண்டும் சுவாமி" என்று சொல்லிக்கொண்டே நடந்தாள். சுவாமி வெளிக்கதவின் அருகே சென்று அங்கிருந்து உரத்தகுரலில் தேரடி மண்டபத்தில் இருந்த பெருமாளை அழைத்தார். பெருமாள் சுவாமியின் அருகே வந்தார். சுவாமி அவரிடம் அந்தப் பெண்மணியின் இரண்டு குழந்தைகளையும் அழைத்து வரும்படி கூறினார். பெருமாள் பக்கத்து தெருவிலிருந்த அந்தப் பெண்ணின்

வீட்டுக்குச் சென்று அவரது மகனையும், மகளையும் அழைத்து வந்தார்.

குழந்தைகள் இருவரும் சன்னதித் தெரு வீட்டினுள் வந்தார்கள் சுவாமி தன் இருக்கையில் அமர்ந்தார். அப்பெண்மணியும் அவரெதிரே அமர்ந்து கொண்டார். சுவாமி குழந்தைகள் இருவரையும் தங்களது தாயாரின் இரு பக்கத்திலும் உட்காரச் சொன்னார்.

“அம்மா சாப்பிட்டார்களா?” சுவாமி வினவினார்.

“அம்மா சாப்பிடவேயில்லை சுவாமி” மகள் பதிலுரைத்தாள்.

சுவாமி என்னை நோக்கி பாடுவதை நிறுத்த சைகை செய்தார். நான் பாடுவதை நிறுத்தினேன்.

“அம்மா, பழம் சாப்பிடலாமா?” சுவாமி வினவினார்.

“நீ கொடுத்தால் சாப்பிடுகிறேன் சுவாமி” பெண்மணி பதிலுரைத்தாள்.

சுவாமியே அங்கிருந்த இரண்டு ஆப்பிள் பழம் மற்றும் வாழைப் பழங்களை எடுத்து அருகில் வைத்துகொண்டார். ஆப்பிள் பழத்தை சிறுசிறு துண்டங்களாக நறுக்கி, அப்பெண்ணிடம் கொடுக்க அவள் அதைச் சாப்பிட்டாள். அவ்வப்போது சுவாமி குழந்தைகளுக்கும் ஒவ்வொரு துண்டாய் கொடுத்தார். சற்று நேரத்தில் பெண்மணி சிறிது அமைதியடைந்தாள். எனினும் “என் புருஷன் வேண்டும்” எனச் சொல்லுவதை அவர் நிறுத்தவில்லை.

“அவர் வந்துவிடுவார் அம்மா. அப்பா எல்லாம் பார்த்துக்கொள்வார் அம்மா. அவர் சீக்கிரம் வந்துவிடுவார் அம்மா.”

சுவாமி விடாது ஆறுதலளித்துக் கொண்டே இருந்தார். பழங்களையெல்லாம் அப்பெண்மணி சுவாமியிடம் இருந்து வாங்கி

சாப்பிட்டு முடித்தாள். அவர் அமைதியடைந்தது போல் தெரிந்தது. சுவாமி குழந்தைகளைக் கூப்பிட்டு அம்மாவை பத்திரமாக வீட்டுக்கு அழைத்து செல்லச் சொன்னார். குழந்தைகள் அம்மாவை ஆளுக்கொரு கரமாகப் பற்றிக் கொண்டு வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அம்மா மறுக்காது தன் குழந்தைகளோடு சென்றார்.

“சுவாமி, எவ்வளவு தைரியம் இருந்தால் அந்தப் பெண் இந்த மாதிரி நடந்து கொள்வாள்? இந்த மாதிரி ஆட்களையெல்லாம் இங்கே தாங்கள் அனுமதிக்கவே கூடாது சுவாமி.”

ஒரு வயோதிக பக்தர் கூறியதைக் கேட்டதும் சுவாமி வெகுண்டெழுந்து “நிறுத்துங்கள், உங்களுக்கு அவர் யாரெனத் தெரியுமா? அவரது பிரச்சனையின் தீவிரம் உங்களுக்குத் தெரியுமா? இது அவளின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சனை. அவரது வேதனையைப் புறந்தள்ளிவிட்டு உங்களோடு இந்தப் பிச்சைக்காரன் நேரத்தை வீணடிக்க விரும்புகிறீர்களா?”

சுவாமி ஒரு வாழைப்பழத்தை எடுத்தார். அதை அந்த வயோதிகரிடம் கொடுத்தார்.

“இந்தப் பிச்சைக்காரன் உங்களை அனுப்புகிறான். இனி இந்தப் பிச்சைக்காரனைக் காண நீங்கள் வரவேண்டியதில்லை.”

சுவாமியின் கோபத்தால் மிரண்டுபோன அந்த வயோதிகர் அங்கிருந்து வெளியேறினார்.

சுவாமி மீண்டும் என்னை பாடச் சொன்னார். நான் பாட ஆரம்பித்தேன். சுவாமி பாயில் படுத்துக்கொண்டார். அன்று முழுவதும் சுவாமி யாரிடமும் பேசவில்லை. அங்கு ஒரு தீவிரமான, திடமான அமைதி நிலவியது. அங்கிருந்தவர்கள் அனைவரும் என்னைத் தவிர ஒருவர்

பின் ஒருவராக செல்ல ஆரம்பித்தனர். சிலர் சுவாமியிடம் பேச ஆரம்பித்தனர். சுவாமி யாருக்கும் பதிலுரைக்கவில்லை. சுவாமி எவரையும் பொருட்படுத்தவும் இல்லை. அனைவரும் சென்ற பின்னும் சுவாமி படுத்தவாறே இருந்தார். இரவானது. சுவாமி பொன்னாக ஒளிர்ந்தவாறே படுத்துக் கொண்டிருந்தார். அவரது கரங்கள் ஏதோ வித்தியாசமாகத் தரையில் எழுதிக்கொண்டே இருந்தன. இரவு கடந்தது.

மறுநாள் காலை அந்தக் குடியானவர் விடுவிக்கப்பட்டார். பிரேதப் பரிசோதனையில் பையன் தற்கொலை செய்து கொண்டான் என்று நிரூபணமானது போலீஸ் நிலையத்திலிருந்து நேராக விவசாயியும் அவரது மனைவியும், குழந்தைகளும் சுவாமியிடம் வந்தார்கள். சுவாமியின் பாதங்களைத் தன் கண்ணீரால் அப்பெண்மணி அபிஷேகம் செய்தாள்.

“நேற்று என் தெய்வத்தை நான் மிகவும் தொந்தரவு செய்து விட்டேன். என் தவறைப் பொறுத்து மன்னிக்க வேண்டும் சுவாமி.”

“நீங்கள் எந்த தப்பும் பண்ணலை அம்மா. என் தந்தை உங்களின் பக்தியினால் மிகவும் சந்தோஷமடைந்தார் அம்மா.”

சுவாமி அவர்களை ஆசீர்வதித்தார். நிறைய பிரசாதம் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.

“மன்னிச்சுக்குங்க பார்த்தசாரதி” போகும்போது அந்தப் பெண்மணி என்னிடம் மன்னிப்புக் கோரினார். நேற்று அவர் குட்டிய இடத்தில் இன்றும் வலி இருந்தது. என் தலையை மெதுவாகத் தடவிக் கொண்டேன். இதைக் கண்டு சுவாமி ஆனந்தமாகச் சிரிக்க இந்தச் சம்பவம் என் இதயத்தில் ஆழப்பதிந்துவிட்டது.

# சுவாமி நம் காவலன்



அவர் கல்லூரி பேராசிரியை. சுவாமி யோகி ராம்சுரத்குமாரரையே தன் துணையெனக் கருதியதால் அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. சுவாமி தன் இல்லம் தேடி, தன்னை நாடி என்றேனும் ஒரு நாள் வருவார் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருந்தார்.

சுவாமியின் தனிப்பட்ட தேவைகளுக்கென நிறைய பொருட்கள் சேகரித்து வைத்திருந்து சுவாமிக்காகத் தனித்து காத்திருந்தார். அவரின் பெற்றோர் அவர் நிலை கண்டு பயந்து, அவரையும் அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை சென்றனர். சுவாமியை தரிசித்தனர்.

“சுவாமி மகள் திருமணத்திற்கு சம்மதிக்க மறுக்கின்றாள். நீங்களாவது அவள் மனதை மாற்றி திருமணத்திற்கு சம்மதிக்கச் செய்யுங்கள் சுவாமி.”

அன்னை கெஞ்சினார். பேராசிரியைக்குக் கோபம் கோபமாக வந்தது. சுவாமி இருவரையும் பார்த்த வண்ணமிருந்தார். சுவாமியின் திருமுகத்தில் மந்தகாசமான அழகிய புன்னகை விரிந்தது. இதைக் கண்ணுற்ற தாய்க்கு நம்பிக்கை பிறந்தது. தன் மகள் திருமணத்திற்குச்

சம்மதம் சொல்லிவிடுவாளென நம்பினார்.

“சுவாமி எங்கே பையனைப் பார்க்கலாம்?” என மிக ஆர்வமாகக் கேட்டார்.

“இங்கே கோவிலில் அம்மா”, சுவாமியின் பதிலைக் கேட்ட தாய் திகைத்துப் போனார். மகள் ஆனந்தமாக ஆனால் மௌனமாகச் சிரித்தார். சுவாமியிடம் விடை பெற்று பெற்றோரும் மகளும் ஊர் திரும்பினர். மகளை அவர் வேலை பார்க்கும் ஊரில் விட்டுவிட்டு பெற்றோர் தங்கள் ஊருக்கு புறப்பட்டுச் சென்றனர்.


பேராசிரியை ஒரு நாள் கல்லூரியிலிருந்து மிகுந்த தலை வலியுடன் வீட்டிற்கு வந்தார். வீட்டின் தலைவாசல் கதவைத் திறந்து நேராக அவரின் அறைக்குச் சென்று படுக்கையில் படுத்து விட்டார். சற்று நேரத்தில், தூங்கி விட்டார்.

வீட்டின் முன் கதவு பரக்க திறந்திருந்தது. இரவு நன்கு தூங்கி காலையில் பேராசிரியை தன் அறையிலிருந்து வெளியில் வந்தார். கூடமெல்லாம் சிகரெட் புகையின் வாசம் கவிந்திருந்தது. முன் வாசல் கதவு திறந்திருப்பதைப் பார்த்து அவர் அதிர்ச்சியடைந்தார். கதவைத் தாளிட்டார். அவருக்கு ஏதோ பொறிதட்டியது. குளித்துத் தயாராகி நேராக திருவண்ணாமலை சென்றார். சுவாமி பெரிய கதவருகே அமர்ந்திருந்தார். பேராசிரியையைப் பார்த்ததும் சுவாமி அவரை இரும்புக் கதவைத் திறந்து உள்ளே வரச் சொன்னார். கதவை வேகவேகமாகத் திறந்து பேராசிரியை நேராக சுவாமி முன் சென்று நின்றார்.

“புத்தியிருக்கா உனக்கு, கதவை திறந்தபடி வந்து விட்டாயே. யார் மூடுவது?”

சுவாமி கோபத்தோடு கேட்டார். பேராசிரியைக்குப் புரிந்து விட்டது. இரும்புக் கதவை பூட்டி விட்டு சுவாமியின் திருப்பாதங்களை அவர் நமஸ்கரித்தார். சந்தோஷத்தில் சிரித்தார். சுவாமியின் முகமலர் நிறைவாக பூத்திருந்தது. பேராசிரியை தற்சமயம் வடக்கே எங்கோவொரு ஷேத்திரத்தில் இருக்கின்றார்.

# தீர்க்க சுமங்கலி



ஆசாரம் மிகுந்த குலத்தில் பிறந்த அந்த அம்மையாருக்கு சுமார் 65 வயதிருக்கும். அவரும், அவரது கணவரும், குழந்தைகளும் சுவாமியிடத்தில் மிகுந்த பக்தியும், நம்பிக்கையும் கொண்டவர்கள். அந்த அம்மையார் சுவாமியைப் பணிந்து நமஸ்கரிக்கும்போதெல்லாம் சுவாமி

“அம்மா நீங்கள் சௌபாக்கியவதி. தீர்க்கசுமங்கலி அம்மா நீங்கள்”

என்று வாழ்த்தி அருளுவது வழக்கம். சுவாமியின் இந்த அருள்வாக்கைக் கேட்டு அந்த அம்மையார் பேருவகைக் கொள்வார்.

அம்மையார் பிறந்த குலத்தில் மிகுந்த ஆசாரங்களும், அனுஷ்டானங்களும் அனுசரிக்கப்பட வேண்டும். குறிப்பாக, பெண்களுக்கு மிகுந்த கண்டிப்பான ஆசாரங்கள் உண்டு. அம்மையார் சுவாமியின் அருளால் எப்பொழுதும் பேரானந்தத்தில் துய்த்து வந்தார். அவர் வாழ்வில் பெரும் சோதனை வந்தது. அவரது கணவர் நோய்வாய்ப்பட்டார். அம்மையார் அவரை நன்கு கவனித்து சிசுருஷை செய்து வந்தார். முதுமையின்

தாக்கத்தினால் அம்மையாரின் கணவர் மரணமடைந்தார்.

கணவரின் மரணம் அம்மையாருக்குத் தாங்கொணா துக்கம் தந்தது. கணவரை இழந்த வேதனையில் அவர் உடல் நலமும் பாதிக்கப்பட்டது. வாழ்வின் யதார்த்த உண்மையான மரணத்தை அம்மையாரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரது மகள் தன் தாயாரை துக்கத்திலிருந்து மீட்டெடுக்கப் பெரும் முயற்சி செய்தும் அவரால் தாயாரின் துயரைத் தணிக்க முடியவில்லை. முடிவில் தன் தாயை சுவாமியிடம் அழைத்துச் செல்ல முடிவெடுத்தார். மறுநாள் அவரும், அவரது கணவரும், குழந்தைகளும் அம்மையாரை அழைத்துக் கொண்டு சுவாமியிடம் சென்றார்கள். அம்மையாரின் கணவர் இறந்த செய்தியை ஏற்கெனவே அவரது மகள் சுவாமிக்குத் தந்தி மூலமாகவும், விரிவான தபால் மூலமாகவும் தெரிவித்திருந்தார்.

சுவாமியின் சன்னதித் தெரு வீட்டினுள் அம்மையாரும், அவரது மகளும் மற்றும் குடும்பத்தாரும் சென்றனர். சுவாமி இரண்டு தூண்களுக்கு நடுவில் விரிக்கப்பட்ட பாயின் மீது அமர்ந்திருந்தார். அம்மையார் சுவாமியின் பாதம் பணிந்து, நமஸ்கரித்து வாய்விட்டு அழுதார்.

“சுவாமி, அவர் போய்விட்டாரே, இனி என்ன செய்வேன் சுவாமி” கண்கலங்கி சுவாமியின் பாதங்களைப் பற்றியபடி அம்மையார் கேட்டார்.

சுவாமி தீட்சண்யமான தன் பார்வையினால் அம்மையாருக்குத் தனது பேரருளைப் பொழிந்துகொண்டிருந்தார். சற்றுநேரம் கடந்தது.

“அம்மா, நீங்கள் சௌபாக்கியவதி. தீர்க்கசுமங்கலி அம்மா நீங்கள். கவலை வேண்டாம் அம்மா. என் தந்தை உங்களோடு எப்பொழுதும் இருக்கிறார் அம்மா.”

சுவாமியின் அருள்மொழிகள் மந்திரமாக வேலை செய்தன.

அம்மையாரின் துக்கம் விலகியது. ஆனந்தக் கண்ணீர் வடித்தார். பழைய பக்தி அவரிடம் மீண்டும் வந்தது. சுவாமியை மீண்டும் நமஸ்கரித்தார். அம்மையாரின் மகள் சுவாமிக்கு சமர்பித்த புஷ்பச் சரத்தை எடுத்து அம்மையாரிடம் கொடுத்தார் சுவாமி. புஷ்பச்சரத்தைத் தலையில் சூட்டிக்கொள்ளும்படி சுவாமி சைகை செய்தார். அம்மையார் சற்றும் தயங்காமல் புஷ்பச்சரத்தைத் தன் தலையில் சூடிக்கொண்டார்.

“நான் இனி விதவை இல்லை. என் தெய்வம் யோகி ராம்சுரத்குமார் சொல்லிவிட்டார். அவர் சொன்னதை நீங்கள் எல்லோரும் கேட்டீர்களா? இனி நான் விதவை இல்லை.”

அம்மையார் ஆனந்தப் பரவசத்தில் தன் குடும்பத்தாரிடம் கூறினார். சில நாட்கள் கழித்து, அம்மையாரை நான் அவரது இல்லத்தில் சந்தித்தபோது அம்மையார் நெற்றியில் பெரியதாகக் குங்குமம் இட்டு, கூந்தலில் மலர்களைச் சூடியிருந்தார். எங்களை வரவேற்று அமரவைத்து, ஆனந்தமாகப் பேச ஆரம்பித்தார்.

“என் சுவாமி, என் தெய்வம் நான் தீர்க்கசுமங்கலி என்று சொல்லிவிட்டார். எனவே, நான் தீர்க்க சுமங்கலிதான். விதவைக்கான எந்த நியதியும் என்னைக் கட்டுப்படுத்தாது. எனினும், என் சுற்றத்தார்கள் என்னுடைய இந்தச் சுமங்கலிக் கோலத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். நான் அவர்களிடம் தெளிவாகக் கூறிவிட்டேன். என்னை மாற்ற முயற்சி செய்யாதீர்கள். உங்கள் பேச்சை நான் கேட்கப்போவதில்லை. என்னுடைய இந்தத் தோற்றம் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் இங்கே நீங்கள் இனி வரத்தேவையில்லை என்று திட்டவட்டமாக கூறிவிட்டேன்.”

அந்த அம்மையார் சுவாமியிடம் கொண்ட பெரும்பக்தியும், நம்பிக்கையும் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

# தொல்காப்பியம்



சுவாமி தன் அத்யந்த பக்தர்களுக்கு, அவரவர் மனோ பாவத்துக்கேற்ப பற்பல ஞானிகளின் வாழ்க்கையையும், உபதேசங்களையும் கொண்ட ஆன்மீக நூல்களை தனது பக்தர்களுக்கு பரிந்துரை செய்து, அவற்றை படிப்பதற்கு உத்வேகமும் கொடுத்து வந்தார்.

ஒவ்வொரு பக்தர் வரும்போதும், சுவாமி அவர்களுக்குப் பரிந்துரைத்த நூல்களிலிருந்து விஷயங்களைச் சொல்லச் சொல்லுவார். அவற்றை சுவாமி உன்னிப்பாகக் கவனித்து, அவற்றின் தாத்பர்யங்களைப் பக்தர்களுக்குப் புரியும்படி எளிமையாக விளக்கிக் கூறுவார். இதனால் பக்தர்களுக்கு அந்நூல்களில் மென்மேலும் ஆர்வம் அதிகரித்து, அவற்றை விடாது தொடர்ந்து பலமுறை படித்தார்கள். நூல்களில் சொல்லப்பட்ட உபதேச சாரங்கள் அவர்களின் குணாதிசயங்களை சரியான வழியில் கொண்டு செலுத்தின. இதனால் பல அன்பர்களின் வாழ்க்கையில், அவர்களே அறியாத விதத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்கள் ஆன்மீக சாதனைகளைச் செய்யத் தலைப்பட்டார்கள்.

பற்பல ஞானிகளின் நூல்களை ஏற்கனவே படித்திருந்த ஒரு பக்தர் சுவாமியிடம் வந்தார். சுவாமி அவரிடம் அளவளாவும் போது, 'தொல்காப்பியம்' பற்றி பேச்சு வந்தது. தமிழ் இலக்கணச் சூத்திரங்கள் அடங்கிய அந்த நூலைப் பற்றி வடக்கே, கங்கைக் கரையிலிருந்து வந்த சுவாமிக்கு எப்படித் தெரியும் என பக்தர் வியந்து போனார். சுவாமி, தொல்காப்பியம் பற்றி விரிவாகக் கூறலானார். பக்தரிடம் தொல்காப்பியத்தைப் படிக்குமாறும் கூறினார். தொல்காப்பியத்தை ஒரு அறிஞரின் உதவியின்றி படித்து அர்த்தம் செய்துகொள்ள முடியாது என்றும், எனவே தொல்காப்பியத்தை கற்க ஒரு தமிழ் அறிஞரை நாடவும் சுவாமி யோசனை கூறினார். பின்பு சுவாமி அந்தப் பக்தருக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

சென்னையில் வசித்த அந்தப் பக்தர், சுவாமி கூறியதில் உற்சாகமடைந்து உடனடியாகத் தொல்காப்பிய நூலை வாங்கினார். மேல் நோக்காக அதைப் படிக்க ஆரம்பித்தார். அவருக்கு எதுவுமே புரியவில்லை. சுவாமி சொன்னது ஞாபகம் வந்தது. தமிழ் அறிஞர்கள் எவரேனும் தனக்கு உதவுவார்களா என விசாரிக்க ஆரம்பித்தார். கம்பன் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனை அவர் முதலில் நாடினார். அவரிடம் நேரில் சென்றார்.

சுமார் நாற்பது வயதான ஒரு தொழிலதிபர் தன்னிடம் தொல்காப்பியம் கற்க வந்தது அ.ச.ஞானசம்பந்தத்துக்குப் பேராச்சரியம் தந்தது. தன்னிடம் தொல்காப்பியம் கற்க ஏன் ஆசைப்படுகிறீர்கள் என வினவ, அவர் தனது குரு யோகி ராம்சுரத்குமார்தான் தொல்காப்பியத்தை கற்கச் சொன்னார் என்று கூற, பேராசிரியர் வியந்துபோனார். சுவாமி வட மாநிலத்தைச் சேர்ந்தவர் என்றும், தமிழில் அவர் மழலையாகத்தான் பேசுவார் என்றும் தெரிந்துகொண்ட பேராசிரியர் அதிர்ந்து போனார்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களிலேயே பலருக்கும் கடினமான இலக்கண நூலான தொல்காப்பியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள

விழிப்புணர்ச்சியே இல்லாத இக்காலத்தில், வடஇந்திய சுவாமி ஒருவர் தொல்காப்பியம் பற்றிப் பேசுகிறார் என்றால் பிரமிப்பு ஏற்படுவது சகஜம்தானே! அவரைப் பார்க்க வேண்டும் என்ற அவா அவருக்குத் தீவிரமாக எழுந்தது. தன்னை சுவாமியிடம் அழைத்துச் செல்ல முடியுமா என்று அவர் கேட்டார். பக்தர் சம்மதம் தெரிவிக்க, அடுத்த சில நாட்களில் பேராசிரியரை அழைத்துக் கொண்டு பக்தர் சுவாமியிடம் சென்றார்.

சுவாமியைத் தரிசித்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், அவரது அருள்நோக்கால் ஈர்க்கப்பட்டு சுவாமியின்பால் பித்தாகிப் போனார். அவர் ஊர் திரும்பி கம்பன் கழக உறுப்பினர்களான மற்ற தமிழ் அறிஞர்களிடமும் சுவாமியைப் பற்றிக் கூறினார். அவர்களும் சுவாமியைத் தரிசித்து, பேரானந்தம் கொண்டு சுவாமியின் பக்தர்களானார்கள்.

பேராசிரியர் தன் ஆசிரியரான மதுரை பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.தெ.போ.மீனாட்சி சுந்தரனாரிடம் சுவாமியைப் பற்றிக் கூற, அப்போது பிரபலமாக இருந்த மஹேஷ்யோகி என்பவரது பிரதான சீடராக இருந்த தெ.போ.மீனாட்சி சுந்தரனார் சுவாமியைக் காணப் பேராவல் கொண்டார். தொழிலதிபர் பேராசிரியரையும், தமிழ் பேரறிஞரான தெ.போ.மீனாட்சிசுந்தரனாரையும் அழைத்துக் கொண்டு சுவாமியிடம் சென்றார்.

சுவாமியால் கவரப்பட்ட தெ,போ.மீனாட்சிசுந்தரனார், தான் பயின்ற ஆழ்நிலை தியானத்தையும் கடந்த, எதிலும் மாசு அடையாத, சுயம் பிரகாசமான, புனிதமான தெய்வீகத்தை நேரில் தரிசித்து பிரமித்துப் போனார். முதல் சந்திப்பிலேயே சுவாமி அவரை முற்றிலும் ஆட்கொண்டார். தமிழ் அறிஞரான தெ.போ.மீ., சுவாமியின் மீது பல பாடல்கள் புனைந்தார். அவற்றையெல்லாம் சுவாமி கேட்டு ஆனந்த நர்த்தனம் புரிவதைக் காணக் கண் ,கோடி வேண்டும். தெ.போ.மீ., பாடிய

ஒரு பாடலை சுவாமி, “இது வெறும் பாடல் அல்ல, இது தெய்வீக மந்திரமாகும்” எனக் கூறினார். தெ.போ.மீ., ஒருவரே தனது தெய்வீகப் பூரணத்தைச் சிறிதளவேனும் தெரிந்தவர் என இப்பாடலைக் கேட்டபின் சுவாமி கூறினார்.

“பிற்காலத்தில் ஒருவர் வருவார். அவர் இந்த ஒரு பாடலைப் பற்றியே பல நூல்கள் எழுதுவார்” சவாமி தீர்க்கதரிசனமாகக் கூறியது என்றோ ஒருநாள் நடக்கத்தான் போகிறது. “யோசனைக்கு எட்டா யோகமே போற்றி” என ஆரம்பிக்கும் அந்தப் பாடல் 1970 களில் இருந்த பக்தர்களிடம் மிகப் பிரபலமாக இருந்தது.

தொல்காப்பியம் என்ற தமிழ் இலக்கண நூல் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் மற்றும் தமிழ்ப் பேரறிஞர் தெ.போ. மீனாட்சிசுந்தரனாரை சுவாமியிடம் சேர்த்தது. மேற்கூறிய இருவரும் சுவாமியிடம் மெய்மறந்து லயித்து இருந்தபடியால் தொல்காப்பியம் கற்றுத்தர அந்தத் தொழிலதிபர் பெரியசாமிதூரன் என்ற மற்றொரு பேரறிஞரை அணுகினார். அவரும் சுவாமியால் அனுக்கிரஹிக்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டார். இதனால் தொல்காப்பியம் சொல்லித்தர வேறு ஒருவரைத் தேடினார் தொழிலதிபர். தமிழ் மூதறிஞரான கி.வா. ஜகந்நாதனை அணுக, அவரும் சுவாமியால் ஆட்கொள்ளப்பட்டார்.

முடிவில், அப்போதைய மூத்த தமிழ் அறிஞர்கள் பலரும் சுவாமியால் கவரப்பட்டார்கள். அவர்கள் அனைவருமே ஆன்மீகப் பெருவெளியில் சுவாமியால் உந்தித் தள்ளப்பட்டு, ஆனந்தப் பரவசமடைந்து, பரிபக்குவ நிலையைப் பூரணமாக அடைந்து மறைந்து போனவர்கள். இவர்கள் அனைவரும் சுவாமியின் மீது ஏராளமான பாடல்கள் புனைந்தார்கள். தொல்காப்பியம் எனும் தமிழ் இலக்கண நூல், தமிழ் பேரறிஞர்கள், சுவாமியின் திருவடிகளைச் சரணடையக் காரணமாயிற்று. பின்பு அந்தத் தொழிலதிபர் தொல்காப்பியத்தை மறந்தே போய்விட்டார்.

# சுவாமியின் பக்தர்கள்



சுவாமி பாரபட்சம் காட்டுபவரா? சில பேரிடம் அதிக நேரம் செலவிட்டும், பெரும்பான்மையோரை அதிக நேரம் காக்க வைத்தோ அல்லது பார்க்காமலே அனுப்பிவிடுவதோ சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் அடிக்கடி நடக்கும் சம்பவங்கள்.

"இந்த பிச்சைக்காரன் யாரைப் பார்க்க வேண்டும் என்பதை என் தந்தைதான் முடிவு செய்வார். இந்த பிச்சைக்காரன் என்ன பேச வேண்டும் என்பதையும் என் தந்தையே ஆணையிடுகின்றார். இந்த பிச்சைக்காரன் வாயிலிருந்து தவறான ஒரு சொல்கூட வராமல் என் தந்தை பார்த்துக்கொள்கிறார்."

இவ்விதம் கூறிய சுவாமியே, "கடினமான காலத்தில் என் தந்தையின் மீது நம்பிக்கை வைத்து இந்த பிச்சைக்காரன் பெயரை நினைவு கூர்ந்து ஆழ் மனதிலிருந்து மௌனமாக என் தந்தையைக் கூவி அழைத்தால், அப்போதே உதவிகள் எவர் மூலமேனும் வந்து சேரும். எனவே இந்த பிச்சைக்காரன் பெயரை நினைவில் கொள்ளுங்கள்."

இவ்விதமும் சுவாமி கூறியிருக்கின்றார்.

அன்று காலையிலிருந்தே குருவின் அருள் குறித்து சுவாமி விஸ்தாரமாகப் பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் கேட்டுக் கொண்டிருந்தோம். குருவின் அருளின்றி ஆத்ம சாதனை சாத்தியமற்றது என்று விளக்கிக் கொண்டிருந்தார். குருவின் திருவடியை அடைய பகவத் சிந்தனை அவசியம் என்றும், பகவத் ஸ்மரணையும், பக்தியுமே குருவின் திருவடியில் ஒருவரைச் சேர்ப்பிக்கும் காரணிகள் என்றும் உபதேசித்துக் கொண்டிருந்தார். பேதமற்ற பண்பும், பலன் கருதா கர்மமும், தியாக உள்ளமும், பிற ஜீவன்களிடம் அன்பும் கொண்ட சான்றோர் குருவிற்கு மிகவும் பிடித்தமானவர்கள் என்று சுவாமி உபதேசித்துக் கொண்டிருந்தார்.

"குருவின் மகிமை அறிந்து குருவை நாடுபவர் மிகவும் அரிது. குருவை நாடுபவரில் ஒருசிலரே குருவைக் காணமுடிகிறது. குருவைக் கண்டவரில் மிகச் சிலரே குருவை அணுக முடியும். குருவை அணுகியவரில் ஓரிருவரே குருவால் ஆட்கொள்ளப்படுகின்றனர்.

சுவாமி ஆழ்ந்த அமைதியில் புகைப்பிடித்துக் கொண்டிருந்தார். அந்த இடமே பரவெளியாகி விரிந்துகொண்டே சென்று, நாங்கள் அதில் முற்றிலும் கரைந்து விட்டதுபோல் உணர்ந்தோம்.

வாழ்வின் அன்றாடப் போராட்டங்கள், அபத்தமான ஆசைகள், விபரீதமான போக்குகள், ஆங்காரமான அகங்காரச் சொற்கள் ஆகிய அனைத்தும் விலகி "நான்" என்ற சொல்லே அசிங்கமாகத் தெரிந்த வேளை அது. சுவாமியிடம் அமர்ந்திருக்கும்போது அங்கே "நான்" அதிகமாகத் தலைகாட்டுவதே இல்லை. அந்த 'நான்' அடங்கி விலகி நிற்க, சத்தியத்தின் தரிசனம் அங்கு இயல்பாகவும் சுலபமாகவும் ஏற்ப்பட்டது.

"கடலில் அலைகள் மாறி மாறி வருவது போல, வாழ்வில் இன்பமும்

துன்பமும் மாறி மாறி வரத்தான் செய்யும். என் தந்தை நம்மை இறுகப் பிடித்துக் கொண்டால் எந்த இன்பமும், துன்பமும் நம்மைப் பாதிப்பதில்லை. வாழ்க்கையை விளையாட்டாக வாழ்ந்துவிடலாம். தந்தையிடம் சரணாகதி அடைந்து, நாம் பயமற்று இருப்போம்."

சுவாமியின் சொற்களைக் கேட்டு மெய்மறந்து அமர்ந்திருந்தோம். அப்போது வாயில் கதவு தட்டும் சத்தம் கேட்டது. சுவாமியின் உதவியாளன் உள்ளே வந்து ஒரு நண்பர் வந்திருப்பதை சுவாமிக்கு அறிவித்தான். அந்த நண்பரை சுவாமி உள்ளே அழைத்துவரச் சொன்னார். நண்பரும் உள்ளே வந்தார். சுவாமியை நமஸ்காரம் செய்தார். அவர் அமர வேண்டிய இடத்தை சுவாமி அவருக்குக் காட்டினார். அவரையே சுவாமி உற்றுப் பார்த்தார்.

"நண்பா ஏதேனும் சொல்ல வேண்டுமா?" சுவாமி கேட்டார். "ஒரு சிறு பிரச்சனை சுவாமி..." நண்பர் பிரச்சனையை விவரிக்க ஆரம்பித்தார்.

சுவாமி உடனே தன் இருக்கையிலிருந்து எழுந்து, அவர் முன்னே நின்று உரத்த குரலில் பேசினார்.

"உங்கள் பிரச்சனைகள் எல்லாவற்றையும் ஒரு மூலையில் வைத்துவிட்டு என் தந்தையைச் சற்று நேரம் நீங்கள் நினைக்கமுடியுமா? அப்பொழுதுதான் இந்த பிச்சைக்காரனால் ஏதாவது உங்களுக்குச் செய்ய முடியும்" என்று கூறினார். வந்த நண்பர் வாயடைத்து நின்றார். சுவாமி அங்கிருந்த ஒரு வாழைப்பழத்தை எடுத்து அந்த அன்பரிடம் கொடுத்து அனுப்பினார்.

பகவத் பக்தியுடையவரும், தன்னலமற்றவரும், பேதமற்றவரும், அன்பு நிறைந்தவரும், பொய்மையற்றவரும், சுவாமிக்கு மிகவும் பிடித்த பக்தர்கள். இவர்களோடு சுவாமி எப்போதும் பிணைந்திருந்தார். மற்றவரிடமிருந்து சுவாமி விலகியே இருந்தார்.

# சில பக்தர்கள்



சுவாமி தனது பக்தர்களை அவரவர் எண்ண அலைகளுக்குத் தக்கவாறு தனித்தனி குழுவாக வைத்திருந்தார். ஒரு குழுவோடு இன்னொரு குழுவுக்குப் பரிச்சயம் இருந்தாலும், இரு குழுக்களும் தங்களுக்கிடையே ஒரு தூரத்தை நிர்ணயம் செய்து கொண்டு விலகியே இருந்தன. பக்தர்களில் ஒரு சாரார், சுவாமி, தங்களின் அன்றாட வாழ்வின் துயரங்களைப் போக்கித் தங்களை எப்பொழுதும் சுகத்துடனும், வசதியுடனும், சந்தோஷத்துடனும் வைத்திருப்பதற்காகவே அவதாரம் எடுத்து வந்தவர் என்று நம்பினார்கள். மற்றொரு சாரார், சுவாமி தங்களது வாழ்வின் லட்சியங்களான புகழ், செல்வம், அந்தஸ்து, செல்வாக்கு, அதிகாரம் ஆகியவற்றைத் தங்களுக்குத் தந்து உலகைத் தாங்கள் காப்பாற்றி தங்களின் மேதாவிலாசத்தை உலகுக்கு பறைசாற்றி, தங்களைப் பெருமைப்படுவதற்கே அவதாரம் செய்தவர் என நினைத்துக் கொண்டனர்.

மற்றும் சிலர் வாழ்வின் சோகத்தைப் போக்கும் தலைவனாகவும்,

சத்தியத்தைக் காக்கும் ஆசானாகவும், தாங்கள் எந்தப் பாவச்செயலும் செய்யாமல் காப்பாற்றும் இறைவனாகவும் சுவாமியைக் கண்டார்கள். மாயப் பிறவிச் சுற்றிலிருந்து மீட்டு, தங்களைப் பிறவாநிலைக்கு அழைத்துச் சென்று, தெய்வமாக்குவார் எனவும் சுவாமியைச் சிலர் தொழுது நின்றனர்.

இன்னும் எத்தனை எத்தனை விதமான எண்ணங்களில் பக்தர்கள் சுவாமியைக் காண வந்தார்களோ அது அந்த சுவாமிக்கே வெளிச்சம்!. இத்தனை விதமான பக்தர் குழுக்கள், சில சமயங்களில் தங்களுக்குள்ளே போட்டியும், அசூயையும் வளர்த்துக்கொள்வதும் அவ்வப்போது நடக்கும்.

சுவாமியின் அருளால் அரசியல் அரங்கில் பெரிய ஆளாக வரவேண்டும் என்ற அவா மிகுந்த ஒருவர் ஒரு குழுவுக்குத் தலைவராக இருந்தார். சுவாமியிடம் 1970களிலிருந்து வந்து கொண்டிருந்தார். சுவாமி, சில குறிப்பிட்ட தேசத் தலைவர்களைப்பற்றி மிகவும் பெருமையாகவும் புகழ்ந்தும் பேசி வந்த காலம் அது. அந்தத் தேசத் தலைவர்கள் இந்திய விடுதலைக்காக மிகவும் பாடுபட்டவர்கள். அவர்களின் பெயர்களை சுவாமி உச்சரித்துக் கொண்டே இருப்பார். இதைப் பார்த்த அந்தப் பக்த குழுவின் தலைவர் சுவாமி அந்தத் தேசத் தலைவர்கள் சார்ந்த அரசியல் கட்சியை மிகவும் ஆதரிப்பதாகக் கணக்குப் போட்டுக்கொண்டார்.

அச்சமயம் இந்தியாவில் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. பக்தர் குழுத் தலைவர், சுவாமி ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கே ஆதரவு கொடுப்பதாகக் கருதிக்கொண்டார். அந்த அரசியல் கட்சியை வெற்றிபெறச் செய்ய தானும், தன்னைச் சேர்ந்தவர்களும் மிகவும் கடுமையாக உழைக்கவேண்டும் எனத் தீர்மானித்தார். எவ்விதம் உழைப்பது? சுவாமியின் புகழ் அச்சமயம் தமிழ்நாட்டில் பரவிக்கொண்டிருந்தது.

சுவாமி அந்தப் பொதுத்தேர்தலில் குறிப்பிட்ட அரசியல் கட்சி மிகப் பெரும்பான்மை பெற்று வெற்றியடைந்து அதன் தலைவர் பிரதம

மந்திரியாவார் எனக் கணித்ததாக பிரபலமான ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் முழுப்பக்க விளம்பரம் செய்ய பக்தர் குழுத்தலைவர் முடிவு செய்தார். அவரது உறவினர்களும்,நண்பர்களும் அதற்கு ஆதரவு தெரிவித்தனர். பத்திரிக்கைகளில் விளம்பரம் வந்தது. அடுத்த சில நாட்களில் பொதுத் தேர்தல் நடந்து முடிந்தது.

வாக்கு எண்ணிக்கை நடக்கும் தினத்தில் சுவாமியின் சன்னதித் தெரு வீட்டில் பக்தர் குழுத்தலைவர், இன்னும் சில பக்தர்கள் மற்றும் நானும் சுவாமியோடு அமர்ந்திருந்தோம். வெற்றி தோல்விகளை ரேடியோவில் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். சுவாமியின் பக்கத்து வீட்டில் வசிப்பவர் சுவாமியின் பக்தரும் ஆவார். அவர் தேர்தல் முடிவுகள் ரேடியோவில் வரவர அதை உடனுக்குடன் சுவாமியின் வீட்டுக்கு வந்து சுவாமியிடம் அறிவித்துக் கொண்டிருந்தார்.

“தாங்கள் கூறியபடியே அந்த அரசியல் கட்சி தோல்வி அடைந்து வருகிறது சுவாமி.”

“சுவாமி, தாங்கள் கூறியபடியே அந்த அரசியல் கட்சியின் முக்கியத் தலைவர்கள் தோல்வி அடைந்துவிட்டனர்.”

“சுவாமி, தாங்கள் சொன்னபடியே அந்த அரசியல் கட்சியில் பிரதம மந்திரி வேட்பாளர் படுதோல்வி அடைந்துவிட்டார்.”

இப்படி அன்று முழுவதும் அடுத்த வீட்டுக்காரர் சுவாமிக்குத் தேர்தல் முடிவுகளை அறிவித்துக்கொண்டே இருந்தார். சுவாமியின் முகம் ஜொலித்துக்கொண்டிருந்தது. பக்தர் குழுத் தலைவரோடு வந்த ஒரு பக்தர் தலைவரைக் கேள்விக்குறியுடன் பார்க்க, தலைவர் வீட்டின் பின்புறம் சென்று தன்னுடைய பெட்டியை எடுத்துக்கொண்டு சுவாமியை நமஸ்கரித்துவிட்டு தன் ஊருக்குச் சென்றுவிட்டார்.

அவர் பத்திரிகை வாயிலாகப் பிரகடனம் செய்த அரசியல் கட்சி

படுதோல்வி அடையப் போவதை சுவாமி பக்கத்து வீட்டு பக்தரிடம் சொல்லியிருக்கும்போது பக்தர் குழுத்தலைவருக்கு மட்டும் சுவாமி எதிர்மறையாக எப்படிச் சொல்லியிருக்க முடியும்? சுவாமியை சந்தோஷப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு, சுவாமியின் சொற்களுக்கும், செயல்களுக்கும் அனர்த்தமாக அர்த்தம் செய்துகொண்டு அல்லல்பட்ட பக்தர்கள் அநேகம் உண்டு.

சில நாட்கள் கழித்து சுவாமி அந்தப் பக்தர் குழுத்தலைவரிடம் தன்னைச் சந்திக்க மீண்டும் வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார். பக்தர் குழுத்தலைவரும் அதன்பின் சுவாமியைத் தரிசிக்க எப்பொழுதெல்லாம் நினைப்பாரோ, அப்பொழுதெல்லாம் திருவண்ணாமலை வந்து தேரடி மண்டபத்தில் சுவாமியின் உதவியாளர்களோடு அமர்ந்து கொண்டு, சன்னதித் தெரு வாசல் கதவையே பார்த்துக் கொண்டிருப்பார். என்றாவது ஒருநாள் அவர் சுவாமியை வாசலில் கண்டுவிட்டால் அவர் அவரிருந்த இடத்திலேயே சுவாமியை நோக்கி கைகளை நீட்டியபடி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்வார். சுவாமி வீட்டினுள் சென்றபின்பு அவர் தன் ஊருக்குச் சென்றுவிடுவார்.

பக்தர் குழுத்தலைவரான அந்தப் பக்தரின் செயல்கள் சற்று வித்தியாசமாக இருந்தாலும், அவர் சுவாமியின்பால் கொண்டிருந்த பக்தி அளவிட முடியாதது. சுவாமியோடு அவர் இருக்கும்பொழுது நான் பலமுறை அவ்விடம் இருந்திருக்கிறேன். சுவாமி சூடான பாலோ அல்லது காபியோ அவருக்குக் கொடுத்தால், அவர் அதை ஆறவைத்துக் குடிப்பதில்லை. அதை அப்படியே கொதிக்கக் கொதிக்க அருந்திவிடுவார். சுவாமி வாழைப்பழத்தைப் பிரசாதமாக கொடுத்தால் அவர் பழத்தின் தோலை உரிக்காமல் தோலோடு அப்படியே சாப்பிட்டு விடுவார். சுவாமி கைப்படக் கொடுக்கும் எப்பொருளுக்கும் விசேஷ சக்தி உண்டு என்றே அவர் நம்புவார். வித்தியாசமான பக்தர் அவர்.

அவர் மூலமாகவே அவர் ஊரைச்சேர்ந்தவர்களும், அவரது

சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், சுவாமியைத் தரிசிக்க பெருந்திரளானோர் வந்தனர். அனைவரும் சுவாமியின்பால் பக்தி பூண்டு, சுவாமியின் திருநாமத்தை விடாது சொல்லி வந்தார்கள். அவர்களது வாழ்வில் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால், அவர்கள் பக்தர் குழுத்தலைவரை அணுகுவார்கள். தலைவர் அவர்களை சுவாமியிடம் அனுப்பி வைப்பார். பிரச்சனை சுவாமியின் முன் வைக்கப்படும். சுவாமி ஆறுதலாக சில வார்த்தைகள் கூறி ஆசி வழங்கி அனுப்பி வைத்தால் அவர்கள் நேராகப் பக்தர் குழுத்தலைவரிடம் சென்று சுவாமி சொன்ன வார்த்தைகளைச் சொல்லவேண்டும். சுவாமி கூறும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு மறைமுகப் பொருளுண்டு. அதைத் தலைவர் ஒருவரே அறிவார். சுவாமி சொன்ன சொற்களை அவர் கேட்டு, அதற்கு அவர் விளக்கமளிப்பார். பிரச்சனைகள் தீர வழி முறையைக் கூறுவார். பலருக்குப் பொருளாதார உதவிகளும் செய்துள்ளார்.

சுவாமி அவரை வரவேண்டாம் என்று சொன்னபின்பு அவர் சுவாமியின் ஜெயந்தி விழாவை தன் ஊரில் வெகு விமரிசையாகக் கொண்டாட ஆரம்பித்தார். மூன்று நாள் விழாவாக சுவாமியின் ஜெயந்தி கொண்டாடப்பட்டது. மூன்று நாட்களும் ஏழைகளுக்கு அன்னதானம், நாமஜபம், சொற்பொழிவு, சுவாமியின் திருவுருவப் படத்தை எடுத்துக்கொண்டு ஊர்வலம் என அமர்க்களமாக ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. எனினும், உள்ளூர் பக்தர்கள் மிகக் குறைந்த அளவே அதில் பங்கெடுத்துக் கொண்டார்கள். தலைவரின் சொல்லாலும், செயலாலும் மிரண்டு போன சில பக்தர்கள், கூடியவரை அவரிடமிருந்து விலகியே இருந்தார்கள். வருடத்துக்கு வருடம் கூட்டத்தின் அளவு மிகவும் குறைந்து போய்விட்டது.

சுவாமியின் பக்தர்களில் சிலர் (என்னையும் சேர்த்து) சுவாமியின் பெயரால் நடக்கும் இவ்விழாவில் அனைத்துப் பக்தர்களின் பங்களிப்பும் இருக்கவேண்டும் என நினைத்தனர். எல்லா பக்தர்களையும் மாதத்தில்

இரண்டாம் ஞாயிறு அன்று அவ்வூரில் சுவாமிக்குப் பிடித்த இடத்தில் ஒன்றுகூட்டி சுவாமியின் பஜனைப்பாடல்களையும், நாம ஜபமும் பாடி துதி செய்ய ஆரம்பித்தனர்.

மாதம் ஒருமுறை கூடும் பக்தர்கள் சங்கமத்துக்கு, பக்தர்கள் கூட்டம் அதிகமாகத் தொடங்கியது. ஒவ்வொரு பக்தரும் தன் வீட்டில் தன்னால் முடிந்த பதார்த்தங்களைச் செய்து எடுத்துக் கொண்டு வருவார்கள். சில பணக்கார பக்தர்கள் அனைவருக்கும் உணவு விடுதியிலிருந்து உணவு வரவழைத்து வழங்குவார்கள். பஜனை முடிந்தபின் அனைவரும் ஒருங்கே அமர்ந்து உணவு அருந்துவார்கள்.

மாலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் கூட்டு பஜனை இரவு ஒன்பது, சில சமயங்களில் பத்து மணியளவில் முடியும். அந்த இடம் ஊருக்கு சற்றே வெளியில் அமைந்திருந்ததால் நடந்து வந்தவர்களையும், பஸ்ஸில் வந்தவர்களையும் காரில் வந்தவர்களோ அல்லது ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிளில் வந்தவர்களோ அழைத்துப் போய் அவர்களது வீடுகளில் சேர்ப்பித்துவிட்டு இல்லம் திரும்புவார்கள். பக்தர்கள் கூட்டம் மாதம்தோறும் பல்கிப் பெருகி ஒரு கட்டத்தில் சுமார் 200 பேருக்கு அதிகமாக சேர்ந்து சுவாமியின் நாமத்தை முழங்கினார்கள்.

ஜெயந்தி விழா இன்னும் 2 மாதங்களில் கொண்டாடப்பட வேண்டும். இதனிடையே சுவாமியிடம் சில பக்தர்கள் அந்த ஊரில் மாதம் ஒருமுறை நடைபெறும் பக்தர்கள் சங்கமத்தைப் பற்றிக் கூற, சுவாமி அதை வெகுவாகப் பாராட்டி ஆசி வழங்கினார். இதனால் மிக உற்சாகமடைந்த அவ்வூர் பக்தர்கள் சுவாமியின் ஜெயந்தி விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட முடிவெடுத்து ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

நமது பக்தர் குழுத் தலைவர், அந்த ஊரில் பிரம்மாண்டமாக நடைபெறும் பக்தர் சங்கம கூட்டத்தைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஜெயந்தி விழாவை

வித்தியாசமாகப் பெரும் விழாவாகக் கொண்டாடத் தன் ஆத்ம நண்பர்களோடு விவாதித்து முடிவெடுத்தார். அவர் எடுத்த முடிவை அவரது நண்பர்கள், அந்த ஊரின் பக்தர்கள் கூட்டத்தில் தரிவித்தார்கள்.

சுவாமியின் புகழ் உலகளவில் பரவ ஒவ்வொரு பக்தனும் உழைக்க வேண்டும். மற்றும் நாட்டின் பிரதம மந்திரியை சுவாமியின் ஜெயந்தி விழாவுக்கு அழைக்க வேண்டும். அதன் மூலம் சுவாமியைப் பற்றியும், அவரது சிறப்பைப் பற்றியும் உலகமே அறிந்துகொள்ளும் என்று அந்த நண்பர்கள் கூறினார்கள் இதைக் கேட்ட ஒரு சிலருக்கு அதிர்ச்சியாகிவிட்டது. அதில் நானும் ஒருவன். நாட்டின் பிரதம மந்திரிக்கும், சுவாமியின் ஜெயந்திக்கும் என்ன சம்பந்தம்? புரியவில்லை.

பக்தர் குழுத் தலைவரின் நண்பர்கள் விவாதம் செய்து ஆலோசனை நடத்தினார்கள். அதுவரை மௌனமாக இருந்த நான் அப்போது மெதுவாக பேச ஆரம்பித்தேன். “நாட்டின் பிரதம மந்திரியை அழைப்பது சரிதான். ஆனால் அவரைச்சந்திப்பது எப்படி? சந்திப்பதற்கு எப்படியேனும் ஏற்பாடு செய்து கொண்டாலும், பாதுகாப்பு நிமித்தம் கருதி அழைக்கச் சென்ற நம்மைச் சோதனையிட்டு, காக்க வைத்து, முடிவில் ஒரு அறையில் உட்காரவைப்பார்கள். சிறிது நேரம் சென்ற பின் திடீரென பிரதமர் தோன்றுவார். அவரிடம் விளக்கமாக உரையாட நேரம் இருக்காது. எனவே, நாம் அழைப்பைக் கடிதமாகக் கொடுக்க வேண்டும். ஆலோசித்துச் சொல்கிறேன் என்று கூறி பிரதமர் வணக்கம் சொல்லிவிட்டு மறைந்து விடுவார்.

இத்தனைச் சிரமப்படுவதற்கு பதிலாக ஏன் நாம் சுவாமியையே ஜெயந்தி விழாவுக்கு அழைக்கக்கூடாது? வாசல் கதவைத் தட்டியவுடன் சுவாமியே எழுந்து வந்து, “வாங்க” என வாய் நிறைய கூப்பிட்டு உள்ளே அழைத்துச் செல்வார். பால், காபி, பழம், ஆகாரம் கொடுத்து மனமும்,வயிறும் நிறைய நம்மிடம் சிரித்தபடி உரையாடி ஆசி வழங்குவார். நாம் கூறுவதையும் முழுமையாக பொறுமையாக கேட்டு

உடனடியாகத் தம் முடிவையும், கூறிவிடுவார். சுவாமியின் ஜெயந்தியை சுவாமியின் முன்னிலையிலேயே நம்மூரில் ஏன் கொண்டாடப்படக் கூடாது? நம்மூரும், நம் மக்களும் பாக்கியம் அடைவார்கள் அல்லவா?

அந்தக் கூட்டத்தில் ஆழ்ந்த நிசப்தம். என்ன கூறுவது? சுவாமியா, பிரதம மந்திரியா? தலைவர் கூட்டத்தின் நண்பர், சுவாமியை யார் சென்று அழைப்பது எனக் கேட்க சட்டென்று "நான் தயார்" என்று நான் பதிலுரைத்தேன். அங்கிருந்தோர் வேறு வழியில்லாது ஐந்து பேரைத் தேர்வு செய்து, அடுத்த இரண்டாம் நாள் சுவாமியைக் காணச் செல்வதென்று முடிவானது.

அந்த ஐவரில் அடியேனும் ஒருவன். கார் திருவண்ணாமலை சென்று அடைந்தது. சுவாமியின் வாயிற்கதவை யார் தட்டுவது? அனைவரும் தயங்கினர். மற்றவர்களின் தயக்கத்தைக் கண்ட நான் முன்னே சென்று வாயிற்கதவைப் பலமாகத் தட்டினேன். உள்ளேயிருந்து சுவாமி எழுந்து வந்தார். எங்கள் ஐவரையும் பார்த்தார். கதவைத் திறப்பதற்கு முன்பே சுவாமி "இனி பஜனையும் வேண்டாம், ஜெயந்தி விழாவும் வேண்டாம்" என அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

வந்தவர்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. சுவாமி அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றார். அவரவர் அமரும் இடத்தைச் சுட்டிக் காட்ட அனைவரும் அமர்ந்து கொண்டோம்.

"இந்தப் பிச்சைக்காரனை அந்த ஊருக்கு அழைத்துப் போவதற்கு சதி நடந்து கொண்டிருக்கிறது. என்று யாரோ சொன்னார்கள் இந்தப் பிச்சைக்காரன் திருவண்ணாமலையை விட்டு வேறெங்கும் வரமாட்டான்."

சுவாமி அழுத்தம் திருத்தமாக கூறினார்.

அங்கே ஒரு அமானுஷ்ய அமைதி நிலவியது. சுவாமி ஜே.கிருஷ்ணமூர்த்தியின் நண்பர் ஒருவர் மற்றொரு நண்பருக்கு எழுதிய ஒரு கடிதத்தை (மேரி லூட்டின்ஸ் எழுதிய ஒரு புத்தகத்தில் உள்ளது) ஒவ்வொருவராக சத்தம் போட்டுப் படிக்கச் சொன்னார். அப்புத்தகத்தில் ஞானிகளின் லட்சணங்களைப் பற்றி ஒருவர் மற்றவருக்கு எழுதியிருந்தார். அதில் ஞானிகள் எதையும் கவர்ந்து, ஈர்த்துக்கொள்ளும் பெரிய நீர்ச்சுழல் போன்றவர்கள் என்றும், பெரிய தீ ஜ்வாலை என்றும், எனவே அவர்களிடமிருந்து சற்று விலகியே இருக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தார். எல்லோரும் படித்த பின்னர் சுவாமி அனைவரையும் மாற்றி மாற்றிக் கூர்ந்து பார்த்தபடி இருந்தார். அடுத்தடுத்து புகைப்பிடித்துக்கொண்டே இருந்தார்.

சற்று நேரம் கழித்து, சுவாமி ஒரு சமஸ்கிருத ஸ்லோகத்தைச் சொன்னார். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார்.

“நெருப்பு, யோகி, அரசன் இவற்றுக்கு மிகவும் நெருக்கமாகப் போகக்கூடாது. போனால் எரிக்கப்படுவார்கள். அதிக தூரத்திலும் நிற்கக்கூடாது. அதிக தூரத்தில் இருந்தால் அதனுடைய கதகதப்பு கிடைக்காது.”

மறுபடியும் சுவாமி ஒவ்வொருவராகப் பார்க்க ஆரம்பித்தார். என்னைப் பார்க்கும்போது நான், “அந்த நெருப்பில் எரிக்கப்படுபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.” எனக் கூறினேன். சுவாமி அளவொணா ஆனந்தத்துடன் சிரித்து “இவன் என்ன சொல்கிறான் கவனித்தீர்களா?” எனக் கேட்டார். “பார்த்தசாரதி என்னருகில் வா” பெரிய கதவருகே அமர்ந்திருந்த என்னை சுவாமி தன்னோடு, தனக்குப் பக்கத்தில் பாயில் உட்கார வைத்தார்.

“இந்தப் பிச்சைக்காரனின் நண்பர்கள் ஒன்றாக அமர்ந்து, இந்தப் பிச்சைக்காரனைப் பற்றிப் பாடியும், பேசியும் வந்தார்கள். ஆனால்

இனி வேண்டாம். ஜெயந்தி விழாவையும் பஜனையையும் அவரவர் வீட்டிலேயே வைத்துக்கொள்ளுங்கள். இந்தப் பிச்சைக்காரன் மீது அணு அளவேனும் மரியாதை இருந்தால் ஜெயந்தி விழாவையும், பக்தர்களின் கூட்டு பஜனையையும் உடனே நிறுத்திவிடுங்கள்."

சுவாமி மீண்டும் அதிரவைத்தார். பக்தர்களின் சங்கமத்தை அரசியல் கூட்டமாக்க முயற்சி நடந்ததால் சுவாமி அனைத்தையும் நிறுத்தினார் என நம்பப்பட்டது.

"பார்த்தசாரதி, நீ எதை விரும்பி வந்தாயோ அது உனக்குக் கிடைத்து விட்டதல்லவா."

"ஆமாம் சுவாமி," யோகி ஆனந்தமாகச் சிரித்தார்.


"இங்குள்ளோர் அனைவருக்கும் இந்தப் பிச்சைக்காரன் சொல்வது புரிந்துவிட்டதல்வா?"

"எனக்குப் புரியவில்லை சுவாமி" ஒரு நண்பர் தைரியமாகக் கூறினார்.

"பார்த்தசாரதிக்கு புரிந்துவிட்டது. அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்."

சுவாமி பதிலுரைத்தார். எல்லோருக்கும் சுவாமி விடை கொடுத்தனுப்பினார். ஊருக்கு இதே நண்பர்களோடுதான் திரும்பச் செல்லவேண்டும், இவர்கள் என்ன பேசப் போகிறார்களோ என நான் கவலைப்பட்டேன். என் கவலையைத் தீர்ப்பதற்கென்றே எல்லோருக்கும் விடை கொடுத்து அனுப்பும் முன்பே சுவாமி என்னை வெகுவாகப் புகழ்ந்தார். ஒரு கட்டத்தில் என்னை விடுதலை அடைந்தவர் என்றும் கூறினார். இதைக் கேட்ட நண்பர்கள் என்னை மிகவும் மரியாதையோடும் பிரியத்தோடும் திரும்ப அழைத்து வந்து என்னை என் வீட்டில் பத்திரமாகச் சேர்த்து விட்டுச் சென்றார்கள்.

# ஆணவம் அறுக்கும் ஆண்டவன்



அந்த பக்தரின் குடும்பமே ஞானியருக்குச் சேவை செய்து, அவர்களை துதி செய்து மகிழ்ந்த ஒன்று. மற்ற பக்தர்கள் அக்குடும்பத்தை அணுகினால் ஆண்டவனையே சுலபமாக அடையலாம் என நினைத்தார்கள்.

ஞானியருக்குச் சேவை செய்த அந்தக் குடும்பத்திலிருந்த ஒரு வாலிபன் நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களிடம் மிகவும் நெருக்கமாக இருந்தான். சுவாமி அவருக்கு முழுச் சுதந்திரமும் அளித்திருந்தார். சுவாமியின் அனுமதியின்றியே சன்னதித் தெரு வீட்டினுள் பிரவேசித்து, சுவாமியுடன் சமமாகப் பாயில் அமர்ந்து கொள்வார். சுவாமியின் திருப்பாதங்களைத் தன் மடியில் வைத்துக்கொண்டுச் சரளமாகப் பாத சேவை செய்வார். சுவாமியும் தடையேதும் சொல்லாமல் அவரின் சேவையை ஏற்றுக் கொள்வார்.

அப்பக்தருடன் சுவாமி சமமாக அளவளாவி அவருக்கு ஒருவித தனித்துவத்தைக்கொடுப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினார். சுவாமி காட்டிய பேரன்பு மற்ற பக்தர்களைக் கவர்ந்தது. சுவாமியின்

மற்ற பக்தர்கள் அவரிடம் ஒருவித பயங்கலந்த மரியாதையைக் காட்டினார்கள்.

பக்தர்களின் மரியாதையும், அன்பும் சுவாமி அவரிடம் கொண்ட நெருக்கத்தினால் ஏற்பட்டது என்று அவருக்குத் தோன்றவில்லை. தனக்கு ஏதோ தனித்துவத் தகுதியும், சக்தியும் வந்துவிட்டதாக உணரத்தலைப்பட்டார். தன்னைவிட வயதில் மூத்த பக்தரையும் ஏக வசனத்தில் பேசலானார்.

பக்தர்களின் இல்லங்களுக்கு, பக்தர்களின் அழைப்பின் பேரில் சென்றார். சென்ற இடங்களில் பக்தர்கள் மனது புண்படும்படி எகத்தாளமாகப் பேசலானார். பக்தர்களின் வீடுகளில் இருந்த விலை உயர்ந்த, பக்தர்கள் பாதுகாத்து வைத்திருந்த அபூர்வப் பொருட்களைப் பக்தரிடம் ஒப்புக்குக் கேட்டுவிட்டு எடுத்துக் கொண்டு விடுவார்.

இதோ சென்றுவிடுவார் என பக்தர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் சமயத்தில் நாட்கணக்கில் அங்கே தங்கி விடுவார். பக்தர்கள் அவர் வந்தால் சுவாமியின் மகிமைகளைத் தெரிந்து கொள்ளலாமே என நினைத்து அவரை அழைத்திருந்திருப்பார்கள். ஆனால் அவர்களுக்குப் பெருத்த ஏமாற்றத்துடன், பொருள் இழப்பும் ஏற்பட்டது. நாளடைவில் அவரைக் கண்டாலே பக்தர்கள் பயங்கொள்ள ஆரம்பித்தினர்.

இவரது விளையாட்டுக்கள் வசதி படைத்த பக்தர்களிடம் மட்டுமே நடத்தப்பட்டது. மற்ற சாதாரண பக்தர்களை அவர் தூசியெனக் கருதினார். சுவாமிக்கு மிகவும் பிடித்தமான ஏழை பக்தர்களையும் அவர் துச்சமெனக் கருதிப் பேசலானார்.

எதையும் பொறுத்துக் கொள்ளும் நம் சுவாமி தனது உண்மையான, எளிய பக்தர்களிடம், ஏளனமாகவும் அவர்களை அவமானப்படுத்தியும் பேசுவதைப் பொறுத்துக் கொள்ளவில்லை. ஒரு நாள் அந்த நபர்

சுவாமியிடம் எப்பொழுதும் போல சரளமாக சன்னதித் தெரு வீட்டினுள் வந்தார். சுவாமியின் முகத்தில் இருந்த சிரிப்பு மறைந்தது. கோபத்தில் திருமுகம் சிவந்தது.

“நண்பனே இனி இங்கு நீங்கள் வரவேண்டிய தேவை இல்லை. நீங்கள் இதுவரை ஆற்றிய பணிகள் போதும். இனி இங்கு வரவேண்டாம்.”

சுவாமியின் கண்டிப்பான தொனி அவரை அச்சமடையத் செய்தது. அங்கே மேலும் சில பக்தர்கள் அமர்ந்திருந்தனர். அவர் சற்று நேரம் அங்கேயே நின்றிருந்தார். பின் வேகமாக வெளியேறிச் சென்றுவிட்டார்.

வருடங்கள் கடந்தன. அந்த பக்தர் தன் தவறுகளை உணர்ந்தார். பிற பக்தர்களைப் பார்க்கவே வெட்கமடைந்தார். காலம் கடந்தது, அந்த பக்தர் சாதகரானார். வீட்டில் திருமணம் செய்வித்தார்கள். அப்போதும் தனித்திருந்தார். சுவாமியை நினைத்திருந்தார்.

சுவாமி மஹாசமாதி அடைந்தார். அச்சமயமும் அவர் வரவில்லை. முதுமையில் நோய் தாக்கியது. தன் முடிவு நெருங்கியதை உணர்ந்தார். நடக்கவே முடியாத அவர், தன் மனைவியின் துணையுடன் ஆசிரமம் வந்தார். சுவாமி சிலையை வலம் வந்தார். சுவாமி சிலையின் பாதத்தில் தலை வைத்து நமஸ்கரித்தார். கண்களில் நீர் ஆறாய்ப் பெருகியது. சற்று நேரம் அங்கு அமர்ந்திருந்தார். சுவாமியின் விழிகள் அவரைக் கருணையோடு பார்த்தது போலும். அவர் முகத்தில் தெய்வீகச் சாந்தமும் பூரிப்பும் தோன்றியது.

அவர் மெதுவாக எழுந்து சென்றார். அடுத்த சில நாட்களில் அவர் விதேஹமுக்தி அடைந்தார். எம்பெருமான் யோகி ராம்சுரத்குமார் சுவாமிகள், ஆணவத்தையும், சாதகமாக்கித் தனித்திரச் செய்து தன் மயமாக்கிக் கொள்வார் என்பதற்கு இவ்வடியாரின் வரலாறே சான்றாகும்.

# பக்தர்கள் காத்திருக்க முடியும்



சுவாமி சன்னதித் தெரு வீட்டின் வராண்டாவில் அமர்ந்து கொண்டிருந்தார். அவர் முன்னேயும், பக்கவாட்டிலும் நிறைய பக்தர்கள். வெளியே சுவாமியின் தரிசனத்துக்காகப் பல நூறு அன்பர்கள் அண்ணாமலையார் ராஜகோபுரம் வரை நீண்ட வரிசையில் வெயிலில் நின்று கொண்டிருந்தார்கள். வாசல் கதவருகே சசி (சுவாமியின் உதவியாளர்) நின்று கொண்டு, ஒவ்வொரு பக்தராக சுவாமியிடம் அனுப்பிக் கொண்டிருந்தார். உள்ளே வந்த பக்தர்கள் ஒவ்வொருவரும் சுவாமியை நமஸ்கரித்து அவர் பிரசாதமாகத் தரும் கற்கண்டைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்துவிடுவர்.

சுவாமி, உள்ளே வரும் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு துண்டு கல்கண்டை பிரசாதமாகக் கொடுத்துக் கொண்டே வந்தார். ஒரு சில பக்தரிடம் மட்டும் அவர்களின் பெயரைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். எனினும், அதற்குமேல் அங்கே சம்பாஷணை நடைபெறவில்லை. பக்தர்கள் விடாது வந்து கொண்டே இருந்தார்கள். சுவாமியைச்

சுற்றி அமர்ந்திருந்தவர்கள் சுவாமியின் நாமத்தை உரக்கப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் சசியிடம் வந்து ஏதோ சொல்லிவிட்டு வாயில் கதவுக்கு வெளியே காத்துக்கொண்டிருந்தார். சசி தற்காலிகமாக வாயில் கதவைப் பூட்டிவிட்டு சுவாமியிடம் வந்து யாரோ உயர் போலீஸ் அதிகாரி சென்னையிலிருந்து சுவாமி தரிசனத்துக்காக வந்துள்ளதாகவும், அவர் காவல் நிலையத்தில் சுவாமியின் உத்தரவுக்காகக் காத்திருப்பதாகவும் சொன்னார். சுவாமி சில கணங்கள் மௌனமாக இருந்துவிட்டு பின்னர் சசியிடம், அந்த உயர் போலீஸ் அதிகாரியை வரச் சொல்லலாம் எனக் கூறினார். காத்திருந்த போலீஸ் கான்ஸ்டபிளிடம் சசி அதைத் தெரிவித்தார்.

அடுத்த பத்து நிமிடங்களில் சன்னதித் தெருவில் ஒரே போலீஸ் சந்தடியாகிவிட்டது. பத்துக்கும் அதிகமான போலீஸ் காவலர்கள், சிகப்பு விளக்கு பொருத்தப்பட்ட காரைப் பின் தொடர்ந்து, சன்னதித் தெரு சுவாமியின் வீட்டிக்கு முன்பு ஆரவாரமாக வந்தார்கள். சன்னதித் தெரு வீட்டின் முன் கார் நின்றது. போலீஸ்காரர்கள் வீட்டின் வாசலில் இருந்த பக்தர்கள் கூட்டத்தை சற்று விலக்கினர். சசி போலீஸ் உயரதிகாரியின் வரவை சுவாமியிடம் தெரிவித்தார்.

சுவாமி எழுந்து அந்த அதிகாரியின் கையைப் பிடித்து உள்ளே அழைத்து வந்தார். அதிகாரியின் மனைவி மற்றும் அவர்களோடு வந்த மேலும் இருவரை சசி உள்ளே அழைத்து வந்தார். ஏற்கனவே மிகவும் நெரிசலாக அங்கே அமர்ந்திருந்த பக்தர்களை, போலீஸ் உயரதிகாரியும், அவர் உடன் வந்தவர்களும், அமர்வதர்க்காக சுவாமி, இடம் அளிக்கச் செய்தார். வாசல் கதவு சாத்தப்பட்டது. கடுமையான வெயிலில் பக்தர்கள் வரிசையில் காத்திருந்தனர்.

போலீஸ் உயர்அதிகாரியை சுவாமி தனக்கருகே அமர்த்திக் கொண்டார். அவரது பெயர், அவரோடு வந்தவர்களின் பெயர்கள் அனைத்தையும் சுவாமி கேட்டு அறிந்து கொண்டார். போலீஸ் உயரதிகாரி ஒரு கூடைப் பழங்களை சுவாமிக்கு காணிக்கையாகச் சமர்ப்பித்தார். சுவாமி பழக்கூடையின் மீது கையை வைத்து ஆசீர்வதித்து, அக்கூடையை அவர்களுக்கே பிரசாதமாக வழங்கி, அதை உடனடியாக வெளியில் நின்றிருந்த காரில் வைக்கச் சொன்னார்.

“ஏதேனும் சொல்ல வேண்டுமா?” சுவாமி போலீஸ் அதிகாரியிடம் கேட்டார்.

“தங்களின் ஆசீர்வாதம்தான் வேண்டும் சுவாமி. தங்கள் தரிசனம் கிடைத்தது எனக்கு மிகப்பெரிய பாக்கியம்...” என அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.

தனது திருவண்ணாமலை விஜயத்தைப் பற்றியும், அண்ணாமலையாரின் தரிசனத்தைப் பற்றியும், தான் கிரிவலம் வந்ததைப் பற்றியும் விவரமாக கூறினார். தான் பதவி உயர்வுக்காகக் காத்திருப்பதாகவும், சுவாமியின் அருள் வேண்டும் எனவும் கைகூப்பி வேண்டினார்.

சுவாமி தந்தை ஆசிர்வதிப்பதாகக் கூறினார். சுமார் அரை மணி நேரம் கழித்து சுவாமி போலீஸ் உயரதிகாரியையும் அவருடன் வந்தவர்களையும் வெளியே கார் வரை சென்று வழியனுப்பி வைத்துவிட்டு, பின் உள்ளே வந்து தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சசியிடம் பக்தர்களை மீண்டும் உள்ளே அனுப்புமாறு சைகை காட்ட சசி மீண்டும் ஒவ்வொரு பக்தராக உள்ளே அனுப்பி வைத்தார்.

“சுவாமி, வெளியே வெயிலில் நீண்ட வரிசையில் பக்தர்கள் உங்களுடைய தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களைக்


காக்க வைத்துவிட்டு, வந்த போலீஸ் உயரதிகாரியிடம் வெகு நேரம் அளவளாவிக் கொண்டிருந்தீர்கள். உங்களது இந்தச் செயலை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை சுவாமி." உள்ளே அமர்ந்திருந்த ஒரு பக்தை மெதுவாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

சுவாமி அவரைப் பார்த்து மென்மையாகச் சிரித்துவிட்டு, பக்தர்களுக்குக் கற்கண்டைக் கொடுத்தவண்ணம் இருந்தார். சற்று நேரம் மௌனமாகக் கழிந்தது. சுவாமியின் பதிலுக்காகப் பக்தை ஆவலோடு காத்திருந்தார்.

"சில பக்தர்கள் இந்தப் பிச்சைக்காரனிடம் பக்தியையும், ஞானத்தையும் வேண்டி வருகிறார்கள். இன்னும் சில பக்தர்கள் தங்களின் சுமைகளையும், வேதனைகளையும் இந்தப் பிச்சைக்காரன் களைய வேண்டும் என பிரார்த்தித்துச் செல்வதற்காக வருகிறார்கள். ஓரிரு நண்பர்கள், இந்தப் பிச்சைக்காரன் மற்றவர்களின் முன்னிலையில் தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கௌரவிக்க வேண்டுமென வருகிறார்கள்.

"பக்திக்காகவும், ஞானத்துக்காகவும் வருபவர்களும், சோகத்திலிருந்து விடுதலை பெற வருவோர்களும் இந்தப் பிச்சைக்காரனுக்காகப் பொறுமையுடன் காத்திருக்க முடியும். ஆனால், இந்தப் பிச்சைக்காரனிடமிருந்து முக்கியத்துவத்தையும், மரியாதையையும் எதிர்பார்த்து வருபவர்கள் இந்தப் பிச்சைக்காரனுக்காக காத்திருக்க மாட்டார்கள். இந்தப் பிச்சைக்காரன் அவர்களைக் காத்திருக்கச் சொன்னால் அவர்கள் இவனிடம் வரப்போவதில்லை. மேலும் இந்தப் பிச்சைக்காரனுக்கு மரியாதையும், முக்கியத்துவமும் கொடுப்பது மிகவும் எளிது. எப்படி இருந்தாலும் இந்தப் பிச்சைக்காரனுக்கு அப்பாவின் வேலையைச் செய்யவேண்டும். அவ்வளவுதான்!" அங்கிருந்தோர்க்கு ஏதோ புரிந்துவிட்டது போல் தோன்றியது.

# இல்லறமே நல்லறம்




அந்த தம்பதி தங்கள் மூன்று பெண் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சன்னதித் தெரு வீட்டிற்கு சுவாமி யோகி ராம்சுரத்குமார் தரிசனத்திற்காக வந்தனர். ஆறிலிருந்து பத்து வயது வரை உள்ள குழந்தைகள், கணவன், மனைவி, என எவர் முகத்திலும் சந்தோஷமோ, திருப்தியோ, அமைதியோ இல்லை. அவர்கள் அனைவரும் எதையோ இழந்தவர்கள் போல் காணப்பட்டனர்.

சுவாமி அவர்களை அமர வைத்தார். அப்பெண்மணியையும் அவரது மகள்களையும் பெண்கள் அமரும் பகுதியிலும், கணவனை சுவாமி தனக்கு நேரெதிராகவும் அமர வைத்தார். கணவர் அமர்ந்த சில நிமிடங்களிலே கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். அப்பெண்ணின் கண்களில் கண்ணீர் பெருகியது. அவர் கேவிக் கேவி அழத் தொடங்கினார். தாய் அழுவதைக் கண்ட குழந்தைகளும் அழத் தொடங்கினர்.

சுவாமி அமைதியாக சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். அவரின் தீட்சண்யமான பார்வை அந்த பெண்ணின் கணவரின் மீதே படிந்தது. சுவாமியின் பார்வையின் உக்கிரத்தால் அந்த நண்பர் தன் விழிகளைத் திறந்து பார்த்தார். சுவாமி தன்னையே உற்று நோக்குவதை அறிந்த பக்தர் மெதுவாக எழுந்து சுவாமியை நமஸ்கரித்தார். சுவாமி அமானுஷ்யமான மௌனம் காத்தார். பக்தர் தன் இடத்தில் அமர்ந்தார்.

“சுவாமி இவர் எப்பொழுதும் கண்களை மூடியபடி தியானம் செய்து கொண்டே இருக்கிறார். யாரிடமும் பேசுவதில்லை. தொழிலையும் கவனிப்பதில்லை. குழந்தைகளைப் பார்ப்பதே இல்லை. காரணம் கேட்டால் தான் பகவானை அடையத் தவம் இருப்பதாகச் சொல்கிறார் சுவாமி. எனக்குப் பயமாக இருக்கின்றது சுவாமி.” நாத்தழுதழுக்க அப்பெண்மணி கூறினார்.

சுவாமி எதுவும் சொல்லவில்லை. பக்தரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“மனித வாழ்வின் லட்சியமே பகவானை அடைவதுதானே சுவாமி. பகவானைத் தியானித்திருந்தால் பகவான் நம் காரியங்கள் அனைத்தையும் பார்த்துக் கொள்வார் என்பது இவர்களுக்குப் புரியவில்லை சுவாமி.”

இளக்காரமாகப் பக்தர் தன் குடும்பத்தினரைப் பார்த்துச் சிரித்தார். சுவாமி அமைதியாக அவர்களையே மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமி மீண்டும் மீண்டும் சிகரெட் பிடித்தபடி இருந்தார். சுவாமியின் கவனமெல்லாம் அந்த பக்தரின் மீதே இருந்தது.

“என் தந்தை எந்தச் சூழ்நிலையில் நம்மை வைத்திருக்கின்றாரோ அந்த நிலையில் நாம் முழுமையாக ஒன்றியிருக்க வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள அனைவரையும் என் தந்தையாகப் பாவிக்க வேண்டும். அன்போடு அனைவரையும் அரவணைத்து வாழ்ந்தால், நாம் தந்தையைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. என் தந்தையே நம்மை நாடி வருவார். எவரையும் வெறுத்து ஒதுக்குவது அல்ல

தவம். அனைத்தையும், அனைவரையும் அன்போடு அரவணைத்தலே தவமாகும்."

சுவாமியின் வார்த்தைகளைக் கேட்ட பக்தரின் முகம் வாடியது. சுவாமி அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். பல நாள் உபவாசமும், பிரமச்சரிய பிடிவாதமும் அப்பக்தரின் தேகத்தை பலஹீனமாக்கியிருந்தது. அவர் அப்படியே, தான் அமர்ந்திருந்த பாயில் சரிந்து மயங்கினார். அவரது மனைவியும், மகள்களும் பயந்து கூச்சலிட்டனர்.

சுவாமி படுத்திருந்த பக்தர் அருகில் சென்றார். அவர் நெற்றியை தன் கையால் வருடினார். பக்தர் மயக்கம் நீங்கி அமர்ந்தார். சுவாமி அவரை அவர்கள் தங்கியிருந்த சிவகாசி நாடார்ச் சத்திர அறைக்கு மனைவியை அழைத்துக் கொண்டு சென்று ஓய்வெடுத்துவிட்டு வரச் சொன்னார். குழந்தைகள் தன்னிடமே இருக்கட்டும் என்றும் சுவாமி சொல்ல தம்பதியர் மட்டும் தங்கள் அறைக்குச் சென்றனர்.

குழந்தைகளும் மற்ற பக்தர்களும் சுவாமி நாமம் பாடிக் கொண்டிருந்தோம். சுமார் இரண்டு மணி நேரம் கழித்து தம்பதியர் சுவாமியிடம் வந்தனர். திருவடி பணிந்தனர். தம்பதியர்களின் முகம் பூரித்திருந்தது. சற்று நேரத்தில் சுவாமி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினார். அன்றிலிருந்து அந்தத் தம்பதி சுவாமியின் நினைவோடு இணை பிரியாமல் வாழ்ந்தனர். முதுமையில் மனைவி தன் கணவன் மடியிலே தன்னுயிரை நீத்தார். அடுத்த ஆறு மாதங்களில் கணவரும் காலமானார்.

"இந்த பிச்சைக்காரன் தந்தையை எப்பொழுதும் நினைத்திருப்பதற்க்காக தன் குடும்பத்தை விட்டு ஓடிவிட்டான். ஆனால் என் நண்பர்களான நீங்கள் தந்தையை எப்பொழுதும் நினைத்திருந்தாலும் குடும்பத்தோடு சேர்ந்தே இருக்கின்றீர்கள். இந்த பிச்சைக்காரன் செய்த தவறை நீங்கள் யாரும் செய்யவில்லை." பின்னொரு நாளில் சுவாமி இவ்விதம் கூறினார்.

# சுவாமியை சோதித்த அன்பர்



அந்த ஐரோப்பிய நண்பர் சன்னதித் தெரு வீட்டில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் எதிரில் அமர்ந்திருந்தார். அவரின் நண்பர் மூலமாக சுவாமியைப் பற்றி அறிந்திருந்தார். அவரின் நண்பர் சுவாமியைத் தனது குருவாகப் பாவித்து எப்போதும் சுவாமியின் ஸ்மரணையிலேயே இருந்தார். சுவாமியைப் பற்றியே அனைவரிடமும் பேசிவந்தார்.

நண்பருக்கு அது பிடிக்கவில்லை. அவரிடம் சுவாமியின் தோற்றமும், அவரது அழுக்கேறிய கருப்பான ஆடையும், விடாது சிகரெட் புகைக்கும் பழக்கமும், சன்னதித் தெரு வீட்டின் ஒழுங்கற்ற காட்சியும் நண்பரால் சொல்லப்பட்டது. அது சுவாமியிடம் அவருக்கு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தவில்லை. இருப்பினும் சுவாமியை சோதிக்க விரும்பினார். எனவே சுவாமியிடம் வந்தார். சுவாமி அவரை உள்ளே அழைத்து வந்து தன் எதிரே அமரவைத்தார்.

“சுவாமி தாங்கள் எனக்கு மந்திர தீட்சை அளித்தருளுங்கள்.”

நண்பர் பணிவோடு சுவாமியிடம் வேண்டினார். அவரின் பொய்யான பணிவு அவரது வார்த்தைகளில் தெரிந்தது.

சுவாமி வெகு நேரம் பதில் கூறவில்லை. அமைதியாகத் தொடர்ந்து சிகரெட் புகைத்த வண்ணம் இருந்தார். அந்த ஐரோப்பிய நண்பரை வெகு நேரம் பார்த்தபடி புகைத்துக் கொண்டே இருந்தார்.

சுவாமியின் பார்வையின் தீட்சண்யம் நண்பரை ஏதோ செய்தது. அவர் ஏதோ சொல்ல எத்தனித்தார். சுவாமி மெதுவாக எழுந்து நண்பர் எதிரே நின்றார்.

“நண்பா கல்கத்தா அனந்தமயிமாவிடம் உனது பிரார்த்தனையை மீண்டும் சமர்ப்பிக்கலாமே?” ஐரோப்பிய நண்பருக்கு வியர்த்து விறுவிறுத்துப் போனது. கண்கள் கலங்கின.

சுவாமி சிரித்தபடி நண்பர் எதிரே நின்றார். நண்பர் சுவாமியின் திருவடியில் வீழ்ந்தார்.

“சுவாமி நான் ஏற்கனவே அனந்தமயிமாவிடம் தீட்சை பெற்றவன். தங்களைச் சோதிக்கவே இவ்வாறு செய்துவிட்டேன் சுவாமி. என்னை மன்னித்து விடுங்கள் சுவாமி.” நண்பர் கதறினார்.

“நண்பா சாதுக்களையும், சன்னியாசிகளையும் மற்றும் தந்தையின் பக்தர்களையும் நமஸ்கரித்துக் கொள். ஆனால் உன் நம்பிக்கை முழுமையாக உன் குரு மீது இருக்கட்டும். வேடிக்கையாகக்கூட உன் குருவை குறைத்து மதிப்பிடாதே நண்பா. அவர் அனைத்தும் அறிவார். தந்தையை நோக்கி செல்லும் பயணம் உனது குருவின் அருளால்தான் முழுமையடையும். உனது குருவை நம்புவாய் நண்பா. உனது குருவே உனக்கு சகலமுமாகும்.”

நண்பர் சுவாமியை மீண்டும் நமஸ்கரித்தார். சுவாமி அவருக்குச் சில பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

# வெளிநாட்டு ஆசிரமத் தலைவரைத் தேர்ந்தெடுத்தல்



ஆண்களும் பெண்களுமாய் சுமார் பத்து பக்தர்கள், தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாட்டில் இருந்து சுவாமி யோகி ராம்சுரத்குமாரைத் தரிசிப்பதற்காக சன்னதித் தெரு வீட்டிற்கு வந்தனர். சுவாமி அவர்களை வீட்டினுள் அழைத்து வந்தார்.

ஆண்களையும், பெண்களையும் அவரவர்கள் இடங்களில் அமர வைத்தார். அவர்கள் வருவது குறித்து சுவாமிக்கு ஏற்கனவே தகவல் அளிக்கப்பட்டிருந்தது. சுவாமிக்கு அமெரிக்காவில் ஒரு தெய்வீக நண்பர் உண்டு. அவர் பெயர் ஹில்டா அம்மையார். அவருக்கு உலகம் முழுவதிலும் ஏராளமான பக்தர்கள் உண்டு. அவர் ஏராளமான சாதகர்களையும், பக்தர்களையும் சுவாமியை தரிசிக்க இந்தியா அனுப்பி வைப்பார். இறைவனோடு ஒன்றிய ஒரு தெய்வீக புருஷனைக்

கண்ணால் காண வேண்டும் என்ற அவாவில் துடிக்கும் அந்நாட்டுப் பக்தர்களை அவர் திருவண்ணாமலை அனுப்பி வைத்தார். மேலும் தன்னால் தீர்க்க முடியாத பிரச்சனைகள் உடையவர்களையும் அவர் சுவாமியிடம் அனுப்பி வைத்தார்.

இந்த தென் அமெரிக்க பக்தர்களையும் அவர் சுவாமியின் அனுமதி பெற்று அனுப்பி வைத்தார். அவர் சுவாமியிடம் மானசீகமாக தொடர்பு கொண்டு அநேக காரியங்களுக்கு அனுமதி பெறுவதாகச் சொல்வார்கள். சுவாமியும் அதைப் பலர் அறிய அங்கீகரித்துள்ளார்.

அன்று வந்த பக்தர்கள் ஒரு ஆன்மீக சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் குரு சில வாரங்கள் முன்பு மஹாசமாதி அடைந்துவிட்டார். அடுத்ததாகக் குரு பீடத்திற்கு யாரை நியமிப்பது என்ற குழப்பத்தில் ஹில்டா அம்மையாரை அணுகினார்கள். குரு பீடத்திற்குத் தகுதியானவர்களாக மூன்று நபர்களை ஹில்டா அம்மையார் தேர்ந்தெடுத்தார்.

அம்மூவரில் ஒருவரை குருவாகத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கு குழப்பம் ஏற்பட்டது. எனவே, அந்த ஆன்மீக சமுதாயத்தின் தேர்வுக் கமிட்டி உறுப்பினர்கள் பத்து பக்தர்களை ஹில்டா அம்மையார் சுவாமியிடம் அனுப்பி வைத்தார். தேர்வு குழுவின் தலைவர் சுவாமியிடம் தங்கள் குழப்பத்தைக் கூறினார். சுவாமி சற்று நேரம் அமைதியாக இருந்தார்.

அந்த நாட்களில், சுவாமி எப்பொழுதும் இரண்டு ஊதுபத்திகளை அவைகள் தீரத்தீர ஏற்றி வைக்கச் சொல்வார். அன்று அந்த வேலையை நான் செய்து கொண்டிருந்தேன்.

ஊதுபத்திகள் நறுமணம் பரப்பிக் கொண்டிருந்தன. சுவாமி சிகரெட் பிடித்தபடி அந்த ஊதுபத்தியின் தணலைப் பார்த்தபடியே இருந்தார். ஊதுபத்திகள்

தங்களின் இறுதிப் புகையை வெளிவிட்டு மடிந்தன. அடுத்து இரண்டு

ஊதுபத்திகள் ஏற்றப்பட்டன


சுவாமி அந்த தேர்வுக் குழுத் தலைவரிடம் ஒரு காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொடுத்து அதில் ஹில்டா அம்மையார் தேர்ந்தெடுத்த மூன்று நபர்களின் பெயர்களை எழுதச் சொன்னார். தலைவர் காகிதத்தில் அந்த மூன்று நபர்களின் பெயர்களை எழுதி சுவாமியிடம் கொடுத்தார்.

சுவாமி அந்த காகிதத்தைத் தன் கைகளில் சிறிது நேரம் வைத்திருந்தார். பின் தலைவரிடமிருந்து பேனாவை வாங்கி காகிதத்தில் இருந்த மூன்று பெயர்களில் ஒரு பெயரைச் சுற்றி மட்டும் வட்டமிட்டார். தலைவரிடத்தில் காகிதத்தைக் கொடுத்து வட்டமிடப்பட்ட பெயரை சத்தமாகச் சொல்லச் சொன்னார். தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயரை உரக்கக் கூறினார்.

பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அங்கிருந்த உறுப்பினர்கள் யாவரும் கரவொலி எழுப்பி ஆஹாகாரம் செய்தனர். அனைவரது முகத்திலும் பெருமகிழ்ச்சி நிலவியது. எவரை குருவாக நியமித்தால் எந்த பூசலும் ஏற்படாதோ, எவர் மீது முந்தைய குரு தன் பேரன்பைப் பொழிந்தாரோ, எவர் மீது அனைத்து உறுப்பினர்களும் நம்பிக்கை கொண்டிருந்தனரோ, எவர் தலைமை பீடத்தில் இருந்தால் சமுதாயத்தின் எழுச்சி நன்கிருக்குமோ, அவரையே சுவாமி தேர்ந்தெடுத்திருந்தார். வெளி நாட்டு அன்பர்கள் அன்றே நாடு திரும்ப ஏற்பாடு செய்தனர்.

பின்னாளில் அச்சமுதாய மக்கள் யாவரும் தங்கள் குருவின் கட்டளைப்படி ஒரு பெரிய குகையில் விஷமருந்தி மாண்டனர். அச்சமுதாயம் மூட நம்பிக்கைகளின் மொத்த உருவமாக இருந்ததால் இவ்விதம் கொடூரம் நேர்ந்தது என்று பரவலாகப் பேசப்பட்டது. இதை நாளிதழில் படித்த சுவாமி, "பார்த்தாயா நண்பா, அந்த பக்தர்கள் தங்கள் குரு மேல் வைத்த நம்பிக்கையை?" என்று வியந்து கேட்டார்.

# செண்பகம்மாள்



“பார்த்தசாரதி, செண்பகம்மாளை எப்பொழுது பார்த்தாய்?”

நான் ஒருமுறை திருவண்ணாமலை சென்ற சமயம் திடீரென சுவாமி வினவினார்.

“நான் பார்த்து வெகுகாலம் ஆகிவிட்டது சுவாமி, அவர் வயோதிகத்தினால் சிரமப்படுகிறார் என்றும், மறதிநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் கேள்பிப்பட்டேன் சுவாமி” நான் பதிலுரைத்தேன்.

“சிவகாசியிலேயே இருக்கிறாய். ஆனால் செண்பகம்மாளைப் பார்க்கவில்லை, என்னா பார்த்தசாரதி?” சுவாமி குறைபட்டுக்கொண்டார்.

சிறிது நேரம் கடந்தது. "பரவாயில்லை, இப்பொழுது இந்தப்பிச்சைக்காரன் இந்தப் பழங்களை உன்னிடம் தருகிறான். சிவகாசி சென்று நேரடியாகச் செண்பகம்மாளிடம் இந்தப் பிச்சைக்காரனின் வணக்கத்தைச் சொல்லி, இதைச்சமர்ப்பிக்க வேண்டும்."

சுவாமி இரண்டு ஆப்பிள் பழங்களை என்னிடம் கொடுத்தார். பழங்களைப் பணிந்து வாங்கிக்கொண்டேன். சற்றுநேரத்தில் சுவாமி விடை கொடுத்தனுப்பினார். நேராக சிவகாசி புறப்பட்டுச் சென்றேன்.

திருவண்ணாமலையில் சமாதியான சுப்பையா சுவாமிகளின் இளைய மகள் செண்பகம்மாள். சுப்பையா சுவாமிகளின் குடும்பமே சிவனடியார்கள் எனத் தைரியமாகச் சொல்லலாம். சுப்பையா சுவாமிகளின் மூத்த மகள் தாயம்மாள் தினசரி யாராவது ஒரு சிவனடியாருக்கு போஜனம் செய்விக்காமல் தான் உணவருந்துவதில்லை என்று இறுதிவரை வாழ்ந்தவர். அவரது மகன்வழிப் பேரன்தான் சுவாமியின் பிரியமான சீடர் முருகேசன் அவர்கள். தாயம்மாளும் அவரது மற்ற சகோதரிகளும் சிவ பக்தியோடு வளர்க்கப்பட்டார்கள்.

செண்பம்மாளின் தந்தையான சுப்பையா சுவாமிகள் தீராத வியாதியால் துன்புற்றுப் படுத்த படுக்கையாக இருந்தபோது, ஒரு சிவனடியார் சுப்பையா சுவாமிகளின் வீட்டுக்கு வருகை தந்தார். சுப்பையா அவர்களின் படுக்கையருகே அமர்ந்து அவரது கரம் பற்றி சிவனடியார் ஆறுதலாக வருடியவண்ணம் இருந்தார். சுப்பையா சுவாமிகள் இறைவனைத் தியானிக்க முடியாது உடல் உபாதை செய்வதைச் சிவனடியாரிடம் சொல்லி குறைபட்டுக் கொண்டார். சிவனடியார் அவர் உடலில் திருநீறைப் பூசி புன்முறுவல் பூத்து உடல்நிலை சீரானதும் சன்னியாசம் தரித்து திருவண்ணாமலையில் வாசம் செய்யவேண்டும் எனக் கூறி அங்கிருந்து சென்றுவிட்டார்.

துன்புறுத்திக் கொண்டிருந்த வியாதி இரண்டே நாட்களில் சுப்பையாவை விட்டு விலகியது. அடுத்த சில நாட்களில் சுப்பையா நாடார், சந்நியாசம் பூண்டு திருவண்ணாமலை சென்று சுப்பையா சுவாமிகள் ஆனார். அங்கே அண்ணாமலையார் தரிசனம், கிரிதரிசனம் மற்றும் கிரிபிரதட்சணம் செய்து சிவனையே தியானித்து தன் பூத உடல் வாழ்வைத் துறந்து சிவனில் ஐக்கியமானார். திருவண்ணாமலையில் அவருக்கு சமாதி எழுப்பப்பட்டது. சுவாமி சிலகாலம் அந்தச் சமாதியில் கழித்தார்.

சுப்பையா சுவாமிகளின் இரண்டாவது மகள் புஸ்பம்மாள். அவரும் சுவாமியின் பெரும் பக்தை. சுவாமியிடம் அவர் தன் தந்தை சுப்பையா சுவாமிகளையே கண்டார். அவர் ஒரு பாடலை இயற்றி சுவாமிக்கு சமர்பித்தார்.

“அன்னம்மாள் சகித சுப்பையா சுவாமியே

அருணாசலத்தில் வந்தமர்ந்தனையே

யோகிராம்சுரத்குமார் குருவாக வந்தனையே

சோதியாய் சுடரொளி பரப்புகின்றனையே.”

1976ல் இயற்றப்பட்ட இப்பாடலை சுவாமி பலமுறை பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார். 2000ஆம் ஆண்டில் கூட சுவாமி இப்பாடலை நினைவுகூர்ந்து பக்தர்களை பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார்.

சுப்பையா சுவாமிகளின் இளைய மகள் செண்பகம்மாள், சுவாமியின் பெரும் பக்தை. அவருக்கும் சிவகாசியைச் சேர்ந்த ஞானகிரி நாடார் அவர்களுக்கும் திருமணமானது. சிவகாசியில் அப்பொழுது கிறிஸ்தவ மிஷனரியைச் சேர்ந்த பல குழுக்கள் மக்களை வறுமை, நோய், கல்வி இன்மை இவற்றைக் காரணம் காட்டி மதமாற்றம் செய்யும் முயற்சியில் முழுமுயற்சியுடன் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் சிவகாசியில் வாழ்ந்துவந்த சிவனடியார் செண்பகம்மாள் ஒவ்வொரு வீடாகச் சென்று தேவாரம், திருவாசகம், சிவபுராணத்தைக் கற்பித்து சிவபக்தியை வளர்க்க பெருமுயற்சி செய்தார். உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஒன்றை அவர் குடும்பம் ஆரம்பித்தது. ஏழைகளுக்குக் கல்வியும், வேலையும் வழங்கப்பட்டது. அவரது கணவர் ஞானகிரி நாடார் தன்னிடம் வேலைபார்த்த அனைவருக்கும் சொற்பத் தொகையில் வீடுகட்டிக்கொடுத்தார். தர்மாஸ்பத்திரி ஆரம்பிக்கப்பட்டது. திக்கற்றோர் இல்லம் தொடங்கப்பட்டது. எளிமையாய் வாழ்ந்த செண்பகம்மாள் தன் கணவரின் மறைவுக்குப் பின்னர், தான் ஏற்படுத்திய திக்கற்றோர் இல்லத்தில் ஆஸ்ரம வாழ்க்கை வாழ்ந்துவந்தார். அவர் முதிர்ந்த வயதை எட்டியதும் சுவாமி அவரை அவரது மகளின் பராமரிப்பில் இருக்க வேண்டுகோள் விடுத்தார். அவரது மகளும், இறுதிக்காலத்தில் அவரது இளைய மகனும், மருமகளும் செண்பகம்மாளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்டனர்.

நான் சிவகாசியிலேயே இருந்தும், இப்பேர்ப்பட்ட உன்னத தவசீலரான செண்பகம்மாளைத் தரிசிக்கவில்லையே என்ற ஆதங்கத்தில், சுவாமி இரண்டு ஆப்பிள் பழங்களை என்னிடம் கொடுத்தனுப்பி செண்பகம்மாளைப் பார்த்துவரச் சொன்னார். சிவகாசி சென்றேன். சுவாமி கொடுத்தனுப்பிய இரண்டு ஆப்பிள் பழங்களை எடுத்துக்கொண்டு, செண்பகம்மாளின் இளைய மகன் ஞானகிரி கணேசன் வீட்டுக்கு சென்றேன்.

அங்கே அவரது மனைவி பானுமதி கணேசன் இருந்தார்கள். ஞானகிரி கணேசன் வெளியே சென்றிருந்தார். சுவாமி என்னிடம் கூறிய விஷயங்களைப் பானுமதி கணேசனிடம் தெரிவித்தேன். பானுமதி கணேசனும் சுவாமியின் அரும்பெரும் பக்தை. அவரது கவனிப்பில்தான் செண்பகம்மாள் அப்பொழுது இருந்தார்கள். என்னை செண்பகம்மாள்

இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே முதிர்ந்த செண்பகம்மாள் சிறு குழந்தைபோல் கட்டிலில் அமர்ந்திருந்தார். அவரது திருவடியில் நமஸ்கரித்தேன்.

"அம்மா, திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார் தன்னுடைய வணக்கத்தை உங்களுக்குச் சொல்லச் சொன்னார். அப்படியே இந்தப் பழங்களையும் உங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னார்."


ஆப்பிள் பழங்களை செண்பகம்மாளிடம் வழங்கினேன்.

"யோகி சுவாமி அனுப்பினாரா?"

பக்தியுடன் ஆப்பிள் பழங்களைப் பெற்றுக்கொண்ட செண்பகம்மாள் சற்றும் எதிர்பாரா விதமாக என்னை நமஸ்கரித்தார். எழுந்த அவர் என்னை உற்றுப் பார்த்த பார்வையில் நான் பிரமித்துப் போய்விட்டேன். அந்தப் பார்வை என் சுவாமியின் பார்வை. சுவாமியைத் தவிர்த்து வேறு எவராலும் பார்க்க முடியாத கனிவான, கருணை பொங்கும், தெய்வீகப் பார்வை. அப்பொழுதுதான் புரிந்து கொண்டேன், செண்பகம்மாள் சுவாமியுடன் ஒன்றாகக் கலந்துவிட்டார் என்று. இல்லை, இல்லை சுவாமிதான் செண்பகம்மாளை முழுமையாகத் தன்மயமாக்கிக் கொண்டார். அங்கே சுவாமிதான் இருந்தார். சுவாமியுடன் ஒன்றுபடுதலும் சுவாமியிடம் கரைதலும் சாத்தியமாகக் கூடியதுதான் என்று எனக்குக் காட்டவே செண்பகம்மாளை பார்க்கச் சொல்லி சுவாமி அருள்பாளித்தாரோ!

அடுத்த சில மாதங்களில் செண்பகம்மாள் தன் பூதவுடல் துறந்து சுவாமியிடம் கரைந்தார்.

# சுவாமிக்கு பிரியமானவர்



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு வீடு. அங்கு கூடத்தில் சுவாமியின் எதிரில் ஆண்களும் பெண்களுமாய் பல பக்தர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களில் வயோதிகத்தில் தடுமாறிக் கொண்டிருந்த பக்தர் ஒருவரும் இருந்தார். அவரின் கால்களின் மூட்டுக்கள் நெகிழ்வுத் தன்மையை வெகுவாக இழந்திருந்தன. மிகவும் சிரமப்பட்டு அவர் சுவாமியின் எதிரில் விரிக்கப்பட்டிருந்த பாயின் மேல் அமர்ந்திருந்தார். அவர் சுவாமியின் முன் தனது கால்களை நீட்டி அமர விரும்பாது தன் கால்களின் வலியையும் பொருட்படுத்தாது மிகுந்த சிரமத்தோடும், வலியோடும் தன் கால்களை மடக்கி அமர்ந்திருந்தார். சுவாமி அம்முதியவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“அப்பா கால்களை நீட்டி வசதியாக அமர்ந்து கொள்ளலாம்.”

சுவாமியின் குரலில் கொட்டிய கருணை அங்கிருந்த அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

“இல்லை சுவாமி. பரவாயில்லை நான் இப்படியே இருந்து கொள்கிறேன் சுவாமி.”

முதியவர் கை கூப்பிக் கூறினார்.

சுவாமி மெதுவாக தன் இருக்கையிலிருந்து எழுந்தார். முதியவரின் முன் அமர்ந்தார். முதியவரின், மடக்கி வைத்திருந்த கால்களை மெதுவாகப் பிடித்து இழுத்து நீட்டி வைத்தார். சுவாமியின் ஸ்பரிசத்தால் முதியவர் பதறிப் போனார்.

“வேண்டாம் சுவாமி. நீங்கள் போய் என் காலைத் தொட்டுக்கிட்டு....” பெரியவரின் குரல் தழுதழுத்தது.

“அப்பா, ஒன்றுமில்லை. கவலை வேண்டாம்.” சுவாமி கனிவோடு கூறினார்.

அம்முதியவரின் கால்களில் எங்கெல்லாம் வலி இருந்ததோ அங்கெல்லாம் சுவாமியின் தெய்வீகக் கரங்கள் வலி தீரப் பிடித்துவிட்டு ஆசுவாசப்படுத்தின. பெரியவர் உணர்ச்சி பிரவாகத்தில் அழவும் முடியாமல் உறைந்து போயிருந்தார். சற்று நேரம் கழிந்தது.

பெரியவருடன் அவரது மகளும் மருமகனும் வந்திருந்தனர். சுவாமி அவர்களிடம் தந்தையை சிவகாசி நாடார் சத்திரத்தில் அவர்களின் அறையில் விட்டுவரச் சொன்னார்.

“அப்பா அறைக்குச் சென்று ஓய்வெடுக்கலாம்.”

சுவாமி, பெரியவர் எழுந்து நிற்பதற்க்கு உதவி புரிந்தார். பின்னர் வாசல் வரை உடன் சென்று வழியனுப்பிவிட்டு வந்தார். பெரியவரின் மருமகன் தன் மனைவியிடம் பெரியவருக்குப் பகவானைப்பற்றியோ, ஞானிகளைப் பற்றியோ ஒன்றுமே தெரியாது. ஆனாலும் சுவாமி

அவர் மேல் காட்டிய பரிவு, அவர் தகுதிக்கு மீறியும், விசித்திரமாகவும் இருந்தது என ஒருவித இளக்காரத்துடன் கூறினார்.

பெரியவரோ, அவரது மகளோ பதிலேதும் கூறவில்லை. பெரியவரை அறையில் விட்டுவிட்டு தம்பதியர் சுவாமியிடம் திரும்பி வந்தனர். சுவாமி அவர்களை அமர வைத்தார்.

“இக்காலத்தில் நேர்மையாக வியாபாரம் செய்து தன் பெண் மக்களுக்கு நகைகள் சேர்த்து திருமணம் செய்விப்பது என்பது மிகப் பெரிய காரியம். கடன் ஏதும் வைக்காது ஆண் பிள்ளைகளுக்காகச் சொத்துக்களையும் தொழிலையும் ஏற்பாடு செய்வது என்பதும், இக்காலத்தில் எளிதான காரியமல்ல. இப்பேற்பட்ட தகப்பனை என் தந்தை மிகவும் நேசிப்பார். இவர்களால் உலகத்திற்கு எவ்வித துன்பமுமில்லை. இவர்களால் உலகத்திற்கு நன்மையே விளையும்.”

சுவாமி கீதையில் இருந்து ஒரு சுலோகத்தைக் கூறினார். பின் அதன் பொருளையும் கூறினார்.

“எவனொருவன் உலகிற்கு எவ்வித தீங்கும் செய்யாதவனோ, எவனொருவன் உலகத்திலிருந்து வரும் கெடுதல்களை ஏற்றுக் கொள்ளாதவனோ, எவனொருவன் பயம், துவேஷம் போன்ற இத்யாதிகளிலிருந்து விடுபட்டவனோ அவன் எனக்கு மிகவும் பிரியமானவன்.”

இதைக் கேட்ட மருமகனுக்கு தன் மாமனாரைப்பற்றிய அபிப்பிராயம் மாறிப்போனது.

# குழப்பம் தீர்ந்தது



1976ஆம் ஆண்டிலிருந்து அந்த நண்பர் சுவாமியை தரிசித்து வந்தவர். சுவாமியைப் பார்த்தது முதல் தன் வாழ்க்கையை மிகவும் எளிமையாக்கிக் கொண்டார். கதராடைகளையே அணிய ஆரம்பித்தார். எங்கும் நடந்தே செல்ல முற்பட்டார். காரில் பயணிப்பதை ஆடம்பரம் என ஒதுக்கினார். புலால் உணவுப் பழக்கத்தை முற்றிலும் நிறுத்தினார். சுவாமியைக் காண்பதற்கு மட்டும் திருவண்ணாமலைக்கு பஸ்ஸிலோ, புகைவண்டியிலோ பயணித்தார். குடும்பத்தில் நடக்கும் எந்த விசேஷங்களுக்கும் போவதைத் தவிர்த்தார். எப்பொழுதும் வேதாந்தம் பேசி வந்தார். அவர் படித்தது, சுவாமியிடம் அனுபவப்பட்டது, இவற்றை மட்டுமே அவர் திரும்பத் திரும்ப எல்லோரிடமும் பேசி வந்தார். ஒரு கட்டத்தில் அவரிடம் பேசுவதற்கே அவருடைய நண்பர்களும், சுற்றத்தார்களும் பயந்தார்கள்.

ஒருசமயம், நண்பர் சுவாமியைப் பார்க்க தன் குடும்பத்துடன் வந்திருந்தார். இவரைப் பற்றி, குடும்பத்தில் உள்ளோர் பற்பல புகார்கள்

கூறினர். குடும்பத்தில் நடக்கும் சுபகாரியங்களுக்கு வருவதில்லை என மிகவும் குறைபட்டுக் கொண்டனர். இன்னும் சில வாரங்களில் அவர்கள் குடும்பத்தில் ஒரு கல்யாணம் நடை பெற இருப்பதால், சுவாமி அவரை அந்த திருமணத்துக்குக் கட்டாயம் அனுப்ப வேண்டும் என சுவாமியிடம் கோரிக்கை வைத்தனர். சுவாமி கூறினால் மட்டுமே அந்த நண்பர் கேட்பார் என்பதால் இந்தக் கோரிக்கை. சுவாமி, குடும்பத்தில் நடக்கும் திருமண வைபவத்தில் அவர் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்று அவரிடம் கூற, நண்பரும் சம்மதித்தார்.

இது நடந்த சில நாட்களில் நான் சுவாமியிடம் சென்றிருந்தேன். நண்பரிடம் சுவாமி கூறியது எதுவும் எனக்குத் தெரியாது. பல விஷயங்கள் குறித்து சுவாமி பேசிக்கொண்டிருந்தார். ஒரு திருமணப் பத்திரிக்கையை எடுத்து என்னிடம் கொடுத்தார். அந்தத் திருமணத்துக்கு நானும் அந்த நண்பரும் சென்று சுவாமியின் வாழ்த்துக்களை தம்பதியருக்குச் சொல்ல வேண்டும் என்று கூறினார். நானும் சரியெனக் கூறினேன். ஓரிரு நாட்களில் சுவாமி எனக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

ஊர் சென்று அந்த நண்பரைச் சந்தித்து சுவாமியின் விருப்பத்தைக் கூறினேன். அவர் குழப்பமடைந்தார். அதே தேதியில் அவர் குடும்பத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் சுவாமி அவரை கலந்துகொள்ளச் சொல்லியிருந்தார். என்னிடமோ, வேறு ஒரு நண்பர் இல்லத் திருமண விழாவுக்கு, நானும் அந்த நண்பரும் செல்ல வேண்டும் எனச் சொல்லி அனுப்பியிருந்தார். என்ன செய்வது? இரண்டு திருமணங்களும் வெவ்வேறு ஊர்களில், ஆனால் ஒரே தேதி மற்றும் நேரத்தில், என்ன செய்வது என்று அவருக்குக் குழப்பமாகி விட்டது.

முடிவில், சுவாமிக்கே கடிதம் எழுதிக் கேட்பது என அவர் முடிவெடுத்தார். தாம் மிகவும் குழப்பமடைந்துள்ளதாகவும், ஏதாவது ஒரு திருமணத்துக்கு மட்டுமே செல்ல முடியும் என்பதால் எந்தத் திருமணத்துக்குச் செல்ல


வேண்டுமென்று சுவாமி விரும்புகிறாரோ அந்தத் திருமணத்துக்குத் தான் செல்வதாகவும், சுவாமியின் விருப்பத்தைத் தெரிவிக்குமாறும் சுவாமிக்கு கடிதம் எழுதினார்.

நண்பர் சுவாமிக்கு கடிதம் எழுதிய சில நாட்களில் நான் மீண்டும் சுவாமியைக் காணச் செல்ல நேர்ந்தது. சுவாமியை நமஸ்கரித்தேன். சுவாமி நண்பரின் கடிதத்தை என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். படித்தேன். சற்றுநேரம் மௌனமாகக் கழிந்தது.

"இந்தப் பிச்சைக்காரன் போன்றோர்கள் மக்களின் மனதில் ஏற்படும் குழப்பங்களையும், சந்தேகங்களையும் தீர்ப்பதெற்கென்றே அப்பாவால் அனுப்பப்பட்டவர்கள். ஆனால் அப்பா இந்தப் பிச்சைக்காரனே குழப்பத்தை ஏற்படுத்த எப்படி அனுமதித்தார்? இந்த மாபெரும் தவறை அப்பா எப்படி இந்தப் பிச்சைக்காரனைச் செய்ய வைத்தார்?

சுவாமி திரும்பத் திரும்ப இதையே சொல்லிக் கொண்டிருந்தார். சிறு விஷயம் என கருதத்தக்க ஒரு விஷயம் எந்தக் கோணத்தில் பார்க்கப்பட்டது எனத் தெரிந்த போது நான் பிரமித்துப் போய்விட்டேன். சுவாமி மிகப் பிரமண்டமாக எனக்குத் தெரிந்தார். முடிவில், சுவாமி அந்த நண்பரின் குடும்பத்தில் நடைபெறும் திருமணவிழாவில் மட்டும் அவர் கலந்து கொள்ளுமாறு என்னிடம் சொல்லியனுப்பினார். சுவாமி தெரிவித்ததை நான் நண்பரிடம் சொல்ல, அவர் குழப்பம் தீர்ந்தார். தன் இல்லத் திருமண விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டார்.

# தெய்வீக நாமம்



ராமா, கிருஷ்ணா, சிவா, முருகா, கணேசா, தாயே ஈஸ்வரி என பற்பல தெய்வ நாமங்களைச் சொல்லிச் சொல்லிப் பழகிய இந்த நாவிற்கும், மனதிற்கும், ஒரு விசித்திரமாக உடை அணிந்த, ஸ்நானமே செய்யாத, எந்தவித சடங்குகளும் செய்யாத, குப்பையாக இருக்கும் இடங்களிலும் கொஞ்சமும் முகம் சுளிக்காது பேரானந்தத்தில் அனுக்ஷணமும் திளைத்திருக்கும் ஒரு வித விசித்திரமான ஜீவனின் நாமத்தைத் தெரிந்துகொண்டு, அந்த நாமத்தின் சுவையை அனுபவித்து புரிந்து கானமாகப் பாடி அதுமயமாக மாற, கண்டிப்பாக பெரும் தவம் செய்திருக்க வேண்டும்.

அந்த விசித்திர ரூபத்தைக் காணாதோரும், அந்த ரூபத்தின் நாமத்தில் போதையுற்றுச் சொக்கிப் போய் கிடப்பதும் பேரதிசியமே. அந்த ரூபத்தின் நாயகன் யோகி ராம்சுரத்குமார் எனும் அற்புத நாதன். அவன்

ஸ்மரணத்தில் அகமடங்கி, இந்திரியங்களின் செயல் அற்று, அண்டப் பெருவெளியில் உயிர் உலாச் செல்லும்.

“ஹிரண்யகசிபு எனும் ராட்சதன் எவ்விதம் தன் பெயரையே அனைவரும் சொல்ல வேண்டும் என உத்திரவிட்டானோ, அது போன்றே இந்த பிச்சைக்காரனும் தன் நாமத்தையே அனைவரும் ஸ்மரணம் செய்ய வேண்டும் என்று சொல்கின்றான். இதன் தாத்பரியத்தை யாரேனும் சொல்ல முடியுமா,” சுவாமி ஒரு நாள் தன் முன் அமர்ந்திருந்த பக்தர்களிடம் வினவினார்.

பக்தர்கள் மௌனம் காத்தனர். ஒரு இளைஞன் எழுந்தான். “சுவாமி ராமா, கிருஷ்ணா போன்ற அனைத்து தெய்வ நாமங்களும் எத்தனையோ கல்ப காலமாக இருந்துவரும் பழைய மந்திரச் சொற்கள். ஆனால் சுவாமியின் இந்த புனித மந்திர நாமம் “யோகி ராம்சுரத்குமார்”, எனும் இந்த சுகமான மந்திரம் புத்தம் புதிது சுவாமி. எனவேதான் இந்த அபூர்வ நாமத்தை எங்களுக்கு உபதேசித்துள்ளீர்கள் சுவாமி,”

இளைஞனின் பதிலைக் கேட்ட சுவாமி பரமானந்தத்தோடு சிரித்தார்.

“உண்மை நண்பா. இந்த புனித நாமம் என் தந்தையின் புத்தம்புதிய நாமம். என் தந்தை தன் அடியவர்களுக்காக இந்தப்புனித, புதிய நாமத்தை அருளியுள்ளார். இந்த நாமத்தில் திளைப்பவருக்கு என் தந்தை பரிபூர்ணமாக அருள்பாலிப்பார். நம்புங்கள் நண்பர்களே, இந்த புனித நாமம் “யோகி ராம்சுரத்குமார்” என் தந்தையின் நாமமாகும்.”

சுவாமி தன் இனிமையான குரலில் பாட ஆரம்பித்தார்.

“யோகி ராமசுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா”

சுவாமியைப் பின்தொடர்ந்து அனைவரும் பாடினோம். பிரம்மானந்தத்தில் திளைத்திருந்தோம்.

# நம்பு நண்பா நம்பு!



சுவாமிக்கு தினமும் பல கடிதங்களும், மணியார்டர்களும் வரும். கடிதங்களை சுவாமி பெற்றுக்கொண்டு, ஒவ்வொரு கடிதமாகப் பார்த்துக்கொண்டு வருவார். அவற்றில் ஓரிரண்டு கடிதங்களை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவற்றைத் தனியே வைத்துவிடுவார். எடுத்த கடிதத்தை சுவாமி படிப்பார். சுவாமிக்கு ஆங்கிலம்,தமிழ், ஹிந்தி என பல மொழிகளில் கடிதங்கள் வருவதுண்டு. சில கடிதங்களை சுவாமி அங்கிருக்கும் சில குறிப்பிட்ட பக்த்தர்களிடம் கொடுத்துப் படிக்கச் சொல்வார்.

அன்று வந்த கடிதங்களில் ஒரு கடிதத்தை மட்டும் தனியாக எடுத்து என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். அந்தக் கடிதத்தை சுவாமியின் நெடுநாளைய பக்தர் ஒருவர் எழுதியிருந்தார். அந்த பக்தர் எப்பொழுது சுவாமிக்கு கடிதம் எழுதினாலும் முதலில் சுவாமியைக் கடவுள், குரு, பரமாத்மா என பலவாறு வர்ணித்து எழுதிய பின்புதான் பிற செய்தியை எழுத ஆரம்பிப்பார். அன்றும் அந்தக் கடிதத்தில் அவ்வாறே இருந்தது. பின்னர் “சுவாமி, தங்களுக்கு உடம்பு முடியவில்லை எனக்

கேள்விப்பட்டேன், தற்போது எப்படி இருக்கிறீர்கள் சுவாமி? தற்சமயம் தாங்கள் நலமாக இருப்பீர்கள் என நம்புகின்றேன்...” என அந்த அன்பர் எழுதியிருந்தார். நான் படித்து முடித்தபின் சுவாமி அக்கடிதத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் வெகு நேரம் மௌனமாக இருந்தார். அடுத்தடுத்து புகைத்துக் கொண்டே இருந்தார். அந்தக் கடிதத்தைப் படிக்கும் முன்பு அவர் முகத்தில் இருந்த மலர்ச்சி அப்போது இல்லை. சற்று நேரம் கழித்து சுவாமி அக்கடிதத்தை விமர்சனம் செய்தார்.

“நீங்கள் எல்லோரும் இந்தப் பிச்சைக்காரனைக் கடவுள் என்றும், குரு என்றும் இன்னும் என்னென்னவோ தெய்வத்தின் பெயர் சொல்லி அழைக்கிறீர்கள். பின் திடீரென சுவாமி எப்படி இருக்கிறீர்கள்? நலம்தானே? என்று கேட்கிறீர்கள். இங்கு என்ன நடக்கிறது?”

சுவாமியின் விமர்சனம் அங்குள்ளோரை திக்பிரம்மை அடைய வைத்தது. ஒரு நீண்ட திகிலான மௌனம் அங்கே நிலவியது. சுவாமி மௌனம் கலைத்தார்.

“இந்தப்பிச்சைக்காரன் 1952இல் குருநாதர் ராமதாசரின் பொற்றாமரைத் திருவடியில் செத்துவிட்டான். அதன்பின்னர் என் தந்தையே இங்கு இருக்கிறார்.

“தந்தையே நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என உங்களால் எப்படிக் கேட்க முடியும்? யாரோ ஒரு சாரார் திட்டமிட்டு இந்தப் பிச்சைக்காரனுக்கு எதிராக தவறான மனோபாவங்களை மக்கள் மத்தியில் புகுத்தி வருகிறார்கள். இந்த நண்பனுக்குக் கூட தந்தையின் ஆரோக்கியத்தில் சந்தேகம் வந்துவிட்டதா? என் தந்தை ஒருபோதும் பலஹீனமாகமாட்டார். நண்பரிடம் போய்ச் சொல்.”

நான் சரியென தலையாட்டினேன். சுவாமியின் சொற்கள் அங்கு அமர்ந்திருந்த அனைவரது உள்ளத்திலும் ஆழப்பதிந்தது. அன்று எவர் வந்து சுவாமியின் திருவடி பணிந்து நமஸ்கரித்தாலும், “உனக்குத் தெரியுமா, இந்தப் பிச்சைக்காரன் இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறான். செத்துவிடவில்லை. போய் எல்லோரிடமும் சொல்” என்று மட்டுமே சொல்லிக்கொண்டிருந்தார்.

சுவாமி தன்னை ஒருநாளும் சரீரமாகப் பார்த்ததில்லை. அவர் குரு ராமதாசரைச் சரண் புகுந்த நாள் முதல், ஆண்டவனை மட்டுமே எல்லாவற்றிலும் பார்த்தார் ஆண்டவனைத் தவிர்த்து வேறெதுவும் அவரது மனோ, வாக்கு, காயத்தில் தோன்றியது இல்லை. ஆண்டவனோடு அவரது ஒன்றுதல் பரிபூரணமாய் இருந்தது.

அன்று இரவு சுவாமி என்னிடம் கூறினார்.

“இந்தப் பிச்சைக்காரனின் ஏதாவது ஒரு தோற்றத்தை நினைவில் இறுத்திக் கொள். அதுவே தியானமாகும். இந்தத் தியானம் உன்னை என் தந்தையிடம் அழைத்துச் செல்லும். உனக்குத் தெரியுமா நண்பா? இந்தப்பிச்சைக்காரன் எப்பொழுதும் உன்னை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கிறான். இந்தப் பிச்சைக்காரன் பேசினாலும், மௌனமாக இருந்தாலும், சாப்பிட்டாலும், தூங்கினாலும் எது செய்தாலும் அது அருள்பாலித்தல்தான். இந்தப் பிச்சைக்காரனின் சொரூபமே எப்பொழுதும் அனைவருக்கும் அருள்பாலித்துக் கொண்டே இருக்கிறது. இந்தப் பிச்சைக்காரனின் நாமமும், ரூபமும் எனது தந்தையின் (கடவுளின்) நாமமும், ரூபமும் ஆகும். எவரெல்லாம் இந்தப் பிச்சைக்காரனின் நாமத்தையும், ரூபத்தையும் தியானம் செய்கிறார்களோ அவர்கள் அனைவரும் எனது தந்தையைச் சுலபமாக அடைவார்கள். நம்புவாய் நண்பா நம்பு!”.

# நறுமண நாமமாலை



சுவாமி யோகி ராம்சுரத்குமார் சன்னதித் தெரு வீட்டில் இருக்கும்போது பல்வேறு பக்தர்கள் தங்களின் பக்தியையும், தாங்கள் சுவாமியிடம் வைத்திருக்கும் அபிமானத்தையும் காட்டுவதற்காக மலர் மாலைகளும், வாசனைப் பூச்சரங்களையும் சாற்றுவார்கள். சுவாமி எல்லாருடைய மலர் மாலைகளையும் ஏற்றுக் கொள்வதில்லை. சில அன்பர்கள் சுவாமிக்கு மாலை அணிவிக்க வந்தால் அதைத் தன் கரங்களில் பெற்றுக்கொண்டு தன்னருகே ஒரு ஓரமாக வைத்துவிடுவார்.

வேறு சிலர் சிறு மலர்ச் சரத்தை மந்தாரை இலையில் கட்டி சுவாமியின் முன் திருவடிகளில் வைத்து வணங்கினால், சுவாமியே அந்த நூலால் கட்டப்பட்ட மந்தாரை இலைப் பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்து அந்த சிறிய மலர் சரத்தை எடுத்து தன் கழுத்தில் அணிந்து கொள்வார். அதை அவ்வப்போது முகர்ந்து பார்த்து மலர் கொண்டுவந்த அன்பரை நோக்கி முகம் மலர்ந்து ஆனந்தப் புன்னகை புரிவார். மலர் கொண்டுவந்த பக்தர் மனம் கசிந்து சுவாமியை தான் அமர்ந்த இடத்திலிருந்தே இரு கை கூப்பி நமஸ்கரிப்பார்.

சில சமயங்களில் சுவாமி பக்தர்கள் அணிவித்த மலர் மாலையோடு நாள் முழுவதும் தரிசனம் அளிப்பார். அணிந்திருந்த மாலையில் சில சமயங்களில் ஈக்களும், தேனீக்களும் அமர்ந்து மாலையில் உள்ள புஷ்பத்தில் இருந்து தேன் அருந்தும். சில வண்டுகள் கூட புஷ்பங்களைத் தொட்டும் தொடாமலும் ரீங்காரம் செய்தவண்ணம் இருக்கும். சுவாமி அவற்றை எல்லாம் பொருட்படுத்த மாட்டார்.

நாள் இறுதியில் சுவாமி தனக்கு கொடுத்த, அணிவிக்கப்பட்ட மாலைகளையும், மலர் சரங்களையும் வீட்டின் முன்பக்கம் உள்ள தாழ்வாரக் கம்பிகளில் கட்டிவிடச் சொல்வார். அந்த மாலைகள் வாடி, காய்ந்து அந்த கம்பிவெளிக்கு திரைச்சீலை அமைத்தது போல் இருக்கும்.

ஒரு சமயம் ஆஸ்ரம இடத்தைப் பார்வையிட சுவாமி சில பக்தர்களோடு ஒரு வேனில் சென்றார். வேறு சில பக்தர்கள் ஆட்டோ வாகனத்தில் வந்திருந்தனர். வந்த பக்தர்களில் ஒரு பெண்மணி அங்கு பூத்திருந்த சிறு சிறு பூக்களைக் கொத்தாகப் பறித்து மாலையாகக் கட்டி சுவாமியின் கழுத்தில் யாரும் எதிர்பாராத விதமாக அணிவித்து விட்டார். சுவாமியின் பக்கத்தில் இருந்த மற்றொரு பக்தை பதறிப் போனார்.

“பகவான், பகவான் அந்த மாலையைக் கழற்றிவிடுங்கள். அது பார்த்தீனியம் என்ற விஷச் செடியின் பூக்கள். அது தங்கள் மேனிக்கு ஊறு விளைவிக்கும். எனவே கழற்றி விடுங்கள் பகவான்.”

பக்தை கெஞ்சினார். சுவாமி அவர் சொல்வதைப் பொருட்படுத்தாமல் அம்மாலையை வெகு நேரம் அணிந்திருந்தார்.

சுவாமி மிகவும் விரும்பி, ரசித்து, மீண்டும் மீண்டும் முகர்ந்து பார்க்கும்


மாலை, ஒரு சென்னை பக்தை சுவாமிக்கு அணிவிப்பது. அப்பக்தை வரும்போதெல்லாம் சுவாமியின் நாமத்தை பெரிய பெரிய காகிதங்களில் எழுதி, அதை கத்திரிக்கோலால் அளவாக வெட்டி, அழகாக மாலையாய் தொடுத்துவிடுவார். சுவாமியைத் தரிசிக்க வரும்போதெல்லாம் இந்த நாம மாலையைக் கொண்டுவந்து சுவாமிக்குச் சாற்றுவார். சுவாமி ஆசிரமத்தில் தரிசனம் தரும்போது பக்தர்கள் தாங்கள் கொண்டுவந்த புஷ்பங்களையும், மாலைகளையும் அங்குள்ள பெரிய தாம்பாளத்தில் வைத்துவிட வேண்டும். அதை சுவாமியின் தொண்டர்கள் சுவாமியிடம் காட்டுவார்கள்.

அதில் நாம மாலை இருப்பதை சுவாமி பார்த்தால், "லலிதா வந்திருக்காரா?" என்று கேட்பார்.

லலிதா எழுந்து நிற்பார். சுவாமி அவரை அருகில் அழைப்பார். லலிதா வந்தவுடன் நாம மாலையைக் கையில் எடுத்து ஆழ்ந்து முகர்ந்து பார்ப்பார். லலிதாவின் பக்தியின் நறுமணம் சுவாமியை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். அந்த நாம மாலையை சுவாமி அவரே அணிந்து கொள்வார். லலிதா சுவாமியை நமஸ்கரிப்பார். சுவாமியின் பேரருள் பார்வை பக்தையைப் பரவசப்படுத்தும். சுவாமி அன்று முழுவதும் அந்த நாம மாலையைத் தரித்தவண்ணமே அனைவருக்கும் காட்சி தருவார்.

இப்படி இன்னும் எத்தனை எத்தனை பக்தர்களோ! அத்தனை பேருக்கும் அடியேனின் வந்தனம்.

# சுவாமி நீங்கள் யார்?



“சுவாமி உண்மையில் நீங்கள் யார்? நீங்கள் துறவி இல்லை. சன்னியாசி இல்லை. சொல்லில் விளையாடும் இறை போதகர் இல்லை. உங்களிடம் சம்பிரதாயங்கள் இல்லை. சடங்குகளோ, நியமங்களோ இல்லை. மத நாற்றம் இல்லை. எந்த விதமான தர்மசேவைகளும் நீங்கள் புரிவதில்லை.

தியானமோ, யோகமோ எதுவும் செய்யவும் இல்லை, செய்யச் சொல்லவும் இல்லை. அனுஷ்டானங்கள் செய்வதில்லை. ஏன் ஸ்நானம் கூடச் செய்வதில்லை. யாருக்கும் எதையும் போதிக்கவில்லை. நீங்கள் உண்மையில் யார் சுவாமி?

ஏனோ என் ஆழ்மனதில் உங்களைக் காணவேண்டும், உங்களுடனேயே சர்வ காலமும் இருக்க வேண்டும் என்று வெறித்தனமான வேகம் மட்டும் பிறக்கிறது. உங்கள் நாமம் நான் இதுவரை உச்சாடனம் செய்துவந்த மற்ற நாமத்தை விடச் சொல்வதற்குச் சுகமாக இருக்கிறது. எப்பொழுதும் சொல்ல மனமும் விழைகிறது. என்னுள் நீங்கள் எதுவும் செய்யாமலே மாற்றங்கள் புரிகிறீர்கள். தங்களைத் தரிசிக்கும்போது நான் காணாமல் போய்விடுகிறேன். என் எண்ண ஓட்டங்களும் ஓய்ந்து

விடுகிறது. நீங்கள் யார் சுவாமி?"

அந்த வெளிநாட்டு அன்பர் கண்கள் கலங்க கேள்விக் கணைகளைத் தொடுத்துக் கொண்டே இருந்தார்.

சுவாமி யோகி ராம்சுரத்குமார் சன்னதித் தெரு வீட்டில் தன் இருக்கையில் அமர்ந்தவாறு அதுவரை பேசிய அந்த வெளிநாட்டு அன்பரையே உற்றுப் பார்த்தவாறு இருந்தார். மாறிமாறி புகை பிடித்தார். வெகு நேரம் அங்கு ஆழ்ந்த மௌனம் நிலவியது. சுவாமி மெதுவாக எழுந்தார். கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

"இந்த பிச்சைக்காரனை யார் எனக் கேட்டாய். உன் கண்கள் என்னையே பார்க்கட்டும். உன் எண்ணங்கள் என்னையே சுற்றிவரட்டும். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு ஒரு முறையே இந்த பிச்சைக்காரன் போன்றோர் இவ்வுலகிற்கு வருவார்கள். எனவே நன்கு பார்த்துக்கொள்.

இந்த பிச்சைக்காரன் பேசும் தோற்றத்தையோ, நடக்கும் தோற்றத்தையோ, அமரும் தோற்றத்தையோ, சிரிக்கும் தோற்றத்தையோ, அழுகின்ற தோற்றத்தையோ, உக்கிரமாக இருக்கும் தோற்றத்தையோ, அன்பர்களோடு அளவளாவும் தோற்றத்தையோ, இந்த பிச்சைக்காரனின் ஏதோவொரு தோற்றத்தை உன்னுள் இருத்திக் கொள். அதுவே தவமாகும். அதுவே தெய்வ தரிசனமாகும். அதுவே மனித வாழ்வின் குறிக்கோளும் ஆகும். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதே நண்பா. இந்த பிச்சைக்காரனை ஸுவீகரித்துவிடு. உன்மயமாக்கிக்கொள். இந்த பிச்சைக்காரனை விழுங்கிவிடு நண்பா."

சுவாமி அந்த வெளிநாட்டு அன்பரின் சிரத்தில் தன் புனித கரத்தை வைத்தார். அன்பரின் கண்களிலிருந்து நீர் வெள்ளமாக வடிந்தோடியது. சற்று நேரத்தில் சுவாமி தன் இருக்கையில் அமர்ந்தார். அந்த

வெளிநாட்டு அன்பர் மெதுவாக எழுந்தார். சுவாமியை நமஸ்கரித்தார். பின்னர் சென்றுவிட்டார்.

“சுவாமி இங்கே என்ன நடந்தது?”

அங்கிருந்த ஒரு பக்தர் ஆர்வமுடன் கேட்டார்.

“ஓ, இந்த பிச்சைக்காரன் பைத்தியக்காரத்தனமாக ஏதோ பேசினான். அந்த வெளிநாட்டு நண்பன் அதைக் கேட்டுவிட்டு ஓடிவிட்டார். அவ்வளவு தான் விஷயம். வேறொன்றும் இல்லை நண்பா.”

சுவாமி அலையலையாக ஓங்காரமாகச் சிரித்துக்கொண்டே இருந்தார். அச்சிரிப்பின் நாதம் என் செவியில் இன்றுவரை ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

# மாற்றம்



அவர் ஒரு பெரிய தொழிலதிபர். செல்வச் சீமான். பேரறிவாற்றல் மிக்கவர். அவரது குடும்பம் தெய்வீக நாட்டமுடைய பாரம்பரியம் கொண்டது. சுவாமி, அக்குடும்ப உறுப்பினர்கள் யார் வந்தாலும் சந்தோஷத்துடன் வரவேற்று நீண்ட நேரம் உரையாடி மகிழ்வார். அவர்களது சிறுசிறு பிரச்சனைகளையும் சுவாமி ஆழ்ந்து நோக்கி தீர்த்து வைப்பார்.

அந்தத் தொழிலதிபர் பெரிய ஸ்தாபனங்களை நிர்வகித்தவர். சகவாச தோஷத்தால் அவரிடம் தகாத பழக்க வழக்கங்கள் அதிகமிருந்தன. ஆனாலும், அவரது மனம் எப்போதும் தெய்வீக நாட்டத்திலேயே அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தது. பற்பல ஆன்மிக நூல்களைப் படித்தார். தத்துவ விசாரணையில் திளைத்தார். விதவிதமான ஆன்மிகவாதிகளுடன் நெடுநேரம் பேசி, இறைவனை உணர்வதற்குச் சாத்தியப்படுமா என்று

ஆராய்ந்தார். முடிவில் குருவின் அருள் இருந்தால் மட்டுமே தெய்வ சாட்சாத்காரம் கிட்டும் என உணர்ந்தார். குருவை எங்கு காண்பது? தேட ஆரம்பித்தார். பல க்ஷேத்திரங்களைச் சுற்றினார். அக்காலத்தில் பிரசித்தி பெற்ற பெரிய பெரிய ஞானிகளையும், மடாதிபதிகளையும், சன்னியாசிகளையும் சந்தித்தார். அவர்களில் எவராவது தன் குருவாக இருக்கலாம் என்ற தாபத்தில் விடாது சுற்றி வந்தார். எவரிடமும் அவரது மனம் லயிக்கவில்லை.

முடிவில் திருவண்ணாமலை வந்தார். கோவிலுக்குச் சென்று தரிசனத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்த ஒரு பெரியவரிடம் 'அங்கே உண்மையான ஞானியைப் பார்க்க முடியுமா' எனக் கேட்க, அவர் சுவாமியின் இருப்பிடத்தைக் கூறினார். சுவாமி அப்போது புன்னை மரத்தடியில் அமர்ந்திருந்தார்.

சுவாமியைக் காண அந்த தொழிலதிபர் உடனே புறப்பட்டார். சுவாமி அமர்ந்திருந்த இடத்தை அடைந்தார். சுவாமியின் சொரூபம் விசித்திரமாக இருந்தது. அழுக்கடைந்து கருப்பாகிப் போன பஞ்சகச்சமாகக் கட்டியிருந்த வேஷ்டி, வியர்வையில் தோய்ந்த ஜிப்பா, தலைப்பாகை, உடம்பைப் போர்வையினால் வித்தியாசமாகச் சுற்றிக்கொண்டு கையில் பனையோலை விசிறியும், தேங்காய் சிரட்டையுமாக மீசை தாடியுடன் கிட்டதட்ட பைத்தியக்காரப் பிச்சைக்காரன் போல் சுவாமி அமர்ந்திருந்ததைக் கண்டு தொழிலதிபர் ஒருகணம் தயங்கினார்.

எதனாலோ ஈர்க்கப்பட்ட அவர் திடீரென சுவாமியின் திருவடியில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். சுவாமி அவர் முதுகில் லேசாகத் தட்டினார். "கடைசியில் வந்துவிட்டாயா?" எனக் கேட்பது போல அவர் பார்வை இருந்தது. ஆனந்தமாக சுவாமி சிரித்தார். அலையலையாய் வந்த பேரானந்தச் சிரிப்பு அந்த அன்பரின் மனத்தைக் கட்டிப்போட்டுவிட்டது. தன்னுடைய யதார்த்த சாசுவதமான இருப்பிடத்துக்கு வந்துவிட்டதைப்

போல் உணர்ந்தார். இந்த யோகிதான் தன் குரு என்பதை அவருடைய அந்தராத்மா அவருக்கு அறிவுறுத்தியது. அவர் சுவாமியைச் சிக்கெனப் பிடித்தார். இல்லை, இல்லை சுவாமி அவரை உறுதியாகப் பிடித்துக்கொண்டார்.

அன்றிலிருந்து அவருடைய வாழ்க்கையே மாறிப்போனது. சுவாமி அவருக்கு தன் நாமத்தையே தீட்சையாக வழங்கினார். ஞானிகளின் போதனைகளை உணர்த்தினார். தெய்வ சாட்சாத்காரமே மனித வாழ்வின் நோக்கம் என்பதை தெரியப்படுத்தினார். தெய்வ சாட்சாத்காரத்துக்கு நாம ஜபமே எளிமையான வழி என பகர்ந்தார். யாருமறியாமல் அவர் சுவாமியின் நாமத்தை ஜபித்துக்கொண்டே இருந்தார். அவரது தகாத பழக்கவழக்கங்கள் காணாமல் போய்விட்டன.

சில ஆண்டுகள் கழிந்தன. சுவாமியை ஒரு நொடிகூட மறக்காது அவர் நினைவிலேயே திளைத்தும், தன்னுடைய அத்தனையையும் சுவாமிக்கு அர்ப்பணித்தும், சுவாமியின் நாமத்தை விடாது சொல்லியும் அவரால் தெய்வ சாட்சாத்காரத்தை அடைய முடியவில்லை. அவர் துவண்டுவிட்டார். மனம் சோர்ந்துபோனது. எதையோ அடையப் போகிறோம் என்ற பேராவலில் அவர் செய்த தவமெல்லாம் ஏமாற்றத்தில் முடிந்தது போல் உணர்ந்தார். ஏமாற்றத்தின் வலியை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

ராமனுக்கும், கிருஷ்ணனுக்கும், வியாசருக்கும், ரமணருக்கும், ராமதாசருக்கும் ஒப்பான தன் குருநாதர் அருள் இருந்தும் ஏன் தெய்வ சாட்சாத்காரத்தை அவரால் அடைய முடியவில்லை? அவர் குழப்பமடைந்தார், வேதனையுற்றார். என்ன செய்வதென்றே அவருக்கு தெரியவில்லை.

அந்தச் சூழ்நிலையில் சென்னைக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு

சுவாமியைப் பார்க்கும் முன்பு தான் வழக்கமாகத் தங்கும் உல்லாச விடுதியில் அறை எடுத்தார். அவர் மறந்திருந்த பழைய பழக்கவழக்கங்கள் ஞாபகத்துக்கு வந்தன. இறைவனைக் காணாத ஏமாற்றத்தை மறப்பதற்காக மதுபானத்துக்கு ஏற்பாடு செய்தார். மதுவைத் தொடர்ந்து, அவருக்கு முன்னரே அறிமுகமான மிகவும் பிடித்த மாதுவுக்கும் சொல்லி அனுப்பினார்.

இரவுப் பொழுது புலம்பலிலும், சல்லாபத்திலும் கழிந்தது. பொழுது விடிந்தது. திடீரென அவர் தன் நிலையைச் சற்று ஆராய்ந்தார். திடுக்கிட்டுப்போனார். எப்பேர்ப்பட்ட ஞானியை, யோகியை, குருநாதரை அடைந்த பின்பும் தன் நிலை ஏன் இப்படி ஆனது எனக் குமுறியவர் அந்தக் குமுறலில் இருந்து மீள மீண்டும் மதுபானம் அருந்தினார். அவருக்குத் தன்னைக் காணவே வெறுப்பாக இருந்தது. அந்த வெறுப்பு சிறிது நேரத்தில் பெருங்கோபமாக மாறியது. சுவாமியின் மீது கோபம் திரும்பியது. தனது நிலைக்கு சுவாமியே காரணம் என நினைத்தார். உடனே சுவாமியைக் காண வேண்டும் எனத் துடித்தார். காரில் அந்த விலைமாதுவையும் அழைத்துக் கொண்டு சுவாமியிடம் விரைந்தார்.

சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் கதவைத் தட்டினார். சுவாமி அப்போது என்னோடு பேசிக்கொண்டிருந்தார். கதவைத்திறக்கச் சென்றபோது சுவாமி என்னைத் தடுத்து, அவரே கதவைத் திறந்து அந்த நண்பரை கைத்தாங்கலாக அழைத்து வந்தார். அந்தப் பெண்ணும் வந்தாள். தொழிலதிபரை சுவாமி தன் பக்கத்தில் அமர்த்திக்கொண்டார். அந்தப் பெண்ணை ஸ்திரீகள் அமரும் பாயில் அமரச் சொன்னார்.

சுவாமி, அந்த நண்பரின் கையைத் தன் கரங்களில் பிடித்துக் கொண்டும் வருடிக்கொண்டுமிருந்தார். சற்றுநேரம் கழித்து அந்த நண்பரின் முதுகையும் சுவாமி லேசாகத் தட்டிக்கொடுத்தார். சுவாமியின் ஸ்பரிசத்தால் தொழிலதிபரின் உடல் சிலிர்த்துப் போனது. அவரது

மதுமயக்கம் காணாமல் போய்விட்டது. சுவாமி அவரையே கருணை பொங்கப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தப் பார்வையில் நண்பரின் கோபமும், இயலாமையும் போய்விட்டன. திடீரென அவர் விம்மி விம்மி வெடித்து அழ ஆரம்பித்தார். தேம்பி அழுத அந்த நண்பரை சுவாமி தடவிக் கொடுத்து ஆசுவாசப்படுத்தினார்.

“சுவாமி, என் நிலையைக் கண்டீர்களா?” தொழிலதிபர் விம்மினார்.

“நண்பா, கவலைப்படாதே. இத்தகைய சம்பவங்கள் பெரிய ரிஷிகள், தபஸ்வியர்கள் வாழ்விலும் ஏற்பட்டுள்ளன. தடுமாறாதே நண்பா. என் தந்தை எப்பொழுதும் உன்னோடு இருக்கிறார். நடப்பதெல்லாம் என் தந்தையின் திருவுளப்படியே நடக்கிறது. எல்லாம் மிகச்சரியாக நடக்கின்றன. எல்லாவற்றிலும் என் தந்தையைக் காண்பாயாக. கவலையைவிடு. என் தந்தையை நினை. என் தந்தை நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார்.”

சுவாமியின் வார்த்தைகளைக் கேட்ட தொழிலதிபர் மீண்டும் கதறி அழுதார். சற்று நேரத்தில் அழுகை ஓய்ந்தது. சுவாமி தன் இனிமையான குரலில் பாடினார். “யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜெயகுருராயா.” அனைவரும் சுவாமியோடு சேர்ந்து நாமம் சொன்னோம். சுமார் ஒரு மணி நேரம் நாமஜெபம் செய்தபின்பு அங்கே தெய்வீக அமைதி தவழ்ந்தது. அந்த அன்பரின் துக்கம், சுமை, ஏமாற்றம் அனைத்தும் விலகிவிட்டன. சற்று நேரத்தில் சுவாமி நண்பரையும், அப்பெண்ணையும் அனுப்பி வைத்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சில மாதங்கள் கழித்து சுவாமி அந்த நண்பரைப் பார்த்துவரச் சொன்னார். அவர் இருந்த இடம் சென்றேன். அவரைத் தொழிலதிபராகப் பார்க்க முடியவில்லை. ஞானியாகத்தான் உணரப்பட்டார். ஒரு அரசமரத்தின் கீழ் ஏகாந்தமாக அமர்ந்திருந்தார்.


நிஷ்களங்கமான அவரது தோற்றமும், எங்கோ தொலைவில் பார்க்கும் தீட்சண்யமான விழிகளும் என்னை பிரமிக்க வைத்தன.

“தெய்வ சாட்சாத்காரம், சாதாரண நிலை. குருவில் ஒன்றுபடுதல் உன்னத நிலை. என் அறியாமையினால் தெய்வத்தைக் காணத்துடித்தேன், தெய்வம் குருவாகி, குரு எல்லாமாகி நின்றபின்பு நான் ஏது? நீ ஏது? தெய்வம்தான் ஏது? எல்லாமே குருதான்.” தொழிலதிபர் அமைதியாகக் கூறினார்.

சில மாதங்களில் தொழிலதிபர் இறந்து போனார். இறந்து போனாரா, இறையாகிப் போனாரா? தொழிலதிபர் இறந்த செய்தி கேட்டவுடன் சுவாமி சொன்னார்.

“அந்த நண்பர் என் தந்தையை அடைந்தார். அவரும் என் தந்தையும் ஒன்றாகிவிட்டனர். அவர் பூஜிக்கத் தகுந்தவர்.”

# நாம தீட்சை



நடுநிசி, ஊர் உறங்கிவிட்டது. சன்னதித் தெரு வீட்டில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் தனது பாயில் துயில் கொண்டிருப்பது போல் தெரிந்தது. சுவாமியின் எதிரில் அவர் சுவாமியின் நாமத்தை வாய்விட்டுப் பாடிக்கொண்டிருந்தார். பாடும் ஓசை சுவாமியின் துயிலுக்கு இடையூறு செய்யவில்லையெனத் தோன்றியது.

"யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா."

பாடியவர் குரலில் களைப்புத் தெரிந்தது. இரவு 1 மணி இருக்கும். அவருக்குத் தூக்கம் தூக்கமாக வந்தது. கால்கள் வெகு நேரம் அமர்ந்ததில் மரத்துப் போய்விட்டது. இடுப்பிலும் வலி. சுவாமி எழுந்து, போதும் தம்பி, படுத்துக்கொள் எனச் சொல்லமாட்டாரா என்ற எதிர்பார்ப்பில் சுவாமியைப் பார்த்தவாறே அவர் நாமம் சொல்லிக் கொண்டிருந்தார்.

சுவாமி அமைதியாகத் தூங்குவது போல் தெரிந்தது.

அவர் சுவாமியிடம் வந்து சுமார் 20 நாட்கள் ஆகிவிட்டது. வாழ்வில் ஏற்பட்ட பெரும் துக்கத்தினால் துரத்தப்பட்டு விடிவுக்காக அவர் சுவாமியிடம் வந்தவர். இரண்டு நாட்களுக்கு மட்டும் அண்ணாமலையில் சுவாமியுடன் இருப்பதற்கு ஏற்பாட்டுடன் வந்தவரை சுவாமி சில நாட்கள் தங்கலாம் எனக் கூறி பல நாட்கள் தங்க வைத்து விட்டார்.

அவர் சிவகாசி நாடார் சத்திரத்தில் அறை வாடகைக்கு எடுத்திருந்தார். சில நாட்கள் தங்குவதற்கு மட்டுமே அவரிடம் பணவசதி இருந்தது. பணம் அவரிடம் சுத்தமாகக் காலியான அன்றே சுவாமி அவரிடம் கொஞ்சம் பணமளிப்பார். அவரிடம் பணமில்லை என்று எப்படி சுவாமி அறிந்து அவருக்கு பணமளித்தார் என்று அவர் ஆச்சரியப்படுவார்.

முதல் 15 நாட்கள் சுவாமி, அவரை பகலில் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை தன்னோடு வைத்திருந்தார். அச்சமயத்தில் அவர், சுவாமிக்கும் அவரைக் காண வரும் பக்தருக்கும் காபி, டீ, தயிர், மற்றும் ஆகாரம் வாங்கிவரச் சொல்வார். மேலும் திரு.கி.வா. ஜகன்னாதன் மற்றும் திரு.பெரியசாமி தூரன், டாக்டர் T.P. மீனாட்சி சுந்தரனார் போன்ற அறிஞர்கள் சுவாமி மீது பாடிய பாடல்களைப் பாடச் சொல்லியும் அவரைத் தன்னோடு பகல் முழுவதும் இருத்திக் கொண்டார்.

15 நாட்களுக்குப்பின் சுவாமி அவரை இரவில் 8 மணிக்கு வரச் சொல்வார். சிற்ச்சில சமயம் 10 மணிக்கும் வரச் சொல்வார். அவர் சுவாமி சொன்ன நேரத்திற்குச் சரியாக வந்து சன்னதித் தெரு வீட்டுக் கதவை அடைந்துவிடுவார்.

கதவை ஒரு முறை தட்டியதுமே சுவாமியே வந்து கதவைத் திறப்பார்.

கதவைத் திறந்த மறு கணமே சுவாமி "யோகி ராம்சுரத்குமார, யோகி ராம்சுரத்குமார, யோகி ராம்சுரத்குமார ஜெயகுருராயா" எனப் பாட ஆரம்பித்து விடுவார்.

உள்ளே சுவாமி அவரை அழைத்துச் சென்று அவர் அமர்வதற்கான இடத்தைக் காட்டி அவரை அமர வைத்துவிட்டு, தன் பாயின் மீது படுத்துக் கொண்டு அவரை சைகையால் நாம ஜபத்தைத் தொடர உத்திரவிடுவார். அவர் நாம ஜபத்தைத் தொடருவார்.

அன்றும், இரவு 1 மணிக்கு மேலும் நாம ஜபம் தொடர்ந்தது. அவருக்கு உடலை சற்றே கிடத்தி படுக்கமாட்டோமா என்றிருந்தது. மேலும் சற்று நேரம் கடந்தது.

திடீரென சுவாமி எழுந்தார். நாம ஜபம் செய்து கொண்டிருந்தவர் முன் அமர்ந்தார். நாம ஜபம் செய்து கொண்டிருந்தவர் ஒரு வித அதிர்ச்சியில் ஜபத்தை நிறுத்தினார். சுவாமி அவரையே உற்று நோக்கினார். அவர் சுவாமியின் திருவடிகளில் தன் பார்வையைப் பதித்தார். சுவாமி அவரிடம் தான் சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்லச் சொன்னார்.

"யோகி ராம்சுரத்குமார்" யோகி ஸ்பஸ்டமாக, நிதானமாகச் சொன்னதை அவர் திருப்பிச் சொன்னார். இவ்வாறு சுவாமி மும்முறை சொல்லியதை அவரும் மூன்று முறை சொன்னார். சுவாமி அவரின் சிரத்தில் தன் இரு கரங்களையும் சற்று நேரம் வைத்திருந்தார். பின் எழுந்தார். தன் படுக்கையில் படுத்துக் கொண்டார். அவரின் களைப்பு போய்விட்டது. வலி சென்றுவிட்டது. நாம ஜபத்தில் உள்ளும் புறமும் முற்றிலும் முழுகிவிட்டது. சிந்தனைகள் இல்லை. ஜபமும் இல்லை. சிரமங்கள் இல்லை. ஏன் அவரே காணாமல் போய்விட்டார்.

"தம்பி" சுவாமி அழைத்தார். "சத்திரத்திற்கு சென்று ஓய்வெடுத்துவிட்டு

மாலை வரலாம்."


அவர் எழுந்தார். சுவாமியை நமஸ்கரித்தார். சுவாமி அவரின் கையைப் பற்றி கதவைத் திறந்து அனுப்பி வைத்தார்.

அவர் சத்திரம் சென்றார். தன் அறையை அடைந்தார். தன் படுக்கையில் படுத்துக் கொண்டார். கண்கள் பார்த்தன. ஆனால் காட்சிகள் அங்கில்லை. காதுகள் கேட்டன. ஆனால் சப்தங்கள் அங்கில்லை. சுவாசம் நடந்தது. எனினும் பிண்டம்தான் அங்கிருந்தது. காலம், இடம், பிரமாணம் கடந்த ஒரு பிரம்மாண்டத்தில் அவர் கரைந்திருந்தார். மாலை ஆயிற்று. அவர் கால்கள் அவரை சுவாமியிடம் அழைத்துச் சென்றது.

சுவாமி அவரைத் தன்னருகில் அமர்த்திக் கொண்டார். சில பழங்களை அவருக்கு ஊட்டினார். மேலும் சில நாட்களுக்கு அவரை சுவாமி தன்னுடனேயே வைத்திருந்தார். பின் அவரை அனுப்பி வைத்தார். இன்று

அவர் உலகின் எங்கோ ஒரு மூலையில் கிடக்கின்றார்.

# சிவன்மலை அண்ணாமலை



திருவண்ணாமலையே மஹேசன் என ஞானிகளும், சாதுக்களும் போற்றி வணங்குகின்றனர். நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் இந்தப் புனித அருணை மலையிலே வெகு காலம் சஞ்சாரம் செய்தவர். மலையையே சிவனாகக் கருதி வழிபட்டு அப்புனித மலையின் மானுட ரூபமானவர். அண்ணாமலையில் அவரின் திருவடிகள் படியாத இடமேயில்லை என உறுதியாகக் கூற முடியும்.

ரமண மஹறிஷி உச்சரித்த “அருணாச்சல சிவ அருணாச்சல சிவ அருணாச்சல சிவ அருண ஜடா” எனும் மந்திரத்தை ஸ்மரணை செய்தவாறே அருணாச்சல மலையில் வெகு காலம் சஞ்சாரம் செய்தவர் நம் சுவாமி. ஆரம்ப காலத்தில் சுவாமி திருவண்ணாமலையில் எங்கு அமர்ந்திருந்தாலும் அவரின் திருமேனி அப்புனித மலையையே பார்த்திருக்கும்.

பப்பா ராமதாசரிடம் மந்திர தீட்சை பெற்றதும், “எங்கே செல்லப் போகின்றாய்?” எனக் கேட்டதும் சட்டென்று சிறிதும் தயங்காமல்

“திருவண்ணாமலை” எனக் கூறியதிலிருந்தே அவரைத் திருவண்ணாமலை எந்த அளவிற்கு கவர்ந்து இருந்தது என்பதை அறியலாம்.

இந்த அருணை மலையில் எப்பொழுதுமே கடும் தவம் இயற்றும் சாதுக்களும், ஞானிகளும் சஞ்சாரம் செய்து கொண்டே இருப்பார்கள். அந்தப் பரம்பொருளே மலை ரூபம் தரித்து, அந்த சாதுக்களையும், ஞானிகளையும் சுவீகரித்து, அவர்களைப் பாதுகாத்து அரவணைத்து, அவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது. மலையில் உள்ள நீர் ஊற்று தாகம் தீர்க்கின்றது. மலையின் தெய்வீகச் சூழல் அவர்களின் மேனியை ஆரோக்கியமாக பொலிவுறச் செய்கின்றது. பசியில்லாப் பெரு வாழ்வு தருகின்றது.

# தர்மப்பிரபு



சுவாமியின் எதிரே சன்னதித் தெரு வீட்டில் அமர்ந்திருந்தேன். காலையில் நான் வந்ததிலிருந்தே சுவாமி.., சுவாமி ராமதீர்த்தரின் உபதேசங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். என்னை அச்சமயம், சுவாமி ராமதீர்த்தரின் "In Woods of God Realization" என்ற நூலைப் படிக்கச்சொல்லியிருந்தார். அதில் சிறுசிறு கதைகள் மூலம், சுவாமி ராமதீர்த்தர் அகவாழ்வின் ரகசியத்தையும், சத்தியத்தின் மேன்மையையும், ஆண்டவனின் தரிசனத்தையும் அற்புதமாக எளியவருக்கும் புரியும்படி சொல்லியிருப்பார்.

"பார்த்தசாரதி, ராமதீர்த்தரின் சிறுகதைகளில் ஏதேனும் ஒன்றைச் சொல்." நானும் ஒரு கதையைச் சொல்ல, பின் சுவாமி மற்றொன்று கேட்க, இவ்விதமாக நான் பல கதைகளைக் கூறினேன். காலை மணி ஒன்பதிருக்கும். சுவாமி திடீரென எழுந்து நின்றார்.

"இந்தப் பிச்சைக்காரனுக்கு கோவிலில் ஒரு வேலை இருக்கின்றது. வா, கோவிலுக்குப் போகலாம்."

சுவாமி அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்குப் புறப்பட்டார். கதவுகளை கவனமாகப் பூட்டிவிட்டு என் கையைப் பற்றிக்கொண்டு கோயிலை நோக்கி நடந்தார்.

கோவிலின் ராஜகோபுரத்தின் கீழே எண்ணற்ற சாதுக்களும், பிச்சைக் காரர்களும் அமர்ந்திருந்தனர். சுவாமியைக் கண்டதும் அவர்களில் பலர் நமஸ்கரித்தனர். சுவாமியும் அவர்களைக் கைகூப்பி வணங்கினார். பின்பு ஒரு சாதுவின் அருகில் சென்றார்.

“இந்தப் பிச்சைக்காரன் இங்கே உட்காரலாமா?”

அந்தச் சாது சற்றே இடமளித்தார், சுவாமி அங்கே அமர்ந்து கொண்டார், என்னை அருகே உட்கார வைத்தார். நான் பேந்த பேந்த விழித்துக்கொண்டு சுவாமியின் அருகில் அமர்ந்திருந்தேன். எனது அருகில் ஒரு பிச்சைக்காரர் உட்கார்ந்திருந்தார்.

“அருணாச்சலா, அருணாச்சலா தர்மம் செய்யப்பா” அங்கிருந்த அநேகர் குரல் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

சிலர் மௌனமாகத் தட்டைத் தட்டிக் காண்பித்தனர். சுவாமி எதுவுமே செய்யாது மௌனமாக கோயில் சுவரில் சாய்ந்து எங்கோ தூரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் பார்வை எங்கோ தூரத்தில் எவரையோ பார்ப்பது போன்று இருந்தது. பக்தர்களின் கூட்டம் வந்தவண்ணம் இருந்தது. அவர்களில் சிலர் சில்லறைக் காசுகளை அங்கிருந்த பிச்சைக்காரர்களுக்கும், சாதுக்களுக்கும் கொடுத்துக்கொண்டு சென்றனர். பலர் என்னை வினோதமாகப் பார்த்தபடி சென்றனர். நான் முதலில் வெகுவாய் பயந்தேன். ‘என்னை சுவாமி இங்கே உட்கார வைத்துவிட்டாரே’ என ஆதங்கப்பட்டேன். என் உடல் சிறிது நடுங்க ஆரம்பித்தது. கோபம் கோபமாய் வந்தது. சுவாமி தனது கரத்தால்,

எனது கரத்தை அழுத்திப் பிடித்துக்கொண்டார். மனதில் பயம் சற்று குறைந்தது. கோபமும் போய்விட்டது.

“அருணாச்சலா, அண்ணாமலை தர்மம் போடப்பா” குரல்கள் சத்தமாக கேட்க ஆரம்பித்தன.

சற்று நேரத்தில் எனக்கும் சிறிது உற்சாகம் பிறந்தது. நானும் வாய்விட்டுப் பிச்சைகேட்கலாமா என மனதில் எண்ணினேன். சுவாமி என் முதுகைத் தட்டிக் கொடுத்து சிரித்தார். நான் பிச்சை கேட்கவில்லை. சுவாமி எதுவும் சொல்வாரோ? சுவாமி பிச்சை கேட்டால், நானும் பிச்சை கேட்கலாம் என்றிருந்தேன். சுவாமி பிச்சை கேட்கவில்லை, நானும் கேட்கவில்லை. பின்பு நான் அங்கே அமர்ந்திருந்த ஒவ்வொருவரின் தட்டையும் ஆராய்ந்தேன். எல்லாவற்றிலும் கொஞ்சம் காசுகள் இருந்தன. சுவாமியின் சிரட்டை மட்டும் நிரம்பியிருந்தது. எனக்கோ ஒருவர்கூட பிச்சை அளிக்கவில்லை. எனக்கு சுவாமியின் சிரட்டையைப் பார்த்துப் பொறாமையாக இருந்தது. முதலில் பயந்து, பின் கோபப்பட்டு, முடிவில் பிச்சை எடுக்க ஆசைப்பட்ட என்னைப் பார்க்க எனக்கே வியப்பாயிருந்தது.

சுவாமி எழுந்தார் “பார்த்தசாரதி, இதை இங்குள்ள அனைவருக்கும் பகிர்ந்தளிப்பாய்.”

காசுகள் நிறைந்திருந்த சிரட்டையை என்னிடம் கொடுத்தார். காசுகளை நான் பகிர்ந்து கொடுத்தபின் என் கையைப் பிடித்துக்கொண்டு மீண்டும் சன்னதித் தெரு வீட்டுக்கே செல்லலானார் அந்தத் தர்மப்பிரபு.

# அகங்காரச் சாது



ஒருநாள் சன்னதித் தெரு வீட்டின் வாசலிலிருந்து சுவாமியின் உதவியாளன், கூடத்தில் அமர்ந்திருந்த சுவாமியிடம் வந்தான். காவி அணிந்த ஒரு சாது வந்திருப்பதை அறிவித்தான், சுவாமி அவனிடம் அந்தச் சாதுவை உள்ளே அழைத்துவரச் சொன்னார். சுவாமியின் உதவியாளன் சாதுவை அழைத்து வந்து கூடத்தில் விட்டுவிட்டு மீண்டும் வாசலுக்குச் சென்றான்.

அந்த நாமதாரி சாது சுவாமி முன் நின்றார். நெற்றியில் பெரிய திருநாமம், கைகளிலும் மார்பிலும் திருச்சாந்து. ஒரு பெரிய மூடையும், நீளமான கைத்தடியும் வைத்திருந்தார். அவர் தன்னை வெகு கவனமாக அலங்கரித்துக் கொண்டிருந்தார். அவர் முகம் ஒருவித கர்வத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. சுவாமி அவருக்குக் கைகூப்பி நமஸ்காரம் சொன்னார். மிகுந்த பணிவுடன் அந்தச் சாதுவை தன் இருக்கைக்கு முன்னால் இருந்த பாயில் அமரச்சொன்னார். சாதுவும்

பாயில் கம்பீரமாக அமர்ந்தார்.

“மஹாராஜ், நான் ரிஷிகேசத்திலிருந்து வருகிறேன். இங்கே தரிசனம் முடிந்துவிட்டது. அடுத்து நான் ராமேஸ்வரம் செல்ல வேண்டும்.”

சுத்தமான ஹிந்தி மொழியில் சாது சொன்னார். சுவாமி மிகவும் பவ்யமாக கைகூப்பியவாறே தான் என்ன செய்ய வேண்டுமென வினவினார்.

“நான் சொன்னது காதில் விழவில்லையா? நான் ராமேஸ்வரம் போக வேண்டும். வேண்டிய ஏற்பாட்டை உடனே செய்யுங்கள்.”

சாது அதிகாரத் தோரணையில் மமதையோடு சுவாமியிடம் சொன்னார். சுவாமி தான் அமர்ந்திருந்த பாயின் அடியில் இருந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச் சாதுவிடம் கொடுத்தார்.

சுவாமி கொடுத்தது ஒரு ரூபாய் நாணயம் எனத் தெரிந்ததும் சாதுவுக்குக் கோபம் கொப்பளித்தது.

“நான் உங்களிடம் இராமேஸ்வரம் போகவேண்டுமெனச் சொன்னேன். இந்த ஒரு ரூபாயை வைத்து நான் இராமேஸ்வரம் வரை செல்லமுடியாது என உங்களுக்குத் தெரியாதா?”

“சுவாமி, இந்த நாணயத்தை வைத்துக் கொண்டு தாங்கள் விரும்பிய இடத்துக்குப் புறப்படுங்கள். என் தந்தை உங்களை பத்திரமாக ராமேஸ்வரம் கொண்டு சேர்த்துவிடுவார். என் தந்தையை நம்புங்கள்.”

சுவாமி மீண்டும் கைகூப்பியபடி மிகப் பவ்யமாகச் சொன்னார்.

“என்னை அவமானப்படுத்திவிட்டீர்கள், தெய்வத்தின் சாபத்திலிருந்து தப்ப வேண்டுமானால், எனக்குப் போதிய பணத்தைக் கொடுத்துவிடுங்கள்.”

சாது கத்தினார்.

“சுவாமி, இந்தப் பிச்சைக்காரனால் இவ்வளவுதான் கொடுக்க முடியும். ராமநாமத்தை விடாது சொல்லுங்கள். என் தந்தையை நம்புங்கள். நீங்கள் விரும்பிய இடத்துக்கு என் தந்தை உங்களைப் பத்திரமாக கொண்டு சேர்த்திடுவார்.”

சுவாமி மீண்டும் அமைதியாகச் சொன்னார்.

“என்னை மீண்டும் அவமானப்படுத்துகிறீர்கள். எனக்குப் போதிய பணம் கொடுங்கள். அல்லது இந்த ஒரு ரூபாய் நாணயத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.”

சாது கோபத்தில் கொந்தளித்தார்.

“சுவாமி, இந்தப் பிச்சைக்காரன் ஒரு சாதாரண பிச்சைக்காரன்தான். தாங்கள் இந்த நாணயத்தை இவனுக்குத் திருப்பி அளித்தால், இந்தப் பிச்சைக்காரன் அதை சந்தோஷமாகப் பெற்றுக் கொள்வான்.”

சுவாமி மிகுந்த பணிவோடு கூறினார்.

இதைக்கேட்ட அந்த நாமதாரி சாது கடுங்கோபத்துடன் அங்கிருந்து விரைந்து சென்றுவிட்டார். அந்த நாணயத்தை அவர் திருப்பிக் கொடுக்கவில்லை.

“என் தந்தையின் விருப்பம்” சுவாமி அமைதியாகச் சொன்னார். இந்த லீலையை நேரில் பார்த்த எனக்கு சுவாமியின் தெய்வீகம் புரிந்தது போலிருந்தது.

# சாக்குச் சாமி



இது நடந்தது எண்பதுகளின் மத்தியில் இருக்கும். அப்போது நான் சுவாமியுடன் இரவு பகலாக சுமார் ஒரு வார காலம் தங்கியிருந்தேன். பகலில் வரும் விதவிதமான பக்தர்கள், அவர்களின் பிரார்த்தனைகள், வெளிப்படுத்தும் குறைகள், மற்றும் பஜனைப் பாடல்கள் சுவாமியின் ஆறுதல் சொற்கள், இவைகள் யாவும் ஞானத்தின் திறவுகோல்கள். நேரம் போவதே தெரியாமல் ஆனந்தமாயிருந்தது.

இரவில் நான் மட்டும் சுவாமியின் முன் நாம ஜெபம் செய்துகொண்டிருப்பேன். சுவாமிக்கு வரும் ஆகாரம் எனக்கும் கிடைக்கும். உடலும் மனமும் நிறைவாக இருக்கும்.

நான் ஊரில் இருந்து வந்த முதல் நாள் மாலைநேரம் நான் மட்டும் சுவாமியுடன் தனியாக இருந்தேன். சுவாமி திடீரென மணி என்ன என்று கேட்டார். “ஐந்து” என்று சொன்னவுடன் சுவாமி வேகமாக எழுந்து என்னையும் அழைத்துக் கொண்டு வாசலுக்கு விரைந்தார். அங்கு இரும்புக் கதவின் அருகில் நின்றுகொண்டார். சில நொடிகளில் அங்கு வித்தியாசமான சாது ஒருவர் வந்தார். அவர் தனது மேனியைச் சாக்கினால் சுற்றிக் கட்டியிருந்தார். பெரிய ஜாடாமுடியையும்

மெலிதான சாக்கினால் இழுத்துக் கட்டியிருந்தார். அவர் நடக்கும் பொழுது ஜடாமுடியின் பாரத்தினால் அது பக்கவாட்டில் மாறிமாறி அசைந்து கொண்டேயிருந்தது. நெடிய மெலிந்த உருவம். முகம் தெய்வீகமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. அவரைப் பின் தொடர்ந்து சில தெரு நாய்கள் விடாது குரைத்துக் கொண்டே இருந்தன. அவற்றைச் சாது சட்டை செய்யவில்லை.

சுவாமியின் வீட்டெதிரே நின்றார். சுவாமி உடனடியாக கதவைத்திறந்து சாதுவை உள்ளே அழைத்தார். அவர் சில நாட்களாகவே சுவாமியைப் பார்க்க தினம் மாலை ஐந்து மணிக்கு வருவதை வழக்கமாக வைத்திருந்தார். சுவாமியும் சாதுவுக்கு அருள்பாலிக்க தன்னோடு யார் இருந்தாலும் அவர்களை அனுப்பிவிட்டு சாதுவை மட்டும் தன்னோடு இருத்திகொள்வார். அந்தச் சாதுவின் விசித்திரமான வழிபாட்டை ஏற்று அனுக்கிரஹம் செய்வார்.

சாது உள்ளே வந்ததும் சுவாமி இரும்புக் கதவைச் சாத்திவிட்டு, சாதுவும் நானும் வீட்டினுள் நுழைந்தவுடன் பெரிய மரக்கதவையும் சாத்திவிட்டார். வாயிலில் இருந்த உதவியாளரிடம் எவர் வந்தாலும் தான் வேலையாய் இருப்பதாகச் சொல்லச் சொன்னார்.

சாதுவைப் பெண்கள் அமரும் பாயின்மேல் அமரச் சொல்லி சுவாமி அவரெதிரே அமர்ந்து கொண்டார். நான் எனது இடத்தில் அமர்ந்துகொண்டேன். அந்தச்சாது மெதுவாகச் சிரித்தார். அவர் சிரிப்பில் பேரானந்தம் தெரிந்தது. சுவாமியிடம் பார்வையால் எதற்கோ உத்தரவு கேட்டார். சுவாமி சரியெனத் தலையசைக்க, சாக்குச் சாமி தான் வைத்திருந்த சாக்குப் பையில் இருந்து ஒரு உடைந்த முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டையும், ஒரு ஊதுபத்தியையும் எடுத்தார். தன்னிடமிருந்த தீப்பெட்டியினால் ஊதுபத்தியை ஏற்றினார். பின் அந்த ஊதுபத்தியை ஒரு கையிலும் மறு கையில் கண்ணாடித் துண்டையும்


எடுத்துக்கொண்டார்.

கனன்று கொண்டிருக்கும் ஊதுபத்தியின் பிம்பம் கண்ணாடியில் தெரியும்படி செய்துகொண்டு அதே கோணத்தில் சுவாமியின் ரூபத்துக்கு முன்னால் இடமிருந்து வலமாக கரங்களால் தெய்வத்துக்கு தீபாராதனை செய்வதுபோல் சுற்றினார்.

சுவாமியும் சாதுவின் கைகளுக்கு எதிராக தன் விரித்த கரங்களை வைத்துக்கொண்டு சுற்றினார். இடமிருந்து வலமாகச் சில சுற்றுகள், பின் வலமிருந்து இடமாகச் சில சுற்றுகள். இவ்விதம் அந்த ஊதுபத்தி முழுவதும் அணையும் வரை சாதுவும், சுவாமியும் செய்துகொண்டே இருந்தார்கள். ஊதுபத்தி அணைந்தவுடன் சாது கண்ணாடித் துண்டையும், தீப்பெட்டியையும் தன் பையினுள் வைத்துவிட்டு எழுந்துகொண்டார். சுவாமியும் எழுந்துகொள்ள இருவரும் சிரித்துக்கொண்டார்கள். இது எல்லாம் சுமார் ஒரு மணி நேரம் நடந்தது. சாது பின்னர் சென்றுவிட்டார். அங்கு என்ன நடந்தது என்று எனக்கு எதுவுமே புரியவில்லை.

நான் இருந்த கடைசி நாள் மாலை அந்தச் சாது தனது வழக்கமான விசித்திரமான தீபாரதனையை யோகிக்கு காட்டிவிட்டு போகும்பொழுது தான் மறு நாள் திருவண்ணாமலையை விட்டு செல்வதாகச் சொன்னார். சுவாமி அவரிடம் இன்னும் சில நாட்கள் திருவண்ணாமலை மலையில் தங்கியிருக்கலாம் எனச் சொல்ல, அந்தச் சாது சரியெனச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். அதன்பின்பு அந்தச் சாதுவை நான் பார்க்கவே இல்லை.

# அன்பு



அவர் ஒரு காந்தியவாதி. விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றவர். வயது சுமார் தொண்ணூறு இருக்கும். தனது இளம் வயது முதல் மகாத்மா காந்தியின் வாழ்க்கையாலும் போதனைகளாலும் கவரப்பட்டவர். சுத்தமான வெள்ளை கதராடையும், காந்திக் குல்லாயும் எப்போதும் அணிந்திருப்பார். இந்தியா சுதந்திரமடைந்த பின்பு அவரின் சொந்த ஊரான அடி அண்ணாமலை கிராமத்தில் டீக்கடை வைத்து வாழ்க்கை நடத்தி வந்தார். நாட்டின் சுதந்திர வேட்கையில் தனது சுய வாழ்க்கைச் சிந்தனையே இல்லாமல் திருமணமும் செய்யாமல் பிரம்மச்சாரியாக வாழ்ந்து வந்தவர், அந்தக் காந்தியவாதி.

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில், அடிஅண்ணாமலை ஊரில் அவர் டீக்கடை நடத்தியதால், நிறைய சாதுக்கள் தொடர்பு அவருக்குக் கிடைத்தது.

சுவாமி உலகுக்கு அறிமுகம் ஆகும் முன்பே, இந்தக் காந்தியவாதி

சுவாமியைப் பற்றி அறிந்தவர். சுவாமி எப்பொழுது தன் கடைக்கு வந்தாலும் டீ, வடை கொடுத்து உபசரிப்பார். சுவாமியிடம் ஆன்மிக விசாரம் செய்வார். சுவாமியும் தினசரி அவரின் கடைக்கு விஜயம் செய்து வந்தார். நாளடைவில் முதுமையின் காரணமாக அந்தக் காந்தியவாதி டீக்கடை தொழில் செய்ய முடியாமல் அங்கு சுற்று வட்டாரங்களில் இருந்த சாதுக்களோடு பொழுதைக் கழிக்கலானார். சாதுக்கள் எவரும் பட்டினியாக இருப்பதை அவர் அனுமதிக்க மாட்டார். அவரகளுக்கு உணவூட்டி மகிழ்ந்தார்.

சுவாமியைத் தினசரி அணுகிய அக்காந்தியவாதி, உலகத்தார் சுவாமியைச் சந்திக்க தினசரி பெரியளவில் வர ஆரம்பித்தவுடன், சுவாமியைச் சிரமப்படுத்த வேண்டாமெனத் தூர இருந்து வந்தார், எனினும் என்றேனும் அவர் சுவாமியைச் சந்திக்க வரும்போது, சுவாமி எவ்வளவு வேலையாக இருந்தாலும், அதை அப்படியே விட்டுவிட்டு உடனே எழுந்து வந்து அந்தக் காந்தியவாதியை உபசரித்து, கையைப் பிடித்து, சன்னதித் தெரு வீட்டினுள் அழைத்து வந்து தன்னருகில் அமர்த்திக்கொள்வார். அவரோடு வெகுநேரம் அளவளாவி மகிழ்வார்.

“இந்நாட்களிலும் இவரைப்போல் உண்மையான காந்தியவாதியாக யாராலும் இருக்க முடியுமா? என் தந்தை இந்த காந்தியவாதியுடன் என்றென்றும் இருக்கிறார்” என்று அனைவரிடமும் கூறுவார்.

ஒருநாள் காலை பத்துமணி இருக்கும். சுவாமி என்னைப் பாடச் சொல்லி கேட்டுக்கொண்டிருந்தார், சுவாமியின் உதவியாளன் உள்ளே வந்து,

“சுவாமி அடியண்ணாமலை காந்தி சுவாமி வந்திருக்கிறார். அவரோடு இன்னொருவரும் வந்திருக்கிறார் சுவாமி” எனக் கூறினார்.

சுவாமி உடனே எழுந்து வெளியில் சென்று காந்தியவாதியையும், அவருடன் வந்த மற்றொருவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார். அந்தக் காந்தியவாதியுடன் வந்தவர் ஒரு வித்தியாசமான

சாது எந்தச் சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர் என அறிந்து கொள்ள முடியவில்லை. அரை நிஜார், மேலே ஒரு அழுக்கடைந்த சட்டை, புழுதிபடர்ந்த கேசம், உணர்வுகள் அற்ற முகம், வெறுமையான விழிகள் என அந்தச் சாது காந்தியவாதியுடன் நின்று கொண்டிருந்தார். காந்தியவாதியை சுவாமி தன்னெதிரே உட்காரச் சொன்னார். அவர் அமர்ந்த பின்பு, சுவாமி அந்தச் சாதுவின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று தன் பக்கத்தில் தான் அமரும் பாயில் அமர்த்திக்கொண்டார். அந்தச் சாதுவின் கையை அன்போடு பிடித்து வருடிக்கொண்டிருந்தார். சுவாமியின் முகத்தில் அன்பு பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அந்தச் சாதுவின் முகம் சிறிது மலர்ச்சியைக் காட்டியது.

“சுவாமி கடந்த மூன்று தினங்களாக இந்தச் சாது மலையில் சஞ்சரிப்பதைப் பார்த்தேன். இவருக்கு ஆகாரம் அளிக்க தொடர்ந்து முயற்ச்சித்தேன். ஆனால் இவர் என்னை அலட்சியம் செய்து, பேசாமல் சென்றுவிடுவார், இருப்பினும், மீண்டும் மீண்டும் முயற்சித்தேன், அவர் உணவு உட்கொள்வதாகத் தெரியவில்லை. இவர் நிலை கண்டு பயந்து விட்டேன். எனவே இவரை விடாப்பிடியாக உங்களிடம் அழைத்து வந்தேன் சுவாமி. தாங்கள்தான் அருள்பாலிக்க வேண்டும் சுவாமி.”

காந்தியவாதி தான் சாதுவை சுவாமியிடம் அழைத்து வந்த முகாந்திரத்தை கூறினார்.

சுவாமி எதுவும் பேசவில்லை, அந்தச் சாதுவின் கரத்தைத் தன் கரங்களில் எடுத்து மெதுவாக பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார். அவ்வப்போது அந்தச் சாதுவின் கரத்தை எடுத்து கண்களில் ஒற்றிக்கொள்வார். சாது கொஞ்சமாகச் சிரித்தார். சுவாமியின் ஆனந்தம் சிரிப்பாக வெடித்தது. சாதுவின் சிரத்தையும், முதுகையும் சுவாமி தடவிக்கொடுத்து மகிழ்ந்தார். சுவாமியின் மகிழ்ச்சி அந்தச் சாதுவையும் தொற்றிக்கொண்டது. அவரும் வாய்விட்டுச் சிரித்தார். பேரானந்தம் அதுதானோ?

“சுவாமி, வாழைப்பழம் சாப்பிடலாமா?” சுவாமி கேட்டார். சாது சரியெனத் தலையாட்டினார்.

“பார்த்தசாரதி அப்பழங்களை எடு.” யாரோ பக்தர் சுவாமிக்கு அளித்த ஒரு சீப் வாழைப்பழத்தை சுவாமியிடம் கொடுத்தேன்.

சுவாமி அவற்றை வாங்கித் தன்னருகில் வைத்துக்கொண்டு ஒரு பழத்தை எடுத்துத் தோலுரித்தார். பழத்தைப் பிட்டுத் துண்டம் துண்டமாக சாதுவிடம் கொடுக்க, சாதுவும் அதை ருசித்துப் புசிக்கலானார். ஒவ்வொரு பழமாக சுவாமி உரித்துக் கொடுக்கக் கொடுக்க, அந்தச் சாது சுமார் பத்து பழங்களுக்கும் மேல் சாப்பிட்டார்.

காந்தியவாதிக்கு மகா கோபம்.

“நான் மூன்று நாட்களாக உன் பின்னாலேயே வந்து சாப்பிடு சாமி, சாப்பிடு சாமி என்று கெஞ்சியும் முகத்தைத் திருப்பிக்கொண்ட நீ, இப்போ எப்படி இந்தச் சாமியிடம் வாங்கிச் சாப்பிடுகிறாய்?” காந்தியவாதி கத்தினார்.

“அன்பு”

அந்தச் சாது மந்தகாசச் சிரிப்புடன் கூறினார். சுவாமி அதைக் கேட்டு மகிழ்வலை பொங்க ஓங்காரமாக விடாது சிரித்தார். அந்தச் சாதுவும் வாய்விட்டுச் சிரித்தார், அந்த இடமே ஆனந்த சொர்க்கமாக இருந்தது. முடிவில் அந்த காந்தியவாதியும் அச்சிரிப்பில் கலந்துகொண்டார்.

“சுவாமி சிறிது காலம் மலையில் இருக்கலாம்” சுவாமி, சாதுவிடம் சொன்னார்.

சாதுவும் சரியெனத் தலையை ஆட்டினார். சிறிது நேரத்தில் காந்தியவாதியும், சாதுவும், சுவாமியிடம் விடைபெற்றுச் சென்றனர்.

# சடோபாயா



சடோபாயா அமெரிக்காவில் வாழ்ந்த புத்தமதத் துறவி. பர்மாவில் பிறந்து, அமெரிக்காவில் தன் மடத்தை ஸ்தாபித்து அங்கேயே வாழ்ந்து வந்தார். புத்தரின் போதனைகளையும் பல்வேறு தியான முறைகளையும் மக்களுக்கு அவர் கற்பித்து வந்தார். அவரது பக்தர்கள் உலகெங்கும் பரவி இருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்தன் பக்தர்களோடு இந்தியாவுக்கு விஜயம் செய்வார். இங்குள்ள புத்த ஸ்தலங்களுக்கும் மற்ற புனிதத் தலங்களுக்கும் யாத்திரை சென்று பின் நாடு திரும்புவார்.

அவருடைய பக்தர்கள் பாண்டிச்சேரியிலும் வாழ்ந்து வந்தனர். சுவாமியின் பக்தர் ஞானகிரி கணேசன் அச்சமயம் பாண்டிச்சேரியில் வசித்துவந்தார். ஞானகிரி கணேசனின் தாயார், சகோதரிகள், சகோதரர், குழந்தைகள் அனைவரும் சுவாமியின் பக்தர்கள். சடோபாயாவின் பக்தர் ஒருவர் ஞானகிரி கணேசனுக்குப் பரிச்சயமானார். அவர் ஒரு மருத்துவர். அவரும், அவரது சகோதரிகள் மற்றும் தாயார் ஆகியோர் சடோபாயாவின் தீவிர பக்தர்கள். ஞானகிரி கணேசன் மூலம் சுவாமியைப்

பற்றித் தெரிந்து கொண்டு, சுவாமியைத் தரிசனம் செய்து, சுவாமியின் அன்பையும் சம்பாதித்துக் கொண்ட பெரும்பேறு பெற்ற குடும்பம் அது. அவர்கள் சுவாமியைக் காண வரும்போதெல்லாம் சுவாமி அவர்களைத் தன் கருணையால் ஆட்கொண்டு ஆன்மீக சுகத்தில் நிலைபெறச் செய்வார். பாண்டிச்சேரி, திருவண்ணாமலையிலிருந்து மிகவும் சமீபத்தில் இருப்பதால் அவர்கள் அடிக்கடி ஞானகிரி கணேசனோடு திருவண்ணாமலை வந்து சுவாமியைத் தரிசித்து இன்புற முடிந்தது.

சுவாமியிடம் அவர்கள் சடோபாயா பற்றிக் கூறியிருந்தார்கள். அதே சமயம் அவர்கள் தங்கள் குருவான சடோபாயாவிடமும் சுவாமியைப் பற்றிக் கூறியிருந்தார்கள். அந்த ஆண்டு, சடோபாயா இந்தியா வந்து பாண்டிச்சேரியில் சில நாட்கள் தங்கியிருந்தார். தன் பக்தரிடம் சுவாமியைச் சந்திக்க சடோபாயா விருப்பம் தெரிவித்தார். ஞானகிரி கணேசனிடம் சடோபாயாவின் சீடர், குருவின் விருப்பத்தை கூறியவுடன், ஞானகிரி கணேசன் மறு நாளே அவர்கள் அனைவரையும் திருவண்ணாமலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார். சுவாமிக்கும் சடோபாயா வருவதைத் தந்தி மூலம் தெரிவித்தார்.

சுவாமிக்கு தந்தி வந்த சமயத்தில் நாங்கள் நண்பர்கள் மூவரும் எங்களின் குடும்பத்தாரோடு சன்னதித் தெரு வீட்டில் தங்கியிருந்தோம். சுவாமி தந்தியை என்னிடம் கொடுத்தார். படிக்கச் சொன்னார். நான் படித்து முடித்ததும், சுவாமி மிகவும் மகிழ்வடைந்து சடோபாயாவைப் பற்றிக் கூறலானார்.

“உனக்குத் தெரியுமா? சடோபாயா மிகவும் பிரசித்தி பெற்ற புத்தமதத் துறவி. அவருக்கு உலகெங்கும் பக்தர்கள் இருக்கிறார்கள். அவர் இந்தப் பிச்சைக் காரனைக் காண வருகின்றார். அவரைத் தக்கபடி உபசரிக்க வேண்டும்.”

சுவாமி வீட்டின் கூடத்தில் அங்குமிங்கும் நடைபயின்றார். வீட்டின் கூடத்தைப் பார்வையிட்டார்.

"இந்த இடம் அழுக்கடைந்து இருக்கிறது. இதைச்சுத்தம் செய்து, புதிய இருக்கைகளைப் போட வேண்டும்." சுவாமி தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

சுவாமி, பெருமாள் சடையனை வரவழைத்தார். அவரிடம் எந்தவிதமான விரிப்பை அங்கே போடலாம் என ஆலோசித்தார். முடிவில் பெரிய கோணிச் சாக்கு விரிப்பை வாங்கிவரச்சொன்னார். பெருமாளும் புதிய கோணி சாக்கை வாங்கிவந்து, பழைய பாய்கள் மீதும், பழைய கோணிசாக்குப்பை மீதும் விரித்தார்.

"சடோபாயா மிகவும் வயதானவர். அவரால் கீழே உட்கார முடியாது. எனவே, அந்தப் பிரம்பு நாற்காலியை இங்கே எதிரில் போடலாம்."

பெருமாள், மூலையில் இருந்த பிரம்பு நாற்காலியை எடுத்து சுவாமி அமரும் இடத்துக்கு எதிரே வைத்தார்.

சுவாமிக்கு இன்னும் திருப்தி ஏற்படவில்லை.

"பார்த்தசாரதி, சடோபாயாவை வரவேற்கும் விதமாக ஒரு பாட்டு எழுதிப் பாடுகிறாயா?"

நான் பதில் சொல்லவில்லை. சடோபாயா யார் என்றே எனக்குத் தெரியாது. நான் எவ்விதம் பாடல் எழுத? திகைத்துக் குழம்பிப்போய் உட்கார்ந்திருந்தேன். சற்று நேரம் கழிந்தது.

"இல்லை பார்த்தசாரதி, என் தந்தை நீ இந்தப் பிச்சைக்காரனைப் பற்றி மட்டும்தான் பாடல் எழுதவேண்டும் என்று கூறுகிறார். எனவே, நீ சடோபாயா மீது பாடல் எழுத வேண்டாம்." நான் நிம்மதிப்

பெருமூச்சுவிட்டேன்.

மறுநாள் காலை 10 மணிக்கு சடோபாயாவையும், அவரது பக்தர்கள் இருவரையும் ஞானகிரி கணேசன் அழைத்து வந்தார். சுவாமி வாசலுக்கே சென்று சடோபாயாவின் கையைப் பிடித்து அழைத்து வந்தார். அவரைக் கூடத்தில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர வைத்த சுவாமி, கீழே எதிரில் இருந்த பாயில் அமர்ந்து கொண்டார்.

துறவி, சுவாமியையே பார்த்துக் கொண்டிருந்தார். சுவாமி நாணத்தோடு சிரித்தார். அமைதியாக நேரம் கடந்தது. சுவாமி தான் புகைபிடிக்கலாமா என்று கேட்க, சடோபாயா தன் சீடர் மூலம் சுவாமி தாராளமாகப் புகை பிடிக்கலாம் எனக் கூறினார். சடோபாயாவுக்கு ஆங்கிலம் தெரியாததனால் அவரது சீடர் மொழிபெயர்ப்பு செய்தார்.

துறவியும் சுவாமியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். சுவாமி அடுத்தடுத்துப் புகைப்பிடித்த வண்ணம் இருந்தார். துறவியின் சீடர் சுவாமியையும் துறவியையும் ஒருசேரப் பணிந்து, இவ்வுலகின் இரு ஆன்மீக ஜாம்பவான்களை ஒருங்கே காண நாங்கள் கொடுத்து வைத்துள்ளோம் எனக் கூறினார். கருணை பொங்க சுவாமியும் துறவியும் சிரித்தனர்.

"நீங்கள் உங்கள் சீடர்களுக்கு எந்தவிதமான தியானப்பயிற்சி அளிக்கிறீர்கள்?" துறவி சுவாமியிடம் கேட்டார்.

"தியானத்தைப் பற்றி இந்தப் பிச்சைக்காரனுக்கு எதுவும் தெரியாது. இங்கே நண்பர்கள் வருவார்கள், இந்தப் பிச்சைக்காரனுக்கு உணவளிப்பார்கள், ஒன்றாக நாங்கள் உணவருந்துவோம். புகை பிடிப்போம், அவ்வளவுதான்."

சுவாமி சாவதானமாக சொன்னதைக் கேட்ட துறவி வியந்து போனார்.

“ஓ, இந்த சுவாமி ஒரு பொன்னான மனிதர் (கோல்டன் மேன்). இவரைப் போன்றவர்களைப் பார்ப்பது அரிது.”

துறவி சொன்னதைக் கேட்டு சுவாமி சிரித்தார். துறவியும் சுவாமியும் மீண்டும் ஒரு ஆழ்ந்த அமைதியை அவ்விடம் ஏற்படுத்தினார்கள். அந்தத் தெய்வீக அமைதியை அனுபவித்து அங்குள்ள அனைவரும் பரவசமடைந்தனர். சற்று நேரத்தில் இருவரும் வாய்விட்டு ஆனந்தமாகச் சிரித்தார்கள். துறவி தன் இருக்கையிலிருந்து எழுந்தார். சுவாமியும் எழுந்து அவரது கையைப் பிடித்துக் கொள்ள, இருவரும் வாசலுக்குச் சென்றார்கள். துறவி, சுவாமிக்கு வணக்கம் சொல்லி அவரிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்.

துறவியின் பக்தர்கள் துறவியோடு செல்ல ஆரம்பித்தனர். ஞானகிரி கணேசனின் கார் டிரைவர் எட்வர்ட், சுவாமியின் அன்பான பக்தர். துறவி வெளியேறும் சமயம் எட்வர்ட் சுவாமியைப் பணிய, சுவாமி அவரை அன்போடு அணைத்துக் கொண்டு எட்வர்டிடம் உரையாட ஆரம்பித்தார். கார் அருகே துறவியும், அவரது சீடர்களும் காத்திருந்தனர். கார் பூட்டியிருந்தது. சாவியோ எட்வர்டின் கையில், எட்வர்டோ சுவாமியின் அரவணைப்பில். ஞானகிரி கணேசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

வெளியே சடோபாயா காரருகே வெயிலில் காத்திருக்கிறார். ஞானகிரி கணேசனோ இன்னும் சுவாமியை நமஸ்கரித்து விடை பெறவில்லை. சுவாமியோ தன் கவனத்தையெல்லாம் கார் டிரைவர் எட்வர்டிடம் செலுத்திக் கொண்டிருந்தார். கார் சாவி எட்வர்டின் கையில் தொங்கிக்கொண்டிருந்தது. ஞானகிரி கணேசன் சாவியை எட்வர்டிடமிருந்து பிடுங்கி எடுத்துக் கொண்டு காரின் அருகே காத்திருந்த துறவியிடம் ஓடினார். அவர் துறவியிடம் சென்றவுடன், எட்வர்டை சுவாமி விடுவித்து, விடைகொடுத்து அனுப்பினார். பின்


சுவாமி உள்ளே வந்தார்.

“ஒரு நாடகம் முடிந்தது” சுவாமி தன் இடத்தில் அமர்ந்துகொண்டு ஆனந்தமாக வெடிச்சிரிப்பு சிரித்தார். பின் சிகரெட்டை எடுத்துப் புகைக்க ஆரம்பித்தார். அங்கு சற்றுநேரம் ஆழ்ந்த அமைதி.

“ஓ, அந்தத் துறவி தர்மசங்கடமான கேள்வியைக் கேட்டுவிட்டார். நல்லவேளையாக என் தந்தை இந்தப் பிச்சைக்காரனை, நிலைமையை சமாளிக்கச் செய்துவிட்டார். என் தந்தைக்கே சகலப் பெருமையும்.”

சுவாமியின் பேரானந்தச் சிரிப்பு அலையலையாய்க் கேட்டுக் கொண்டே இருந்தது.

# சுவாமியும் ஜோதிடமும்



யோகி ராம்சுரத்குமார் சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் அமர்ந்திருந்தார். சில பக்தர்கள், சுவாமியின் முன் அமர்ந்து நாமம் பாடிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் ஒரு தம்பதியினர் தங்களின் இளம் வயது மகளோடு அங்கு வந்தனர். சுவாமியைப் பணிந்தனர். சுவாமி அவர்களை அமர வைத்தார். அம்மூவரின் முகத்திலும் சோகம் படிந்திருந்தது.

“சுவாமி, இவள் எங்கள் மகள். கடந்த இரண்டு வருடங்களாக இவளுக்கு வரன் தேடிக் கொண்டிருக்கிறோம். எதுவும் படியவில்லை. பல கோவில், குளங்கள் சென்று வந்துவிட்டோம். ஆனால் இதுவரை எந்த வரனும் குதிரவில்லை சுவாமி. எனவே உங்கள் ஆசீர்வாதத்திற்காக வந்திருக்கிறோம் சுவாமி. இந்தப் பெண்ணுக்கு நல்ல வரன் அமைய அருள் புரிய வேண்டும் சுவாமி.”

தாயார் கண்ணீர் மல்க சுவாமியிடம் வேண்டிக்கொண்டார்.

அப்பெண்ணின் ஜாதகத்தையும் சுவாமியின் திருவடியில் சமர்ப்பித்தார்.

சுவாமி அப்பெண்ணின் ஜாதகத்தை வெகுநேரம் கையில் வைத்திருந்தார்.

சற்று நேரம் கழிந்தது. சுவாமி அப்பெண்ணைத் தன் அருள் நோக்கால் பார்த்தவண்ணம் இருந்தார். அந்தப் பெண்ணின் கண்களில் நீர் ததும்பியது.

சுவாமி தன் எதிரே இருந்த புஷ்பப் பொட்டலத்தைப் பிரித்தார். அதில் மல்லிகை மலர்சரம் இருந்தது. சுவாமி அப்பெண்ணை சமிக்ஞையால் அருகழைத்தார். அப்பெண் வந்தாள். மலர்சரத்தை அவளிடம் கொடுத்து கூந்தலில் சூடிக்கொள்ள சைகை செய்தார். அப்பெண், மலரை கூந்தலில் சூடிக் கொண்டாள். சுவாமியை நமஸ்கரித்தாள். சுவாமி இருகரம் தூக்கி அப்பெண்ணை ஆசீர்வதித்தார். பெண்ணை அவளிடத்தில் அமரச் சொன்னார்.

“உங்கள் மகளின் ஜாதகத்தை நல்ல ஜோதிடரிடம் காட்டலாம் அம்மா. என் தந்தை அருள்புரிவார் அம்மா. கவலை வேண்டாம், என் தந்தை பார்த்துக்கொள்வார் அம்மா.” சுவாமி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

“சுவாமி, தாங்கள் ஜாதகத்தை நம்புவீர்களா? நானும் ஜாதகம் பார்ப்பவன் சுவாமி. உங்கள் ஜாதகத்தை கணித்துச் சொல்லவா சுவாமி? எனக்கு உங்கள் பிறந்த தேதி, நேரம் இருந்தால் போதும் சுவாமி.”

அங்கிருந்த ஒரு பக்தர் சுவாமியிடம் ஆர்வத்துடன் கேட்டார். சுவாமி அவர் சொன்னதைக் கேட்டு இளநகை பூத்தார். சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது. சுவாமி புகை பிடித்தவாறு இருந்தார்.

“ஒரு முறை இதே போல் யாரோ ஜோதிடம் பார்ப்பவர், என் தந்தை

சுவாமி ராம்தாஸிடம் உங்கள் ஜாதகத்தைக் கணித்துச் சொல்கிறேன் என்று சொன்னபோது, என் தந்தை கிரகங்களை நான் பந்தாடுவேன் என்று சொன்னார். இந்த பிச்சைக்காரன் என் தந்தையின் மகனாவான்."

சுவாமி வெகுநேரம் அலையலையாய் பெருங்குரலில் சிரித்தார்.

"ஆனால் இப்போது வந்த பக்தர்களிடம் ஜாதகம் பார்க்கச் சொன்னீர்களே சுவாமி?"

ஜோதிடர் குழப்பமடைந்து கேட்டார். சுவாமி பதில் கூறவில்லை.


"ஆக உங்களுக்கு ஜாதகத்தில் நம்பிக்கை இல்லையா சுவாமி?"

ஜோதிடர் வினவினார்.

"என் தந்தை எல்லாமுமாக இருக்கிறார். எங்கும் இருக்கிறார். என் தந்தையாலேயே எல்லாக் காரியங்களும் நடக்கின்றது. என் தந்தை சகலமும் அறிவார். எக்காரியத்தை எப்படிச் செய்ய வேண்டுமென என் தந்தை நன்கு அறிவார்."

சுவாமி அங்கிருந்த ஒரு வாழைப்பழத்தை ஜோதிடரிடம் கொடுத்து அனுப்பி வைத்தார். ஜோதிடர் ஏதும் புரியாது அங்கிருந்து சென்றுவிட்டார்.

# சொல்லின் செல்வர்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு இயல்பாகவே மிகவும் அதிகம். தமிழில் மழலையாகப் பேசினாலும் தமிழ் சொற்களின் அர்த்தத்தில் சொல் விளையாட்டு அதிகம் செய்வார். அவரின் வார்த்தை ஜாலங்கள் நமக்கு ஒருவித சிலிர்ப்பான மகிழ்ச்சியை அளிக்கும்.

அன்று ஒரு அன்பர் தன் குடும்பத்தோடு வந்திருந்தார். கல்லூரியில் முதுகலைப் பட்டம் வாங்கியவர். சொற்களில் விளையாடுபவர். ஞானிகளையும், அவர்தம் உபதேசங்களை கற்றுத் தேர்ந்தவர். தர்க்கத்தில் அவர்முன் யாரும் நிற்க முடியாது. ஆயினும் அவருக்கு சுவாமியே பிரம்மம், தெய்வம் சகலமும். அன்று அவர் கையில் இரண்டு சீப் வாழைப்பழங்களைக் கொண்டுவந்து சுவாமியின் திருவடியில் சமர்ப்பித்தார்.

“சுவாமி இப்பழங்கள் வீட்டில் விளைந்தது. தாங்கள் ஏற்றருள வேண்டும்.”

அன்பர் பணிவுடன் கூறினார்.

சுவாமி பழங்களைத் தன் கரத்தில் எடுத்து வைத்துக்கொண்டு அதையே கருணையோடு பார்த்தவண்ணம் இருந்தார். சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தது.

“இப்பழங்கள் எங்கு விளைந்தது நண்பா?” சுவாமி எதார்த்தமாக வினவினார்.

“வீட்டில்தான் காய்த்தது சுவாமி.” நண்பர் அப்பாவியாகப் பதிலளித்தார்.

சுவாமி மீண்டும் வினவினார். பக்தர் ஒருவித சங்கடத்தோடு அதே பதிலைக் கூறினார்.

“வீட்டில் எங்கே நண்பா? கூடத்திலா, படுக்கையறையிலா அல்லது அடுப்படியிலா?”

சுவாமி சிரிக்காது கேட்டவுடன் அந்த முதுகலைப் பட்டதாரி பதற்றத்துடன் அசடு வழியக் கூறினார்;

“சுவாமி எங்கள் வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தில் வளர்ந்த வாழை மரத்தில் விளைந்த பழமிது சுவாமி.”

அன்பரின் முகம் வெட்கத்தில் சிவந்தது. சுவாமியின் திருமுகத்தில் மந்தகாசச் சிரிப்பு அட்டகாசமாக மலர்ந்தது.

1993, செப்டம்பர் 15ந் தேதி யோகி ராம்சுரத்குமார் ஆசிரம நிலத்தைக் கிரையப் பதிவு செய்த நாள். அன்று பக்தர்கள் பெருமளவில் சுவாமியைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அப்போது ஒரு பக்தர் சுவாமியிடம் சரித்திர நாவல்கள் எழுதும் புகழ் பெற்ற எழுத்தாளர் சுவாமியைத் தரிசிப்பதற்காக வந்திருப்பதாகக் கூறினார். சுவாமி அவரை அழைத்து வரச் சொன்னார். எழுத்தாளர் வந்தார். சுவாமியை நமஸ்கரித்தார். பின் உரிமையோடு டாம்பீகமாகப் பேசலானார்.

“சுவாமி நான் இதுவரை கபடச் சாதுக்களையும், போலி ஞானிகளையுமே அதிகமாகப் பார்த்து ஏமாந்து போனவன். இன்றுதான் நான் உண்மையான ஞானியைத் தரிசிக்கின்றேன் சுவாமி.”

சுவாமி அட்டகாசமாக ஓங்காரமாக தன் சரீரமே குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

"நண்பா, மறுபடியும் நீ ஏமாந்து போனாயே. நீ இப்போது பார்த்துக் கொண்டிருப்பதும் ஒரு கபட சூத்திரதாரிதான். இந்த போலி ஞானியைப் பார்ப்பதற்காக உன்னுடைய மதிப்புமிகுந்த நல்ல நேரத்தை வீணடித்து விட்டாய".

இவ்விதம் கூறி சுவாமி மீண்டும் குலுங்கிக் குலுங்கி சிரித்தார். எழுத்தாளர் வேர்த்து விறுவிறுத்துப் போனார்.

பிரபலப் பாடகி திருமதி. வாணி ஜெயராம் சுவாமியை தரிசிக்க வந்தார். சுவாமி அவருக்கு ஆசிமழை பொழிந்து கொண்டிருந்தார். திருமதி. வாணி ஜெயராம் அவர்கள் சுவாமியின் விருப்பத்திற்கிணங்க பற்பல பாடல்களை மெய்யுருகிப் பாடினார். சுவாமியும், பக்தர்களும் அந்த கானமழையில் இன்புற்றிருந்தனர்.

திருமதி. வாணி ஜெயராம் புறப்படும் நேரம் வந்தது. அவர் சுவாமியை நமஸ்கரித்து விடை பெற்றார். சுவாமி தன் முழு அருள் நோக்கையும் திருமதி. வாணி ஜெயராம் மீது பொழிந்து கொண்டிருந்தார். திருமதி. வாணி ஜெயராம் கண் கலங்க அங்கிருந்து புறப்பட்டார். சுவாமி திருமதி. வாணி ஜெயராமுக்கு பிரசாதம் கொடுக்கவில்லையே என்று ஞாபகம் வந்தது.

"வாணி", சுவாமி அழைத்தார்.

திருமதி வாணி சுவாமியைத் திரும்பிப் பார்த்தார்.

"வாணி, வா நீ."

சுவாமியின் சிலேடைத் தமிழ் அங்குள்ள அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

திருமதி. வாணி மகிழ்வோடு சிரித்தபடி சுவாமியிடம் திரும்பி வந்து பிரசாதம் பெற்று, மீண்டும் சுவாமியை நமஸ்கரித்துச் சென்றார்.

# யாருக்கு ஓய்வு?



“கடந்த ஆறு மாத காலமாக இந்தப் பிச்சைக்காரன் உட்கார்ந்துகொண்டும், பேசிக் கொண்டும், சாப்பிட்டுக் கொண்டும், புகைத்துக் கொண்டும் இருந்துவிட்டான். இன்று என் தந்தை இந்த பிச்சைக்காரனை ஓய்வு எடுக்கச் சொல்லி விட்டார். உனது பெட்டியை “தூரன்“ ரூமில் வைத்துவிட்டு வா பார்த்தசாரதி”.

ஊரிலிருந்து சுவாமியைக் காண வந்த என்னிடம் சுவாமி மேற்கண்டவாறு கூறிவிட்டு ‘தூரன்’ அறையின் சாவியைக் கொடுத்ததும், நான் அந்த அறையில் எனது பெட்டியை வைத்துவிட்டு வந்தேன். பின்பக்கமிருந்த மண்பானையை உள்ளே வைத்து, பின்புறக் கதவை பூட்டிவிட்டு, முன்புறம் வந்து தலைவாசல் மரக்கதவையும் பூட்டி, இறுதியாக வராந்தாவின் இரும்புக் கதவையும் பூட்டி கவனமாகச் சரிபார்த்துவிட்டு, எனது கரத்தைப் பற்றிக்கொண்டு அருணாசலேஸ்வரர் கோவில் நோக்கி நடக்கலானார்.

கோவிலின் ராஜகோபுரத்துக்கு முன் நின்று சிறிது நேரம் சுவாமி உற்று நோக்கினார். பின் உள்ளே சென்று வலதுபுறமிருந்த

ஆயிரங்கால் மண்டபத்துக்குள் பிரவேசித்தார். அச்சமயம் ஆயிரங்கால் மண்டபத்துக்குக் கதவு கிடையாது. உள்ளே சென்று, ஆள் அரவமற்ற மண்டபத்தின் இடது மூலைக்குச் சென்று அமர்ந்துகொண்டார். என்னை அவரின் இடப்பக்கத்தில் இருக்கச்செய்தார்.

“எங்கே இருந்து வருகிறாய்?”

“சிவகாசியில் இருந்து சுவாமி.”

“சிவசங்கரனைப் பார்த்தாயா?”

“ஆமாம் சுவாமி.”

“அவர் நலமாக இருக்கிறாரா?”

“நலமாக இருக்கின்றார் சுவாமி” சிறிது நேரம் மௌனம்.

“பார்த்தசாரதி, இந்தப் பிச்சைக்காரன் கடந்த ஆறு மாதகாலமாக விடாது புகைத்துக்கொண்டும், நண்பர்களோடு பேசிக்கொண்டும், சாப்பிட்டுக்கொண்டும் இருந்துவிட்டான். இன்று எனது தந்தை இந்தப் பிச்சைக்காரனை ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டார். இந்த பிச்சைக்காரன் சிறிது நேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.”

இவ்வாறு சொல்லிக்கொண்டே எனது மடியில் தலையை வைத்து கால்களை நீட்டி சுவாமி படுத்துக் கொண்டுவிட்டார். ஒருக்களித்துப் படுத்திருந்த சுவாமியிடமிருந்து சில நொடிகளில் ஒரு மெலிதான குறட்டை ஒலி வந்தது. அது தெய்வீக இசையாக என் காதில் விழுந்தது. அன்று வரை அவரது முக வதனத்தை முழுமையாகப் பார்க்க இயலாத நான், அன்று அவரையே உற்று நோக்கினேன். எவ்வளவு விசாலமான நெற்றி எப்பேர்ப்பட்ட நேர்த்தியான இமைகள், அடர்ந்த புருவங்களின் அழகு பிரமிப்பூட்டியது. எடுப்பான அழகான நாசி, கன்னங்கள் தெரியாமல் வளர்ந்திருந்த வெண்தாடியும், வாயிதழ்கள் தெரியாது மறைத்துவிட்ட வெண்மீசையும், அப்பப்பா, அழகின் உச்சம் அவர்!

மெலிதான குறட்டை மூச்சில் அவர் மீசை முடிகள் அசைவதைக் காணக் காண ஆனந்தமாயிருந்தது.

சற்று நேரத்தில் எனது கால்கள் வலிக்க ஆரம்பித்தன, சுவாமியின் சிரம் இருந்த எனது கால், பெரும் பாறாங்கல்லைச் சுமப்பது போல வலியைக் கொடுத்தது. காலை அசைப்பதற்கோ பயமாக இருந்தது. சுவாமி விழித்துவிட்டால்? வலியைப் பொறுத்துக்கொண்டேன். அவரின் நாமத்தை எனது மனமும், வாயும் சத்தமில்லாது சொல்ல ஆரம்பித்தன. சிறிது நேரத்தில் எனது உள்ளும் புறமும் "யோகி ராம்சுரத்குமார் ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா" என மௌனமாக திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருந்தது. எனது கண்கள் மூடிக்கொண்டன. எனது செவியில் சுவாமியின் நாமம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் எல்லா புலன்களும் ஒடுங்கிவிட்டன. அதோ சுவாமி மட்டும் அங்கே படுத்திருந்தார். அவர் மட்டுமே அங்கிருந்தார். என்னைக் காணவில்லை. நான் செத்துவிட்டேனா? உறங்கிவிட்டேனா? மயங்கிவிட்டேனா? தெரியவில்லை.

"பார்த்தசாரதி" எங்கிருந்தோ சுவாமி கூப்பிடுவது கேட்டது.

"சுவாமி" எனச் சொல்லி கண் விழித்தேன். அங்கே சுவாமி என் எதிரில் அமர்ந்து ஆனந்தமாக உரக்கச் சிரித்தார். என் தலையில் தன் கரத்தை வாஞ்சையோடு வைத்தார்

"மணி என்ன நண்பா?"

கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி மதியம் ஒன்று. சுமார் ஏழு மணி நேரம் கடந்துள்ளது.

"வெகுகாலத்துக்குப் பின்பு இந்தப் பிச்சைக்காரன் நன்கு ஓய்வு எடுத்துக்கொண்டான். மிக்க நன்றி நண்பா."

ஏனோ என் கண்களில் நீர் பனித்தது. ஓய்வு எடுத்தது யார்?

# வெண்தாடி வேந்தன்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களின் வெண்தாடியின் அழகை அருகில் இருந்து பார்த்து பரவசப்பட்ட எத்தனையோ நண்பர்களில் நானும் ஒருவன்.

1950லிருந்து அரும்பு விட்ட மெல்லிய கரும்தாடிக் கேசம், காலம் செல்லச் செல்லக் கடினமாகி பின் கருமையும், வெண்மையும் கலந்த வண்ணத்தில் சிறிது காலம் இருந்து பின்பு முதிர்ந்த காலத்தில் தூய வெண்மையாக மாறியது.

சுவாமியின் ஒவ்வொரு தாடி இழையும் வெள்ளிக் கம்பி போல ஜொலித்துக் கொண்டு மிளிரும். சுவாமி சில நேரங்களில் பிறருக்குக் கேட்காதிருக்கும் பொருட்டு நம் காதில் செய்தி சொல்லும்போது, அந்த வெள்ளிக் கம்பிகள் கழுத்திலும், கன்னத்திலும் உராயும்போது ஏற்படும் ஒரு வகை பயம் கலந்த சிலிர்ப்பு, அப்பப்பா! அந்த ஸ்பரிசம் தரும் வினோத வெட்கம் கலந்த ஆனந்தம், அந்தச் செய்தி வாயிலாகக்

கிடைக்கும் பேரருள், அது தரும் ஆழ்ந்த அமைதி, அற்புதமான கலவை அது.

பின்னாளில் இந்த நிகழ்ச்சியை நினைவுகூறும் போது ஏற்படும் விவேகமான பக்தி, அது காட்டும் சன்மார்க்கம் நன்றாகவே புரிபடும். சுவாமியின் ஒவ்வொரு சரீர அங்கமும் பேரருளைப் பிரவாகமாகப் பொழிந்து கொண்டே இருக்கும் அதிசயம், அற்புதமானது.

இது தவிர சுவாமியின் தலைக் கேசம் சுவாமியின் சரீரத்தின் இறுதிக் காலம் வரை வெண்மையும் இளம் கருப்பும் கலந்தே இருந்தது. சுவாமி தன் தலைப்பாகையை ஒவ்வொரு முறையும் பிரித்துக் கட்டும்போதும் எண்ணெய் படாத அந்த கருமையும் வெள்ளையும் கலந்த தலை கேசம் சுவாமியின் சிரத்தோடு நன்கு படிந்து சுவாமியின் எழிலைப் பன்மடங்கு அதிகரித்துக் காண்பிக்கும்.

சுவாமியின் கேசமும், தாடியும் 1950லிருந்து ஒழுங்குபடுத்தப்படவில்லை. 1950ல், மஹரிஷி ரமணரும், ஸ்ரீ அரவிந்தரும் மஹாசமாதி அடைந்த பின்பு சுவாமி தன் தாடி மீசையையும், தலைக்கேசத்தையும் பராமரிப்பதை அடியோடு கைவிட்டார். இம்மாதிரியான அலங்காரங்களுக்காக சுவாமி ஒரு நாளும் நேரம் ஒதுக்கியதில்லை. சரீர எண்ணங்களைத் கடந்த ஒருவித ஆன்மபோத நிலையில் சுவாமி அப்போது இருந்தார். தன் உருவத்தை கண்ணாடியில் கூட சுவாமி பார்த்ததில்லை.

1953இல் பப்பா ராம்தாஸின் உத்திரவின்படி ஒரே ஒரு முறை மட்டும் சுவாமி சிகை அலங்காரத்திற்கும், தாடியை சுத்தமாக மலிப்பதற்கும் ஒப்புக்கொண்டார். அதன்பின் மீண்டும் சுவாமி தன் கேசம் மற்றும் தாடி மீசையின் சுதந்திரத்தில் தலையிடவேயில்லை.

# பாட்டியின் பக்தி



“சுவாமி, சொல்ல சொல்ல கேட்காம உள்ளே வராங்க இந்தப் பாட்டி” சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் வாயிற் காப்போன் புலம்பியபடி ஒரு மூதாட்டியின் பின் விரைந்து வந்தான்.

“சீ போடா, அந்தப்பக்கம்” என அவனை உதறிவிட்டு அந்தப் பாட்டி உள்ளே வந்தாள்.

“சாமி, நீ ரொம்ப கெட்டுப் போயிட்ட. முன்பெல்லாம் என் குடிசைக்கு வந்து ஏதாச்சும் கொடுன்னு கேட்டு வாங்கிச்சாப்பிடுவ. இப்பெல்லாம் நீ வர்றதே இல்லை. உன்னைப் பாக்க நான் வந்தாலும் இந்தப் பையன் நீ யாரு, எந்த ஊரு, என்ன பெயருன்னு என்னென்னவோ கேட்கிறான். ரொம்பத்தான் கெட்டுப் போயிட்ட சுவாமி. என்னை மாதிரி ஆளுங்களையெல்லாம் நீ பார்க்க மாட்டியோ? காரு மேலே வந்தாதான் பார்ப்பியோ? எங்களையெல்லாம் மறந்திட்டியே சுவாமி”

அந்த மூதாட்டி ஆங்காரமாகக் கேட்டாள்.

சுவாமி பதறிப் போய்விட்டார். தான் உட்கார்ந்திருந்த பாயிலிருந்து உடனே எழுந்து அந்த மூதாட்டி அருகே சென்றார்.

“அம்மா, உங்களை மறக்கமுடியுமா அம்மா? அப்பா இந்தப் பிச்சைக்காரனுக்கு நிறைய வேலை கொடுத்திட்டார் அம்மா. அதனால்தான் இந்தப் பிச்சைக்காரன் உங்கள் வீட்டுக்கு வர முடியவில்லை அம்மா. வாங்க அம்மா இங்கே உட்காருங்க”

அந்த மூதாட்டியை உபசரித்து மற்ற பெண்கள் அமர்ந்திருந்த பாயில் அவரையும் உட்கார வைத்து சுவாமி அவர் எதிரில் அம்ர்ந்துகொண்டார். வாயிற்காப்போன் தன் இடத்துக்குச் சென்றுவிட்டான்.

“சாமி, உனக்குப் பிடிக்குமேனு கேப்பைக் கூழ் கொண்டு வந்தேன். இதைக் குடிப்பியா இல்லை இந்தப் பணக்காரங்க கொடுக்கிற இட்லி, வடையைத்தான் தின்பியா?” அந்தப் பாட்டி கோபம் தணியாமல் கேட்டாள்.

“கொடுங்கம்மா, உங்க கையால் கூழ் குடிச்சி எத்தனை காலம் ஆகிவிட்டது, கொடுங்கம்மா.”

சுவாமி அந்தக் கூழுக்காக கெஞ்சினார். பாட்டி தான் கொண்டு வந்த கூழை, சுவாமியின் சிரட்டையில் விட சுவாமி அதை அளவிட முடியாத ஆனந்தத்துடன் குடித்தார். பாட்டி கொண்டு வந்திருந்த தூக்குச்சட்டி கூழ் முழுவதையும் சுவாமி ரசித்துக் குடித்தார். பாட்டிக்கு மகாதிருப்தி. பெருமையோடு எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தார். அப்பார்வையில் கம்பீரமான கர்வம் தெரிந்தது. யாருக்கு வராது இந்த கர்வம், இப்பேர்ப்பட்ட மஹா யோகி தன்னிடம் கெஞ்சும்போது?.

“சாமி நம்ம வீட்ல இருக்கிற வெள்ளைப் பசுமாடு இரண்டு நாளா இரையே எடுக்கல. நானும் என்னென்னவோ செஞ்சு பார்த்துட்டேன்.

அது இரையும் எடுக்கல, தண்ணியும் குடிக்கல. உங்கிட்ட சொல்லி என்ன செய்யலாமுனு கேட்க வந்தேன்." பாட்டி தான் வந்த காரியத்தை விவரித்தார்.

சுவாமி தீவிரமாக யோசித்தார். சிறிது நேரம் மௌனம் காத்தார். பாட்டி அமைதியாகக் காத்திருந்தாள்.

சுவாமி கண்களை மூடிச் சிறிது நேரம் இருந்துவிட்டு பின் "அம்மா நீ பெரிய கோவிலுக்குப் போய் அங்கே சுவாமியின் அபிஷேகத் தீர்த்தத்தை இந்தத் தூக்குச் சட்டியில் பிடித்து அதை மாட்டுக்குக் கொடுக்கலாம். எல்லாம் சரியாகிவிடும் அம்மா" எனச் சொன்னார். பாட்டி உடனே எழுந்தாள்.

"சாமி, நான் கோவிலுக்குப் போறேன்." பாட்டி சென்றுவிட்டாள்.

மறுநாளும் பாட்டி வந்தாள், வாயிற்காப்போன் சற்று மரியாதையாகக் கதவைத் திறந்துவிட உள்ளே மடமடவென்று நுழைந்தாள்.

"சாமி, நீ சொன்னபடி செஞ்சேன். இப்ப மாடு நல்லா இரை எடுக்குது, தண்ணியும் குடிக்குது சாமி. இதை உன்கிட்ட சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். நீ உன் வேலையைப் பாரு சாமி. நான் போறேன்."

படபடவென்று பாட்டி சொன்னதைக் கேட்டு, சந்தோஷத்துடன் எழுந்த சுவாமி, அவரை நிறுத்தி அவர் மடிநிறைய அங்கிருந்த பழங்களையெல்லாம் பிரசாதமாகக் கொடுத்து, கேட் வரை சென்று வழியனுப்பி வைத்தார். அப்பாட்டியைப் பார்த்து அனைவரும் பொறாமைப்பட்டோம். அந்த எளிமையான நம்பிக்கை நமக்கு வராதா என்று.

# ஆகாரத்தைக் கடந்த ஆன்மீகம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் உயர்ந்த பரமார்த்த நிலையை அடைவதற்கு முன்பாக, இல்லறத்தில் தன் சாதனாவைத் தொடர்ந்திருந்தபோது, இச்சம்பவம் நடந்தது.

சுவாமி, அவரது மகன் திரு. அமிதாப்பை அழைத்துக்கொண்டு கங்கைக் கரையில் உலாவச் சென்றார். கடும் கோடை காலம் அது. கங்கை தன்னைச் சுருக்கிக் கொண்டு மெதுவாக ஓடிக்கொண்டிருந்தாள். கங்கையில் மீன்கள் உற்சாகமாக நீந்திக் களித்திருந்தன. திரு. அமிதாப் அம்மீன்களின் அழகில் தன்னைமறந்து லயித்திருந்தார்.

"மகனே, இந்த மீன்கள் எவ்வளவு அழகாக விளையாடி மகிழ்கிறது. உனக்கு இதை பார்க்க மகிழ்ச்சியாக உள்ளதா?"

சுவாமி மகனிடம் கேட்டார்.

"ஆம் தந்தையே மிகவும் அழகாக இருக்கிறது."

திரு.அமிதாப் பதிலுரைத்தார்.

"இவ்வளவு அழகான உயிரினங்களை நாம் சாப்பிடலாமா?"

தந்தையின் குரலில் ஒருவித வேதனை தெரிந்தது.

சுவாமி அற்புதமான யோகியாகி திருவண்ணாமலை சன்னதித் தெரு வீட்டில் அமர்ந்திருந்தார். சுவாமியின் எதிரே சுவாமியின் அன்புக்குகந்த ஒரு குடும்பம் அமர்ந்திருந்தது.

"சுவாமி, வரும் பக்தர்கள் யாவரும் தங்களுக்காக பால் சாதம், சப்பாத்தி, இட்லி எனக் கொண்டு வருகின்றனர். என் மனைவி சுவாமிக்கு வித்தியாசமாக ஏதாவது செய்து கொண்டு வரவேண்டும் என விரும்புகின்றாள். அவள் இப்போது கேக் செய்யக் கற்றுக்கொண்டுள்ளாள் சுவாமி. எனவே அடுத்தமுறை சுவாமியிடம் வரும்போது கேக் செய்து எடுத்துவரலாமா எனக் கேட்கச் சொன்னாள் சுவாமி. ஆனால் அதில் ஒரு பிரச்சனை உள்ளது சுவாமி. முட்டை சேர்க்காமல் அவளுக்குக் கேக் செய்யக் தெரியாது சுவாமி. எனவேதான் உங்களிடம் கேட்டுவிட்டு முடிவெடுக்கலாம் என்று சொல்லிவிட்டேன் சுவாமி..."

அன்பர் ஒருவித எதிர்பார்ப்போடு சுவாமியின் திருமுகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். சுவாமி அழகாகச் சிரித்தார். முகத்தில் கருணையும் அன்பையும் தவிர்த்து, வித்தியாசமாக வேறு ஒன்றும் தெரியவில்லை. அந்தத் தம்பதியை பிரியமாக வெகு நேரம் பார்த்துக்கொண்டே இருந்தார்.

"நண்பா, ஒரு சமயம் சுவாமி விவேகானந்தரைப்பற்றி, சுவாமி ராம்தீர்த்தரிடம் ஒரு பக்தர் இழிவாகப் பேசினார். சன்னியாசி கோலம் தரித்தவர் அசைவ உணவை அருந்துவதாக விவேகானந்தரைக் கொச்சைப்படுத்திய பக்தரிடம் சுவாமி ராமதீர்த்தர், விவேகானந்தர்

வாய்வழியே, உள்ளே செல்லும் ஆகாரத்தை நீ கவனிப்பதை விட்டுவிட்டு அவர் வாய்வழியே வெளியில் வரும் சொற்களில் கவனம் செலுத்தினால் உன் வாழ்க்கை மேம்படும் எனக் கூறினார்."

சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார். சுவாமியின் முகமலர் தெய்வீக நறுமணத்தைப் பரப்பியது.

"நண்பா இந்த பிச்சைக்காரன் எதிலும் எந்த வித்தியாசமும் பார்ப்பதில்லை. எனினும் நாம் தந்தையின் வேலையைச் செய்துகொண்டிருக்கும்போது இதுபோன்ற சிறிய விஷயங்களைப் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாமே."

சுவாமியின் சொற்கள் அனைவரையும் கேக்கை மறக்கச் செய்துவிட்டது.

மற்றொரு நாள். மற்றொரு, சுவாமிக்கு பிரியமான குடும்பம் சன்னதித் தெரு வீட்டில் சுவாமியின் எதிரில் அமர்ந்திருந்தது.

"சுவாமி, எனது தந்தை இன்று அசைவ உணவு சாப்பிட ஆசைப்படுகின்றார். நாங்கள் என்ன செய்யட்டும் சுவாமி?"

அந்தப் பெரியவரின் மகன் சுவாமியிடம் விகல்பமில்லாமல் கேட்டார். அவரால் தினமும் அசைவ உணவு உண்ணாமல் இருக்க முடியாது. தந்தையோ பதறினார். அவர் அசைவ உணவைப் பற்றி மகனிடம் பேசவேயில்லை. சுவாமி, தந்தையையும் மகனையும் மாறி மாறி பார்த்தவண்ணம் இருந்தார்.

"அப்பா அவரோடு போய் சாப்பிடலாம்."

சுவாமியின் குரலில் ஒருவிதமான வருத்தம் தெரிந்தது. அனைவரும் சென்றனர். உணவருந்திவிட்டு அந்தக் குடும்பம் மீண்டும் வந்தனர். சுவாமி அவர்கள் சாப்பிட்ட உணவின் விவரங்களைக் கேட்டார்.

அவர்கள் விவரித்துக் கூறினர்.

“நீங்கள் யாவரும் மிகவும் கடினமான உணவு வகைகளைச் சாப்பிட்டு வந்துள்ளீர்கள். எனவே சோர்வாக இருக்கும். நீங்கள் யாவரும் அறைக்குச் சென்று ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் வரலாம்.”

சுவாமியின் வார்த்தைகளுக்காகவே காத்திருந்தார்போல் அவர்கள் உடனே விடுதிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

“இந்த பிச்சைக்காரனைப் பார்ப்பதற்காகவும் என் தந்தையின் நினைவிலேயே லயித்திருப்பதற்காகவும் வெகு தூரத்தில் இருந்து வருகின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய பழக்கங்கள், அவர்களின் நோக்கத்தை மாற்றிவிடுகின்றன. விலைமதிக்க முடியாத நேரம் இதனால் வீணாகிப் போகின்றது.”

சுவாமியின் குரலில் துக்கம் தொனித்தது.

சுவாமியின் ஆன்ம அருஞ்சுவையை அனுபவிக்க முடியுமா என்று பார்ப்போமே.

# சைவம் அசைவம்



"நண்பா, இந்த பிச்சைக்காரனுக்கு ஒரு உதவி செய்வாயா?" சுவாமி யோகி ராம்சுரத்குமார் என்னிடம் கேட்டார்.

"சரி சுவாமி." நான் பணிவுடன் சொன்னேன்.

ஒரு அன்பரின் பெயரைச் சொல்லி அவர் வாழும் ஊருக்குச் சென்று சுவாமியின் செய்தியைச் சொல்ல வேண்டும். செய்தி: அந்த நண்பரை புலால் உணவில் ஒரு குறிப்பிட்ட வகையை மட்டும் சாப்பிட வேண்டாம் என சுவாமி வேண்டிக் கேட்டுக் கொண்டதாகச் சொல்ல வேண்டும். வேறு வகை புலால் உணவை அவர் சாப்பிட்டுக் கொள்ளட்டும். ஆனால் அந்த ஒன்றை மட்டும் அவர் அடியோடு விட்டுவிட வேண்டும் எனச் சொல்ல வேண்டும்.

நான் அப்போதே புறப்பட்டேன். திருவண்ணாமலையிலிருந்து சுமார் 12 மணி நேர பஸ் பயணத்தில் அந்த ஊர் இருந்தது. மறு நாள் அதிகாலையில் அந்த அன்பர் ஊர் சென்றேன். அன்பர் விழித்திருந்தார்.

நான் சுவாமி சொல்லி அனுப்பிய செய்தியைச் சொன்னேன். அன்பர் கவனமாகக் கேட்டுக் கொண்டார். அவரது துணைவியாருக்கும் சற்று நேரம் கழித்து, சுவாமி சொல்லி அனுப்பிய அதே செய்தியைச் சொன்னேன். அந்த அம்மையார் சற்றே பதற்றப்பட்டார். அன்பர் முகத்தில் எந்த உணர்வும் தெரியவில்லை. சுவாமியின் செய்திக்கு மறுமொழியாக எதுவும் சொல்லவில்லை. நான் என் ஊர் வந்து சேர்ந்தேன். சுவாமிக்கு கடிதம் வாயிலாக நடந்த சம்பவத்தை விவரமாக எழுதி அனுப்பினேன். சில காலம் கடந்தது. ஒரு நாள் மாலை அந்த அன்பர் இறந்த சேதி என்னை வந்தடைந்தது.

பின்னாளில் தெரிந்துகொண்டேன், அந்த அன்பர் சுவாமியின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைக்குக் கட்டாயப்படுத்தப்பட்டார் என்று. அனைத்தும் சுவாமியின் செயல் என எண்ணி சூழ்நிலையின் கட்டாயத்தை அவர் ஏற்றுக்கொண்டதற்கு விலையாக அவர் தன் உயிரையே அர்ப்பணம் செய்தார்.

சுவாமி, பல அன்பர்களுக்கு பெரிய நெல்லிக்காயை தினமும் எடுத்துக்கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார். சில அன்பர்களுக்கு சிறு வெங்காயத்தை பச்சையாக ஆகாரத்தோடு உண்ணச் சொல்லியிருக்கிறார். மற்றும் சிலருக்கு வெள்ளைப்பூண்டைப் பரிந்துரைத்திருக்கிறார். ஒரு சிலருக்கு அருகம்புல்லின் சாறு. வேறு சிலருக்கு முந்திரிப் பழம், மற்றொருவருக்கு பொட்டுக்கடலை, வேறொருவருக்கு திரிபலாசூரணம் இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ...

ஒரு சமயம் அன்பர் ஒருவர் மற்றொரு அன்பர் குறித்து சுவாமியிடம் குறை கூறினார்.

“சுவாமி இவர் புலால் உணவையே விரும்பிச் சாப்பிடுகிறார். ஆன்மீகவாதிக்கு புலால் உணவு தவறு என நீங்கள்தான் போதிக்க

வேண்டும் சுவாமி.”


சுவாமி அமைதி காத்தார். சற்று நேரம் கழிந்தது.

“என் தந்தையை நினைப்பதற்கு ஏதுவாக, உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கிலைக்காத உணவை அன்பர்கள் உண்ணவேண்டும். உணவுப் பழக்கம் அவரவர் குடும்ப, சீதோஷ்ண, சமுதாயப் பழக்க வழக்கங்களை ஒட்டியே இருப்பதால் சான்றோர்கள் இது குறித்து அதிகம் பேசுவதில்லை. இந்த பிச்சைக்காரனும் இதை ஒரு பொருட்டாகப் பார்ப்பதில்லை.”

சைவம் புசிப்போர் எல்லோரையும் சுவாமி அரவணைக்கவுமில்லை. அதேபோல் அசைவம் புசிப்போர் அனைவரையும் சுவாமி கைவிட்டதுமில்லை.

என்னைப் பொறுத்தமட்டில், சுவாமியை நினைப்போர் சைவம். சுவாமியை நினைக்காதோர் அசைவம். சைவம் அசைவம் கடந்த குருவின் திருவடியில் சரணமடைவோம்.

# சாதனா முறையும், பக்கோடா செய்முறையும்



அந்த மத்திய வயதுப் பெண்மணி அதிகம் படித்தவர். ஆன்மீக தத்துவங்கள், சாஸ்திரங்கள், குரு பக்தி அனைத்தும் அறிந்தவர். சிறிது காலமாக சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களை அந்தப் பெண்மணி அறிந்திருந்தார். சுவாமி உண்மையான பரமயோகி என்றும் அவரே தனக்கு ஆன்ம சாட்சாத்காரத்தை அளிக்க வல்லவர் என்றும் உறுதியாக நம்பினார். சுவாமி அவரிடம் எப்பொழுதும் கனிவுடனேயே அளவளாவுவார்.

தனித்து வாழும் அப்பெண்மணி மீது சுவாமி அன்பும், அக்கறையும் கொண்டிருந்தார். அந்த பெண்மணி வரும் சமயமெல்லாம் ஆத்ம சாட்சாத் காரத்தை சுவாமி தனக்கு வழங்க வேண்டுமென மௌனமாகப் பிரார்த்தனை செய்வார்.

சில காலம் சென்றது. சுவாமி ஆத்ம சாட்சாத்காரத்தை அவருக்கு வழங்கவில்லை என்ற ஆதங்கம் அந்த பெண்மணிக்கு அதிகமானது.

மறுமுறை அவர் சுவாமியிடம் வரும்போது தனது ஆவலை சுவாமியிடம் உருக்கமாக வாய்திறந்து வேண்டினார். சுவாமி மௌனமாக இருந்தார். பதிலேதும் சொல்லவில்லை. பெண்மணி மீண்டும் விண்ணப்பித்தார். சுவாமியின் மௌனம் கலையவில்லை. பெண்மணியின் வேகம் கூடியது. குரல் உயர்ந்தது.

அப்போது தெருவில் ஒரு அழகிய விதவிதமான வர்ணக் கண்ணாடிகளால் மூடப்பட்ட ஒரு பக்கோடா விற்கும் வண்டி வந்தது. பக்கோடா விற்கும் வாலிபன் சுவாமியை நன்கு அறிவான். வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு சுவாமியை தரிசிக்க வந்தான். வழக்கமாக அவன் தெருவில் நின்றே சுவாமியை நமஸ்கரித்து விட்டு தன் வழியே சென்றுவிடுவான்.

அன்று சுவாமி அவனை உள்ளே அழைத்தார். சுவாமியின் உதவியாளர் கதவைத் திறந்தார். வாலிபன் உள்ளே வந்து சுவாமியை நமஸ்கரித்தான். சுவாமி அவனைத் தன் எதிரே அமரவைத்தார்.

"பக்கோடா வியாபாரம் எப்படி நடக்குது தம்பி?" சுவாமி மிகுந்த கரிசனத்தோடு கேட்டார்.

"அதை ஏன் சாமி கேட்கிற. போட்ட சரக்கெல்லாம் விற்கமாட்டேங்குது. நிறைய தேங்கி வீணா போகுது சுவாமி. நட்டம்தான் மிச்சம் சுவாமி."

வாலிபன் கவலையோடு தன் பிரச்சனையை சுவாமியிடம் பகிர்ந்து கொண்டான்.

"வியாபாரத்திலே நஷ்டம் வரக்கூடாது தம்பி. நீ எப்படி பக்கோடா

செய்ற, சொல்லு.”

சுவாமி வாலிபரிடம் மிக அக்கறையோடு கேட்டார். வாலிபன் விவரமாகச் சொன்னான்.

“ஆங், இப்ப புரிஞ்சி போச்சி உனக்கு ஏன் நஷ்டம் வருதுன்னு. இனி இந்த பிச்சைக்காரன் சொல்றபடி செய். உனக்கு நஷ்டமே வராது. பக்கோடாவை பாதி வெந்து இருக்கிற மாதிரி செஞ்சி அன்னைக்கு விக்கனும். மீதமா போச்சுன்னா மறுநாள் அதை மறுபடியும் எண்ணெயிலே வேக வச்சி வித்திடனும். இப்படிச் செஞ்சால் உனக்கு நஷ்டமே வராது.”

சுவாமி, வாலிபனுக்கு பக்கோடா வியாபாரத்தின் நுணுக்கத்தைக் கற்றுக் கொடுத்தார். வாலிபனின் முகம் பிரகாசம் அடைந்தது.

“சுவாமி இனி நீ சொல்றபடியே செய்றேன். நான் போயிட்டு வாரேன் சுவாமி.”

வாலிபன் வணங்கிச் சென்றான். சுவாமி மெதுவாக ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். அந்தப் பெண்மணியை நோக்கி அழகாகச் சிரித்தார்.

பெண்மணிக்கு முதலில் கோபம் கோபமாக வந்தது. கடவுள் தரிசனத்திற்கு வழி கேட்டால் பக்கோடா செய்முறையை அரை மணி நேரமாகப் பேசுகிறாரே!.

1947ல் சுவாமியின் தெய்வத்தை நோக்கிய நெடும் பயணம் தொடங்கியது. பயணம் தொடங்கிய காலம் முதல் சுவாமி, தன்னிடம் உள்ளதை ஒவ்வொன்றாக விட்டுவிட்டார். பதவி, குடும்பம், மானுட வசதிகள் மீதுள்ள நாட்டம் எல்லாமுமே அவருடைய தெய்வ வேட்கையில் விடுபட்டுப் போனது. சமைத்த உணவை சுவாமி தனது சாதனா

காலத்தில் சுமார் ஐந்து ஆண்டுகள் காலம்வரை புசித்ததே இல்லை. குரு தரிசனமும், குருவின் மந்திர தீட்சையும் கிட்டிய பின் சுவாமியால் எந்த ஒரு விஷய சுகானுபவத்தின் மீதும் நாட்டம் கொள்ளவே முடியவில்லை. சுவாமி பற்பல நூல்கள் படித்தார். பற்பல ஞானிகளின் சரிதங்களும், உபதேசங்களையும் கற்று உணர்ந்தார்.

சுவாமிக்கு பாதை காட்டியவர்கள் அக்காலத்தில் வாழ்ந்த ஆன்மீகச் சிங்கங்கள். ஸ்ரீரமணமஹரிஷி, ஸ்ரீ அரவிந்தர், பப்பா ராமதாசர் மற்றும் ஜே.கிருஷ்ணமூர்த்தி போன்ற அற்புதமான அவதார புருஷர்களாக தனது குருநாதர்கள் இருப்பினும் சுவாமி சுமார் 18 வருடகால கடுமையான தவத்திற்கு பின்பே தெய்வாம்சம் அடைந்து தெய்வமானார்.

மேலே கூரையும், கீழே தளமும் இல்லாது, சரிவர உணவும் கிடைக்காது பிச்சை எடுத்து, தன் குருவையும், குரு மந்திரத்தையும் விடாது தன்மயமாக்கிக் கொண்ட அந்த உன்னதமான ஞானியின் பாதார விந்தங்களில் நம்மைக் கரைத்து, நம் அடையாளங்களை முற்றிலும் துடைத்தெறிந்துவிடாமல், சுவாமி எனக்கு ஆன்மீகம் கொடுங்கள் என்று கேட்பதை விட பக்கோடா செய்யக் கற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.

# பக்தியே ருசி தரும்



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு இல்லம். 1980 களின் ஆரம்பத்தில் ஒரு நாள். ஒரு பக்தை சுவாமியின் திருவடியில் ஒரு மூடப்பட்ட பாத்திரத்தைச் சமர்ப்பித்தார். அந்த இல்லத்தரசி ஒரு டாக்டரின் மனைவி. மதுரையில் இருந்து வந்தவர். அவர் சுவாமியைத் தரிசிக்க வரும்போதெல்லாம் சுவாமிக்கு பால் சாதமோ அல்லது சம்பாத்தியோ கொண்டுவந்து சுவாமிக்கு அர்ப்பணிப்பது வழக்கம். அன்று அந்த அம்மையார் பால் சாதமும், சிறிது காயும் ஒரு பாத்திரத்தில் வைத்து எடுத்து வந்திருந்தார்.

அன்று பக்தர்கள் கூட்டம் மிகவும் அதிகமாக இருந்தது. சுவாமி அந்த அம்மை அளித்த பாத்திரத்தை வாங்கி தன்னருகே வைத்துக் கொண்டார். வந்திருந்த பக்தர்களோடு சுவாமி விடாது உரையாடிய வண்ணம் இருந்தார். டாக்டரும், அவர் மனைவியும் ஊர் திரும்பும் நேரம் வந்தது. அம்மையாருக்கு மிகுந்த வருத்தம். தான் ஆசையாய் செய்து எடுத்து வந்திருந்த பால் சாதத்தை சுவாமி அருந்தவே இல்லையே. மனம்

ஏனோ கனமாகி வலித்தது. சுவாமி அந்த தம்பதியருக்கு விடையளித்து அனுப்பி வைத்தார். தம்பதியரும் கனத்த இதயத்தோடு ஊர் திரும்பினர்.

மூன்று நாட்கள் கடந்தன. விடாது பக்தர்கள் கூட்டம். மூன்று நாட்களும் சுவாமி உறங்கவில்லை. உணவு அருந்தவில்லை. நான்காம் நாள் பக்தர்கள் கூட்டம் குறைவாக இருந்தது. மற்றொரு அன்பர், தன் வீட்டிலிருந்து சுவாமிக்கு ஆகாரம் கொண்டு வந்திருந்தார். ஆகாரத்தை சுவாமியின் முன் வைத்து வணங்கினார். சுவாமி அந்த அன்பர் வைத்த ஆகாரத்திற்குப் பக்கத்தில் டாக்டர் மனைவி வைத்திருந்த பாத்திரத்தைக் கண்ணுற்றார். அதைக் கருணையோடு எடுத்து தன் மடியில் வைத்துக்கொண்டார். அப்பாத்திரத்தை அன்போடு தடவிக்கொண்டே இருந்தார்.

“இந்த பிச்சைக்காரன் அந்த அம்மையார் கொண்டு வந்த உணவை மறந்தே போய்விட்டான். பரவாயில்லை. இன்று இந்த பிச்சைக்காரனுக்கு இதுதான் ஆகாரம். இதை இந்த பிச்சைக்காரன் யாரோடும் பகிர்ந்து கொள்ளமாட்டான். இந்த பிச்சைக்காரனுக்காக அந்த அம்மையார் அன்போடு தயார் செய்து கொண்டு வந்த ஆகாரம். இதை இந்த பிச்சைக்காரன் மட்டுமே அருந்துவான்.”

சுவாமி அந்த தூக்குச்சட்டியின் மூடியை கழற்றினார். குபீரென துர்வாடை அடித்து வீட்டின் கூடமெல்லாம் அது நிறைந்தது. வந்திருந்த பக்தர்கள் அனைவரும் முகம் சுழித்தனர்.

“சுவாமி அந்த ஆகாரம் கெட்டுப் போய்விட்டது. அதை அருந்தினால் ஆபத்து விளையும் சுவாமி.”

அங்கிருந்த ஒரு பக்தர் பயத்தோடு கூறினார்.

“இந்த ஆகாரம் இந்த பிச்சைக்காரனுக்காகப் பக்தியோடு செய்யப்பட்டது.

இது உண்மையில் அமிர்தமாகும். இன்று இந்த பிச்சைக்காரனுக்கு இதுதான் பிச்சை."

சுவாமி அந்தக் கெட்டுப்போனதாகச் சொல்லப்பட்ட ஆகாரத்தை ருசித்து அருந்தினார். அனைவரும் திகிலுடன் பார்த்தபடி இருந்தனர்.

"பார்த்தசாரதி இங்கே வா" சுவாமி அழைத்தார். அருகில் சென்றேன்.

கை நீட்டச் சொன்னார். ஒரு கவளம் கையில் விழுந்தது. ஒரு க்ஷணம் தயக்கம் மற்றும் பயம். சுவாமியே கொடுக்கும்போது எதற்கு பயம். வாயில் போட்டுக் கொண்டேன். ருசியாக இருந்தது. மேலும் இரண்டு மூன்று கவளங்கள் கிடைத்தது.

"பார்த்தசாரதி இனி உனக்குக் கிடையாது. இந்த பிச்சைக்காரனுக்கு மட்டும்தான்." சுவாமி கண்டிப்போடு கூறிவிட்டார்.

எனக்கு ஏக்கமாக இருந்தது. மீதத்தை சுவாமி வெகுவாக ரசித்து ருசித்துச் சாப்பிட்டார்.

# ஔஷதமான அழுகிய பழம்



அந்த வயோதிக பக்தர், தன் குருநாதர் விதேஹமுக்தி அடையுமுன்பே அறிமுகப்படுத்திய, நம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரிடம் அபரிதமான பக்தியையும் பெருநம்பிக்கையையும் கொண்டவராவார்.

திருவண்ணாமலைக்கு அருகில் இருக்கும் ஒரு சிற்றூரில் தன் ஓய்வுகால வாழ்க்கையை ஒரு தவவாழ்வாக, மனைவியுடன் வாழ்ந்து வந்தார். அவர் சுவாமியைப் பார்க்க விரும்பும் போதெல்லாம் பேருந்தில் தனியாகவோ அன்றி மனைவியுடனோ வந்துவிடுவார். சுவாமியும் அந்த எளிய பக்தரை பேரன்போடு தன்னருகில் அமர்த்தி அருள்பாலிப்பார்.

அன்று அந்த எளிய வயோதிக பக்தர் சன்னதித் தெரு வீட்டிற்கு சுவாமியை தரிசிக்க வந்திருந்தார். அன்றைய தினம் சற்றே அதிகமான பக்தர்கள் அங்கே கூடத்தில் அமர்ந்திருந்தனர். எளிய பக்தர் சுவாமியை நமஸ்கரித்தார். சுவாமி அவரைத் தனக்கு நேரெதிரே பாயில் அமரவைத்தார். பக்தர் மிகவும் சிரமத்தோடு ஒருவித சிரமமான,

அவஸ்தையான கோணத்தில் அமர்ந்தார்.

அந்த பக்தர் ஒருநாளும் தன்னுடைய சிரமங்களையோ பிரச்சனைகளையோ சுவாமியிடம் சொல்லியதே இல்லை. சுவாமி அனைத்தும் அறிவார் என்பதில் அவருக்கு பரிபூர்ண நம்பிக்கையுண்டு.

சுவாமி அந்த எளிய பக்தரையே பார்த்தவண்ணம் இருந்தார். மாறிமாறி பல சிகரெட்டுகளைப் புகைத்தவாறே அந்த பக்தருக்கு தன் அருளைப் பொழிந்து கொண்டிருந்தார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு மற்றொரு பக்தசீலர் சுவாமிக்கு சுமார் அரைக்கிலோ கனிந்த கருப்புத் திராட்சைப் பழங்களை சமர்ப்பித்திருந்தார். அந்த பழங்கள் இருந்த பொட்டலம் சுவாமியின் மிக அருகே இருந்தது. அந்தக் கனிந்த திராட்சைப் பழங்கள் அழுகி ஒருவித புளிப்பு வாசனையைப் பரப்பிக் கொண்டிருந்தது. சுவாமி அந்த பழப் பொட்டலத்தைக் கையில் எடுத்து அதை முகர்ந்து பார்த்தார். புளிப்பு நெடி கூடமெல்லாம் பரவி இருந்தது.

“அன்பரே, இந்தப் பழங்கள் அழுகிக் கெட்டுப் போய்விட்டது. எனினும் என் தந்தை இதை உங்களுக்கு அளிக்கச் சொல்கிறார். நீங்கள் இதை ஏற்றுக் கொள்வீர்களா?”

சுவாமி அந்த எளிய பக்தரிடம் வினவினார்.

“சுவாமி நான் பெரும் பாக்கியம் செய்தவன். இப்பழங்கள் தெய்வ சன்னிதியில் தெய்வீகத்தில் ஊறியது. இது எனக்கு அமிர்தம் சுவாமி.”

கண்ணீர் மல்க பெரியவர் பக்தியோடு சுவாமியை நமஸ்கரித்தார். சுவாமியிடம் பழங்களைப் பெற்றுக்கொண்டார். சுவாமி அவருக்கு விடை கொடுத்து அனுப்பினார். ஒரு வாரம் கழிந்தது. பெரியவர் தன்

மனைவியுடன் சுவாமியை மீண்டும் தரிசிக்க வந்தார். அந்த ஆதர்ஷ தம்பதிகள் சுவாமியை நமஸ்காரம் செய்தனர்.

“சுவாமி இவர் மூல நோயால் வெகுகாலம் சிரமப்பட்டு இருந்தார். மருத்துவம் பார்க்கவும் மறுத்துவிட்டார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தங்களைத் தரிசித்து வரச்சொன்னேன். தாங்கள் அந்த அமிர்த திராட்சைப் பழங்களை வழங்கி ஆசிர்வதித்து அனுப்பினீர்கள். அந்தப் பழங்களை இவர் தங்களின் பிரசாதமாக சாப்பிட்டார் சுவாமி. பழங்கள் ஔஷதமாக மாறி இவரை முற்றிலும் குணப்படுத்தி விட்டது சுவாமி.”

பெரியவரின் மனைவி நெஞ்சுருகி நாதழுதழுக்கச் சொல்லி சுவாமியை மீண்டும் நமஸ்கரித்தார். பெரியவரின் கண்களில் ஆனந்த பாஷ்யம் பொழிந்தது.

“அம்மா, உங்களிருவருக்கும் அப்பா மீதுள்ள அபார நம்பிக்கைதான் நோயைக் குணப்படுத்தியது. இந்த பிச்சைக்காரன் எதுவும் செய்யவில்லை அம்மா. என் தந்தை உங்களுடன் எப்பொழுதும் இருக்கின்றார் அம்மா.”

சுவாமி தன் கரங்களை உயர்த்தி அந்த உன்னதமான பக்தர்களை ஆசிர்வதித்தார்.

# உலகத்தை எரிப்பேன்



அந்தப் பக்தர் ஒரு காகித ஆலையின் நிர்வாக இயக்குனர். சுவாமியின்பால் ஆழ்ந்த பக்தி கொண்டவர். அவரது மனைவியும் மூன்று பெண் குழந்தைகளும்.

சுவாமியிடம் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள். அவர்கள் இல்லத்தில் எப்பொழுதும் தேவாரப் பாடல்களும், சுவாமியின் நாமாவளியும் ஒலித்துக்கொண்டே இருக்கும். அவரது மனைவி நன்றாகப் பாடக்கூடியவர். அவர்கள் எப்பொழுது வந்தாலும் சுவாமி, நிர்வாக இயக்குனரின் மனைவியைத் தேவாரம் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்வார்.

ஒருநாள் காகித ஆலை நிர்வாக இயக்குனர், அவரது மனைவி மற்றும் இளைய மகள் ஆகியோர் திடீரென எந்தவித முன்னறிவிப்புமின்றி சுவாமியின் சன்னதித் தெரு வீட்டுக்கு வந்தார்கள். சுவாமி அவர்களைத் தனது இருக்கைக்கு எதிர்ப்புறம் அமர வைத்தார். அப்பொழுது நான் சுவாமியின் நாமத்தை பாடிக்கொண்டிருந்தேன். சுவாமி மற்ற

பக்தர்களை ஒவ்வொருவராக அழைத்துப் பிரசாதம் கொடுத்து அனுப்பி வைத்தார். முடிவில் நானும் அந்த ஆலை அதிபரின் குடும்பத்தார் மட்டுமே அங்கே எஞ்சியிருந்தோம்.

சுவாமி தன் ஆசனத்தில் அமர்ந்து ஆலை அதிபரையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆலை அதிபரின் கண்கள் கலங்கின. அவரது மனைவியும், மகளும் அவர் போலவே கண்கலங்கி, மிரண்டு போய் இருந்தார்கள். சுவாமி அடுத்தடுத்து புகை பிடித்த வண்ணம் இருந்தார்.

"நீங்கள் ஏதேனும் சொல்ல விரும்புகிறீர்களா?" சுவாமி வினவினார்.

காகித ஆலை அதிபர் மௌனமாக ஒரு கடிதத்தை சுவாமியிடம் கொடுத்தார்.

சுவாமி அதை வாங்கிக் கொண்டார்.

"சுவாமி, இது ஒரு அனாமதேயக் கடிதம். இது எங்களை மிகுந்த பயமடையச் செய்துவிட்டது. தங்களிடம் ஓடோடி வந்தோம் சுவாமி."

அந்தக் காகித ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த பல நாட்களாக, பல்வேறு கோரிக்கைகளை நிர்வாகத்திடம் முன்வைத்துப் போராடி வந்தனர். சம்பள உயர்வு, போனஸ் மற்றும் இதர கோரிக்கைகளை நிர்வாகத்திடம் எடுத்துரைத்தும், கடுமையான நிதி நெருக்கடி காரணமாக நிர்வாகத்தினர் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஒப்புக்கொள்ள முடியவில்லை. நிதி நிலைமை சீரானதும், அவர்களது கோரிக்கைகளை நிர்வாகம் பரிசீலிக்கும் என பலமுறை சொல்லியும் சில தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட ஆரம்பிக்கவே, நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கண்டிப்போடு செயல்படுத்த ஆரம்பித்தனர்.

இந்நிலையில், நிர்வாக இயக்குநருக்கு அந்த அனாமதேயக் கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் தொழிலாளர்களின் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது ஆலை அதிபரின் இளைய மகள் கடத்திச் செல்லப்படுவாள் எனச் சொல்லப்பட்டிருந்தது.


ஆலை அதிபரின் இளைய மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். கடிதம் வந்த நாளிலிருந்து, அவளைக் கல்லூரிக்கு அனுப்பவில்லை. ஒவ்வொரு நாளும் அவரும், அவரது குடும்பத்தினரும் சுவாமியின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு வீட்டினுள்ளேயே இருந்து வந்துள்ளனர். முடிவில் சுவாமியிடம் நேரிடையாக முறையிட திருவண்ணாமலை வந்துள்ளனர்.

அனாமதேயக் கடிதத்தின் சாரத்தைத் தெரிந்துகொண்ட சுவாமி, ஆலை அதிபரின் இளைய மகளைக் கருணையோடு பார்த்தார். பயந்திருந்த அந்த இளம் பெண் சுவாமியின் கருணையான பார்வையில் சற்று ஆறுதல் அடைந்தார். எனினும், அவள் கண்ணீர் விட்டபடியே அமர்ந்திருந்தாள். தான் புகைத்திருந்த சிகரெட்டை சுவாமி அணைத்துவிட்டு, மெதுவாக ஆசனத்திலிருந்து எழுந்தார். கூடத்தின் முன் கதவுக்கும், பின் கதவுக்குமாக சற்றுநேரம் நடந்தார். சட்டென்று அந்தப் பெண்ணின் எதிரே நின்றார். விசிறியை ஒரு கையால் பிடித்தபடி, மறு கையால் அப்பெண்ணுக்கு அபயஹஸ்தம் காட்டி அருளினார்.

“கலங்காதே, பயப்படாதே, உன்னைப் பாதுகாக்க என் தந்தை இருக்கிறார். எவரேனும் உனக்குத் தீங்கிழைக்க நினைத்தால் இந்தப் பிச்சைக்காரன் இந்த உலகத்தையே எரித்துவிடுவான். இந்தப் பிச்சைக்காரன் எப்பொழுதுமே உன்னுடன் இருப்பான். நீ இந்தப் பிச்சைக்காரனை நினைவில் இறுத்திக்கொள். இனி நீ பயப்படத் தேவையில்லை.”

சுவாமியின் அபய வார்த்தைகளைக் கேட்ட அக்குடும்பம், அவரது காருண்யத்தில் உருகி, நமஸ்கரித்தார்கள். சுவாமி அவர்களுக்கு பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து அனுப்பி வைத்தார். ஆலை அதிபரின் மகள் மறுநாளிலிருந்து கல்லூரிக்குச் சென்றாள். தனது பட்டப்படிப்பை நல்லவிதமாக முடித்தாள். அவளுக்கு யாரும் எந்தத் தீங்கும் செய்ய முடியவில்லை.

# ஆத்மா புனிதமானது



“சுவாமி என் மகள் சிறிது காலமாகவே திக்பிரமை பிடித்த மாதிரி இருக்கிறாள். சரியாக சாப்பிடுவதில்லை, தூங்குவதில்லை. கல்லூரிக்கும் செல்வதில்லை. எப்பொழுதும் அழுதவண்ணமே இருக்கிறாள். டாக்டரிடம் செல்லலாம் என்றாலும் மறுக்கிறாள். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இறுதியாக திருவண்ணாமலை போய் யோகி சுவாமியைப் பார்த்து வரலாமா என்று கேட்டவுடன் சரி எனச் சொன்னாள். உடனே புறப்பட்டு உங்களைக் காண வந்தோம் சுவாமி.”

அந்த மத்திய வயதுள்ள தந்தையும், தாயும் இளவயது மகளுடன் சன்னதித் தெரு வீட்டில் சுவாமியின் எதிரில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் வந்த சமயம் அங்கே வேறு சில பக்தர்கள் அமர்ந்திருந்தனர். சுவாமி அவர்களை ஒவ்வொருவராக அழைத்து பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து அனுப்பி வைத்தார். முடிவில் நானும், சுவாமிக்குச் சேவை செய்துவந்த ராமகிருஷ்ணனும் மட்டும் இருந்தோம்.

“ராமகிருஷ்ணா, வெளியே கேட் பக்கத்தில் சென்று அமர்ந்திருப்போம்.”

சுவாமி அந்தப் பையனையும் வராந்தாவில் இருக்கச் செய்து, தலைவாசல்

மரக்கதவை உள்புறமாகப் பூட்டினார். நானும் அந்தத் தம்பதியரும் அவர்களது மகளும் மட்டும் அந்த கூடத்தில் அமர்ந்திருந்தோம். மகள், தாய், தந்தை என்று இடமிருந்து வரிசைப்படி தன் எதிரே விரித்திருந்த பாயில் சுவாமி அமரச் செய்தார். நான் அதற்கடுத்தார் போல விரிக்கப்பட்டிருந்த கோணிப்பை மீது அமர்ந்திருந்தேன்.

“சுவாமி, இவளுக்கு என்னாயிற்று என்றே தெரியவில்லை, தாங்கள்தான் அருள் செய்யவேண்டும்.”

பெற்ற தாய் கண்ணீர் மல்க சுவாமியிடம் வேண்டினார். சுவாமி அமைதியாக அமர்ந்திருந்தார், அந்தப் பெண்ணையே தீர்க்கமாகப் பார்த்துக்கொண்டு இருந்தார். ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தார். ஆழ்ந்த சில இழுப்புகள். அந்த சிகரெட் முடிந்தது. அடுத்த சிகரெட், அதுவும் முடிந்தது. இப்படியே அடுத்தடுத்து ஐந்து, ஆறு சிகரெட்டுகள் சாம்பலாயின. சுவாமி அப்பெண்ணை விடாது பார்த்துக் கொண்டேயிருந்தார்.

ஏற்கெனவே அழுது அழுது ஆற்றல் இழந்திருந்த அந்தப் பெண் சுவாமியின் கவனம் அவள் மீது விழுவதைக் கண்டு தன்னை மீறி கதறிக் கதறி அழுதாள். அவளின் தாய், தந்தையர் அவளைச் சமாதனப்படுத்த எத்தனித்தபோது, சுவாமி அவர்களை சைகையால் தடை செய்தார். மீண்டும் அப்பெண்ணையே சுவாமி பார்த்துக்கொண்டும் சிகரெட் பிடித்துக்கொண்டும் இருந்தார், அந்தப் பெண்ணின் அழுகை கேவலாக மாறி சிறிது நேரத்தில் அழுகை முற்றிலும் நின்றுவிட்டது. சுவாமி மென்மையாக அப்பெண்ணைப் பார்த்துச் சிரித்தார். அப்பெண்ணும் சிறிது வெட்கப்பட்டு மெலிதாக சிரிப்பதுபோல் தோன்றியது.

“காபி சாப்பிடலாமா அம்மா?”

சுவாமி அப்பெண்ணை நோக்கி வினவினார். அப்பெண் சரியெனத் தலையாட்டினாள்.

"பார்த்தசாரதி, எங்களுக்கு உடுப்பி ஓட்டலிலிருந்து காபி வாங்கிட்டு வரலாம்."

நான் எழுந்து பெரிய மரக்கதவைத் திறந்து, மீண்டும் சாத்திவிட்டு ஓட்டலுக்குச் சென்றேன். சுவாமி, காபியோ அல்லது டீயோ எது வாங்கிவரச் சொன்னாலும் அங்குள்ளவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஒன்று கூடுதலாக வாங்கிவர வேண்டும். அது சுவாமியின் நிரந்தரக் கட்டளை.

உடுப்பி பிருந்தாவனம் ஓட்டலிலிருந்து ஏழு காபிகளை ஒரு பெரிய தட்டில் வாங்கிக் கொண்டு மேலே ஒரு வாழை இலை போட்டு மூடி சன்னதி தெரு வீட்டுக்கு எடுத்து வந்தேன். ராமகிருஷ்ணன் கேட்டைத் திறந்துவிட்டான். சாத்தியிருந்த மரக்கதவைத் திறந்து உட்கதவின் பக்கம் காபி கொண்டு வந்த தட்டை வைத்துவிட்டு, மரக்கதவைத் தாழ்போட்டு விட்டு, மீண்டும் தட்டருகே நின்று கொண்டேன்.

சுவாமி என்னிடம் சைகையால் எல்லோருக்கும் காபியைக் கொடுக்கச் சொன்னார். முதலில் சுவாமிக்கு இரண்டு கப், பின்பு அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவரின் முன்பும் ஒரு கப், ராமகிருஷ்ணனுக்கு ஒரு கப், கடைசியில் என் இருக்கைக்குப் பக்கத்தில் ஒரு கப் என வைத்துவிட்டு எனது இருக்கையில் அமர்ந்தேன். அனைவரும் சுவாமியையே பார்த்துக்கொண்டிருந்தோம். சுவாமி அந்த இரண்டு கப் காபியையும் தன் சிரட்டையில் ஊற்றிக்கொண்டு அருந்தலானார். பின்பு எங்களையும் சைகையால் காபியைக் குடிக்கச் சொன்னார். எல்லோரும் காபி குடித்து முடித்தோம்.

சுவாமியின் சிரட்டையில் சிறிது காபி மீதமிருந்தது. சுவாமி அப்பெண்ணை அருகே அழைத்தார். சிரட்டையில் மீதமிருந்த காபியைப் பருகச் சொன்னார். அவள் அக்காபியைச் சற்றே தயக்கத்தோடு குடித்துவிட்டு, சிரட்டையைக் கழுவுவதற்காக எடுத்துச் செல்ல எத்தனித்தாள். சுவாமி அவளைத் தடுத்து, அவளிடமிருந்த சிரட்டையை வாங்கி என்னை அழைத்து கழுவி எடுத்து வருமாறு கூறினார். குழாயடிக்குச் சென்று சிரட்டையைக் கழுவி எடுத்து வந்தேன். பின்பு காலி காபி டபராக்களை எடுத்து பெரிய தட்டில் வைத்துக் காத்திருந்தேன். சுவாமி காலி காபி பாத்திரங்களைத் திருப்பி ஓட்டலில் கொடுத்து வருமாறு கூறினார். காலி காபி பாத்திரங்களை ஓட்டலில் திருப்பிக் கொடுத்துவிட்டு நான் சுவாமியிடம் மீண்டும் திரும்பினேன்.

அங்கே சுவாமி மீண்டும் மீண்டும் சிகரெட் பிடித்தவண்ணம் அந்தப் பெண்ணையே கருணையோடு பார்த்துக் கொண்டிருந்தார். அப்பெண்ணின் கண்களில் மீண்டும் கண்ணீர் பெருகி வந்து கொண்டிருந்தது. அவள் தன்னைக் கட்டுப்படுத்தப் பெரும் முயற்சி செய்து கொண்டிருப்பதைக் காணமுடிந்தது.

திடீரென, சுவாமி சமஸ்கிருதத்தில் ஒரு ஸ்லோகம் சொன்னார், அந்த ஸ்லோகத்தைச் சொன்னபோது, அவரது சொரூபத்திலிருந்து ஒருவித சக்தி வெளிப்பட்டது. ஸ்லோகம் சொல்லி முடித்தபின் சிறிது நேரம் மௌனம். பின் அதன் அர்த்தத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினார்.

“ஆத்மா சுத்தமானது, புனிதமானது. அதை யாராலும் அசுத்தம் செய்ய முடியாது. களங்கப்படுத்த முடியாது. கறைபடுத்த முடியாது. ஆத்மாவுக்கு எவராலும் ஊறு விளைவிக்கவும் முடியாது. நாமெல்லோருமே அந்த ஆத்மாதான். நாமெல்லோரும் அதே ஆத்மாதான்.”

சுவாமி சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் தெய்வீக சக்தி தொனித்தது. இதைக் கேட்ட அந்த இளம்பெண் மீண்டும் கதற ஆரம்பித்தாள். தேம்பித் தேம்பி அழுதாள். சற்று நேரத்தில் அப்பெண் அமைதியடைந்தாள். அங்கு ஒரு அமானுஷ்யமான அமைதி நிலவியது. அவ்விடம் முழுவதும் தெய்வீக சக்தியால் நிரம்பியிருந்தது. அந்தச் சக்தி சுவாமியிடமிருந்து பெருவெள்ளம் போல் பிரவாகம் எடுத்தபடி வந்துகொண்டே இருந்தது. அச்சக்தியின் தாக்கம் அனைவராலும் உணரப்பட்டது. சிறிதுநேரம் பேரமைதி.

“சுவாமி, நான் நாசமடைந்தேன், ஏமாற்றப்பட்டேன். என் கற்பை இழந்தேன். நான் என்ன செய்வதென்றே தெரியவில்லை. தற்கொலை செய்துகொள்ள விரும்பினேன். ஆனாலும் முடியவில்லை. ஏதோ என்னை தடுத்துவிட்டது. பெற்றோரிடம் எல்லாவற்றையும் சொல்லவும் முடியவில்லை. என்னால் இந்த வேதனையிலிருந்தும், அதிர்ச்சியிலிருந்தும் மீண்டு வரமுடியுமா எனத் தெரியவில்லை.”

அப்பெண் அழுதபடியே கூறிய வார்த்தைகளைக் கேட்ட பெற்றோர் அதிர்ச்சியில் உறைந்துவிட்டனர். அவர்கள் ஏதோ பேச எத்தனித்தபோது, சுவாமி தடுத்து, மீண்டும் அதே ஸ்லோகத்தைச் சொன்னார், அதன் அர்த்தத்தைக் கூறினார். மீண்டும் பேரமைதி. சிறிது நேரம் கழிந்தபின் சுவாமி அப்பெண்ணை அருகில் அழைத்தார். சிறிது நீரைக் கையில் எடுத்து அப்பெண் மீது தெளித்தார்.


“நீ அந்தப் புனித ஆத்மா, அம்மா. உன்னை யாரும் நாசப்படுத்த முடியாது. உனக்கு யாராலும் தீங்கு விளைவிக்க முடியாது. எனது தந்தை சொல்கிறார் நீ எப்பொழுதும் புனிதமானவள் என்று. எனது தந்தை என்றும் உனக்குப் பாதுகாப்பாக இருப்பார். நீ இனி கடந்த காலத்தை எண்ணி கவலைப்படத் தேவையில்லை அம்மா. நீ எப்பொழுதும் சுத்தமானவள், புனிதமானவள்.”

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட பெற்றோர் கலங்கிக் கதறினர்.

“எது நடந்ததோ அது எனது தந்தையின் அனுமதியின் பேரிலேயே நடந்தது. எது நடக்கிறதோ அதுவும் எனது தந்தையின் விருப்பப்படியே நடக்கிறது, எது நடக்குமோ அதுவும் என் தந்தையின் விருப்பப்படியே நடக்கும். எனவே எனது தந்தையை எல்லோரும் நினைவு கூறுங்கள். எல்லாம் சரியாகிவிடும். எனது தந்தையை நினைப்பதே வாழ்வு. எனது தந்தையை மறப்பது சாவுக்கு ஒப்பாகும்.”

சுவாமி இதையே திரும்பத் திரும்பக் கூறினார். பின் சுவாமியின் நாமத்தைப் பாடுமாறு என்னைப் பணித்தார். நான் நாமத்தைப் பாடலானேன். பெற்றோரும் பெண்ணும் சேர்ந்து பாடினார்கள். அந்தக் கனமான, வேதனையான சூழ்நிலை மாறியது. அப்பெண்ணின் முகத்தில் ஒரு தெளிவு மலர்ந்தது. அழுது வீங்கியிருந்த முகம் நம்பிக்கைக் கொண்டு பொலிவுற்றது. சுவாமி அவர்களுக்கு பழங்களை பிரசாதமாகக் கொடுத்தார். அப்பெண் சுவாமியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தபோது, சுவாமி அவளின் சிரத்தின் மீது தன் கரத்தை சிறிது நேரம் வைத்து அருள்பாலித்தார். சாந்தி ததும்ப அப்பெண் தன் பெற்றோருடன் அங்கிருந்து சென்றாள்.

# சுவாமியின் திருவருளும், பக்தையின் வினைப் பயனும்



அந்த பெண்மணி தன் தமயன் மூலம் சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் அறிமுகம் பெற்றவர். தமயனின் வாழ்க்கையையே முழுமையாக மாற்றிய சுவாமியைக் கண்டு பிரமித்துப் போனவர். மது, மாது, பணம், அதிகாரம் என வாழ்வை தன் மனம்போன போக்கில் வாழ்ந்த தன் தமயனை தன்மயமாக்கிய சுவாமியை துதித்து நின்றவர். பெரும் செல்வந்தர் ஆயினும் எளிமையாக வாழ்ந்தவர். பெரும் படிப்பு படித்திருந்தாலும் வாழ்க்கையின் அன்றாடப் பாடத்தைச் சற்றும் கர்வமில்லாமல் கற்பவர். அவர் சுவாமியிடம் முதல் முறையாகச் சென்ற நாள் முதலே சுவாமியின் பேரருள் பெற்றவர்.

அவர் ஒரு முறை சுவாமியைத் தரிசிக்க வரும் பொழுது, சுவாமிக்கென ஒரு அழகிய சால்வையை வாங்கி அதில் அற்புத அழகு படைத்த தோகை விரித்த மயிலை எம்பிராய்டரி செய்து எடுத்து வந்தார். அதை சுவாமியின் திருப்பாதத்தில் சமர்ப்பித்து வணங்கி நின்றார். சுவாமி அதை விரித்துப் பார்த்தார். மயிலின் தோற்றத்தை தன் திருக்கரத்தால் தொட்டுத் தடவி மகிழ்ந்தார்.

அந்த பக்தை, சுவாமி அந்த சால்வையை அணிந்து கொள்ள உதவினார். மயிலின் முழு தோற்றமும் சுவாமியின் முதுகுப் பகுதியில் அழகாகத் தெரிந்தது. சுவாமி நடக்கும்போது மயில் நடனமிடுவது போல் தெரியும். சுவாமி அந்த சால்வையைப் போட்டுக்கொண்டு அப்பெண்ணிடம் நடந்து காண்பித்தார். அந்தப் பெண்மணி பேரானந்தம் அடைந்தார்.

அடுத்த இரண்டு நாட்கள் சுவாமியின் சத்சங்கத்தில் அப்பெண்மணி லயித்திருந்தார். சுவாமி அவரை அரவிந்தரின் சாவித்திரி எனும் ஆங்கிலக் கவிதை நூலைப் படிக்கச் சொன்னார். சற்று நேரத்தில் சுவாமி அவருக்கு விடை கொடுத்து அனுப்பினார். ஊர் திரும்பிய அப்பெண்மணி சாவித்திரி நூலை வாங்கினார். அதை மனம் ஒன்றிப் படித்தார். அவர் அந்த நூலில் தெய்வாம்சத்தைக் கண்டார். எவரிடம் பேசினாலும், எதைப் பற்றி பேசினாலும் சாவித்திரியிலிருந்து மேற்கோள் காட்டுவார். சாவித்திரியில் அவர் ஒன்றிப் போனார். அங்கே சுவாமி அடுத்த சில மாதங்களுக்கு யார் சென்றாலும்

“இதோ இந்த மயிலைப் பார்த்தீர்களா? இதை அந்தப் பெண்மணி தன் கையாலேயே செய்து இந்த பிச்சைக்காரனுக்குக் கொடுத்தார்,” எனப் பெருமையாகச் சொல்வார்.

தினமும் அந்தப் பெண்மணியை சுவாமி நினைவு கூர்ந்தார். சில மாதங்கள் கழித்து அந்தப் பெண்மணி மீண்டும் சுவாமியைத் தரிசிக்க வந்தார். அவர் மிகுந்த தேஜஸூடன் மிளிர்ந்தார். சுவாமி அவரிடம் சாவித்திரி நூல் பற்றி கேட்டார். அப்பெண்மணி அனுபவித்து, அனுபவித்து தான் பெற்ற பேரனுபவத்தை சுவாமியுடன் பகிர்ந்து கொண்டார். உடன் வந்த அவரின் தாயாருக்கு ஒரே ஆச்சரியம், தன் மகளுக்கு இவ்வளவு தெரியுமா? தாய் வியந்து போனார்.

அப்பெண்மணி சுவாமியின் சன்னிதியில் தன்னை மறந்து இருந்தார். சுவாமி தன் கவனத்தை எல்லாம் அப்பெண்மணியிடம் செலுத்தினார். அப்பெண்மணி சுவாமியின் நாம ஜபத்தைக் கேட்க விரும்பினார்.


சுவாமி தன் நாமத்தையே பாடி நிருத்தியம் செய்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அம்மாது அண்ணாமலையாரின் கோவிலை தரிசனம் செய்ய விரும்பினார். சுவாமி அவரைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று அத்தனை கருவறைகளையும் காட்டினார். மலைமேல் உள்ள குகைகளைக் காண அப்பெண்மணி விரும்பினார். சுவாமி அவரை மலையில் உள்ள அத்தனை பிரசித்தி பெற்ற குகைகளுக்கும் அழைத்துச் சென்றார்.

இவ்வாறாக அப்பெண்மணியின் ஒவ்வொரு விருப்பத்தையும் சுவாமி நிறைவேற்றினார். அப்பெண் நிறைநிலை அடைந்தவர் போல் தோன்றினார். அப்பெண்மணி ஊர் திரும்பும் நாள் வந்தது. அப்பெண்மணியின் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய் பெருகியது. சுவாமி ஒரு பெரிய மல்லிகைப் பூச்சரத்தை அவரிடம் கொடுத்தார். அதைக் கூந்தலில் சூட்டிக் கொள்ளச் சொன்னார். மலரைச் சூடிக்கொண்டு அப்பெண்மணி சுவாமியை நமஸ்கரித்தார். சுவாமி தன் இரு கரங்களையும் உயர்த்தி அவருக்கு ஆசி வழங்கினார். சுவாமி விடையளித்தார்.

அப்பெண்மணி தன் தாயுடன் அங்கிருந்து மெதுவாகச் சென்றார். சுவாமி தெரு வரை சென்று அவர்களை வழியனுப்பி வைத்தார். வீட்டிற்குள் சுவாமி நுழையும்போது தன் திருவிழியில் வழிந்த அந்த கங்கையைத் துடைத்தபடி வந்தார். அப்பெண்மணி ஊர் சென்ற சில நாட்களில் அவர் அணிந்திருந்த ஆறு சவரன் நகைக்காகக் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். சுவாமியின் அன்பைப் பெற்றவர், தான் உயிருடன் வாழ்ந்த காலத்திலேயே சுவாமியின் பிரம்ம சொரூபத்தில் கரைந்த அந்தப் பெண்மணி தன் சரீரத்தை விட்டொழித்து விடுதலை பெற்றார்.

# மரணத்தின் நறுமணம்




சாவு, இறப்பு, இன்னும் என்னென்னவோ வார்த்தைகள். சாதாரண மனிதன் சொல்லி துக்கிக்கும் இச்சொல், ஞானியர் வாயிலாகக் கேட்கும்போது வரும் ஒருவித சுகம், ஆனந்தம் வித்தியாசமானது.

“சுவாமி இவர் எப்பொழுதும் சாவைப் பற்றியே பேசுகிறார். கவலையாக இருக்கிறது சுவாமி. நீங்கள்தான் அவருக்குச் சொல்ல வேண்டும் சுவாமி.”

மனைவி சன்னதித்தெரு வீட்டின் கூடத்தில் அமர்ந்திருந்த சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களிடம் முறையிட்டார். சுவாமி வெகு நேரம் அமைதியாக இருந்தார்.

“அவர் J.K. சொல்லும் இறப்பு குறித்து பேசுகிறார் அம்மா. கவலை வேண்டாம் அம்மா.”

சற்று நேரம் கடந்தது. சுவாமி முழுமையாக ஒரு சிகரெட்டை முடித்துவிட்டு அடுத்ததை எடுத்தார். அழகாக அதைப் பற்ற வைத்தார்.

இரண்டு கைவிரல்களாலும் சிகரெட்டை உள்ளடக்கி உறிஞ்சிக் குடித்தும் இம்மியளவு புகையும் வெளிவரவில்லை. ஆனால் முகமலர் மலர்ந்து விரிந்து சுகமான நறுமணத்தைப் பரப்பியது.

“ஒருவர் உயிருடன் இருக்கும்போதே சாவின் அனுபவங்களை அறிய முடியும். ஒருவரின் அடையாளங்கள் போய்விட்டால் அது இறப்புத்தானே? உங்கள் கணவர் அந்த மாதிரியான இறப்பு குறித்து பேசுகிறார் அம்மா. கவலை தேவையில்லை அம்மா. அவர் நீண்ட காலம் வாழ்வார் அம்மா.”

அந்த அம்மையார் முகத்தில் நிம்மதியும் ஆனந்தமும் பிரகாசித்தது.

மற்றொரு சம்பவம்:

“சுவாமி நாங்கள் அடுத்த மாதம் எங்கள் புது வீட்டுக்குப் போகப்போறோமே!”

அந்த பத்து வயது பாலகன் சந்தோஷமாக சுவாமியிடம் சொன்னான். அவனும் அவன் பெற்றோர்களும் தங்கள் புது வீட்டின் கிரஹபிரவேசச் செய்தியை சுவாமியிடம் சொல்லி ஆசீர்வாதம் வாங்க வந்திருந்தார்கள். அந்தக் குழந்தையின் கையில் கிரஹப்பிரவேச அழைப்பிதழைக் கொடுத்து சுவாமியிடம் கொடுக்கச் சொன்னார்கள். குழந்தை கொடுத்த அழைப்பிதழை சுவாமி வாங்கி தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார். அந்தக் குழந்தையின் கரங்களைப் பிரியமாகப் பிடித்துக் கொண்டார்.

“தம்பி. அப்பா, அம்மா, அண்ணன் அந்த புது வீட்டிற்கு போகட்டும். நாம் என் தந்தையின் பொன் அரண்மனைக்குப் போகலாம் தம்பி. அது உன் தந்தை கட்டியிருப்பதைவிட மிகவும் பெரியது. அழகானது. என்ன, நாம் அங்கே செல்லலாமா?”

சுவாமி செல்லமாக வினவ, குழந்தை ஆர்வத்தோடு தலையாட்டினான். பெற்றோர்கள் சுவாமி தங்கள் மகன் மீது தனிக் கவனம் செலுத்துவதைக் கண்டு பூரித்துப் போனார்கள்.

புது வீட்டின் கிரஹபிரவேசத்திற்கு சில நாட்கள் முன்பு அந்த பத்து வயது பாலகன் இறைவனின் சொர்ண மாளிகை சென்றடைந்தான். இன்று முதுமையின் முழுமையில் இருந்தாலும் அந்த பெற்றோர்கள் இன்றுவரை சுவாமியையும், தங்கள் குழந்தையையும் நினைவில் நிறுத்தி வாழ்ந்து வருகிறார்கள்.

# மரண வரம்



காலை சுமார் 11 மணி இருக்கும்.

“சுவாமி தபால்காரர் வந்திருக்கிறார்” வாயிற்காப்போன் தெரிவிக்க, சுவாமி சன்னதித் தெரு வீட்டின் வாசலுக்குச் சென்றார். சற்று நேரத்தில் கைநிறையக் கடிதங்களுடன் உள்ளே வந்தார். கவனமாக ஒவ்வொரு கடிதமாகப் பார்த்துக்கொண்டே வந்தவர், திடீரென ஒரு போஸ்ட் கார்டை மட்டும் தனியாக எடுத்தார்.

“பார்த்தசாரதி இதைப் படி” சுவாமி கடிதத்தை என்னிடம் கொடுத்தார்.

எனது இருக்கையிலிருந்து எழுந்து சுவாமியிடம் சென்று, அந்த போஸ்ட் கார்டை வாங்கி சற்றே உரக்கப் படித்தேன். சுத்தமான ஆங்கிலத்தில் தெளிவான எழுத்துக்களுடன் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

“சுவாமியின் திருவடிகளுக்கு எனது நமஸ்காரங்கள். எனக்கு இப்போது 85 வயதாகிறது. எனது வாழ்க்கையை நான் நன்கு வாழ்ந்துவிட்டேன். குடும்பத்துக்குச் செய்யவேண்டிய அத்தனை காரியங்களையும் நான் செய்து முடித்துவிட்டேன். தற்சமயம் எனது உடல் பலவித உபாதைகளால் சிரமப்படுகிறது. எங்கே எனது பிள்ளைகளுக்கு நான் பாரமாகிவிடுவேனோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. எனவே, சுவாமி எனக்கு மரணத்தை அருளுங்கள். மரணம் என்னும் ஒரே வரத்தை தாங்கள் எனக்குத் தரவேண்டும். தங்களின் அன்பன்.....

சுவாமி அக்கடிதத்தை நான் படித்தவுடன் சிறிது நேரம் மௌனாமாயிருந்தார்.

“மீண்டும் படி பார்த்தசாரதி.”

மீண்டும் படித்தேன், மறுபடியும் சுவாமி படிக்கச் சொன்னார், படித்தேன். இவ்வாறு பல தடவை அக்கடிதத்தை படிக்கச் செய்து, பின்பு நீண்ட நேரம் ஆழ்ந்த மௌனத்தில் சுவாமி அமர்ந்திருந்தார்.

பின் கணீரென, கம்பீரமான குரலில் கூறினார்.

“இந்தப் பிச்சைக்காரன் அவர் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டான். அவருக்கு மரணத்தை அளிக்கிறான். அந்த நண்பரின் முடிவு அமைதியானதாக இருக்கட்டும்.”

சுவாமியின் முகம் ஜொலித்துக் கொண்டிருந்தது.

நானும் அங்கிருந்த அனைவரும் மெய்சிலிர்த்து அமைதியாக அமர்ந்திருந்தோம். சில நொடிகள் கடந்தன. சுவாமி திடீரென

“பார்த்தசாரதி மணி என்ன?” என வினவினார்.

“பன்னிரெண்டு, சுவாமி” பணிவோடு சொன்னேன். அன்று இரவு சுவாமியுடன் ஆழ்ந்த அமைதியில் விழிப்போடு பொழுது கழிந்தது.

மறுநாள் காலை சுமார் 7 மணி இருக்கும். வாயிற்காப்போன் தந்தி வந்திருப்பதாக அறிவித்தான். சுவாமி வெளியே சென்று தந்தியைப் பெற்றுக்கொண்டு உள்ளே வந்தார். தந்தியை என் கையில் கொடுத்துப் படிக்கச் சொன்னார். தந்தியின் மூடிய பகுதியை கிழித்து விஷயத்தை படிக்கலானேன்.

“தந்தை மதியம் 12 மணிக்கு காலமானார். முடிவு அமைதியாக இருந்தது. நன்றி சுவாமி.”

அந்த முதியவரின் மகன்தான் தந்தி கொடுத்திருந்தான். பிரமிப்புடன் சுவாமியின் முகத்தை நான் பார்க்க, சுவாமி மர்மமான குறும்புச் சிரிப்போடு என்னைப் பார்த்தார்.

# கந்த சஷ்டி கவசம்



அந்த பக்தியும், ஞானமும், எளிமையும், அன்பும் நிறைந்த பணக்காரக் குடும்பத் தலைவன் அகாலமாக விதேஹ முக்தி அடைந்தார். சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் மிகவும் பிரியமான பக்தரான அந்தக் குடும்பத் தலைவரின் பிரிவால் மொத்த குடும்பமும் நிலைகுலைந்து போனது.

எதற்கும் கலங்காத அந்தக் குடும்பத் தலைவரின் தந்தையே சுவாமியைப் பார்க்கவந்து வாய்விட்டுச் கதறி அழுதார். சுவாமியின் விழிகளிலும் நீர் பெருக்கெடுத்து ஓடியது. சுவாமி அக்குடும்பத்தினரை ஆசுவாசப்படுத்தினார். தன் தந்தை அக்குடும்பத்தைப் பாதுகாப்பார் என உறுதி அளித்தார். அக்குடும்பம் ஊர் திரும்பியது.

அதிகமான பணம் மற்றும் சொத்துக்களினால் வரும் துன்பங்களை எல்லாம் சுவாமியின் அருளினால் சுலபமாக அக்குடும்பத்தினர் கடந்தார்கள். அதற்கு விலையாக சுவாமியின் அருளால் சில கோடிகளை இழந்தார்கள். சுவாமி அக்குடும்பத்தின் பாதுகாவலராக இருப்பதை

அக்குடும்பத்தினர் உணர்ந்தனர்.

சுவாமியின் நாமத்திலும் நினைவிலும் அவர்கள் வாழ்க்கை ஓரளவு நிம்மதியாகக் கடந்தது. அடுத்த சில மாதங்களில் அக்குடும்பத்தினர் எதிர்பாராத ஒரு பெரிய சிக்கலில் மாட்டித் தவித்தனர். சுவாமியிடம் சென்றார்கள். சுவாமியிடம் நடந்ததைச் சொன்னார்கள். சுவாமி அவர்கள் சொன்னதைக் கவனமாகக் கேட்டார். வெகு நேரம் மௌனமாக இருந்தார்.

அந்தக் குடும்பத்தினரை சுவாமி கந்த சஷ்டி கவசத்தைப் பாடச் சொன்னார்.

அக்குடும்பமே முருகப்பெருமான் பக்தர்கள். அனைவருக்கும் கந்தசஷ்டி கவசம் மனப்பாடமாகத் தெரியும். அவர்கள் பாட ஆரம்பித்தார்கள். அவர்கள் பாடி முடித்ததும் சுவாமி மீண்டும் பாடச் சொன்னார். அக்குடும்பத்தினர் சுவாமியிடம் இருந்த அந்த மூன்று நாட்களும் சுவாமி அவர்களைக் கந்தசஷ்டி கவசத்தையே பாடவைத்தார்.

அவர்கள் ஊர் திரும்பும் நாள் வந்தது. சுவாமி அந்தக் குடும்ப உறுப்பினர் ஒருவரை அழைத்து, அவரிடம் கந்தசஷ்டி கவசத்தை ஒரு நாளில் 36 முறை, அடுத்த மூன்று மாதங்களுக்கும் மனதிற்குள் பாட வேண்டும் எனக் கூறினார். அவரும் சரியென சுவாமியிடம் ஒப்புக்கொண்டார். சுவாமி முன்னால் கந்தசஷ்டி கவசத்தைப் பாடிப் பாடி அது அவருக்கு அவரின் சுவாசக் காற்று போல் ஆகிவிட்டது.

குடும்பத்தார் ஊர் திரும்பினர். அவர் மனதில் கந்தசஷ்டி கவசம் ஓடியபடி இருந்தது. அவரைக் கந்தசஷ்டி கவசம் முழுமையாக ஆட்கொண்டது. 36 முறை ஒரே நாளில் உச்சாடனம் செய்வது அவருக்கு மிகச் சுலபமாக இருந்தது. அவருக்கு சுவாமியும், கந்தசஷ்டி கவசமுமன்றி


வேறு எதுவுமே மனதில் தோன்றவில்லை.

அவர் அன்றாடக் காரியங்களைச் சிரத்தையுடன் செய்தாலும் சஷ்டி கவசம் 36 முறை சொல்வது கடினமாகவே அவருக்குத் தெரியவில்லை. மாறாக அவருள் தெளிவு பிறந்தது. தைரியம் எழுந்தது. பிரச்சனைகளின் தாக்கம் அவரை விட்டு விலகி விட்டது. மொத்தத்தில் அவருக்கு நேரவிருந்த தேவையற்ற விஷயங்கள் யாவும் விலகிச் சென்றுவிட்டன. அவர் அமைதி அடைந்தார். அவரடைந்த அமைதியின் விளைவால் அவர் வாழ்வில் மங்களகரமான காரியங்கள் நடந்தன. சுவாமியையும், சஷ்டியையும் இன்றுவரை அவர் மறக்காமல் இருக்கிறார். மகிழ்ச்சியாக இருக்கிறார்.

“பாலன் தேவராயன் பகர்ந்தது எல்லாம் சத்தியம் நண்பா. கந்தசஷ்டி கவசம் அனைவரையும் காக்கும் நண்பா.”

சுவாமி தன் நண்பர்களுக்கு உறுதியளித்தார். சுவாமியை நம்புவோம். சுவாமியை அடைவோம்.

# ஒளியில் திருவிளையாடல்



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில், பல சமயங்களில் பகலில் கூட விளக்கின் வெளிச்சம் தேவைப்படும். சுவாமியின் இருக்கைக்கு நேர் மேலே விட்டத்தில், எதிரில் இருக்கும் சுவரை நோக்கி ஒரு குழல் விளக்கு பொருத்தப்பட்டிருக்கும். அதற்கு நேர் எதிரே சுவற்றில் ஒரு குழல் விளக்கு பொருத்தப்பட்டிருக்கும்.

சுவாமி தன்னைத் தரிசிக்க வந்திருக்கும் அன்பரை நன்கு பார்க்க விரும்பினால் தன் இருக்கைக்கு மேல் உள்ள குழல் விளக்கை எரிய விடுவார். விளக்கின் வெளிச்சம் வந்திருக்கும் பக்தரைப் பளிச்செனக் காட்டும். ஆனால் அன்பருக்கோ சுவாமி தன்னைப் பார்ப்பது தெரியாது.

சுவாமி அன்பருக்கு விடை கொடுத்து அனுப்பும்போது, “நண்பா உன்னை இந்த பிச்சைக்காரன் நன்கு பார்த்துவிட்டான். உன்னை என் தந்தை ஆசீர்வதிக்கிறார்,” என்று கூறுவார்.

வந்திருக்கும் நண்பர் சுவாமியின், திருவுருவை நன்கு பார்த்து மனதில் நிலைபெறச் செய்ய வேண்டுமென விரும்பினால், சுவாமியின் எதிரில் உள்ள சுவரில் பொருத்தியிருக்கும் குழல் விளக்கை சுவாமி எரிய விடுவார். அந்த விளக்கின் வெளிச்சத்தில் சுவாமியின் திருமேனி பளீரென ஜொலித்து பார்ப்பவரின் மனதில் நீங்கா இடம் பெற்றுவிடும். இந்த பாக்கியம் எல்லோருக்கும் கிட்டாது. குறிப்பிட்ட சில ஆன்மீக சாதகருக்கு மட்டுமே இத்தகைய பாக்கியத்தை சுவாமி அருளுவார். அதுவும் இச்செயல் மிக அபூர்வமாகவே நடைபெறும். சுவாமி அத்தகைய அருளாளருக்கு கூறுவார்,

“நண்பா இந்த பிச்சைக்காரனை நன்கு பார்த்துக்கொள். மனதில் இருத்திக் கொள். அதுவே உனக்கு தியானமாகும்,”

சுவாமி இது போன்ற பற்பல வழிமுறைகளைக் கையாள்வார். அவை யாவும் அற்புதமானவை. மிகவும் நுணுக்கமானவை. அந்த வழிமுறைகளை ஒருவர் அறிந்து கொண்டாலே போதும், சுவாமியின் பேரருள் எங்ஙனம் அன்பர்களுக்குச் செலுத்தப்படுகிறது என்பதை ஓரளவிற்கு புரிந்து கொள்ளலாம்.

# யோகியின் சமாதிநிலை



“என் தந்தை ஒருவரே இருக்கிறார். வேறு எவரும் இல்லை. வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும்,வருங்காலத்திலும் என் தந்தை ஒருவரே எப்பொழுதும் இருக்கிறார்.”

அன்று காலையிலிருந்து சுவாமி இவ்வாறு சொல்லிக்கொண்டே இருந்தார். ஒவ்வொரு முறை கூறும்போதும் அவரது பாவனையில் தெய்வீகம் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. வேறு எதுவுமே கூற சுவாமி முற்படவில்லை. எவரேனும் வேறு பேச்சை எடுத்தாலும், சுவாமி இதே வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தார். அந்தச் சொற்களில் பலவிதமான உணர்வுகளும், தெய்வ சக்தியும் நிரம்பியிருந்ததை அங்குள்ளோர் உணர்ந்து கொண்டிருந்தனர். சுவாமியின் அந்தச் சமாதி நிலை அனைவருக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது.

பேரருள் பொங்கி வழிந்தோட சுவாமி கூறிய இந்தச் சொற்றொடர் பக்தர்கள் இதயத்தை நிறைத்தது. சுவாமி அங்கு குழுமியிருந்தவர்களைப் பற்றியோ, செல்பவர்களைப் பற்றியோ, முன்னால் வந்து அமர்ந்தவர்களைப் பற்றியோ சற்றும் பொருட்படுத்தாமல் அதே சொற்களையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார். சில

சமயங்களில் சுவாமியின் குரல் தழுதழுத்தது. சில நேரங்களில் குரலில் கம்பீரம் தோன்றியது. மற்றும் சில நேரங்களில் ஆன்மாவின் உன்மத்த நிலை, சிரிப்பலையில் நனைந்தபடி பேரானந்த வெளிப்பாடாக இருந்தது. சுவாமியின் சமாதிநிலை பார்ப்பவர்களின் இதயத்தைப் புனிதமாக்கியது.

சுவாமியின் முன்னே குழுமியிருந்தோரில் ஒரு படித்த பெண்மணி அமர்ந்திருந்தார். அவர் சுவாமி கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார். மீண்டும் மீண்டும் சுவாமி சொன்னதையே கூறி வந்தார். பொறுமையிழந்த அப்பெண்மணி சுவாமியைக் குறுக்கீடு செய்தார்.

“தாங்கள் கூறுவது உண்மை சுவாமி, ஆனால், அகங்காரத்தை அழிப்பது எப்படி சுவாமி?”

“என் தந்தை ஒருவரே இருக்கிறார். வேறு எவரும் இல்லை. வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் என் தந்தை ஒருவரே எப்பொழுதும் இருக்கிறார்.”

சுவாமி சற்று உரக்கக் கூறினார். அந்தப் படித்த பெண்மணி சுவாமியின் குரலுக்கேற்ப தன் குரலையும் சற்று உயத்தினார்.

“நான்” எனும் அகங்காரத்தைப் போக்குவது எப்படி சுவாமி?”

“என் தந்தை ஒருவரே இருக்கிறார். வேறு எவரும் இல்லை. வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் என் தந்தை ஒருவரே எப்பொழுதும் இருக்கிறார்.” சுவாமி இன்னும் உரக்கச் சொன்னார்.

சுவாமியின் குரலுக்கு ஏற்றவாறு அந்தப் பெண்மணியும் தன் குரலை இன்னும் உயர்த்தி அதே கேள்வியைக் கேட்டார். சுவாமி தன் ஆசனத்தில் இருந்து எழுந்தார். ஓங்காரமாக உச்ச ஸ்தாதியில் “என் தந்தை ஒருவரே இருக்கிறார். வேறு எவரும் இல்லை. வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் என் தந்தை ஒருவரே எப்பொழுதும் இருக்கிறார்.” எனக் கூறி,

அப்பெண்மணி மறுமொழி சொல்வதற்கு வாய்ப்பளிக்காமல் அங்கிருந்த ஒரு வாழைப்பழத்தை கையிலெடுத்து, கொடுத்து "இந்தப் பிச்சைக்காரன் உங்களை அனுப்புகிறான்" என்று கூறி அனுப்பிவிட்டார்.

மேற்கண்டவாறு, சுவாமி பல சமயங்களில் பலவிதமாக தந்தையைப் பற்றியும், நாமத்தைப் பற்றியும் கூறுவார்.

"யோகி ராம்சுரத்குமார் என்ற இந்த நாமம், இந்தப் பிச்சைக்காரனின் பெயர் அல்ல. இது என் தந்தையின் நாமம், இந்தப் பிச்சைக்காரன் 1952 ல் எனது தந்தை சுவாமி ராமதாசரின் புனித கமல பாதங்களில் செத்துவிட்டான். அதன்பின்பு என் தந்தை மட்டுமே இங்கே வாழ்கிறார். இந்தப் பிச்சைக்காரன் அல்ல. இந்த நாமத்தை நினைவில் கொள். உன் ஆன்மிக வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. என் தந்தை உன்னை பார்த்துக்கொள்வார். என் தந்தை உன்னை ஆட்கொள்வார்."

இவ்விதம் சொல்லி, சுவாமியே தன் நாமத்தை இனிமையான குரலில் பாடுவார். சிற்சில சமயங்களில் நாமத்தைப் பாடியவாறு சுவாமி நர்தனமும் செய்வதைக் காண்பவர்கள், தங்களின் அகங்காரம் ஒழிந்து ஒருவிதமான உன்மத்த நிலை தங்களுக்குள் ஏற்படுவதைஉணர்ந்தார்கள்.

"என் தந்தையை நினைப்பதே வாழ்க்கை. என் தந்தையை மறந்துவிட்டால் அதுதான் இறப்பு."

மற்றொரு நாள் முழுவதும் சுவாமி இவ்விதமே கூறிக்கொண்டிருந்தார். "என் தந்தையை மறந்துவிட்டால் அதுதான் இறப்பு, நீங்கள் வாழ விரும்பினால் என் தந்தையை விடாது நினையுங்கள்!"

இவ்விதம் பல சமயங்களில் சுவாமி ஆழ்ந்த சமாதிநிலையில் மேற்கூறிய வாசகங்களைக்கூறி பக்தர்களின் மனத்தை இறை சிந்தனையில் உட்படுத்த பேரருள் புரிந்தார்.

# குறை காணாதே



சுவாமியின் சன்னதித் தெரு வீட்டில், சுவாமியின் முன் பல பக்தர்கள் பரவசத்துடன் அமர்ந்திருந்தனர். சுவாமி பலதரப்பட்ட ஞானிகள், ஆச்சாரியார்கள், முனிவர்கள் ஆகியோர் பற்றி விரிவாகக் கூறிக் கொண்டிருந்தார். பேச்சு ஆச்சார்யா ரஜினீஷைப் பற்றியும் அவரது உபதேசங்களைப் பற்றியும் திரும்பியது. ஆச்சார்யா ரஜினீஷின் உபதேசங்களைச் சுருக்கமாக சுவாமி நகைச்சுவையுடன் கூறிக்கொண்டு வந்தார். அங்கு ஒரே ஆனந்தக் கொண்டாட்டமாக இருந்தது. பக்தர்களும் சுவாமியும் பேரானந்தத்தில் வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

பலமுறை நான் சுவாமியிடம் கவனித்திருக்கிறேன், சுவாமி சிரிக்கும்போது அங்கே இருப்போர் அனைவரும் ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருப்பார்கள். சுவாமி மௌனமாக வீற்றிருக்கும்போது அங்கே ஒருவிதமான பேரமைதியை அனைவரும் அனுபவிப்பார்கள். சுவாமி கோபத்தில் இருந்தாலோ எல்லோரும் நடுநடுங்கிப் போவார்கள். சுவாமியின் சூழலை சுவாமிதான் கம்பீரமாக நிர்வகிக்கிறார் என்பதை

நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஆச்சார்யா ரஜினீஷின் உபதேசங்களை நகைச்சுவையுடன் சுவாமி விவரிப்பதைக் கண்டு துணிச்சலடைந்த ஒரு நண்பர், ரஜினீஷின் வாழ்க்கையும் உபதேசமும் மதக் கோட்பாடுகளுக்குப் புறம்பாக இருப்பதாகவும், ரஜினீஷ் தவறான வாழ்க்கைமுறையை அனுஷ்டிப்பதாகவும் கூறினார். சுவாமி ரௌத்திரமானார்.

"ஆச்சார்யா ரஜினீஷைப் பற்றிக் குறை கூறுகிறாயா? ஆச்சார்யா ரஜினீஷை இந்தப் பிச்சைக்காரன் முன் தவறாகப் பேச உனக்கு எப்படித் தைரியம் வந்தது? நீ தினமும் 108 தடவை "ஜெய ஜெய ரஜினீஷ், ஜெய ஜெய ரஜினீஷ்" என்று எழுத வேண்டும். எழுதாவிட்டால் நீ நரகத்துக்கு போவாய். ஞாபகம் வைத்துக்கொள்."

சுவாமி உடனடியாக அந்த நண்பரை அங்கிருந்து அனுப்பிவிட்டார். அந்த நண்பர் சென்றதும் சுவாமி சொன்னார்.

"ஆச்சார்யர்களைப் பற்றியும், ஞானிகளைப் பற்றியும், சாதுக்களைப் பற்றியும், சன்னியாசிகளைப் பற்றியும் தவறாகப் பேசுவது 'தந்தையை' அடையத் தடை செய்யும். தந்தைதான் இவர்கள் ரூபத்தில் வருகிறார். தந்தையின் சொரூபங்களை குறைகூறுவது முற்றிலும் தவறாகும். இந்தப் பிச்சைக்காரனின் நண்பர்கள் அந்தத் தவறைச் செய்யக்கூடாது.

ஒரு நீண்ட அமைதி, சுவாமி மீண்டும் விவரிக்கலானார்.

"அனைத்து சாதுக்களையும், ஞானிகளையும், ஆச்சார்யர்களையும், சன்னியாசிகளையும், ஆன்மீகச் சான்றோர்களையும் நமஸ்கரித்துக் கொள்ளுங்கள். ஆனால், உங்கள் குருவின் மீது மட்டும் பரிபூரண நம்பிக்கை வையுங்கள்."

இதைக் கேட்ட என் உள்ளம் சுவாமியின் பிரவாகத்தில் கரைந்து போய்விட்டது.

# குருவில் குறை காணாதே



காவி உடையணிந்த கிரஹஸ்தர் அவர். சுவாமியை சில வருடங்களாக அவருக்குத் தெரியும். சுவாமி தனக்கு தீட்சை அளித்தார் என எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருப்பார். ஆனால், சுவாமி அவருக்கு தீட்சை அளிக்கவில்லை எனப் பல சமயங்களில் சொல்லியும், அந்த அன்பர் விடாது சுவாமிதான் தன் தீட்சா குரு என அனைவரிடமும் சொல்லி வந்தார். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவரைப் பின்பற்றுபவர்கள் பலர் இருந்தனர். அவர் ஒரு தொண்டு நிறுவனமும் நிறுவி, நிர்வாகம் செய்து வந்தார். அந்தத் தொண்டு நிறுவனம் மூலம் ஒரு பத்திரிகையும் நடத்தி வந்தார்.

சுவாமியின் திருமேனி வயதின் முதிர்ச்சியில் தளர்வடைய, சில பெண்கள் அவர்தம் திருமேனியைப் பராமரிக்க தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். சுவாமியைத் தங்கள் இல்லத்துக்கே அழைத்துச் சென்று கவனமுடன் அவர் மேனியின் ஆரோக்கியத்துக்கு பங்கம் வராத உணவும், உடையும் அளித்து பராமரித்து வந்தார்கள். தந்தைதான் தன் சரீரத்தைக் கவனிப்பதற்காக அந்தப் பெண்களை அனுப்பியுள்ளார்

என்று சுவாமி அனைவரிடமும் சொன்னார். அந்தப் பெண்களிடமும் சுவாமி தன் கருணையையும், அருளையும் வாரி வழங்கினார்.

காவி உடை அணிந்த கிரஹஸ்தர், சுவாமியிடம் தன் நெருக்கத்தை மேலும் அதிகரித்துக் கொள்வதற்காக அந்தப் பெண்களை வானளாவப் புகழ ஆரம்பித்தார். அந்தப் பெண்களைப் புகழ்ந்தால் சுவாமிக்கு மிகவும் பிடிக்கும் என எண்ணிக்கொண்டார். சுவாமி சொன்ன வார்த்தைகளின் சாராம்சத்தைப் புரிந்து கொள்ளாது அந்த அன்பர் தன்னுடைய பத்திரிகையில் அந்தப் பெண்களைப் பற்றி மிகவும் சிலாகித்து எழுதினார். அந்தப் பெண்களின் அன்பினால் சுவாமி தடுமாறிக் கீழே விழுந்துவிட்டார் எனவும் அந்தக் கட்டுரையில் எழுதியிருந்தார். அந்தப் பத்திரிகையை தற்செயலாகப் படித்த நான் கோபத்தில் கொந்தளித்துவிட்டேன்.

பக்தர்கள் பலர் நாம ஜெபம் செய்யும் கூட்டத்துக்கு சுவாமியை அழைத்திருந்தார்கள். சுவாமியும் அந்தப் பெண்களும் அங்கே சென்றிருந்தார்கள். கிரஹஸ்தர்தான் அந்த நாம ஜெபம் சொல்லும் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கூட்டத்தில் உள்ள அனைவருக்கும் அவரது பத்திரிகை விநியோகம் செய்யப்பட்டது. பத்திரிகையில் உள்ள கட்டுரையை சுவாமி அங்குள்ள அனைவரையும் ஒவ்வொருவராகப் படிக்கச் சொன்னார். ஒவ்வொருவரும் கட்டுரையை வாய்விட்டுப் படித்தார்கள்.

சுவாமி, அவர்கள் ஒவ்வொருவரின் அபிப்பிராயத்தையும் கேட்டார். அவர்களும் அக்கட்டுரையை வானளாவப் புகழ்ந்தார்கள். அக்கட்டுரை சுவாமியின் திருவருளாலேதான் வெளிவந்ததாகவும், அதன்மூலம் அப்பெண்களின் மேன்மை புரிய வந்ததாகவும் கூறினார்கள். ஒவ்வொருவரும் இவ்வாறு கூறும்போதும் சுவாமி அட்டகாசமாகப் பெருஞ்சிரிப்பு சிரித்தபடி இருந்தார். மூன்று நாட்கள் தொடர்ச்சியாக

இக்கட்டுரையையே அங்குள்ளோர் அனைவரையும் சுவாமி திரும்பத் திரும்ப படிக்க வைத்து அவர்களிடம் கருத்தைக் கேட்டார். படித்தவர்களும், பெருமிதத்தோடு கட்டுரையைப் புகழ்ந்து தள்ளியபடி இருந்தார்கள்.

மூன்று தினங்களுக்குப் பின் சுவாமி மீண்டும் அந்தப் பெண்களை அழைத்துக் கொண்டு அவர்களது இல்லத்துக்குச் சென்றார். ஒரு நண்பரின் காரில் நான் சுவாமியையும், அந்தப் பெண்களையும் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். மறுநாள் காலை சுமார் 11 மணி இருக்கும், ஆசிரமத்துக்கு அடிகோலிய ஜனார்த்தனன், ராமமூர்த்தி இவர்களுடன் நானும் ஆசிரம கட்டுமான விஷயமாக சுவாமியிடம் அறிவுரை கேட்பதற்காக அந்த இல்லத்துக்குச் சென்றிருந்தேன். நாங்கள் சென்ற சமயம் சுமார் 25 பக்தர்கள் வரை குழுமியிருந்தார்கள். அவர்களை சுவாமி பத்திரிகையில் அந்தப் பெண்களைப் பற்றி வந்திருந்த கட்டுரையை மீண்டும் மீண்டும் படிக்க வைத்துக்கொண்டிருந்தார். நாங்கள் சுவாமியை நமஸ்காரம் செய்துவிட்டு சுவாமி காட்டிய இடத்தில் அமர்ந்தோம். யாரோ அந்தக் கட்டுரையைப் படித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்கக் கேட்க எனக்கு வெகுவாக கோபம் பீறிட்டு வந்தது.

அந்தக் கட்டுரையை நின்றபடி வாய்விட்டுப் படிக்குமாறு ஜனார்த்தனனிடம் சுவாமி சொன்னார். அவர் படிக்கும் பொழுது சுவாமி கையில் ஒரு பிரம்பை உயர்த்தி பிடித்துக் கொண்டு ஜனார்த்தனத்தை அடிக்க எத்தனிப்பது போல் நின்றார். அவர் படித்து முடித்தபின் ஜனார்த்தனத்தை அமரச் சொல்லிவிட்டு என்னை அழைத்தார்.

“பார்த்தசாரதி, இதைப் படிக்கலாம்.” சுவாமி பத்திரிகையில் அந்தக் கட்டுரை வந்த பக்கத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார்.

நான் சத்தமாக படிக்க ஆரம்பித்தேன். சுவாமி என்னை அடிக்க எத்தனிப்பது போல் பிரம்பை உயர்த்திப் பிடித்துக்கொண்டு என்னெதிரே

நின்றார். எந்தப் பகுதியெல்லாம் அந்தக் கட்டுரையில் எனக்குப் பிடிக்கவில்லையோ, அதையெல்லாம் நான் மேலும் உரக்கப் படித்து சுவாமியை உற்றுப் பார்த்தேன். நான் பார்த்ததும் சுவாமி பிரம்புடன் இருந்த தன் கையை கீழே தளர்த்திக் கொண்டு முகத்தையும் தாழ்த்திக் கொள்வார். ஒருவழியாகப் படித்து முடித்தேன். அங்கேயே நின்று கொண்டிருந்தேன். சுவாமி என்னை அமரச் சொல்லவில்லை. நான் நின்றுகொண்டே இருந்தேன். சுவாமி அங்குள்ள இடத்தில் குறுக்கும் நெடுக்குமாக சில கணங்கள் நடந்துவிட்டு என்னெதிரே மீண்டும் வந்து நின்றார்.

“இந்தக் கட்டுரை சரியானதுதானா?” சுவாமி கேட்டார்.

“இல்லை” என்று சத்தமாகக் குரல் கொடுத்தேன்.

அங்கே இருந்த அனைவருக்கும் ஒரே அதிர்ச்சி. என்ன நடக்குமோ என்ற பயம் அங்கே இருந்த அனைவரது முகத்திலும் தெரிந்தது. சில நிமிடங்கள் கரைந்தன. நான் நின்று கொண்டு இருந்தேன். சுவாமி தன்னிடத்துக்குச் சென்று அமர்ந்தார். என்னை அழைத்து அவர் எதிரே உட்கார வைத்தார்.

“கட்டுரையில் எது உனக்குப் பிடிக்கவில்லை?” சுவாமி கேட்டார்.

“என் குரு வீழ்ந்துவிட்டார் என எப்படி அவர் எழுதலாம்?”

“அந்தச் சொல் ஒவ்வொன்றும் இந்தப் பிச்சைக்காரன் சொன்னதுதான்.”

“ஒரு ஞானி சொன்ன சொல்லை இப்படித்தானா அனர்த்தமாக, அபத்தமாக பொருள் செய்துகொள்வது? அதுவும் தன்னை ஒரு சாதுவெனப் பிரகடனப்படுத்திக் கொண்டவர் செய்யக்கூடிய செயலா இது?”

ஆங்காரமாகக் கேட்டேன். சுவாமி எழுந்துகொண்டார்.

ஒவ்வொருவரிடமாகச் சென்று அவர்களின் எதிரே நின்று கேட்டார்.

"நீ என்ன நினைக்கிறாய்? இந்தப் பிச்சைக்காரன் பாவியா, இவன் வீழ்ந்துவிட்டானா?" ஒவ்வொருவர் ஒரு பதில் சொன்னார்கள். ஒரு பக்தர் "சுவாமி நீங்கள் மிக உயரத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் கீழே விழ முடியாது" என்றார்.

"மிக உயரத்திலிருந்து விழுந்தால் உயிர் தப்பாது" சுவாமி பதிலுரைத்து அடுத்தவரிடம் சென்றார். அந்தப் பக்தை "உங்களிடம் நான் அசாத்திய நம்பிக்கையும், பக்தியும் கொண்டுள்ளேன்." என்று கூற, சுவாமி அடுத்தவரிடம் சென்று அதே கேள்வியைக் கேட்டார்.

"இந்தப் பிச்சைக்காரன் மோசமானவனா?" பக்தர் பதறியபடி கதறி அழுதார்.

"இவர் இந்தப் பிச்சைக்காரனின் வீழ்ச்சியைக் கண்டு அழுகிறார்."

சுவாமி தாட்சண்யம் இல்லாமல் கூறிவிட்டு என்னை நோக்கி வந்தார். இதே கேள்வியை என்னிடமும் அந்தக் குணங்கள் கடந்த அதீதத் தெய்வம் கேட்டது.

"இந்தக் கேள்வியே தவறானது சுவாமி" சற்றும் தயங்காமல் பதிலுரைத்தேன்.

"ஓ, இந்தக் கேள்வி தவறானது. பார்த்தசாரதி சொல்கிறான் இந்தக் கேள்வியே தவறானது என்று"

சுவாமி மீண்டும் தன் இருக்கையில் அமர்ந்தார்.

"பார்த்தசாரதி, உனக்கு இந்தக் கட்டுரை பிடிக்கவில்லை என்றால், இதை விமர்சனம் செய்து நீ ஒரு கட்டுரை எழுது."

"சரி சுவாமி, நான் எழுதுகிறேன். ஆனால் யார் அதைப் பிரசுரம்

செய்வது?” நான் கேட்டேன்.

“இந்தப் பிச்சைக்காரன் அந்தச் சாதுவிடம் கெஞ்சிக் கேட்டு உன் கட்டுரையை அவர் பத்திரிகையில் பிரசுரம் செய்யச் சொல்லுவான்.”

“அப்படியென்றால் நான் கண்டிப்பாக எழுதுவேன் சுவாமி.”

அங்கே இருந்த பக்தர்கள் அனைவரும் குருவைத் தவறாக விமர்சித்த ஒரு கட்டுரையைப் பாராட்டினோமே என பயந்து போனார்கள். திகிலான, நடுக்கமான பல நிமிடங்கள் கரைந்து கொண்டிருந்தன. சிறிது சிறிதாக குருவின் முகத்தில் சாந்தம் தவழ ஆரம்பித்தது. என்னுடைய ஆத்திரமும் குறைந்தது. பக்தர்களும் தங்கள் தவறை உணர்ந்தார்கள்.

“பார்த்தசாரதி, அந்தக் கட்டுரையின் ஆசிரியருக்கு சமுதாயத்தில் சிறிது மரியாதை இருக்கிறது. அதை நாம் கெடுக்க வேண்டாம். எனவே நீ கட்டுரை எழுத வேண்டாம்” சுவாமி சொன்னார்.

“சரி சுவாமி” நான் பணிவோடு சொன்னேன். என் மனம் அமைதியடைந்தது. எனினும் சில நாட்கள் கழித்து பக்தை ஒருவர் இந்தக் கட்டுரையையும் அதன் ஆசிரியரையும் கடுமையாக விமர்சித்து மற்றொரு ஆன்மீகப் பத்திரிகையில் எழுதினார்.

குரு, ஆண் பெண் பேதங்கள் கடந்தவர். குருவின் காரியங்கள் யாவும் ஒருவர் தேகாபிமானத்தைக் கடந்து தெய்வீக நிலையை அடைய வைக்கக் கூடியது. அதற்காக குரு விந்தையான காரியங்கள் செய்வார். குருவின் காரியங்கள் ஒருவருக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால், புரிந்துவிட்டது போல் பாவனை செய்து அந்தப் புனித காரியங்களைத் தவறாக விமர்சிக்கும் பாவத்தைப் பண்ணாமல் இருப்பது அனைவருக்கும் நல்லது.

# குரு பாரம்பரியம்



இளம் வயதில் சுவாமி, யோகியாக பரிணமிக்கும் முன்பு, அவர் பிறந்த நர்தரா கிராமத்தில் வலம் வந்த கபாடியா பாபாவைத்தான் தன் குரு என நினைத்திருந்தார். பாபாவின் ஆக்ஞையை ஏற்று பல நூல்கள் கற்றார். காசி சென்றார். சாரநாத் சென்றார். வாழ்வின் அன்றாட தர்மங்களைக் கற்றார். ஞானிகளைப் போஷித்து அவர்களின் ஆசிகளைப் பெறக் கற்றுக் கொண்டார். குடும்பத்தில் நல்ல பிள்ளையாக வாழக் கற்றார். புராணங்களையும், இதிகாசங்களையும், ஞானிகளின் உபதேசங்களையும் கற்றார்.

ஏதோ ஒருசில மெய்சிலிர்க்கும் ஆன்மீக அனுபவங்களும் வந்து போனது. இவை அனைத்திற்கும் காரணம் கபாடியா பாபாதான் என நம்பினார். எனவே குரு தீட்சைக்காக கபாடியா பாபாவை அணுகியபோது, பாபா அவரைக் கனிவோடு நோக்கி,

“உன் குரு நான் அல்ல”, என்று சொல்லும்போது அந்த வாலிபன் மனமொடிந்து போனான்.

“நீங்கள் என் குரு இல்லையெனில், என் குரு யார், எங்கிருக்கிறார்?” அந்த துடிப்பான வாலிபன் ஏக்கத்துடன் பாபாவிடம் கேட்டான்.

“இந்த பாரத கண்டத்தின் தெற்கே சென்று தேடுவாயாக.” பாபா பதிலுரைத்தார். வாலிபன் விக்கித்து நின்றான்.

“கலங்க வேண்டாம். உன் குருவே தகுந்த நேரத்தில் உன்னை அழைத்துக் கொள்வார். தற்போதுள்ள உன் கடமையைச் செவ்வனே செய்வாயாக.”

பாபா கனிவோடு தொடர்ந்து சொல்ல வாலிபன் சற்றே உற்சாகமடைந்தான்.

படிப்பு முடிந்தது. திருமணம் நடந்தது. ஆசிரியர் பணி கிடைத்தது. குழந்தைகள் பிறந்தன. உத்தியோக உயர்வு பெற்று ஒரு உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியரானார் அந்த வாலிபன். புறவாழ்வின் முன்னேற்றங்கள் எதுவும் அந்த தலைமை ஆசிரியர்க்கு திருப்தி அளிக்கவில்லை. இவையெல்லாம் அவர் தன் கடமையைக் கண்ணும் கருத்துமாகச் செய்ததினால் வந்தது.

ஆனால் அவருடைய வாழ்வின் நோக்கம் இதுவல்ல என ஏதோ ஒன்று உள்ளிருந்து சொல்லிக் கொண்டே இருந்தது. பல ஆன்மீக நூல்கள் படித்தார். ஞானியின் உபதேசங்களை முழு மனதோடு கற்றுக் கிரஹித்தார். கற்ற அனைத்தும் சூசகமாக பகவத் சாட்சாத்காரத்திற்குக் குருவின் கடாட்சம் தான் ஒரே வழி என பறையடித்துத் தெரிவிப்பது போலிருந்தது. ஆசிரியர் குருவைத் தேட ஆரம்பித்தார்.

நாட்டில் விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலமது. தீவிரமாக தேச விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வங்காளத்தின் அரவிந்தகோஷ் போராட்டங்களைக் கைவிட்டு ஆன்மீக சாதனையாலேயே சகலமும் சாதிக்க முடியும் என நம்பி புதுச்சேரி வந்து தவவாழ்வு வாழ்ந்து மற்ற அனைத்துத் தேசத் தலைவர்களையும் திகைக்க வைத்த சமயமது.

ஆசிரியர் அரவிந்தரைக் காண அவாவுற்றார்.

இதற்கிடையே திருவண்ணாமலைச் சேத்திரத்தில் மஹரிஷி ரமணர் வாழ்ந்து வருவதையும் கபாடியா பாபா மூலம் அறிந்தார். இவ்விரு ஆன்மீகச் சிங்கங்களையும் தரிசிக்க ஆவலுற்று ஆசிரியர் தெற்கே வந்தார். அரவிந்தரைத் தரிசிக்க இயலவில்லை. எனினும் சூட்சமமாக அரவிந்தரின் அருளாசியை ஆசிரியர் பெற்றுவிட்டதாக உணர்ந்தார். பின்னர் திருவண்ணாமலை சென்றார். பகவான் ரமண மகரிஷியின் பூரண ஆசி பெற்றதாக உணர்ந்தார். ஊர் திரும்பினார்.

மூன்று வருடங்கள் ரமண மகரிஷியின் அருள் நோக்கின் ஆழத்தில் ஆசிரியர் முழுகினார். அரவிந்தரையும் ஒரு முறை தரிசித்தார். அவரின் அருளும் ஆசிரியரை உட்கொண்டதாக உணர்ந்தார். இதனிடையே தெய்வாதீனமாக கேரள, காஞ்சன்காடு பப்பா ராமதாசரைத் தரிசிக்கும் பாக்கியம் ஆசிரியருக்கு கிடைத்தது.

ஆனாலும் ஆசிரியரின் மனம் ரமண மஹரிஷி மற்றும் அரவிந்தர் ஆகியோர் மீது கொண்ட பக்தியை பப்பா ராமதாசரிடம் அனுபவிக்க முடியாமல் போனது. காலங்கள் கடந்தது. மஹரிஷி ரமணரும், அரவிந்தரும் மஹாசமாதி அடைந்தனர். ஆசிரியர் தான் அனாதை ஆகிவிட்டதுபோல் உணர்ந்தார். வலி மிக அழுதார். திடீரென பப்பா ராமதாசர் ஞாபகம் வந்தது. காஞ்சன்காடு விரைந்தார். பப்பாவிடம் தன்னை ஒப்புவித்தார். பப்பா அவரை ஏற்றுக் கொண்டார். பப்பா ஆசிரியருக்கு மந்திர தீட்சை அளித்தார்.

ஆசிரியர் ராம நாமப் பைத்தியமானார். முடிவில் முழுமையாகித் திருவண்ணாமலையில் தன் தந்தையாகிய தெய்வத்தின் பணியைச் செய்யலானார்.


ஆசிரியர் யோகியானார். அவரின் நாமம் யோகி ராம்சுரத்குமார் எனும் புதிய தெய்வ மந்திரமாயிற்று. பக்தர்கள் வந்தனர். பரவசம் அடைந்தனர். சாதகர்கள் வந்தனர். சாதித்துச் சென்றனர். வேத கர்மாக்கள் செய்யும்

வேதியர் வந்தனர். பிரம்மத்தின் பிரமாண்டம் கண்டனர். எளிய பாமர மக்கள் வந்தனர். எங்கும் கண்டறியாப் பேரன்பைக் கண்டனர். சுவாமிக்கு சக்தியளித்தது அப்போதிருந்த சில ஞானிகள் என்றும் சிலபல அனுஷ்டாணங்கள் செய்தே சுவாமி இந்த ஆத்ம பெருநிலை அடைந்தார் என்றும் சிலர் பேத்தலாயினர்.

“இந்த பிச்சைக்காரனுக்கு மூன்று தந்தைகள் இருக்கின்றார்கள். பொதுவாக தனக்கு மூன்று தந்தை இருப்பதாகச் சொல்வதை அனைவரும் கேவலமாகக் கருதுவார்கள். ஆனால் இந்த பிச்சைக்காரன் பெருமையுடன் சொல்கின்றான். தந்தை அரவிந்தர் ஆரம்பித்து வைத்தார். தந்தை ரமண மஹரிஷி தொடர்ந்து அதை உறுதிப்படுத்தினார். என் தந்தை பப்பா ராமதாசர் இதை முழுமைப்படுத்தினார். இம்மூவரும் இப்பிச்சைக்காரனிடத்தில் என்றென்றும் இருக்கின்றனர். இவர்கள்தான் என் தந்தையே அன்றி வேறு எவரும் இந்த பிச்சைக்காரனின் தந்தை கிடையாது. பப்பா ராமதாசர் அருளிய ராமநாமத்தைச் சொல்லியதைத் தவிர்த்து இந்த பிச்சைக்காரன் வேறு எந்த அனுஷ்டாணங்களும் பண்ணியதில்லை. தற்போது என் தந்தை இந்த பிச்சைக்காரன் நாமத்தையே தன் நாமமாக ஏற்றுக் கொண்டார். இந்த நாமம் “யோகி ராம்சுரத்குமார்” என் தந்தையின் புனித நாமம். இந்த பிச்சைக்காரன் தன் நண்பர்களுக்கு இந்த நாமத்தையே அளிக்கின்றான். மற்றவர் அவரவர் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை உச்சாடனம் செய்து கொள்ளலாம். இந்த நாமஜபத்தைத் தவிர்த்து இந்த பிச்சைக்காரன் வேறு எதுவும் இந்த உலகிற்குக் கொடுக்கவில்லை. ஏனையோர் என் தந்தையை அடைய பல உபதேசங்கள் செய்திருப்பார்கள். சிலர் நூல்கள் பல செய்திருப்பர். மற்றும் சிலர் பற்பல அறக்கட்டளைகள், ஆசிரமங்கள் நிறுவியிருப்பர். ஆனால் இந்த பிச்சைக்காரன் தன் நாமத்தை மட்டுமே விட்டுச் செல்கின்றான். இந்த நாமத்தை உளமாறச் சொல்பவருடன் என் தந்தை, தான் என்றுமிருப்பேன் என்று உறுதியளித்திருக்கிறார்.”

இவர்தான் நம் குரு! இதுதான் நம் குரு பாரம்பரியம்!

# சுவாமி ராம தீர்த்தர் உபதேசங்கள்



## பற்றின் விளைவு

சுவாமி ராம்தீர்த்தர் தன் பூர்வாசிரமத்தில் கணிதப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு துறவியாகி ஒரு உத்தமமான ஞானி ஆனார். இவரும் உலக நாடுகள் யாவும் பயணம் செய்து நம் பாரதத்தின் வேதாந்தத் தத்துவத்தை மக்களுக்குப் போதித்தவர். இவரும் சுவாமி விவேகானந்தரும் சமகாலத்தில் வாழ்ந்து இறை பணியாற்றியவர்கள்.

சுவாமி ராமதீர்த்தரின் உபதேசங்களைத் தொகுத்து அவர் காலத்திற்குப் பின்னர் “In woods of God Realisation” என்ற புத்தகம், ஏழு பிரிவுகளாக வெளியிடப்பட்டது. சுவாமி யோகி ராம்சுரத்குமார் இப்புத்தகங்களைப் படித்து ஒருவித பரவச நிலையும், ஆன்ம சந்துஷ்டியும் அடைந்தார். ஒரு நாள் திருவண்ணாமலை சன்னதித் தெரு வீட்டில் சுவாமி ராம்தீர்த்தரின் புகழ் பெற்ற வாசகத்தை யோகி ராம்சுரத்குமார் நினைவுகூர்ந்தார்.

“பொருளின் மீது கொண்ட பற்றுதலே, அந்தப் பொருள் விலகிச் செல்லக் காரணமாகிறது.”

இந்த, சுவாமி ராமதீர்த்தரின் சத்திய வார்த்தைகளை சுவாமி கூறும்போது சுவாமியின் திருமேனி பற்றற்ற அந்த பரமனின் சொரூபமாகத் தெரிந்தது. இறை அடிமையாவதிலேயே விடுதலை

சுவாமி யோகி ராம்சுரத்குமார் ஒரு நாள் சுவாமி ராம்தீர்த்தரின் வெகு பிரசித்தி பெற்ற சொற்றொடரைச் திரும்பத் திரும்ப சொல்லியவண்ணம் இருந்தார்.

“ஒருஅடிமை, அடிமையாக இருப்பதாலேயே விடுதலை அடைந்தவனாகிறான்.”

“சுவாமி எனக்குப் புரியவில்லையே. அடிமை எப்படி விடுதலை பெற்றவன் ஆவான்?”

சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

“ஒரு உண்மையான அடிமை தன் தேவைகளுக்காகக் கவலை அடையத் தேவையில்லை. அவனின் எஜமானன் அவனது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைப்பான். எனவே அவன் கவலையற்று, நிற்சிந்தையாக சுதந்திரமாக இருக்கலாம். இதன் உட்பொருள், என் தந்தையிடம் நீ பூரண சரணாகதியடைந்த அடியவனாக இருந்தால் நீ உன்னை நினைத்துக் கவலையுறத் தேவையில்லை. என் தந்தை உனது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றுவார். நீ கவலையற்று, நிம்மதியாக சுதந்திரமாக இருக்கலாம்.”

சுவாமி அழகாகச் சிரித்தார். சுவாமியின் விளக்கம் நம்பிக்கையையும் தெளிவையும் கொடுத்தது.

## தகுதி

சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவ்வப்போது சுவாமி ராம்தீர்த்தரின் பிரசித்தி பெற்ற சொற்களை மேற்கோள் காட்டுவார். அவற்றுள் ஒன்று;

"உன்னை தகுதியுடையவனாக ஆக்கிக்கொள். நீ ஆசைப்படும் தேவை ஏற்படாது."

## பாட்டி தொலைத்த காசு

ஒருநாள் சுவாமி யோகி ராம்சுரத்குமார் பேரானந்தத்தோடு சுவாமி ராம்தீர்த்தரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். பேச்சின் போது சுவாமி ராம்தீர்த்தர் சொல்லிய கதை ஒன்றை சுவாமி கூற ஆரம்பித்தார். பக்தர்கள் அனைவரும் சுவாமியையே பார்த்துக்கொண்டிருந்தோம்.

"ஒரு இரவுப் பொழுது. தெரு விளக்கு வெளிச்சத்தில், வழிப்பாதையில் ஒரு வயது முதிர்ந்த மூதாட்டி எதையோ தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்தாள். அந்த பாட்டி தன் குழிவிழுந்த, பார்வை குன்றிய கண்களால் உற்று உற்றுப் பார்த்து, வீதியில் கிடந்த மணலைக் கையினால் துழாவித் தேடிக் கொண்டிருந்தாள். அப்போது அவ்வழியே ஒரு இளைஞன் வந்தான். பாட்டி படும்பாட்டைக் கண்டு இளகிய மனத்தோடு பாட்டியிடம் கேட்டான். 'எதைத் தேடுகிறீர்கள் பாட்டி?' "நான் ஒரு ரூபாய் நாணயம் ஒன்று வைத்திருந்தேன். அதைக் காணவில்லை. அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்."

பாட்டி கூறியதைக் கேட்டுப் பரிதாபப்பட்டு அந்த இளைஞனும் வீதியில் தேட ஆரம்பித்தான். வெகு நேரம் இருவரும் தேடியும் நாணயம் கிடைக்கவில்லை.

'பாட்டி நாணயத்தை எங்கே தொலைத்தீர்கள்?' இளைஞன் சலிப்போடு கேட்டான்.

‘வீட்டிற்குள்தான் வைத்திருந்தேன். காணவில்லை.’

இளைஞனுக்குக் கோபம் கோபமாக வந்தது.

‘வீட்டிற்குள் வைத்திருந்ததை வீதியில் தேடுகிறீர்களே பாட்டி.’

இளைஞன் கோபத்தோடு கேட்டான்.


“அட மூடனே. வீட்டினுள்தான் வெளிச்சம் இல்லையே, எப்படித் தேடுவேன்? வீதியில் தான் வெளிச்சம் இருக்கிறது. அதனால்தான் இங்கு தேடுகிறேன்.

பாட்டி கோபத்தோடு சொன்னதைக் கேட்ட இளைஞன் அங்கிருந்து போய்விட்டான்.”

இக் கதையைச் சொல்லி சுவாமி வெகுநேரம் சிரித்துக்கொண்டே இருந்தார். சிறிது நேரம் கடந்தது.

“இந்தக் கதையின் வாயிலாக சுவாமி ராம்தீர்த்தர் மனித குலத்திற்கு ஒரு உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளார். காரியங்களினால் ஏற்படும் தாக்கங்களுக்கு நாம் வெளியில் காரணம் தேடுகின்றோம். ஆயின் தாக்கங்கள் நம்முள்ளே ஏற்படுவதினால் காரணங்களையும் நம்முள்ளே தானே தேடவேண்டும். அதை விடுத்து நமக்கு எளிதாக, சுலபமாக இருக்கும் வெளி இடத்தில் காரணத்தைத் தேடினால் கோபமும், கலகமும் தான் மிஞ்சும். சுவாமி ராம்தீர்த்தர் சொல்கிறார் அனைத்தும் நம்முள்ளேதான் உள்ளது. வெளியே தேடி நேரத்தை வீணடிக்க வேண்டாமே என்றுதான் இக்கதை வாயிலாகக் கூறுகிறார்.”

# ஸ்ரீ அரவிந்தரின் உபதேசம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களில் தன் குருநாதர்களின் உபதேசங்களை எங்களுக்குப் புரியும்படி சொல்லியிருக்கிறார். சுவாமி எளிமையாகச் சொன்ன அந்த உபதேச சாரங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகும்.

ஞானிகள், குரு, பரமாத்மா என்ற பெரிய பெரிய சொற்களை எல்லாம் ஜீரணம் செய்ய முடியாத, பக்குவமற்ற, சாதாரண மாமிசபட்சிணிகளான எங்களுக்கு அந்த மஹோன்னதமான மஹா புருஷர்களின் மஹா உபதேச சாரங்களை எப்படி புரியவைத்து உட்செலுத்தினார் என்பது இன்று வரை பெரும் ரகசியமாகவும், பேரானந்தமாகவும் இருக்கிறது. ஸ்ரீ அரவிந்தரின் உபதேசத்தை ஒரு நாள் சுவாமி ரத்தினச் சுருக்கமாகக் கூறினார்.


"நம் உள்ளே இருப்பது அந்த பரம்பொருள்தான். அதை நம்மிடமிருந்து மறைக்கும் விஷயங்கள் யாவும் வெளியிலிருந்து வந்தவையாகும். உள்ளே வந்து பரம்பொருளை மறைத்துக் கொண்டிருக்கும்

விஷயங்களை வெளியேற்ற தியானமும், வெளியில் இருந்து உட்புகத் துடிக்கும் பொருட்களை நோக்கி,

'ஏ தேவையற்ற விஷயங்களே, அங்கேயே நில்லுங்கள், நீங்கள் எனக்கு வேண்டாம், சென்று விடுங்கள்' என ஸ்திரமாகச் சொல்லக்கூடிய வைராக்கியமும் வாய்த்துவிட்டால், நாம் அந்தப் பரம்பொருளோடு ஒன்றாகிவிடலாமே!"

சுவாமியின் சொற்கள் எங்களுக்குள் சென்றது. ஏதோ மாயம் செய்தது.

# ஸ்ரீ அரவிந்தரின் சாவித்திரி



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில் சுவாமியின் எதிரில் அமர்ந்திருந்தேன்.

“நண்பா அரவிந்தரின் ‘சாவித்திரி’ என்ற நூல் பற்றி அறிவாயா?”

“அறிவேன் சுவாமி. ஆனால் படித்தது இல்லை சுவாமி.”

“சாவித்திரி புத்தகத்தை யாரோ இந்த பிச்சைக்காரனுக்குக் கொடுத்தார்கள். இதை உனக்குக் தருகிறேன். இதை நீ படிக்க வேண்டும் என இந்த பிச்சைக்காரன் விரும்புகிறான். இந்த நூல் எத்தனையோ சாதகர்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே இந்த பிச்சைக்காரன் இந்நூலைக் கண்டிப்பாக நீ படிக்க வேண்டும் என விரும்புகின்றான்.”

“நான் படிக்கிறேன் சுவாமி.”

புத்தகத்தை சுவாமியிடம் இருந்து பெற்றுக் கொண்டேன். இரண்டு தினங்கள் சுவாமியுடன் இருந்துவிட்டு ஊர் திரும்பினேன். ஊர் திரும்பியதும் சுவாமி கொடுத்த சாவித்திரி நூலைப் படிக்க ஆரம்பித்தேன். அது ஒரு ஆங்கிலக் கவிதை நூல். அந்நூலை படித்த என்னால் ஒரு சொற்றொடரைக்கூட முழுமையாகப் புரிந்து கொள்ள

முடியவில்லை. நான் அறிந்த சில சுவாமி பக்தர்கள் அந்த நூலைப் படித்து பரவசமாகி எப்போது என்ன பேசினாலும் சாவித்திரி நூலையே மேற்கோள் காட்டி பேசுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் என்னால் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தும் சாவித்திரி புத்தகத்தை புரிந்து கொள்வது என் சக்திக்கு அப்பாற்பட்ட காரியம் எனப் புரிந்து கொண்டேன். சுவாமியிடம் சென்றேன்.


“சுவாமி என்னால் சாவித்திரி நூலைப் படிக்கவே முடியவில்லை. அதிலிருந்து எதையுமே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.”

சுவாமியிடம் மிகுந்த துயரத்தோடு கூறினேன். சுவாமி என்னைக் கனிவோடு பார்த்தார்.

“நண்பா, சில அன்பர்களுக்கு சாவித்திரி மிகவும் சுலபமாகவும், சக்தி அளிக்கக்கூடியதாகவும் இருக்கும். மற்றும் சிலருக்கு J.K. சுலபமாக இருக்கும். எனவே கவலை வேண்டாம் நண்பா. சாவித்திரியில் எழுதப்பட்ட ஒவ்வொரு சொல்லும் என் தந்தை அரவிந்தர் திருவாயிலிருந்து வந்தது. எனவே சாவித்திரி நூலை உனக்குப் புரிகிறதோ இல்லையோ, ஒரு தடவை முழு நூலையும் வாசித்துவிடுவாயாக. ஒரு உன்னதமான மஹானின் சொற்களை நீ உச்சரிப்பதாலேயே என் தந்தை உனக்கு அருள்பாலிப்பார். எனவே சாவித்திரியை ஒரு முறை வாசித்துவிடு நண்பா.”

சுவாமியின் கருணை மிகுந்த அருள் என்னை சாவித்திரி நூலை வாசித்து முடிக்க வைத்தது. சாவித்திரி நூலைப் படித்து முடிக்க எனக்கு சுமார் மூன்று மாத காலம் ஆனது. ஆனால் அதன் பயன் இன்றுவரை தொடர்கிறது. எளிதில் கோபமும், வேகமும் அடையக்கூடிய என்னை சுவாமி சாவித்திரி நூலைப் படிக்க வைத்து கோபத்தையும் வேகத்தையும் தடுத்தாண்டார் என்பதை அறிந்து கொள்ள எனக்கு வெகுகாலம் ஆயிற்று.

# ஸ்ரீ ரமண மகரிஷியின் உபதேசச் சாரம்



அன்று சுவாமி யோகி ராம்சுரத்குமார் வெகு நேரமாக ஆழ்ந்த மௌனத்தில் ஆழ்ந்திருந்தார். சுவாமியின் சிரஸ் மட்டும் அப்படியும் இப்படியுமாக மெதுவாக ஆடிக் கொண்டிருந்தது. அந்த மௌனத்தில் ஏதோ ஒருவித தெய்வீகத்தை உணர முடிந்தது. கண்கள் தானாக மூடிக்கொண்டன. எண்ண ஓட்டங்கள் நின்றுவிட்டன. நேரம் கடந்தது தெரியவில்லை. உடலில் அசைவோ, அயர்வோ எதுவும் தெரியவில்லை. நாங்கள் அங்கே இருந்தோம்.

வெகு நேரம் கழித்து சுவாமி மெதுவாக இமை திறந்து எங்களைப் பார்த்தார். சத்தமின்றி மகிழ்வான ஒரு புன்னகை அவர் முகத்தில் மலர்ந்தது. நாங்கள் அங்கே இருந்தோம்.

“என் தந்தை காரணமின்றி எதுவும் செய்வதில்லை. என் தந்தையின்

காரியங்களை நாம் புரிந்து கொள்ளவும் முடியாது. தந்தை வழி நடத்துதலில் எந்த கேள்வியையும் இந்த பிச்சைக்காரன் கேட்பதில்லை.”

சுவாமியின் சொற்கள் எங்களை வருடிக் கொடுத்தன. நாங்கள் அங்கே இருந்தோம்.

சுவாமி திடீரென எழுந்தார்.

“தந்தை ஒரு வேலை சொல்கிறார். நாம் புறப்படலாம்.” சுவாமியுடன் அனைவரும் புறப்பட்டோம்.

சுவாமி எங்களை ரமணாசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். காரில் செல்லும்போது ஆழ்ந்த மௌனமே நிலவியது. காரை ஆஸ்ரம எல்லைக்குள் நிறுத்தினோம். ரமணாசிரம நிர்வாகிகள் சுவாமியின் வருகை அறிந்து மகிழ்ந்து வரவேற்றார்கள். சுவாமியை அலுவலக அறையில் அமர வைத்து உபசரித்தார்கள்.

சிறிது நேரத்தில் சுவாமி அங்கிருந்து ரமண மகரிஷியின் சமாதி முன்சென்று நமஸ்கரித்தார். பின்னர் எங்களை அழைத்துக்கொண்டு மீண்டும் சன்னதித் தெரு வீட்டிற்கு வந்தார். வீட்டினுள் சுவாமி, அவரிடத்திலும் நாங்கள் எங்கள் இடத்திலும் அமர்ந்தோம்.

“இந்த பிச்சைக்காரனை ரமண மகரிஷி தன் பேரருளால் ஆட்கொண்டார்.”


சுவாமியின் விழிகளில் நீர் கோர்த்தது.

“நண்பா நீங்கள் அறிவீர்களா ரமணமகரிஷியின் போதனைகளை? விசாரம்தான் அவர் மார்க்கம். ‘நான் யார்’ என்ற விசாரம், முடிவில் என் தந்தையிடம் விசாரம் செய்பவரை சேர்ப்பித்துவிடும். ‘நான் யார்’ என்ற கேள்விக்கு நமக்குள்ளிருந்து வரும் பதில்களை எல்லாம் அவை உண்மையில்லை என்று விலக்கிவிட்டால் இறுதியில் கேள்வி

கேட்பவன், கேள்விக்கான பதில்கள், முடிவில் கேள்வியே மறைந்து விடும். 'நான்' என்ற மாயையும் மறைந்துவிடும். என் தந்தை மட்டுமே எல்லா இடங்களிலும் நீக்கமற ஒளிர்வார். இந்த விசார மார்க்கத்திற்கான வைராக்கியத்தை இந்த தெய்வீக அருணாச்சல மலை அருளும். இம்மாமலை சாதகர்களுக்கு சக்தி ஈந்து துணை புரியும். 'அருணாச்சல சிவ அருணாச்சல சிவ அருணாச்சல சிவ அருண ஜடா', இந்த மந்திரத்தைத் தியானித்து கிரி சஞ்சாரம் செய்வது ஆன்ம விசாரத்திற்கு பெரிதும் துணை புரியும்."

நாங்கள் சுவாமி சொல்வதை மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தோம். ரமண மஹரிஷியின் போதனைகளை சுவாமி எங்களுக்கேற்றவாறு எளிதாக்கி எங்களுக்கு ஊட்டிய பேரருள் இன்றுவரை எங்களை பிரமிக்க வைக்கிறது. எங்கள் அகத்தின் உள்ளே அமைதி நிலவியது.

# பப்பா ராமதாசரின் உபதேசம்



“நண்பா என் தந்தை பப்பா ராமதாசருக்கு, இது ராம், அது ராம் எல்லாமே ராம்தான். என் தந்தைக்கு அனைத்து ஜீவராசிகளும் ராமனே. என் தந்தை ராமனாகவே அனைத்தையும், அனைவரையும் கண்டார். எங்கும் ராமனைக் கண்ட பரமானந்தத்தில் அவர் எப்போதும் திளைத்திருந்தார்.”

ஒரு நாள் சன்னதித் தெரு வீட்டில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் தன் தந்தை பப்பா ராம்தாஸை நினைவுகூர்ந்தார். எப்பொழுதெல்லாம் சுவாமி தன் குருநாதர் பப்பா ராமதாசரை நினைப்பாரோ அப்போதெல்லாம் சுவாமியின் குரல் உருகி, விழிகள் நீர் சுமந்து ஏதோ ஒருவித சமாதி நிலையை சுவாமி அடைந்துவிட்டார் போல் தோன்றும். சுவாமியின் குரு பக்தியின் பரவசநிலை அங்கிருப்போர் அனைவரையும் ஆழ்நிலை மௌனத்தில் புதைத்துவிடும். அப்போது அங்கே சுவாமி மட்டுமே இருப்பார். வேறு எந்த அசைவுகளும் இருக்காது.

“ராம நாமத்தினாலேயே, ராமனை அடைந்தவர் என் தந்தை. ராமனும் என் தந்தையும் ஒருவரே. அனுமன் ஜெயந்தியில் பிறந்த என் தந்தை, அனுமன் போலவே அணுக்கணமும் ராம நாமத்திலேயே

திளைத்திருப்பவர். உலகின் எந்த பிரச்சனைக்கும் தீர்வு ராமநாம ஜபமே. ராமநாம ஜபம் நாம் செய்யும் கர்மத்தைச் சுத்தி செய்யும். ராமநாம ஜபம் பக்தி அளிக்கும். ராமநாம ஜபம் ஞானம் தரும். ராமநாம ஜபம் முடிவில் முக்தியும் அருளும். என் தந்தை ராம்தாஸ் இந்த பிச்சைக்காரனுக்கு ராம நாம தீட்சை அளித்து பித்தனாக்கினார். பித்தனாக்கி, பின்னர் பிச்சைக்காரனாகவும் ஆக்கினார். இப்போது இது, இந்த பிச்சைக்காரன் இல்லை. அவன் 1952ல் பப்பா ராமதாசரால் கொல்லப்பட்டு விட்டான். இப்போதிருப்பது என் தந்தை பப்பா ராமதாஸ் மட்டுமே."

சுவாமியின் கண்களில் கங்கை பிரவாகமாகச் சென்றாள். சுவாமி தன் சால்வையினால் கண்ணீர் கங்கையைக் துடைத்துக் கொண்டார்.

"நண்பா இந்த பிச்சைக்காரனை என் தந்தை பப்பா ராமதாஸ் சித்திரவதை செய்தது போல் வேறு யாரும் துன்புறுத்தியதில்லை. அதே சமயம் என் தந்தை பப்பா ராமதாஸ் போல் வேறு எவரும் இந்த பிச்சைக்காரன்பால் அன்பு செலுத்தியதும் இல்லை. நீ அறிவாயா என் தந்தை பப்பா ராமதாஸ் இந்த பிச்சைக்காரனைக் கொன்று போட்டுவிட்டார். ஏனெனில் என் தந்தை இந்த பிச்சைக்காரன்பால் அளவு கடந்த அன்பு வைத்திருந்தார்."

சுவாமி வெகு நேரம் மௌனமாக இருந்தார். அடுத்தடுத்து சிகரெட் பிடித்தபடி இருந்தார். சுவாமியின் சொரூபம் அருகில் காணப்பட்டாலும், சுவாமி எங்கேயோ வெகு தூரத்தில் இருப்பது போலத் தோன்றியது. திடீரென சுவாமி மறுபடியும் பேச ஆரம்பித்தார்.

"பப்பா சொல்வார், ராம நாமத்தில் எப்போதும் திளைப்பவனே என் ராமனை அடைந்து பரமார்த்த பெருநிலையை அடைவான்."

நாங்கள் அங்கிருந்தோம். எனினும் எங்களை நாங்கள் அங்கே காணவில்லை. சுவாமி யோகி ராம்சுரத்குமார் மட்டுமே அங்கே இருந்தார்.

# மாதாஜி கிருஷ்ணாபாய் சொன்ன கதை



Gospel of Swami Ramdas புத்தகம் 1980 களின் தொடக்கத்தில் நமது சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களிடம் வந்து சேர்ந்தது. ஆனந்தாஸ்ரமம் பப்பா ராமதாசர் மற்றும் மாதாஜி கிருஷ்ணாபாய் ஆகிய இருவரோடும் சுவாமி சச்சிதானந்தர் நடத்திய உரையாடல்களும், அவர்முன் நடந்த பல சம்பவங்களையும் அனுபவத்தையும் தொகுத்து சுவாமி சச்சிதானந்தர் வடிவமைத்த அற்புதமான நூலாகும் அது.

அந்த நூல் சுவாமியை வந்தடைந்த நாளிலிருந்து அது சுவாமியின் அருகிலேயே இருந்தது. சுவாமி அதை அவ்வப்போது கைகளில் எடுத்து அதை ஒருவித பக்திப் பரவசத்தோடு ஸ்பரிசிப்பதைப் பார்க்க பார்க்க பார்ப்பவர் மனதில் உருக்கமான ஸ்தம்பித்தல் யதார்த்தமாக நிகழ்ந்தது.

அன்று இரவு. சுமார் பதினொரு மணியிருக்கும். சுவாமி அவரிடத்தில் கையில் அப்புத்தகத்தோடு அமர்ந்திருந்தார். நான் எதிரில் பாயில் அமர்ந்திருந்தேன். திருநாமத்தை சிரத்தையுடன் மௌனமாகச்

சொல்லிக் கொண்டிருந்தேன். சுவாமி திடீரென எழுந்தார். கூடத்தில் இருந்த சக்திவாய்ந்த இரண்டு குழல் விளக்குகளை எரிய விட்டார். மீண்டும் தன் இடத்தில் அமர்ந்தார். புத்தகத்தைக் கையிலெடுத்து ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுத்தார்.

"பார்த்தசாரதி இந்த பக்கத்திலிருந்து படிப்பாயாக."

சுவாமி அந்த பக்கத்தில் கையை வைத்து புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். நான் படிக்க ஆரம்பித்தேன். புத்தகத்தின் அந்தப் பகுதி மாதாஜி கிருஷ்ணாபாய் சுவாமி சச்சிதானந்தருக்குச் சொல்கின்ற ஒரு கதையாகும்.

சாதுக்கள் குழு ஒன்று ஒவ்வொரு கிராமமாக விஜயம் செய்து கொண்டிருந்தது. ஒரு கிராமத்தில் சாதுக்கள் குழு அங்குள்ள கோவிலில் தங்கி விக்ரஹங்களுக்கு அபிஷேகம், அர்ச்சனை, ஹோமங்கள் மற்றும் இத்யாதி அனுஷ்டானங்களைச் செய்து அக்கிராமத்தார் செய்யும் நாம சங்கீர்த்தனத்திலும் கலந்து கொண்டு சிறப்பித்து, அக்கிராம மக்கள் அளிக்கும் பிச்சையையும் ஸ்வீகரித்து அருளாசி வழங்கினர்.

சாதுக்கள் அக்கிராமத்தில் இருக்கும்போது பக்கத்துக் கிராமத்துப் பெரியவர்கள் அந்த சாதுக்களைத் தங்கள் கிராமத்துக்கு பிச்சைக்கு அழைப்பார்கள். இவ்விதம் சாதுக்கள் ஒவ்வொரு கிராமமாக விஜயம் செய்து வந்தனர்.

அவ்வமயம் இரண்டு கிராமம் கடந்த ஒரு கிராமத்தில் ஒரு அற்புதமான தெய்வ பக்தை வாழ்ந்து வந்தார். இழி குலத்தில் பிறந்த அந்த மாது பிழைப்புக்காக இழி தொழில் செய்து வந்தாலும் அவளின் தெய்வ பக்தி அபூர்வமானது. தெய்வ அனுக்கிரஹம் பெற்ற ஞானிகளுக்கும், சாதுக்களுக்கும் சேவை செய்ய மிக்க நாட்டம் கொண்டவளாக அம்மாது

இருந்தாள்.

இரண்டு கிராமங்கள் தள்ளியுள்ள, ஒரு கிராமத்தில் சாதுக்கள் குழாம் கோவிலில் தங்கி இருப்பதைக் கேள்விப்பட்டாள். அந்த சாதுக்களை தன் வீட்டிற்கு அழைத்து உபச்சாரம் செய்து விருந்து படைக்க வேண்டும் என ஆவல் கொண்டாள். ஆனால் சாதுக்கள் நகர்ந்து அடுத்த கிராமத்திற்கு வந்துவிட்டால் தன்னைப் பற்றியும் தன் தொழில் பற்றியும் அக்கிராமத்து மக்கள் சொல்லிவிட்டால் சாதுக்கள் தன் வீட்டிற்கு வர மறுத்து விடுவார்களே எனப் பயந்தாள். எனவே இரண்டு கிராமங்கள் அப்பால் சாதுக்கள் இருக்கும்போதே அழைத்துவிட்டால் சாதுக்கள் கண்டிப்பாக நம் இல்லத்திற்கு பிச்சைக்கு வந்துவிடுவார்கள். ஏனெனில் அக்கிராமத்தில் தன்னைப்பற்றி தெரிந்தவர் யாரும் இல்லை என்பதை அவள் அறிந்திருந்தாள்.

சாதுக்கள் இருந்த கிராமத்திற்கு விரைந்தாள். தன் விருப்பத்தைப் பக்திப் பெருக்கோடு சாதுக்களிடம் விண்ணப்பித்தாள். சாதுக்களும் ஒப்புக் கொண்டனர். மிகுந்த மகிழ்ச்சியோடு தன் ஊர் வந்தடைந்தாள். சாதுக்களுக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யலானாள்.

சாதுக்கள் அடுத்த கிராமத்திற்கு வந்துவிட்டார்கள். அந்த ஊர் திருவிழாக் கோலம் பூண்டது. அந்த மாது இருந்த ஊர் பெரியோர்கள், சாதுக்களையடைந்து தங்கள் ஊருக்கு விஜயம் செய்ய அழைத்தார்கள்.

“உங்கள் ஊரிலுள்ள அந்த மாது ஏற்கனவே எங்களை அவர் வீட்டிற்கு பிச்சைக்கு அழைத்துள்ளாரே. எனவே நாங்கள் உங்கள் கோரிக்கையை ஏற்க முடியாத நிலையில் உள்ளோம்.”

“சுவாமி அந்த மாது வீட்டிற்கு நீங்கள் செல்லவே கூடாது. அவள் இழி தொழில் செய்யும் இழி குலத்தில் பிறந்தவள். எனவே நீங்கள்

எங்கள் ஊர் கோவிலில் தங்கி நாங்கள் தரும் பிச்சையைத்தான் ஏற்க வேண்டும்."

சாதுக்கள் ஊரார் சொல்வதைக் கேட்டுத் திகைத்துப் போயினர். பின்னர் அந்த மாது வீட்டிற்குச் செல்ல வேண்டாம் என முடிவெடுத்தனர். அவர்களில் ஒரு சாது மட்டும் ஆட்சேபம் தெரிவித்தார். வாக்கு கொடுத்த பின்னர் கொடுத்த வாக்கை மீறுவது சாதுக்களுக்கு உகந்தது அல்ல என பணிவோடு கூறினார். மற்ற சாதுக்கள் அவரை இகழ்ந்தனர்.

அந்த மாது இருந்த கிராமத்திற்கு சாதுக்கள் குழாம் விஜயம் செய்தது. அந்த ஒரு சாதுவைத் தவிர மற்ற யாவரும் கோவிலுக்குச் சென்றனர். கோவிலில் உள்ள விக்ரஹங்களுக்கு ஆபரண அலங்காரமும், மலர் அலங்காரமுமாக சூட்டப்பெற்று ஜொலித்துக் கொண்டிருந்தது. அங்கே அந்த மாது சாதுக்களுக்காக சிரத்தையாக அறுசுவை உண்டி செய்து வைத்துக் காத்திருந்தாள். அந்த ஒரு சாது மட்டும் அந்த மாதின் இல்லத்திற்கு வந்தார். அவர் ஒருவராவது வந்தாரே என மகிழ்ச்சிக் கடலில் அம்மாது திளைத்தாள். சாதுவிற்கு பாத பூஜை பக்தியோடு செய்து மகிழ்ந்தாள். தான் பார்த்துப் பார்த்து செய்த உணவைப் பக்திப் பெருக்கோடு சாதுவிற்குப் படைத்தாள். அவருக்கு பாத சேவை செய்தாள்.

தனக்கும் ஒரு தெய்வீகச் சாதுவிற்கு பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்ததை எண்ணி நெக்குருகி விம்மினாள். அந்த ஆனந்தத்திலேயே அவள் உயிர் பிரிந்தது. அந்த உயிரற்ற சடலத்தின் அருகில் அந்தத் தெய்வீகச் சாது பாதுகாப்புக்காக அமர்ந்திருந்தார்.

அங்கே கோவிலில் பூஜை புனஸ்காரங்களும், நாம சங்கீர்த்தனங்களும் அமர்க்களமாக நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது திடீரென கோவிலிலுள்ள அத்தனை விக்ரஹங்களின் கண்களிலிருந்தும் கண்ணீர்

பெருக்கெடுத்து ஓடியது. அங்கிருந்த சாதுக்களுக்கும் ஊர் மக்களுக்கும் பயமும் படபடப்பும் ஏற்பட்டது. ஏதாவது அபச்சாரம் ஏற்பட்டு விட்டதா? சிலைகளின் கண்களில் கண்ணீர் நிற்காமல் வடிந்தோடிய வண்ணம் இருந்தது. (இச்சமயத்தில் சுவாமி என் கையிலிருந்த புத்தகத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டார். தானே, நான் விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தார். சுவாமியின் கண்களில் கண்ணீர் பெருகி வழிந்தோடியது.) சுவாமி படித்தார். அப்போது கோவிலில் அசிரீரி வாக்குக் கேட்டது.

"எனது சிறந்த பக்தை உயிர் துறந்து உடலாகக் கிடக்கின்றாள். அந்தச் சரீரத்தை எனது பிரியமான பக்தன் தனியாக அமர்ந்து பாதுகாத்துக் கொண்டிருக்கின்றான். இங்கே நீங்கள் என்னை சந்தோஷப்படுத்த ஏதேதோ செய்து கொண்டிருக்கின்றீர்கள். இதுவா எனக்கு சந்தோஷம் கொடுக்கும்?"

அசிரீரி நின்றுவிட்டது.

ஊராரும் சாதுக்களும் அம்மாதுவின் வீட்டிற்கு விரைந்தார்கள். சுவாமியின் கண்களில் கண்ணீர் நிற்கவேயில்லை. சிறு சிறு கேவலாக சுவாமியின் பூரணத் துக்கம் வெளிப்பட்டது. என் கண்களும் குளமாயின. சுவாமி எதுவும் பேசவில்லை. புத்தகத்தை நெஞ்சோடு சேர்த்து அணைத்தவாறே படுத்துக் கொண்டார். அன்று இரவெல்லாம் சுவாமி உறங்கவே இல்லை.

# கீதாஞ்சலி



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் சன்னதித் தெரு வீட்டில் சுவாமி அமர்ந்திருந்தார். சுவாமியின் முன்னே திரு. ரவீந்திரநாத் தாகூர் எழுதிய புகழ் பெற்ற, நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலி பாடல்களின் தமிழாக்கப் புத்தகம் இருந்தது. சுவாமி அப்புத்தகத்தைக் கையில் எடுத்தார். அதிலிருந்து ஒரு பக்கத்தைத் திறந்து என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார்.

"எனது ஆசைகள் அனந்தம்
என் அழுகை இரங்கத்தக்கது
எதையும் கொடுக்க மறுத்த நீ
என்னை விடாது காத்துநிற்கின்றாய்."

நான் மேலும் படிக்க முயன்றேன். சுவாமி தடுத்து புத்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டார். சுவாமியின் முகவதனத்தில் தோன்றிய தெய்வீகக் கம்பீரத்திலும், அந்த பாட்டின் பொருளின் உண்மையிலும் நான் விக்கித்து நின்றேன்.

# கீதாஞ்சலியில், ஒரு கதை



சன்னதித் தெரு வீட்டில் மற்றும் ஒரு நாள். அதே கீதாஞ்சலி தமிழாக்கப் புத்தகம், சுவாமி யோகி ராம்சுரத்குமார் அருகில் இருந்தது. அப்புத்தகத்தில் இருந்து ஒரு பக்கத்தை விரித்து என்னிடம் கொடுத்து சுவாமி படிக்கச் சொன்னார். படித்ததில் ஞாபகம் உள்ளதை இங்கே சொல்கின்றேன். கவிஞர் தாகூர் தன்னை ஒரு இளம் பிச்சைக்காரப் பெண்ணாக உருவகப்படுத்தி அப்பாடலை எழுதியிருக்கிறார்.

“கடும் கோடை காலத்தில் ஒரு பெரிய மரத்தின் நிழலில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தேன். எனது பரிதாபகரமான நிலையை மறப்பதற்காக ஒரு ராஜகுமாரன் பொன்ரதத்தில் வருவான் என்றும், என் கரம் பிடித்து ரதமேற்றித் தன் அரண்மனைக்கு அழைத்துச் செல்வான் என்றும் கற்பனை செய்து கொண்டு நான் பசியையும் வெப்பத்தையும் மறந்திருந்தேன். என்ன ஆச்சரியம், பொன்ரதத்தில் ஒரு ராஜகுமாரன்

நிஜமாகவே வந்தான். என் அருகில் ரதத்தை நிறுத்தினான். என் இதயம் படபடத்தது. தேரிலிருந்து இறங்கி நேராக என்னிடம் வந்தான். என் கனவு பலிக்கப் போகிறதா? இது ஒன்றும் கற்பனை இல்லையே. ஏங்கிச் சிலையாக நின்றேன். ராஜகுமாரன் என் முன்னே வந்து நின்றான். என் முகம் நோக்கிச் சிரித்தான். என் ஆவல் அதிகரித்தது.

'எனக்குக் கொடுப்பதற்காக என்ன வைத்திருக்கின்றாய்?'


நான் திடுக்கிட்டுப் போனேன்.

அவன் புன்னகையோடு என் எதிரே கை நீட்டினான். என் உயிரும் உடலும் சோர்ந்து போய்விட்டது. நான் பிச்சை எடுத்திருந்த தானியத்திலிருந்து தயங்கியபடி சிறிது எடுத்து அவன் கையில் இட்டேன். சிரித்தபடியே தன் கையில் தானியத்தை வாங்கியவன் தேரேறிச் சென்றுவிட்டான்.

என் விதியை எண்ணி நொந்தபடி வீடு சென்றேன். பிச்சை எடுத்த தானியத்தை ஒரு முறத்தில் கொட்டினேன். என்ன ஆச்சரியம். அங்கே நான் அந்த ராஜகுமாரனுக்குக் கொடுத்த தானியம் அளவிற்கு ஒரு சிறிய தங்கக் கட்டி இருந்தது. என்னால் என் அழுகையைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கண்கள் ஆறாய் பெருகியது. எனக்குக் கொடுப்பதற்கு என்ன வைத்திருக்கிறாய் என அவன் கேட்கும்போது என்னையே தருகிறேன் என ஏன் நான் அவனிடம் சொல்லவில்லை. அவள் தேம்பித் தேம்பி அழுதாள்."

படித்து முடித்ததும் மனம் கனத்தது. கண்கள் ஈரமானது. சுவாமி தன் கண்ணீரைத் துடைத்தவாறே துக்கமாகச் சிரித்தார்.

# ஜே. கிருஷ்ணமூர்த்தி



“ஜகத்குருவை நான் கண்டு பிடித்துவிட்டேன்.” (J. Krishnamurthy)

ஜே.கிருஷ்ணமூர்த்தியை, ஜகத்குருவின் அவதாரத்தை சென்னையின் கடற்கரையில் கண்டுவிட்டதாக ஆஸ்திரேலியாவின் திரு. லெட்பெட்டர் தனது ஆன்மீகத்தோழியும், தியாசாபிக்கல் சொசைட்டியின் தலைவருமான

திரு.அன்னிபெசன்ட் அம்மைக்குத் தகவல் அனுப்பினார்.

திரு.லெட்பெட்டரும், திரு.அன்னிபெசன்ட் அம்மையாரும் ஏசுநாதருக்குப் பின்னர் ஜகத்குருவாக ஜே.கிருஷ்ணமூர்த்தி அவதாரம் செய்துள்ளார் என்று தங்களது தியாசாபிகல் சொசைட்டி மூலமாக உலகத்திற்கு அறிவித்தார்கள்.

காலப்போக்கில் கிருஷ்ணாஜி என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட அவர், தான் ஜகத்குரு அல்ல என்றும், சத்தியத்தை நிர்வாக மயமாக்க

முடியாது என்றும் கூறி அவர் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட நிர்வாக அமைப்பிலிருந்து வெளியேறினார்.

அதன் பின்னர் உலகம் முழுவதும் பயணம் செய்து சத்தியத்தின் சூட்சுமத்தையும், அதன் பல்வேறு பரிமாணங்களையும் உலகிற்கு உபதேசிக்க ஆரம்பித்தார். குரு, மந்திர உச்சாடனங்களை எள்ளி நகையாடினார். வெளிப்படையாக அவர் மதங்களுக்கு எதிராகப் பேசுவது போல் தோன்றினாலும் அவர் உண்மையிலேயே தெய்வத்தையும், நிஜஞானிகளையும் ஆராதித்தவர் என்பதை வெகு சிலரே அறிந்திருந்தனர். அவர்களில் நமது சுவாமி யோகி ராம்சுரத்குமாரும் ஒருவர்.

ஆரம்பத்தில் கிருஷ்ணாஜியின் பேச்சுக்கள் சுவாமியை வெகுவாகப் பாதித்தது. ராம நாமத்தை மூச்சாகவும், குருவை உயிராகவும் மதித்த சுவாமிக்கு கிருஷ்ணாஜி மீது பெருங்கோபம் ஏற்பட்டது. அவர் எப்படி குரு பற்றியும் மந்திரங்கள் பற்றியும் அவதூறாகப் பேசலாம்? அவரிடம் இது பற்றி பேச முடிவெடுத்து சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தார்.

சிலகாலம் கழித்து கிருஷ்ணாஜி நடத்திய ஒரு கேள்வி பதில் கூட்டத்தில் சுவாமி கலந்து கொண்டார். அங்கே ஒரு பெரியவர் சுவாமி கேட்க நினைத்த அதே கேள்வியை கிருஷ்ணாஜியிடம் கேட்டார்.

“கிருஷ்ணாஜி நீங்கள் நன்கு அறிவீர்கள், நாங்கள் எங்கள் குரு மீதும் மந்திரங்கள் மீதும் எவ்வளவு நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று. எங்களைக் புண்படுத்த வேண்டும் என்பது உங்கள் நோக்கமல்ல என்பதை நாங்கள் அறிவோம். எனினும் ஏன் இவ்விதம் அவதூறாகப் பேசுகிறீர்கள்?”

பெரியவர் ஆதங்கத்துடன் கேட்டார்.

“இங்கே ஏன் வந்தீர்கள் ஐயா? தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள் இங்கே

வரத் தேவையில்லை. நம்பிக்கை அற்றவருக்கான இடமிது ஐயா."

கிருஷ்ணாஜி வாஞ்சையோடு கூறியதைக் கேட்ட பெரியவரும், சுவாமியும் ஆசுவாசமடைந்தனர். சுவாமியின் கோபம் தீர்ந்தது. கூட்டம் கலைந்து செல்லும் சமயம், கிருஷ்ணாஜி நேராக சுவாமி இருக்குமிடம் வந்து சுவாமியின் முதுகில் பிரேமையோடு தட்டினார்.

"கிருஷ்ணாஜி முதுகில் தட்டியதும் இந்த பிச்சைக்காரன் தூங்கிவிட்டான்."

கிருஷ்ணாஜியின் ஸ்பரிசம் பட்டதும் சுவாமி ஆழ்நிலை தியானத்தில் ஆழ்ந்து விட்டார் என்பது ஸ்பஷ்டமாகப் புரிந்தது.

இன்னும் சில சமயங்களில் கிருஷ்ணாஜியுடன் சுவாமிக்கு பல அனுபவங்கள் ஏற்பட்டன. கிருஷ்ணாஜியின் சென்னை மையத்தில் சுவாமி தொடர்ந்து தொடர்பில் இருந்தார். நாங்கள் நண்பர்கள் மூவரையும், சுவாமி, கிருஷ்ணாஜி சென்னையில் இருக்கும் நாட்களில், நாங்களும் இருக்க வேண்டும் என்றும் கூறினார். அப்படி நாங்கள் இருந்த போது கிருஷ்ணாஜி திடீரென ஒரு நாள் நான் இருந்த இடம் நோக்கி வேகமாக வந்து என்னை ஆலிங்கனம் செய்து கொண்டார். அந்த ஸ்பரிசம் இன்றுவரை என் தேகத்தில் இருக்கிறது. சுவாமி இந்த சம்பவத்தைக் கேட்டு பெருமகிழ்ச்சி அடைந்தார்.

"என் தந்தையின் சகலச் சூட்சுமங்களையும் ஆங்கில வார்த்தைகளில் சொல்லிய ஒரே ஞானி கிருஷ்ணாஜிதான். இந்த பிச்சைக்காரன் வாழ்விலும் பெரும் மாற்றத்தை கிருஷ்ணாஜி ஏற்படுத்தினார்."

பின்னர் ஒரு காலத்தில் சுவாமி கிருஷ்ணாஜி பற்றிக் கூறினார்.

"என் தந்தை கிருஷ்ணாஜியை மாடமாளிகையில் வாழ வைத்தார். இந்த பிச்சைக்காரனை தெருப்புழுதியில் வாழ வைத்தார். எனினும் நினைவிலிருத்திக்கொள் நண்பா. நாங்கள் இருவரும் என் தந்தையின் ஒரே வேலையையே செய்கிறோம்."

# அவர் ஒரு பெரிய மகான்



"ஜே.கே.ஒரு பெரியமகான் தெரியுமா நண்பா?" சுவாமி ஜே.கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கைச் சரிதத்தை விவரித்தார்.

லெட்பெட்டரால் கடற்கரையில் கண்டெடுக் கப்பட்டதையும், அன்னிபெசன்ட் அவர்களால் பராமரிக்கப்பட்டதையும், தியோசாபிகல் சொசைட்டியிலிருந்து கிருஷ்ணமூர்த்தி வெளியேறி வந்ததையும் எளிமையாகச் சொன்னார்.

"கிருஷ்ணமூர்த்தியின் உபதேசங்களை எல்லோராலும் புரிந்துகொள்ள இயலவில்லையே ஸ்வாமி." ஒரு நண்பர் வினவினார்.

"ஆண்டவன் மீது பக்தியும் அசைக்கமுடியாத நம்பிக்கையும் கொண்டவர்களுக்கு ஜே.கிருஷ்ணமூர்த்தியின் உபதேசங்கள் தேவையில்லை. எதையும் அறிவுபூர்வமாக சிந்திப்பவர்களுக்கும், ஆண்டவன் மீது நம்பிக்கை அற்றவர்களுக்கும், எல்லாவற்றையும் சந்தேகப்படுபவர்களுக்கும், ஜே.கே.வின் உபதேசங்கள் நம்பிக்கையூட்டும், வாழ்க்கையின் உண்மைகளைக் கண்முன்னே படமாகக் காட்டும், அவர்களை ஆண்டவனிடம் கொண்டு சேர்க்கும். தன்னை அவர் 'குரு'

இல்லை எனச் சொன்னாலும், அவர் ஒரு குருவின் செயலையே செய்கின்றார். எத்தனையோ மகான்களும், ஞானிகளும் செய்யும் மகத்தான பெரிய வேலையை ஜே.கே.வும் செய்கிறார். அவரைச் சாதாரணமாக நினைத்துவிடாதே நண்பா. அவர் ஒரு பெரிய மகான்.

நீண்டவரிசையில் வந்துகொண்டிருந்த ஒவ்வொருவருக்கும் சுவாமி கற்கண்டை பிரசாதமாகக் கொடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார். அவரது திருக்கரம் பிரசாதத்தை கொடுத்துக் கொண்டிருந்தாலும் ஜே.கே.வைப் பற்றி தொடர்ந்து புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்.

"ஜே.கே.யும் அப்பாவும் (ஆண்டவன்) ஒன்றுதான் தெரியுமா? எனது தந்தை எங்குமிருக்கிறார், எல்லாமுமாக இருக்கிறார்."

சுவாமி பரவசமான மோனத்தில் ஆழ்ந்திருந்தார். அவரின் திருக்கரம், பணிந்து செல்லும் பக்தர்களுக்கு கற்கண்டைப் பிரசாதமாக வழங்கிக்கொண்டே இருந்தது.

அவ்வமயம் அங்கே வந்து பணிந்து நின்ற ஒரு பக்தரைப் பார்த்து சுவாமி வினவினார்.

"நண்பா, உன் பெயர் என்ன?"

"கிருஷ்ணமூர்த்தி ஸ்வாமி."

"அப்பா பெயர் என்ன?"

"ஜெயராம் ஸ்வாமி."

"ஜே.கிருஷ்ணமூர்த்தி (J. Krishnamurthy) பார்த்தாயா நண்பா."

சுவாமி ஆனந்தமாகத் திருமேனி குலுங்கச் சிரித்தார். அங்கு அமர்ந்திருந்த அனைவருக்கும் ஆச்சரியமாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

# நிசார்கடாட்டா மஹாராஜ்



1980களின் மத்தியில், ஒரு ஆண்டின் ஒரு அருமையான காலைப்பொழுது, சுவாமி யோகி ராம்சுரத்குமார் அவர்களுடன் சில பக்தர்கள் சன்னதித் தெரு வீட்டில் அமர்ந்திருந்தனர். சுவாமியின் கையில் மும்பையில் வாழ்ந்த நிசார்கடாட்டா மஹாராஜ் என்ற ஞானியின் உபதேசங்களைத் தொகுத்து எழுதப்பட்ட "I Am That" என்ற புத்தகம் இருந்தது. அன்பர் ஒருவர் சுவாமிக்கு அப்புத்தகத்தை அனுப்பி வைத்திருந்தார்.

"நிசார்கடாட்டா மஹாராஜ் அதிகம் படிக்காத ஒரு சாதாரண கூலித் தொழிலாளியாக ஒரு ஆலையில் வேலை பார்த்து வந்தவர்."

சுவாமி நிசார்கடாட்டா மஹராஜைப் பற்றிக் கூறினார். அந்த புத்தகத்தைத் தன் கரத்தினால் வாஞ்சையோடு தடவிக் கொடுத்தார். பின்னர் அந்த புத்தகத்தைத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். பின்னர் நிதானமாக நிசார்கடாட்டா மஹராஜ் பற்றி பேசலானார்.

நிசார்கடாட்டா மஹராஜிடம் ஒரு அன்பர், “சுவாமி நீங்கள் எப்படி இந்த பரிபூர்ண நிலையை அடைந்தீர்கள்?” என வினவினார்.


நிசார்கடாட்டா மஹராஜ் மென்மையாகச் சொன்னார். ‘என் குரு என்னிடம் நீதான் “அது” அந்தப் “பரம்பொருள்” என்று கூறினார். என் குருவின் வார்த்தையை நான் முழுமையாக நம்பினேன். இதோ உங்கள் முன்னால் இருக்கிறேன்.”

சுவாமி, நிசார்கடாட்டா மஹராஜ் கூறியதைச் சொல்லிவிட்டு வெகுநேரம் மௌனமாக இருந்தார்.

“குரு மேல் கொண்ட அசைக்கமுடியாத நம்பிக்கை ஒருவரை இறைவனில் ஒன்றித்து விடும் என்பதற்கு நிசார்கடாட்டா மஹராஜியின் சரிதமே சான்று.”

சுவாமியின் சொற்கள் தழுதழுத்த குரலில் வந்தன. சுவாமியின் விழிகளில் நீர் வடிந்தது.

# சுவாமியின் திருக் கூட்டமும், அமானுஷ்யத் திருப்பணியும்



“சுவாமி, தாங்கள் உபதேசம் என்று ஒன்றும் பண்ணுவதில்லை. இந்தக் காரியத்தை இப்படிச்செய், அப்படிச்செய் என்று உத்திரவுகளும் போடுவதில்லை. பகவானை அடைவதற்கு இந்த சம்பிரதாயங்களைச் செய், செய்யாதே என்று எதுவுமே சொல்வதில்லை. எனினும் மக்கள் உங்களைத் தரிசித்து அமைதியும், ஆனந்தமும், சௌகரியமும் அடைகிறார்கள். சுவாமி நீங்கள் செய்யும் காரியங்கள், அதன் காரணங்களை அறிய ஆவலாகயிருக்கிறோம் சுவாமி.”

சுவாமி யோகி ராம்சுரத்குமாருக்கு மிகவும் பிரியமான பக்தர் சுவாமியிடம் மிகவும் ஆவலுடன் கேட்டார். சுவாமி பதிலேதும் சொல்லவில்லை. வெகு நேரம் அமைதியாக இருந்தார். அடுத்தடுத்து புகை பிடித்தவாறு இருந்தார். அவ்வப்போது கேள்வி கேட்டவரைப் பார்த்து ஒரு அற்புதமான புன்னகை சிந்தி, அவரையே சற்று நேரம்

கருணையோடு பார்த்திருந்தார். சுவாமியின் புன்னகை, கேள்வி கேட்டவர்க்கு மேலும் தைரியத்தைக் கொடுத்தது.

"சுவாமி எங்களுக்கு தாங்கள் அடைந்திருக்கும் அந்த பரிபூர்ண பரமாத்ம நிலையை அடைய உபதேசம் செய்யுங்கள் சுவாமி."

பக்தர் சுவாமியிடம் பிரார்த்தித்தார். சற்று நேரம் மௌனத்தில் கழிந்தது.

"நண்பா, என் தந்தை பப்பா ராமதாஸ் இந்த பிச்சைக்காரனுக்கு ராமநாம தீட்சை அளித்த பின்னே, இந்த பிச்சைக்காரன் பைத்தியமாகிவிட்டான். இந்த பிச்சைக்காரனின் ஒவ்வொரு அசைவும், சொல்லும் என் தந்தையால் செய்விக்கப்படுகிறது. இந்த பிச்சைக்காரனுக்கு என தனிப்பட்ட சொல்லோ, செயலோ எதுவும் கிடையாது. எல்லாமே என் தந்தையின் விருப்பப்படியே நடக்கின்றது. இந்த பிச்சைக்காரனுக்கு ஒன்றும் தெரியாது நண்பா."

சுவாமி கேள்வி கேட்டவரைப் பார்த்துச் சொல்லிவிட்டு ஆனந்தமாக, அலையலையாகச் சிரித்துக்கொண்டே இருந்தார். அங்கே பேரானந்தம் கொட்டிக் கிடந்தது. எனினும் நண்பர் திருப்தி அடையவில்லை. சற்று நேரம் கடந்தது.

"நாங்கள் முக்தி அடைய உபதேசம் செய்யுங்கள் சுவாமி."

"நண்பா, வியாச பகவான் காலத்திலிருந்து இன்றுள்ள கிருஷ்ணாஜி (J.K.) வரை வந்துள்ள அனைத்து ஞானிகள் வாயிலாகவும் ஏற்கனவே என் தந்தை தன் பரிபூர்ண ஞான உபதேசங்கள் அனைத்தையும் சொல்லிவிட்டார். இனியும் சொல்வதற்கு என்ன இருக்கிறது?"

சுவாமி சற்று நேரம் மௌனமாக புகை பிடித்தவாறு இருந்தார்.

"ஆனால் என் தந்தை இந்த பிச்சைக்காரனுக்கு வேறொரு

முக்கியமான பணியைக் கொடுத்துள்ளார். அந்த இறைப்பணியை இந்த பிச்சைக்காரன் செய்வதற்கு உதவியாக சில நண்பர்களையும் என் தந்தை கொடுத்துள்ளார். இந்த பிச்சைக்காரன் வரும்போதெல்லாம் அந்த நண்பர்களும் வருவார்கள். என் தந்தையின் காரியத்தைச் செய்வதற்கு உதவுவார்கள். காரியம் முடிந்தபின் ஒவ்வொருவராகச் சென்று விடுவோம். மீண்டும் தந்தையின் வேலை வரும் சமயத்தில் நாங்கள் மீண்டும் வருவோம். எப்படி சிவன் வரும் சமயம் அவரது கணங்களும் உடன் வருவார்களோ அது போலவே இந்த பிச்சைக்காரன் வரும் சமயம் அவன் நண்பர்களும் வருவார்கள்."

"அந்த தெய்வ காரியத்தைப் பற்றியும், உங்கள் நண்பர்கள் பற்றியும் சொல்லுங்கள் சுவாமி."

நண்பர் மீண்டும் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

"ஐயோ இந்த நண்பன் என் வாயைப் பிடுங்குகின்றானே?"

சுவாமி பெரிதாகச் சத்தமிட்டார். பின்னர் பெருஞ்சிரிப்பு சிரித்தார். அனைவரையும் நாமம் பாட வைத்தார்.

# ஆசிரமம்



1993இல் சுவாமியைத் தரிசனம் செய்வதற்காக பக்தர்கள் கூட்டம் நீண்ட வரிசையில் சன்னதித் தெரு வீட்டின் முன்னே நின்றிருக்கும். சரியாக காலை 10 மணிக்கு சுவாமியின் சேவகர் சசி, வீட்டின் உள்ளே சென்று சுவாமி அமர்வதற்க்காக பாயை எடுத்துவந்து வராந்தாவில் விரிப்பார். சுவாமி மெதுவாக வீட்டிலிருந்து வெளிப்பட்டுத் தனக்காக விரிக்கப்பட்ட பாயின் மீது அமர்ந்துகொள்வார்.

சசி இரும்புக் கதவுக்கு வெளியே சுவாமி தரிசனத்துக்காகக் காத்திருக்கும் பக்தர்களில் சுவாமியின் நீண்ட நாள் பக்தர்கள் யாரேனும் வந்திருக்கிறார்களா என்று பார்த்து, சுவாமியிடம் தகவல் அளிப்பார். சுவாமி உத்தரவின் பேரில் அவர்களை சசி உள்ளே அழைத்து சுவாமியின் முன்னே அமர வைப்பார். அதன் பின்பு மற்ற பக்தர்களை ஒவ்வொருவராக சுவாமியின் தரிசனத்துக்கு உள்ளே அனுப்பி வைப்பார். பக்தர்கள் ஒவ்வொருவராக உள்ளே வந்து, சுவாமியை நமஸ்கரித்து, சுவாமியிடமிருந்து கற்கண்டை பிரசாதமாகப் பெற்றுச் செல்வார்கள்.

வரும் பக்தர்களில் ஓரிருவரை சுவாமி உற்று நோக்கி, அவர்களது

பெயரையும், ஊரையும் கேட்பதுண்டு. சிலசமயங்களில் அவர்களது வேண்டுதல்களையும் கேட்டுக்கொள்வார். சிலரை முதுகில் தட்டிக்கொடுப்பதுண்டு. சிலரது கைகளைப் பிடித்துக்கொண்டு அமைதியாக சில நொடிகள் இருப்பதுண்டு. பக்தர்களின் தரிசனம் நண்பகல் 12 மணிக்கு முடிவுக்கு வரும். மீண்டும் மாலை 4 மணிக்கு தரிசனம் தொடங்கி 6 மணிக்கு முடிவுறும்.

பெங்களூர் ஜனார்த்தனன் சுவாமியின் நீண்ட நாள் பக்தர். 1975லிருந்து சுவாமியின் பிரியமான பக்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். 1993ம் ஆண்டு அவரது உடல்நலம் மிகவும் பாதிப்படைந்தது. மருத்துவர்கள் தகுந்த சிகிச்சை அளித்து அவருக்கு முழு ஓய்வு மிகவும் அவசியம் என அறிவுறுத்தினர். வியாபாரத்தில் ஈடுபட்டு அயராது உழைத்து, உழைத்து அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டது. அவரது சகோதரர்கள் அவரை ஓய்வு எடுக்கச் சொல்லி வற்புறுத்தி வந்தனர். திருவண்ணாமலை சுவாமியிடம் இருந்தால் மட்டுமே தன்னுடல் மற்றும் உள்ளம் ஆரோக்கியமாக இருக்குமெனக் கருதி அவர் திருவண்ணாமலை சென்றார்.

“சுவாமி, நான் சில தினங்கள் திருவண்ணாமலையில் தங்கி இருக்க விரும்புகிறேன். தினமும் காலையும், மாலையும் தங்களைத் தரிசனம் செய்யும் பாக்கியத்தை அருள வேண்டும்” ஜனார்த்தனன் சுவாமியிடம் விண்ணப்பித்தார்.

சுவாமி புன்னகையோடு சம்மதித்தார். ஜனார்த்தனனும் அவர் மனைவி விஜயாவும் சிவகாசி நாடார் சத்திரத்தில் தங்கினார்கள். காலை 10 லிருந்து 12 மணி வரை, மாலை 4 லிருந்து 6 வரை சுவாமி தரிசனம். மற்ற வேளைகளில் சுவாமியின் பக்தர்களைச் சந்தித்து உரையாடுவது, சுவாமியின் அணுக்கத் தொண்டரான பெருமாள் சடையனிடம் பேசிக்கொண்டிருப்பது என மகிழ்ச்சியாக நாட்கள் கடந்தன.

ஒருநாள் பெருமாள் சடையன் ஜனார்த்தனனைச் சந்திக்க வந்தார். சுவாமியுடன் தனது அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். சுவாமியைப் பற்றிய சம்பவங்களைக் கேட்கக் கேட்க ஜனார்த்தனத்துக்கு பேரானந்தம் ஏற்பட்டது. திடீரென பெருமாள் சடையன் ஜனார்த்தனத்திடம் ஒரு வேண்டுகோள் வைத்தார்.

“ஜனார்த்தன ராஜா, சுவாமிக்கு ஆசிரமம் கட்ட வேண்டும். அதை நீங்கள்தான் செய்ய முடியும். சுவாமியிடம் அனுமதி கேளுங்கள். சுவாமி கண்டிப்பாக சரி சொல்வார்கள். தயங்கவேண்டாம். சுவாமியிடம் ஆசிரமம் குறித்து பேசுங்கள்.”

“ஆசிரமம், பெரிய விஷயமாயிற்றே. அதை நான் எப்படி சுவாமியிடம் கேட்க முடியும்?”

ஜனார்த்தனன் தயங்கினார். பெருமாள் தைரியமளித்தார். முடிவில், மறுநாள் சுவாமியிடம் ஆசிரமம் குறித்துப் பேசுவது என்று முடிவாயிற்று.

மறுநாள் காலை 10 மணி தரிசனம் தொடங்கியது. சுவாமியின் நேரெதிரே ஜானார்த்தனனும் விஜயாவும் அமர்ந்திருந்தனர். தன்னைக் காண வந்த பக்தர்களுக்குப் பிரசாதம் அளித்து, அருள்பாலித்துக்கொண்டே சுவாமி ஜனார்த்தனத்திடம் சகஜமாக உரையாடினார். இதனால் சற்றே தைரியமடைந்த ஜனார்த்தனன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினார்.

“சுவாமி, உங்களுக்கு ஒரு ஆசிரமம் கட்ட வேண்டும் என விரும்புகிறேன்.”

“இந்தப்பிச்சைக்காரனுக்கு ஆசிரமம் தேவையில்லை ஜனார்த்தனா. இந்தச் சிறிய இடத்தில் அப்பாவின் வேலையை இந்தப் பிச்சைக்காரனால் செய்யமுடியும் ஜனார்த்தனா.” சுவாமி பளிச்சென பதிலளித்தார்.

“ஆனால் பக்தர்கள் கடும் வெயிலிலும், மழையிலும் சிரமமடைகிறார்களே சுவாமி. அதிலும் பெண் பக்தைகளும், குழந்தைகளும் படும் அவஸ்தைகளைக் காண மிகவும் கஷ்டமாயிருக்கிறதே சுவாமி. உங்களுக்கு ஒரு ஆசிரமம் அமைத்தால் இந்தக் கஷ்டங்கள் போய்விடுமே சுவாமி.” ஜனார்த்தனன் கெஞ்சினார்.

“இந்தப் பிச்சைக்காரனுக்கு ஆசிரமம் தேவையில்லை ஜனார்த்தனா.” சுவாமி உறுதியாகக் கூற, ஜனார்த்தனன் மௌனமானார்.

அன்றிரவு பெருமாள் சடையன் வந்தார். ஜனார்த்தனன் நடந்த விவரங்களைக் கூறினார். பெருமாள் சிரித்துக் கொண்டே சுவாமி ஆசிரமத்துக்கு கண்டிப்பாக சம்மதிப்பார் என்று உறுதிபடக் கூறினார். ஜனார்த்தனன் ஆசிரமம் பற்றி விவாதிக்க விரும்பாமல் மௌனமானார். சில நாட்கள் கடந்தன. ஜனார்த்தனின் உடல் நலம் பெரிதும் தேறியது. தினமும் சுவாமி தரிசனம். ஓய்வு நேரங்களில் சுவாமியின் பக்தர்களின் தரிசனம். நாட்கள் நலமாகவும் மகிழ்ச்சியுடனும் கழிந்தன. அன்று ஜனார்த்தனமும், விஜயாவும் சுவாமியுடன் அமர்ந்திருந்தார்கள். சுவாமி பக்தர்களின் நமஸ்காரத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குக் கற்கண்டைப் பிரசாதமாக அளித்துக் கொண்டிருந்தார்.

“ஜனார்த்தனா, அன்று ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாயே?” சுவாமி திடீரென வினவினார்.

ஜனார்த்தனன் சுவாமி எதைப் பற்றி கேட்கிறார் என்று தெரியாமல் விழித்தார்.

ஆசிரம விஷயம் அவர் நினைவிலிருந்துப் போயே போய்விட்டிருந்தது.

“ஏதோ ஆசிரமம் விஷயமாகப் பேசினாயே?”

“ஆமாம் சுவாமி, ஆனால் நீங்கள்தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்களே”

ஜனார்த்தனன் ஆதங்கத்தோடு சொன்னார்.

“இந்தப் பிச்சைக்காரனுக்கு ஆசிரமம் தேவையில்லை ஜனார்த்தனா. இந்தச் சிறிய இடமே இவனுக்குப் போதுமானது. ஆனால் பக்தர்கள் சிரமப்படுவதாகச் சொன்னாயே?”

“ஆமாம் சுவாமி. தங்களைத் தரிசித்து அருள்பெற வரும் பக்தர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் சுவாமி.”

“பக்தர்களுக்காக ஆசிரமம் என்றால் சரி. ஆனால் இந்தப் பிச்சைக்காரனுக்கு ஆசிரமம் தேவையில்லை ஜனார்த்தனா. ஆஸ்ரமம் ஏற்பட்டால் ஒரு விஷயத்தை நீ மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். இந்தப் பிச்சைக்காரன் ஆசிரமத்துக்கு வந்தாலும் வரலாம், வராமலும் போய்விடலாம். என்ன சொல்கிறாய்?”

சுவாமி வினவினார். ஜனார்த்தனத்துக்கு யோசனையாகிவிட்டது. சுவாமி வராமல் ஆசிரமத்தில் என்ன செய்வது? சற்று நேரத்தில் ஒரு தெளிவு. சுவாமியால் தன் பக்தர்களை விட்டு எப்படி விலகியிருக்க முடியும்? தன் பக்தர்களை சுவாமி ஒருநாளும் கைவிடமாட்டார் என ஜனார்த்தனன் உறுதியாக நம்பினார்.

“சரி சுவாமி, தங்களது விருப்பப்படியே சுவாமி.“

சுவாமி பேரானந்தத்தோடு சிரித்தார். ஜனார்த்தனத்தின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

“இனி என்ன செய்யப் போகிறாய், ஜனார்த்தனா?”

“நான் பெங்களூர் சென்றுவிட்டு, ஒருசில தினங்களில் சிவகாசி செல்கிறேன் சுவாமி. அங்குள்ள நண்பர்களைச் சந்தித்து மேலும் செய்ய வேண்டிய காரியங்களை ஆராய்ந்து செய்கிறேன் சுவாமி.”

சுவாமி மகிழ்வோடு ஜனாத்தனத்துக்கு விடைகொடுத்து அனுப்பினார்.

ஜனார்த்தனன் சிவாகாசி சென்றார். சுவாமியின் பக்தர்கள் குழுமினர். ஆசிரமத்துக்கு சுவாமி அனுமதி வழங்கிய செய்தியை ஜனார்த்தனன் சொல்ல அனைவரும் ஆனந்தம் அடைந்தனர். அப்போதே சில பக்தர்கள் தங்கள் பங்களிப்பை உறுதி செய்தனர். அடுத்த சில நாட்களில் சில ‘ல’ கரங்கள் ஜனார்த்தனத்திடம் வழங்கப்பட்டது.

மீண்டும் ஜனார்த்தனன் சுவாமியிடம் சென்றார். சிவகாசியில் பக்தர்களின் சந்திப்பையும் அவர்களின் மகிழ்ச்சியையும் பங்களிப்பையும் சுவாமியிடம் விவரித்தார். சுவாமி கவனமுடன் கேட்டார். அடுத்து செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்று சுவாமி கேட்டார். ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்க வேண்டுமென ஜனார்த்தனன் கூறினார்.

“ஜனார்த்தனா, இந்தப் பிச்சைக்காரனுக்கு உன் மீது டிரஸ்ட் இருக்கிறதே. எனவே, டிரஸ்ட் என்ற அமைப்பு வேண்டாம் ஜனார்த்தனா.”

“இல்லை சுவாமி, பக்தர்களிடமிருந்து பணம் பெறுவதால் அவற்றைக் கணக்குக் காட்ட வேண்டும் சுவாமி. அதற்கு டிரஸ்ட் என்ற அமைப்பு அத்தியாவசியத் தேவை சுவாமி.“

சுவாமி சம்மதம் தெரிவித்தார். ‘யோகி ராம்சுரத்குமார் டிரஸ்ட்’ 1993ஆம் ஆண்டு உதயமாயிற்று. சுவாமியின் சம்மதத்தின் பேரில் மூன்று ஏக்கர் இடம் வாங்கப்பட்டது. பக்தர்கள் தங்களின் அன்பளிப்பை தாராளமாக டிரஸ்டுக்கு அனுப்பினர். அப்பொழுது இருந்த கணக்குப் புத்தகத்தைப் பார்த்தால் அதில் பக்தர்கள் கொடுத்த பணம் மட்டுமே

வரவு கணக்கில் இருக்கும். செலவுகளை ஜனார்த்தனமும், அவருடன் பணியாற்றிய ராமமூர்த்தி, பார்த்தசாரதி, ரகுநாத் ஆகிய பக்தர்கள் மட்டுமே தாங்களாகவே மனமுவந்து ஏற்றுக்கொண்டதால், கணக்குப் புத்தகத்தில் செலவுப் பகுதி காலியானதாக இருக்கும்.

பக்தர்கள் அனுப்பிய பணம் ஆசிரமத்துக்கான நிலம் வாங்குவதற்கு மட்டும் முழுமையாக பயன்படுத்தப்பட்டது. ஜனார்த்தனத்தின் தன்னலமற்ற உழைப்பாலும், சுவாமியின் பேரருளாலும் உருவானதுதான் "யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம்." ஜனார்த்தனத்தை ஆசிரமத்துக்காக சுவாமியின் அனுமதி பெற உந்தித்தள்ளிய பெருமாள் சடையனின் பங்களிப்பும் மகத்தானது. சுவாமியின் பக்தர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் பெருமாள் சடையனையும், ஜனார்த்தனத்தையும் சுவாமியின் பேரருளால் என்றும் நினைவுகூரட்டும்!

# பத்திரப்பிழை



1993ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி ஆசிரமத்துக்கான நிலம் கிரயம் செய்து பத்திரம் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்தது. செப்டம்பர் 10 ஆம் தேதிவாக்கில் கிரயப் பத்திரத்தின் நகல், மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டது. அதை விருதுநகர் ராமமூர்த்தி தட்டச்சு செய்து எடுத்து வரச் சென்றார். சுவாமியின் சன்னதித் தெரு வீட்டிலிருந்து நான்காம் வீட்டில் சுவாமியின் பக்தர் ஒருவர் தட்டச்சு செய்து வந்தார். அவரிடம் ராமமூர்த்தி கிரய பத்திரத்தின் நகலைக் கொடுத்து தட்டச்சு செய்யச் சொன்னார். தட்டச்சு செய்த நகலை திரு.ராமமூர்த்தி சுவாமியின் சன்னதித் தெரு வீட்டின் வாசலில் வைத்துவிட்டு கண் மூடிப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது இரவு சுமார் எட்டு மணி இருக்கும். சுவாமி ஓய்வெடுக்கும் நேரம் அது. வராந்தாவில் யாருமில்லை.

ராமமூர்த்தி ஆனந்தமாகக் கண்களை மூடிப் பிரார்த்தனை செய்துவிட்டுக்

கண்களைத் திறந்து பார்த்தால், அங்கு அவரெதிரே கையில் விசிறியைத் தூக்கிப் பிடித்த வண்ணம் சுவாமி நின்று கொண்டிருக்கிறார். பெரிய கதவைத் திறந்து, இரும்புக் கதவையும் திறந்து சுவாமி எப்போது வெளியே வந்தார் என்று ராமமூர்த்தி ஆச்சரியப்பட்டுப் பிரமித்துப் போய்ச் சிலையென நின்றார். சுவாமி இதமாகச் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார். ராமமூர்த்தி சுவாமியை நமஸ்கரிக்கவும் மறந்து திக்பிரமை பிடித்து அவரையே பார்த்த வண்ணம் இருந்தார்.

"ஏதாவது சொல்லவேண்டுமா நண்பா?" சுவாமி வினவினார்.

"இல்லை சுவாமி, ஆமாம் சுவாமி, பத்திரத்தின் நகலை டைப் செய்ய வந்தேன் சுவாமி, வேறொன்றும் இல்லை சுவாமி." ராமமூர்த்தி பக்தியில் வாய்குழறிப் பேசினார்.

சுவாமி அவரது தோளைப் பிரியமுடன் தட்டிக் கொடுத்தார். ராமமூர்த்தி சுயநினைவடைந்து சுவாமியை நமஸ்கரிக்க, சுவாமி அவருக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார். மறுநாள் காலையில், ஜனார்த்தனன் மற்றும் நண்பர்கள் சுவாமியிடம் பத்திர நகலைப் படித்துக் காட்டுவதற்காக சன்னதித் தெரு வீட்டை அடைந்தார்கள். சுவாமி அவர்களை வீட்டினுள் அழைத்துச் சென்று அமரவைத்தார். ஜனார்த்தனன் பத்திர நகல் தட்டச்சு செய்து வந்ததையும், அதை சுவாமியின் முன் வாசித்து காட்ட விரும்புவதாகவும் சொன்னார்.

"நண்பா, இந்தப் பத்திர நகலை நீங்கள் சிவகாசி நாடார் சத்திரத்துக்கு எடுத்துச் சென்று திரும்பத் திரும்ப படித்துப் பாருங்கள். நாளைக் காலை இந்தப் பிச்சைக்காரனிடம் வாருங்கள்."

சுவாமி, நண்பர்களுக்கு அங்கிருந்த பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து, அனுப்பி வைத்தார். சிவகாசி நாடார் சத்திரத்தின் அறையில்

அமர்ந்த வண்ணம் நண்பர்கள் அனைவரும் அந்தப் பத்திர நகலை மாறி மாறிப் படித்துப் பார்த்தார்கள். எல்லாமே சரியாக இருந்ததாக அனைவரும் கருதினார்கள். மறுநாள் காலை ஜனார்த்தனனும், நண்பர்களும் சுவாமியின் வீட்டை அடைந்தார்கள். சுவாமி அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

"சுவாமி, பத்திர நகலை நாங்கள் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்துவிட்டோம். எல்லாம் சரியாக இருக்கிறது சுவாமி."

ஜனார்த்தனன் சுவாமியிடம் பணிவோடு கூறினார். சுவாமி வாய்விட்டுச் சிரித்து ஜனார்த்தனத்தை அன்பொழுகப் பார்த்த வண்ணம் இருந்தார். சற்றுநேரம் கடந்தது.

"ஜனார்த்தனா, இந்தப் பத்திர நகலை எடுத்துக் கொண்டு, தபோவனம் செல். அங்கே ஓய்வுபெற்ற தாசில்தார் சிவராமகிருஷ்ணன் இருப்பார். அவரிடம் பத்திர நகலைப் படித்துக் காட்டு."

சுவாமி சிரித்தபடியே ஜனார்த்தனனிடம் கூறினார். சிவராமகிருஷ்ணன் 1975ஆம் ஆண்டிலிருந்தே சுவாமியிடம் தீவிர ஈடுபாடு கொண்டவர். அவர் எழுதிய 'ஜெயகுரு ஜெயகுரு ஜெயகுரு போற்றி, யோகி ராம்சுரத்குமார குரு போற்றி' எனும் பாடலை சுவாமி பலமுறை பக்தர்களைப் பாடச்சொல்லிக் கேட்டு ஆனந்திப்பார். தபோவனத்திலிருந்து யார் வந்தாலும், அவர்களிடம் சிவராமகிருஷ்ணனைப் பற்றியே முதலில் சுவாமி விசாரிப்பார். சிவராமகிருஷ்ணனுக்கு அப்போது சுமார் 75 வயதிருக்கும். எளிமையான, இறை சிந்தனை நிறைந்த, இனிமையான தவவாழ்வை, அவர் தபோவனத்தில் உள்ள ஒரு குடிலில் வாழ்ந்து வந்தார்.

சுவாமியின் உத்தரவுப்படி ஜனார்த்தனனும் அவரது நண்பர்களும்

சிவராமகிருஷ்ணனைக் காண அப்பொழுதே தபோவனம் புறப்பட்டார்கள். சிவராமகிருஷ்ணன் இருந்த குடிலுக்குச் சென்றார்கள். நண்பர்களைக் கண்டதில் சிவராமகிருஷ்ணனுக்கு பரம சந்தோஷம். சுவாமியின் உத்தரவை ஜனார்த்தனன் சொல்ல சிவராமகிருஷ்ணன் பத்திர நகலைப் படிக்கச் சொன்னார். ஜனார்த்தனன் பத்திர நகலைப் படித்தார். சிவராமகிருஷ்ணன் மீண்டும் ஒருமுறை படிக்கச் சொன்னார். பத்திர நகல் படிக்கப்பட்டது. அவர் மற்றுமொருமுறை படிக்கச் சொல்ல, மூன்றாம் முறையாகவும் பத்திர நகல் படிக்கப்பட்டது.

"எல்லாமே சரியாகத்தானே இருக்கிறது. பின் ஏன் சுவாமி உங்களை என்னிடம் அனுப்பினார்? இதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது. உங்களோடு நானும் திருவண்ணாமலை வந்து சுவாமியைத் தரிசனம் செய்தால் எல்லாம் புரிந்துவிடும். நானும் உங்களோடு திருவண்ணாமலை வருகிறேன்."

சிவராமகிருஷ்ணன் சொன்னதும் அடுத்த இரண்டு மணி நேரத்தில் சிவராமகிருஷ்ணன், ஜனார்த்தனன் மற்றும் நண்பர்கள் சுவாமியின் சன்னதித் தெரு வீட்டை அடைந்தனர்.

சுவாமி சிவராமகிருஷ்ணனை தன்னருகே அமரவைத்து அவரது கையைப் பிடித்து வருடியவாறு அவர்மீது அருள்மழை பொழிந்துகொண்டிருந்தார்.

"சுவாமி, என்னிடம் ஜனார்த்தனன் மூன்று முறை பத்திர நகலைப் படித்துக் காட்டி விட்டார். நான் அறிந்த வரையில் அதில் எந்தத் தவறும் இல்லை சுவாமி."

சிவராமகிருஷ்ணன் மிகவும் பணிவோடு கூறினார். சுவாமி சிரித்தபடியே இருந்தார்.

"ஜனார்த்தனா, சிவராமகிருஷ்ணனுக்கு சிவகாசி நாடார் சத்திரத்தில்

ஒரு அறை எடுத்துக் கொடுத்து அவரை நன்கு கவனித்துக் கொள். அவரிடம் மீண்டும், மீண்டும் பத்திர நகலை அனைவரும் படித்துக் காட்டுங்கள். நாளைக் காலை இந்தப் பிச்சைக்காரனிடம் வாருங்கள்."

சுவாமி அனைவருக்கும் விடை கொடுத்தனுப்பினார்.

சிவராமகிருஷ்ணன், ஜனார்த்தனன் மற்றும் நண்பர்கள் சிவகாசி நாடார் சத்திரத்துக்குச் சென்றனர். அங்கே சிவராமகிருஷ்ணனுக்குத் தனி அறை எடுத்து, அதில் அவரைத் தங்க வைத்தனர். அவர் அங்கே சிறிதுநேரம் ஓய்வெடுத்த பின்னர் அன்று மாலை 7 மணி வரையிலும் அனைவரும் பத்திர நகலை சிவராமகிருஷ்ணனுக்குப் படித்துக் காட்டினார்கள். எந்தத் தவறும் அதில் புலப்படவில்லை. சிவராமகிருஷ்ணன் பத்திர நகலை வாங்கிக் கொண்டார்.

"இதில் ஏதோ பிழை இருக்கிறது. இல்லையெனில் இதை சுவாமி நம்மைத் திரும்பத் திரும்ப படித்துப் பார்க்கச் சொல்லமாட்டார். இதை நானே படித்துப் பார்க்கிறேன்." சிவராமகிருஷ்ணன் பத்திரத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமுடன் படித்தார். திடீரென பலத்த ஆச்சரிய ஓசை எழுப்பினார்.

"ஓ இங்கே இருக்கிறது பிழை. நிலம் வாங்குபவரை நிலத்தை விற்பவராகவும், நிலம் விற்பவரை வாங்குபவராகவும் மாற்றி தட்டச்சு செய்துவிட்டார்கள். இது மிகப் பெரிய பிழையாகும். அதனால்தான் சுவாமி நம்மை மாறி மாறி இதைப் படித்துப் பார்க்கச் சொல்லியிருக்கிறார். சுவாமியின் அருளினால் பிழையைக் கண்டுபிடித்துவிட்டோம். சுவாமியிடம் செல்வோம் வாருங்கள்."

சிவராமகிருஷ்ணன் மெய்சிலிர்த்துச் சொன்னதைக் கேட்ட அனைவரும் திக்பிரமை பிடித்ததுபோல் அசைவற்று நின்று விட்டோம். பத்திர


நகலைக் கையால் கூடத் தொடாமல், பத்திரத்தின் வாசகத்தில் பிழை இருப்பதை சுவாமி எவ்விதம் தெரிந்துகொண்டார்? அனைவரும் சுவாமியிடம் ஓடினோம். சன்னதித் தெரு வீட்டின் வாசற் கதவைத் தட்டினோம். சுவாமி கதவைத் திறந்து எங்களை உள்ளே அனுமதித்தார். பத்திர நகலில் ஏற்பட்ட பெரும் பிழையைக் கண்டுபிடித்து விட்டதை சிவராமகிருஷ்ணன் சுவாமியிடம் சொன்னார். சுவாமி ஆனந்தமாகப் பெருஞ்சிரிப்பு சிரித்தார்.

“சிவராமகிருஷ்ணன் பத்திரத்தில் உள்ள பிழையைக் கண்டு பிடித்துவிட்டார். எல்லாம் அப்பாவின் அருள். பத்திர நகலில் உள்ள பிழையை திருத்தி பத்திரத்தை இனி டைப் செய்யலாம். என் தந்தை உங்களை ஆசிர்வதிக்கிறார்.”

சுவாமியை அனைவரும் பணிந்து நமஸ்கரித்தோம். சுவாமி அனைவரையும் தட்டிக்கொடுத்து பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து அருள்பாலித்தார்.

மறுநாள் சிவராமகிருஷ்ணனைத் தபோவனத்தில் அவரது குடிலில் விட்டுவிட்டு திருவண்ணாமலை வந்து சேர்ந்தோம். திருத்தப்பட்ட பத்திரத்தின் பதிவு 1993 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 15 ஆம் தேதி நடந்தது. அன்று ஆசிரம நிலத்தில் விழாக்கோலம் பூண்டு, பக்தர்கள் சுவாமியிடம் ஆடிப்பாடிக் களித்தார்கள்.

# விபூதியும் குங்குமமும்



1993ல் யோகி ராம்சுரத்குமார் டிரஸ்டின் முதல் அறங்காவலர் பெங்களூர் ஜனார்த்தனன், யோகி ராம்சுரத்குமார் ஆசிரமம் ஏற்படுத்த அடிமனை பூமியை சுவாமியின் பரிபூரண சம்மதத்துடன் தேர்ந்தெடுத்து, முன்பணம் கொடுத்திருந்தார். 1993 செப்டம்பர் 15 ஆம் தேதிக்குள் முழுப்பணமும் செலுத்தி அடிமனை பூமியை டிரஸ்டின் பேரில் பதிவு செய்ய ஒப்பந்தமும் போடப்பட்டது. ஜனார்த்தனன் தன் குடும்பத்தையும் தொழிலையும் மறந்து, தனது சௌகரியங்களையும் துறந்து, ஊர் ஊராக சுவாமியின் பக்தர்களைச் சந்தித்துப் பணம் திரட்டுவதில் மும்முரமாக இருந்தார்.

ஜனார்த்தனனும் அவரது நண்பர்களும் பக்தர்களிடம் பணம் திரட்டிய பாணி மிகவும் சுகமான அனுபவம். பக்தர்களின் இல்லம் சென்று, சுவாமியைப் பற்றி சிரத்தையுடன் சில நிமிடங்கள் பேசி மகிழ்வர்.

பின்னர் பக்தரிடமிருந்து விடை பெறும் சமயம், பக்தர் ஜனார்த்தனன் எதிர்பார்த்ததைவிட அதிகமாக நன்கொடை வழங்குவதைக் கண்டு அனைவரும் மெய்சிலிர்த்துப் போவார்கள். இதுதவிர, மணியார்டர்களிலும், தபால்களிலும் ஏராளமான பணமும், செக் மற்றும் டிரஃப்ட்டும் வந்துகொண்டிருந்தன.

பணம் அனுப்பிய பக்தர்களுக்கு ரசீது மட்டும் தபாலில் அனுப்பப்பட்டது. வெறும் ரசீதை மட்டும் பக்தருக்கு அனுப்புவதில் ஜனார்த்தனன் திருப்தி அடையவில்லை. சுவாமியை நேரில் காண்பவர்கள் சுவாமியிடம் பழங்களோ, புஷ்பமோ, கற்கண்டோ பிரசாதமாகப் பெற்றுச் செல்வது வழக்கம். அதனால், சுவாமியின் காரியத்துக்காக பணம் அனுப்பும் பக்தர்களுக்கு வெறும் ரசீது மட்டும் அனுப்புவது போதாது என ஜனார்த்தனன் நினைத்தார். புஷ்பத்தையோ, கற்கண்டையோ, பழங்களையோ தபாலில் பிரசாதமாக அனுப்ப இயலாது.

எனவே, விபூதியையும், குங்குமத்தையும் வாங்கி, சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பித்து, சுவாமி அவற்றை ஆசீர்வாதம் செய்து கொடுத்த பின்பு, பக்தர்களுக்கு ரசீதுடன் பிரசாதமாக அனுப்பலாம் என்று ஜனார்த்தனன் கருதினார். நண்பர்களின் ஒப்புதலின் பேரில், ஜனார்த்தனன் விபூதியையும் குங்குமத்தையும் அண்ணாமலையார் கோவில் கடையில் வாங்கி சுவாமியிடம் எடுத்துச் சென்றார்கள்.

“இந்த விபூதி குங்குமத்தை ஆசீர்வதித்துக் கொடுங்கள் சுவாமி”

ஜனார்த்தனன் விபூதி பாக்கெட்டையும், குங்குமப் பொட்டலத்தையும் சுவாமியின் திருவடியில் சமர்ப்பித்து வணங்கி நின்றார்.

“இவை எதற்காக, ஜனார்த்தனா?” சுவாமி வியப்புடன் வினவினார்.

“ஆசிரமத்துக்காக பணம் அனுப்பும் பக்தர்களுக்கு ரசீதுடன் பிரசாதமாக

இவற்றை அனுப்பலாம் என்று தீர்மானித்து இருக்கிறோம் சுவாமி."

ஜனார்த்தனன் பணிவுடன் கூறினார்.

"என்ன?! யாரைக் கேட்டு இப்படித் தீர்மானித்தீர்கள்? அப்பா இந்தப் பிச்சைக்காரனுக்கு அந்த வேலையைக் கொடுக்கவில்லை ஜனார்த்தனா. எனவே, இவற்றை நண்பர்களுக்கு அனுப்பக்கூடாது ஜனார்த்தனா."

சுவாமி கண்டிப்போடும், கோபத்தோடும் கூறியதைக் கேட்டு அனைவரும் திகைத்துப் போய்விட்டனர். ஏதோ தவறு நடந்துவிட்டது என்பது மட்டும் புரிந்தது. சற்றுநேரத்தில் அனைவரையும் சுவாமி விடைகொடுத்து அனுப்பினார். அப்போதும் விபூதி குங்குமத்தை சுவாமியின் பெயரால் பகதர்களுக்கு அனுப்பக்கூடாது என மீண்டும் எச்சரித்தார். அனைவரும் குழம்பிப் போய் சிவகாசி நாடார் சத்திரத்துக்குச் சென்றுவிட்டோம்.

அன்று மாலை சுவாமியின் பக்தர்கள் கிருஷ்ணமூர்த்தியும், ராமமூர்த்தியும் சிவகாசி நாடார் சத்திரத்துக்கு வந்தார்கள். அவர்கள் ஜனார்த்தனத்தைச் சந்தித்து சுவாமி ஒரு பார்சலை அவரிடம் ஒப்படைக்கக்கூறி அனுப்பியதாகச் சொன்னார்கள். அந்த பார்சலில் சுவாமியின் சிறிய வண்ணப்படம் இருப்பதாகவும் சொன்னார்கள். ஜனார்த்தனன் அவர்களிடம் சுவாமியை அவர்கள் சந்தித்தது பற்றியும், பார்சலை தங்களிடம் கொடுக்கச் சொன்ன முகாந்திரம் பற்றியும் கேட்டார்.

கிருஷ்ணமூர்த்தியும், ராமமூர்த்தியும் விவரமாகச் சொல்ல ஆரம்பித்தனர். அன்பர்கள் இருவரும் சுவாமியின் சிறிய வண்ணப்படத்தை லேமினேஷன் செய்து சுவாமியிடம் கொடுத்தால், சுவாமி அவற்றை பக்தர்களுக்குப் பிரசாதமாகக் கொடுப்பார் எனக்கருதி சுவாமியின் சிறிய படத்தை ஏராளமாக அச்சிட்டு லேமினேஷன் செய்து, பார்சலாகக் கட்டி

சுவாமியிடம் கொண்டு சென்றார்கள்.

“இது என்ன பார்சல்?” சுவாமி வினவினார்.

“சுவாமியின் வண்ணப்படத்தைச் சிறியதாக லேமினேஷன் செய்து கொண்டுவந்திருக்கிறோம் சுவாமி” என்று கிருஷ்ணமூர்த்தி பதிலுரைத்தார்.

சுவாமியிடம் காண்பிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த சில படங்களை சுவாமியிடம் கிருஷ்ணமூர்த்தி சமர்ப்பித்தார். சுவாமி அப்படங்களைச் சற்று நேரம் அமைதியாகப் பார்த்த பின் அந்தப் பார்சல்மீது தன் இரு கரங்களையும் ஆழ்ந்து பதித்து ஆசீர்வதித்தார்.

“கிருஷ்ணமூர்த்தி, ஜனார்த்தனனும் அவரது நண்பர்களும் சிவகாசி நாடார் சத்திரத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் படங்கள் தேவையிருக்கும், எனவே, இந்த பார்சலை அவர்களிடம் கொடுத்து விடுங்கள்.”

சுவாமியின் திருமுகம் தெய்வீகமாக ஜொலித்தது. கிருஷ்ணமூர்த்தியும், ராமமூர்த்தியும் சுவாமியை நமஸ்கரித்து பின்னர் பார்சலை எடுத்துக் கொண்டு சிவகாசி நாடார் சத்திரத்தை அடைந்து ஜனார்த்தனனிடம் பார்சலை ஒப்படைத்துள்ளார்கள். ஜனார்த்தனத்துக்கும் நண்பர்களுக்கும் சுவாமியின் செய்தி புரிந்துவிட்டது. அன்றிலிருந்து பணம் அனுப்பிய பக்தர்களுக்கு ரசீதோடு சுவாமியின் சிறிய லேமினேஷன் செய்யப்பட்ட வண்ணப்படத்தைப் பிரசாதமாக அனுப்பினார்கள். பக்தி செலுத்தும் அன்பர்களிடம் அன்றிலிருந்து சுவாமியே சென்றடைந்தார்.

# ரகசியம்



திருவண்ணாமலையில், அந்த பக்தை வீட்டில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் அமர்ந்திருந்தார். பக்தை சுவாமியிடம் ஒரு கடிதத்தைக் காட்டினார். சுவாமி அக்கடிதத்தைப் படிக்கச் சொன்னார். பக்தையின் தாய் அக்கடிதத்தை எழுதியிருந்தார். தன் உடல் நலன் க்ஷீணித்து வருவதாகவும், தன் இறுதி நாளுக்கு முன் மகளைக் காண விரும்புவதாகவும் கடிதம் சொன்னது.

சுவாமி பக்தையைப் பார்த்தார். பக்தை தாயைப் பார்க்கப் போகப் போவதில்லை எனக் கூறினார். சுவாமி, தாய் சுகவீனம் அடைந்திருக்கும் சமயம் மகளைக் காண விரும்பினால் மகள் தாயைச் சென்று கண்டிப்பாகக் காண வேண்டும் என வழியுறுத்திச் சொன்னார். பக்தையோ சுவாமியை விட்டுச் செல்ல மாட்டேனெனச் சொல்ல, சுவாமி தானும் உடன் வந்து தாயைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார். பக்தை சம்மதித்தார்.

சுவாமி மற்றொரு தீவிர பக்தையிடம் சென்று அவரின் காரை பக்தையின் தாய் இருக்கும் ஊர் வரை சென்றுவர பயன்படுத்திக்

கொள்ள அனுமதி கேட்டார். காரின் ஓட்டுனர், துணைக்கு அந்த தீவிர பக்தையின் மகன் மற்றும் அவருடைய தோழியையும் உடன் அனுப்ப சுவாமி வேண்டினார். அந்த தீவிர பக்தை காரையும், ஓட்டுனர், அவர் மகன் மற்றும் தோழியை சுவாமியுடன் அனுப்பி வைத்தார். சுவாமி தோழியிடம் அவரது கணவரிடம் அனுமதி பெற வேண்டாமா எனக் கேட்க, அந்தப் பக்தை தன்னை சுவாமி அழைத்துச் சென்றால் தன் கணவர் எதுவும் கூறமாட்டார் என்று கூறினார்.

அடுத்த அரை மணி நேரத்தில் கார் அந்த பக்தையின் தாய் இருக்கும் ஊருக்குப் புறப்பட்டது. அப்போது இரவு 9 மணி இருக்கும். அந்த பெரிய காண்டசா காரின் பின் இருக்கையில் சுவாமியும் அந்த இரு பெண்களும், முன் இருக்கையில் கார் சொந்தக்காரரின் மகனும் அமர்ந்தனர். ஒட்டுனர் காரை ஜாக்கிரதையாக ஓட்டிச் சென்றார்.

சுமார் 350 கி.மீ. தூரத்தைக் கடந்து கார் அதிகாலை சுமார் ஐந்து மணி அளவில் அந்தப் பெண்ணின் தாய் வீட்டை அடைந்தது. தாயும் மகளும் சந்தித்தனர். சந்திப்பு உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. நோய்வாய்ப்பட்ட தாய் மகளைக் கண்டதும் வாய்விட்டு அழுதார். சுவாமி அவரைச் சமாதானப்படுத்தினார். கணிசமான பணத்தையும் அந்த தாயிடம் அளித்தார். தாயுடன் இருந்த பக்தையின் தங்கை அனைவருக்கும் சிற்றுண்டி, காபி தயாரித்து வழங்கினார். சுமார் இரண்டு மணி நேரம் கழித்து தாயிடம் விடை பெற்று சுவாமியும் உடன் சென்றோரும் புறப்பட்டனர்.

அப்போது பெரும் புயல் ஒன்று கரை கடந்து, அந்த சாலையில் இருந்த பெரும் மரங்களை எல்லாம் வேரோடு சாய்த்து விட்டிருந்தது. போக்குவரத்து பல மணி நேரம் முடங்கியது. கார் ஓட்டுனர் மிகக் கவனமாகக் காரைச் செலுத்தி அனைவரையும் பத்திரமாக அன்று இரவே திருவண்ணாமலை சேர்ப்பித்தார். சுவாமி காரின் உரிமையாளருக்கும்

மற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

அந்த பக்தை உடன் வந்த பக்தையிடம் இந்த பயண விவரத்தை எவரிடமும், அவரின் கணவர் உட்பட யாரிடமும் சொல்லக் கூடாது எனவும் ரகசியம் காக்கப்பட வேண்டும் எனவும் கூறினார். அதுவே சுவாமியின் விருப்பம் என்றும் கூறினார். உடன் சென்ற பக்தைக்கு இதில் ரகசியம் காக்க என்ன இருக்கின்றது எனப் புரியவில்லை. சுவாமியும் அந்த பக்தையும் அதே காரிலேயே பக்தையின் வீடு சென்றடைந்தனர். மறுநாள் சுவாமியுடன் சென்ற பக்தை வெளியூரில் இருந்த தன் கணவருக்கு தொலைபேசியில் தன் பயண விவரங்களைச் சொன்னார்.

இது நடந்த அடுத்த ஏழு நாட்களில் சுவாமியுடன் சென்ற பக்தையின் கணவன் சுவாமியை தரிசிக்க திருவண்ணாமலை வந்தார். அவர் எப்பொழுது வந்தாலும் சுவாமிக்காக அவர்தான் கார் ஓட்டுவார். அன்றும் சுவாமியையும், தாயைப் பார்க்க ஊர் சென்ற பக்தையையும் அவர் காரில் அழைத்துக் கொண்டு ஆசிரமம் வந்தார். சுமார் பத்து நிமிடப் பயணத்தில் சுவாமி எதுவும் சொல்லவில்லை. ஒருவித குறும்பான சிரிப்புடனே காரில் வந்தார்.

ஆசிரமத்தில் இறங்கி அங்கிருந்த குடிசையில் அவருக்கென அமைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார். எதிரில் சுமார் நூறு பக்தர்கள் சுவாமியைக் கண்ட பரவசத்தில் அமர்ந்திருந்தனர். காரை ஓட்டி வந்த அந்த பெண்ணின் கணவர் ஆசிரம வளாகத்தின் வெளியே நின்று சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நண்பர் வேகவேகமாக அவரிடம் வந்தார். சுவாமி அழைப்பதாகக் கூறினார். அவர் சுவாமியிடம் விரைந்தார். அவரைக் கண்டதும் சுவாமி பெரும் சிரிப்பை அலையலையாகக் கொட்டினார். அவரைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டார்.

“நண்பா, உன்னிடம் சொல்லி அனுமதி வாங்காமல் உன் மனைவியை வெகு தூரம் இந்த பிச்சைக்காரன் அழைத்துச் சென்றான். உன் மனைவியிடம் உன் அனுமதி பெற வேண்டாமா என இப்பிச்சைக்காரன் கேட்டான். உன் மனைவி இந்த பிச்சைக்காரனுடன் சென்றால் நீ எதுவும் சொல்லமாட்டாய் என்று கூறினார். நன்றி நண்பா. மிக்க நன்றி நண்பா.”

சுவாமியின் பேச்சைக் கேட்ட நண்பன் வெட்கமடைந்தான். அந்த பக்தையின் முகமோ வெளிறிப் போய்விட்டது. பரமனுக்கும் பக்தனுக்கும் இடையே என்ன ரகசியம் இருக்க முடியும்? என் நாதன் வெட்டவெளியில், பரமார்த்த பரவெளியில் வெளிப்படையாக உலவிக் கொண்டிருப்பவன்.

# தனம் தந்து தன்மயமாக்கிய சுவாமி



சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் தெய்வீகப் பணிகளை, அவைகள் சுவாமியால் செய்யப்படும் பொழுது எவராலும் புரிந்து கொள்ள இயலாது. சுவாமி தனது பணியைச் செய்து முடித்த பின், சுவாமியின் ஸ்மரணம் நமது மனதிலே பரிபூரணமாக இருந்தால், அப்பணியின் தாத்பரியத்தை நாம் ஒருவேளை அறிந்து புரிந்து கொள்ளக்கூடும். அத்தகைய சுவாமியின் பணி ஒன்றை இன்று பார்க்கலாம்.

பொதுவாக சுவாமி எத்தைகைய பணியை மேற்கொண்டாலும் அப்பணி ஆன்மீக சாட்சாத்காரத்தை நோக்கி பக்தர்களைக் கொண்டு செல்லும் பொருட்டே செய்யப்படும். லௌகீகக் காரியங்கள் போல சுவாமியின் காரியங்கள் தோற்றமளித்தாலும் அவை முழுக்க முழுக்க ஆன்மீகப் பணிகளே ஆகும்.

ஒருபெரும் தொழிலதிபர் சுவாமியைத் தேடி தேரடிமண்டபத்திற்கு வந்தார். அவரின் தொழில்கள் யாவும் முற்றிலும் நசிந்து முழுகிவிடும் நிலையில் அச்சமயம் இருந்தது. அவரால் வீழ்ச்சியிலிருந்து மீள எவ்வளவோ முயன்றும் எதுவும் செய்ய முடியவில்லை. மனம் நொந்து விரக்தியாக ஊர் ஊராகச் சென்று சாதுக்களையும், சன்னியாசிகளையும், ஞானிகளையும் தரிசித்துக் கொண்டிருந்தார். அவர் தரிசனம் செய்த எவரும் அவருக்கு ஆறுதலும், அமைதியும் தர முடியவில்லை.

முடிவில் சுவாமியிடம் வந்து சேர்ந்தார். சுவாமியின் பரிபூர்ணத்துவம் அவரை மிகவும் கவர்ந்தது. சுவாமியின் பேரானந்தப் பெருஞ்சிரிப்பு அவரின் மனதில் நம்பிக்கையையும், அமைதியையும் அளித்தது. சுவாமியைச் சரணாகதி அடைந்தார்.

சுவாமி அவருக்காகவே காத்திருந்தார் போலும். தன் முழு கவனத்தையும் அவர் மேல் செலுத்தினார். தன் நாமத்தை அவருக்கு தீட்சையாக அளித்தார். அவர் சுவாமியை அடுத்தடுத்து தரிசித்தார். சுவாமி அவரைத் தன்னோடு பல நாட்கள் இருக்க வைத்தார்.

அங்கே, ஊரில் தொழில்கள் விசித்திரமான வளர்ச்சியைக் கண்டன. முழுகிவிடும் நிலையில் இருந்த அவரின் தொழில்கள் யாவும் திடீரென லாபகரமாக செயல்பட்டன. எல்லா திசைகளிலுமிருந்தும் பண மழை பெரு மழையாகப் பெய்தது. ஆனால் அந்தத் தொழிலதிபர் மனதில் அவருக்கு பிடித்த அந்தத் தொழில்கள் இப்பொழுது வினோதமான காட்சிப் பொருளானது. தொழிலின் வளர்ச்சி அவரின் ஆன்ம வளர்ச்சிக்கே வித்திட்டது.

சுவாமியின் அருளால் அவரிடமிருந்த பற்று பறிக்கப்பட்டது. சுவாமியின் மீதிருந்த பக்தி உறுதிப்பட்டது.சுவாமியே அவரின் வாழ்க்கையானார்.

சுவாமியை மட்டுமே அவர் இவ்வுலகில் கண்டார். சுவாமியின் சொற்களே அவர் செவிகளில் கேட்டது. சுவாமியைப் பற்றி மட்டுமே அவரால் பேசமுடிந்தது. சுவாமியே அவரின் சுவாசமும் ஆனார். சுவாமியைத் தவிர்த்து அவர் வேறு எதையும் சிந்திக்கவில்லை.

ஆனாலும் தொழில்கள் மென்மேலும் வளர்ந்து பெருகியது. பல கோடிகள் வருமானம் அவரைப் பாதிக்கவேயில்லை. அவர் சுவாமியுடனேயே இருந்தார். இல்லை இல்லை சுவாமிதான் அவருடன் அனுக்கணமும் பிரியாது இருந்தார். சுவாமியும் அவரும் ஒன்றானார்கள். சுவாமி அவரைத் தன்மயமாக்கிக் கொண்டார். அவரின் ஜீவன் சுவாமியின் திருவடியில் கரைந்தது.

தனம் தந்து, பற்றறுத்து சுவாமி அவருக்கு அனுக்கிரஹம் செய்தார்.

இது ஒரு பக்கமிருக்க இருந்த தனத்தையெல்லாம் பிடுங்கி சுவாமி ஒரு பத்தரை தன் மயமாக்கியதை மற்றொரு சமயம் காண்போம்.

# செல்வம் பறித்து, தன்னைக் கொடுத்த சுவாமி



நமது சுவாமி யோகி ராம்சுரத்குமாருக்குத்தான் எத்தனை விதமான பக்தர்கள். சுவாமியிடம் சரணாகதியடைந்து முக்தி அடைந்த பக்தர்கள் பலர் உலகின் பார்வையில் படாமல் வாழ்ந்து சென்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவரைப் பற்றி இன்று நாம் தெரிந்து கொள்வோம்.

அந்த அம்மையார் பிறந்த இடமும், புகுந்த இடமும் செல்வச் செழிப்பான குடும்பங்கள். ஒரே பெண் பிள்ளையாக இருந்ததால் பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்தவர். தெய்வ வழிபாடுகள் செய்கின்ற குடும்பமாக இருந்தாலும் ஞானியர் பற்றி அறியாத குடும்பச் சூழலில் வளர்ந்தவர். தேவாரம், திருவாசகம் என சைவ நூல்களில் ஓரளவு பரிச்சயமானவர். அவர் புகுந்த வீடும் அவ்விதமே. சைவ சித்தாந்தங்களைச் சிறுவயது முதலே கற்றவர்கள். அம்மையாரின் கணவர் மட்டும் ஞானிகளின் மரபில் வாழும் விருப்பமுடையவராக இருந்தார்.

அம்மையாரின் கணவர் மிகப் பெரும் செல்வந்தர். தான் வாழ்ந்த குறைவான காலத்திலேயே தன் மனைவிக்கு நம் சுவாமியை

அறிமுகப்படுத்தினார். சுவாமியிடம் தன் மனைவியையும், குழந்தைகளையும் மானசீகமாக ஒப்படைத்துவிட்டு சுவாமியின் திருவடிகளில் கரைந்து, மறைந்து போனார்.

எளிமையான, கள்ளங்கபடமற்ற அந்த அம்மையார் கணவரின் திடீர் மறைவில் நிலைகுலைந்து போனார். பெரிய பெரிய நிறுவனங்களை நிர்வகித்து வந்த கணவரின் மறைவிற்குப் பின் அந்த அம்மையார் செல்லும் திசையறியாது திகைத்து நின்றார். சுவாமியே கதியெனச் சரணடைந்தார். சின்னஞ்சிறு குழந்தைகளுடன் தைரியமாக வாழ்ந்து வந்தார்.

கணவர் நிர்வகித்து வந்த நிறுவனங்களை கணவரின் நெருங்கிய சொந்தங்கள் கைப்பற்றின. சுவாமியின் வழிகாட்டுதல்படி அம்மையார் நிறுவனங்களையும், இதர பங்குகளையும் தன் மாமனார், மாமியார் சொன்னபடியே சொந்தங்களிடம் ஒப்படைத்தார். தன் பிள்ளைகள் படித்து முடித்து வந்தபின் உரிய காலத்தில் நிறுவனங்களையும், சொத்துக்களையும், பங்குகளையும் தன் பிள்ளைகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதுவரை அம்மையாருக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் ஒப்பந்தம் சொன்னது. முதல் சில ஆண்டுகள் எல்லாமே சரியாக நடந்து வந்தன. சொந்தங்களின் உதவியோடும், சுவாமியின் வழிகாட்டுதல்படியும் குழந்தைகளின் திருமணங்கள் நடந்தேறின.

காலப்போக்கில் சொந்தங்களின் துர்ரெண்ணத்தால் அம்மையாரிடம் பற்பல காரணங்களைக் கூறி அவரிடம் பல பத்திரங்களில் கையெழுத்து பெற்று நிறுவனங்களின் பங்குகளையும், சொத்துக்களையும் சொந்தங்கள் அபகரித்துக் கொண்டனர். அவருக்குக் கொடுக்கப்பட்ட மாதாந்திரப் பணமும் நிறுத்தப்பட்டது. அம்மையார் நிலைகுலைந்து போனார்.

கணவர் மரணத்திற்குப்பின் சுவாமியிடமே அவரின் இருப்பு அதிகமாக இருந்தது. குழந்தைகளின் திருமணத்திற்குப்பின் அவர் முழுநேர


திருவண்ணாமலைவாசி ஆனார். சுவாமி அவரை தனது நேரடியான கண்காணிப்பில் வைத்திருந்தார். சுவாமியின் கருணையின் தாக்கத்தினால் அம்மையார் பொருள் இழப்பினால் ஏற்பட்ட துக்கத்திலிருந்து விடுபட்டார். சுவாமியின் அருளால் அவர் தன்னைச் சுற்றியிருந்த தளைகளிலிருந்தும் விடுபட்டார்.

ஒரு நிறுவனத்தின் சொற்ப பங்குகளே அப்போது அவரின் கையிருப்பு. அப்பங்குகளையும் விற்றுவிட அவரின் பிள்ளையும், உறவினர்களும் வற்புறுத்தினர். சுவாமியிடம் அம்மையார் இது விஷயமாகக் கேட்க, சுவாமி அந்த பங்குகளை விற்கவே கூடாது என உறுதியாகச் சொல்லிவிட்டார். சுவாமியின் வாக்கின்படி அம்மையார் அப்பங்குகளை விற்க மறுத்துவிட்டார். ஒரு சில மாதங்களில் அப்பங்குகள் ஈட்டித் தந்த ஈட்டுத் தொகை அவரின் செலவிற்குச் சரியாக இருந்தது.

காலம் கடந்தது, சுவாமியின் திருவருளினால் அம்மையார் பற்றற்றுப் போனார். அவரின் தங்க வைர நகைகள் யார் யாருக்கோ கொடுக்கப்பட்டன. அவருக்கு வந்த பணமும், கேட்போர்க்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது. எந்த ஒரு செயலோ, எண்ணமோ, சொல்லோ அவருக்கு எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அவர் அமைதியானார்.

சுவாமி தான் சித்தியடையுமுன் இந்த அற்புத பக்தையை இப்பிறவி படுத்தும்பாட்டிலிருந்து முக்தி அடையச் செய்தார். அம்மையாருக்கு சுவாமி, அவரின் சொற்கள், அவர் பற்றிய பாடல்கள் மட்டுமே வாழ்வானது. தான் இழந்த செல்வத்தை நினைத்தோ, சொந்தங்களை நினைத்தோ, தன் எதிர்காலம் குறித்தோ கொஞ்சமும் கவலைப்படாமல் பற்று முற்றும் அறுந்தவராய் அமைதியாக சுவாமியின் நினைவாகவே அந்த அம்மையார் சுவாமியின் திருவடி சேர்ந்து மறைந்தார். அந்த அம்மையார் இழந்த சொத்துக்களின் இன்றைய மதிப்பு சுமார் முன்னூறுகோடி இருக்கும்.

# மந்திர தீட்சை




அந்த வியாபாரிக்கு நாற்பது வயது இருக்கும். இளமையில் களியாட்டங்களில் ஈடுபட்டு குதூகலித்தவர். திருமணமாகி மூன்று குழந்தைகள் ஆனபின்பும் களியாட்டங்களை மறக்காது அதிலேயே திளைத்தார். வியாபாரத்தில் வருமானமும் தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது.

திடீரென அவருக்கு உடலில் உபாதை. வைத்தியரிடம் காட்ட அவர் சில சோதனைகளைச் செய்யச் சொன்னார். சோதனை முடிவுகளை ஆராய்ந்த பின்பு அவருக்குப் புற்று நோய் இருப்பதாக வைத்தியர் உறுதி செய்தார். வியாபாரி திகைத்துப் போனார். பல வருடங்களாக களியாட்டங்களில் கழித்த வாழ்க்கை நினைவுக்கு வந்தது. மனம் மிகவும் வேதனைப்பட்டது. வலியினால் உடல் துடித்தது.

பட்டணத்துக்குச் சென்று மேல் வைத்தியம் செய்து கொள்ளச்

சொன்னார்கள். வியாபாரி பட்டணம் சென்றார். உறவினர் ஒருவர் வைத்தியர். அவரது துணையோடு ஒரு பெரிய மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பின் ரேடியோதெரபி, பின் கீமோதெரபி, அவருக்கு இருப்பது இன்னும் ஆறுமாத காலம்தான் என இறுதியாக வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள்.

மேலை நாட்டு வைத்திய முறை வியாபாரியைக் கைவிட்ட பின்பு, சித்த வைத்தியம் சிறிது காலம். பின்பு ஆயுர்வேதம். அதன்பின் ஹோமியோபதி, அடுத்து நாட்டு வைத்தியம் என வியாபாரியின் உடல் சோதனைக் களமாக்கப் பட்டது. இறுதியில் ஹோமங்களும், யாகங்களும் வளர்க்கப்பட்டன. நோய் எதற்க்கும் கட்டுப்படவில்லை. மரணபயமும், நோயின் உச்சத்தினால் ஏற்பட்ட கொடூரமான வலியும் அவரை நரகத்தை நேரில் பார்க்க வைத்தது.

வியாபாரியின் உறவினர் ஒருவர் சுவாமியின் பக்தர். தன்னை சுவாமியிடம் அழைத்துச் செல்லுமாறு அவரிடம் மன்றாடினார். உறவினர், சுவாமிக்குக் கடிதம் எழுதிவிட்டு, வியாபாரியையும் அவரது மனைவி மற்றும் இளைய மகளையும் உடன் அழைத்துக்கொண்டு திருவண்ணாமலை புறப்பட்டார்.

ஆசிரமம் சென்றடைந்த அந்தக் குழு, ஆசிரம நிர்வாகியைச் சந்தித்து சுவாமியைப் பார்க்க விருப்பம் தெரிவித்தனர். சுவாமிக்குத் தகவல் சொல்லியனுப்பப்பட்டது.

அன்று காலை 10 மணி முதல் சுவாமி பிரதான் மந்திருக்கு வெளிப்புறம் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். என்னை அவரது இடப்பக்கத்தில் உள்ள மற்றொரு நாற்காலியில் அமரச் செய்திருந்தார். எனது வலது கரத்தைப் பிடித்தபடியே சுவாமி அமர்ந்திருந்தார். சுவாமி அந்த வியாபாரியையும், அவருடன் வந்திருந்தவர்களையும் அழைத்தார்.

அவர்கள் வந்தார்கள். அனைவரும் சுவாமியை நமஸ்காரம் செய்தார்கள். வியாபாரி சுவாமியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு “என்னைக் காப்பாற்றுங்கள் சாமி, என்னைக் காப்பாற்றுங்கள்” என்று கதறினார். அவர் மனைவியும், மகளும் கேவிக் கேவி அழுதனர். சுவாமி அவர்களை எதிரில் உள்ள மற்ற நாற்காலிகளில் அமரச் சொன்னார். அவர்கள் அமர்ந்தனர்.

சுவாமி வியாபாரியையே உற்று நோக்கினார். அவர் கண்களின் தீட்சண்யம் வியாபாரியை அமைதியடையச் செய்தது. சுவாமி புகைபிடித்துக் கொண்டே வியாபாரியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“வலி தாங்க முடியவில்லை சாமி, நான் தூங்கியே மாதக்கணக்கில் ஆகிவிட்டது சாமி.“

வியாபாரி புலம்பினார். சுவாமி அவரையே மீண்டும் உற்று நோக்கினார். பின் என்னை நோக்கித் திரும்பி, தான் ஆங்கிலத்தில் சொல்வதை வியாபாரிக்குத் தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லச் சொன்னார்.

“ராமா, ராமா, ராமா என்று சொல்லிக்கொண்டே இருக்கட்டும். வலி கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து பின் முற்றிலும் முடிந்துவிடும்.“

நான் திடுக்கிட்டுப் போனேன். சுவாமியைப் பார்த்தேன். சுவாமியின் முகத்தில் கருணை வெள்ளம் ஒளிர்ந்து கொண்டிருந்தது. நான் தமிழாக்கம் செய்து வியாபாரியிடம் சொன்னேன். வியாபாரி தன் வலியெல்லாம் போய்விடும், தன் நோயும் போய்விடும் என்று நினைத்துக் கொண்டார். உணர்ச்சிவசப்பட்டவராகத் தன் இருக்கையிலிருந்து எழுந்து சுவாமியிடம் சென்று மீண்டும் நமஸ்கரித்தார். அவர் நிமிர்ந்தபோது சுவாமி அவர் தலையில் தன் கரத்தை வைத்து “ராமா“ என்றார். வியாபாரியும் “ராமா“ என்றார். சுவாமி மீண்டும் “ராமா“ எனச்

சொல்ல வியாபாரி பின் சொல்ல, மூன்றாவது முறையும் சுவாமி "ராமா" எனச் சொல்ல, வியாபாரியும் திரும்பச் சொன்னார். சுவாமி மீண்டும் வியாபாரியை அவரது இருக்கையில் அமரச் செய்தார். சற்று நேரத்தில் சுவாமி அவர்களுக்குப் பழங்களைப் பிரசாதமாகக் கொடுத்து அனுப்பினார்.

மாலை நேர தரிசனம் ஆசிரம உணவுக்கூடத்தில் நடந்தது. பின் வரிசையில் ஒரு நாற்காலியில் வியாபாரி அமர்ந்திருந்தார். சுவாமி அவரையே உற்று நோக்கினார். தரிசன நேரம் முழுவதும் சுவாமி அந்த வியாபாரியையே பார்த்துக் கொண்டிருந்தார். தரிசனத்தை முடித்துக் கொண்டு சுவாமி 'சுதாமா' வீட்டுக்குப் புறப்பட்ட சமயம், வியாபாரி தூரத்தில் இருந்தவாறே சுவாமியை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். சுவாமி சற்று நின்று தன் இரு கரங்களையும் உயர்த்தி வியாபாரியை ஆசிர்வதித்தார்.

அன்று இரவே வியாபாரி ஊர் திரும்பினார். அன்றிலிருந்து அவர் மாறுபட்டவர் ஆனார். ராம மந்திரம் அவரை ஆட்கொண்டது. 24 மணி நேரமும் நாம உச்சாடனத்தை அவரால் செய்யமுடிந்தது. அவரால் வலியை உணர முடியாமல் போனது. இரண்டு மாத காலத்தில் அவரும் முடிந்து போய்விட்டார்.

வாழ்வின் கடைசி நாட்களில் வியாபாரிக்கு சுவாமி மந்திர தீட்சை கொடுத்து ஆட்கொண்டது என் மனத்தை இன்றுவரை சிலிர்க்க வைக்கிறது.

# அடித்தவன் வணங்கினான்!



1993ஆம் வருடம் டிசம்பர் மாதம். சுவாமி சன்னதித் தெரு வீட்டிலிருந்து 'சுதாமா' வீட்டுக்குச் சென்றுவிட்ட பிறகு, பெருமாள் சடையன், சுசீந்திர கணேசமூர்த்தி, ரங்கநாதன் ஆகிய மூவரும் சுவாமியின் உடமைகளான சாக்குமூடைகளை பாதுகாத்து வந்தனர். 1977ஆம் ஆண்டு சுவாமி சன்னதித் தெரு வீட்டில் வாசம் செய்ய ஆரம்பித்த பின்பும், சுவாமியின் உடமைகளான சாக்குமூடைகள் மட்டும் தேரடி மண்டபத்திலும், பாத்திரக்கடை வாசலிலுமாக இரவும் பகலும் மாற்றி மாற்றி வைக்கப்பட்டன.

ஏதோ காரணத்துக்காக சுவாமி அவற்றை சன்னதித் தெரு வீட்டில் வைக்கவில்லை. பெருமாள் சடையன் மட்டும் ஆரம்ப காலத்திலிருந்து தனது அந்திமக் காலம் வரைக்கும் இத்தொண்டைச் செய்துவந்தார். அவரோடு இருந்த மற்றவர்கள் மாறி மாறி வந்துகொண்டும், சென்று

கொண்டுமிருந்தனர். சுசீந்திர கணேசமூர்த்தியும் சுமார் 14 ஆண்டு காலம் சுவாமிக்குத் தொண்டாற்றி வந்தார்.

சன்னதித் தெரு வீட்டில் சுவாமி இருந்த சமயங்களில் இத்திருத் தொண்டர்களுக்கு உணவு ஒரு பிரச்சனையாக இருந்ததில்லை. சுவாமிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பதார்த்தங்கள் இவர்களையும் சென்றடையும். இதுபோக 'ரஜினி க∴பே' என்ற ஓட்டலிலும் இவர்களுக்கு சுவாமியின் கணக்கில் மூன்று வேளையும் உணவு அளிக்கப்பட்டது. சுவாமி 'சுதாமா' வீட்டுக்குச் சென்ற பின்பு இவர்களுக்கு ஓட்டல் உணவு மட்டுமே கிடைத்து வந்தது.

ஓட்டல் உணவுக்கான பணத்தை ஒரு உள்ளூர் அன்பர் மூலம் சுவாமி தினசரி கொடுத்து அனுப்புவார். அந்தப் பணத்தில் ஓட்டலில் கிடைத்த உணவின் அளவு ரங்கநாதனுக்கு போதுமானதாக இருக்கவில்லை. பசியால் அவன் எப்பொழுதும் புலம்பிக்கொண்டிருந்தான். ஒரு நாள் பசி பொறுக்க முடியாமல் சுவாமியைப் பார்த்து தன் பசியைப் பற்றி சொல்லச் சென்றான். சுமார் 2 கிலோமீட்டர் தூரம் வெயிலில் நடந்து ஆசிரமம் சென்று அடைந்தான்.

ஆசிரமக் கேட்டிலிருந்த வாயிற்காப்போன், ரங்கநாதனைத் தடுத்து நிறுத்தி விசாரிக்கலானார். ரங்கநாதன், தான் சுவாமியிடம் சன்னதித் தெரு வீட்டில் வேலை பார்ப்பதாகவும், சுவாமியைச் சந்திக்க வந்ததாகவும் கூறினான். எகத்தாளமாகச் சிரித்த வாயிற்காப்போன் அச்சிறுவனை விரட்டினான். ரங்கநாதனோ அங்கிருந்து நகருவதாக இல்லை. சுவாமியை கண்டே ஆகவேண்டுமெனப் பிடிவாதமாக நின்றான்.

அந்த நேரத்தில், ஆசிரம நிர்வாகியாக அச்சமயத்தில் இருந்தவர் வந்தார். ரங்கநாதன் கேட்டுக்கு வெளியே நிற்பதை பார்த்து,

வாயிற்க்காப்போனிடம் என்னவென்று விசாரித்தார். வாயிற்காப்போன் ரங்கநாதன் சொன்னதைச் சொல்ல, அவரும் ரங்கநாதன் சொல்வதை நம்பாமல் அவனை விரட்டியடிக்க ஆரம்பித்தார். ரங்கநாதன் தான் சுவாமியைப் பார்க்காமல் போகப்போவதில்லை என தீர்க்கமாகக் கூறினான். அவனுடைய பரட்டைத் தலையும், அழுக்கடைந்த உடையும், மெலிந்த தேகமும் ஆசிரம நிர்வாகிக்கு அருவருப்பை ஊட்டியது. பொறுமை இழந்த அவர் ரங்கநாதனை 'பளார்' என அறைந்துவிட, திக்பிரமை அடைந்த அவன் பயந்துபோய் சிறிது தூரம் தள்ளிநின்று கேவிக் கேவி அழ ஆரம்பித்தான். உள்ளே பக்தர்களுக்கு சுவாமி தரிசனம் அளித்துக் கொண்டிருந்தார்.

அச்சமயம் சுவாமியைக் காண அவரது நீண்டநாள் பக்தரான லட்சுமணச் செட்டியார் வந்தார். அவர் ரங்கநாதனை நன்கு அறிவார். அழுதுகொண்டிருந்த அவனைப் பார்த்து செட்டியார் விசாரிக்க, அவன் நடந்ததைக் கூறினான். செட்டியார் அவன் கையைப் பிடித்து உடன் அழைத்துக்கொண்டு ஆசிரமத்துக்குள் நுழைந்தார். 'இவன் சுவாமியிடம் வேலைபார்ப்பவன்' எனப் பொதுவாக சத்தமாகக் கூறிவிட்டு, செட்டியார் சுவாமி அமர்ந்திருந்த இடம் நோக்கிச் சென்றார்.

சுவாமியைக் கண்டதும் ரங்கநாதன் விருவிருவென அவரின் அருகில் சென்று அவரை நமஸ்கரித்தான். சுவாமி அவனைக் கருணை பொங்கப் பார்த்து அருகில் வரும்படிக் கூற, ரங்கநாதன் சுவாமியின் அருகில் சென்றான்.

"என்னா தம்பி?" சுவாமி வினவினார்.

"சாமி, நீ கொடுக்கற பணம் பத்தலை. எனக்கு ரொம்பப் பசிக்குது சாமி. அதனால்தான் உன்கிட்ட சொல்லிட்டுப் போலாம்னு வந்தேன் சாமி."

சுவாமி அவனையே அன்பு பொங்கப் பார்த்துக்கொண்டிருந்தார். அவரது அன்பான பார்வையால் தான் பட்ட துயரத்தை எல்லாம் மறந்தான் ரங்கநாதன்.

“தம்பி, இனி உனக்கு அப்பா நிறையக்கொடுப்பார். கவலை வேண்டாம் தம்பி.“ சுவாமியின் பதிலால் ரங்கநாதன் மகிழ்ச்சியடைந்தான்.

“நீ எப்படி வந்தாய் தம்பி?” சுவாமி வினவினார்.


“நடந்துதான் வந்தேன் சாமி” ரங்கநாதன் பதிலுரைத்தான்.

சுவாமி, பக்கத்திலிருந்த பணியாளனை அழைத்தார். அங்கிருந்த எல்லாப் பழங்களையும் சேகரித்து ஒரு துணிப்பையில் போடச் சொன்னார். பழங்களால் நிரம்பிய பையைப் பணியாளன் சுவாமியிடம் கொடுக்க, சுவாமி அதை ரங்கநாதனுக்கு வாஞ்சையோடு கொடுத்தார். அவன் திரும்பிப்போக யத்தனித்த போது, சுவாமி அவனைத் தடுத்து, தான் மட்டுமே பயன்படுத்தும் ஆசிரமக் காரின் டிரைவரை அழைத்தார்.

“தம்பி, இவரை சன்னதித் தெரு வீட்டுக்கு காரில் கூட்டிச் சென்று விட்டு வருவோம்.” டிரைவருக்கு சுவாமி உத்தரவிட்டார்.

டிரைவரும் ரங்கநாதனைக் காரில் ஏற்றிக்கொண்டு எஞ்சினை இயக்கினார். அந்த டீசல் எஞ்சினின் சத்தம் ஆசிரம கேட் வாசலில் இருந்த நிர்வாகியின் காதிலும், வாயிற்காப்போன் காதிலும் விழ, அவர்கள் சுவாமிதான் வருகிறார் என நினைத்து, ஓடோடி வந்து கேட்டைத் திறந்து, பாதையின் ஓரத்தில் ஒதுங்கி நின்று மெய் வளைத்துக் கைகூப்பி, பயபக்தியோடு வணங்கி நிற்க, ரங்கநாதன் கம்பீரமாகச் சிரித்தபடி அவர்களைக் கடந்து காரில் சென்றான்.

# கபடதாரிகளும் வருவர்



திருவண்ணாமலை சுவாமி யோகி ராம்சுரத்குமாரின் ஆசிரமத்தின் உணவருந்தும் இடத்தில் சுவாமியின் தர்பார் நடந்து கொண்டிருந்தது.

திடீரென அங்கே பிரபல்யமான, ஒரு ஞானி என தன்னை உருவகப்படுத்திக் கொண்டவர் வந்தார். அவருடன் அவருடைய பக்த பரிவாரங்கள் 30 நபர்களுக்கும் மேல் வந்திருந்தனர். அந்த ஞானியெனச் சொல்லப்பட்டவர் சுவாமியை ஆர்ப்பாட்டமாக நமஸ்கரித்தார். பின்னர் சுவாமியின் இருக்கைக்கு அருகில் நின்று பேச ஆரம்பித்தார்.

தான் இமயம் சென்ற கதையைச் சொன்னார். சுவாமியின் அருளால் சிவபெருமானைத் தரிசித்த கதையைச் சொன்னார். இன்னும் இமயமலையில் பற்பல தெய்வங்களைத் தரிசித்து, வணங்கி உரையாடிய கதையைச் சொன்னார். அனைத்தும் சுவாமியின் அனுக்கிரஹத்தினாலேயே நடந்தது என்றார்.`

இன்னும் என்னென்னவோ விசித்திரமான சம்பவங்கள் சுவாமியின் அருளினால் அவருக்கு சித்தித்ததாகச் சொன்னார். அவருடைய பக்த குழாம் ஆஹாகாரம் செய்து வியந்தது. சற்று நேரத்தில் ஞானி அங்கிருந்து சென்றுவிட்டார்.

சுவாமி அவர் வந்ததிலிருந்து அமைதியாக இருந்தார். அந்த ஞானி நமஸ்காரம் செய்தபோது ஒரு முறை அவரைப் பார்த்தார். பின்னர் அவர் இருந்த பக்கமே திரும்பாது அடுத்தடுத்து சிகரெட்டை புகைத்தவாறு இருந்தார். ஞானி சென்ற பின்பு சுவாமியின் முகத்தில் ஒரு இளநகை அழகாக மலர்ந்தது.

“இந்த நண்பர் இந்த பிச்சைக்காரனைப் பார்க்க ஒரிரு முறை வந்திருக்கிறார். மற்றபடி அந்த நண்பர் பேசிய எதைப்பற்றியும் இந்த பிச்சைக்காரனுக்கு ஒன்றும் தெரியாது. நண்பர்கள் யாரும் அவர் பேசியதைப் பொருட்படுத்தத் தேவையில்லை.”

சுவாமி தன்னருகில் இருந்தவர்களிடம் நாமத்தைப் பாடச்சொன்னார். பக்தர்கள் பரவசத்துடன் பாடினார்கள். அங்கே இருந்த சிலரின் மயக்கம் நீங்கி, மீண்டும் இயல்பு நிலைக்கு சுவாமியின் நாமத்தினாலும், சுவாமியின் தீட்சண்யமான நோக்கினாலும் மீண்டார்கள்.

# சுவாமியின் சொரூபமே சுவாமியின் சிலை




திருவண்ணாமலையில், ரமணாசிரமத்தில் ரமண மஹரிஷி சிலையை மறுநாள் திருமதி. இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைப்பதாக இருந்தார்கள்..

நம் சுவாமி யோகி ராம்சுரத்குமார் ரமண மஹரிஷி சிலையை திருமதி இந்திரா காந்தி முறைப்படி திறந்து வைப்பதற்கு முன் சிலையை தரிசிக்க விரும்பினார்.

சிலையைச் சுற்றிலும் உயரமான திரைச்சீலை கட்டப்பட்டிருந்தது. சுற்றிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. சுவாமி தன் ரமணாசிரம நண்பர்களை அணுகி தன் விருப்பத்தைத் தெரிவித்தார். நண்பர்களாலும் பாதுகாப்பு வளையத்தைத் தாண்டி சுவாமியை சிலைக்கு அருகில் அழைத்துச் செல்ல முடியவில்லை.

இதைக் கண்ட அத்திருவுருவச்சிலையை வடிவமைத்துச் செய்த திரு. கலாசாகர் ராஜகோபால் அவர்கள் சுவாமியைக் கைப்பிடித்து அழைத்துச் சென்று, பாதுகாப்பு வளையத்தைக் கடந்து, திரைச்சீலையை விலக்கி, சுவாமியை ரமண மஹரிஷியின் சிலையைப் பார்வையிட்டு சேவிக்க உதவினார்.

ஒரு மஹரிஷியின் சிலையை ஒரு யோகியே முதலில் பார்த்து சேவிக்க வேண்டும் என்பது அவரது எண்ணமாக இருந்தது. திருவுருவச்சிலையை சேவித்தபின் சுவாமி கலாசாகர் ராஜகோபாலுக்கு நன்றி தெரிவித்தார். அன்றிலிருந்து கலாசாகர் சுவாமியின் அன்பிற்குகந்த அடியார் ஆனார்.

கலாசாகர் ராஜகோபால் அவர்கள் காலத்தால் அழிக்க முடியாத பல சிலைகளை வடிவமைத்தவர். அவற்றுள் முக்கியமானது காஞ்சி மஹாபெரியவர் சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் சிலை, கலாக்ஷேத்திரா ருக்மணி தேவியின் சிலை, பாண்டிச்சேரி அரவிந்தர் சிலை, ரமண மஹரிஷி சிலை எனக் கூறிக்கொண்டே போகலாம்.

1995இல் கலாசாகர் திருவண்ணாமலைக்கு சுவாமியை தரிசனம் செய்ய வந்தார். ரமண மஹரிஷி, அரவிந்தர், ஜே.கிருஷ்ணமூர்த்தி, காஞ்சி மஹா பெரியவர் சந்திரசேகரசரஸ்வதி சுவாமிகள் இன்னும் பற்பல ஞானிகளிடம் அணுக்கமாக இருந்து, அவர்களின் அன்பையும், ஆசியையும் பெற்ற அவர் நமது சுவாமியின் அன்பையும் அருளையும் பெற்றார்.

திருவண்ணாமலையிலேயே தங்கி வாசம் செய்ய நினைத்த அவருக்கு சுவாமி வீடு ஏற்பாடு செய்து கொடுத்தார். ஒரு நெடுநாள் பக்தரை சுவாமி அழைத்து கலாசாகரையும், அவரது மனைவியையும் நன்கு கவனித்துக் கொள்ளக் கூறினார்.

கலாசாகரின் திருவண்ணாமலை வாசம் தொடங்கியது. சுவாமி அவர்

மீது அன்பு மழை பொழிந்தார். கலாசாகருக்கு அப்போது சுமார் 80 வயது இருக்கும். எல்லா நேரத்திலும் ஆனந்தமாகவே இருக்கும் அவரைக் காண்பதற்கே உற்சாகமாக இருக்கும்.

ஒரு நாள் சுவாமியோடு அவர் அமர்ந்திருந்தபோது, சுவாமிக்கு ஒரு பஞ்சலோகச் சிலை வடிவமைக்க விரும்புவதாகக் கூறினார். சுவாமி சற்று நேரம் மௌனமாக இருந்தார். கலாசாகர் காத்திருந்தார். சுவாமி மௌனம் களைந்து சிலை செய்ய அனுமதி தந்தார். ஏற்பாடுகள் துரிதமாக நடந்தது.

ஆஸ்ரமத்தில் முதலில் கட்டிய கூரை வேய்ந்த தர்சன் மந்திரில் சுவாமி தினமும் சுமார் இரண்டு மணி நேரம் சிலை வடிவச் சித்திரத்திற்காக ஒரே நிலையில் நின்றிருந்தார்.

இந்த ஆரம்பக்கட்ட வேலை முடிவுற சில வாரங்களாயின. பின்பு வார்ப்பு எடுக்க மேலும் சில வாரங்களாயின. பின்பு திண்டுக்கல்லில் சிலை வார்க்கும் வேலை செய்ய வசதி உள்ளதை அறிந்து கலாசாகர், சுவாமியிடம் திண்டுக்கல் செல்ல அனுமதி பெற்றார்.

திண்டுக்கல்லில் உள்ள ஒரு நெடுநாள் பக்தரை சுவாமி அழைத்து கலாசாகர் திண்டுக்கல்லில் இருக்கும்வரை அவரது வீட்டில் தங்க வைத்து நன்கு கவனித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். சிலை வார்க்கும் பட்டறையில் வேலைகள் தொடங்கின.

அச்சமயம் அந்த பட்டறையின் உரிமையாளர் ஒரு கார் விபத்தில் பலியானார். அதனால் ஒரு வாரம் வேலை தடைப்பட்டது. இதனிடையே சுவாமியின் திருவருவ சிலைக்காக பக்தர்கள் தங்கமும், வெள்ளியும், பித்தளையும் மற்ற உலோகங்களையும் கணிசமாக் காணிக்கையாக அளித்தார்கள்.

ஒரு வாரம் கழித்து அத்தனை உலோகங்களையும் உருக்கத் தொடங்கினர். அவ்வமயம் அந்த பட்டரையின் உரிமையாளரின் மனைவியும், மகனும் வந்தனர். சுவாமியின் திருவுருவச் சிலைக்காக உலோகங்கள் உருக்கப்படுவதைக் கண்ட அந்த உரிமையாளரின் மனைவி அங்கிருந்த சுவாமியின் திருவுருவப் படத்தை சற்று நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தார். திடீரென என்ன நினைத்தாரோ தெரியவில்லை தன் கழுத்திலிருந்த கனத்த தங்கத் தாலிச் சரடைக் கழற்றி உலோகங்களை உருக்கிக்கொண்டிருந்த அந்த கொதிகலனில் போட்டுவிட்டு, கண்களில் நீர் பெருக, கைகூப்பி வணங்கி நின்றார்.

சுவாமியின் திருவுருவச் சிலை முற்றுப் பெற்று திருவண்ணாமலை ஆசிரமம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு அதை தர்ஷன் மந்திரில் இறக்கி வைத்தார்கள். அடுத்த சில மாதங்களுக்கு சுவாமி அதைப் பார்க்கவேயில்லை.

திடீரென ஒரு நாள் சுவாமி அச்சிலையை பிரதான மண்டபத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். திருவுருவ சிலைக்கு சுவாமியே அபிஷேகம் செய்து சிலையின் திருப்பாதங்களைப் பக்தி பரவசத்தோடு தொட்டு வணங்கி.

“இது என் தந்தையின் சிலை. இதை வணங்குவோருக்கு என் தந்தை இகபர சுகத்தை அருளுவார்”, எனக் கூறினார்.

அன்றிலிருந்து பக்தர்கள் அனைவரும் தான் கொண்டு வந்த புஷ்பத்தை சிலைக்குச் சாற்றிவிட்டு, சிலையை தொட்டு நமஸ்கரித்து, சிலையை வலம் வந்து பின்னரே சுவாமியிடம் சென்று நமஸ்கரிக்கலாம் என்ற விதி முறையை சுவாமி வகுத்தார். தன் பிரதியாக தன் திருவுருவச் சிலையைத் தந்தருளிய நம் சுவாமி யோகி ராம்சுரத்குமாருக்கு ஆயிரமாயிரம் கோடி வந்தனங்கள்.

# சுவாமியின் சிலையே ஆசிரமத்தில் பிரதானம்



கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை. கண்ட நம் சுவாமி,

யோகி ராம்சுரத்குமார் கண்ட பொருள் பிரம்மத்தில் கரைந்துபோய் பிரம்மமானவர். பிரம்மத்தைத் தன் பவித்திர சரீரத்தில் நமக்குக் காட்டியவர். அங்கே உபதேசங்கள் இல்லை. தத்துவங்கள் இல்லை, தாத்பரியங்கள் இல்லை, சடங்குகளோ, சம்பிரதாயங்களோ எதுவுமே இல்லை. அன்பு ஒன்றே பேரன்பு ஒன்றே அங்கு பொங்கிப் பெருகி வழிந்தது.

தகுதியுற்றோர் அங்கு வந்தனர். அன்பைக் காதலோடு பருகினர். பெருவாழ்வு வாழ்ந்தனர். ஏனையோர் சிலரும் வந்தனர். இகபர

சுகம் யாசித்தனர். வாழ்ந்தனர், மறைந்தனர். ஆயினும் சுவாமியோ பிரம்மத்திலேயே நிலை கொண்டிருந்தார்.

கவிஞர்கள் வந்தனர். கவி மழை பொழிந்தனர். தனவந்தர்கள் வந்தனர். பண மழை பொழிந்தனர். பக்தர்கள் வந்தனர். பக்தியோடு பணிந்தனர். எனினும் சுவாமி, சுவாமியாகவே வாழ்ந்தார். வேண்டுதலற்று வாழ்ந்தார். வேண்டாமையும் அவரிடத்தில் இல்லை. அகண்டமாகவே வாழ்ந்தார். தேவைகளற்று வாழ்ந்தார்.

ஆரம்ப காலத்தில் குளிரில் நடுங்கி மரத்தடியில் படுத்திருந்தபோது, யாரோ போர்த்திவிட்டப் போர்வையை மடித்து வைத்துக்கொள்ள ஒரு துணிப்பை கூட அவருக்கு தேவைப்படவில்லை. தன் மேனியையே போர்வை தாங்கும் பொறியாக மாற்றிக் கொண்டார். தாகத்திற்குக் குளத்திலிருந்து நீர் பருக பக்கத்தில் கேட்பாரற்று கிடந்த கொட்டாங்கச்சி உதவியது. கோடையில் வீசிக் கொள்ள யாரோ இருவர் கொடுத்த இரு பனை ஓலை விசிறிகளும் ஒன்றாகக் கட்டப்பட்டு காற்று வர வீசிக் கொள்ள பயன்படுத்தப்பட்டன.

திருவண்ணாமலையிலும், சுற்றி உள்ள கிராமங்களிலும் உள்ள ஆரவாரமற்ற ஏழைகள் அளித்த எளிய கூழோ, சோறோ உணவாயிற்று. நாளை என்ற கவலையற்று வாழ்க்கையை சுவாமி வாழ்ந்து, வாழக் கற்றுக் கொடுத்தார். அன்போடு அன்பைக் கற்றுக் கொடுத்தார். எதிலும் இறைவனைக் காணக் கற்றுக் கொடுத்தார். எண்சாண் உடலின் நிலையாமையைக் கற்பித்தார். வளமையிலும், வறுமையிலும் வாழக் கற்பித்தார். இளமையிலும் முதுமையிலும் இறைவனைப் பற்றும் வழிமுறைகளைக் கற்பித்தார். வாழவும், சாகவும் சொல்லின்றி கற்றுக் கொடுத்தார்.

தன் சரீரம் இருக்கும் போதே தன் உருவச் சிலை வடித்து தன் அன்பர்க்குத் தானம் செய்தார். சுவாமி நமக்குத் தானம் அளித்த சிலாரூபத்தைப் பாதுகாக்க ஆசிரமம் அளித்தார். அவர் சிலாரூபம் பாதுகாப்புடன் இருக்க சுவாமி அருள் புரிவாராக

# .சுவாமியும் சுவாமியின் சிலையும்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் முதுமையிலும், நோயின் தீவிரத் தாக்கத்திலும், ஆசிரமப் பெருங்கூடத்தின் பின்னே உள்ள சிறு அறையில் படுத்திருந்தார். பக்கத்தில் ஒரு அன்பர் நின்றிருந்தார். திடிரென சுவாமி கண் விழித்துப் பார்த்தார்.

“நண்பா பெருங்கூடத்தில் உள்ள இந்த பிச்சைக்காரன் சிலையின் கால்களை யாரோ இதமாக பாதசேவை செய்கிறார்கள். அவர் யார் என்று பார்த்துச் சொல்வாயாக.”

சுவாமி மெதுவாகக் கூறினார்.


அப்பொழுது இரவு 8 மணியிருக்கும். பெருங்கூடத்தின் கதவு மூடப்பட்டிருக்குமே, இப்பொழுது யாரும் அங்கிருக்க முடியாதே என பலவாறாக சிந்தித்தவாறு, அறையிலிருந்து, உள்ளிருந்தவாறே பெருங்கூடம் செல்லும் வழியில் பக்தர் சென்று சுவாமி சிலையை நெருங்கினார்.

அங்கே சுவாமியின் நெடுநாள் தீவிர பக்தையொருவர், சுவாமியை நேரில் தரிசிக்க இயலாது, சுவாமி சிலை அருகே சென்று அமர்ந்து, சுவாமி சிலையின் பாதங்களை இதமாக வருடியவாறு இருந்தார். அவர் கண்களில் நீர் மல்க சுவாமியின் நாமத்தை மெதுவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். இதைக் கண்ணுற்ற அந்த அனபர் அதிசயமுற்று வேகவேகமாக சுவாமியிடம் சென்று,

"சுவாமி அங்கே தங்களின் சிலைக்கு பாதசேவை செய்வது அந்த நெடுநாள் பக்தைதான்," எனக்கூற,

சுவாமி ஆனந்தமாக, அழகான புன்முறுவல் பூத்து தன் கண் மலர்களை மறுபடியும் மூடிக் கொண்டார். சுவாமி வேறு சுவாமி சிலை வேறு அல்ல என்பதற்கு இதைவிட வேறு சான்று வேண்டுமா? சுவாமியின் சிலையைப் பற்றித் தொழுது சுவாமியோடு சங்கமிப்போம்.

# ஆஸ்ரமத்தை மாற்றி விட்டார்கள்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் சென்னை மருத்துவமனையிலிருந்து ஆஸ்ரமம் திரும்பினார். ரமண மஹரிஷியின் அடியவரும், நம் சுவாமியின் பக்தருமான டாக்டர் ரங்கபாஷ்யத்தின் கனிவான சிகிச்சையால் சுவாமி புற்று நோயிலிருந்து முற்றிலும் குணமடைந்திருந்தார்.

ஆஸ்ரமம் அடைந்த பின் பிரயாணக் களைப்பில் சுவாமி இரண்டு தினங்கள் ஆசிரமத்திலேயே, அவருக்கென ஏற்படுத்தப்பட்ட அறையில் ஓய்வு எடுத்தார். மூன்றாவது நாள் சுவாமி பக்தர்களைச் சந்தித்தார்.

சுவாமியை சக்கர நாற்காலியில் அழைத்து வந்தார்கள். சுவாமி தனது பஞ்சலோகச் சிலையை வலம் வந்தார். சிலையின் முன் சிறிது நேரம் சிலையைப் பார்த்தவாறே இருந்தார். பின் தான் வழக்கமாக அமரும் இடத்திற்குச் சென்றார். சுவாமியின் சிலைக்குக் கிழக்கே சில அடிகள்

தூரத்தில் சுவாமி நாற்காலியில் அமர்ந்தார். சுவாமியின் முகத்தில் கடுங் கோபம் தெரிந்தது. பக்தர்கள் சிலையை வலம் வந்து நமஸ்கரித்து பின் சுவாமியிடம் சென்று வணங்கி ஆசி பெற்று, சுவாமி முன் வரிசையாக ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் அமர்ந்தார்கள்.

சுவாமி திடீரென மிகக் கோபமாக,

"இந்த பிச்சைக்காரன் இல்லாத சமயத்தில் இந்த பிச்சைக்காரனது ஆசிரமத்தையே மாற்றி விட்டீர்கள்," என மிகச் சத்தமாகக் கூறினார்.

சுவாமியிடம் இருந்தோர், "இல்லை பகவான் நாங்கள் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. ஆசிரமம் அப்படியேதான் இருக்கின்றது," என மிகப் பணிந்து கூறினார்கள்.

ஆனால் சுவாமி தான் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறினார்.

எனது இடது கரத்தைப் பற்றியவாறு அமர்ந்திருந்த சுவாமி என்னிடம் சிகரெட் வைத்திருக்கின்றாயா எனக் கேட்க, நான் வைத்திருக்கின்றேன் சுவாமி எனக் கூறி சிகரெட்டையும் தீப்பெட்டியையும் சுவாமியின் கையில் கொடுத்தேன்.

உடனே அங்கே பெருத்த அமளி ஏற்பட்டது. டிரஸ்டி ஒருவர் பகவான் நீங்கள் சிகரெட் பிடிக்கக் கூடாது, எனச் சற்று உரக்கக் கூறினார். மற்றொரு பெண்மணி சுவாயிடமிருந்து சிகரெட்டையும், தீப்பெட்டியையும் சுவாமியிடமிருந்து பலவந்தமாக பறிக்க முயற்சித்தார்.

சுவாமி சிகரெட்டையும், தீப்பெட்டியையும் தன் கைகளுக்குள் மூடி மறைத்துக் கொண்டார். எந்த பழக்க வழக்கத்திற்கும் அடிமையாகாத அந்தப் புனித பரப்பிரம்மத்திடம், அங்கே ஒரு சாதாரண வயோதிகரிடம் நடந்து கொள்வதைப் போல் அந்த டிரஸ்டிகள் நடப்பதைப் பார்த்து

அங்கிருந்த பக்தர்கள் யாவரும் திகைத்துப் போயினர்.

சுவாமி, “இது இந்த பிச்சைக்காரன் ஆசிரமம். இங்கே இந்த பிச்சைக்காரன் விருப்பப்படிதான் சகலமும் நடக்க வேண்டும்,” என உரக்கக் கூறினார்.

“பகவான் இது உங்கள் ஆசிரமம் தான். எனினும் நீங்கள் சிகரெட் பிடிக்கக் கூடாது பகவான்,” அந்த டிரஸ்டி கண்டிப்புடன் கூறினார்.

“இந்த பிச்சைக்காரனுக்கு புத்தி சொல்ல முயற்சிக்காதீர்கள். இந்த பிச்சைக்காரன் என்ன செய்ய வேண்டும் என்பது அப்பாவிற்குத் தெரியும். நீங்கள் புத்தி கூற முயலாதீர்கள், நீங்கள் உங்கள் அதிகாரத்தை இந்த பிச்சைக்காரன் மேல் காட்டினால், இந்த பிச்சைக்காரன் தன் தந்தையின் அதிகாரத்தைக் காட்டுவான்,” சுவாமி பெருங் குரலில் முழக்கமிட்டார்.

“பகவான் நான் புத்தி சொல்லவில்லை. அபிப்பிராயம்தான் சொன்னேன் பகவான்,” டிரஸ்டி கெஞ்சினார்.

“இந்த பிச்சைக்காரருக்கு எது புத்திமதி சொல்லுதல், எது அபிப்பிராயம் சொல்லுதல் என்பது நன்றாகத் தெரியும். நீங்கள் உங்கள் இடத்தில் போய் இருங்கள்,” சுவாமி பட்டவர்த்தனமாகச் சொன்னார். மற்றொரு மகா புத்திசாலியான ஒரு டிரஸ்டி,

“பகவான் தங்களின் தந்தைதான் என் ரூபத்தில் பேசுகிறார் என நினைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் சிகரெட் பிடிக்கக் கூடாது பகவான்,” எனக் கூற,

சுவாமி உடனடியாக , “என் தந்தை உங்கள் மூலமாக ஒரு நாளும் பேசமாட்டார் என்பதை இந்த பிச்சைக்காரன் நன்கு அறிவான்,” என்றார்.

பின் சுவாமி ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார். இரண்டு மூன்று முறை ஆழ்ந்து சிகரெட்டை இழுத்தார். பின் மீதம் இருந்த சிகரெட்டை சுவாமி தன் கையால் பொடிப்பொடியாக்கிப் போட்டுவிட்டார். அதன்பின்

சுவாமி இறுதிவரை சிகரெட்டைத் தொடவேயில்லை.

மீண்டும் சுவாமி சொல்ல ஆரம்பித்தார். "இந்த ஆசிரமத்தை இந்த பிச்சைக்காரன் இல்லாத போது மாற்றி விட்டீர்கள்," எனத் திரும்பத் திரும்பக் கூறினார்.

அந்த பெண் டிரஸ்டி, அந்த பெரிய டிரஸ்டியை சைகை மூலம் அழைத்தார். அந்த பெரிய டிரஸ்டியும் குடுகுடுவென ஒடி வந்தார். அந்த பெண் டிரஸ்டி "பகவான் இங்கே ஒரு காட்சியை ஏற்படுத்துகின்றார். பக்தர்களையெல்லாம் மதிய உணவிற்கு அனுப்பி விடுங்கள்". (It seems Bhagavan wants to create a scene before the devotees. So, send the devotees for the lunch.)

அந்த பெரிய டிரஸ்டி சுவாமியிடம் வந்தார்.

"பகவான் பக்தர்களுக்கெல்லாம் பசிக்கும். எனவே அவர்களை சாப்பிட அனுப்பலாமா?" எனக் கேட்டார்.

"இந்த நண்பர்கள் யாவரும் இங்கேயே இன்னும் சற்று நேரம் இருக்க வேண்டுமென இந்த பிச்சைக்காரன் விரும்புகின்றான். இந்த பிச்சைக்காரன் என்ன செய்ய வேண்டும் என்பது இந்த பிச்சைக்காரருக்குத் தெரியும். நீங்கள் உங்கள் இடத்தில் இருங்கள்," சுவாமி கோபத்துடன் கூறினார்.

மறுபடியும் ஆசிரமம் மாற்றப்பட்டு விட்டதாகக் குறை கூறினார்.

மேற்கூறிய சம்பவம் நடந்தபோது சுவாமி அருகே நான் அமர்ந்திருந்தேன். சுவாமி இந்த சம்பவத்தைப் பொதுவெளியில், பக்தர்கள் முன்னால் வெளிப்படையாக உரக்கச் சொன்னார்கள். நானும் உங்களிடம் சொல்லிவிட்டேன்.

# இருக்கிறார்!




2001 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் இரண்டாவது வார இறுதியில் காலை சுமார் 11 மணியளவில் நான் எனது சிவகாசி அலுவலகத்தில் அமர்ந்திருந்தேன். திருவண்ணாமலை யோகி ஆசிரமத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. ராஜ்மோகன் என்பவர் பேசினார்.

“கடந்த இரண்டு நாட்களாக சுவாமி உங்கள் பெயரையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உங்களால் திருவண்ணாமலை வர முடியுமா?” ராஜ்மோகன் கேட்டார்.

“நான் உடனடியாகப் புறப்பட்டு வருகிறேன்.”

தொலைபேசியில் பதில் சொன்னேன்.

வெளியூர் சென்றிருந்த என் மனைவிக்கு போன் செய்து விவரத்தைக் கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றேன். சில ஆடைகளைப் பெட்டியில் அடைத்துக் கொண்டு திருவண்ணாமலை புறப்பட்டேன். நண்பகல் 12 மணி, சுமார் 400 கிலோமீட்டர் தூரத்தை ஐந்து மணி நேரத்தில் கடந்தேன். காரை ஓட்டிச் செல்லும்பொழுது, மனது வெறுமையாக இருந்தது. எதுவுமே தோன்றவில்லை. திருவண்ணாமலையை மாலை ஐந்து மணியளவில் சென்றடைந்தேன். நேராக ஆசிரம வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே சென்றேன்.

ஆசிரமத்தின் பிரதான் மந்திர் பின்புறம் மேற்கே உள்ள ஒரு சிறு அறையில் சுவாமி படுத்திருந்தார். தொலைபேசியில் அழைத்தவரும், ஒரு பெண்மணியும் என்னை சுவாமியிடம் அழைத்துச் சென்றார்கள். சுவாமி கண்மூடி படுத்திருந்தார். காத்திருக்கச் சொன்னார்கள். பக்கத்திலிருந்த மற்றொரு அறையில் காத்திருந்தேன்.

“கடந்த இரண்டு நாட்களாக சுவாமி பார்த்தசாரதி, பார்த்தசாரதி என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள். பார்த்தசாரதியைக் காணவேண்டுமா சுவாமி எனக் கேட்டோம். ஆமாம் என்றார்கள், எனவே உங்களுக்கு போன் செய்தோம்” ராஜ்மோகன் கூறினார்.

2000ம் டிசம்பர், இரண்டாம் வார இறுதியில் சுவாமியிடம் விடை பெற்றுக் கொண்டு நான் ஊர் திரும்பிய பின், சுவாமி யாருக்கும் தரிசனம் தரவில்லை. காலையிலும் மாலையிலும் நடந்த பக்தர்களின் சந்திப்பும் நின்று போய்விட்டது. தனிப்பட்ட முறையிலும் சுவாமியை யாரும் தரிசிக்க முடியவில்லை. சுவாமி கண்மூடிப் படுத்தபடியே இருந்ததாகவும், எவரிடமும் பேசவில்லை என்றும் கேள்விப்பட்டேன். எவரேனும் ஆகாரம் ஊட்டினால் மட்டுமே சுவாமி உணவு அருந்தினார் என்றும் சொன்னார்கள்.

நான் அடுத்த அறையில் காத்திருந்தேன். சுமார் ஏழு மணி இருக்கும். சுவாமி படுத்திருந்த அறைக்குள் என்னை அழைத்துச் சென்றார்கள். உள்ளே மங்கிய வெளிச்சத்தில் சுவாமியின் முகம் தெய்வீகப் பொலிவுடன் பளிச்செனத் தெரிந்தது. கண்கள் மூடியபடி படுத்திருந்தார்.

"பார்த்தசாரதி வந்திருக்கிறார் பகவான். கண்ணைத் திறந்து பாருங்கள். பார்த்தசாரதி வந்திருக்கிறார்.

பெண்கள் இருவரும் மாறி மாறிச் சத்தமாக சுவாமியின் செவிக்கருகே சொல்லிக் கொண்டிருந்தார்கள். நான் சுவாமியின் திருவடி பக்கம் நின்று கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் சுவாமி மெதுவாக கண் இமைகளை விரித்து என்னைப் பார்த்தார். ஏனோ என் கண்களில் நீர் ததும்பியது. சுவாமி மகிழ்வோடு என்னைப் பார்த்துப் புன்னகைத்தார். நான் விம்மி அவரின் திருவடிகளைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொண்டேன்.

சுவாமி என்னை அருகில் வருமாறு சைகை செய்தார். நான், அவர் தலைவைத்துப் படுத்திருந்த பக்கம் சென்றேன். தனது வலது கரத்தை என்னை நோக்கி நீட்டினார். என் கரத்தை அவர் கரத்தில் ஒப்புவித்தேன். என் கண்களில் நீர் அருவியாகக் கொட்டியது. என் சிங்கம் போன்ற சுவாமியை முதுமையும், நோயும் முடக்கிப் போட்டுவிட்டதே. சுவாமி என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"இங்கே வந்ததற்கு நன்றி, பார்த்தசாரதி."

சுவாமி சிரித்தபடி கூறினார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் சுவாமி தன் கண்மலர்களை மூடிக்கொண்டார். நான் அறையை விட்டு வெளியே அழைத்து வரப்பட்டேன். வேறெங்கும் நான் செல்ல விரும்பவில்லை. அங்கேயே சுவாமியின் சரீரத்தைக் கவனித்து வந்த மற்ற நண்பர்களுடன் தங்கிவிட்டேன்.

புற்று நோய்க்கான அறுவை சிகிச்சை முடித்துக்கொண்டு சுவாமி 2000ம் ஆண்டு நவம்பர் 23 ம் தேதி திருவண்ணாமலை திரும்பினார். வந்த அன்றும் மறுநாளும் சுவாமி யாரையும் சந்திக்கவில்லை. 25 ஆம் தேதியிலிருந்து காலையிலும், மாலையிலும் பக்தர்களுக்கு வழக்கம்போல் தரிசனம் அளித்தார். டிசம்பர் 1 ஆம் தேதி சுவாமியின் ஜெயந்தி விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. டிசம்பர் 16 ஆம் தேதிக்குப் பின் சுவாமி தன் அறையிலேயே படுத்திருந்து விட்டார்.

எவர் கூப்பிட்டாலும் மறுமொழி சொல்லாமல் கண்மூடிப் படுத்திருந்ததால் சுவாமியைக் கவனித்துக் கொள்பவர்கள் சுவாமியை வெளியே அழைத்து வரமுடியவில்லை. அதன்பின்னர் சுவாமி என்னைப் பார்த்துப் பேசிய அந்த ஒரு வாக்கியம்தான் சுவாமியின் இறுதி வார்த்தைகளாயிருந்தன.

சுவாமியின் சரீரத்தைக் கவனித்துக்கொள்ள இரண்டு செவிலியர்களும், சுவாமியின் பக்தர்களான இரண்டு வைத்தியர்களும், மற்றும் சில பெண்களும் ஆண்களுமாய் தொண்டர்கள் சிலரும் இருந்தார்கள். நான் அங்கே வெறுமனே அமர்ந்திருந்தேன். அங்குள்ளவர்கள் சொல்வதைக் கேட்டேன். சில சமயங்களில் நான் சொல்வதை அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள், இரவு எட்டு மணியிருக்கும். சுவாமியின் தொண்டர்களில் இரண்டு பேர் ஏதோ வேலையாக வெளியில் சென்றுவிட, சுவாமியின் படுக்கை விரிப்பை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அங்கிருந்த இரண்டு ஆண்கள் மட்டும் சுவாமியை உயரத் தூக்கிப்பிடித்தபடி இருக்க முடியாது, என்னை உதவிக்கு அழைத்தனர். என்னால் பாரமான பொருட்களைத் தூக்க இயலாது என அவர்களிடம் சொன்னேன். சுவாமியின் சரீர பாரம் தாங்காமல் கீழே போட்டுவிட்டால்

என்ன செய்வது என்று பயந்தேன். அந்தத் தொண்டர்கள் எனக்குத் தைரியமளித்தார்கள். என்னை சுவாமியின் கால் பகுதியைப் பிடித்துத் தூக்கவும் மற்றொருவர் நடுப்பகுதியை தூக்கவும் ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதுவரை சுவாமிக்கு நான் இம்மாதிரியான சேவைகளை செய்ததே கிடையாது.

மிகவும் பயந்து, பயந்து எனது கரங்களால் சுவாமியின் கால்களை ஒருங்கிணைத்துப் பிடித்துத்தூக்க யத்தனித்த போது, சுவாமி எவரும் எதிர்பாராத விதமாக சட்டென தனது விழிகளைத் திறந்து பார்த்தார். கால்களைப் பிடித்துத் தூக்க முயல்வது நான்தான் என்று கண்டதும், சுவாமி மந்தகாசமாக குறும்புடன் புன்னகைத்தார். அந்தச் சிரிப்பில் நான் என்னையே மறந்தேன்.

வெகுதிடமாக இருந்த சுவாமியின் திருவடிகளை நான் தூக்கியபோது அவைகள் பாரமாகக் கனக்கவில்லை. மாறாக, தாமரை இதழ்களைத் தூக்கிப் பிடித்திருப்பது போல் தோன்றியது. அவர் கால்களின் பாரம் எங்கே போயிற்று? இது எனது கற்பனையா? இல்லை. இல்லவே இல்லை. அது நிஜம். சுவாமியின் கால்களில் பாரம் இல்லவே இல்லை. சில நிமிடங்கள் வரை அவர் மேனியைத் தூக்கிப் பிடித்தபடி இருந்தோம். படுக்கையை மாற்றியபின்பு மீண்டும் சுவாமியைப் படுக்க வைத்தோம்.

என் சுவாமியை முதுமையும், நோயும் தளர்வடையச் செய்துவிட்டது. என நினைத்தது எப்பேற்பட்ட முட்டாள்தனம்? என் சுவாமியை முதுமையும், நோயும், சாவும் எதுவுமே ஒன்றும் செய்ய இயலாது. அவர் இருக்கிறார். ஆன்மீகச் சிங்கமாய் இன்றும் அண்ட பரவெளியில் நடமாடி வருகிறார். பக்தர்களின் இதயங்களில் இதமாக அமர்ந்திருக்கிறார். பாருங்கள் கண்களே, நன்கு பாருங்கள். என் குருநாதன் எங்கும், என்றும், எதிலும் இருக்கிறார்.

# வேறு எவருமில்லை, வேறு எதுவுமில்லை, என் தந்தை ஒருவரே



I can only say that whatever exists is one life, unity, nothing is separate, nothing is isolated. This beggar is related to the Sun, to the Moon, to the infinite cosmos. This beggar is not limited to this body. All those present here are not separated, isolated. They are part of myself. You see this champak tree, you see this amla tree, they are all part of my life. They are not separate. They are not isolated. Myself is in all these parts with all these leaves. I am the Total. I am the Whole, Absolute, indivisible, Eternal, Limitless Life, Infinite life. We are all one together, united, perfect unity in Father. That's all. That's all I can say.

சுவாமி மஹாசமாதி அடைவதற்கு சில மாதங்கள் முன் தன் ஜீவ நிலையை மேலே குறிப்பிட்ட அதே ஆங்கிலச் சொற்களில் விளக்கிக் கூறினார். சுவாமி உச்சரித்த சொற்கள் அனைத்தும் நேரடியானவை. பூடகமானதல்ல. தான் புவி வாழ் ஜீவராசிகளிடத்தும், சந்திர

சூரியரிடத்தும், எல்லையில்லா இப்பிரபஞ்சத்திலும் ஒன்றியிருப்பதை நமக்குப் புரிவதற்காக வார்த்தைகளில் விளக்குகிறார்.

இதில் எந்த குறிப்பிட்ட ஜீவராசியில் மட்டும் தான் ஒன்றிருப்பதாகச் சொல்லவில்லை. சுவாமி இரண்டு பைரவர்களை வளர்த்தார். பல சுண்டெலிகள் அவர் மேல் துள்ளிக் குதித்து விளையாடி மகிழ்ந்தன. சுவாமி அவைகளைப் பிரியமோடு பராமரித்தார்.

விஷ ஜந்துகளான தேள்கள் அவர் படுக்கையின் கீழேயே சுகமாக, பாதுகாப்பாக வாழ்ந்தன. சுவாமியைச் சுற்றி பூனைக் குட்டிகள் துள்ளி விளையாடுவதை சுவாமி ஆர்வத்தோடு பார்த்து மகிழ்ந்தார். இன்னும் எத்தனையோ ஜீவராசிகள், மனித இனம் சேர்த்து சுவாமியின் நேரடிக் கண்காணிப்பில் பரிணாம வளர்ச்சி கண்டன.

எந்த ஒரு சமயத்திலும் தான் இந்த குறிப்பிட்ட உருவில் மட்டும்தான் வருவேன் என்று சுவாமி சொன்னதே கிடையாது. நம் சுவாமிக்கு அப்படி ஒரு ரூபம் எடுத்து வரவேண்டிய அவசியமுமில்லை. தன் சுய ரூபத்திலேயே அவரால் எங்கும் தோன்ற முடியும். பிற வேஷமணிந்து வரக்கூடிய வேஷதாரி இல்லை நம் சுவாமி. இலக்கு அறியாது, சுவாமியைத் தேடும் சக்தியற்ற சில திறனற்ற பரிதாபகரமான ஜீவன்கள் பரப்பிவிட்ட இந்த பட்டாம்பூச்சி கதையை எந்த அளவிற்கு நம்பப் போகிறீர்கள் நண்பர்களே? இதை நம்பினால் தேளையும், எலியையும், பூனையையும் பார்த்துப் பரவசமடையுங்கள் நண்பர்களே.

நம் சுவாமி எதையும் நேரிடையாக நமக்கு புரியும்படி சொல்பவர். ஒரு முறை நண்பர் ஒருவர் ஒரு சீப் வாழைப்பழங்களை சுவாமியின் திருவடியில் வைத்து, "சுவாமி இப்பழங்கள் எங்கள் வீட்டில் காய்த்த முதல் பழங்கள்," எனக் கூற, சுவாமி இவை எங்கு காய்த்த பழங்கள் எனத் திரும்பத் திரும்ப கேட்க, நண்பர் மறுபடியும் மறுபடியும் வீட்டில் எனக் கூற, சுவாமி வீட்டில் எங்கு கூடத்திலா அன்றி சமையற்கட்டிலா

எனக் கேட்க, அந்த நண்பர் வெட்கி இல்லை சுவாமி கொல்லைப்புறத்தில் உள்ள சிறிய தோட்டத்தில் நாங்கள் வளர்த்த வாழை மரத்தின் பழம் எனக் கூற அங்கிருந்த அனைவரும் சிரித்து மகிழ்ந்தோம்.

வழக்கில் உள்ள இவ்விதமான சிறிய விஷயங்களையே சுவாமி கவனித்து சரிசெய்திருக்கும் போது,

நம்மை ஆசிரமக் கிரிவலம் எனச் சொல்ல எப்படி அனுமதித்திருப்பார்?

இந்த சொல் பிரயோகம் எப்படி வந்தது என நான் அறிவேன். ஒரு அன்பர் ஆசிரமத்தில் இருக்கும்போது தன் நண்பரிடம் திருவண்ணாமலை கிரிவலம் செல்லும் ஆசையை வெளிப்படுத்தியபோது, அந்த விஷமக்கார நண்பர், உனக்குத் தெரியாதா, சுவாமி சொல்லியிருக்கிறார், ஆசிரமத்தை ஒரு முறை வலம் வந்தால் அண்ணாமலையை மூன்று முறை வலம் வருவதற்குச் சமம் எனக் கூற அதை நம்பிய நண்பர் ஆசிரமத்தை ஒருமுறை வலம் வந்தார்.

இதை அவர் மற்ற தன் நண்பர்களிடம் கூற, நாளடைவில் அது ஆஸ்ரமக் கிரிவலம் என்ற விசித்திரமான பெயர் பெற்றது. ஆஸ்ரம வலம் நல்லது. ஆஸ்ரமக் கிரிவலம் தவறான சொற்கட்டு.

“என் தந்தை ஒருவரே இருக்கின்றார். நேற்றும், இன்றும், நாளையும் என் தந்தை ஒருவரே இருக்கின்றார். வேறு எவருமில்லை, வேறு எதுவுமில்லை, என் தந்தை ஒருவரே இருக்கின்றார்.” இது சுவாமியின் பிரசித்தி பெற்ற கூற்று.

என் தந்தையின் நாமம் யோகி ராம்சுரத்குமார், இது இந்த பிச்சைக்காரன் சரீரம் அல்ல. என் தந்தையின் சொரூபங்களில் ஒன்றாகும். என் தந்தை ஒருவரே இருக்கின்றார். நம்புவாய் நண்பா நம்புவாயாக.

என் நாதன் யோகி ராம்சுரத்குமார் ஒருவரே இருக்கின்றார். வேறு எதுவுமில்லை, வேறு எவருமில்லை, வாரிசுமில்லை.

# தொலைந்து போன எல்லாமாகிய இடம்



சுவாமி யோகி ராம்சுரத்குமார் வேத பாடசாலை எதிரில் அமைக்கப்பட்ட பர்ணசாலை என அழைக்கப்பட்ட குடிலில் அமர்ந்திருந்தார். சில பக்தர்கள் அவர் எதிரே அமர்ந்திருந்தனர்.

சுவாமி மெதுவாக எழுந்தார். பர்ணசாலைக்கு வெளியே வேதபாடசாலைக்கும், பர்ணசாலைக்கும் இடையே இருந்த ஒரு குறிப்பிட்ட இடத்தை வெகு நேரம் பார்த்தவாறு இருந்தார். நோயின் உச்சக்கட்ட தாக்கத்தையும் பொருட்படுத்தாது சுவாமி அந்த குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தார்.

பக்கத்தில் நின்ற ஒரு அன்பரை அந்த குறிப்பிட்ட இடத்தில் ஒரு செங்கல்லை வைக்கச் சொன்னார். அன்பரும் அங்கு கட்டுமானம் நடந்து கொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு செங்கல்லை எடுத்து வந்தார். சுவாமி சுட்டிக் காட்டிய இடத்தில் அன்பர் அந்த செங்கல்லை வைத்தார். சுவாமி அந்த இடத்தை மீண்டும் வெகு நேரம் பார்த்துவிட்டு,

“இந்த இடம்தான் இந்த பிச்சைக்காரருக்கு வருங்காலத்தில் சகலமுமாக இருக்க வேண்டும்,” எனக் கூறினார்.

பக்தர்கள் சிலையென நின்றனர். சுவாமி சொன்ன சொற்களின் அர்த்தம் அவர்களைச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்தியது.

சுவாமி மீண்டும் பர்ணசாலை சென்றார். அன்று இரவு சுவாமி பர்ணசாலையிலேயே படுத்திருந்தார்கள். மறுநாள் முந்தைய நாள் சுவாமி சென்ற அதே இடத்தைப் பார்ப்பதற்காக பக்தர்கள் சூழ சுவாமி சென்றார்.

அங்கே அந்த செங்கல்லைக் காணவில்லை. கட்டுமானப் பணிக்காக யாரோ எடுத்துச் சென்று விட்டார்கள் போலும்.

சுவாமி அங்கிருந்த நிர்வாகியை அழைத்து அங்கே அந்த குறிப்பிட்ட இடத்தில் ஒரு சிறு கட்டுமானத்தை சற்றே உயரமாக செங்கற்களால் கட்டச் சொன்னார். சில நிமிடங்களில் அங்கே ஒரு கட்டுமானம் உருவாகியது.

சுவாமி அங்கிருந்த அன்பரை சிறிது புஷ்பங்களை எடுத்து வரச் சொன்னார். புஷ்பங்கள் வந்ததும் சுவாமியே அந்த இடத்தில் புஷ்பங்களை வைத்து அந்த இடத்தை வலம் வந்தார். நிர்வாகியிடம், தினமும் அந்த இடத்திற்கு புஷ்பாஞ்சலி செய்ய வேண்டும் என கண்டிப்பாகக் கூறினார். நிர்வாகியும் செய்வதாக உறுதியளித்தார்.

ஆனால் சுவாமியின் மஹாசமாதிக்குப்பின் சுவாமியின் சமாதி வேறெங்கோ வைக்கப்பட்டது. அதன் மேல் ஒரு லிங்கமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த லிங்கமும் காசியிலிருந்து எவரோ என்ன காரணத்திற்காகவோ வாங்கிக் கொடுத்த, வேறு லிங்கத்திற்காக அது அகற்றப்பட்டு அனாதரவாக வெட்ட வெளியில் வைக்கப்பட்டது. அது

தற்சமயம் எங்கோ பாதுகாப்பாக உள்ளது என அறிய சற்றே ஆறுதலாக உள்ளது.

சமாதி லிங்கத்தின் மேலே ஒரு அழகிய மண்டபம் கட்டுவதற்காக வரைபடம் ஒன்று தயார் செய்தனர். அதை பக்தர்கள் கூட்டத்தில் வைத்து, அவர்களின் அனுமதியும் பெற்றனர்.

பின்னே பக்தர்களுக்கும் தெரிவிக்காமல், அவ்வரைபடத்தின்படி மண்டபம் கட்டாமல், மாறாக சமாதியின் மேல் கோபுரம் எழுப்பப்பட்டு சுவாமியின் சமாதியை பக்தர்கள் அணுகா வண்ணம் எல்லா சடங்குகளையும் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர்.

நமது சுவாமியின் குருபீடமான ஆனந்தாஸ்ரமம் சுவாமி சச்சிதானந்தா சுவாமிகள், நமது சுவாமியின் சமாதியில் பக்தர்கள் புஷ்பாஞ்சலி செய்ய அனுமதிக்க வேண்டும் என பலமுறை வற்புறுத்தி அறிவுறுத்தியும், ஆசிரம நிர்வாகம் பக்தர்கள் சுவாமியின் சமாதியில் புஷ்பாஞ்சலி செய்ய அனுமதிக்க மறுத்து விட்டது.

# பரிணாம வளர்ச்சி



தேவைகளற்ற தேவாதி தேவன் யோகி ராம்சுரத்குமார், தனது நாமத்தை ஸ்மரணம் செய்யச் சொல்வது, நம்முடைய பரிணாம வளர்ச்சிக்காகவே அன்றி லௌகீக சௌகரியத்திற்காக மட்டும் அல்ல. லௌகீக சௌகரியங்களும் நமது ஆன்ம பரிணாம வளர்ச்சிக்காக மட்டுமே அருளப்படும். அந்த சௌகரியங்களைத் துஷ்பிரயோகம் செய்வோருக்கு நித்யமும் பிரச்சனைகளும் வலிகளும் மட்டுமே மிஞ்சும். பரிணாம வளர்ச்சியின் தாத்பரியத்தை சுவாமி பக்தர்களுக்கு புரியும்படி ஸ்ரீ அரவிந்தர் உபதேசத்தின் மூலமாகக் கூறினார்.

"மனிதனின் உணர்வுகள் யாவும் உன்னதப் பேருணர்வான உணர்வு கடந்த ஆற்றல்மிக்க தெய்வீகப் பெருநிலையைச் சென்றடைவதே இந்த மானுட வாழ்வின் பரிணாம வளர்ச்சியாகும். சுருங்கச் சொல்வதானால் மனிதம் தெய்வீகம் ஆவதே பரிணாம வளர்ச்சி ஆகும். மனிதன் வளர்ச்சி அடைந்தே ஆகவேண்டும். தப்பிக்க முயன்றால் வாழ்வில் ஏற்படும்

எண்ணற்ற துன்பங்களைச் சந்திக்க நேரிடும். பரிணாம வளர்ச்சியின் பாதையில் நாம் ஒரு படி மேல் சென்றால் இறைவன் பத்து படிகள் கீழ் இறங்கி நம்மை ஆட்கொள்வான்."

ஸ்ரீ அரவிந்தரின் உபதேச சாரத்தை பெருங் கருணையோடு பக்தருக்குப் புரியும்படி கூறிய சுவாமி மென்மையாகப் பாடலானார்.


"யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா."

அங்கிருந்த பக்தர்கள் சுவாமியைப் பின் தொடர்ந்து பாடினர். நேரம் கடந்ததே தெரியவில்லை. இடம், காலம், காரணங்களைக் கடந்த ஒரு புதிய உலகம் கண்டோம். ஒரு புதிய வாழ்வு கண்டோம். அந்த நேரத்தில் அங்கே மனிதர்கள் இல்லை. தெய்வாம்சமே நிறைந்திருந்தது. சுவாமி சிரித்தபடி அங்கு அமர்ந்திருந்தார். மனிதரை தெய்வ சொரூபங்களாக மாற்றும் ரசவாதத்தை, பரிணாம வளர்ச்சியை நாம ஜப மூலமாக அடையமுடியும் என அங்கே கண்கூடாகக் காணமுடிந்தது.

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ஜெய குரு ஜெய குரு ராயா.

இந்த தெய்வீக நாமம் நமக்குள் என்றும் ஒலிக்கட்டும்.

# தந்தையின் கணக்கு



“என் தந்தையின் கணக்கு ஒருபோதும் பிசகாது. எது நடந்ததோ அது என் தந்தையின் விருப்பப்படியே நடந்தது. எது நடக்கின்றதோ அது என் தந்தையின் இஷ்டப்படியே நடக்கின்றது. எது நடக்கப்போகின்றதோ அதுவும் என் தந்தையின் விருப்பப்படியே நடக்கப் போகின்றது. எது நடந்தாலும், எப்படி நடந்தாலும், எங்கு நடந்தாலும் என் தந்தையின் ஆணைப்படியே சகலமும் நடக்கும் என்பதில் இந்த பிச்சைக்காரனுக்கு ஒரு சந்தேகமும் இல்லை. என் தந்தை எதைச் செய்தாலும் அது மிகச் சரியாகவே இருக்கும். என் தந்தை ஒருக்காலும் தவறிழைக்க முடியாது. தவறிழைக்க மாட்டார். என் தந்தையை என்றும் நினைவுகூர்வோமாக. என் தந்தை நமக்கு நன்மையைத் தவிர்த்து வேறு எதுவும்

செய்யமுடியாது. நம்பு நண்பா நம்புவாயாக."

சுமார் 40 வருடங்களுக்கு முன்பு சன்னதித் தெரு வீட்டின் கூடத்தில், நடுஇரவில் சுவாமி யோகி ராம்சுரத்குமார் கர்ஜித்துச் சொன்னது இன்று ஏனோ ஞாபகத்திற்கு வந்தது. அதை நண்பர்களே உங்களோடு பகிர்ந்து கொண்டேன்.

ஏதோ திருத்தம் (correction) நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பது மட்டும் லேசாகப் புரிகின்றது. அந்த செயலின் தாக்கத்தை, வலியை மனித சமுதாயம் மட்டும் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. குருவின் திருவடிகளைச் சரணமடைவதைத் தவிர்த்து வேறு வழியேதுமுண்டோ?

# About Author



The author S. Parthasarathy lives in Tiruvannamalai for the past several years. The town Tiruvannamalai is in the southern part of India, in Tamilnadu State. Tiruvannamalai is a spiritual home and almost all the wise people of India have the touch of this holy place. One of the greatest wise men of India, Yogi RamSuratkumar lived in this town from 1965 to 2001. He was in the disguise of a beggar. Transcending the mundane life, religions and their rituals, this great yogi shined brilliantly in the spiritual sky. In spite of his appearance like a dirty beggar, he had the luminous of God! God, yeah, in the form of a beggar! The author learned the art of living from this great wise man. This great wise man guided everybody in the journey, from human to God. This extraordinary wise man lived and died at Tiruvannamalai, in a simple natural way. One shall have the love for life, death

and God on perceiving the life of this great noble wise man. This rare wise man requested the author to live in this holy place Tiruvannamalai and the author lives here since then. The author has also written a book “Amarakavyam” the “Biography of Yogi Ramsuratkumar”.

yogi Ramsuratkumar
Tiruvannamalai